
ரத்தஞாயிறு
இலக்கிய சாம்ராட்
டாக்டர் கோவி.மணிசேகரன்

# ரத்த ஞாயிறு

(வரலாற்றுப் புதினம்)

இலக்கிய சாம்ராட்

**அறிஞர் கோவி. மணிசேகரன்**

**பூம்புகார் பதிப்பகம்**

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே),

சென்னை - 600 108.

தொலைபேசி : 044-25267543

**விலை ₹ 260/-**

பூம்புகார் வெளியீட்டு எண் : 998

முதற்பதிப்பு : ஜூலை, 2012 O. No. : 02900967

உரிமை : ஆசிரியருக்கு P. C. No. : 9810MH11

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை – 600 013.

# பதிப்புரை

1947 முதல் துடிப்புடன், சொல்லழகு கொஞ்சும் தமிழில், ஏறுபோல் எழுதி, தமிழ்த்தாயின் சேவை செய்யும் சிறந்த எழுத்தாளர் டாக்டர் திரு. கோவி. மணிசேகரன் அவரை அறியாத தமிழ் ரசிகர்கள் இருக்க முடியாது. முக்கியமான சரித்திர ஆசிரியர்களில் முன்னணியில் திகழ்பவர்.

டாக்டர் கோவியின் நூல்களில் பல எங்களது பூம்புகார் மூலம் வெளிவந்துள்ளன. இப்போது அவரது படைப்புகளில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்றான ‘ரத்த ஞாயிறு’ என்னும் சரித்திரப் படைப்பை வெளியிடுவதில் பூம்புகார் பதிப்பகம் பெருமையடைகிறது.

டாக்டர் கோவி. மணிசேகரன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

**– பூம்புகார் பதிப்பகம்**

# முன்னுரை

**எ**து காலத்தை வெல்கிறதோ அது இலக்கியம்.

பத்தாண்டுகளுக்கு முன் எழுதிப் பிரபலமடைந்தவர் இன்றைக்கு விளக்கு வைத்துத் தேடுகிற அளவுக்கு இருளாகிப் போய்விடுகிறார். எத்தனை ஆண்டுகளானாலும் அந்தப் படைப்பில் ஒரு நிரந்தர ஒளி படர்ந்து காலப் பிரகாசமுடன் எது திகழ்கிறதோ, அது இலக்கியம். படைப்பிலக்கியமான சிலப்பதிகாரமானால் என்ன? நீதி நூல் என்று சொல்லப்படுகிற திருக்குறளானால் என்ன? உணர்ச்சி வயத்தால் உதயமான (Emotional Epic) பாஞ்சாலி சபதமானால் என்ன? கலைவடிவத்தின் கரையாத கற்கண்டுப் படைப்பான சிவகாமியின் சபதமானால் என்ன? இவை யாவும் காலத்தை வென்ற காப்பியங்களே!

எனது படைப்புகளில் இவ்வாறு ஏராளமாக இருக்கின்றன. அவற்றுள் ஒன்று இந்த 'ரத்த ஞாயிறு.'

எனது படைப்புகளில் அழுக்கு படிந்தவையும் இல்லாமலில்லை. அவற்றை நான் மனப்பூர்வமாக ஒரு சத்தியத்தின் நிழலிலிருந்து புன்முறுவலோடு ஒப்புக் கொள்கிறேன்.

நான் ஒரு முழுநேர எழுத்தாளனாகப் பிறந்து விட்டேன். எனக்கு எழுத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாது. எனவே வயிற்றுக்காகப் பலவற்றை எழுதுகிற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிற துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிடுகிறது.

வயிற்றுக்குப் போதுமானது இருக்கிறது என்கிற இனிக்கும் செய்தியை எனது தெய்வமனைய மனையாள் தெரிவிக்கிறபோது, நான் எனக்கான இலக்கியத் தவத்தில் அமருகிறேன். அப்போது நான்

காலத்தைக் கருதி யாகம் செய்கிறேன். அந்த யாகத்தில் பிரசன்னமான நூல்களில் இந்த 'ரத்த ஞாயிறு'ம் ஒன்று.

அநேகமாகச் சரித்திரத்தின் எல்லாப் பாத்திரங்களும் என்னை வந்து கெஞ்சுவதுண்டு. பல்வேறு தேசம் கொண்ட பாத்திரங்களை உருவாக்கியும் நடமாட விட்டிருக்கிறேன்.

கோவியின் கைபடுவதில் அவர்களுக்கு அப்படி ஒரு நிறைவு இருக்கிறது போலும்! திப்புசுல்தானையும் ஹைதர்அலியையும் நான் தொடுமுன்னரே இந்த மகாராஷ்டிரப் புரட்சித் தலைவர் சத்ரபதி சிவாஜி மனு போட்டிருந்தார். வேறு யாராவது தொட்டு ஆசீர்வதிப்பதில் நன்மைகளுக்கு மாறாகத் தீமைகளே மலிந்து விடுகின்றன என்கிற பயம்போலும், சத்ரபதி சிவாஜிக்கு!

அவருக்கு இப்போதுதான் நேரம் கிடைத்தது. ரத்த ஞாயிறுவாக உதயம் காணச் செய்தேன்.

இந்தப் பாரத தேசத்தை எப்படிக் காக்க வேண்டும் என்கிற அக்கறையுடன் போராடிய சரித்திர மகாபுருஷர்கள் ஏராளம். அவர்களுள் மக்களுக்காகவும், மதத்துக்காகவும், மொழிக்காகவும் போராடியவர்கள் சொற்பமானவர்கள். அவர்களுள் ஒருவர் இந்த வீரமா சிவாஜி.

இந்த மகாபுருஷரைக் கொள்ளைக்காரன் என்று தூற்றியவர் களும் உண்டு. காரண காரியங்களை நாவலில் கற்பித்து இருக்கிறேன். ஆயினும் இந்த முன்னுரையில் கொஞ்சம் சொல்லித்தான் தீர வேண்டும்.

தனது தேச நலனுக்காக ஓர் அஸ்திரமே போன்று சிவாஜி மேற்கொண்டது அந்தக் கொள்ளை என்கிற கொடிய செயல். அவ்வாறு அவர் மேற்கொண்டு தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை யானால் இந்துமதம் முக்காலும் அழிந்துவிட்டிருக்கும். இதில் சந்தேகமே இல்லை. என்ன செய்வார்? தனிமனிதனாக நின்று பெருத்த சாம்ராஜ்யத்தில் இந்துமதப் போர்க் கொடியைத் தூக்க வேண்டுமானால் சாத்தியமாகிற காரியமா? அவரது வரலாற்றைப்

படிக்கிறபோது அவருடைய சாதனைகள் ஒவ்வொன்றும் பிரமிப்பை யூட்டுகின்றன. ஒரு மகா சக்கரவர்த்திக்கு இணையாக எல்லா நலன்களையும் பெற்றுத் தில்லியை எதிர்த்துப் போராடினார் என்றால், செல்வத்துக்கு எங்கே போவார்? பலர் உதவியும் பற்றாது போகவே, தனது படைப்பலத்தை நிலைநிறுத்திக் கொள்ள கொள்ளையடிக்க நேர்ந்தது. ஏழைகளிடம் அவர் கொள்ளையடிக்கவில்லை. பணமுதலைகளின் வாயைப் பிளந்திருக்கிறார். வீரத் தியாகமிக்க இளைஞர்கள் அவர்பால் சேர்ந்து உதவினர்.

இந்தத் தியாக உணர்வு மிக்க வீரவாலிபர்கள் சிவாஜி காலத்தில் மட்டுமல்ல; சிலப்பதிகார காலத்திலும் இருந்திருக்கிறார்கள்; இருந்திருக்க வேண்டும் என்பது எனது ஆராய்ச்சியின் கணிப்பு. இப்பேர்ப்பட்டவர்களின் உதவியால்தான் 'ஜுனார்' போன்ற பணமுதலைகள் வாழும் பகுதிகளை சிவாஜி கொள்ளையடிக்க நேர்ந்தது. இந்த இளைஞர்களை நான் நாவலில் பகிரங்கப்படுத்த வில்லை. மறைமுகமாக்கி இருக்கிறேன். கொள்ளையடித்த பொருள்களைத் தமது ராஜ்ய ஸ்தாபிதத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டார். சிவாஜி என்ன ஒரு சாம்ராஜ்யாதிபதி வயிற்றிலா உதயம் கண்டார்? ஆனால் ஒரு சத்தியத்தின் (ஜீஜாபாய்) வயிற்றில் உதயம் கண்டார். எதையும் சத்தியத்தின் நிழலில் நின்றே அதருமங்களைச் செய்து தருமத்தை நிலைநாட்டினார். தருமத்தை நிலைநாட்ட எந்தப் பாவ காரியங்களையும் செய்யலாம் என்று பகவத்கீதையே சொல்லி இருக்கிறதே!

சத்ரபதி சிவாஜியின் முற்காலப் பணிகள் போற்றத்தக்கன. அவர் அப்போது தமது இந்து மதத்தை நிலைநிறுத்த மேற்கொண்ட வீர சாகசங்கள் வணங்கத்தக்கன. பின்னாளில் மக்கள் வெறி, மண் வெறி கொண்டு தென்னாடு புகுந்து செய்த அட்டகாசங்கள்தாம் அவரை வெகு தூரத்துக்குக் கீழே இறக்கி அருவருக்கச் செய்துவிட்டன. குறிப்பாகத் தமிழகத்தை அவர் கபளீகரம் செய்ய நினைத்ததுதான்! இவர் நிஜமாகவே இந்துமதத்தைக் காக்க இப்படியான கொள்ளைகளில் ஆழ்ந்து கொடுமைகள் பல செய்து இஸ்லாமியர்களை எதிர்த்தாரா என்கிற ஐயம் தோன்றுகிறது. ஏனென்றால் தமிழகத்தில்

அப்போது யாரும் இந்துமதத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தவில்லையே? இது பின்னாளில் அவருக்கேற்பட்ட மண்வெறி என்பதை ஆராய்ந்துதான், அவரது மகுடவிழாவுடன் இந்த நாவலை முடித்தேன். மகுடவிழாவுக்கு முன்வரை அவர் ஒரு சுயராஜ்ய இந்துமதக் காப்பாளனாகவே இருந்து வந்து கொண்டிருந்தார். அவரது முழு சிந்தனைக்கு ஒரு தனியான பிடிப்பு எங்கோ இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பூஜ்யாவைக் கற்பனை செய்தேன். அவளை ஒரு மகாமேதையாகப் படைத்து இருக்கிறேன். அப்படியான மேதைகள் தமிழகத்தில் மட்டுமே பெரும்பாலும் பிறக்க முடியும் என்பது எனது ஆழ்ந்த கருத்து. ஏனையவர்கள் ஏனைய தேசங்களில் பிறந்திருக்கிறார்கள். கலைகளுடன் கூடிய அறிவு ஜீவிகள் தமிழகத்தில்தான் அதிகமாக உதயமாகி இருக்கிறார்கள். சிவாஜியின் பின்னாளைய அக்கிரமச் சேட்டைகளை எண்ணிப் பார்க்கிறபோது, முன்னாளில் யாரோ அவரை வழிநடத்தி இருக்க வேண்டும். சிறுவயதில் அன்னை; பெரிய வயதில் அன்புடன் காதலித்த பூஜ்யா - எனது காப்பியப்படைப்பு. எனவேதான் அவளிறந்த பிறகு, அவளது சத்தியங்களை மறந்து (அவளிருக்கும் போதே சத்தியம் தவறுகிறார் சிவாஜி) மண்வெறி கொண்டு தமிழகத்தை நாடியது. இங்கேதான் சிவாஜியின் கொள்கை பலவீனப்பட்டது.

சிவாஜியின் பாத்திரத்தை மேலும் எனது கைவண்ணத்தால், அழகுபடச் செய்த காரணம், இப்படி ஒரு மாவீரன் தமிழகத்தில் எப்போது பிறக்கப் போகிறான்? இந்த மண் மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கிறதே! மெல்லத் தமிழினிச் சாகும் என்றுவேறு பாரதி பாடி விட்டுப் போய்விட்டானே என்கிற குமுறலில் சிவாஜியை மகோன்னதப்படுத்தினேன். இனி ஒருவன் அவ்வாறு இங்கே உதயமாகாவிட்டாலும் பரவாயில்லை; இந்த நாவல் உதயத்தின் மூலம் நிறைவு கொள்ளலாம் என்று எழுதி முடித்தேன்.

இது குறுகிய நோக்கமேயானாலும், பரந்த பாரதத்துக்கும் இது பொருந்தும் என்று நினைக்கையில் இக்'குறுகிய' என்ற சொல் நீக்கப்பட்டு விடுகிறது. ஒன்றுபட்ட பாரதம், மொழி வெறியற்ற பாரதம், இனவெறியற்ற பாரதம், மதவெறியற்ற பாரதம் எப்போது உதயமாகும்? அது உலக நோக்கில் என்று பிரசன்னமாகும் என்கிற

கொதிப்பு எனது நெஞ்சுள் இருப்பதனால்தான் என்னால் ஒரு 'யாகசாலை'யைப் படைக்க முடிந்தது. இந்தக் கொதிப்பும் குமுறலுந்தான் என்னை வேறுபட்ட எழுத்தாளனாக்கியது. முன்பெல்லாம் தமிழ்த் தவத்துடன் எழுதியவன், இப்போது மொழியை ஓர் ஆயுதமாகக் கொண்டு, அதில் தமிழ், வடமொழி என்கிற நோக்கு பாராது எழுத நேர்ந்தது. இந்த நோக்குக்குப் பலர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். நான் உலக மைந்தன் என்று என்னை எண்ணியபோது ஏற்பட்ட தாக்கங்கள்தாம் இவை. ஆயினும் நான் இறவாத் தமிழின் மடியில் பிறந்து வளர்ந்தவன் என்கிற சத்திய நினைவுகள் என்னை விட்டு அகன்று போக முடியாது. அந்தத் திவ்ய தரிசனத்தை எனது தற்போதைய நாவல்களில் மொழியில் காண முடியாவிட்டாலும், பொருளில், பாத்திரத்தில் காணலாம். உதாரணத்துக்கு இந்த நாவலின் பூஜ்யாவின் படைப்பு.

மேல்மட்டம் மட்டுமே அறிந்து கொள்கிற மொழி. வளத்துடன் கூடிய நடையில் எழுதுவது போக, அனைவரும் அறிந்து கொள்ள நான் என்னை வித்தியாசப்படுத்திக்கொண்டு புதுப்பிறவி யெடுக்கிறேன். நான் ஓர் அவதானி, என்னால் எப்படியும் எழுத முடியும். சில இனக்கவர்ச்சிக் கதைகளையும் சில சமயம் நயமாக எழுதியதுண்டு. அது ஒரு நிர்ப்பந்தமில்லாவிட்டாலும், காலப்போக்கு என்னை அவ்வாறு எழுத அழைத்து, அதன் மூலம் மீண்டும் என்னை நிலைப்படுத்தி, மீண்டும் மீண்டும் நான் எழுத வேண்டுமே என்று ஆயத்தப்படுத்திக் கொண்டே போகின்றன. சூரியனுக்குப் பருவகாலங்களில் ஏற்படும் மேகச் சோதனைபோல, இப்போது தமிழகத்தில் களப்பிர எழுத்தாளராட்சி நடக்கிறது. இதனால் தமிழகத்தின் பாண்டியனாக நான் மீண்டும் உதயம் கண்டு இந்த 'ரத்த ஞாயிறு' போன்ற நாவல்களை எழுத நேருகிறது. இதுவும் ஒருவிதமான சாகசமே! இடைப்பட்ட இந்தக் காலத்தில் சில கொக்கோக எழுத்தாளர்கள் உதயம் கண்டுவிட்டார்கள். அவர்கள் பாதிப்பால் பலர் அழிக்கப்பட்டனர். எனவே நானும் எனது பாணியில் சற்றே மாறுபட்டு எழுதி தலையை நிமிர்த்தி 'இதோ நானிருக்கிறேன்; மறைந்துவிடவில்லை' என்று அறைகூவி, கடுங்கோன் பாண்டியனாக

உதயம் கண்டு, பிறகு ஏற்பட்ட எனது பிரகாசத்தில் யாகம் வளர்த்தி, 'யாகசாலை'யையும் 'ஒரு தீபம் ஐந்து திரியை'யும் 'ரத்த ஞாயிறு' வையும் பிரசன்னப்படுத்த முடிந்தது. இப்படியான பிரசன்னங்களின் மூலமே இந்தக் களப்பிர எழுத்தாளர்களை முறியடிக்க முடியும்.

ராஜதந்திரத்தில் இது ஓர் அதிகரணம். எதிரிகள்பால் சேர்ந்தே எதிரிகளை முறியடிப்பது. பின்னர் நமது சாம்ராஜ்யத்தை நல்ல வகையில் நிலைநிறுத்த முனைவது. எனது நடை வித்தியாசத்துக்கும் இனக்கவர்ச்சி எழுத்துக்கும் இதுவே காரணம். பின்னாளில் எனது பழைய தமிழ் நடையை நிலை நிறுத்த முடியும் அல்லவா?

ஒன்றை எனது வாசகர்களும் ஏனைய தமிழ்ப்புலமை மிக்கவர்களும் மறந்துவிடக் கூடாது. நான் எந்தப் பின்புலத்தை எடுத்துக் கொள்கிறேனோ அதற்கேற்ப நடை, மொழி மாற்றம் காண்கின்றன.

இளங்கோவடிகளைப் பாத்திரமாக ஏற்று சேரன் செங்குட்டுவன் பின்னணியில் படைத்த 'சேரன் குலக்கொடி' நாவலில் எவ்வாறு தமிழ் இயல்பாகக் கொஞ்ச முடிகிறதோ, அவ்வாறு 'ரத்த ஞாயிறு' நாவலில் காப்பிய மெருகு இருப்பதுபோல மொழி மெருகுடன் எழுத முடிவதில்லை; ஏனெனில் இது தமிழ்ப் பின்புலமல்ல. 'யாகசாலை' நாவல் சமஸ்கிருத பின்புலம். எனவே அதற்கேற்ப மொழி, இயல்பாகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறது. 'ரிக்ஷாக்காரன்' பாத்திரத்தில் நாவல் எழுத முனைகிறபோது அவனது பின்புலத்தை மறந்து சங்க இலக்கியம் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். அது என்னால் முடியாது. அவ்வாறு பேசுவதும் ஒரு போலியானது. இயல்புக்கு மாறானது. எனவே எனது நாவல்களும் நிலைக்கேற்ப இயல்பு மாறுவது ஓர் இயற்கையானதே என்பதை எனது கூற்றை உன்னிப்பாகக் கவனித்து யோசிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இந்தச் சத்ரபதி சிவாஜியைக் கதாநாயகனாகக் கொண்டு எழுத நான் பல நூல்களைப் பரிசீலனை செய்தேன். அனைத்திலும் மிக்கவும்

காழ்ப்புணர்வுடன் தங்கள் இன, மதத்துக்கேற்ப எழுதப்பட்ட செய்திகளே இருந்தன. இறுதியில் எனது பார்வைக்குக் கிடைத்த நூல்:

"Shivaji The Great"
By
Balakrishna, M. A., Ph.D.
Principal, Rajaram College,
Kolhapur.

Published by:
D. B. Taraporevala Sons & Co.
Hornby Road,
Bombay.
1940

பலபாகங்களைக் கொண்ட இந்த நூலில் சிவாஜியின் முழுத் தகவல்களும் காழ்ப்புணர்ச்சியின்றிக் காண நேர்ந்தது. அவற்றை ஆராய்ந்து இந்த நாவலை எழுதினேன்.

சிலபல நிகழ்ச்சிகளை, இவ்வாறு இருக்கக் காரணமே இல்லை என்று என்னுள் ஆராய்ந்து எனக்கே ஏற்பட்ட முடிவுடன் எழுதியிருக்கிறேன்.

சிவாஜியின் காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் இனத்துக்காகவும் மதத்துக்காகவும் ஏற்பட்ட ஒரு சுதந்திர அல்லது சுயராஜ்ய போராட்டங்கள். இதுவும் ஒருவிதமான விடுதலைப் போராட்டம் போன்றதே! பின்னாளில் ஆங்கிலேயனை விரட்ட ஏற்பட்ட போராட்டத்தின் மூலதளத்தை சிவாஜிதான் அமைத்துக் கொடுத்தார் என்பதை நாம் நன்றியுணர்வுடன் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அதன் பிறகுதான், தமிழகத்து வீராங்கனை [1]வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும், கன்னடத்து சுதந்திரச் சிங்கங்களான ஹைதர் அலியும், திப்புசுல்தானும் ஆவர். பின்னர்தான் வேலூர்ப் புரட்சியும்,

1. இவர்களைப் பற்றி நான்தான் முதலில் நாவல் எழுதியவன்.

ஜான்ஸி ராணியின் சுதந்திரப் புரட்சியும் தலைநீட்டுகின்றன. இதனை ஏற்க மறுப்பவர் படித்தறிந்த வேஷதாரிகள்.

சிவாஜி வரலாற்றில் மிக்கவும் கூர்மையான நிகழ்ச்சிகள் மூன்று. ஒன்று அப்சல்கான் கொலை; இரண்டு ஷிஸ்டாகான் விரல் பறிகொடுத்த நிகழ்ச்சி; மூன்று ஔரங்கசீப்பின் கோட்டையுள் புகுந்து சிவாஜி தப்பியது. இம்மூன்றையும் மிக்கவும் பொறுப்புணர்ச்சியுடன் ஆராய்ந்து எழுதியிருக்கிறேன். ஔரங்கசீப் மாளிகை சம்பவத்தில் ஒரு புதிய நோக்கை நான் கற்பிதம் செய்திருக்கிறேன். நான் சரித்திர நாவலாசிரியன் மட்டுமல்ல; உலகச் சரித்திரங்களைப் புரட்டிப் பார்த்து என்னுள் ஒரு பேராசிரிய நிமிரலைக் கண்டவன். எனவே எனக்கே உரித்தான பொது நிலை ஆராய்ச்சியுடன், ‘இது இவ்வாறு நடைபெற நியாயமில்லை. இவ்வாறே நடந்திருக்கும்’ என்று ஊகித்து எழுதியிருக்கிறேன். எனது எல்லா நாவல்களிலும் இந்தக் கண்ணோட்டம் உண்டு. இதுகுறித்து அவ்வப்போது சில சரித்திரப் பேராசிரியர்கள் என்னிடம் யுத்தம் நிகழ்த்துவதுண்டு. படித்துக் கற்பிப்பது வேறு; படித்ததை வைத்து ஆராய்வது வேறு என்றுணர்ந்த சில பேராசிரியர்கள் என்னை ஆதரித்ததும் உண்டு.

இந்த நாவலில் வரும் அப்சல்கான் கொலைபற்றி மண்டையே குழம்புகிற அளவுக்குப் பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

முதலில் அப்சல்கான் வாளை உருவினானா? அல்லது சிவாஜியே வலிந்து புலிநகத்தை உபயோகப்படுத்தினாரா? என்பது குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகளிருக்கின்றன. அவரவர் தங்கள் மதப்பிடிப்பில் தத்தம் கதாநாயகனை நிறுவ ஆலோசித்து இருக்கிறார்கள். நான் இவற்றை மிக்கவும் கூர்ந்து பரிசீலித்துக் கற்பனையைப் பொதுநோக்கில் ஓட்டியிருக்கிறேன்.

இதுபோலவே ஷிஸ்டாகான் நிகழ்ச்சியும், வரலாற்றில் ஷாயிஸ்டாகான் என்று படிக்க முடிந்தாலும் வழக்கில் ஷிஸ்டாகான் என்றே அழைக்கிறார்கள். எனவே நானும் ஷிஸ்டாகான் என்றே அவனை அழைத்து இருக்கிறேன்.

இன்னுமொன்றை முன்கூட்டியே சொல்லி விடுகிறேன். ஷிஸ்டாகான் மகளைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. சிவாஜி

செல்வது ஷிஸ்டாகானைப் பழிவாங்க! இந்த நேரத்தில் அவனது கண்கள் ஷிஸ்டாகானின் மகள்மீது செல்லவோ, அல்லது அவளைக் கடத்த நினைப்பதோ நியாயமில்லாத கற்பனை. எனவேதான் எனது கற்பனை அந்தச் சம்பவத்தை நிராகரித்துவிட்டது.

குழந்தையை வெட்டிய நிகழ்ச்சி ஒன்று நாவலில் வருகிறது. அதனையும் வரலாற்றை வெறுத்துத் தவிர்த்திருக்கலாம். ஆனால் சிவாஜியின் மூர்க்கப் பிரவேசம் என்ன என்பதைக் காட்ட வேண்டுமல்லவா? அதுவும் சிவாஜியே வெட்டியதாகச் சில சரித்திர நூல்கள் சொல்கின்றன. தெய்வபக்தி நிறைந்த சிவாஜி அவ்வாறு செய்திருக்க நியாயமில்லை என்பதையுணர்ந்து வேறுவிதமாகக் கற்பனை செய்ய நேர்ந்தது.

சிவாஜி நிலையில் ஔரங்கசீப்பே இருந்தாலும் ஒரு குழந்தையை வெட்ட மனம் வராது. ஔரங்கசீப் குரான் மனிதர். எனவே ஏவலர்களை விட்டுச் செய்யக் கற்பனை செய்தேன்.

எத்தனையோ குழப்பங்கள், வாதப் பிரதிவாதங்கள் குறித்து எத்தனையோ நூல்களில் பேசப்பட்டாலும் இவற்றைக் கொண்டு நான் மிகவும் பொறுப்புணர்வுடன் கத்தி முனையில் நடப்பது போல ஆராய்ந்து எனது கற்பனையில் எழுதி முடித்து இருக்கிறேன்.

திப்புசுல்தானை எவ்வளவுக்கு நேசித்தேனோ அந்த நேசிப்பு ஔரங்கசீப்பிடமும் இருக்கக் காணலாம். திப்புசுல்தானின் இயல்பு வேறு; ஔரங்கசீப்பின் இயல்பு வேறேயானாலும் அவர்களைத் தொடுகிறபோது அவர்களும் மானுடர்களே என்ற அக்கறையுடன் ஒரு மானுஷ்யத் தவமாக இயற்றி, அவர்களை முன்னிறுத்தி எழுதியிருக்கிறேன். இந்த நாவலின் கதாநாயகன் சத்ரபதி சிவாஜியே யானாலும் அந்தச் சமகாலத்து மற்றொரு கதாநாயகன் ஔரங்கசீப் என்பதை மனத்தில் வைத்துப் படைத்து இருக்கிறேன். மற்றபடி அப்சல்கானோ, ஷிஸ்டாகானோ சரித்திரப் பிரச்சினைக்கும் பிக்ஞைக்குமுரியவர்களானாலும் அவர்களை அவர்களது போக்குக் கேற்பப் பிறழாது உருவாக்கியும் அவர்களது உருமாற்றத்தைப் பிரதி பலிக்கச் செய்தும் எழுதியிருக்கிறேன். மூர்க்கத்தனமென்பது

அவர்களுக்கு மட்டுமல்லாது, சில இடங்களில் சிவாஜிக்கும் அது ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நாவலில் மறந்து விடவில்லை.

அக்பர் பாதுஷா போட்ட சமத்துவ அஸ்திவாரம் வேறு; அதன்பின்னே ஷாஜஹான் கண்ட கனவு வேறு; தொடர்ந்து ஔரங்கசீப் சிலிர்த்த நிகழ்ச்சிகளின் சூழ்நிலை வேறு என்பதை நான் முற்றுமாக உணர்ந்தவன். ஔரங்கசீப்பே இல்லாமற் போனால் சிவாஜி ஒரு நாடு பிடிக்கும் வெறியனாகத்தான் உருமாறியிருக்க முடியும் என்பதைக் கூர்ந்து பார்த்தோர் அறிவர். இது போலவே சிவாஜியும் இல்லையென்றால், ஔரங்கசீப்பும் இந்தியாவை ஒரு குடை நிழலில் ஆட்சி செய்ய எண்ணிய மனோபாவம் நிறைவேறியே இருக்கும். அக்காலத்தில் இருவருள் ஒருவர் தோன்றாமல் போயிருந்தாலும் சரித்திரம் திசைமாறி இருக்கும். ஆங்கிலேயர் வருகையும் புதிய கோணத்தில் திசை திருப்பம் கண்டிருக்கும். ஒரு வேளை ஆங்கிலேயர் ஜம்பம் செல்லுபடியாகாமலும் போயிருக்கலாம். ஆக, இந்திய நாட்டின் பிற்காலச் சரித்திரம் வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும்.

இவ்வாறு வரலாற்றுக் குறிப்புகளுடன் சில சம்பவங்களை ஆதாரப் பூர்வமாக எடுத்து விவரித்து இருப்பதால், இந்த நாவல் முழுவதும் சரித்திரம் என்று நம்பி அதன் ஆழப்பரிமாணங்களையும் அழுத்த வித்தியாசங்களையும் தற்காலத்து நுனிப்புல் விமர்சகர்கள் எண்ணிவிடக்கூடாது. நடந்த மூன்று சம்பவங்களிலும் எனது கற்பனையோட்டமிருக்கிறது. நாவல் முழுவதையுமே என் அன்புக்குப் பாத்திரமான - நான்படைத்த பாத்திரங்களில் எனக்கே பிடித்தமான பாத்திரங்களில் ஒன்றான - பூஜ்யாவை வைத்துப் பின்னிய அனைத்தும் எனது கற்பனைக்கே சொந்தமானவை.

நான் படைத்த எத்தனையோ நாயகி பாத்திரங்களுள் மிக்கவும் நேசித்த பாத்திரங்களில் பூஜ்யாவும் ஒருத்தி. சொல்லப்போனால் அவள்தான் என் மனக்கண்முன் நின்று இந்தப் புதினத்தை வழி நடத்தினாள்.

1981-இல் 'தாய்' என்ற வார இதழில் இப்புதினம் தொடராக வெளிவந்தது. அதன் காப்பாளரான பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பெரிதும் கவர்ந்து வாழ்த்துரையையே வழங்க வைத்துவிட்டது. அந்தப் பெருமகனார்க்கு, என்பால் அசைக்க முடியாத நட்பு பாராட்டிய மானுடமறிந்த மாண்பாளர்க்கு இதயம் கனிந்த நன்றியினை (இந்த முன்னுரை திருத்தத்தின், 2008-இன் போது) அமர உலகிற்கு அனுப்பி மகிழ்கிறேன்.

நூலை மீண்டும் வெளிக்கொணர்ந்த பூம்புகார் பதிப்பகத்தைப் பூரிப்புடன் போற்றுகிறேன்.

ரத்த ஞாயிறு **(The Blood Sun)** வாசகர்கள் கரங்களில் பிரகாசிக்கிறான்.

அந்தக் கரங்களைத் தொழுகிறேன்.

சாலிக்கிராமம்
சென்னை - 93 **கோவி. மணிசேகரன்**
1-1-1984

எம். ஜி. ராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை - 9

3-3-1984

# வாழ்த்துரை

**ச**ரித்திர நிகழ்ச்சிகளைக் கொண்டு கற்பனையாகச் சில பாத்திரங்களையும், சம்பவங்களையும் உருவாக்கி எழுதப்படும் புதினங்களுக்கு மக்களிடையே பெருத்த வரவேற்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் அமரர் கல்கி அவர்கள். அவர் எழுதிய 'சிவகாமியின் சபதம்,' 'பொன்னியின் செல்வன்,' 'பார்த்திபன் கனவு' ஆகிய சரித்திரப் புதினங்கள் தென்னாட்டு வரலாற்றின் உண்மையான நிகழ்ச்சிகளையும், பல்லவர், சோழர், பாண்டியர், சளுக்கர் ஆகியவர்களின் காலத்தில் இருந்த சமுதாய அரசியல் நிலவரங்களையும் எடுத்துக்காட்டுவனவாக இருந்தன. அமரர் கல்கி அவர்கள் தொடங்கி வைத்த அந்த மரபைப் பின்பற்றிச் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டு புதினங்களைப் படைத்திடும் சில எழுத்துலகச் சிற்பிகள் தற்போது புகழ் பெற்று வருவது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

சரித்திரப் புதினங்களைப் படைக்க விரும்புவோருக்கு வரலாற்று அறிவும், ஆராய்ச்சித் திறனும், இலக்கியப் புலமையும் இருந்திடல் வேண்டும். புதினத்தைப் படைப்பதற்காகத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் காலத்தில் நிலவிய சமூகச் சூழ்நிலை, கலாச்சாரச் செழிப்பு, பழக்க வழக்கங்கள் இவை பற்றிய செய்திகள் தெரிந்திருக்க வேண்டும். இவை அனைத்தோடு காதல், வீரம், போர்க்களத் தந்திரங்கள் இவற்றைப் பொருத்தமாகவும் அளவோடும் கையாளத் தெரிந்திருக்க வேண்டும். அனைத்துக்கும் மேலாக வாசகர்கள் மனதில் ஆவலைத் தூண்டுகிற வகையில் கதையை ஒழுங்குபடுத்துவதோடு நடையில் ஒரு கம்பீரமும் சுவையும் கையாள வேண்டும்.

இத்தனை அம்சங்களும் கொண்டதாகச் சரித்திரப் புதினங்களை அமைத்தால் அவை வாசகர் வரவேற்பைப் பெறுவதுடன் அவர்கள் உள்ளத்தில் நிலையான இடத்தையும் பெறும்.

எனது அருமை உடன்பிறப்பு டாக்டர் கோவி. மணிசேகரன் அவர்கள், நான் மேலே தொகுத்துக் கூறிய தகுதிகள் பலவற்றையும் நிரம்பப் பெற்றுப் பல்வேறு சரித்திரப் புதினங்களைப் படைத்துத் தமிழக வாசகர் உள்ளத்தில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றிருப்பவர். மராட்டிய மண்டலத்தின் அதிபதியாக விளங்கிய சத்ரபதி சிவாஜியை மையமாக வைத்து 'தாய்' வார ஏட்டில் அவர் தீட்டி வந்த 'ரத்த ஞாயிறு' நூல் வடிவில் வெளிவருவது கண்டு மெத்த மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து பல சரித்திரப் புதினங்களைப் படைத்திடும் அளவு, டாக்டர் கோவி. மணிசேகரன் அவர்களுக்கு உற்சாக மூட்டத்தக்க வகையில் தமிழக வாசகர்களின் பேராதரவு அவருக்குக் கிட்டிட வேண்டும் என்று எனது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவரது வெற்றி தமிழுக்கும் தமிழர்களது வாழ்வுக்கும் ஏற்றந்தரும் வெற்றியாகும். இந்த வெற்றியைத் தமிழக மக்கள் இவருக்கு நிச்சயம் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அண்ணா நாமம் வாழ்க!

**- எம்.ஜி. ராமச்சந்திரன்**

# ரத்த ஞாயிறு

## 1

நாள்தோறும் முற்பகலில் யானை, குதிரை, தேர், படைக்கலம் என்னும் இவற்றைப் பற்றிய கலைகளிலும், பிற்பகலில் இதிகாசங்களையும் பயிற்சி பெறல் வேண்டும். இரவில் எஞ்சிய காலங்களில் புதிய பொருள்களை அறிதலும் முன் உளம் கொண்ட பொருள்களைச் சிந்தித்தலும், சிறிது உணர்ந்த பொருள்களை நன்கு தெளிதற் பொருட்டு அடிக்கடி கேட்டுணர் தலும் செய்தல் வேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 5).

**பொ**ன் வானில் ரத்த ஞாயிறு உதயமாகிக் கொண்டிருக் கிறான்...

நீண்டு விரிந்த மலைகளின் நடுநாயகமாகவும், பெருத்துச் செங்குத்தாகவும், மகாராஷ்டிரத்துக்கே உரிய கம்பீரத்துடன் காட்சி தரும் அந்த நெடுமலையில், பிரசண்ட கோட்டை - ராஜகோட்டை பல புதிய சீர்திருத்தங்களுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

அதன் மையத்தில் சின்னஞ்சிறு கோயில்.

அன்னை பவானியின் அருள் சுரக்கும் அழகிய கோயில்.

மகாராஷ்டிரத்து மாவீரத் திலகம் - தென்னகத்தின் பொன் பிறவி - சுதந்திரத்தின் எரிமலை - வடபுலத்தின் சூறைக்காற்று - சிவாஜி, தன்னுள்ளே தானாகி எண்ணத்தின் எதிரொலியாய் கட்டிய புனிதம் நிறைந்த பக்திக் காணிக்கை...

நடைபெறவிருக்கும் பூஜையை அறிவிப்பது போல பிரதாப கோட்டையின் நகாரா முழங்குகிறது.

தொடர்ந்து கண்டா மணியோசை.

வேதம் பணியும் வெள்ளிக்கிழமையில் அந்தக் கும்பாபி ஷேகம்!

சிவாஜியின் கரிய பெரிய விழிகளில் ஆனந்த நீர்த் திவலைகள்...

பக்திபூர்வமான மெய்ச் சிலிர்ப்பு...

பவானித் தாயின் பொற்பாத கமலங்களில்...

வீரவாள் -

அருட்பிரசாதமாய்க் கிடைத்த வெற்றி வாள்!...

அந்த வாளுக்கே அன்னை பவானி என்றுதான் திருப்பெயர் சூட்டியிருந்தார், சிவாஜி!

தம்மை ஈன்ற மணி வயிற்றைத் திரும்பிப் பார்க்கிறார்.

அன்னை ஜீஜாபாய் - சிவாஜியின் பெறற்கரிய தாய், மெய்மறந்து, மேனி சிலிர்த்து, பொய்யகன்ற சித்த சுத்தியுடன் நயனங்களை மூடிப் பக்திப் பிரவாகத்தில் காணப்படுகிறாள்!

ஆ! ஒரு வீர மைந்தனை எவ்வாறு ஈன்றெடுக்க வேண்டும்; எவ்வகையில் உருவாக்க வேண்டும் என்பதற்கு மூல இலக்கணம் கண்ட மூதறிவுத் தாயாயிற்றே!...

கருவிலிருக்கிறபோதே மகாபாரத ராமாயணக் கதைகளைப் படித்தாள்...

சமரில் சண்டமாருதனான அடலேறு அபிமன்யுவை உபதேசித்தாள்...

இப்போது -

தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் போலப் பெரிதுவக்கிறாள் ஜீஜாபாய்.

''அன்னை பவானி! இந்த இந்து சாம்ராஜ்யம் - பரந்த பாரதப் பழம்பெருந்தேசம் அந்நியர் வயப்பட்டு அவதிப்படக்கூடாது. இந்த ஈடு இணையற்ற இந்து சாம்ராஜ்யத்தைக் காக்க உதயமான வீரமாச் செல்வன் சிவாஜிக்கு நீண்ட ஆயுளையும் நெடிதான புகழையும் நீடித்த வெற்றியையும் அளிப்பாயாக!''

அன்னையுள்ளம் அழுத்தந்திருத்தமாக மனத்துள் பிரார்த்தனை செய்து கொள்கிறது.

தீபாராதனைகள் மந்திரகோஷம் முழங்க நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன...

வேதசாஸ்திரங்களின் விற்பன்னர்களான பிராமணோத் தமர்களின் மந்திரகோஷத்தில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார் சிவாஜி.

சமஸ்கிருதத்திலும் பிராமணர்களிடமும் அதிகமாகவும் - அதீதமாகவும் வெறியுடன் கலந்த பற்று கொண்டவராயிற்றே!

மனத்துள் நாட்டின் நிலை குறித்து -

ஒரு புறம் பரவலாக இஸ்லாமியர்கள்; மறுபுறம் இரவலாகப் பறங்கியர்களும் நாட்டை ஆக்கிரமித்து அக்கிரமம் நடத்தும் செயல்களுக்கு -

அந்தப் பிரார்த்தனையில் ஒரு வஞ்சினம் ரத்த சாசனமாய் உதயம் காண்கிறது...

''அன்னை பவானி! அந்நியர் எவரையும் இந்த நாட்டை ஆளவிடமாட்டேன்! அந்நிய மதங்கள் இந்தத் தேசத்தில் பரவ சம்மதியேன்! ஆயினும் எல்லா அந்நியர்களையும் என்னால் ஒருமித்துப் பகைத்துக் கொள்ள முடியவில்லை. ஒன்றையண்டி

ஒன்றை வேரறுக்க வேண்டியிருக்கிறது. எனவே ஆயுதபலம் நிறைந்த பறங்கியரைக் கைவசமாக்கி, இஸ்லாமியரை வென்று, பிறகு, அதே படைபலத்தால் பறங்கியரையும் விரட்டுவேன்; எனது இந்த வீர சபதத்துக்கும் வீரப்படைப் பெருக்குக்கும் செல்வம் நிறைய நிறையத் தேவைப்படுகிறது! சேனைகள் திரள்திரளாகத் தேவைப்படுகின்றன! அதற்காக ராஜதந்திரம் என்கிற முறை கொண்டு கொள்ளையடிக்க நேரிடுகிறது. கொலைகள் பல புரிய நேரிடுகிறது. ஏன்? எதற்காக? எல்லாம் இந்த இந்து சாம்ராஜ்ய எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும்தான்! ஆகவே, தாயே! நீ மன்னிக்க வேண்டியது என்னையல்ல; எழுதி வைத்த ராஜதந்திரத்தை!''

நெருப்பனைய கரிய பெரிய விழிகள், தம் கபாடமாகிய இமைகளைத் திறக்கின்றன...

வஞ்சினத்திலும் ஒரு குதூகலச் சிலிர்ப்புண்டு என்பதனை மெய்ப்பிப்பதுபோல நயனங்களின் ஓரத்தில் ஈரக்கசிவு.

தனது வீரார்ந்த - வீறார்ந்த கணவருடைய அந்தப் பக்திச் சிலிர்ப்பான தோற்றத்தைக் கவனிக்கிறார்கள் சாயாபாயும், சூர்யாபாயும்!

இந்த இருபெரும் அழகிகள் - சிவாஜியின் மனைவிகள். ஒருபுறமாக நின்று தமது கணவருடைய சுயமரியாதை நிறைந்த சுதந்திரப் பூமிப் போராட்டத்தை வாழ்த்தியும் வழுத்தியும் பூரிக்கிறார்கள்.

அவர்களுக்குப் பின்னால் -

மராட்டிய அரண்மனைப் பணிப் பெண்கள்.

அவர்களுக்கே உரிய பொன் மேனியழகு.

பூரித்த முகவிலாசம்.

தலையான பணிப்பெண்கள், கையில் குழந்தைகளை ஏந்தி நிற்கிறார்கள்.

சம்பாஜி, சக்குவார்பாய், அம்பிகாபாய், ரனுபாய்...

சிவாஜி பெற்றெடுத்த சிறப்பான செல்வங்கள்...

கும்பாபிஷேகம் முடித்து இறுதி ஆராதனை நடைபெறுகிறது.

நகாரா முன்னிலும் வேகமாகவும் பெருத்த சத்தத்துடனும் முழங்குகிறது.

பனிலங்கள் ‘பம்பம்’ மென்று ஓங்காரமிடுகின்றன.

‘துந்த், துந்த்’தென்று துந்துபிகள், ஆர்ப்பரிக்கின்றன.

‘டாங் டாங்’ வென்று கண்டா மணியோசை.

குழுமியிருந்த அதிகாரிகளும், வீரர்களும் பிரசண்ட கோட்டை வாழ்மக்களும் பெருத்த குரலில் ‘ஜெய்பவானி’ என ஏற்றிப் போற்றி வழிபடுகிறார்கள்.

‘‘ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!’’

‘‘ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!’’

கும்பாபிஷேகம் இனிது நிறைகிறது.

வானில் ரத்த ஞாயிறு சித்தம் குளிர்ந்து பவனி வந்து கொண்டிருக்கிறான்.

பூஜையை முடித்துக் கொண்டு அரண்மனையுள் நுழையாது, வெண்புரவி சகிதமாய் வேகமுடன் சிவாஜி எங்கே செல்கிறார்...?

அனைவருக்குமே தெரிந்த ரகசியம்தான்...

ஆனாலும் அன்னை ஜீஜாபாய் இது பற்றியதில் எதையும் கண்டு கொள்ளவில்லை.

கண்டுகொள்ள வேண்டிய ராஜமாதாவே வாளாயிருக்க ஏனையவர் வாலை நீட்ட முடியுமா?

சிவாஜி சென்று கொண்டிருப்பது -

அரசியல் இலக்கியமான - தனது சிந்தனைச் செல்வமான பூஜ்யாதேவியைச் சந்திக்கத்தான்!...

ஓ... பூஜ்யாதேவி...

எத்தனை பெரிய அறிவு படைத்த இயல் மங்கை; இலக்கண மங்கை; இசை மங்கை!....

நாட்டிய மங்கை என்றும் சொல்லலாம்.

அவளுக்கு அந்தக் கலையில் ரசனையுண்டு; பயிற்சியில்லை.

பூஜ்யம் என்றால் வட்டம்.

மதிப்பற்றதும் அதுதான்.

மதிப்புமிக்கதும் அதுதான்.

ஓ... நமது சாணக்கியன் இந்தப் பூஜ்யத்தை மட்டும் கண்டுபிடிக்கவில்லையானால், கணித இயல் வளர்ந்து காலங்களைக் கடந்து கொண்டிருக்குமா?

யார் நினைக்கிறார்கள் சாணக்கியப் பெருமானை...?

அவள் நினைத்தாள்...

இல்லையென்றால் தனது ரூபநாயகி என்ற பெயரை மாற்றி, பூஜ்யாதேவி என்று வைத்துக்கொண்டு பெருமைப்பட்டிருப்பாளா?

சாணக்கியன் பூஜ்யத்தைக் கண்டுபிடித்ததால் அவருக்குப் பூஜ்யர் என்ற பட்டப் பெயர் உண்டு. அந்தப் பட்டப் பெயரையே தனது இயற்பெயராகக் கொண்டாள்.

சாணக்கியரது பட்டப் பெயர்கள் எத்தனையோ?...

குறிப்பாகக் கௌடலீயர் என்பது பிரசித்தம்...

ஏன் கௌடலீயதேவி என்று வைத்துக் கொண்டிருக்கலாமே அவள்?...

பூஜ்யத்தின் சிறப்பு அவளுக்குப் புரிந்திருந்ததென்றால், அவளது அறிவு அபாரமானதுதான். அறிவு மட்டும்தான் அபாரமானதா?

ஓ... அந்த அழகு...

நிலவைப் பிடித்துச் சுதையாக்கி, ஒளிமிக்க நித்திலங்களைத் துகளாக்கிக் கலந்து, பொன்னால் வார்ப்படம் செய்து, அதற்குப் புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, மின்னலைத் தேக்கித் தெளித்து, மீன்களைப் பிடித்துக் கண்களாக்கி, யோசிக்கிறான் படைப்புகர்த்தா பிரமன்...

இன்னும் என்ன செய்யலாம்...

இத்தனை பெரிய அழகியைச் சிருஷ்டித்து என்ன பயன்?

அறிவற்ற அழகு, ஆபத்துக்குச் சமானம்...

தனது மலையாள் சரஸ்வதியை சாங்கோபாங்கமாகச் சமனப்படுத்தி வீணையைக் குரலாக்குகிறான்...

வித்தைகளை அர்ப்பணிக்கச் செய்கிறான்...

ஆ! ரூபநாயகி காவிரிக் கரையில் ஓர் அந்தணக் குடும்பத்தில் உதயம் காண்கிறாள்...

அவள்தான் பூஜ்யாதேவி...

சிவாஜி எங்கெல்லாம் முகாமிட்டுக் கொண்டிருப்பாரோ அங்கெல்லாம் அந்தப் பூரணஜோதி பின்தொடரும்...

ஆங்காங்கு, அவளுக்கென்று இயற்கை எழில் பசுமைத் தாண்டவம் புரியும் இடமாகப் பார்த்துத் தென்னங்கீற்றுக்களால் பர்ண சாலையே போன்று ஓர் ஆசிரமம் அமைக்கப்பட வேண்டும்; அதுதான் அவள் வாழ்கிற குடிலாக அமையும். அங்கே எந்தவிதத் தவறுகளுக்கும் இடமில்லாதது போலத் தெய்வ மணம் கமழும்.

அவள் வணங்கும் சர்வேஸ்வரன் - சிவபெருமானின் சிலை - பெரிதாக வீற்றிருக்கும்.

ஆ! அவளது வாழ்க்கை - அவளது கதை - அலாதியானது...

தொலைவில் குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்டு ஆயத்தமாகிறாள் பூஜ்யா.

அந்தக் குளம்படிச் சத்தத்தின் கதிகளைக் கணக்கிட்டே அது தனது காதலரின் லயப்பிரமாணம் என்பதை யூகிக்கிறாள்.

மெல்ல வெளியே வந்து எட்டிப் பார்க்கிறாள்...

மேகத்திரையை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்க்கும் சந்திர பிம்பம் போல!...

ஆ! நிலவுக்குக் களங்கமாவது...

பூமியின் நிழல் அதன்மீது படிவதால் களங்கம் என்றால்...

சிவாஜியின் நிழல் தன்மீது படிந்திருப்பதும் ஒரு களங்கமே...

வெண்புரவியை விட்டு இறங்குகிறார் வீரமா புருஷர் சிவாஜி.

கும்பாபிஷேகத்தை முடித்துக் கொண்டு நேரே இங்கு வருவதால் அவரது தோற்றம் சாட்சாத் அந்தச் சிவபெருமானைப் போன்றே காட்சியளிக்கிறது...

புரவியை ஒருபுறமாக இழுத்துச் சென்று கட்டுகிறான் பணியாளன்.

அந்தக் கீற்றுக் குடிலைச் சுற்றிலும் தெரிந்து சிலர், தெரியாமல் சிலராக இரவும் பகலுமாகக் காவல் காக்க உத்தரவிட்ட விதங்கள் சிவாஜியின் கண்காணிப்புக்கு எடுத்துக்காட்டுக்களாக விளங்கின.

எட்டிப் பார்க்கும் தமது மாலையிடாத மனைவி, களங்கமிலாக் காதலி - சேலைகட்டிய ராஜகுரு - பூஜ்யாதேவியை உற்றுக் கவனிக்கிறார் சிவாஜி.

ஓ... தமிழ் மொழிக்கே உரிய நயமான அழகு...

தமிழகத்துக்கே உரிய பண்பான தோற்றம்...

துள்ளத் தெரியாத மீன்கள் - அவளது கண்கள்...

ஆ! அவற்றில்தான் எத்துணை தீட்சண்யம்!

அட்டகாசம் புரியத் தெரியாத அழகுத் தோற்றத்தை வழக்கம் போலச் சில கணங்கள் நின்று துய்க்கிறார்...

''வாருங்கள்...''

- வீணை அழைக்கிறது.

அருகே வந்த சிவாஜி, எடுத்து வந்த பிரசாதத்தை அவளிடம் நீட்டுகிறார்...

பிறகு குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் இடுகிறார்...

''என்ன வாழ்த்துகிறீர்கள்?''

-வீணையின் சாரணைத் தந்தி கேட்கிறது.

என்ன வாழ்த்துவார்?

'தீர்க்க சுமங்கலீ பவ!' என்று வாழ்த்துவாரா?

இன்னும் மணந்து கொள்ளவில்லையே?

'காதல் நீடூழி வாழட்டும்!' என்று வாழ்த்துவாரா?

காதலித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான் என்பதாக அல்லவா அர்த்தமாகிவிடும்?

அறிவை வாழ்த்தலாம் என்றாலோ அந்த அறிவு பேரறிவு. தமிழும், சமஸ்கிருதமும், மராட்டியமும், ஏன் பாரசீகமும் உருதும் கூட அவளிடம் கவிதை பாடிக் கொண்டிருக்கின்றன.

அந்த அறிவை வாழ்த்த நான் யார்? - இது அவரது உள் மனக் கேள்வி.

'விரைவில் நமக்குத் திருமணம் நடக்க வேண்டும்' என்று வாழ்த்தினாலோ...

இந்த இந்து சாம்ராஜ்யக் கனவு முடிகிறவரை அந்தப் பேச்சை - ஏன், கட்டிலின் இனிய கதை கேட்கும் பேச்சைக் கூட எடுக்கக் கூடாது என்கிறாள்...

'தீர்க்காயுஷ்மான் பவ' - என்றாலோ, குங்குமத்தோடு சாகப் பிரார்த்தனை செய்கிறாள்...

யுத்த களத்துச் சிங்கத்தைக் காதலித்தவள்...

வீரனுக்குச் சாவு எப்போது வரும் என்று சொல்ல முடியும்?

பின், என்ன கூறித் தான் வாழ்த்த முடியும்?

விழியாக விழிக்கிறார் வீரமா திலகம் சிவாஜி.

-----

# 2

செம்மைக்கு ஏதுவாகிய பொறி யடக்கம், காமம், வெகுளி, கடும் பற்றுள் (பிற பொருள் மேல் ஆசை). மானம், மதம், உவகை என்னும் குற்றங்களைக் கடிதலும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகள் தத்தம் புலன்களாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பனவற்றில் இயற்கையாகவே மாறுபடாமல் நிகழ்வதும் நூற் பொருளுணர்ந்து ஒழுகலான நிகழ்தலும் பொறியடக்கமாம்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 6).

''அடுத்த ஜன்மத்திலும் சந்தித்து வாழ்வோம் பூஜ்யா!''

இதனைக் கூறி வாழ்த்துகிறபோது...

ஆ! மாவீர திலகமான சிவாஜிக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அவரது வீரம், புலியைக் கண்டாலே வியர்க்காது; வெடவெடக்காது. புலிநகம் உறையைக் கையிலிட்டுப் போர் புரியும் ஒருவகை யுத்த தந்திரத்தில் பயிற்சி பெற்ற அவரது துணிச்சலுக்கு முன் புலி, எலியாகிவிடும்.

இங்கே பூஜ்யாதேவியின் தோற்றம் அவரை வியர்க்கச் செய்கின்றது. அறிவுக்கு முன் அனைத்தும் சரணாகதி என்பது போல இருக்கிறது அந்தக் காட்சி.

பூஜ்யாதேவி கலகலவென்று சிரிக்கிறாள்...

''என்ன பூஜ்யா, சிரிக்கிறாய்?''

- குழந்தை மாதிரி கேட்கிறார் சிவாஜி.

நிஜமான காதலர்கள், ஒருவரிடம் ஒருவர் குழந்தை மாதிரிதானே?...

''அடுத்த ஜன்மத்திலும் சந்தித்துத்தான் வாழ வேண்டும்; இல்லையா பிரபோ? அதாவது, இந்த ஜன்மத்தைப் போல! ஒருவேளை நான் பூஜ்யாதேவி என்பதனால் இந்த ஜன்மத்தில் நமது காதல் பூஜ்யம்; அடுத்த ஜன்மத்தில் பூரணாதேவி என்று பெயரிட்டுக் கொண்டால், காதல் பூரணம் ஆகும் என்கிறீர்களா பிரபோ?''

சிவாஜியின் வீரக் கண்கள் பனிக்கின்றன.

''பூஜ்யா! நீதான் சொல்வாய்... பூஜ்யம் என்பது எண் மதிப்பு மிக்கது! ராஜதந்திரச் சிறப்பு மிக்கது! சாணக்கியோதயச் சுடர்! அதனை நீயே விரும்பிப் பெற்றுக் கொண்டாய்! நான், 'ரூபா, ரூபா' என்றழைத்த போதெல்லாம் 'எனது அழகைப் பெயரிட்டு அழைக்காதீர்கள்! அறிவைப் பெயரிட்டு அழையுங்கள்!' என்பாய். அந்த அறிவுக்கு முன் நான் ஒரு மாணாக்கன். இப்போதும் அந்த நிலையில்தான் இந்தப் புனிதமான பிரசாதத்தை உனது பவித்திரமான கரங்களில் வைத்தேன். ஆனால், உனது நெற்றியில் இந்தப் பிரசாத குங்குமத்தை இடுகிறபோது நீ நினைக்கலாம் காதலர் என்று! நான் எனது மனைவிக்கு இடுவது போலவே இட்டிருக்கிறேன்!'' என்று கூறிப் பெரிதாகப் பூரித்தார்.

''நான் இன்னும் உங்கள் மனைவி ஸ்தானத்தில் ஆகவில்லையே?''

பூஜ்யாதேவி புன்முறுவலுடன் கேட்கிறாள்.

''படுக்கைதான் கணவன்-மனைவியை நிர்ணயிக்கிறது என்றால், அது இல்லறமாகாது. அது இல்லறத்தின் ஒரு பகுதி. அதுவே இல்லறமானால், நாம் மனிதர்கள் அல்ல; மனித மிருகங்கள். ஆராயப்

போனால் மிருகங்களுக்கும் ‘காமம்’ அதனதன் வாழ்க்கையில் ஒரு பகுதியே போலத் தென்படுகிறது. வேண்டுமானால் சொல். அடுத்த முகூர்த்தத்திலேயே எனது மனைவியாக்கிக் கொள்கிறேன். நீதானே மறுக்கிறாய்?’’

சிவாஜியின் நீண்ட கால்கள் அந்தக் கீற்றுக்குடிலின் வாயிலைக் கடந்து உள்ளே செல்கிறது. பின்னால், சிலம்பு கொஞ்ச பூஜ்யா தேவியின் கால்கள் பற்றிச் செல்கின்றன.

உள்ளே...

மனத்துக்கு ரம்மியமான சூழ்நிலையை அளிக்கிறது.

மெய்மறக்கச் செய்யும் வாசனை.

காலையிட்ட சாம்பிராணி மணம், இரவு போட்ட அகில் மணத்துடன் சங்கமித்து ஒரு புதிய மணத்தை விளம்பரப்படுத்துகிறது.

கிழக்குப் பார்த்தாற்போல, சிவபெருமானின் வெங்கலச்சிலை. அதன் கழுத்தில் அன்றலர்ந்த பூமாலை அலங்கரிக்கிறது.

சிவபெருமான் சிலை எதிரே, பூஜ்யதேவரான சாணக்கிய பெருமானின் கௌடலீயமான அர்த்த சாஸ்திரம் விரித்து வைக்கப் பட்டிருக்கிறது. அதன் ஓலைகள் மிக்கவும் பழைமையாகத் தெரிகின்றன. எப்போதோ, எங்கிருந்தோ பெயர்த்து எழுதப்பட்ட ஓலை நறுக்குகள். அவளது தந்தையால் அவளுக்கு அளிக்கப்பட்ட பல நூல் சொத்துக்களில், அது முதல் சொத்தாய்த் திகழ்ந்தது.

அந்த ஆஸ்தி - அந்த அஸ்திரம்தானே சிவாஜியை மயக்கியது; மண்டியிடச் செய்தது!

ஒருமருங்கே பட்டு மெத்தை மீது வீணை படுத்திருக்கிறது. அதன் சப்த சுரங்கள் அவளது நெஞ்சக் குகையின் தவயோகிகள்.

அவளது அந்தக் கீற்றுக் குடிலில் யாரும் ஆசனமிட்டு அமரக் கூடாது. எனவே, அங்கு பெயருக்குக்கூட ஓர் ஆசனமில்லை. ஒருமருங்கே இரண்டே பெயர்கள் உட்கார்ந்து ஓய்வாகப் பேசத் திண்டு திமாசுகள். ஓர் அறை; அது பூஜ்யாதேவியின் படுக்கையறை. அதனுள்கூட சிவாஜி நுழைந்தது கிடையாது. தொலைவிலிருந்து பார்வையிட்டிருக்கிறார்.

அந்தக் குடிலில் அந்நியர் எவரும் பிரவேசித்தது கிடையாது. பிரவேசிக்க அனுமதித்ததும் கிடையாது. அத்தனைத் தூய்மைச் செல்வியாய் அவள் வாழ்ந்து வந்தாள்.

இருவரும் நீண்ட தலையணைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தனர். அவர்கள் தலைக்கு மேலே சிவாஜியின் வீரத்தோற்றம் நிறைந்த வண்ணச் சித்திரம்.

இந்துப் பற்றுடன் கூடிய ஓவியன் ஒருவன், மெத்த மகிழ்ச்சியுடன் வரைந்து கொடுத்த சித்திரம்.

பூஜ்யாதேவியின் அந்த பரிசுத்தமான வாழ்க்கையைக் கண்டு சிவாஜி பூரித்த நாட்கள் ஏராளம்.

''பூஜ்யா! எத்தனை நாட்களுக்குத்தான் இப்படிக் காதல் வயப்பட்டே வாழ முடிவு செய்திருக்கிறாய்?''

- சிவாஜி இவ்விதமாகக் கேட்கிறபோது அவரது குரல் தழதழக்கிறது.

பூஜ்யாதேவி, தனது அருமைக் காதலரை நன்கு பரிசீலித்தவள். ஆயினும், அவரது இப்போதைய இந்தக் கேள்வியைக் கண்டு வியந்து நோக்குகிறாள்.

''பிரபோ! நாம் காதலிப்பதாக யார் சொன்னது?''

என்ன இது? பூஜ்யா இப்படி பீரங்கி வெடிப்பது போலக் கேட்கிறாள்?...

சிவாஜிக்கு ஒன்றுமே புரியவில்லை.

பூஜ்யாதேவியே பேசத் தொடங்குகிறாள்: ''பிரபோ! காதல் என்பது வேறு. நாம் பழகும் முறை வேறு. என்றாவது நம்முள் நாம் மயக்கம் கண்டிருக்கிறோமா?''

சிவாஜியிடமிருந்து பதில் வரவில்லை. உண்மையிலும் அவர் மயக்கம் கண்டிருக்கிறார்.

''நான் மயக்கம் கண்டிருக்கிறேன்'' என்று சொல்லப் போக, ஒன்றுகிடந்து ஒன்று ஏற்பட்டுவிடக் கூடாதல்லவா?

அறிவில் சர்வ வல்லமை பொருந்தியவளாயிற்றே பூஜ்யாதேவி. அதற்கும் ஒரு மறுப்பு, அல்லது விளக்கம் தந்து விடுவாளே!

''நீங்கள் மயக்கம் கண்டிருக்கிறீர்களா பிரபு?''

''......''

''நிச்சயம், நீங்கள் மயக்கம் கொள்ளக் காரணமே இல்லை. ஏனென்றால், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களைப் பெற்றுச் சலித்தவர் அல்லது சளைத்தவர்.''

இந்தக் கட்டத்தில் அவரால் பதில் சொல்லாமலிருக்க முடியவில்லை.

''பூஜ்யா! சலிப்போ சளைப்போ இதுவரை ஏற்பட்டதில்லை.''

''ஓ....''

இருவருமே இருவேறு அர்த்தங்களில் கூர்ந்து கவனித்துக் கொள்ளுகின்றனர்.

பூஜ்யாதேவியின் கண்களில் கிண்டல் வேவு பார்க்கிறது என்பதை சிவாஜியால் உணரமுடிகிறது.

''நான் சொன்னது உனக்கு கிண்டலாக அர்த்தம் புரிகிறது என்று நினைக்கிறேன் பூஜ்யா!''

''வேறு என்னவாம்?''

''இத்தனை மனைவிமார்களிருந்தும், மாதம் இருமுறைதான் எனது இந்தக் கணக்கு. அதிலும் அவரவர் முறையுண்டு. யுத்தத்துக்குச் சென்றால், இந்தக் கணக்கும் முறையும் உறக்கம் கண்டுவிடும். ஆனால், உனது விஷயத்தில் நான் அவ்வாறு இருக்க மாட்டேன். காரணம் பூஜ்யா, என்னால் மறைக்க முடியவில்லை. நான், உன்னை எல்லாவற்றுக்கும் மேலாக நேசிக்கிறேன். எல்லாவற்றைக் காட்டிலும்

அதிகமாக மயக்கம் கொண்டிருக்கிறேன். முதலில் இவ்விதம் கூறத் தயங்கினேன். நீ எப்படி என் வீரத்தைக் காதலித்து மயங்கினாயோ, அப்படி நான் உனது அறிவைக் கண்டு மயங்கினேன். எனது லட்சியப் புத்தகம் நீ! எனது ராஜகுரு நீ! எனது தாய் ஜீஜாபாய்க்கு அடுத்தபடியாக வணங்கிப் பயப்படும் மானுட தெய்வம் நீதான்.''

''காதலிக்கோ மனைவிக்கோ காதலனோ, புருஷனோ பயப்படுவது சரியில்லை.''

''சரியானதே! உத்தமமான காதலி, பரிசுத்தமான காவியம். கற்பு நிறைந்த மனைவி, வணங்குதற்குரிய தெய்வம். இரண்டுமே பக்திசெலுத்திப் பயப்பட வேண்டியவைதாம்.''

''ஓகோ! நல்லது. நீங்கள் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு இதோ பதில் சொல்லுகிறேன். எத்தனை நாட்களுக்குத்தான் காதல் வயப்பட்டிருப்பது என்பதுதானே உங்கள் கேள்வி?''

வீரம், குழந்தையாகத் தலையசைக்கிறது.

''நீங்கள் மகுடாபிஷேகம் செய்து கொண்ட இந்தக் காதலி - லட்சிய நூல் - ராஜகுரு - கண்டுகளிக்க வேண்டும். இந்தச் சாம்ராஜ்யத்தில் வீரக்கொடி கம்பீரமாகப் பறக்க வேண்டும். அப்போது நான், காதல் பதவியிலிருந்து விடுபடுகிறேன். லட்சியப் புத்தகம், புதிய பகுதியை எழுதுகிறது. ராஜகுரு, பதவி விலகல் செய்து கொள்கிறார்!''

''அப்படியென்றால்?''

''பூஜ்யாதேவி, சிவாஜி தேவியாகிறாள்...!''

''பூஜ்யா!''

அப்படியே சேர்த்து அணைத்து வாய்மணக்க...

மூச்!

நிச்சயம் முடியாது. மனத்தால் இவ்வாறு எண்ணி மகிழ்ந்தேன் என்றாலே கடிந்து கொள்வாள் பூஜ்யாதேவி.

''பிரபோ! அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?''

லட்சியப் புத்தகத்தின் கால்வாசி பகுதியிலிருந்து ஒரு ஏடு புரட்டப்படுகிறது.

''இன்னும் பல கோட்டைகளைப் பிடித்துப் பீஜப்பூரை அடிமைப்படுத்த வேண்டும்.''

''இப்படி மலைப் பெருச்சாளி மாதிரி, மலைகளையும் கோட்டைகளையுமே பிடிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தால் எப்படி? பீஜப்பூர் பற்றிச் சொன்னீர்களே, அது முக்கியம். இப்போது நமது முதல் எதிரி பீஜப்பூர்; அடுத்து, ஷாஜஹான்!''

''ஷாஜஹான்? தில்லிப் பேரரசா?''

''ஏன் தயங்குகிறீர்கள்! தில்லி கோட்டையில், ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு, நமது இந்து சாம்ராஜ்யக் கொடி பறந்தே தீரும்!''

''நான் அவ்வளவு தூரத்துக்குக் கற்பனை செய்து பார்க்கவில்லை பூஜ்யா. இந்தத் தக்கணத்தைக் கட்டியாண்டால் போதும்!''

''தக்கணம்? தமிழ்நாட்டையும் சேர்த்தா?''

''ஏன் கூடாது?''

பூஜ்யாதேவி ஒரு கணம் - ஒரு கணமென்ன பல கணங்கள் - மலைத்துவிட்டாள்!

''ஏன் ஸ்தம்பித்துவிட்டாய், பூஜ்யா?''

''ஒன்றுமில்லை. பிரபோ! அது சரி, ஷாஜஹான் மகாராஜா செய்திக்கு மேல் செய்தியனுப்பிக் கொண்டிருக்கிறார். என்னதான் முடிவு எழுதியிருக்கிறீர்கள்?''

''நீ தெரிவித்த அனைத்துமே நண்பன் பாலாஜி மூலம் அவ்வப்போது அறிவித்துக் கொண்டுதானிருக்கிறேன். எனது தந்தை பீஜப்பூர் சுல்தானால் வஞ்சிக்கப்பட்டு வதைக்கப்பட்டு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கையில், நீ தெரிவித்தபடி நேச பாவத்துடன் நடந்து கொள்வதாக அறிவித்தேன். உடனே தில்லி வேந்தர்

ஷாஜஹான் தமது புதல்வர் மூரத் மூலம் பீஜப்பூருக்கு எச்சரிக்கை விடுத்தார். அதனால் தந்தையாரின் உயிர் பிழைத்தாலும், தந்தையாரின் மகாசேனாதிபதி பதவியை நீக்கி, சிறை செய்யாக் கைதியாக்கி, இந்த நான்காண்டுகளாக வைத்துக் கொண்டிருக்கிறார் பீஜப்பூரின் சர்வ வல்லமை பொருந்திய மகாராணி பெரிய சுல்தானா பேகம். அதற்கு என்ன விடிவு என்பதுதான் புரியவில்லை பூஜ்யா.''

பூஜ்யா கலகலவென்று சிரிக்கிறாள்.

''ஏன் சிரிக்கிறாய் பூஜ்யா?''

''அவரை அவ்வாறு செய்து வைத்திருக்கச் செய்தவளே நான்தான். அவரை அப்போதே பீஜப்பூர் மகாராணி விடுவித்துக் கர்நாடகத்துக்கு அனுப்பி இருந்தால், இந்நேரம் நீங்கள் இத்தனை கோட்டைகளைப் கபளீகரம் செய்திருக்க முடியாது. பிறகு, தந்தையை விட்டே உங்களைச் சிறைப் பிடிக்கச் செய்திருப்பாள் பீஜப்பூர் மகாராணி பெரிய சுல்தானா பேகம்!''

''நீ எப்படி எனது தந்தையை பீஜப்பூரிலேயே வைத்திருக்க ஏற்பாடு செய்தாய்?''

''இந்த ராஜதந்திரம் இப்போதைக்கு உங்களுக்குத் தெரிய வேண்டாம். தில்லி மகாராஜன் ஷாஜஹான் தயவுடன் தந்தை உயிரை மீட்டோம். அன்று முதல் உங்களுக்கு ஒரு பதவியை ஒதுக்கிவைத்து, ஷாஜஹான் இன்னமும் காத்துக் கொண்டிருக்கிறார். அதற்குப் பல காரணங்களைச் சமாதானமாக எழுதியனுப்ப எனது அரசியல் அறிவு எப்படி வேலை செய்து வருகிறதோ, அப்படியே உங்கள் தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லேவையும் பீஜப்பூரிலேயே தங்க வைத்திருக்கிறேன். இதற்கு எனது ஆயுதமாகப் பயன்பட்டு வருபவர் ராமதளவாய் - என்னை வளர்த்து ஆளாக்கியவர். இன்னொன்றும் சொல்வேன். விரைவில் தில்லியிலிருந்து படையெடுப்பு நிகழப் போகிறது!''

''தில்லியிலிருந்தா? யார் மீது?''

''அவசரப்பட வேண்டாம். பொறுமையாக இருந்து கவனியுங்கள். இப்போதைக்கு எனக்கு ஒரு சத்தியம் தேவை?''

‘‘என்ன சத்தியம் பூஜ்யா?’’

‘‘தமிழ்நாட்டையும் அடிபணியச் செய்வேன் என்றீர்களே... அது வேண்டாம். தமிழ்நாட்டில் அந்நியராட்சி ஏற்படாமல் தமிழாட்சியே நிலவ உறுதுணையாக இருங்கள். தமிழ்நாட்டில் ஒரு ஆந்திரக் கலப்பு போதும். மேலும் ஒரு மகாராஷ்டிரக் கலப்பு வேண்டாம். ஏனென்றால், தமிழகம் தூய்மையுடையது?’’

‘‘தமிழகம், தூய்மையுடையது? எதை வைத்து உறுதியாக கூறுகிறாய்?’’

‘‘என்னை வைத்தே அதனை எடை போடலாம்!’’

மருண்டு போனார் மாவீர திலகம் சிவாஜி.

சத்தியத்துக்காக பூஜ்யாதேவியின் வலக்கரம் நீளுகிறது...

சிவாஜியின் கனவே, தமிழகத்தின் அழகிய வேலூர்க் கோட்டையையும், தமிழ்நாட்டுத் திராய் நகரம் என்று புகழப்பட்ட செஞ்சிக்கோட்டையையும் பிடித்துத் தம்முள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது. ஆனால், பூஜ்யா அந்த இனிய கனவைக் கலைக்கிறாளே...

பூஜ்யாதேவியின் வலக்கரம் நன்றாகவே நீண்டுவிட்டது.

சத்தியம் செய் என்பது போல அது உத்தரவிடுகிறது.

சிவாஜியின் தயக்கம் நீடிக்கிறது.

-----

# 3

கொடுமையான தண்டனை, மக்களை நடுக்கமுறுத்தும்; குறைந்த தண்டனையோ அவமதிக்கப்படும். தகுதியான தண்டனை, நன்கு மதிக்கப்படும். நூல் முறை வழுவாது நன்கு நுனித்துணர்ந்து செலுத்தப் படும் தண்டனை, மக்களை அறம், பொருள், இன்பங்களில் தலைப் படுத்தும். காமம், வெகுளி, மயக்கம் காரணமாக நூன்முறை வழியாகச் செலுத்தப்படும் தண்டனை வானப் பிரஸ்தம், துறவு நிலைகளையுடை யாரையும் கோபமுறச் செய்யு மென்றால், இல்லறத்தான் சினப் பதில் தவறென்ன? தண்டனையே இல்லையென்றால். அது [1]மச்ச நியாயத்தை விளைவிப்பதாம்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 4).

**த**மது வருங்காலக் கனவுகளுக்குரிய ஒரு பகுதிக்கு இவ்வளவு பெரிய சோதனை! அதுவும் தமது உயிரனைய பூஜ்யாதேவியிடம் இருந்து புறப்படும் என்பதை அவர் கனவில்கூடக் கண்டதில்லை.

---

1. மச்ச நியாயம் என்பது பெரிய மீன்கள், சிறிய மீன்களை உண்டல் போல! வலியவர்கள், மெலியவர்களைத் துன்புறுத்தத் தொடங்கிவிடுவர்.

பொய்ச்சத்தியம் வைக்கவும் அவர் விரும்பவில்லை. ஏனென்றால், அவர் ஒரு மெய்யான புருஷர்; தரும புருஷர்; சத்தியத் தலைவர்; கர்மவீரர்.

பொன்னனைய, நீண்ட வழுவழுப்பான வளைக்கரத்தை நிதானமாகக் கவனிக்கிறார். ஆ! இந்தக் கரம் பற்றும் நல்ல நாள்...

வளைக்கரம், சத்தியம் செய்தே ஆகவேண்டும் என்பது போன்ற நிர்பந்தத்துடன் நீளுகிறது...

''பூஜ்யா! உனது கோரிக்கைப்படியே சத்தியம் செய்வேன். என்னால் - தனி மனிதனான சிவாஜியால், உனது தமிழகத்துக்கு எந்தவிதப் பரிசுத்தக் கேடும் நிகழ்ந்துவிடாது. ஆனால், ஒட்டு மொத்தமான மகாராஷ்டிரர்களாலோ, எனது உறவு முறைகளாலோ ஏற்படுமாயின், அதற்கு நான் பொறுப்பாக முடியாது. கூடியவரையில், அவ்விதம் ஏற்படாதிருக்க நான் முயல்வேன். ஏன்? தமிழகத்தை எந்த அந்நியர்களும் கபளீகரம் செய்யாமல் பார்த்துக் கொள்வேன். பாதுகாப்பேன். நன்றாகக் கவனித்துக் கொள், பூஜ்யா! பாதுகாப்பேன். இது சத்தியம்!''

வளைகரம் மீது, வாள் பற்றிக் காய்ப்பேறிய கரம் பதிகிறது.

சத்திய முத்திரை அழுத்தமாகிறது. முதல் தடவையாக ஏற்பட்ட அந்தத் தொடுதல் - ஸ்பரிசம் - அவர்களை என்பதை விட, சிவாஜிக்குச் சற்றே போதையளிக்கிறது.

ஆ! இந்தக் கரம்பற்றும் நல்ல நாள்...

பூஜ்யாதேவியின் செவ்விதழ்கள், வலம்புரி முத்துக்களைக் காட்டி முறுவலிக்கின்றன.

சிவாஜிக்கும் பவழம் போன்ற உதடுகள். அது, மென்மையான சுகானந்தத்துடன் பூஜ்யாதேவியின் புன்முறுவலைப் போட்டியிட்டு மகிழாமல், ஏற்று மகிழ்கிறது.

அவள் தனது காதலர் வீரமா திலகம் சிவாஜியை உற்றுப் பரிசீலித்து நோக்குகிறாள்.

ஓ... இந்த அதிசயமான புருஷப் பேரழகை அவள் எத்தனை தடவைதான் ரசித்து ரசித்து பரிசீலித்து இருக்கிறாள்! இப்படி ஒரு புருஷ காம்பீரியத்தை அவள் ஏட்டில் படித்திருக்கிறாள்; இப்போது, நிதர்சனமாகப் பார்க்கிறாள்.

தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லே போன்று தப்பாது பிறந்திருக்கிறார்...

ஒரு வித்தியாசம், உடற்கட்டு.

[1]சிவாஜி, சற்று சதைப் பிடிப்பான ஒல்லி சரீரம். ஏறத்தாழ நூற்று அற்பது பவுண்டு. நல்ல உயரம். நீண்ட மூக்கு. அழகை அழகு செய்யும் அளவான தாடி-மீசை. செக்கச் சிவந்த மேனி. பிடிப்பான கால்சட்டையும், முழுக்கை வைத்த நீண்ட அங்கியும் வெள்ளை வெளேரென்று தும்பைப் பூ போல - அவரது மனம் போல - மிளிர்கின்றன.

அதிலே பூ வேலைப்பாடுகள்.

இந்த மானுடராய்ப் பிறந்த தேவதூதர், வீரத்தைப் பிரகடனப் படுத்தவே அவதரித்தார் போலும்!

பூஜ்யாவின் கண்ணிமைகள் படபடக்கின்றன. மயில் தோகை போல!

''என்ன பூஜ்யா அப்படிப் பார்க்கிறாய்?'' - சிவாஜியின் சரித்திர நாவு அசைகிறது.

அவள் சிரிக்கிறாள்.

''உங்களை, எப்படி பார்த்தாலும் எனக்குத் திகட்டவில்லை பிரபோ!''

''என் மனைவி அப்படிச் சொல்லமாட்டேன் என்கிறாள்.''

''எந்த மனைவி? ஒரு மனைவியாக இருந்தால் சொல்லுவாள்!''

''பூஜ்யா! அடிக்கடி எனது பலவீனத்தைச் சுட்டிக் காட்டுகிறாய்! இது, ராஜபாரம்பரியத்துக்கு இயல்பானது. உனது ராஜராஜசோழர்,

1. 'Shivaji the Great' - by Dr. Balakrishna, M. A., Ph.D., F. R. H. S., F. R.S. S., F. R. E. S. இவர் எழுதிய பல தொகுப்புகள்தாம் சிவாஜி வரலாற்றுக்கு ஆதாரப் பூர்வமானவை. 1932-ல் வெளியான இந்நூலின் பகுதிகளே இந்நாவலுக்குரிய சரித்திரச் சான்றாகும்.

ஒன்பது மனைவியர்களுக்கு மேல் பெற்றிருந்தாராமே! எனக்கு ஒன்றும் அதிகமில்லை!''

''இப்போது அதிகமில்லை; போகப்போக யார் கணக்கிடுவது?''

''நீதான்!''

''இதுதானா எனக்கு வேலை?''

''உனது வேலை, எனது சாம்ராஜ்யம்! ஓய்விருக்கும் போது கணக்கிடலாம் அல்லவா? பூஜ்யா! ஒருவேளை நமக்குத் திருமணமான பிறகு திகட்டிவிடலாமோ?''

''சத்தியமாக, அப்போதுதான் திகட்டாது. ரசனை அதிகரிக்கும். இந்த ரசனையில் நாம் மூழ்கிப் போனால் நமது கனவுகள் என்னாகுமோ என்கிற பயத்தில்தான், நான் மகுடாபிஷேகம் முடிந்ததும் மாளிகை மஞ்சத்துக்கு வருகிறேன் என்று சொல்லுவது!''

''ஓ... மாளிகை மஞ்சத்துக்கு! அப்போதும்கூட, நான் உனக்குத் தனி மாளிகை அமைத்துத் தருவேனேயல்லாது, எனது அந்தப்புரத்தில் அறை ஒதுக்கமாட்டேன்.''

''யார் ஒதுக்கச் சொன்னார்கள்? மகாராஷ்டிரப் பெண்டிர், ஒரு தமிழச்சிக்குத் தனியறை ஒதுக்கச் சம்மதியார். நானறிவேன். நான் மாளிகை என்றுதான் குறிப்பிட்டேனேயல்லாது, உங்கள் அந்தப் புரமிருக்கும் மாளிகை என்று சொல்லவில்லையே? இப்போதே, நீங்கள் எனது தொடர்பால், என்ன பாடுபடுகிறீர்களோ என்பது எனக்குப் புரியாத ஒன்று.''

''ஒருபாடும் படவில்லை. எனது தாயார், நிறைந்த மனத்துடன் உன்னை அங்கீகரித்துவிட்டார்கள். மனைவிகள், பதுமைகள். அன்னையாரும் உன்னை ஒரு முறை பார்க்க வேண்டும் என்றுகூட பேச்சுவாக்கில் சொல்லியிருக்கிறார்கள். சந்தர்ப்பம் வரும்.''

பூஜ்யாதேவி, பெரிதாகப் பூரித்துப் போகிறாள்.

அப்போது வெளியே குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்கிறது.

யாரோ தேடி வருகிறார்கள்.

வந்தவன், அருமைத்தோழனும் யுத்த ஆலோசகனுமான பாலாஜிதான்.

பாலாஜி, வெளியில் நின்றுகொண்டே வணக்கம் தெரிவித்துக் குரல் கொடுக்கிறான்...

'உள்ளே வா பாலாஜி' என்று கூறத்தான் நா எழுந்தது.

உள்ளே நுழைய யாருக்குமே அனுமதியில்லை என்பது ஞாபகத்துக்கு வரவே, நாக்கைக் கடித்துக் கொண்டு எழுந்து செல்கிறது அந்த மராட்டியச் சிங்கம்.

''என்ன பாலாஜி!''

''தலைவ, ஷாஜஹான் படை திரட்டிக்கொண்டு தென்னாடு நோக்கி வருவதாகச் சற்றுமுன்தான் ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனிந்தப் படையெடுப்பு என்கிற செய்தி யாருக்குமே புலனாகவில்லை.''

ஒருகணம் வியந்தும் அதிர்ந்தும் காணப்படுகிறார் மராட்டிய அலெக்ஸாந்தர் என்று வரலாறு புகழும் மாவீர சிவாஜி.

''நல்லது; நீ போகலாம். ம்ம்! அனைவரும் உண்டு முடித்தாய் விட்டதல்லவா?''

''இல்லை, பிரபோ!''

''நல்லது; நான் வர நேரமாகும். இங்கேயே உண்டு முடித்தாலும் முடிப்பேன். எனக்காக யாரும் காத்திருக்க வேண்டாம் என்று அம்மாவிடம் சொல்.''

''உத்தரவு பிரபோ!''

பாலாஜி தயங்குகிறான்.

''என்ன பாலாஜி?''

''எனது இரண்டாவது அன்னையிடம் உத்தரவு பெற வேண்டும்.''

பாலாஜிக்கு இருக்கும் பக்தி விசுவாசம் புரிபடுகிறது. ஆனால், பூஜ்யாதேவிக்கு என்றோ புரிபட்ட விஷயம். சொல்லப்போனால், சில அரசியல் விஷயங்கள் பூஜ்யாதேவிக்கும் அவனுக்கும் மட்டுமே இரகசியமாய் இருந்தன. எதிலும் துடிப்பும், கோபமும் கொண்ட சிவாஜிக்குத் தெரியாமல் ஆற்றுகிற பணிகள் அவை.

உள்ளிருந்துகொண்டே, ''போய் வாரும் மைத்துனரே!'' என்றாள் பூஜ்யாதேவி.

பாலாஜியும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அருமை நண்பனும் ஒரு பகுதியின் படைச் சேனாதிபதியும், அந்தரங்கச் செயலாளனுமான பாலாஜி தெரிவித்த ஷாஜஹான் செய்தி, சிவாஜிக்குப் பெரிதான குழப்பத்தைத் தரத்தக்கதாக இருந்தது.

இது குறித்து, முன்கூட்டியே இந்தப் பூஜ்யாதேவி சொல்லியிருந்ததுதான், சர்வல்லமை பொருந்திய சிவாஜிக்கே வியப்பு கலந்த அதிர்ச்சியைத் தந்திருந்தது. அவர், அவளை உற்றுக் கவனிக்கிறார்.

''ஏனிப்படிப் பார்க்க வேண்டும்? எனக்கு எப்படி முன்கூட்டியே கோடிட்டது மாதிரி தெரிகிறது என்பதுதானே? பிரபோ! நான், சேலை கட்டிய சிவாஜி! உங்களுக்குரிய அத்தனை சேனாபலத்தையும் நான் நிர்வகிக்கிறேன் என்பது நீங்களறிந்தது; மறுக்க முடியாதது. ஆனால், ஒற்றர் பலத்தில்தான் இருவரும் சரிபாதியாக ரகசிய அரசியல் நடத்துகிறோம். நீங்கள் எவ்வாறு சிலவற்றை என்னிடம் கூறத் தயங்குகிறீர்களோ, அவ்வாறே நானும் தயங்க வேண்டியதானாலும் சில சமயங்களில் கோடிட்டுக் காட்ட நேருகிறது. காரணம், நான் உங்களைப் பாதியாகக் காதலிக்கவில்லை; முழுமையாகக் காதலிக்கிறேன்; தெய்வீகமாக அன்பு செலுத்துகிறேன்.''

''மன்னித்துவிடு பூஜ்யா! உனது தாயகப்பற்றையும் மொழிப் பற்றையும் கண்டு வியக்கிறேன். வருங்காலத்தில் மகாராஷ்டிரருக்கும்

இந்தத் தேசப்பற்றும் பாஷைப்பற்றும் இருக்கப் பாடுபடுவேன். போகட்டும் பூஜ்யா! சாப்பிடச் செல்லுமுன்... இப்போது ஷாஜஹான் மகாராஜன் எதற்காகப் படை முரசு கொட்டி வரவேண்டும்?''

''ஷாஜஹான் வரவில்லை. அவருடைய சர்வ வல்லமை பொருந்திய குமாரர் ஔரங்கசீப் படையெடுத்து வருகிறார். ஏவியவர், ஷாஜஹான்தான். ஆனால், வருவது புயல் என்பதற்காகச் சொல்ல வந்தேன்.''

''இது...''

''எனது கண்காணிப்பிலிருக்கிற ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்து ஒரு வாரமாகிறது. உங்கள் ஒற்றர்கள் சோம்பேறிகள். இன்றைக்கு கொண்டுவந்திருக்கிறார்கள்!

வியப்பும் வேதனையுமாகக் கவனிக்கிறார் சிவாஜி.

''உங்கள் ஒற்றனை, சோம்பேறி என்று சொன்னதற்காக வேதனைப்பட வேண்டாம். இதனாலாவது, உங்கள் கோபம் அவர்களைச் சுறுசுறுப்பாக்கட்டும். இது ஒருவகையான சாணக்கிய தந்திரம்! பயிர் முளைத்து வருகிறபோது, யாராவது கள்ளிப் பாலிடுவார்களா?''

''பைத்தியக்காரன்தான் செய்வான்!''

''அதனால்தான், உங்கள் ஒற்றர்கள், பைத்தியக்காரர்களாக இருக்கிறார்கள். எங்கள் சாணக்கியன் சொல்லுகிறான்...''

''அது என்ன, எங்கள் சாணக்கியன்...''

''அவன், சேர நாடான தமிழ்நாட்டில் பிறந்தவன்.''

''அறிவுடைய விஷயமானால், உடனே தமிழ்நாடு!''

''தமிழ்நாடே அறிவுடையதுதானே! என்னை ஒரு நிமிஷம் சிந்தித்துப் பாருங்கள்.''

சிவாஜி, மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு சிரிக்கிறார்.

''சரி! சாணக்கியர் என்ன சொல்கிறார்?''

''[1]முளைக்கும் பயிருக்குக் கள்ளிப்பாலையும், சின்னச் சின்ன பச்சை மீன்களையும் எருவிட்டால், பூச்சி அண்டிப் பயிரைக் கெடுக்காது. உங்கள் ஒற்றர்களுக்குக் கள்ளிப்பால் போதாது. சதுரக்கள்ளிப்பால் தேவை!''

''ஒரேயடியாகச் சாவதற்கா?''

''இப்படியான காலதாமத ஒற்றர்கள் இருந்தென்ன? இறந்தென்ன? சரி, எழுந்திருங்கள். சாப்பிடச் செல்வோம்.''

''ஷாஜஹான் அனுப்பி வைக்கும் படையின் நியாயம்...''

''அதைச் சமாளிப்பது எப்படி என்பதுதானே? சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்.''

''சாப்பாடே இறங்காதே!''

''நான் ஊட்டுவேன்; அத்துடன் ராஜதந்திரத்தையும் சேர்த்து ஊட்டுவேன்.''

தாடியை நீவிக் கொண்டிருந்த சிவாஜி கலகலவென்று நகைக்கிறார்...

ஓ... அன்னை ஊட்டி அதிக நாளாயிற்று! இன்று அருமைக் காதலி ஊட்டப் போகிறாள்...

மேலும் அந்தக் கீற்றுக்குடிலே அதிருகிற மாதிரி சிரிக்கிறார்...

அப்போது...

வெளியில் 'டுமீல் டுமீல்' என்று துப்பாக்கி வெடிக்கிற சத்தம்...

இருவருமே அதிர்ந்து, வெளியில் வந்து கவனிக்கின்றனர்.

-----

1. 'கௌடலீயம்' - அதிகரணம் - 2, அத்தியாயம் - 45.

# 4

[1]ஈரிடத்தும் கூலி பெறும் ஒற்றருடைய மனைவி மக்களை, அரசன் தன் வயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அன்னார் தூய்மையையும், அங்ஙனமே பகைவர்களால் அனுப்பப்பட்ட ஒற்றர்களையும், அத்தகைய பிற ஒற்றர்களையும் அறியவேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 12).

இரண்டு குண்டுகளுக்கு இரையாகிய ஓர் இளமங்கை, ரத்தக் குளியலில் மிதந்து வீழ்ந்து கிடக்கிறாள்...

பூஜ்யாதேவியின் கீற்றுக்குடிலுக்குப் பின்புறமாகச் சற்றே தள்ளி, சரக்கொன்றை மரத்தடியில் அவள் சுடப்பட்டிருக்கிறாள்.

பார்க்க மிக்கவும் லட்சணமாக இருக்கிறாள்.

முகத்தையும் ஆடையணிகளையும் பார்த்தால், இந்துப் பெண்ணைப் போன்றே இருந்தாள். நெற்றியில் குங்குமம் இல்லை.

சுடுபட்டவளை நெருங்கிவந்து நின்ற சிவாஜியும், பூஜ்யா தேவியும் உற்றுக் கவனித்துப் பின்னர் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

முகங்களில் பெரிதான கேள்விக்குறிகள்.

---

1. ஈரிடத்தும் கூலிபெறும் ஒற்றர்கள்.

''ஒற்றொற்றியவரை ஒற்றின் ஆய்ந்து'' - 'பெருங்கதை'

''ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்'' - 'சீவகசிந்தாமணி'

யார் இந்தப் பெண்?

அந்தக் கீற்றுக்குடிலுக்கென நிறுத்தப்பட்ட காவலாளிகள், தொலைவில் நிற்கின்றனர். அத்தனை பெயரும் மகாராஷ்டிரர்களே!...

ஏறத்தாழ, நூறு வீரர்கள்...

சிலரிடம் துப்பாக்கி இருந்தது. சிலரிடம் வேறு படைக்கல ஆயுதங்கள் இருந்தன.

தமது வீரவிழிகளை நிமிர்த்திய சிவாஜி, பணியாளர்களைக் கவனிக்கிறார்...

அந்தத் தோரணையே வேறு...

தமது அன்னையிடம் பழகுகிறபோது இருக்கிற சிவாஜி...

மனைவி மக்களிடம் குதூகலிக்கிறபோது காட்சி தருகிற சிவாஜி...

பூஜ்யாதேவியிடம் உறவு கொள்கிறபோது தோன்றுகிற சிவாஜி...

அதிகாரிகளிடம் பழகுகிறபோது காணப்படுகிற சிவாஜி...

பணியாளர்களிடம் உத்தரவு பணிக்கிறபோது இருக்கிற சிவாஜி...

இந்த மாறுபாடுகள்; இந்த மிடுக்குகள்; குழைவுகள்; காம்பீரியங்கள்...

ஆ! அது மாவீரத்திலகம் சிவாஜிக்கே உரித்தான இயல்பான தோற்றங்கள். அவரது இயல்பு, அவருடைய மனம் ஆளுகிற ஆட்சி...

அதே நேரத்தில் யுத்த களத்தில் பாய்ந்து சுழலும் சிவாஜி...

ஓ... அவர் ஒரு ரத்த ஞாயிறு!

இவையனைத்தையுமே பூஜ்யாதேவி அறிவாள்; சிலவற்றை நேரில் கண்டும் இருக்கிறாள்.

வீர விழிகளில் செம்மை படருகிறது...

‘‘எதற்காக இவளைச் சுட்டீர்கள்? இவளை - கேவலம்... ஒரு பெண்...’’ என்றுதான் ஆரம்பித்தார். பக்கத்தில் நின்ற பூஜ்யாதேவியின் தோற்றம்...

‘கேவலம்’ என்று முடித்த வார்த்தையைத் தொடர்ந்து அவர் பேசுகிறார்...

‘‘வேவு பார்க்க வந்தவள் மாதிரி தெரிகிற இவளை, உயிருடன் பிடித்து ஒப்படைக்க உங்களால் முடியவில்லை? உங்களில் இவளைச் சுட்டவர் யார்?’’

எல்லோரும் விழிக்கிறார்கள்...

நிஜமாகவும் அந்தப் பணியாளர்களில் ஒருவன்கூட இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. பின் எங்கிருந்து இந்தத் துப்பாக்கி மாயமாய் வெடித்து இருக்கிறது?

கேள்விக்குறியில் மயங்கி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

நல்ல வெயில் சுள்ளென்று காய்கிறது.

‘‘நான் கேட்பது உங்கள காதுகளில் விழவில்லை?’’

சிம்ம கர்ஜனை அந்தப் பிராந்தியத்தில் எதிரொலிக்கிறது...

காடுகளிலிருந்த சிங்கங்கள் ஒளிந்து கொள்கின்றன.

இந்தச் சிங்க சிவாஜி தோற்றத்தையும் கவனிக்கிறாள் பூஜ்யாதேவி.

கோபம், வெயில் போல ஏறிக்கொண்டிருக்கிறது. அதன் கொதிப்பைத் தரிசிப்பவள் மாதிரி, அமைதியாக, நிலவு போல நோக்குகிறாள் பூஜ்யாதேவி.

பணியாளர்களில், தலைவனாக நியமிக்கப்பட்ட நரசிம்மராவ் என்பவர் இப்போது பதில் சொல்லக் கடமைப்பட்டவராகிறார்.

‘‘தலைவ, எங்களில் யாரும் இந்தக் காரியம் செய்யவில்லை. இந்தப் பெண், எப்படி உள்ளே நுழைந்தாள் என்பது நாங்கள் அறியாதது. சற்றுமுன், சேனாதிபதி பாலாஜி அவர்கள் வந்து

நுழைந்தபோது, ஒரு போர்வீரன் அவரைப் பின்தொடர்ந்து வந்து, அவருடன் வந்ததாகச் சொன்னான். ஆயினும், அவன், தொலைவில் எங்கள் பார்வையிலேயே நின்றுகொண்டான். திடீரென்று, ஏதோ மறந்து என்னிடம் சேனாதிபதியவர்கள் விட்டுச் சென்றுவிட்டார்கள் என்று, ஓலை நறுக்கைக் காட்டினான். அவனது கையில், நமது சிவலாஞ்சனை இருந்தது. அது, அவனை ஒரு முக்கிய கண்காணிப்பாளன் என்று மெய்ப்பிக்கவே, நாங்கள் அனுமதித்தோம். பிறகு சேனாதிபதி பாலாஜி அவர்கள், தனித்தே சென்றார். தொடர்ந்து வந்த போர்வீரன் திரும்பவில்லை. ஏதோ முக்கியக் காரணமாகத் தாங்கள்தான் நிறுத்திக்கொண்டீர்களோ என்று நாங்கள் நினைத்துக் கொண்டோம். ஆனால், இந்தப் பெண் எங்கள் பார்வைக்கு மீறி எப்படி வந்தாள் என்பது தெரியவில்லை.''

நரசிம்ம ராவுக்கு மூச்சு வாங்கியது. தமக்கு எந்தத் தண்டனையும் ஏற்படக்கூடாது என்று தெய்வத்தை வழிபட்டுக் கொள்கிறார்.

சில கணங்கள் வரை, சிவாஜி அந்தச் சுடுபட்டு மாண்டு கிடக்கும் பெண்ணை உற்றுக் கவனிக்கிறார். அவருக்கு முன்னுக்குப் பின் முரணாகப் புரிகிறது.

நுழைந்தவன், ஆண்! இங்கே மாண்டு கிடப்பவள் பெண்...

மெல்லத் தமது அருமைக் காதலி, சேலை கட்டிய சாணக்கியா தேவியைக் கவனிக்கிறார்...

பூஜ்யா அப்போதுதான் மென்மையான முறுவலிக்கிறாள். அவளது நா அசைகிறது...

''நரசிம்ம ராவ்! இப்படி வாருங்கள்!''

பயந்து நடுநடுங்கி அருகே வந்து பணிந்து நிற்கிறார்.

''ஆட்களை ஏவி, தொலைதூரப் புதர்களில் எங்காகிலும் துணி மூட்டை இருக்கிறதா என்று பார்த்து வரச் சொல்லுங்கள். குதிரைகளில் ஆட்களை ஏவுங்கள். விரைந்து வந்து செய்தியறிவிக்க வேண்டும்.''

உத்தரவு, மின்னலாய் வெட்டுகிறது. வெட்டி முடிப்பதற்குள் பல குளம்படிச் சத்தங்கள்...

பூஜ்யாதேவி, அந்த இறந்து கிடந்த பெண்ணின் விரல்களை ஆராய்கிறாள். சிவலாஞ்சனை இல்லை.

சற்றே குனிந்து, இடுப்பில் கைவைத்துத் துழாவுகிறபோது, உட் பாவாடை நாடாவின் இடுப்பில் செருகி வைத்திருப்பதை எடுக்கிறாள்...

அந்தச் சிவலாஞ்சனை அவளிடம் எவ்வாறு சென்றது?...

''நல்லது; இந்த உடலை அகற்றுங்கள். கொண்டுபோய் புதைத்து விடுங்கள். புதைத்த இடத்தையாவது நினைவில் வைத்துக் கொள்வீர்களல்லவா?''

பூஜ்யாதேவியின் குரலில் சிவாஜி தென்பட்டார்.

சிவாஜிக்கு, இது வியப்பைத் தருகிறது.

தனது காதலரைக் கவனிக்கிறாள்...

''நீங்கள் உள்ளே வரலாம். ஆட்கள் செய்தி கொண்டு வரட்டும்.''

பூஜ்யாதேவி குடிலில் நுழைய அவளைப் பின்பற்றி சிவாஜியும் நுழைகிறார்.

''பூஜ்யா! நீ என்ன நினைக்கிறாய்?''

''ஷாஜஹான் மகன் ஔரங்கசீப் புறப்பாட்டுக்கு முன் ஏற்பட்ட அரவான் பலி இது!''

''அரவான் பலி! அப்படி என்றால்?...''

அவர் முடிக்கவில்லை.

அவள் முடிக்கிறாள்.

''வெற்றி, நமக்குத்தான். இதில் ஐயமென்ன? சர்வ வல்லமை பொருந்திய எனது மாவீரக் காதலரை வெல்ல, இந்த யுகத்தில் எவரும் பிறக்கவில்லை. அந்த வெற்றியின் ராஜதந்திர பாஞ்சசன்யமாய் நானிருக்கிறேன்! அது சரி, இந்தச் சிவலாஞ்சனை, எப்படி இந்தப் பெண்ணிடம் சென்றது என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?''

சிவாஜி, ‘இல்லை’ என்பது போலத் தலையசைத்து, தமது குறுந்தாடியைத் தடவிவிட்டுக் கொள்ளுகிறார்....

‘‘உங்கள் அதிகாரிகளுள், எவனோ ஒருவன் - ஒருவன் என்று சொல்வதற்கில்லை; சிலரும் இருக்கலாம்; அவர்களில் - ஒருவனிடமிருந்து இந்த லாஞ்சனை பகைவர்பால் சென்றிருக்கிறது. [1]லாஞ்சனை (இலச்சினை) யில்லாத தன்னாட்டினன், 2000 ஆண்டுகட்கு முன்னிருந்தபடி பன்னிரண்டு பணம் தண்டம் இறுத்தல் வேண்டும். பொய்யான லாஞ்சனையுடையவன், பூர்வ சாகச தண்டனையையும், அயல்நாட்டினனாயின், உத்தம சாகச தண்டனையையும் வழங்க வேண்டும் என்று சாணக்கிய பெருமானார் எழுதி வைத்திருக்கிறார். இவன் அயலவன் என்றே நினைக்கிறேன்! இதனைப் பின்னால் கவனித்துக் கொள்வோம். இப்போது நமது பணியாளர்கள், ஆணுடைகளைக் கொண்டு வருவர் என்று எதிர்பார்க்கிறேன். அவ்வாறாயின், மைத்துனர் பாலாஜியைப் பின் தொடர்ந்து, புரவியில் வந்தவள் இவளாகத்தானிருக்க முடியும்.’’

சிவாஜி வியந்து நோக்குகிறார். ‘ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டியாள வீரம் மட்டும் போதாது; விவேகமும் தேவை’ என்று அடிக்கடி அன்னையார் ஜீஜாபாய் சொல்லுவார்கள். அந்த விவேகம் என்பதுதான் ராஜதந்திரம் போலும்!

‘‘பூஜ்யா! துப்பாக்கியால் சுட்டது, யார் என்பதுதானே புரியவில்லை!’’ என்றார் சிவாஜி.

‘‘நான்!’’

‘‘நீயா?’’ - மேலும் வியக்கிறார் சிவாஜி.

‘‘நீ என்னுடனிருந்தாயே! எப்படிச் சுட்டிருக்க முடியும்? எனது ஞானகுரு ராமதாஸ் சுவாமிகளைப்போல உனக்கு ஏதேனும் சித்து விளையாடத் தெரியுமா?’’

‘‘சித்து என்பதே ஒரு பேத்தல்! ஜனங்களை ஏமாற்றும் மோடி வித்தை! அதைப்பற்றி இப்போதைக்கு எதற்கு? நான் என்றால் நானல்ல. என்பால் சார்ந்த ஒற்றர்கள். ஒரு சாம்ராஜ்யத்தை நிலை

1. ‘கௌடலீயம்’ - அதிகரணம் - 2, அத்தியாயம் - 55.

நிறுத்தப் பாடுபடுகிறவர்கள் ஒற்றர்கள். அவர்களுக்கு முழு அதிகாரம் எங்கிருக்கிறதோ, அங்கே அயல்நாட்டு மோசடிகள் நடப்பதில்லை. எனது ஒற்றர்களுக்கு, நான் முழு அதிகாரம் அளித்திருக்கிறேன். எனவேதான், சந்தேகப்பட்டதும் சுட்டு இருக்கிறார்கள்.''

''உனக்கென்று தனியாக ஒற்றர்களை வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்கிறாயா?''

''ஐயய்யோ! அதற்கு நான் எங்கு போவேன்? உங்களிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு, எனக்கு வேலை செய்தாலும், அவர்கள் தாம் உங்களுக்குப் பரிபூரண சேவை செய்கிறவர்களாகிறார்கள். இப்படிப் பலர், உங்கள் நலனுக்காக எனது ஆணைக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்று கேட்காதீர்கள். கேட்டாலும் சொல்லமாட்டேன். ஆனால் ஒன்று, சத்தியமாக, இந்தப் பூஜ்யா உங்களுக்குக் கனவிலும் துரோகம் செய்யமாட்டாள். அவளது கனவு, இந்துமதம்; இந்து ராஜ்யம்; ஏன்? இந்து சாம்ராஜ்யத்துக்கே ஒரே மொழி என்றாலும் சம்மதிப்பேன்!''

''எந்த மொழி?''

''எது பழமையுடையதோ, எது எளிமையுடையதோ, எது இலக்கிய - இலக்கண வளமும், நயமும் கொண்டதோ- அதுவே நல்ல மொழி. பலரால் பேசப்படுகிறது என்பதற்காக ஒரு மொழியை ஆதரித்துவிடக்கூடாது; பலரால் விரும்பப்படுவது கருவாடு என்பதற்காக, அதனை அரசாங்க போஜனமாக்கி விடமுடியுமா?''

கலகலவென்று அந்தச் சிந்தனையிலும் சிரிக்கிறார் சிவாஜி. அவ்வாறு சிரிக்கிறபோது அவரது முகம் மிக்கவும் களையாக இருந்தது.

இதற்குள் ஆட்கள் வெளியே வந்துவிட்டார்கள் என்பது தெரிய வந்தது.

அவர்கள் கையில் ஒரு துணி மூட்டை. அதில் ஆணுடைகள்.

பூஜ்யாதேவி சொன்னது சரியாக இருந்தது.

வந்தவர்களுக்கு விடையளித்தாள் பூஜ்யாதேவி.

''பூஜ்யா! படையுடன் வருகிறவர் முகலாய இளவரசர். நாம் எவ்வகையில் காட்சி தரப் போகிறோம்?''

''வாருங்கள் உண்டு முடித்து விட்டுப் பேசுவோம்.''

இருவரும் குடிலின் பின்புறமாக இருந்த சமையல் கொட்டகைக்குச் சென்றனர்.

''பூஜ்யா! இப்படிக் கீற்றுக் கொட்டைகையில் ஏன் சிரமப்பட வேண்டும்?''

''நீங்கள் செல்லுகிற இடங்களிலெல்லாம் மாளிகை தேட முடியுமா? இதுதான் நல்லது; சிறப்பானது; எளிமையானது.''

சமையல், அவளே செய்து கொள்வது. வேறு யாரும் அவளுக்குச் சமைக்கக்கூடாது. உதவுவதற்கு மட்டும் பணியாட்கள்.

தமிழ்நாட்டு முறைப்படியான அந்தச் சமையலில் சிவாஜிக்கு அலாதி பிரியம்...

வாழையிலையிடுகிறாள்...

சோறு, குழம்பு, பதார்த்தங்கள்...

'மியாவ்...'

வளர்ப்புப் பூனை பரிதாபமாக எதிரே வந்து நிற்கிறது...

பூஜ்யாதேவி ஒருகணம் அதனைப் பார்க்கிறாள்...

சோற்றில் ஒருபிடி, குழம்பு, எல்லாப் பதார்த்தங்கள், ரசம், ஏன்? மோர்கூட ஊற்றி மொத்தமாகப் பிசைகிறாள்...

சிவாஜிக்கே அது வேடிக்கையாக இருக்கிறது...

பிசைந்த ஒட்டுமொத்தத்தைப் பூனைக்கு வைக்கிறாள் பூஜ்யா...

பூனை, குதறிக் குதறி அதனைச் சாப்பிடுகிறது...

சற்றைக்கெல்லாம்...

'மியாவ்...'

அது சுருண்டு துடிதுடித்துக் குரலெழுப்பிச் செத்த காட்சி...

அருண்டு மருண்டு போனார் புலிநகப் போர்வீரர் சிவாஜி.

ஆ! ஏதோ தம்மையறியாது தமக்கும் அப்பாற்பட்டு ஒரு ரகசியமான சதித்திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் அவருக்குப் பூரணமாகப் புரிகிறது...

ஓ... பூஜ்யா...

நீ மட்டும் இறந்துபட்டிருந்தால்....

நினைக்கவே நெஞ்சு பிளக்கிறது...

அவர் மௌனமாக அரண்மனை நோக்கிப் பயணமாகிறார்...

அரண்மனையில் அவருக்காகக் காத்திருந்தவர்கள்...

ஒருவரையாவது சட்டை செய்ய வேண்டுமே...

மாலை மலர்ந்து இரவு மணக்கிறது...

இரவு யாரிடம் கண்ணாமூச்சு விளையாட இப்படி தினமும் வந்து வந்து செல்கிறது...

இரவின் ரகசியங்களை, எப்படி வேண்டுமானாலும் விமரிசிக்கலாம்...

அதன் கண்ணாமூச்சு விளையாட்டுக்கு எப்படி வேண்டு மானாலும் ஓடியாடி பொய்யையும் மெய்யையும் கற்பிக்கலாம்...

தனியறை மஞ்சத்தில் படுத்துக்கொண்டு விட்டத்தை இமையாது நோக்கி யாரைத் தேடுகிறார்? எதனை ஆராய்கிறார்?...

ஓ... பூஜ்யா...

நீ எனது வாழ்வில் குறுக்கிட்ட விதம்...

நீ எனது வாழ்வில் அகப்பட்ட வரலாறு...

நீ எனது வாழ்வில் பற்றிக்கொண்ட நயம்...

ஓ... அது ஒரு காவியக்கதை...

அந்தக் கதை...

-----

# 5

அரச தருமம் நால்வகைப்பட்ட வருணாசிரமங்களையுடைய உலகியல் ஆசாரத்தை ஓம்பு மாற்றால், அழியும் நிலையிலுள்ள எல்லா தருமங்களையும் செழித் தோங்கச் செய்கிறது.

**- சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 3, அத்தியாயம் - 58).

**கா**மத்துக்கென்று படைக்கப்பட்டது இரவு என்றால், காதலர்களுக்கென்றே படைக்கப்பட்டது மாலை என்பது போல...

தென்றல், திசைகளின் தெய்வமான தெற்கிலிருந்து வீசுகிற அழகே அழகு!

பூஜ்யாவை மெய்சிலிர்க்க வைக்கிறது.

அவள் தென்திசைக்குச் சொந்தக்காரி; குறிப்பாகத் தமிழகத்துச் சொர்ணப் பதுமை; அதிலும் காவிரிக்கரையில் பிறந்த பிராமணப் பெண்.

காவிய எண்ணங்களுக்கும் கவின்மிகு தோற்றத்துக்கும் சொல்லவா வேண்டும்?

அவள் குடத்தில் நீர் மொண்டுகொண்டு நடக்கிற அந்த அழகு, கதி, விசாகதத்தரின் முத்திரா ராட்சஸம் கவிதை நடை மாதிரி.

தொலைவில் ஒரு பெரிய மரத்தடியில் அதன் கனத்தடர்ந்த வேர்கள் செய்த புண்ணியமே போன்று அமர்ந்து கவனிக்கிறார் மகாராஷ்டிர மாவீர திலகம் சிவாஜி. அவரது மீசைக்கும்

குறுந்தாடிக்கும் கூட ஒரு கதகதப்பு; எண்ணத்தில் ஏற்பட்ட சிலுசிலுப்புக்கும் இதம் கொடுக்கிற மாதிரி...

யார் இவள்?

சுற்றியலைந்தாலும் எளிதில் கிடைக்க முடியாத சுந்தர அழகு; சுகானந்த மேனி; சொர்க்க போதை தரவல்ல சுஸ்வரமான சங்கீதம்.

பின்னழகு திஸ்ரம் போல ஜதிபோட, பின்னல் நர்த்தனமிட - ஓ!...

தடார்...

குடம் கீழே விழ, அவளும் கால் தடுக்கிக் கீழே விழுகிற போது...

அரண்டு போன சிவாஜி எழுந்து கொள்கிறார்; ஏதோ தாமே விழுந்த மாதிரி...

கண்ணேறுபட்டுவிட்டதா?

'ஓடிச்சென்று தூக்கிவிடேன்!' மனம் பதட்டப்பட்டுச் செயல்படுவதற்கு முன் -

அவள் -

அந்தப் பேரழகி -

பூஜ்யா-

சுதாரித்து எழுந்து கொண்டு, எதையோ எரித்து விடுபவள் மாதிரி கூர்ந்து கவனிக்கிறாளே...

என்ன அது?

கொஞ்சம் முன்னோக்கி நடந்து வந்து கவனிக்கிறாள்.

தன்னைத் தடுக்கிவிட்ட அந்தச் சின்னஞ்சிறு கல்லை எடுத்து, ஒரு பாறையின் மீது வைத்துப் பென்னம் பெரிய கருங்கல்லால், வெறி தணிய வேகம் கொண்டவளே போல ஓங்கி ஓங்கி நொறுக்குகிறாள். அந்தச் சின்னக் கல் பொடிந்து தூளாகிற வரைக்கும் நறுக்குகிறாள்.

என்ன பைத்தியக்காரத்தனம் இது?

ஒரு பெண்ணுக்குரிய நாகரிகமான ஆவேச வெறி மாதிரி இது தெரியவில்லையே?

கல்லைத் தூளாக்கிய அந்தக் கவின்மிகு கவிதையழகி, குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு மீண்டும் அந்த ஓடை நோக்கி நடக்கிறாள்.

பூனா நகரத்து வடதிசையில் அமைந்த அந்த இயற்கை நடனமிடும் அருவியில் நீரை மொண்டு கொண்டு திரும்புகிறபோது...

குதிரையில் வேகமாக வந்த சிவாஜி, தாம் எதற்காக அங்கு வந்தோம், யாருக்காகக் காத்திருக்கிறோம் என்பதைக்கூட மறந்து அவளது பாதையில் குறுக்கிட்டு நின்று கவனிக்கிறார்.

யாரிவன்?

அண்ணாந்து பார்க்கிறாள்.

கண்கள் மட்டும் தெரிகின்றன. தீட்சண்யமாகத் தெரிகின்றன. முகம் முழுவதுமாகக் கறுப்புத் துணியால் மூடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் சிவாஜி இருக்கிறான் என்கிற செய்தி காற்றைத் தவிர வேறு யாருக்கும் தெரியக் கூடாதே! இவ்வளவு மறைமுகமான ஒரு ராஜ ரகசியம்! சிவாஜியின் மீசையும் தாடியும், தலைப்பாகையும் பகிரங்கமான சின்னங்கள். அவை காட்டிக் கொடுத்துவிடக் கூடாதல்லவா?

குதிரையை விட்டிறங்கிய சிவாஜி, பூஜ்யாவை மிக்கவும் கூர்ந்து பரிசீலிக்கிறார்.

''யார் நீ?'' என்று அவர் கேட்கு முன்னம், அவள் முந்திக் கொண்டாள்.

''யார் நீ?''

''நான் இந்தப் பக்கத்துக் கொள்ளைக் கூட்டத்துத் தலைவன். நல்லவர்களுக்கு நல்லவன் பயப்பட வேண்டாம். உன்னை ஒண்ணும் செய்துவிட மாட்டேன்.''

தெளிவான மகராஷ்டிர மொழியில் அவர் சொல்கிறபோது, ‘‘என்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது. காரணம் நான் சிவாஜி என்கிற மாவீரரின் ஆட்சிக்கு உட்பட்டவள், என்னைத் தீண்டினால் அடுத்து உன் கை உன்னிடம் இருக்காது’’ என்று அவள் கூறிய பதில், சிவாஜியைப் பல கணங்கள் திணறடித்துவிடுகின்றன.

ஆ! இவள் சிவாஜி மீது எத்துணை நம்பிக்கையுடையவளாக இருக்கிறாள்!

‘‘அப்படியா பெண்ணே! உனது ராஜ விசுவாசத்தை நான் மதிக்கிறேன். சிவாஜியும் ஒரு கொள்ளைக்காரன்தானே?’’

‘‘நீயும் ஒரு கொள்ளைக்காரன். ஆனால் நல்லவர்களுக்கு நல்லவன் என்று சொன்னதால் மதித்து நின்று பேசுகிறேன். எங்கள் சிவாஜியும் அப்படியே! கொள்ளையடிப்பது நாட்டின் முன்னேற்றத் துக்காக; சுயராஜ்ய உணர்வுக்காக! இப்போதும் அவர் அதை அதிகமாகவே செய்துவருகிறார். அதில் ஓர் அளவு வேண்டும். அவரிடம் மடையர்கள் அதிகமாக வேலை பார்க்கிறார்கள். அதனால் அவரும் சில சமயங்களில் மடத்தனமாக நடந்து கொள்கிறார். எடுத்துச் சொல்ல ராஜதந்திரிகள் அவரிடமில்லை.’’

அளவுக்கு மிஞ்சிய அதிர்ச்சியடைந்து போனார் சிவாஜி. என்ன துணிச்சல் இந்தப் பெண்ணுக்கு!

‘‘ஆமாம்; நீ அவரை அதிகமாக நேசிக்கிற மாதிரி தெரிகிறது.’’

‘‘நேசிக்கத்தானே செய்தேன், காதலிக்கவில்லையே!’’

‘‘காதலிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் காதலிப்பாய்போல் தெரிகிறது!’’

‘‘அப்படி ஒரு சந்தர்ப்பம் சத்தியமாகக் கிடைக்காது. வீண் பேச்சு. வழிவிடுங்கள். நான் போய் சமைக்க வேண்டும்.’’

‘‘உன்னை நான் காதலிக்கலாம் போலிருக்கிறது.’’

‘‘உன் மூஞ்சிக்கா?’’

''என் மூஞ்சியை நீ இன்னும் சரியாகப் பார்க்கவே இல்லையே!''

''சிவாஜி முகத்தையே நான் பார்த்ததில்லை. உன் மூஞ்சியைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.''

''அபகரித்தால் என்ன செய்வாய்?''

''நீ நல்லவன் என்றாய்?''

''நீ நல்லவளாக இருக்கிறாயே!''

''நல்லவளாக இருப்பதா தவறு!''

''இல்லையா?''

''அப்போது நீ நல்லவனல்ல. என்னைத் தொட்டால் என்னிடமுள்ள புலிநகம் உன்னைப் பதம் பார்த்துவிடும்.''

''புலிநகமா அப்படியென்றால்?''

''அதன் விளக்கம் உனக்குத் தேவையில்லை. வழியை விடு.''

''பெண்ணே; உன்னைக் கண்டால் பயமாகவே இருக்கிறது. நீ மகாராஷ்டிரப் பெண்ணா?''

''தமிழ்ப்பெண்! வீரம் முதல் முதலாக விளைந்த தமிழ் மண்ணில் பிறந்தவள்.''

''மகாராஷ்டிரம் பேசுகிறாய்.''

''எனக்கு எல்லா பாஷையும் தெரியும்.''

''ஓ...! அதுசரி ஒரு விஷயம் விளங்கவில்லை. அதை நீ எனக்கு விளக்க முடியுமா.''

''என்ன?''

''வரும்போது உன்னை ஒரு கல் தடுக்கியது. அதனை ஏன் ஆவேசமாகப் பொடிப் பொடியாக்கினாய்?''

‘‘ஒரு வலிமை மிக்க வஸ்துவை சிறு துரும்பு அடக்கிவிட்டோம் என்று அகந்தை கொள்ள இடம் கொடுக்கக் கூடாது. ஒரு சாதாரண கல் இந்த ரூபாதேவியை - சீ, சீ! இந்தப் பூஜ்யாவைத் தடுக்கி விழச் செய்வதா?’’

ஓ... இவள் பெயர் பூஜ்யாவா? ரூபாதேவியா?

‘‘இது சாணக்கியன் கதை மாதிரி இருக்கிறதே! ஒரு புல் தடுக்கியது என்று சாணக்கியன் அதை வேரோடு பிடுங்கிக் கசக்கி எறிந்தானாம்!’’

‘‘நீ ஒரு சாதாரணக் கொள்ளைக் கூட்டத்துத் தலைவன். சாணக்கியரை அவன் இவன் என்று பேசி நாக்கை அழுகச் செய்து கொள்ளாதே!’’

‘‘சாணக்கியன் உன் தாத்தாவா?’’

‘‘குரு!’’

‘‘குரு! ஓ... அதான் பூஜ்யர் என்ற அவரது பெயரை....’’

‘‘பூஜ்யா என்று வைத்துக் கொண்டிருக்கிறேன். எனது இயற்பெயர் ரூபாதேவி!’’

‘‘நீ அர்த்த சாஸ்திரத்தைப் படித்து இருக்கிறாயா?’’

‘‘இல்லை, அர்த்த சாஸ்திரம் என்னைப் படித்திருக்கிறது. வழியை விடலாம்.’’

‘‘இல்லையேல் புலிநகம் வேலை செய்யுமா?’’

‘‘தவறினால் நானே புலியாக மாறுவேன். ஒவ்வொரு பெண்ணும் புலிநக உறையை இடுப்பில் வைத்துக் கொண்டால் போதும். அதனை மாட்டிக் குடலைப் பிடுங்கிவிடலாம்.’’

அப்போது வானில் சின்னஞ்சிறு திட்டாகக் கருமேகம் குவிந்து ஓரிரு தூறல்கள்...

''மழை வருகிற மாதிரி இருக்கிறது பூஜ்யா! என் குடிசையில் வந்து தங்கிச் செல்லலாமே! புலி நகத்துக்கு வேலை தருகிற அளவுக்கு நான் மேய்ச்சல் மாடல்ல!''

''இது சாதாரண மழை. துளிக்கின்ற எண்பது மேகங்களில் இது ஒன்று; பயமில்லை.''

''எண்பது மேகங்களா?''

''என்ன நீ! எல்லாவற்றையும் ஏதோ குரு சிஷ்ய பாவனையில் துருவித் துருவிக் கேட்கிறாய்?''

''உன்னைக் குருவாக அடைந்தால் என்ன என்று யோசிக்கிறேன்.''

''ஓகோ!''

''விலாசம் கொடுத்தால் வருகிறேன்.''

''கொள்ளையடிக்கிற தொழிலையே விட்டுவிடுவாயா?''

''நீ விடு என்றால் விட்டுவிடுவேன், விலாசம் சொல்.''

''ராமதளவாய் தெரியுமா?''

''தெரியும். சிவாஜி மகாராஜனின் துணைத் தளபதிகளில் அவரும் ஒருவர்.''

''ஓ! தெரிந்துதான் வைத்திருக்கிறாய். அவரது வளர்ப்பு மகள் நான். அங்கு வந்து சத்தியம் செய்து சரணமடைந்தால் நான் உன்னைச் சிஷ்யனாக ஏற்பேன்.''

''நிச்சயம் வருவேன். தயவுசெய்து அதற்கு முன் இந்த எண்பது மேகங்கள் விளக்கத்தைக் கூறமுடியுமா?''

''பயிர்த் தொழிலுக்கான மழையின் கூற்றினை சாணக்கியர் விளக்குகிறார். [1]ஏழு நாள் தொடர்ந்து பெய்கின்ற மூன்று மழைகளும், தூறலாகப் பெய்கின்ற எண்பது மழைகளும், வெயிலோடு கலந்து

1. 'கௌடலீயம்' - அதிகரணம் - 2, அத்தியாயம் - 45.

பெய்கிற அறுபது மழைகளும் ஓராண்டின் பருவ நிலை. இவை பயிர் நலத்துக்குரியன. போதுமா? புரியாவிட்டால் பிறகு விளக்குகிறேன். நான் போகலாம் அல்லவா?''

சிவாஜி வெகுவாகப் பிரமித்துப் போனார். இப்படி ஓர் அறிவு ஜீவனை அவர் எத்தனை நாட்களாகத் தேடி வருகிறார்! இந்தக் கருவூலம், ராமதளவாய் வீட்டிலா இருக்கிறாள்?

அவர் வணங்கியே வழிவிடுகிறார்.

அவளும் அர்த்த சாஸ்திரமாய்ச் சிரித்துக் கொண்டு நடந்தாள்.

மீண்டும் அவளது கவிதை பொழியும் முன்னழகே போன்று இருந்த பின்னழகில் மயங்கிக் கவனிக்கிறார்.

சற்றைக்கெல்லாம் தொலைவில் குதிரைகளின் குளம்படி ஓசை...

ஆ! அந்த ரசசியச் செய்தி தாங்கி அதோ பாலாஜி வருகிறான்...

தந்தை ஷஹாஜி பான்ஸ்லேவுக்கு ஏற்பட்ட மரணதண்டனை உண்மையா என்கிற செய்திதான் அது...

**க**மலப் புன்னகையுடன் கதிரவன் காலைப் போர்வையில் உதயம் காண்கிறான்...

புள்ளினங்கள் எந்த மொழிப் பிரதேசமானாலும் பொதுவான ஒரு தேசிய ராகமே போன்று பூபாளம் பாடிப் பறக்கின்றன.

பூனா நகரமே ஒரு மகத்தான சிவாஜியைக் கண்ட பெருமையுடன் கண்மலர்த்திக் கடமையில் மூழ்குகிறது.

பூஜை புனஸ்காரங்களை முடித்த பூஜ்யா, சாணக்கியனின் கெளடலீய ஏட்டினைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள். அவள் படித்த மொழிகளில், நூல்களில் கெளடலீயம் போல் இனிதாவதெங்கும் காணோம் என்பது அவளது அசைக்க முடியாத மகத்தான கருத்து.

கொஞ்ச நேரம் மனம் ஒருநிலைப்பட வீணையை மீட்டுகிறாள்.

சாருகேசி ராகத்தின் அந்தர காந்தாரமும் சுத்த தைவதமும் இழைந்து கைசிகி நிஷாதத்துடன் முத்தமிடுகிறபோது, ஆ! சாருகேசியே மன்மத லீலையாய் இனிக்கிறது.

குதிரையின் குளம்படி ஓசை...

அப்பா இப்போதுதானே சிவாஜி ராஜா அவசரமாக அழைத்து வரச் சொன்னதாகச் சென்றிருக்கிறார்.

அவர்தான் திரும்பி வருகிறாரா?

வீணையை மடியிலிருந்து இறக்கி வைத்துவிட்டு எட்டிப் பார்க்கிறாள் பூஜ்யா.

ஓ... நேற்று அருவிக்கரைக் காட்டில் சந்தித்த கொள்ளைக்காரன். இப்போதும் முகத்தை மூடிக்கொண்டு வருகிறானே...

இவனது முகத்துக்கு என்ன வந்துவிட்டது? தலைமறைவோ? இவனது தலைக்குப் பணம் உண்டு என்கிற தண்டோரா நிலையோ? பாவம்! சிஷ்யனாக வருகிறான் போலும்!

குதிரையை விட்டிறங்கிய அந்தக் கொள்ளைக்காரன் எதிரே வந்து நிற்கிறான். ஏன் வந்தான்? ஏன் வரவேண்டும்?

''கொள்ளைக்காரா! எங்கு வந்தாய்? ஏதேனும் சாணக்கிய சந்தேகமா?''

அவன் அவளையே கூர்ந்து கவனிக்கிறான். அவனது பார்வை அவ்வளவு சுத்தமாகத் தெரியவில்லை. ஏதோ பழுதுபட்ட அல்லது பழுது பார்க்கப்பட்ட பார்வை மாதிரி...

''எங்கே வந்தாய்?''

''சிவாஜியைச் சந்திக்கிற பாக்கியம் ஏற்படப் போவதாவது என்று நேற்று நீ கூறியது இன்னமும் என் நெஞ்சில் சங்கீதமாய் ஒலிக்கிறது. அப்படி ஒரு பாக்கியம் கிடைத்தால் நீ அவரைக் காதலிப்பாயா?''

''அவர் என்னைக் காதலிக்காமல் நான் அவரைக் காதலிப்பது என்ன பண்பு? நான் மகாராஷ்டிரத்திலிருந்தாலும் எனது மகத்தான தமிழ்ப் பண்பை என்னால் மறந்துவிட முடியாது.''

மீண்டும் அந்தப் பார்வையில் காமவிகாரம் படிந்த அலைகள்...

எதையோ அபகரித்து விழுங்கிவிட வேண்டும் என்பது மாதிரி எதிர்பார்ப்பு...

''நான் உன்னைக் காதலிக்கிறேன் பூஜ்யா!'' என்று கூறியவாறு முகத்திரையை விலக்க...

ஆ! சிவாஜி ராஜா...

வியப்பால் கண்கள் விரிந்தாலும் அவற்றில் மருட்சியால் ஏற்பட்ட துடிப்பு நிறைந்து, பின்னர் அசூயையால் விழுங்கப்பட்ட வெறுப்பு வெளிப்படுகிறது.

சிவாஜியின் நாவசைகிறது...

''பூஜ்யா! நீ என்னை இந்த நிலையில் எதிர்பார்க்கவில்லை. நேற்று உனது கால் தடுக்கிய தத்துவமறிய முகத்தை மூடிக்கொண்டு கொள்ளைக்காரனானேன். ஒரு விதத்தில் நான் கொள்ளைக்காரன் தானே? சிவாஜியைக் கொள்ளைக்காரன் என்றுதானே ஒரு சாரார் மதிக்கிறார்கள். இந்த எனது சுயராஜ்ய கனவின் பற்றாக்குறைக்கு நான் கொள்ளையடிக்கிறேன். நான் இப்போது உன்னைக் கொள்ளை கொள்ள வந்திருக்கிறேன். நான் உன்னைக் காதலிக்கிறேன்.''

- என்று கூறியவாறு பூஜ்யாவின் பூந்தென்றல் போன்ற அழகிய கரங்களைப் பற்றி -

அடுத்த கணம் -

பளீரென்ற அறை பலமாகக் கன்னத்தில் விழுந்தது கண்டு அதிர்ச்சிகண்டு போனார் சிவாஜி.

கொஞ்சமும் எதிர்பாராத வரவேற்பு!

அவர் தாடி நிறைந்த கன்னத்தைத் தடவிக்கொண்டு, ‘‘பூஜ்யா! இதுதான் உன் வரவேற்பா? நேற்று அப்படிப் பேசிய பூஜ்யாவா இப்படி ஒரு மாவீரனுடைய கன்னத்தைச் சோதித்தாள்?’’ என்று கூறுகிறபோது சொற்களில் தெறித்த ஆத்திரத்தையும் கக்கிய கனற்பொறிகளையும் பூஜ்யா முற்றுமாக உணர்ந்து ஒரு கோபாவேசமுடன் சிரிக்கிறாள்.

‘‘நேற்றுப் பேசிய அதே பூஜ்யா, அதே சுயநினைவில்தான் பேசுகிறாள். நீ போகலாம்.’’

‘‘பூஜ்யா!’’

‘‘மரியாதைக் குறைவாகப் பேசி உன்னை அனுப்புகிற மாதிரி செய்துவிடாதே.’’

‘‘பூஜ்யா! ராமதளவாய் என் அடிமை.’’

‘‘யாருக்கு யார் அடிமை? அடிமை என்பதால் என்னை விலை பேசிவிட முடியும் என்று நினைக்கிறாய்.’’

‘‘என்னை ஒருமை போட்டுப் பேசுகிறாய்! நான் நினைத்தால்...’’

‘‘சீ! போடா வெளியே!’’

அதற்குமேல் அங்கு நிற்க விரும்பாத பூஜ்யா, படீரென்று கதவைச் சாத்திக்கொண்டாள்.

வெட்கி முகம் சுருங்கிய சிவாஜி, குதிரையில் ஆரோகணிக்கிற போது...

நெஞ்சு கருவிக் கொள்கிறது...

‘அடி பூஜ்யா! உன்னை எப்படியும் ஒரு நாளாவது...’

குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்டபிறகு ஒரு நிலையான சமாதானத்துக்கு வருகிறாள் பூஜ்யா.

**பி**ரதாப கோட்டை மலையரணின் ஒரு தனியறையில் மகாராஷ்டிர மாவீரதிலகம் சிவாஜி குறுக்கும் நெடுக்குமாக ஓர்

அடிபட்ட புலி மாதிரி உலவிக் கொண்டிருக்கிறார்... ஆனால், சிந்தனையில் காயப்படாத ரேகைகள் படர்ந்து கொண்டிருக்கின்றன...

பக்கத்தில் எவருமில்லை. எவரையும் அங்கு வைத்துக் கொள்ள விரும்பாதவர்போல் தனித்து யாரையோ எதிர்பார்த்து உலவுவது மாதிரி தெரிகிறது. அவரது போக்கில் ஒரு விவரிக்க முடியாத உணர்ச்சிகள் கேள்வி பதிலாய்ப் பரிணமிக்கின்றன.

ஆம்; பூஜ்யாவை உடனடியாக வந்து பார்க்க வேண்டும் என்கிற கடுமையான அழைப்பின்பேரில் ஏற்பட்ட வித்தியாசமான எதிர் உணர்வுகள்தாம் அவை.

யார் இந்த பூஜ்யா?

இத்தனை நாட்களாக இவள் நமது கண்ணில் படாமல் போனாளே...

ராமதளவாய் இப்படி ஒரு பெண்ணை வளர்க்கிறாரா? இதுவரை இவள் இவ்விதம் ரகசிய ஜீவியாக இருந்து வருகிறாள் என்றால் அவளை வளர்த்த ராமதளவாய் பாராட்டுக்குரியவரே!

ஆ! எத்துணைக்குப் படித்த மகள் அவள்! எல்லா மொழிகளையும் படித்தறிந்து இருக்கிறாள். ஆயினும் ஒரு தமிழ்ப் பெண். தமிழ்ப் பெண்ணிடம் அழகு இயல்பாகவே காவிய மெருகிட்டுக் காண்கிறது. அறிவிலும் அந்த மண்ணுக்கு ஒரு தனியான சுயசக்தி இருக்கும் என்று கேள்விப்பட்டதற்கு இவள் ஓர் உதாரணமாகத் தென்படுகிறாளே...

ஆணையிட்டபோது ராமதளவாய் பெரிதாக அதிர்ந்து போயிருக்கிறார். சிவாஜி ஏன் தனது மகளை அழைத்து வருமாறு கடுமையாக ஆணை பிறப்பிக்க வேண்டும்? என்ன நடந்திருக்கும் என்பதில் ஒரு நியாயமான அதிர்ச்சி கண்டே அவர் சென்றிருக்கிறார். அதோ யாரோ வருகிறார்கள். ஆமாம், ராமதளவாய்தான் வருகிறார். அந்தச் சண்டித்தனம் பிடித்த தைரியக்காரி பூஜ்யா உடன் வருகிறாளா? மறுத்தும் இருக்கலாம் அல்லவா? கன்னத்தில் அறைகிற அளவுக்குத் துணிவு படைத்தவள் எதையும் செய்வாள்.

இவளுக்கு என்ன துணிச்சல்? சிவாஜி எங்கே? இவள் எங்கே? எத்துணை துணிவாகக் கன்னத்தில் அறைந்ததுமல்லாது குறைவாகப் பேசியனுப்பி இருப்பாள்?...

பாத சலங்கை கேட்கிறது.

ஓ... பூஜ்யா வருகிறாள்...

திறந்து பட்ட சாளரங்களில் ஞாயிற்றின் கிரணங்கள் மிகவும் உஷ்ணமாக உள்ளே புகுந்து வெளிச்சத்தைப் பரப்பி இருக்கின்றன...

அந்த வெளிச்சம் எனது அழகொளிக்கு முன்னே-அறிவொளிக்கு முன்னே-எம்மாத்திரம் என்று கர்வப்படுகிற மாதிரி ராமதளவாயைப் பின்பற்றி உள்ளே நுழைகிறாள் பூஜ்யா...

அதுவரை உலவிக் கொண்டிருந்த சிவாஜி, பாத சலங்கையொலி கேட்டதும் என்ன நினைத்தோ ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்து கொண்டார். கால்மேல் காலேற்றி அவர் அமர்ந்திருந்த பாணி எவரையும் பயமுறுத்துவதாக இருந்தது.

உள்ளே நுழைந்த ராமதளவாய் பணிந்து நிற்கிறார். உடன் வந்த பூஜ்யா, நின்று சற்றே கூர்ந்து கவனிக்கிறாள். அவளது கண்கள் பல விஷயங்களைப் பரிசீலிக்கின்றன.

அவள் வணங்கவில்லை. சிவாஜி தமது மீசை முனையைத் திருகிவிட்டுப் பின்னர் குறுந்தாடியை நீவிக் கவனிக்கிறார். அந்தக் கண்களில் தீட்சண்யம்... ஒரு நிஜமான வேங்கையின் பார்வை மாதிரி...

இடக்காலுக்கு மேலே குந்திக் கொண்டிருந்த வலக்கால் பாதரட்சையுடன் ஆடிக் கொண்டே இருக்கிறது...

இவள் தனக்கு வணக்கம் செலுத்தாமல் எவ்வளவு கர்வமாக நிற்கிறாள்...

''பூஜ்யா...!''

சிவாஜியின் குரல். ஆ! கம்பீரமான அந்த ஆண்மை எதிரொலிக்கும் குரல்...

''மகாராஜ்!''

பூஜ்யாவின் யாழ்குரல் அத்துடன் நிற்கிறது...

''நேற்று எவ்வளவு திமிராக என்னை அறைந்து அனுப்பி இருக்கிறாய்! எவ்வளவு கொழுப்பாக மரியாதைக் குறைவாகப் பேசியிருக்கிறாய்? அதற்கு என்ன தண்டனை தெரியுமா?''

தனது மகள் இவ்வாறு மகாராஜாவை அவமதித்து அனுப்பி இருக்கிறாள் என்று தெரிய வந்தபோது நடுங்கிப்போன ராமதளவாய், ''மகாராஜ்! என் மகளா...'' அவர் பேசி முடிக்குமுன், ''அப்பா!'' என்று குறுக்கிட்ட பூஜ்யா, ''நீங்கள் சும்மாயிருங்கள்'' என்றடக்கிவிட்டு மீண்டும் வீரமாதிலகமான சிவாஜியைக் கூர்ந்து கவனிக்கிறாள்.

''என்ன சொன்னீர்கள் மகாராஜ்! என்ன தண்டனை என்றா? ஒரு தண்டனையும் விதிக்க முடியாது. ஏனென்றால் நான் எந்தத் தண்டனைக்குரிய செயலையும் செய்யவில்லை! எனது ஆசான் சாணக்கியன், பதினைந்தாம் பிரகரணத்தில் வன்செய்கையைப் பற்றியும், பதினாறாம் பிரகரணத்தில் வன்சொல் பற்றியும், பதினேழாம் பிரகரணத்தில் தண்டனையின் கொடுமைகளைப் பற்றியும் விளக்கிய விளக்கங்களுக்கு நான் பொறுப்புள்ள மாதிரி எதையும் செய்யவில்லை. வேண்டுமானால் தண்டனையளிக்கவல்ல நீங்களே உங்களுக்கு ஒரு தண்டனையை விதித்துக் கொள்வது தண்டனைக்குப் பெருமையாகும்!''

ஆ! என்ன விசாலமாகவும், விவகாரமாகவும் விளக்கங்களை அள்ளி வீசுகிறாள் இவள்.

ராமதளவாய் மீண்டும் தலையிடுகிறார்.

''பூஜ்யா! உனது அறிவு மேதா விலாசத்தை நமது மகாராஜா...''

''தளவாய்! நீங்கள் பேசாமல் கவனித்தால் போதும். மீண்டும் உங்களைப் பேச நான் அனுமதியேன்'' என்றார் சிவாஜி.

வாய் பொத்தி நின்று விடுகிறார் ராமதளவாய்.

''என்ன சொன்னாய் பூஜ்யா! எனக்கு நானே தண்டனை வழங்கிக் கொள்ள வேண்டுமா?''

''சந்தேகமில்லாமல்!''

''அன்றைக்குக் காட்டில் என்னைப் பற்றி உயர்வாகப் பேசினாய். என்னைக் காதலித்து எனது பக்கத்திலிருக்கவும் தயாராக இருக்கிற மாதிரி பேசினாய்! அதை வைத்துத்தானே நேற்று உன் கரம் பற்றினேன்! அப்படி இருக்க என்னை அவமதித்ததன் காரணம்?''

''என் கைபற்றியது மகாராஷ்டிர வீரமா திலகமானால், கைபற்றிய மறுகணமே கழுத்தில், மாலையணிவித்திருப்பேன்! ஆனால் என் கையைப் பற்றியவன் சிவாஜி மாதிரி ஒரு போலி!''

அதிர்ந்து போனார் சிவாஜி.

''அதெப்படி? போலியான ஒரு சிவாஜியா? நானேதான்.''

''நிச்சயம் நீங்கள் இல்லை. இதோ என் முன் காட்சி தரும் இந்த ஆண்மைமிக்க சிங்கமல்ல நேற்று வந்தது. ஆண்மை என்பதே பிறன்மனை நோக்காதது என்கிறது எங்கள் தமிழ் வேதம். நான் மகாராஷ்டிர மொழியை இவ்வளவு தெளிவாகப் பேசியும் எனது கண்களில் இரு மொழிகளே குடியிருக்கின்றன. ஒன்று சமஸ்கிருதம், இன்னொன்று தமிழ். ஒன்று அர்த்த சாஸ்திரம்; இன்னொன்று திருக்குறள். இந்த இரண்டும் என்னை எப்போதும் முட்டாளாக்கியது கிடையாது. ஆகவே இதோ இருக்கும் சிவாஜி ராஜன் ஒரு பெண்ணுக்கு மதிப்பளித்துப் பேசுகிறார். எந்தப் பெண்களுக்கும் மதிப்பளிக்கிறவர் என்பது ஊரறிந்த உண்மை. நேற்று வந்தவன் கண்கள் என்னை விழுங்கவே துடித்தன... நான் ஏமாந்தால் என்னை ருசித்துப் பசியடக்க எதிர்பார்த்தன! நீங்கள் அவனைச் சோதனையின் பொருட்டு அனுப்பி இருக்கலாம். அவன் உங்களையே சோதிக்கக்கூடிய நயவஞ்சகன்! எனவே பாடம் புகட்டினேன்.''

''இன்னும் இன்னொரு சிவாஜி இருப்பதாகத்தானே பேசுகிறாய் பூஜ்யா!''

‘‘இதில் சந்தேகமே இல்லை. உங்களை மாதிரி ஒருவரை யாருக்கும் தெரியாமல் தயார் செய்து வைத்திருக்கிறீர்கள். பல காரியங்களை அவன் சாதித்து இருக்கலாம். என்னிடம் பலிக்கவில்லை.’’

சரேலென்று எழுந்து வந்து வீர சிவாஜி, அவளது தோளைப் பற்றிப் பாராட்ட எண்ணினார்; ஆனால் தொட மனம் இடந்தரவில்லை.

‘‘சபாஷ் பூஜ்யா! இன்று முதல் நீ எனது அந்தரங்க ஆலோசகி! ஆத்மார்த்த அமைச்சர். உனக்குச் சம்பளம் கிடையாது. உனது சம்பளம் நானே!’’

சிவாஜியின் இந்த முடிவைக் கேட்டு வெகுவாக மகிழ்ந்து போனார் ராமதளவாய்.

பூஜ்யா, பெருத்த புளகச் சிலிர்ப்புடன், சிவாஜியின் கால்களில் விழுந்து பணிகிறாள்.

‘‘பூஜ்யா! வந்ததும் என்னை வணங்காத நீ, இப்போது வணங்குவானேன்!’’

‘‘ஒரு காவியத்துக்கு முதலில் காப்புச் செய்யுளிருக்கும். எனது காவியத்துக்கு இது முடிவாக இருக்கிறது.’’

‘‘மரபல்லவே!’’

‘‘மரபு என்பது நாமாக நேமித்துக் கொள்வது. இனிவரும் யுகங்களில் ஒரு நூலுக்கு பின்னுரை ஏற்படுகிற மாதிரி இது அமையட்டும். மகாராஜ்! ஆரம்பத்தில் உங்களைப் பரிசீலித்தேன். ஒரு போலியை நான் வணங்கி, எனது கௌரவத்தைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனது பரிசீலனைக்குப் பிறகு ஒரு நிஜத்தை வணங்குகிற பெருமை கிடைத்திருக்கிறது.’’

‘‘யுகயுகமாக எதிர்பார்த்தாலும் இப்படி ஒரு ராஜரிகமான காவியத்தைப் பெற முடியாது என்கிற உள்ளுணர்வுடன் புன்னகை பூத்தார் வீரமா சிவாஜி.

பூனா நகரம் மட்டுமல்லாது மாவீர சிவாஜி கைப்பற்றிய அத்தனை கோட்டைகளுக்கும் பூஜ்யா என்கிற ஒரு பெண் மேதை அந்தரங்க அமைச்சராக அமர்ந்த செய்தி பரவி ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒரு பெண்ணுக்கு இப்பேர்ப்பட்ட அந்தஸ்தா?

ராஜமாதாவான அன்னை ஜீஜாபாய்க்குக்கூட இது குறித்து ஒரு கசப்பான எண்ணம் எழுந்து மகனிடம் விவாதித்து மௌனமானாள். மகன் சிவாஜி தனக்குத் தேவைப்பட்ட இப்படியான ஒருத்தியை மனைவியாக அமர்த்திக் கொள்ளட்டும். மந்திரியாக அமைத்துக் கொள்வதா?

ராமதளவாய் மீது பலர்க்குத் தேவையில்லாத காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது.

வளர்ப்புப் பெண்ணைக் கொடுத்து வாழ்வில் பதவிகளை அனுபவிக்க ஆசை வைத்துவிட்டான் என்கிற அசூயையான பேச்சுக்களை ஜீரணம் பண்ண முடியாது தவித்துப் போனார் ராமதளவாய்.

அன்னை ஜீஜாபாய் ஒரு வாரம் வரையில் மகனிடம் பேசவில்லை.

மதியமைச்சரான முதலமைச்சர் பேஷ்வா மோரோபந்த் எங்கே? நரோ நீலகண்ட் எங்கே? சேனாதிபதி ஹம்பிராவ் மோதி எங்கே? அன்னாஜி பந்த் எங்கே? நியாயதீஷா (நீதிபதி) வான நிராஜிபந்த் எங்கே? சிட்னிஷ் பாலபிரபு எங்கே? கிருஷ்ணாஜி பாஸ்கர், பாபாஜி பாஜி, ராமசந்திர பந்த், பாலாஜி...

ஓ... இவர்களையெல்லாம் அவமதிக்கிற மாதிரி இந்தப் பெண் பூஜ்யாவிடம் சிவாஜி என்ன கண்டுவிட்டான்?

எதற்கும் எந்தவித பதிலையும் சிவாஜி கூறவில்லை. பூஜ்யா எனது அந்தரங்கத்துக்குரியவள். அவள் காதலியா? மனைவியா? அந்தரங்க ஆலோசகியா என்கிற சிரமமான கேள்விக் குறிகள் மற்றவர்களுக்குத் தேவையற்றவை என்கிற ஒரே பதில்...

பல வாய்கள் மூடிக்கொண்டன.

இதற்கிடையில்தான் அந்தப் பயங்கரமான செய்தி வந்திருந்தது.

சிவாஜி உடனடியாக பீஜப்பூர் சுல்தானிடம் பதவி ஏற்று அடிமை சேவகம் பார்க்க வேண்டும். தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லே எந்த அளவுக்கு பீஜப்பூருக்குக் கடமைப்பட்டிருக்கிறாரோ அந்த அளவுக்கு சிவாஜியும் கடமைப் பட வேண்டும். தவறினால் தந்தை ஷஹாஜி பான்ஸ்லே உயிருக்கு ஆபத்து...

இன்றைய தினம் அடிக்கல் நாட்டுகிறார்களாம்! ஷஹாஜியை நிற்க வைத்து, நான்கு புறங்களிலும் சுவர் எழுப்பி, முடிவில் மூடி உயிருடன் சமாதியாக்குகிற கடுமையான தண்டனை.

இடையில் பதினைந்து தினங்கள் தவணை...

இதற்குள் சிவாஜி வந்து பதவி ஏற்று தந்தை ஷஹாஜியை விடுவிக்க வேண்டும்.

அதிர்ச்சியான இந்தச் செய்தி கேட்டு முதலில் அரண்டு போனாலும், பிறகு, மகனின் சுயராஜ்ய சுதந்திரக் கனவை இதன் மூலம் பாதிக்கச் செய்துவிடக் கூடாதே என்று யோசிக்கிறாள் அன்னை ஜீஜாபாய்.

மகன் சிவாஜியிடம் இது குறித்துப் பேசினால், மௌனமே சரணாகதி என்றிருக்கிறானேயொழிய பதிலைக் காணோம். அவன்தான் என் செய்வான்? ஒருபுறம் தந்தை; இன்னொரு புறம் சுயமரியாதை; சுயராஜ்யக் கனவு...

தனித்து இது குறித்து நடத்தவிழைந்த மந்திராலோசனையையும் மறுக்கிறான்...

ஒருகால் புதியதாக நியமிக்கப்பட்ட அந்தரங்க ஆலோசகியான பூஜ்யாவைக் கலந்துகொண்டு...

ஜீஜாபாய் எண்ணியது போலத்தான் நடக்கச் சித்தமானார் சிவாஜி.

**வி**ளக்குகள் மந்திராலோசனை நடத்துகின்றன...

அவற்றின் வாதப் பிரதிவாதங்களைக் கேட்பவர்கள் போன்று தரையில் திண்டு திமாசுடன் அமர்ந்து காணப்பட்டார்கள் சிவாஜியும், பூஜ்யாவும்.

விளக்குகளே நீங்கள் செய்யும் விவாதங்கள் எதுவானாலும் எனது விவாதத்தின் ராஜதந்திர நூலாக விளங்கும் பூஜ்யாவின் தீர்ப்பே முடிவானது என்பது போல சிவாஜி ஆழ்ந்து காணப்படுகிறார்.

''என்ன பூஜ்யா! என்னதான் உனது சாணக்கியர் சொல்லுகிறார்? தந்தையா? இல்லை எனது சுயராஜ்யக் கனவா?''

பூஜ்யா, 'ஓர் எண்ணுடன் பூஜ்யம் சேருகிறபோதுதான் அதன் மதிப்பு உயர்கிறது என்பது போல, நான் உங்களுடன் சேர்ந்திருக்கிறேன். இனி எனது மதிப்பு உயர்ந்தது' என்கிற மாதிரி கவனிக்கிறாள்.

செம்பவழ இதழ்களில் சாணக்கியனின் அத்தியாயமும், அதிகரணமும் பிரகரணமும் புன்முறுவலாய்க் கீற்று விடுகின்றன.

''பூஜ்யா! நான் உன்னை மதிக்கும் மதிப்பு மகத்தானது; மகோன்னதமானது. உன்னை எனது இதயத்தில் எவ்வாறு வைத்திருக்கிறேன் என்பது எனக்குத்தான் தெரியும். இது ஒரு முதல் கட்ட சோதனையானாலும் உயிர்ப் பிரச்னை; மானப் பிரச்னை. உனது நாவுதான் இப்போதைய மந்திராலோசனை. எனது அதிகாரிகளையும், அனைத்துணர்ந்த தாயின் அபிப்பிராயங்களைவிட மேலான அபிப்பிராயமாக உன்னிடம் எதிர்பார்க்கிறேன். இது நான் உனக்களிக்கும் முதல் சோதனை அல்லது பரீட்சையானாலும், இதனால் ஒன்று சிவாஜி உருவாக வேண்டும்; இல்லை உரு குலைந்து போகவேண்டும். சொல்ல வேண்டிய முடிவை எண்ணித் துணிந்து சொல்வாய் என்று எதிர்பார்க்கிறேன்.''

சிவாஜி மேலும் மேலும் இவ்வாறு கூறுவதிலிருந்து அவரிடமே அவரையறியாத ஒரு பலவீனம் தலைநீட்டுவதை அவளால் உணர முடிந்தது. அவளது பளு இன்னும் அதிகமாவதாகத் தெரிந்தது. பொறுப்பு தலைமீது பாரமாகி நெஞ்சை நெருக்குவதாகத் தெரிந்தது.

'எண்ணித் துணிக' எனும் வள்ளுவன் வாக்கு நினைவுக்கு வருகிறது.

எழுந்து சென்று, அந்தக் குடிலைச் சுற்றிக் கவனிக்கிறாள். விரைந்து அமைக்கப்பட்ட தனியான கீற்றுக் குடில். பெரிதாக இருந்த சிவபெருமான் சிலையை நோக்குகிறாள். விரிந்து கிடந்த கௌடலீயத்தைப் பார்க்கிறாள்...

என்னைக் கொஞ்சம் மீட்டேன் என்று கெஞ்சுகிற மாதிரி படுத்திருந்த வீணையைக் கையிலெடுத்து மீட்டுகிறாள்.

சங்கராபரணம்; சங்கரனுக்கு ஆபரணமான ராகம்...

அந்தரகாந்தாரச் சுரம் ஒலிக்கும் போதெல்லாம் அந்தரத்தில் ஓர் எண்ணம் சுத்த மத்தியமமாகச் சுழல்கிறது...

'சட்'டென்று எழுந்து கொள்கிறாள்...

''பிரபோ! உங்களுக்கு நம்பிக்கையான நபர் யார்? நாளை அவர்தான் எனது போக்குக்கெல்லாம் நம்பிக்கையான நல்ல நண்பராக இருக்க வேண்டும். சொல்லுங்கள்.''

சிவாஜியும் தயங்காமல் சொன்னார்: ''பாலாஜீ.''

''அப்படியா! அவரை அனுப்பிவையுங்கள். நான் அவரை ஆக்ரா நோக்கி அனுப்புகிறேன். நீங்கள் அனுப்பியது மாதிரிதான்! ஷாஜஹான் மகாராஜனின் துணையை நாடப் போகிறேன்!''

''பூஜ்யா! இது எதையோ கருதி எதிலோ அகப்பட்டுக் கொள்ளுகிற மாதிரி!''

''இப்படிப் பேசுவது பூஜ்யாவுக்கும் பிடிக்காதது. பூஜ்யாவை நம்பினால் முழுக்கவும் அவளை நம்பிவிட வேண்டும். அவள் எந்த மீனை எப்படி விழுங்கி, எந்த மீனை அழிக்க வேண்டும் என்பதை யுணர்ந்தவள். ஏன், எதற்கு, என்கிற கேள்விகளை எழுப்புவதானால் அவளிடம் அபிப்பிராயம் கேட்கக்கூடாது. பிறகு உங்களிஷ்டம்.''

சிவாஜி மறுபேச்சு ஏதும் பேசாமல் எழுந்து கொண்டார். உள்ளூற அவருக்குப் பயமாகவும் இருந்தது. ஷாஜஹானிடம் அகப்பட்டுக் கொள்வதா? பின்னால் ஏதும் நடந்துவிடுமானால் முதல் பகையை அன்னையிடம் சம்பாதிக்க நேரிட்டுவிடுமே!

நம்பியாகிவிட்டது. என்னதான் நடக்கப் போகிறது என்று பார்த்துவிடுவோமே என்கிற தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டார்.

ஹே! அன்னை பவானி! சக்தி! உன்னை பூஜ்யா உருவில் காண்கிறேன். நடக்கப் போகிற செயல் பூஜ்யமாகாமல் பூரணமாக வேண்டும்!'

**அ**றிவின் கேந்திரமாக மதிக்கப்பட்ட பூஜ்யா போட்ட திட்டம் வீண்போகவில்லை. வீர சிவாஜியின் அத்யந்த நண்பனும் தளபதியுமான பாலாஜி சென்ற தூது வெற்றிகரமாகவே அமைந்தது. அந்தத் தூதுபற்றி சிவாஜி மிக்கவும் ரகசியமாகவே வைத்துப் பாதுகாத்தார். பிரசண்ட கோட்டையின் சிறு கல்லின் காதுக்கும் இது எட்டக்கூடாது என்கிற கடுமையான உத்தரவு. அன்னையின் காதுகளுக்கு இது எட்டிவிடுமேயானால் இதனால் ஏற்படுகிற பின் விளைவுகள் பெரிதுவக்கும் பீழையாகி விடக்கூடாதல்லவா? நேற்று வந்த பூஜ்யாவின் பேச்சுக்கு இந்த மதிப்பா என்கிற கேள்விகள் விஷ அம்புகளாக எழுந்து விடக்கூடாதல்லவா?

வடபுலத்துப் பெரும் சக்கரவர்த்தியான ஷாஜஹான் இந்தத் தூதைப் பெரிதாக மதித்தார்.

தந்தையின் உயிரைக் காக்க உடனே பீஜப்பூரை முற்றுகையிடத் தமது மைந்தர்களில் ஒருவரான மூரத்தைத் தலைமைதாங்கி அனுப்பி வைப்பதாக ஒப்புதல் தந்தார். அதே நேரத்தில், இந்தப் பீஜப்பூர் முற்றுகைக்குப் பிறகு - தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லே உயிர்க் காக்கப் பட்ட பிறகு - சிவாஜி, ஷாஜஹான் சாம்ராஜ்யத்தின் அடிமையாக அல்லாது ஓர் அங்கமாக இருந்து உறுதுணை புரிய வேண்டும் என்றும், மகா சேனாதிபதியாக இருந்து பூனாவிலிருந்தே வாழலாம் என்றும்

ஐயாயிரம் படைவீரர்களுக்கு அதிபதியாக நிகரற்று விளங்கலாம் என்றும் ஷாஜஹான் லிகிதம் அனுப்பி இருந்தார்.

எவ்வழியிலும் ஒப்ப முடியாத நிபந்தனை. சிவாஜியாவது ஷாஜஹானிடம் பணிபுரிவதாவது? இந்துமதம் நாடெங்கிலும் தலைதூக்க வேண்டுமென்றும், பரந்த இந்து சாம்ராஜ்யம் உருவாக வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக் கொண்டவராயிற்றே சிவாஜி!

எவ்வாறு சம்மதிப்பார்? ஆயினும் இது பூஜ்யா விஷயம்! அவர் தலையிடாது நடப்பதைக் கவனிக்கலானார்.

ஷாஜஹானின் பெரும் படையுடன் மூரத் தலைமைதாங்கி வருகிறான் என்கிற செய்தி பீஜப்பூரைக் கலக்கியது. முகலாய அரசன் முகமது ஆதில்ஷா கதி கலங்கிப் போனான். ஷஹாஜி பான்ஸ்லே விடுதலைக்கு ஷாஜஹான் படையெடுப்பா? என்ன சூழ்ச்சி?

ஓ...சிவாஜி! இங்கு பணிவதற்குப் பதிலாக ஷாஜஹானிடம் சரணடைந்திருக்கிறான் போலும்!

மூரத்திடமிருந்து செய்தி வருகிறது...

‘செஞ்சோற்றுக் கடன் வீரரான ஷஹாஜி பான்ஸ்லே பீஜப்பூர் சுல்தானுக்கு அரும்பெரும் சேவை செய்தவர். மகன் சிவாஜியை அடிமைப்படுத்த தந்தையைப் பழிவாங்குவது நன்றி கொன்ற செய்கை. உடனே ஷஹாஜியை விடுதலை செய்கிறாயா? பீஜப்பூர் அழிய வேண்டுமா?’

முகமது ஆதில்ஷா வேறுவழியின்றி ஒப்புக்கொண்டான். ராஜ்யத்தைக் காப்பாற்ற வேண்டுமே...

ஷஹாஜிபான்ஸ்லேயின் உயிர் பிழைத்தது. சீ! எத்துணைக்கு நன்றி கொன்றவன் இந்தப் பீஜப்பூர் சுல்தான் ஆதில்ஷா...

ஆயினும் அவர் செஞ்சோற்றுக் கடனாக உயிருள்ளவரை பீஜப்பூருக்கு உழைக்கவே செய்தார். ஆரம்பத்தில் செய்துகொண்ட சத்தியத்துக்கு - உடன்படிக்கைக்கு மாறாக மீறி எதையும் செய்துவிடவில்லை. மகாராஷ்டிர சரித்திரத்தில் ஷஹாஜி ஒரு கர்ணன்.

**ஷ**ஹாஜி பான்ஸ்லே விடுதலையான செய்தி பூனாவுக்கு எட்டுகிறது.

காதுகள் குளிர்ந்தாலும் காரணம் புரியாது விழிக்கின்றன பல கண்கள்...

ஒரு வார அமளிக்குப் பிறகு காரணம் புரிகிறது.

அறிவு ஜீவியான பூஜ்யாவின் ராஜதந்திரம் இது.

ஆ! பூஜ்யா...

புரிந்து கொண்டவர்கள் பொறாமைப்பட்டனர். பொறாமைப் பட்டதால் புழுங்கி நோக்கினர்.

பூஜ்யாவுக்கு இப்போது பெருத்த பாதுகாப்பு...

ஷாஜஹான் சக்கரவர்த்தியிடம் ஒப்புதல் கொடுத்தமாதிரி இப்போது சிவாஜி நடந்துகொள்ள வேண்டுமே...

அன்று மாலை...

சூரியன் மறைவுக்குப் பிறகு சிவாஜி பூஜ்யாவின் குடில் தேடிவருகிறார்.

அவளைக் காதலியாகப் பார்க்க வருகிறார்.

மனைவியாகப் பின்னாளில் ஆராதிக்கப் போகிறோம் என்ற பேருவகையுடன் வருகிறார்...

இரண்டையும் விட அந்த ராஜதந்திரியின் அடுத்த ஆலோசனைக்கட்டம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வருகிறார்...

வீணையின் ஒலி சுநாதமாக அந்தப் பிராந்தியத்தையே மயக்கத்தில் ஆழ்த்துகிறது...

ஹிந்துஸ்தான் காந்தாரி ராகம்...

உள்ளே நுழைந்த சிவாஜி கூர்ந்து கவனிக்கிறார்.

‘‘உட்காருங்கள். இது என்ன ராகம் தெரியுமா?’’

''நான் உன்னைப் போன்று சகலகலாவல்லியல்ல.'' என்று கூறிக் கொண்டே முட்டி போட்டு அமர்ந்து கொள்கிறார்.

''என்ன ராகம் பூஜ்யா?...''

ஒரு கணம் சிவாஜியின் அழகிலும், கம்பீரத்திலும் மெய் மறக்கிறாள் பூஜ்யா!

ஆ! என்ன கம்பீரம்...

கால்சட்டையும், அந்த ராஜ கம்பீர ஜிப்பாவும் உடம்பைப் பிடித்துக்கொண்ட மாதிரி...

தலைப்பாகையை அவிழ்க்கிறார்...

''இது இந்துஸ்தானி காந்தாரி. இந்த இந்துஸ்தானம் உருப்பெற வேண்டுமானால் நான் பொல்லாத காந்தாரியானால்தான் முடியும் என்பது மாதிரி இந்த ராகத்தை வாசிக்கிறேன். ஆனால் உங்களுக்கு மட்டும் சுருதிக்கே முக்கியமான காந்தாரமாக விளங்குவேன்.''

வியந்து நோக்குகிறார் சிவாஜி.

''பூஜ்யா! நீ காந்தாரியாக நான் விரும்பவில்லை. நீ காந்தாரமாகவே எல்லாவற்றுக்கும் விளங்கலாம்.'' பூஜ்யா சிரிக்கிறாள். ''நானாவது மகா மோசமான காந்தாரியாவதாவது? சும்மா சொல்லிப் பார்த்தேன், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று! போகட்டும். ஷாஜஹான் விஷயமாகத்தானே பேச வந்திருக்கிறீர்கள்?''

மீண்டும் கூர்ந்து கவனிக்கிறான். என்ன கூர்மையாகச் செயல்படுகிறாள் இவள்?

''நான் எல்லா ஏற்பாடுகளையும் காலையிலேயே கவனித்து விட்டேன். உங்கள் போலி சிவாஜியைப் பயன்படுத்தி இருக்கிறேன்.''

''அவனையா?''

''ஆமாம்; அவனிடம், கொஞ்ச காலத்துக்கு ஐயாயிரம் படை வீரர்களுடன் - மகாசேனாதிபதி பதவியுடன் - அசல் சிவாஜியாக

அனுபவியேன் என்று சொல்லி அனுப்பி இருக்கிறேன். உடன் எனது தந்தை ராமதளவாயையும் அனுப்பி இருக்கிறேன்.''

''பூஜ்யா! என்ன எதிர்விதமான ஏற்பாடு?''

பூஜ்யா கலகலவென்று சாணக்கியனைப் போலச் சிரிக்கிறாள்.

''பிரபோ நான் என்ன பைத்தியக்காரியா? ஒரு நிபந்தனையுடன் அனுப்பி இருக்கிறேன். நமக்குச் சேர வேண்டிய சில கோட்டைகள் ஷாஜஹான் வசமிருக்கின்றன. அவற்றை எங்களுக்குத் திருப்பிக் கொடுத்தால் ஷாஜஹான் ஆணையை ஏற்பேன் என்று கூறச் செய்திருக்கிறேன். ஷாஜஹான் ஒப்புக்கொண்டால், ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு பதவி உயர்வுடன் திரும்பச் செய்திருக்கிறேன்.''

''ஐயய்யோ... இது நடந்துவிட்டால்! பின்னால் அனுபவிப்பவர் யார்?''

''நடக்காது. ஒப்பந்தம் அன்றே நடைபெறாது. ஷாஜஹான் மைந்தர்களில் மகாபுத்திசாலி ஔரங்கசீப் ஒப்புக்கொள்ளவே மாட்டான். இருதினம் தங்கி ஆலோசிக்கலாம் என்றுதான் சொல்லுவார்கள். முதல் இரவன்றே அவனைக் கொலை செய்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் சிவாஜி என்பவர் இஸ்லாமியரின் அந்தகன் என்பது அவர்களறியாததல்ல.''

அரண்டு மருண்டு போனார் சிவாஜி...

''அப்படிக் கொலை செய்யவில்லை என்றால்?''

''எனது தந்தை உங்கள் போலியைக் கொலை செய்து, பழியை அவர்கள் மீது பரப்பிவிடுவார். பின்னால் போலி சிவாஜி என்று தெரியவந்தாலும், அது ஒரு ராஜதந்திரமாகிவிட ஏற்பாடு செய்வேன். உண்மையான சிவாஜி வந்திருந்தால் என்னாகி இருக்கும் என்று பழியைத் திருப்பி நாம் தப்பிக்கலாம்? எப்படியும் விரோதம் வரப் போகிறது. அது எப்படி வந்தால் என்ன? பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

‘‘இதற்காக எனக்கென்று உருவாக்கப்பட்டவன் பலியாவதா, பூஜ்யா!’’

‘‘இந்தச் சாம்ராஜ்யத்துக்கு இரண்டு சிவாஜி இருப்பது ஆபத்தானது. எனது காதல் சாம்ராஜ்யத்துக்கு இரண்டு சிவாஜி இருப்பது அதைவிட ஆபத்தானது மட்டுமல்ல அசிங்கமானதும் கூட! ஐந்து தலைகளைக் கொண்ட பரமசிவன், ஐந்து தலைகளைக் கொண்ட பிரம்மனால் அவதிப்பட்ட ஈச்வரியின் நிலைகருதித்தானே பிரம்மனின் ஒரு தலையைக் கொய்துவிட்டார். போலி சிவாஜிக்கு ஒரே தலை; வேறுவழியில்லை. அதைக் கொய்ய ஏற்பாடு செய்துவிட்டேன். என்னைக் கைபிடித்தானே! அதன் பயன்! பிரம்மனை ஈச்வரன் என்று எண்ணி ஒரு கணம் பிரமித்த ஈச்வரி மன்னித்து இருக்கலாம். ஆனால் என்னால் மன்னிக்க முடியவில்லை. இப்போது எனக்கு ஒரு நிறைவு. அவனை வைத்துக்கொண்டு மற்றவர் பகடைக்காய் ஆடுவதற்கு முன்னம் நானே ஆடிவிட்டேன்.’’

பூஜ்யா வெற்றிகண்ட பெருமிதத்துடன் சிரிக்கிறாள்...

ஓ... பூஜ்யா! இந்தச் சாதனையைப் பெருத்த ராஜதந்திரத்துடன் சாதித்து இருக்கிறாள்...

முதல்படி வெற்றிப்படியானதை எண்ணி மேலும் மேலும் சிரிக்கிறாள் பூஜ்யா... அந்தச் சிரிப்பில்...

சாணக்கியம் தெறிக்கிறது.

-----

# 6

அளவுக்கு மீறிச் செல்வம் சேர்ப்பவன் கேடு விளைவிப்பவன். செலவிற்கென வரையறுக்கப்பட்ட செல்வத்தை வரவில் சேர்ப்பவன் தொழிலாளர்களுக்கும் தொழிலுக்கும் கேடு விளைவிப்பவன். ஒரு தொழிலில் நியமனம் பெற்ற தொழில் தலைவன், அத்தொழிலின் இயல்பையும் அதனால் உண்டாகும் வரவு செலவுகளையும் அரசாங்கத்துக்கு அறிவிக்கக் கடமைப்பட்டவன்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 3).

**பூ**ஜ்யா...

என்ன இனிமையான சந்திப்பு...

எந்த இரவுமே இப்படித் தம்மை உருட்டிப் புரட்டவில்லை.

அவரது படுக்கையறை, தனியானது.

பூஜ்யாதேவியின் தொடர்புக்குப் பிறகு அவர் நிர்ணயித்துக் கொண்ட பல விதிகளில் அதுவும் ஒன்று. மனைவிகளிடம் இன்பம் துய்க்கும் நாளில்தான் அவர்களது சுகானந்த படுக்கை அறையினுள் அவரது பாதங்கள் படும். மற்றபடி அவரது தனியறைக்குத் தமது அன்னை ஜீஜாபாயைத் தவிர யாரும் பிரவேசிக்கக் கூடாது. சமயத்தில் அவருடைய குழந்தைகள் நுழைந்து விடுவதுண்டு. அதனை அவர் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை.

அறையில் அகிற்புகை மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

படுக்கைக்குச் செல்கிறபோது பணியாளர்கள் போட்டுச் சென்றது.

அதன் முற்றுகை இன்னமும் கமழ்ந்து கொண்டிருந்தது. அத்துடன் பூஜ்யாவின் நினைவுகளும் கமழுகின்றன...

அறிவார்ந்த அல்லது பரிசுத்தமான ஆத்மாக்களின் தொடர்புகள் என்றுமே நெஞ்சில் கமழ்ந்து கொண்டிருப்பவை என்பதை அந்த அகிற்புகை மணம் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

விடிவதற்கு ஐந்து நாழிகைகளுக்கு முன் அவரது தூக்கம் மனமிரங்கி ஏற்றது.

கிழக்கில் ரத்த சாயம் பூசுகிறபோது வழக்கமாக அவர் எழுந்து கொள்வது. இப்போதும் அந்த வழக்கத்தை மீறவில்லை.

காலைக்கடன்களை முடித்துக் கொண்டு மாளிகையின் கூடத்துக்கு வருகிறார்.

அப்படியொன்றும் அவர் பிரம்மாண்டமான ‘அரண்மனை’யில் வசிக்கவில்லை. வசிக்கத்தான் நேரம் ஏது?

எந்த நேரத்திலும் யுத்தம்...

எந்த நேரத்திலும் இந்து சாம்ராஜ்யக் கனவு...

எதிரிகளின் அரிப்புகள்...

மலைக்கு மலை...

கோட்டைக்குக் கோட்டை தாவுகிற ஆக்கிரமிப்பு வெறி...

பொருள் தட்டுப்பாடு நேருகிறபோது கொள்ளையடிக்கும் திட்டங்கள்...

அந்தக் கொள்ளையடிக்கிற ராஜதந்திரத் திட்டங்களை வகுக்கிற போது அவற்றின் தர்ம நியாயங்கள்...

யாரிடம் கொள்ளையடிக்கலாம், எந்த ஊரை அல்லது நகரைக் கொள்ளையடிக்கலாம் என்கிற அறநிலைகள்...

பூஜ்யாவிடம் சென்று கேட்கிற ஆலோசனை...

மொத்தத்தில், சிவாஜி மகாராஷ்டிர இனத்தின் ஒரு சுயராஜ்ய வெறிகொண்ட வீரமாத் தலைவரேயொழிய, அரசரோ, மன்னரோ அல்லவே? அந்தப் பக்திபூர்வமான சுயராஜ்ய வெறிதான் அவரை அரசநிலைக்கு அப்போதே ஆளாக்கி மரியாதை வழங்கியது!

தந்தை ஷஹாஜிபான்ஸ்லே ஒரு சுபேதார். பீஜப்பூர் சுல்தானுக்குக் கீழ்படிந்து நடக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர். பின்னாளில் கர்நாடக மாநிலத்துக்குப் பிரதிநிதியாகச் சென்று பதவி உயர்வு கண்டவர். அந்தப் பதவியும் சிவாஜியின் இந்தச் சுதந்திரப் புரட்சிப் பிரகடனத்துக்குப் பலியாகி இப்போது பீஜப்பூரில் சிறையிலடைக்காத சுதந்திரக் கைதியாகக் கட்டுப்பட்டு வாழ்ந்து வருகிறார்...

இந்த நான்காண்டு காலமாக தந்தைக்கு ஏதும் நிகழ்ந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தானே பீஜப்பூரை சிவாஜி விட்டு வைத்திருக்கிறார்...

ஆயிற்று நான்கு ஆண்டுகள்...

இப்போது பீஜப்பூர் சுல்தான் முகமது ஆதில்ஷாவுமில்லை. அவனுக்குப்பிறகு, அவனது மைந்தன் - இளைஞனான அடில் ஆதில்ஷா - பீஜப்பூர் சுல்தானாக அமர்ந்தாலும் அவனது அன்னை சுல்தானா பேகம் ஆதிக்கம் செய்து ஆட்சி புரியலானாள்.

ஒரு தந்தைக்காக இந்தப் பீஜப்பூர் சுல்தானையும் பீஜப்பூரையும் விட்டு வைக்க வேண்டியதாயிருக்கிறதே!

ஒரு சுயநலமே போல அவரை உறுத்துகிறது...

பேசாமல் தனது படையிலிருந்து சுதந்திர முழக்கம் செய்யலாம். அவர் அவரது இஸ்லாமிய ராஜ விசுவாசம். அவ்வாறு சேர செஞ்சோற்றுக்கடன் மறுக்கிறது.

பீஜப்பூரை மட்டும் சரணடையச் செய்துவிட்டால், தக்கணமே வீழ்ச்சிகண்டது போலத்தான்!

அடுத்து...

மகுடாபிஷேகம்...

அரண்மனை...

சக்கரவர்த்தி விருது...

ஆயினும்; பீஜப்பூர் சமஸ்தானம் வலிமை மிக்கது. வடக்கே ஷாஜஹான் எப்படியோ அப்படி இங்கே பீஜப்பூர்...

கோல்கொண்டா சமஸ்தானத்தைக் கைப்பற்றுவது அப்படி ஒன்றும் சிரமசாத்தியமானதல்ல; சிவாஜி கர்ஜனை புரிந்தால் அரண்மனையில் ஒரு சுவர் இடிந்து போகும்! அடிபணிய வைத்து விடலாம். அதன் சர்வவல்லமை பொருந்திய மகாமந்திரியான மீர்ஜும்லாவை வயப்படுத்த சிவாஜியால் அதிக நேரம் பிடிக்காது.

இப்போது மீர்ஜும்லா, ஆக்ராவுடன் - ஷாஜஹான் மகாராஜனுடன்- பேரம் பேசிவருவதாகவும் ஒரு செய்தி.

இனி தந்தை என்று பார்த்தால் இதுவரை பிடித்து வைத்திருக்கும் நாற்பது கோட்டைகளையும் கோட்டைவிட வேண்டியதுதான் என்று ஒரு சமயம் பூஜ்யா சொன்னது நினைவுக்கு வருகிறது...

கூடத்தில் தனித்து அமர்ந்திருந்த சிவாஜியை நோக்கி வந்து கொண்டிருந்தாள் அன்னை ஜீஜாபாய்.

அவளுடன், மகன் சம்பாஜி வந்து கொண்டிருந்தான்.

அன்னையைக் கண்டதும் எழுந்து காலைத் தொட்டுப் பணிவைத் தெரிவிக்கிறார் சிவாஜி.

‘‘பவானித் தாயை வணங்கியாய் விட்டதா மகனே!’’

‘‘காலையில் முடிந்ததம்மா!’’

‘‘கண்கள் ஏன் சிவந்திருக்கின்றன!’’

‘‘இரவு சரியாகத் தூக்கமில்லை.’’

இருவரும் எதிரெதிரே இருந்த ஆசனங்களில் அமருகிறார்கள்...

அன்னையின் மடியில், மகன் சம்பாஜி அமர்ந்து கொள்கிறான்.

‘‘ஷாஜஹான் மகாராஜன் படைதிரட்டி அனுப்பி இருக்கிறானாமே! யார் மேல் யுத்தம் புரிய?’’

‘‘அதுதான் புரியவில்லையம்மா! பீஜப்பூர் தலைவலிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருந்தால் இந்த ஷாஜஹான் படையெடுப்பையே என்னால் முறியடிக்க முடியும். அதற்கு முட்டுக்கட்டையாக உங்கள் கணவர் இருக்கிறார்.’’

‘‘அது என்னடா மகனே, எனது கணவர்!’’

‘‘எனது தந்தை என்று சொல்லிக் கொள்ள அவர் என்ன நியாயங்களைக் கற்பித்து இருக்கிறார்?’’

‘‘இஸ்லாமியர்களுக்கு அடிமையாக இருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறாயா?’’

‘‘அது, ராஜவிசுவாசம். மறுக்கவில்லை. என்னிடம் எத்தனை இஸ்லாமிய வீரர்களும் அதிகாரிகளும் வீர விசுவாசிகளாய் இல்லையா என்ன! நான் அதைக் குறிப்பிடவில்லை. எனது இந்த சுயராஜ்ய புரட்சி வேள்வியால் அவரது உயிருக்கு ஆபத்து வந்தவிடக் கூடாதே என்பது ஒருபுறமானாலும், அவரால் நான் என்ன பயன் கண்டேன்? நீங்கள்தான் என்ன பயன் கண்டீர்கள்? சிறுவயதிலேயே நம்மை அனாதை மாதிரி பூனா நகரிலேயே விட்டுவிட்டு அவர் பீஜப்பூரின் அடிமையாகிச் சுற்றினார். பின்னால் கண்ட இடத்தில் கண்ட மனைவிகள். ஆங்காங்கே அவர்களும் இப்படியே அனாதைக் கோலங்கள்! எனது இந்தப் புகழ்நிலைக்கு, புரட்சி நிலைக்குக் காரணம் கருவில் நீங்களும், சிறு பிராயத்தில் எனது குருநாதர் தாதாஜி கண்டதேவரும் வீரமும் ஞானமும் அளிக்கவில்லையென்றால், நானும் இப்போது ஓர் அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பேன்.

தாயின் அரவணைப்பு என்னை ஆளாக்கியது. அன்னை பவானியின் ஆசீர்வாதம் என்னை கீர்த்தி மிக்கவனாக்கியது.''

அருமை மகனுடைய இந்த வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியது தானே?

சில கணங்கள் ஜீஜாபாயின் நெஞ்சு, மௌனவேள்வி நடத்துகிறது...

மடியில் அமர்ந்திருந்த சம்பாஜி எழுந்து சென்று சன்னல் அருகே நின்று வேடிக்கை பார்க்கிறான்...

மாளிகையைச் சுற்றிலும் அமைந்திருந்த தோட்டத்தில் பலவண்ணப் பறவைகள் ஒன்றாகக் கூத்தடிக்கின்றன. அவை, தம்மைப் பல வண்ணங்களில் இனம் பிரித்துக் காட்டிக் கொண்டாலும், பறவைகள் என்கிற மகாதத்துவமாக - ஒரே இனமாக - உறவாடுகின்றன...

இந்த மனிதர்கள் மட்டும் தங்களை வேறு பிரித்துக் கொண்டு அடித்துக் கொள்ளுகிறார்களே என்று அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இனமும் மதமும் மட்டும் இல்லை என்றால் மனிதர்கள் என்கிற மகாதத்துவம் இந்த உலகையே ஒற்றுமைப்படுத்தி அமைதி நிலவச் செய்யுமே என்கிற பேருண்மை புரியாத வயது அவனுக்கு...

வயதானவர்களுக்கே இது புரியவில்லையே என்பது போல ஒரு ஒற்றைக் குயில் குரல்விடுத்துப் பாடுகிறது.

''சிவா! தந்தையாரை நமது பாசறைக்கு அழைக்க நான் முயல்வேன்!''

''முடியாது மாதாஜி!''

''அப்படி என்றால் உனது போர்ப் பிரகடனத்துக்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன்! தந்தைக்காக உனது சுயராஜ்யக் கனவைக் கலைத்துக் கொள்ளாதே!''

‘‘அதுசரி! இப்போது ஔரங்கசீப் தலைமைதாங்க, ஆக்ரா படைகளே வந்து கொண்டிருக்கின்றனவே; அதை எப்படிச் சமாளிப்பது?’’

‘‘யாரை வீழ்த்த இந்தப் படையெடுப்பு சிவா? ஒன்று, மாவீரன் சிவாஜியை வீழ்த்த இருக்க வேண்டும். இல்லையென்றால் பீஜப்பூரைத் துகளாக்க இந்தப் படையெடுப்பு இருக்க வேண்டும்.’’

‘‘இருவரையுமே வீழத்த இந்தப் படையெடுப்பு இருக்கலாம் அல்லவா? ஷாஜஹான் இளையகுமாரன் ஔரங்கசீப் வெறிகொண்டு வருவானேயானால், நமது கோட்டைகளை எவ்வாறு பாதுகாக்க முடியும்?’’

‘‘ஆயுதசாலையில் ஆயுதங்களை உற்பத்தி செய்கிற தொழிலாளர்களிடையே எந்தப் பிரச்னையும் இல்லையல்லவா? முன்பு ஏதோ பிரச்னை தலை தூக்கியதே!

‘‘ஆயுத சாலையில் தொழிலாளர் தலைவன் லஞ்சத்தின் காரணமாக அந்தப் பிரச்னையை எழுப்பினான். தொழிலாளர்கள் வேலைசெய்த அதிகப்படியான கூலியைத் தனது வரவில் சேர்த்துக் கொண்டான். அதனை ஒருவாறு சமாளித்தாய்விட்டது.’’

‘‘தெரியும்; தீர்த்து வைத்தவள் பூஜ்யா.’’

சிவாஜி தலைகுனிந்து கொள்கிறார்...

இத்தருணத்தில் பூஜ்யாதேவியின் பேச்சு வேண்டாம் என்று ஜீஜாபாயும், நடக்கப்போவது பற்றிப் பேசினாள்.

‘‘மகனே! நமக்குப் படைகள் தேவை. செல்வம் தேவை.’’

‘‘ஜுனார், ஆமத் நகரில் புகுந்துவிட்டால் நிறைய செல்வங்கள்!’’

‘‘கொள்ளையடிக்கப் போகிறாயா? ஏற்கெனவே இதைச் செய்துதான் கொள்ளைக்காரன் என்ற பட்டதைச் சுமந்து கொண்டிருக்கிறாய்! மீண்டுமா?’’

''தவறில்லை, தாயே! அளவுக்கு மீறிச் செல்வம் சேர்ப்பவர்கள் இந்தத் தேசத்துக்குக் கேடு விளைப்பவர்கள் என்கிறது அர்த்த சாஸ்திரம்.''

''நீ சாணக்கியனை நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறாய்!''

''இப்போதுதான் அறிந்துகொண்டு வருகிறேன்.''

''சபாஷ்!''

சிவாஜி நிமிர்ந்து கவனிக்கிறார்.

''உனக்கல்ல, உனது பெண் மந்திரி பூஜ்யாவுக்கு.''

மீண்டும் பூஜ்யாதேவியின் பேச்சு...

அப்போதும் பெண் மந்திரி என்றுதான் அன்னையார் கூறுகிறார்கள்.

'காதலி' என்று கூறவில்லை.

அம்மா எதையும் அளந்து பேசுவார்கள்.

அநேகமாக ஒரு வாரத்தில் ஷாஜஹான் மகாராஜனுடைய படைகள் பூனாவை நெருங்கிவிடலாம்.

''நெருங்கிவிடலாம்.''

''கொள்ளையடிப்புத் திருவிழா எப்போது?''

பதில் சொல்ல முடியாது திகைக்கிறார் சிவாஜி.

''இதையும் உனது பெண் மந்திரியைக் கேட்க வேண்டும் என்று சொல்! ஏன்? இங்கிருக்கும் உனது ஆண் மந்திரிகளான மரோ பந்த், நீலகண்ட், ராமசந்திர நீலகண்ட் ஆகியவரிடம் ஆலோசனை செய்யக் கூடாதா? அதற்கு மேலும் தலைமை நீதிபதியான நிராஜிரவிஜியைக் கலந்தாலோசிக்கக் கூடாதா?''

''நிச்சயம் கலந்தாலோசிக்கிறேன் அம்மா!''

ஏதோ தாயின் பேச்சுக்கு உடன்பட்டது போலிருந்தது அவனது குரல்.

''எனக்காக ஒப்புக் கொண்டாயா சிவா?''

''என்னம்மா அது! அதிகாரிகளைக் கலந்து ஆலோசிப்பது அரச தருமம். எனக்கு மகுடம் என்கிற ஒன்று இல்லையேயொழிய ஒரு அரசாங்கத்துக்குரிய எல்லா ரதகஜதுரகபதாதிகளும் உண்டு. சொல்லிக் கொள்ள ஒரு சமஸ்தானம் என்ற ஒன்றுதான் எனக்கில்லை.''

''ராஜ்யத்துக்கு என்ன பெயர் வைக்கப் போகிறாய்?''

''யோசிக்க வேண்டும்.''

''சிவாஜி ராஜ்யம் என்றால்?''

''பெயருடன் வைப்பது சுய நலம். எனது இந்த வீர முழக்கம் பொது நலம்.''

''ஓ... நல்லது; சபையை எப்போது கூட்டுகிறாய்? கூட்டுவதாக உத்தேசமிருக்கிறதா?''

''இன்றிரவே கூட்டலாம்.''

''அது என்ன கூட்டலாம்?''

''கூட்ட வேண்டியவர் நீங்கள் என்றுதான் சொன்னேன் மாதாஜி!''

''சிவா! நான் ஓர் ஆணையிடலாமா?''

''சிரமேல் தாங்குகிறவன் சிவாஜி!''

''இரவு மந்திராலோசனைக்கு உனது சம்பளம் வாங்காத பெண் மந்திரி பூஜ்யாதேவியும் வரவேண்டும். இது கண்டிப்பான உத்தரவு.''

ஜீஜாபாய் எழுந்து கொண்டாள்.

அவள் அதற்கு மேலும் தங்கவில்லை.

சிவாஜிக்கு, புரியாத மயக்கம்.

ஏனிந்த ஆணை?

நன்மைக்கா? தீமைக்கா?

அவர், மாளிகையை விட்டு வெளியேறுகிறார்.

**வெ**ண்புரவி அவரைச் சுமந்து பறக்கிறது...

அதன் கால்களுக்கு ரொம்பவும் பழக்கப்பட்ட இடம், பூஜ்யாதேவியின் குடில்.

காலைத் தட்டி மார்க்கம் சொல்லவில்லையென்றால், அது பூஜ்யா குடிலுக்குத்தான் என்பது அந்தப் புரவிக்கு அத்துபடி!

வெண்புரவி, பூஜ்யத்துள் வந்து நிற்கிறது. அந்தக் குடிலே வட்ட வடிவமானதுதானே!

வாசற்படியில் அலங்கார பூஷிதையாக நிற்கிறாள் பூஜ்யாதேவி. அவளது முகம், சிந்தனைத் தெளிவுடன் காணப்படுகிறது.

புவியை விட்டிறங்கி அருகே வந்து கவனிக்கிறார் சிவாஜி.

''என்ன பூஜ்யா! ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை பிரபோ! நேற்று சுடுபட்ட பெண்ணைப் புதைக்கச் சொன்னோம் அல்லவா?''

''ஆமாம்.''

''காலையில் சென்று பார்த்தால், குழியைத் தோண்டிப் பிணத்தை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்...''

''ஏன்?''

''அதுதான் புரியவில்லை.''

''பிணத்தில் என்ன இருந்தது?''

''குண்டுகள்.''

''புரியவில்லை.''

''புரிந்துதான், சிப்பாய்களைப் புதைக்கும் இடத்தை நினைவுவைத்துக் கொள்ளச் சொன்னேன். பிறகு கவனிப்போம். உள்ளே வாருங்கள்.''

இருவரும் குடிலுள் நுழைந்தனர்.

''பூஜ்யா! அம்மா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள்.''

திரும்பிப் பார்க்கிறாள்...

நயனங்கள் என்ன என்று கேட்கின்றன...

''ஷாஜஹான் படையெடுப்பைப்பற்றி இரவு மந்திராலோசனை. நீ அவசியம் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்பது அம்மாவின் உத்தரவு.''

''அது முடியாத காரியம்.''

கொஞ்சமும் யோசியாது பளிச்சென்று விடை பகர்ந்தாள் பூஜ்யா.

-----

# 7

அடிசிலாக்குவோன் மறைவான இடத்தில் பலவகையான அடிசிலையும் மிக்க சுவையுடையனவாக ஆக்குதல் வேண்டும். அரசன், அவ்வுணவுகளை, தான் உண்பதற்கு முன்னர் அங்கிருக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் பலியாக (சோதித்துப் பலியாக்குதல்) இட்டு, பின்னர் உண்ணக் கடவன்.

மருத்துவன், மருந்துச் சாலையினின்று, தான் உண்டு, குற்றமின்மை அறிந்த மருந்துகளைக் கொணர்ந்து, அரசன் முன்னும் உண்டு காட்டிய பின்னரே அரசனுக்குக் கொடுக்க வேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 21).

**வி**ரிக்கப்பட்டிருந்த திண்டு திமாசுகளைக் காட்டி அமரலாமே என்பது போலச் சமிக்ஞை செய்கிறாள் பூஜ்யாதேவி!

எடுத்த எடுப்பில் வரமுடியாது என்று கூறிவிட்டாளே...

''அமருங்கள் பிரபோ! உங்கள் பூஜ்யா எடுக்கும் எந்த முடிவும் குரூரமானதாக இருக்க நியாயமில்லை. நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே... உங்கள் இளமைக் காலத்து குருபண்டிட் தாதாஜி கண்டதேவர்பற்றி... அவரைப் போலவே நானும் உங்கள் வளர்ச்சியில் அக்கறையுடையவள்; அமருங்கள்...''

சிவாஜி அமரவில்லை.

அவரது பாதங்கள் அந்தக் குடிலை அளப்பன போல உலவுகின்றன...

கண்கள் சிவந்து காணப்படுகின்றன...

''இதற்குள் ஒரு குட்டிக் கோபமா? இந்த ஆவணி மாதத்தில் பிறந்தவர்களுக்கே ஓர் அவசர முடிவு உண்டு.''

அவர் சற்றே நின்று திரும்பிப் பார்க்கிறார்.

''பூஜ்யா! அம்மா ஆணையை என்னால் மீற முடியவில்லை.''

''நிச்சயம் மீறமுடியாது; மீறக் கூடாது. அரிய பெரிய தாய். ஆனால் நான் கட்டுப்பட வேண்டும் என்கிற அவசியமில்லையே?''

''நீ, எனது ஆணைக்குட்பட்டவள்.''

குரலில் கொஞ்சம் கடூரம்...

''நான் உங்கள் அடிமையா? அடிமை என்று சொல்லுங்கள். விலங்கிட்டுக் கொண்டு செல்லுங்கள். அப்போதும் இந்த பூஜ்யா தன்னிச்சையாக வரமாட்டாள்.''

''பூஜ்யா!''

- கர்ஜனை;

''கர்ஜனைக்குக் காரணம்?''

''அதிகமாகப் பேசுகிறாய்?''

''அன்னையை அவமதித்து விட்டேனென்றா?''

''அடிமை என்கிற வார்த்தை வெளிவரலாமா?''

''அப்படியென்றால் என்னைச் சுதந்திரமாக விடுங்கள்.''

''ஏன் மறுக்க வேண்டும்?''

''எனது அறிவு, உத்தரவு தர மறுக்கிறது!''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்?''

''நாளை முதல் நமது காதல் முறிபட வேண்டுமென்றால், இன்றிரவு வருகிறேன். பூஜ்யாவுக்குச் சிறு அவமானம் நேர்ந்தாலும், அவள் மறுகணம் உயிருடன் இருக்கமாட்டாள். தமிழ் மகள், கவரிமானைப் போன்றவள்.''

''போதும் உன் தமிழ்ப் பிரசாரம்! போகட்டும்! அன்னையா அவமானப்படுத்துவார்கள்?''

''இருவரைப் பழித்தால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. ஒன்று, தமிழ்; மற்றொன்று, எனது காதலர். போகட்டும்; அவமானம் எந்த ரூபத்திலும் வரலாம்.''

''வரும் என்று நினைக்கிறாயா?''

''நிச்சயம் வரும்.''

''அதையும் நான் பார்த்துக் கொள்வேன்.''

''வேண்டாத வீம்பு. என்னால் உங்கள் சுயராஜ்யக் கனவு கலைந்துவிடக் கூடாது. 'எண்ணித் துணிக கருமம்; என்கிறான் தமிழ் தந்த தருமநீதி சாணக்கியன்' - அதாவது வள்ளுவன் என்பான்!-''

''நீ என் தாயைச் சந்தேகிக்கிறாய்!''

''நான் யாரையும் சந்தேகிக்கவில்லை. எனது அருமைப் பூனை இறந்துவிட்டது முதல், இந்த ராஜ்யத்தையே சந்தேகிக்கிறேன். நேற்று வந்த வேவுகாரி, என்னைக் கொல்ல வந்தவள்; உங்களையல்ல. அவள் வந்து, சமையற்கட்டில் புகுந்து, உணவு வகைகளுக்கு நஞ்சிட்டுத் திரும்புகிறபோது, சுடுபட்டிருக்கிறாள். அதுவரை உங்கள் சிப்பாய்கள் கண்டும் காணாமல் இருந்தார்களா? அல்லது மைத்துனர் பாலாஜியும் இதற்கு உடன்பட்டிருக்கிறாரா? ஏனென்றால், வந்தவள், ஆணுடையில் பாலாஜியைப் பின்பற்றி வந்ததால் இந்தச் சந்தேகம். என்னைப் பொறுத்தவரையில் பாலாஜியை நம்புகிறேன். நான் மட்டும் ஐயப்பட்டு எனது பூனைக்கு உணவு வகைகளை சாணக்கியத் தந்திரமாய் ஒட்டு மொத்தமாக்கி இட்டிராவிட்டால், நாமிருவருமே

அழிந்துபட்டிருப்போம். தன்வினை தன்னைச்சுடும் என்பது போல, என்னைத் தீர்த்துக் கட்ட நினைத்த இந்த ராஜ்யம், என்னுடன் உங்களையும் இழந்திருக்கும்! அங்கே கும்பாபிஷேகம்; இங்கே நஞ்சாபிஷேகம். வேடிக்கையாக இல்லை?''

உதடுகளைக் கடித்துக் கொண்டு, இப்போது பாதங்களின் ஓசைபட நடக்கிறார் மாவீர சிவாஜி. அது ஒரு சிங்கத்தின் நடைமாதிரி மதர்த்துக் காணப்படுகிறது.

''ஒன்று நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். நான் யார் மீதும் குற்றம் சாட்டவில்லை. ராஜ்யம் என்று பொதுவாகத்தான் சொன்னேன். நானிருப்பது பலருக்குப் பிடிக்கவில்லை என்பது நன்கு புரிகிறது.''

''பூஜ்யா...!''

கர்ஜனையேயானாலும், கர்ஜனை போலில்லை. கண்களில் நீர்முத்துக்கள்.

''இந்த ராஜ்யத்தை நான் எவ்வளவு தூரம் காதலிக்கிறேனோ... அவ்வளவு தூரம் உன்னையும் காதலிக்கிறேன். உன்னை இழந்து விட்டால் இந்த சாம்ராஜ்யக் கனவு பொடிந்துபடுமோ என்கிற வேதனையிருக்கிறது. நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ சூது உருவாகிறது என்று நினைக்கிறேன். ஒன்று நிச்சயம். எனது அன்னை இதில் சம்பந்தப்படமாட்டார்கள். சத்தியமாகச் சம்பந்தப்பட மாட்டார்கள்.''

''நான் மறுக்கவில்லையே... இன்றைய மந்திராலோசனைக்கு என்னையும் குறிப்பாக வரச்சொன்னதால் இவ்வளவு விளக்கம்.''

ஒரு கணம் சிந்தனை...

''சரி, ஷாஜஹான் படையெடுப்பைப் பற்றி என்னதான் முடிவு?''

''இரவு மந்திராலோசனை சொல்லும்.''

''நீ?''

''நாளை நானும் சொல்வேன்.''

''இருவேறு முடிவாக இருந்தால்?''

''தேர்ந்தெடுத்துச் செயல்படுங்கள்.''

''இதில் குழப்பந்தான் மிஞ்சும் பூஜ்யா!''

''ஒன்றும் மிஞ்சாது. மந்தரி சபை எடுக்கும் முடிவு செயல் பட்டால், குழப்பத்தக்குக் காரணமே இல்லை. மந்திரி சபையே குழப்பமானால்தான் வம்பு. மற்றபடி, எனது தீர்மானத்தை நீங்கள் ஏற்காவிட்டால் நான், ஒன்றும் குறைப்பட்டுக் கொள்ளமாட்டேன்.''

''உனது ஆலோசனை எனது நெஞ்சின் தீர்க்கதரிசனமாயிற்றே!''

''அப்போது அதனைச் செயல்படுத்துங்கள். மந்திரி சபை குழப்பத்தைச் சமாளிக்கக்கூடிய தைரியம் எதுவென்று கண்டு பிடியுங்கள்.''

''நீ வந்துவிட்டால் இந்தக் குழப்பமே இல்லையல்லவா?''

''மீண்டும் சுற்றி வளைத்து...''

''பூஜ்யா!''

''நான் வந்தால்தான் முடிவு காண முடியாத குழப்பம் வந்துவிடும். தயவுசெய்து மந்திராலோசனையை முடித்துக் கொண்டு நாளைய காலையில் என்னைச் சந்தியுங்கள்.''

சிவாஜி புறப்பட்டார். அவரால் பூஜ்யாவைச் சமனப்படுத்த முடியவில்லை.

''கொஞ்சம் நில்லுங்கள்.''

அவள், உள்ளே சென்று நேற்று சுடுபட்ட வேவுக்காரியிட மிருந்து பறித்த சிவலாஞ்சனையை எடுத்து வருகிறாள்...

''இது உங்கள் கையிலிருக்கட்டும். இதன் மூலம் ஒரு தெளிவு காண முடியுமா என்று இரவு நடக்கும் ஆலோசனையில் கவனியுங்கள்...''

''எப்படி?''

''அதை வேண்டுமானால் சொல்லித் தருகிறேன். ஆலோசனை நடக்கிறபோது, இதை அடிக்கடி மேலே போட்டுப் பிடியுங்கள். இந்த விளையாட்டால் ஒரு விபரீதம் காணும். அதைக் கொண்டு கண்டுபிடிக்கலாம். வருகிறவர்களிடம் இப்படியான லாஞ்சனை இருக்கிறதா என்று சோதியுங்கள்...''

புரிந்துகொள்ளவே முடியவில்லை.

இவள் நிஜமாகவே மானுடப் பிறவிதானா?

புறப்படுகிறார்.

''பிரபோ! இனி எந்த நேரத்திலும் [1]வைசுவதேவ நியாயத்தைப் பின்பற்ற மறந்துவிடாதீர்கள்.''

''வைசுவதேவயம்? அப்படி என்றால்?''

''உணவு, உடை முதலியவற்றில் விஷம் கலந்து நடக்கும் அநியாயங்கள். விஷத்தின் தன்மையைப் பல வழிகளில் அறியலாம். நாகத்தைக் கொல்லக்கூடிய சக்தி, [2]மயில், கீரி, வெண்புள்ளியுள்ள பிருஷதோத்சர்க்கம் என்னும் மிருகம், காட்டுப் பூனை முதலியவற்றுக்கு உண்டு. கிளி, மைனா, சூரிய நிறமுள்ள பிருங்கராச பறவை - இவை - நஞ்சு கலந்த பொருட்களைக் கண்டாலே கத்தும்! அன்றில் பறவை, கலக்கம் அடையும். குயில், நாகத்தைக் கண்டாலே இறந்துபடும்! சகோதரப் பறவையின் கண்கள் நிறம் மாறும். இது, அரசர்கள் கையாளும் பழக்கமென்று பூஜ்யாதேவரான சாணக்கியர் சொல்லுகிறார்.''

---

1. 'கௌடலீயம்' - அத்தியாயம் - 21.
2. *வண்ணப் பூமாலை சாந்தம்*
   *வாலணி கலன்கள் ஆடை*
   *கண்முகத் துறுத்தித் தூய்மை*
   *கண்டலாற் கொள்ள வேண்டா*
   *அண்ணலம் புள்ளோ டெல்லா*
   *ஆயிரம் பேடைச் சேவல்*
   *உண்ணு நீர் அமிழ்தாம் காக்க*
   *யூகமோ டாய்க என்றான்.*

(சீவக சிந்தாமணி - 1893)

இவளைப் பெற நாம் என்ன பாக்கியம் செய்தோம் என்று சிந்திக்கிறார் சிவாஜி.

ஓ... இவள் மானுடப் பிறவியல்ல...

அபூர்வ பிறவி...

''பூஜ்யா...''

''மீண்டும் என்னை இரவு ஆலோசனை சபைக்கு அழைக்கப் பீடிகை போடுகிறீர்கள்... போய் வாருங்கள் பிரபோ! பூஜ்யா உங்களைக் காத்து, உங்கள் கனவை நிறைவேற்றத் தவமிருக்கிறாள். நீங்கள் பூஜ்யாவைக் காக்க முயலுங்கள். அவ்வளவுதான் சொல்ல முடியும்.''

பூஜ்யாவைக் காக்க முயலுவதா?

பூனை ஞாபகம் வருகிறது...

அவர் பவானித் தாயை நெஞ்சில் வழிபட்டுக்கொண்டு விடை பெறுகிறார்.

வெண்புரவி ஏறி வேகமாகச் செல்லும் தனது வீரமாக் காதலரை விழிகளில் வைத்துப் பூஜை செய்கிறாள். அங்கே இரண்டு ஆனந்த முத்துக்கள், அர்ச்சனைப் பூக்களாக உதிர்கின்றன.

இரவு, கறுப்பு மலராய்ப் பூத்து, இதழ் விரித்து, நாழிகைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன...

மாளிகையின் மேன்மாடத்தில் விளக்குகள் ஒளியுமிழ்ந்து அரசியல் பிரகாசம் அளித்துக் கொண்டிருக்கின்றன.

அன்னை ஜீஜாபாய் நடுநாயகமாக வீற்றிருக்க, பக்கத்தில் மகாராஷ்டிர வீர திலகம் சிவாஜி அமர்ந்திருக்க, சுற்றிலும்...

பல துறைகளில் பணியாற்றும் பல்லாயிர அதிகாரிகளுள், அன்றைய மந்திராலோசனைக்குத் தேவையானவர்கள் மட்டும் இருக்கைகளில் காணப்படுகிறார்கள்.

[1]பிரதானி (பேஷ்வா)யான மோரோபந்தும், ஆமாத்தியரான (முஜுூம்தார்) நரோ நீலகண்ட்டும், சேனாபதியான (சர்லஷ்கார்) ஹம்பிராவ் மோதியும், சச்சிவாவான (சர்னிஸ்) அன்னாஜிபந்தும், நியாயதீஷா (நீதிபதி) நிராஜிபந்தும், சிட்னிஸ் பாலபிரபுவும், மற்றும் தமது அந்தரங்கத்துக்குரிய அதிகாரிகளான கிருஷ்ணாஜி பாஸ்கரும், பாலாஜிபாஜியும், ராமசந்திர பந்தும், நண்பன் பாலாஜியும், சகோதரன் வெங்கோஜியும், ரகுநாதபந்தும் மற்றும் சிலரும் அமர்ந்து காணப்படுகிறார்கள்.

ஒரு சில தீர்க்கமான அரசியல் தீர்மானங்களுக்கு மட்டுமல்லாது, ஒரு சுயமான சாம்ராஜ்யக் கனவின் எதிரொலிகளாக அந்த அதிகாரிகள் காணப்பட்டனர்.

அன்னை ஜீஜாபாய், அவர்களை அன்புடன் வரவேற்கிறாள்.

ஆயினும், பூஜ்யாதேவி வராதது மிகப் பெரிய குறையாக மட்டுமல்ல, மிகப் பெரிய ஏமாற்றமாகவும், கௌரவக் குறைவாகவு மிருந்தது.

பூஜ்யாதேவி வருகிற செய்தியோ, அழைக்கப்பட்ட செய்தியோ எவருக்குமே தெரியாது.

அதன் அரிப்பு நெஞ்சைக் குத்திப் புண்ணாக்கிக் கொண்டிருந்தது.

அன்னையாரின் மௌனம், அவரது சிந்தனையைக் காட்டிக் கொடுக்கிறது.

எதிரே சிறப்பான ஓர் ஆசனம் காலியாக இருப்பதைக் கவனிக்கிறாள்...

அதன் உள் மறைவு, சிவாஜிக்குப் புரிகிறது. பூஜ்யா வரமாட்டாள் என்று தெரிந்தும், எதற்காக இந்த ஆசனத்தைப் போட்டு மற்றவர் கவனத்தைக் கவரவேண்டும்?

1. சிவாஜி வழக்கமான பாரசீகச் சொற்களைச் சமஸ்கிருதப்படுத்தினாலும், அவை வழக்கில் நிலைக்கவில்லை.

காலையில் பூஜ்யாதேவியின் குடிலில் இருந்து திரும்பியதும் அம்மா கேட்ட கேள்வி -

''பூஜ்யா வருகிறாளா?''

அந்தக் கேள்வியில் தொனித்த அதிகாரம்?

அவளை அதிகாரம் செய்ய நாம் யார் என்பது அம்மாவுக்குப் புரியவில்லையே என்று நினைக்கிறபோது, சிவாஜிக்கு உள்ளூற வருத்தம்.

அவள் வரமாட்டாள், வரச் சம்மதிக்கவில்லை என்று சொன்னதும் அம்மாவின் கண்கள் சிவந்த விதம்...

எத்தனை பெரிய வாதப் பிரதிவாதங்கள்.

ஒரு சொற்போரே நிகழ்ந்துவிட்டது.

சிவாஜி கூறிய சமாதானம் அன்னையின் வாயை அடைத்தது...

''அவள் என்ன உங்கள் மருமகளா? அதிகாரத்துக்கு உட்பட?''

எத்தனை ஈட்டி போன்ற சமாதானம்?

ஏனையவர்கள் அந்தக் காலியான ஆசனத்தை நோக்கு கிறார்கள்.

இன்னும் யாரோ ஓரிருவர் வர வேண்டியவர்களிருக்கிறார்கள்...

ஆசனம் இருக்குமிடம்...

ஜீஜாபாய்க்கு நேர் எதிர்...

ஆசனமே மற்ற ஆசனங்களிலிருந்தும் சற்றே வித்தியாசப் பட்டிருக்கிறது...

யாரோ குறிப்பிடத்தக்க புதியவராக இருக்க வேண்டும்...

''ராஜமாதா! இன்னும் யாரேனும் வரவேண்டியவர்கள் பாக்கி இருக்கிறார்களா?''

தலைமை நீதிபதியான - நியாயாதீஷாவான - நிராஜிபந்த். இவர், நிஜாம்ஷாஹி பிராமண வகுப்பைச் சார்ந்தவர்.

ஜீஜாபாய் முகத்தில் ஒரு நிறைவை வரவழைத்துக் கொண்டு முறுவலிக்கிறார்.

''நிராஜிபந்த்! உங்கள் நீதிக்கும் மேற்பட்ட ஒரு நீதியை நான் எதிர்பார்த்தேன். இன்னும் காணோம். பாதியிலும் வரலாம், வராமலும் இருக்கலாம்.''

''யார் ராஜமாதா?''

- ராமசந்திரபந்த் வினவுகிறார்.

''எனது அந்தரங்க விருந்தாளி! நல்லது... நாம் கூட்டத்தைத் தொடங்குவோம். இப்போது ஆக்ராவிலிருந்து ஷாஜஹான் மகாராஜன் தனது மகன் ஔரங்கசீப்பின் தலைமையில் படை கொடுத்து அனுப்பியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தப் படையெடுப்பு எது பற்றியது என்பது புரியவில்லை. சிவாஜி என்கிற தனி மனிதன், ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்குகிற அளவுக்குப் பல கோட்டைகளின் தலைவனாகவும், பல அதிகாரிகளுக்கு முடிதரியா சக்கரவர்த்தியாகவும் இருந்து வருகிற நிலையை மாற்றியமைக்க இப்படையெடுப்பா? அல்லது பீஜப்பூர் ராஜ்யத்தை அடக்க இந்தப் படையெடுப்பா என்பதுதான் புரியவில்லை. இதனை ஆராய்ந்து நாம் முடிவெடுக்க வேண்டும் என்பதற்காக அவசரமாகக் கூட்டப்பட்டதே இக் கூட்டம்.''

அன்னை ஜீஜாபாய் விளக்கியது, அனைவரும் அறிந்ததே யானாலும் முறைமை அது.

அப்போது பூஜ்யாதேவி கொடுத்து அனுப்பிய சிவலாஞ்சனையை எடுத்துக் கவனிக்கிறார் சிவாஜி...

அவள் சொல்லியனுப்பியது நினைவில் வருகிறது.

அதனைக் கையிலெடுத்து மேலே சுண்டினார்...

சிவலாஞ்சனை மேலே செல்கிறது...

இத்தருணத்தில் தனது மகனின் அந்தச் செய்கை அன்னைக்கும் புரிபடவில்லை. வெறுக்கவும் செய்தாள்.

மேலிருந்து கீழே இறங்கிய அந்தச் சிவலாஞ்சனையைப் பற்றிய சிவாஜி, பக்கவாட்டில் அமர்ந்திருந்த பாஜிபந்த் என்பவரை நோக்குகிறார்.

அவரது விழிகள் காரணமில்லாது பிதுங்குகின்றன...

''மாதாஜி! எல்லாரும் எனது லாஞ்சனையை அணிந்து வந்திருக்கிற போது, நமது பாஜிபந்த் மட்டும் அணியாமல் வந்திருப்பது சபையை அவமதிப்பதாகும்... நீங்களே அவரிடம் இதனைக் கொடுத்துவிடுங்கள்!''

சிவாஜி இவ்வாறு கூறியதும், அன்னை ஜீஜாபாயே பல கணங்கள் அதிர்ச்சி கண்டாள்.

-----

# 8

மந்திராலோசனை நடக்குங்கால் கிளி, நாகணவாய்ப்புள் (மைனா), நாய் கூட நுழையா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். இவற்றால் ரகசியங்கள் வெளியாகி இருக்கின்றன என்பது தெளிவு.

அமைச்சரவையில், அமைச்சர் பன்னிருவர் இருக்க வேண்டும் என்று மானவர் என்பாரும், பதினாறு பெயர்கள் வேண்டும் என்று பார்கற் பத்தியரும், இருபதின்மர் என்று ஔசனரும் கூறுவர். திறமைக்குத் தக்கவாறு எத்தனைபேர் வேண்டு மானாலும் இருக்கலாம் என்கிறார் கௌடலீயர்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 15).

**சி**வாஜிக்குச் சில உண்மைகள் புரிந்தும் புரியாமலுமாக நெஞ்சுள் விரிகின்றன.

பாஜிபந்தின் முகம் திடுமென்று வெளிறிக் காணப்படுவதைக் கவனிக்கிறார். ஆயினும், நடக்கவிருக்கும் மந்திராலோசனை குழம்பக் கூடாது என்பதால், ‘‘மாதாஜி! தொடர்ந்து நடக்க வேண்டியதைக் கவனியுங்கள். நமது பாஜிபந்த் மறந்து வந்துவிட்டார். கூட்டம் முடிந்ததும் அதனைத் திரும்பப் பெற்று என்னிடம் கொடுத்து

விடுங்கள். ஒரு மரியாதைப் பண்பாட்டிற்காகத்தான்! லாஞ்சனை யில்லாமல் கூட்டத்தில் கலந்து கொள்வது கூட்டத்தை அவமதிப்பது போல!'' என்று மீண்டும் கூறி நிறுத்தினார்.

சிவலாஞ்சனையை அணிந்து கொண்ட பாஜிபந்த் அதனைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறார். திரும்பத் தந்துவிட்டால் அடுத்த லாஞ்சனைக்கு அவர் எங்கு செல்வார்?

அன்னையாரின் அமைதியைக் கலைக்கிற மாதிரி மீண்டும் சிவாஜியே தொண்டையைச் செருமிக் கொள்கிறார். பிறகு அவரது நாவசைகிறது:

''மகாராஷ்டிர சாம்ராஜ்யம் அமைப்பதில் என்னுடன் தோளொடு தோள் கொடுக்கும் பிரதானிகளே! அதிகாரிகளே! உங்களை அதிகமாகச் சிந்திக்க வைத்துவிட்டார்கள் எனது அன்னையாரும் உங்கள் ராஜமாதாவும்! இருக்கிற நெருக்கடி, அத்தன்மையதாக இருக்கிறது. நமது சுயராஜ்ய வேள்விக்கு ஒரு மகத்தான சோதனை எதிர் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதில் உங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லலாம். நடவடிக்கைகளை எடுத்து வைக்கலாம்.''

''யுத்தம் யார்மீது என்பது தெளிவாகத் தெரிய வேண்டுமே!''

- முஜூம்தார் நரோ நீலகண்ட் கேட்டார்.

''அது புரிய வேண்டும் என்கிற அவசியமில்லை. யார் மீதும் இருக்கலாம்; பீஜப்பூர் பேரிலிருந்தால் அடுத்து நம்மைத் தாக்கலாம். நம்மீது இருந்தால் பீஜப்பூரையும் தாக்கலாம்.''

''பீஜப்பூர் சுல்தான், அவர்களுக்குப் பணிந்து படையுதவியுடன் நம்மை வேரறுக்கத் தொடங்கினால்?''

- சகோதரன் வெங்கோஜியின் சந்தேகம்.

நியாயமான சந்தேகம்.

ஒருகணம் அவையில் அமைதி ஊமைத் தாண்டவமிடுகிறது.

சிவாஜி அந்த மௌனத்தைக் கலைக்கிறார்... ‘‘அவ்வாறு நேருமானால் நமது நிலை தருமசங்கடத்துக்குரியதுதான். ஒன்று நாம் போரிட்டு வெற்றியடைய வேண்டும். அல்லது நமது நாற்பது கோட்டைகளையும் ஔரங்கசீப்பின் பாதங்களில் வைத்து சுதந்திரமிழக்க வேண்டும். நீங்கள் எதை விரும்புகிறீர்கள்?’’

மகனா இப்படிப் பேசுகிறான்?

ஜீஜாபாய் மருட்சியுடன் நோக்குகிறாள்.

பாலாஜி பதில் சொன்னான்:

‘‘மகாராட்! நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதையே நாங்களும் விரும்புகிறோம்.’’

‘‘சபாஷ்!’’ என்று பாராட்டினாள் அன்னை ஜீஜாபாய்.

‘‘புத்ர! முன்னம் உனது தந்தையைச் சமாதி எழுப்பிப் பயமுறுத்தினானே பீஜப்பூர் சுல்தான்; அப்போது, நீ சுயேச்சையாக ஷாஜஹான் மைந்தன் முராத் மூலம் உதவி கோரி தந்தையை விடுவித்தாய். அப்போது எந்தக் கோரிக்கையை முன் வைத்தாய்?’’

பூஜ்யா ஆலோசனை கூறினாள் என்பதையறிந்து அம்மா இவ்வாறு கேட்கிறார்கள் என்பது சிவாஜிக்குப் புரிகிறது.

‘‘ஒரு சமாதான உடன்படிக்கைதான்.’’

‘‘அதுதான் என்ன என்று கேட்கிறேன்.’’

‘‘ஷாஜஹானுக்கு அடிமையாக இல்லாவிட்டாலும் உற்ற நண்பனாக இருப்பேன் என்றுதான்!’’

‘‘அதையே இப்போது பயன்படுத்திப் பார்க்கலாம் அல்லவா?’’

‘‘முடியாது தாயே? அப்போது எனக்கு ஓர் உத்தரவு வந்தது. ஷாஜஹான் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதிக்கு என்னைத் தலைவனாக இருந்து சேவை செய்ய வேண்டுமென்பது அக்கட்டளை, ஏற்றாற்போல ஏற்றுப் பின்னர் மறுத்துவிட்டேன். இப்போது மீண்டும்

நான் கோரினால் எனது நிலை நடிப்பாகிவிடும். இப்போது நாம் யுத்தத்துக்குத் தயாராகியே தீரவேண்டும்.''

''சேதங்களை எண்ணிப் பார்த்தாயா?''

''சேதத்தைப் பார்த்தால் தேசம் என்னாவது? நல்லது. சேதமில்லாது தப்பிக்க உங்களில் யாராவது ஒரு நல்ல உபாயம் கூறுங்கள்!''

''உனது சாணக்கியர் என்ன சொல்லுகிறார்?''

சாணக்கியர் என்று அம்மா சொல்வது யாரென்பது சிவாஜிக்குப் புரிய வருகிறது. எதிரே ஆசனம் காலியாய் - நாதமாய்ச் சிரிக்கிறது...

''சாணக்கியத்தை நான் முழுவதுமாகப் படிக்கவில்லை; நீங்களும் அதனை முழுவதுமாக ஏற்கத் தயாரில்லை என்பதை நானுணருகிறேன்.''

மிக்கவும் சாமர்த்தியமாகப் பேசுகிறானே சிவாஜி...

''என்னதான் சொல்லுகிறது?''

விடவில்லை அந்தத் தாய்.

வாதங்களில் சூடு பிடிக்கிறது...

''என்னை விஷம் வைத்துக் கொல்லாமலிருந்தால் போதும் என்கிறது.''

''சாணக்கியமே விஷம்தானே?''

''அதனால்தான் அது சாகவில்லை.''

''பூனை கண்ணை மூடிக்கொண்டால்...''

''பூனையே செத்துவிட்டது. கண்ணைத் திறப்பது எப்போது?''

பேச்சு எங்கோ போகிறது; இருப்பவர்கள் புரியாது நோக்குகிறார்கள் என்பதையுணருகிறாள் ஜீஜாபாய்.

பாலாஜிக்கு இது புரிகிறது.

‘‘அம்மா! சாணக்கியம் இருக்கட்டும். சாதுரியத்துக்கு வழி சொல்லுங்கள். இத்தனை பெரிய மூளைகளிருக்க, என்றோ எழுதப்பட்ட சாணக்கியத்துக்கு இப்போது என்ன முக்கியத்துவம்?’’

‘‘அப்படிச் சொல்லக்கூடாது மகாராஷ்டிரபதி! சாணக்கியம், உலகின் ராஜதந்திர அளவுகோல்! சமஸ்கிருதப் பொருளதிகாரம்! பூரண நூல்! அதனைத் தெள்ளத் தெளிவாகப் படித்திருந்தால் எந்த முறைக்கும் உபாயம் தேடலாம்’’ என்றார் நியாயாதீஷ் நிராஜிபந்த்.

ஜீஜாபாய் அவரை உற்றுக் கவனிக்கிறார்.

‘‘நீங்கள் முழுமையாகப் படித்திருக்கிறீர்களா நிராஜிபந்த்?’’

‘‘எனக்கு அதைப் படிக்கிற அளவுக்கு அழுத்தமான சமஸ்கிருதம் தெரியாது.’’

‘‘ஓகோ! நல்லது. ஷாஜஹான் படையெடுப்பைப் போராடி எதிர்க்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறீர்கள் இல்லையா?’’

‘‘வேறு மார்க்கம் தெரியவில்லையே ராஜமாதாஜி!’’

‘‘மார்க்கத்தை நான் சொல்லுகிறேன். சாணக்கியனை நானும் கொஞ்சமறிவேன்!’’

எல்லாரும் ஆவலுடன் நோக்குகிறார்கள்.

சிவாஜி மட்டும் அசிரத்தையாக அன்னையைத் திரும்பிப் பார்க்கிறார்.

அடிக்கடிச் சாணக்கியத்தைக் குறைகூறுவது அவருக்குப் பிடிக்காத ஒன்றாக இருந்தது.

ராஜமாதா ஜீஜாபாய் விளக்கினாள்:

‘‘எனக்குத் தனிப்பட்ட முறையில் பீஜப்பூரிலிருந்து தூது வந்திருக்கிறது. பீஜப்பூர் சுல்தானியா பேகம் லிகிதம் அனுப்பி இருக்கிறாள். அதாவது, அவளது கணவர் முகமது ஆதில்ஷா இறந்த

பின்னர் பீஜப்பூர் களையிழந்து இருப்பதாகவும், குமாரன் அலி ஆதில்ஷா பட்டத்தில் அமர்ந்திருந்தாலும், நவாப் இருந்த காலத்துத் தெம்பு இல்லை என்றும் எழுதியிருக்கிறார்கள். பீஜப்பூர் பெரும் படைக்கு எனது கணவரும், சிவாஜியின் தந்தையுமான ஷஹாஜி பான்ஸ்லே தலைமை தாங்குகிறாராம். எனவே உங்கள் மகனும் உடன் சேர்ந்து கொண்டால், ஷாஜஹான் படையை எளிதில் முறியடித்து விடலாம் என்பது சுல்தானியா பேகத்தின் வேண்டுகோள். உடன் பதில் எழுத வேண்டும். காலதாமதமாய் விட்டது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சொன்னால் உடன் பதில் எழுதலாம்.''

''நல்ல வேண்டுகோள்'' என்று பெரும்பாலானோர் கூறினார்கள்.

பாலாஜி மட்டும் துணிந்தே, ''பீஜப்பூர் சுல்தானியாவுக்குத் தந்தை அடிமையாயிருப்பது போல மகனை அடிமையாக்குகிறீர்களா மாதாஜி?'' என்றான்.

எரித்துவிடுபவள் போல நோக்குகிறாள் அமைதியே உருவான - அதே நேரத்தில் அரசியலில் தெளிவான ராஜமாதா.

''அவன் கேட்டது நியாயந்தானே? பதில் சொல்லுங்கள் அம்மா!'' என்று தூண்டுகிறார் சிவாஜி.

அன்னை பதில் சொன்னாள்:

''ஏன்? பின்னாளில் தந்தையும் மகனுமாகச் சேர்ந்து பீஜப்பூர்க்குச் சொந்தமல்லாத மாநிலங்களைக் கட்டியாளலாம் அல்லவா?''

''அப்படியானால் தாயே, பீஜப்பூரான் நமது கோட்டைகள் சிலவற்றை அக்கிரமமாக ஆக்கிரமித்துக் கொண்டிருகிறானே, அவற்றைத் திரும்பத் தந்துவிடச் சொல்லுங்கள். கோரிக்கையை ஏற்போம்.''

இப்போது அனைவருமே இதனை ஆதரித்துக் குரல் கொடுத்தனர்.

மாதாஜியால் இந்தக் குரல்களை மறுக்க முடியவில்லை. எனவே ஒப்புக் கொண்டார்கள். ஆயினும், முடிவாக ராஜமாதா சொன்னார்:

''இந்த உடன்படிக்கைக்கு சுல்தானியா பேகம் ஒப்புக் கொள்ள மாட்டாள். முயன்று பார்ப்போம்!''

மந்திராலோசனை அத்துடன் நிறைவுபெற்றுக் கலைகிறது...

சிவாஜி, குறிப்பாய் பாஜிபந்தை நோக்குகிறார்.

''பாஜி! லாஞ்சனையைக் கொடுத்துவிட்டுச் செல்லலாம்.''

பாஜிபந்த் விழிக்கிறார்.

ஜீஜாபாய் சமாளிக்கிறார்.

''மகனே! அதனை நாளை நான் பெற்று உன்னிடம் தருவேன்.''

எல்லாம் புரிந்த சிவாஜி அப்போதைக்கு ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

அனைவரும் சென்ற பிறகு, சிவாஜி அன்னையிடம் விடை பெறுகிறார்.

''சிவா! நேரே படுக்கைக்குத்தானே?''

அன்னையின் கேள்வி.

சிவாஜி சற்றே தயங்குகிறார்.

''நீ பொய் சொல்லமாட்டாய்!''

மீண்டும் தயக்கம்.

''சூர்யாபாய் உன்னைப்பற்றி ரொம்பவும் குறைபட்டுக் கொண்டாள்.''

அண்ணாந்து கவனிக்கிறார் சிவாஜி.

''கொஞ்சம் வெளியே போய்விட்டு வரவேண்டியிருக்கிறது மாதாஜி!''

''இந்த இருட்டிலா? காலையில் அந்தச் சாணக்கியத்தைப் படித்துக் கொள்ளக் கூடாதா?''

அன்னையாரை இப்போது அர்த்தபுஷ்டியுடன் நோக்குகிறார்.

''அம்மா! நீங்கள் பூஜ்யாவை எவ்வளவு வெறுக்கிறீர்கள் என்பது எனக்கு நன்றாகவே புரிகிறது. எனது இந்த வீரத்துக்கு உங்கள் வளர்ப்பு காரணமாக இருப்பதுபோல, எனது இந்த வெற்றிக்கு அவள் ஒரு யுத்தப் புத்தகமாக இருக்கிறாள்.''

''பின் ஏனின்று அவள் வரவில்லை? நீ வரமாட்டாள் என்று சொல்லியும், வருவாள் என்கிற நம்பிக்கையுடன் ஆசனம் போட்டு வைத்தேன்; வரவில்லை.''

''உங்கள் வெறுப்பு, அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.''

''நான் வெறுப்பதாயிருந்தால்?''

''விஷம் கொடுத்துச் சாகடித்து இருப்பேன் என்கிறீர்களா? அதுவும், அறிவுமணக்கும் தமிழ்ப் பெண்ணுக்கு? அவளே விஷம். அவளை ஒரு விஷம் அழிப்பதாவது? தயவுசெய்து அவளைப் பற்றிச் சிந்திக்காதீர்கள் அம்மா!''

''சிந்தித்தால்!''

''எனது சாம்ராஜ்யக் கனவு சரிந்து போகும்.''

''அவ்வளவு அவள் உயர்ந்து போய்விட்டாளா?''

''நான் உங்களைச் சிரமேல் வைத்திருக்கிறேன். அவளை இதயத்தில் வைத்திருக்கிறேன்.''

அயர்ந்து போனார் ஜீஜாபாய்.

''ஒரு நாளைக்கு நான் அவளைச் சந்திக்க வேண்டும்.''

''அவளும் ஒரு நாளைக்கு உங்களைச் சந்திப்பதாகவே இருக்கிறாள்.''

இவர்கள் இவ்விதம் வாதம் புரிந்து கொண்டிருக்கையில் -

நண்பன் பாலாஜி அவசர அவசரமாக ஓடோடி வருகிறான்...

இருவருமே வியப்புடன் கவனிக்கின்றனர்.

''என்ன பாலாஜி?''

''சுயராஜ்யபதி! தங்கள் தந்தையார் குறிப்பிட்ட படை வீரர்களுடன் மலையடிவாரத்தில் முகாமிட்டு இருக்கிறாராம்.''

''ஏன்?''

''உங்களைக் கைதுசெய்து அழைத்து வருமாறு பீஜப்பூர் சுல்தானியா பேகம் ஆணை பிறப்பித்து இருக்கிறார்களாம்.''

மிக்கவும் அதிர்ச்சி கண்டு போனாள் அன்னை ஜீஜாபாய்.

அதுவரையும் நடந்த மந்திராலோசனை அனைத்தும், வீணானதே என்று வேதனைப்பட்டாள் ஜீஜாபாய்.

அடுத்த கணம் -

மாவீரத் திலகம் சிவாஜி கடகடவென்று பேரொலி எழுப்பிச் சிரிக்கிறார்.

சிவாஜி அவ்வாறு சிரிக்கிறார் என்றால், சிங்கம் கர்ஜிக்கத் தொடங்கிவிட்டது என்பதாகத்தான் அர்த்தம்.

அதன் பிறகு மந்திராலோசனை கிடையாது...

மார்க்கங்களை யாரும் பிட்டுச் சொல்ல முடியாது...

ஏன்? அன்னையாலும் அந்தக் கர்ஜனையை அடக்க முடியாது.

அடக்கவல்ல ஒரே சூத்திரம் சாணக்கியச் சூத்திரம்.

இதனை அன்னை முதல் ஒரு சிலர் அறிவர்.

ஓ... தந்தை ஷஹாஜியின் தலையெழுத்து முடிகிறதா?

அல்லது சிவாஜியின் தலையெழுத்து பரிசீலிக்கப்படுகிறதா?

தலையெழுத்து என்றாலே தந்தையின் பெயர்தானே?

-----

# 9

தன்பால் மகிழ்ச்சியுடையாரைப் பொருட்கொடை மூலமாகவோ, பெருமைப்படுத்தல் மூலமாகவோ அரசனானவன் சிறப்பு செய்தல் வேண்டும். தன்பால் மகிழ்ச்சியடை யாதாரை (எவராக இருப்பினும்) இன்சொல் கூறல், கொடுத்தல் ஆகிய உபாயங்களை மேற்கொண்டு திருத்தியனுப்ப முயலவேண்டும். அவ்வாறு அவர்கள் திருந்தாமல் பகைமேற் கொண்டால், வேறு படுத்தல், ஒறுத்தல் (மன்னித்தல் அல்லது தண்டித்தல்) ஆகிய உபாயமே சாலச் சிறந்தது.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 13).

**வை**கறையின் ஞானக்கண் பொன்னாய் புலருகிறது...

வெள்ளென எழுந்து கொண்டார் என்பதைவிட, விடியும்வரை விழித்திருந்தார் மகாராஷ்டிர வீரமாத் திலகம் சிவாஜி!

காலைக் கடன்களை முடித்துக் கொண்டார்.

தனது மேலான அன்னை பவானித் தாயை வழிபடுகிறார்...

அவரது வீரவாள் பவானித் தாயின் பொற்பாதங்களில் காட்சி தருகிறது. அவரது கண்களில் நீர் மணித்துளிகள்...

பகைவன் எதிர்த்து வந்தால் அவர்களது தலைகள் பந்தாடப் பட்டுவிடும்...

வந்தவர் வீரமா வாரிசை உருவாக்கியவர்...

இவன் தந்தை எந்நோற்றான் கொல்லெனும் சொல்லுக்குச் சொந்தக்காரர்...

ரத்தத்தின் ரத்தம்...

என்ன செய்வார்?

வழிபடும் அன்னையை வழி கேட்கிறார்...

அந்தப் புனிதம் நிறைந்த கோயிலை நாடி அன்னை ஜீஜாபாயும் வருகிறாள்...

மகனது துயரம் அவளுக்குப் புலனாகிறது...

மகனைச் சிறைபிடிக்கத் தந்தை வந்திருக்கிறார்...

சரித்திரத்தில் காணமுடியாத புழுக்கம் நிறைந்த ஏடு...

என்னதான் பூஜ்யாதேவியால் மனமாற்றம் சற்றே உருவாகித் தலைதூக்கினாலும், ஒரு மகனை இவ்வாறுதான் பெற வேண்டும் என்கிற ஒரு புதிய இலக்கணம் படைத்தவளாயிற்றே ஜீஜாபாய்!

தந்தையை எதிர்த்துப் போராடுவதா? அல்லது அவர் வந்த நோக்கம் எதுவானாலும் படிந்துவிடுவதா?

''தாயே! உனது சிரமீது இருக்கும் புஷ்பம் விழுமானால் எதிர்த்துப் போரிடுவேன். அது விழவில்லையானால் பணிந்து போவேன்!''

- சிவாஜி தனது மாராட்டிய மொழியில் மெல்லக் கூறிக்கொள்வது ஜீஜாபாயின் செவிகளில் மோதுகிறது...

நேரம் செல்கிறது...

புஷ்பம் விழவில்லை...

''அடிபணிந்து விடுகிறேன் தாயே!''

என்று கூறிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வாளை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு திரும்புகிற போது...

பெற்றெடுத்த அன்னை...

உற்றுக்கவனிக்கிறார்...

அனைவரையுமே பெற்றெடுத்த அன்னையான பவானித்தாய் குங்குமக் கோலமுடன் உக்கிரமாகக் காணப்படுகிறாள்...

''மகனே! நீ பணிந்து போய்த்தான் ஆகவேண்டுமா?''

கலங்க வேண்டியதற்குக் கலங்குகிறது ஜீஜாபாயின் கண்கள்.

''பராசக்தி உத்தரவு தரவில்லையே தாயே!...''

''அப்பா எதற்காக வந்திருக்கிறார் என்று கேட்டறிவோமே!''

''கேட்டறிந்துதான் முடிவு செய்வேன். ஆனால், சத்தியமாக எதிர்க்கமாட்டேன்.''

''நான் சொன்னால் கூடவா?''

''நிச்சயம்.''

''பூஜ்யா...''

''அம்மா! எனது தாய் பவானியின் உத்தரவுக்கு மீறிய உத்தரவு இந்தப் புவனத்தில் இல்லை. இது மூடநம்பிக்கை என்று எனது அதிகாரிகளே பேசுவதை நானறிவேன். நான் ஒரு சந்நியாசிப் பித்தன்; பிராமணப் பித்தன்; சமஸ்கிருதப் பித்தன். எனது ரத்தத்தில் ஊறிவிட்ட இதனைப் பிரிப்பது இயலாத காரியம்.''

மகனுடைய தீர்க்கமான இந்தப் பிரகடனம் மாதா ஜீஜாபாய்க்குப் பெருத்த ஆறுதலாக இருக்கிறது. ஆயினும் அடிபணியச் சொல்லி விட்ட அன்னை பவானியின் உத்தரவுதான் என்னமோ போல இருக்கிறது.

புத்திரபாசம்; அது அவ்வாறு நினைக்கச் சொல்கிறது...

''வாருங்கள் அம்மா! அப்பாவிடம் தூது அனுப்ப வேண்டும்.''

''யாரை அனுப்பப் போகிறாய்?''

''பாலாஜியை!''

‘‘வேண்டாம். நானே சொல்கிறேன்.’’

‘‘அம்மா!’’

‘‘அதிராதே! நானே சென்று திரும்புவேன்.’’

என்ன செயல் நோக்கி விதி இந்தத் திசை திருப்பம் காட்டுகிறதோ என்பது சிவாஜிக்கு மயக்கத்தைத் தருகிறது...

ஒருபுறம் ஆக்ராவிலிருந்து ஔரங்கசீப் படைதிரட்டி வருகிறான்...

மலையடிவாரத்தில் தந்தையார் தன்னைக் கைது செய்யக் காத்திருக்கிறார்...

அரண்மனையே இது குறித்து, இந்தச் சரித்திரம் காணாத சம்பவம் குறித்துப் புரிந்துகொள்ள முடியாத தவிப்பில் அலைமோதிக் கொண்டிருக்கிறது.

தம்மை வெகுவாக அலங்கரித்துக் கொள்கிறாள் ஜீஜாபாய்.

தூது செல்ல இந்த அலங்காரம் எதற்கு?

வெகுநாட்களுக்குப் பிறகு சந்திக்கப் போகிற கணவனாயிற்றே!

கணவருக்குக் கணக்கற்ற மனைவிகள் இருக்கலாம். மனைவிக்குக் கணக்கற்ற கணவன்மார்கள் இருக்க முடியுமா?

இதுதானே இந்து தர்மம்?...

நிஜமாகவே அன்னை ஜீஜாபாய் மிக்கவும் பேரழகு படைத்தவளாகக் காணப்படுகிறாள்...

வயது பத்து குறைந்தது போலிருக்கிறது...

மகனிடம் சொல்லிக்கொண்டு உடன் இரு அதிகாரிகளை அழைத்துக் கொண்டு புறப்படுகிறாள்...

அந்த மலைப்பிரதேசமே ‘ஓ...மாதா’ என்றழைப்பது போலிருக்கிறது...

பிரசண்ட கோட்டை, சிவாஜியின் பிரதாபங்களின் எடுத்துக் காட்டாயிற்றே!

**ம**லையடிவாரத்தில் கூடாரங்களை அமைத்துக் கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார் ராஜா ஷஹாஜி. ராஜா பட்டம் காலஞ்சென்ற பீஜப்பூர் சுல்தான் அளித்தது.

நகருள் நுழைந்து மலையடிவாரம் வரை வந்ததே, தந்தை என்கிற ஸ்தானத்தை வைத்துத்தான். ஏதோ மகனைக் காண வந்திருக்கிறார் என்றுதான் காவலர்களும், அதிகாரிகளும் நினைத்தனர், பின்னர்தான் எல்லையில் பெருத்த படை இருப்பதாகவும், சிவாஜியைக் கைது செய்யப் போவதாகவும் செய்தி தெரிந்தது.

பூனா நகரமே ஆட்டம் கண்டது...

எதிர்த்தால் இந்தப் பீஜப்பூர் படை தாங்காது என்பதும் அவர்களுக்குத் தெரியும். மாவீரத் தலைவர் சிவாஜியின் உத்தரவு வரவேண்டுமே!

ராஜமாதா ஜீஜாபாயே தூது வருகிறாள் என்கிற செய்தி ராஜா ஷஹாஜிக்குத் தருமசங்கடமாக இருந்தது. அவர் கொஞ்சமும் எதிர்பாராதது.

நீண்ட நாட்களுக்கப்புறம் தமது முதல் மனைவியாரைப் பார்க்கப் போகிறோம் என்கிற மகிழ்ச்சி ஒருபுறம்.

அவளது வருகையாலும் கண்ணீராலும் வந்த காரியம் தடைபட்டு விடக்கூடாதே என்கிற வருத்தம் மறுபுறம்...

ராஜகூடாரத்துள் தடையின்றி நுழைகிற ராஜமாதா ஜீஜாபாயை வரவேற்கிறார் ஷஹாஜி.

கூடியிருந்த அத்தனை இஸ்லாமிய வீரர்களும் கவனிக் கிறார்கள்...

பீஜப்பூர் ஆணையில் ஏதோ மாறுதல் நிகழப்போகிறது என்கிற முடிவு அவர்களுள் அரும்புகிறது.

''வா, ஜீஜா! எதிர்பாராத வருகை உனது வருகை.''

ராஜா ஷஹாஜியின் பேச்சில் குத்தல் இருக்கிறது.

இருவரும் உள்ளே தனிமையாகத்தானிருந்தார்கள்... வெளியே காவல் பலம்.

ஜீஜாபாய் பதில் சொன்னாள்:

''எதிர்பாராத கணவரை மணந்து, எதிர்பாராத ஒரு மகனை ஈன்றவள் எதிர்பாராமல்தானே வரமுடியும்?''

- குத்தலோ குத்தல்!

அயர்ந்து போகிறார் ஷஹாஜி.

''சரி, நீ வந்ததன் நோக்கம்?''

''உடனே புறப்பட்டுவிடு என்று சொல்கிற மாதிரியிருக்கிறதே உங்கள் பேச்சு?''

''நான் வந்தது அரசியல் நோக்கம்!''

''நான் மட்டும் என்ன படுக்கையின் நோக்கமாகவா வந்திருக்கிறேன்?''

''உனது அலங்காரம் இதனைப் பிரகடனப்படுத்துகிறது!''

''அது பிரகடனப்படுத்துவது படுக்கையை அல்ல; பல படுக்கைகளைப் பார்த்த தாங்கள், எனது அலங்காரத்தை மீறத்தக்க அலங்காரத்தைப் பார்த்ததுண்டா என்று கேட்பது அநாகரிகம்; அழகைப் பார்த்ததுண்டா என்று கேட்கத்தான் இந்த அலங்காரம்! எவ்வளவு எளிதாக நீங்கள் வந்தது அரசியல் நோக்கம் என்று கூறிவிட்டீர்கள்! ஒரு கணவனுக்குப் பல மனைவிகள் இருக்கலாம் என்று பேசுகிற இந்து தருமத்தைச் செருப்பால் அடிக்க வேண்டும். ஏன்? ஒரு மனைவிக்கும் பல கணவன்கள் இருக்கலாம் என்று அது பேசியிருந்தால் இப்படிப் பேசுவீர்களா?''

''இப்போது நீ யாரைச் செருப்பால் அடிக்க வந்தாய்?''

''சிவ, சிவா! நீங்கள் எங்கோ தாவுகிறீர்கள். இப்போது சிவசிவ என்றேனே அதுதான் இந்து தர்மம். அதனால்தான் எனது மகனுக்கு 'சிவா' என்று பெயர் வைத்தேன். மேலும் அவன், 'சிவ சிவா!' என்று அனாதை மாதிரிதானே பிறந்தான்! ஆனால் இப்போது இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தையே கட்டியாளப் போகிறான். அவனையா கைது செய்ய வந்தீர்கள்? அவனையா பீஜப்பூர் அடிமைச் சிறையில் தள்ளப் போகிறீர்கள்? ஒரு சுதந்திர மாவீரனைப் பெற்றோம் என்கிற மகிழ்ச்சியின்றி, அவனை அடிமைப்படுத்த முனைந்தவர் தந்தையா?''

''நான் தந்தை ஸ்தானத்தில் வரவில்லை.''

''பீஜப்பூர் சுல்தானின் அடிமை ஸ்தானத்தில் வந்திருக்கிறீர்கள்!''

ஷஹாஜியின் நாவடைப்பட்டு விடுகிறது.

முக்காட்டைச் சரிபார்த்துக் கொண்டே, கண்களைத் துடைத்துக் கொள்கிறாள் ராஜமாதா ஜீஜாபாய்.

''என்னை இங்கே ராஜமாதா என்கிறார்கள். உங்களை யாராவது ராஜபிதா என்கிறார்களா?''

''நானே ராஜா ஷஹாஜிதானே!''

''அது ஓர் அடிமையை ஆதரிக்கிற அணைப்பு விருது! ஆனால் நீங்கள் ராஜாவாக முடியாது!''

''சிவாஜி மட்டும் ஆய்விடுவானோ?''

''இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை!''

''வெட்கத்துக்கும் அரசியலுக்கும் வெகுதூரம்.''

சில கணங்கள் அமைதி...

''சரி... நீங்கள் வந்ததன் நோக்கம்?''

''சிவாஜியைச் சிறைப்பிடித்துச் செல்ல வேண்டும்.''

''அவன் எதிர்த்தால் நீங்களோ பீஜப்பூரோ தாங்குமா?''

‘‘தாங்க முடியாது என்பதற்காகத்தானே தந்தையையே அனுப்பி இருக்கிறாள் பீஜப்பூர் சுல்தானியா!’’

இவ்வாறு கூறுகிறபோதுதான் ஷஹாஜியின் பலவீனம் வெளிப்பட்டு விட்டது. அதுவரை அவர் பேசியது ஒரு நடிப்பே என்பதைப் புலனாக்கியது...

ஜீஜாபாய் கவனிக்கிறாள்...

‘‘ஜீஜா! எனது வீரமைந்தன் அடைந்து வருகிற பெருமை எனக்குப் பெருமையாகத் தெரியவில்லையா? பைத்தியக்காரி! ஓ... ஷஹாஜி உனது ரத்தம், அசல் க்ஷத்திரிய ரத்தமடா என்கிறது. ஆயினும், செஞ்சோற்றுக் கடன்? ஒரு கர்ணனைப்போல நான் பீஜப்பூருக்குச் செஞ்சோற்றுக் கடன்பட்டவன். முன்னம் மகனைச் சிறைப்பிடிக்க மாட்டேன் என்பதற்காக பீஜப்பூர் சுல்தான் தனது அதிகாரிகளை விட்டு என்னைச் சுற்றி சமாதிச் சுவர் எழுப்பினான்! ஷாஜஹான் பயமுறுத்தலில் விடுபட்டேன்; அதன் காரணமாக இன்னமும் என்னை ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். முகமது ஆதில்ஷா மரணமடைந்ததும் சுல்தானியா பேகம் என்னைப் பல வழிகளில் படாத பாடுபடுத்துகிறாள். பொங்கிவரும் ஆக்ரா படைகளை எதிர்க்க சிவாஜி உடன்பட்டு ஆகவேண்டும். இல்லையென்றால், சிவாஜியின் வீரம் ஷாஜஹான் படைகளுக்குப் பயன்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவனையே சிறைப்பிடித்து வரவேண்டும் என்பது உத்தரவு.’’

‘‘மறுத்தால்?’’

‘‘எனது தலை, அரவான் பலியாகும்.’’

‘‘நீங்கள் இங்கேயே தங்கி மகனுடன் சேர்ந்து கொண்டால்?’’

‘‘செஞ்சோற்றுக் கடன்? எனது இந்த நன்றிகெட்ட செய்கை, எனது சந்ததியின் சரித்திரத்தில் ஏறக்கூடாது. எனது தலையா? தனயனா? என்பதுதான் பிரச்னை...’’

அவர் கண்களில் அதிகமாகவே நீர் மாலையிட்டது.

ஜீஜாபாய் எழுந்து கொண்டாள்.

''என்ன ஜீஜாபாய் எழுந்து கொண்டாய்?''

''போர் முழக்கமிட்டு உங்கள் தலையை மீட்பேன்!''

''தலையை மீட்கலாம், நன்றி கொன்ற சரித்திரத்தை மீட்க முடியாது. எனது செஞ்சோற்றுக் கடனுக்குச் சோதனையாக ஒன்று சிவாஜியின் உதவி; இல்லை சிவாஜியின் உருவம். இரண்டில் ஒன்று. போர் முழக்கிவிட்டால், ஷஹாஜி பிரசண்ட கோட்டைக்குச் சென்று பெண்டாட்டி பேச்சைக் கேட்டு மகனுடன் சேர்ந்துகொண்ட நன்றி கெட்டவன் என்று இஸ்லாமிய உலகமே தூற்றும்...''

சிறிதுநேர யோசனை...

''பதில் சொல்லியனுப்புவேன்.''

- என்று கூறி விடைபெற்றாள் ஜீஜாபாய்.

கோட்டை உச்சியில் தாயின் வருகைக்காகக் காத்திருந்தார் மாவீரத் திலகம் சிவாஜி.

தந்தையின் கூடாரத்திலிருந்து புறப்பட்டுவிட்ட செய்தி கிடைத்து, இவ்வளவு நாழிகையாகியும் அன்னையாரைக் காணவில்லையே...

என்ன முடிவு என்கிற எதிர்பார்ப்பில் சிங்கம்போல உலவிக் கொண்டிருந்த சிவாஜிக்கு செய்தி வருகிறது...

அன்னையாரும் பாலாஜியுமாகச் சேர்ந்து பூஜ்யாதேவியின் குடிலுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்...

பூஜ்யாதேவி குடிலுக்கு?

ஏன்?

-----

# 10

அமைச்சுத் தொழிலாற்றும் தலைவர்கள் எல்லாம் அவரவர் ஆற்றலுக்கேற்ப காரியங்களில் நியமிக்கத் தக்கவராவர். இவர்களுள் எவர் ஓர் அரசியல் காரியத்தை அரசன் கட்டளையிட்டவாறோ, அல்லது அதனிலும் சிறப்பாகவோ செய்து முடிக்கிறாரோ அவர்தாம் விருதுகளுக்குரிய சிறப்புடையவ ராவார்.

**- சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 30).

**பூ**ஜ்யாதேவி என்றோ ஒரு நாளைக்கு எதிர்பார்த்தது அன்றே நிகழ்ந்து விடவே, அவளது ஆச்சரியம், அதிர்ச்சியை மடியில் கட்டிக் கொண்டு தாலாட்டியது.

ராஜமாதாவின் திடீர்ப் பிரவேசத்தால் அதுவரை ஒரு ராஜயோகியாக - சர்வ வல்லமைகளைக் கிரீடமாக அணிந்த ராஜ தந்திரியாக - இருந்த பூஜ்யாதேவிக்கு உணர்ச்சிகள் தடைப்பட்டு ஓட்டம் காணாது வேலைநிறுத்தம் செய்தன.

ஒருவாறு தன்னை அவள் சமனப்படுத்திக் கொள்ள முயல்கிறாள்.

வந்து கொண்டிருப்பவள் ராஜமாதா; காதலரின் தாய்; மகா ராஷ்டிரத்து ரசமணி!

அலங்காரமற்ற சாதாரண நிலையில் அவளிருந்தாள். முதன் முதலாக ராஜமாதாவை - மாமியாரை - பார்க்கிறபோது இருக்கிற கோலமா அது?

அலங்கரித்துக் கொள்ள நேரமில்லை.

அதோ வந்துவிட்டார்கள்.

ஒருவாறு தலையைச் சீவிக் கொண்டு முகத்தை ஒற்றிக் கொண்டு இயல்பான அவளது முறுவலில் செயற்கை கலவாது வாசலுக்கு வருகிறாள். ராஜமாதாவைக் கண்டதும் அவளது கண்கள் விரிகின்றன.

''வணக்கம் தாயே! வர வேண்டும்!''

-தூய மராட்டிய மொழியில் வணக்கம் கூறி வரவேற்ற பூஜ்யாதேவியைக் கவனிக்கிறாள் ராஜமாதா ஜீஜாபாய்.

எவ்வளவு எளிமையாகக் காணப்படுகிறாள்?

ஆயினும் அழித்தெழுதா பசுமைச் சித்திரம்போல அன்றலர்ந்த தூய ஜாதிமல்லியைப் போல...

ஆ! தமிழகத்தைப் பற்றிக் காதாரக் கேள்விப்பட்டிருக்கிறோம்...

கண்ணாரக் காண்கிறோம்...

தமிழ் அறிவழகு மிக்கது; அழகறிவு மிக்கது என்பதற்கு இவளே உதாரண ரூபியாக...

''உள்ளே வாருங்கள் ராஜமாதா...''

ராஜமாதா...

மாமியார் என்று அழைக்காது...

உள்ளே தனது உள்ளுணர்வு போதனைப்படி வலதுகாலை எடுத்து வைத்து நுழைகிறாள் ராஜமாதா ஜீஜாபாய்.

தென்னங்கீற்றாலும், வண்ண வண்ணமான மூங்கில்களாலும் வேயப்பட்ட அந்தப் பர்ணகசாலையே போன்ற சின்னஞ்சிறு குடில்,

அரண்மனையைக் காட்டிலும் அமைதி தருவதாக அமைந்து காணப்பட்டது; மனத்துக்கு இதம் தருவதாக இருந்தது.

எதிரே சிவபெருமானின் அழகிய சிலை.

ஆசனங்களுக்குப் பதிலாகத் திண்டு திமாசுகள்...

நாதத்தைத் தன்னுள் கொண்ட இசைமொழி வீணை.

ராஜதந்திரத்தை விழுங்கிய ஓலைச் சுவடி...

மேலே தனது குமாரன் சிவாஜியின் வண்ணச் சித்திரம்...

''உட்காருங்கள் ராஜமாதா!''

ராஜமாதா...

உட்கார்ந்து அண்ணாந்து கவனிக்கிறாள் ராஜமாதா ஜீஜாபாய்.

''பூஜ்யா! நீயும் உட்கார்.''

''பரவாயில்லை.''

''எவ்வளவு நேரந்தான் நின்றுகொண்டு பேசுவாய்? உட்காரம்மா!''

பூஜ்யா மிக்கவும் மரியாதை கலந்த பவ்வியமாக - அடக்கமாக - தமிழுக்கே உரிய பண்பாக அமருகிறாள்.

பூஜ்யாதேவியின் முகத்தில் அப்படி என்ன இருக்கிறதென்று ராஜமாதா ஜீஜாபாய் உற்று உற்று கவனிக்கிறாள்?

இத்தனைக்கும் அலங்காரமற்ற எளிய தோற்றம்...

அதுவே கவருகிறது. அந்தக் கண்களில் தெரிகிற அறிவு தீட்சண்யம்...

பொதுவாக அந்த முகத்தில் சந்திரபிம்பம் போன்ற ஒளிப்பிரபை...

முகத்துக்குப் பின்னாலும் அந்த ஒளிப்பிரபை...

தமது ஒரு மருமகளிடமும் காண முடியாத ஒளிப்பிரபை...

ஓ... இது ஒரு தவயோகிக்கு இருக்க வேண்டிய ஒளிப் பிரபையாயிற்றே!

பக்கத்தில் முகலாயர்கள் பாணியில் செய்யப்பட்டிருந்த அழகிய மண் கூஜாவிலிருந்த நீரை வெள்ளிக் குவளையில் நிரப்பி நீட்டுகிறாள் பூஜ்யா.

''என்னம்மா, வந்திருக்கும் ராஜமாதாவுக்குத் தண்ணீரை முதன் முதலாகத் தருகிறாய்?''

பூஜ்யா ஒளியாய் முறுவலிக்கிறாள்.

''இது எங்கள் நாட்டுப் பண்பு!''

''தண்ணீர் கொடுப்பதா?''

''நிலையானது; நித்தியமானது; நிதர்சனமானது. வடக்கில் கங்கையும், தெற்கில் காவிரியும்தான் உலகிலேயே பரிசுத்தமான வஸ்துகள்!''

சொல்வீச்சு...

பளீர் பளீர்...

அயர்ந்து போகிறாள், ஜீஜாபாய்.

உண்மையான பேச்சு; பண்பாடு.

அதற்குமேல் பேச்சில்லை.

ஆனந்தமாகப் பருகுகிறாள்.

இவளையா தவறாக எடை போட்டோம்?

காரணம் கலகமூட்டிய அதிகாரிகள்.

நினைவுக்கு வருகிறார்கள்...

தாகசாந்தி முடிந்ததும்...

''எங்கேம்மா உனது வளர்ப்புத் தந்தை?''

''அவரைத்தான் விரட்டி விட்டீர்களே!''

''ராமதளவாயை விரட்டி விட்டார்களா?''

''அப்படி என்றுதான் கேள்வி. அது அரசியல் சூழ்ச்சி. ராஜமாதா வந்ததால் ஒரு மனுவைப் போலச் சொல்ல வேண்டியதாயிற்று. அவர் கவந்தம்பாடியில் இருக்கிறார்.''

''நாளையே உத்தரவிடுகிறேன்.''

''நன்றி தாயே!''

''நீ ஏன் என்னைத் தாயே என்கிறாய்?''

''மகாராணி பிரஜைகளுக்குத் தாய்தானே! ராஜமாதாதானே!''

''உனக்கு?''

''ஓ... மாமி என்றழைக்கவில்லையே என்கிறீர்களா?''

அலங்காரத் தலை அசைகிறது.

''நான் உங்கள் புதல்வரின் காதலி, மனைவியாகிறபோது இந்த உறவுமுறை வரலாம்.''

''ஏன்? ஆவதற்கு என்ன?''

''மரபு தடை செய்கிறது என்பதற்காகத்தானே என்னைச் சாகடிக்கச் சதி நடக்கிறது. நான் மனைவியாகிறேனோ இல்லையோ? எனது காதலர் மகுடாபிஷேகத்தை நான் பார்க்க வேண்டும். அதற்காக நான் எந்தத் தியாகத்தையும் மேற்கொள்வேன். அதுவரை நான் உயிரோடு இருக்க வேண்டும்.''

''கழுத்தில் தாலி ஏறவில்லை. அவ்வளவுதானே?''

கேள்வியில் அர்த்தங்களிருக்கின்றன. புரிகிறது.

பூஜ்யா சொன்னாள் :

''படுக்கையும் பரிசுத்தமானதுதான்! ஒரு விஷயம். கனவில்கூட எனது படுக்கை தூய்மை இழந்ததில்லை.''

மருண்டு போனாள் ராஜமாதா.

ஓ... இவள்தான் தமிழ்ப் பெண்ணோ?

எண்ணங்களெல்லாம் தூய்மை அடைகின்றன...

பூஜ்யாதேவி ராஜமாதாவை உற்றுப் பரிசீலிக்கிறாள்.

''எனது அலங்காரத்தைப் பார்க்கிறாயா பூஜ்யா! அது திடுமென்று முளைத்த ஒரு ராஜதந்திர அலங்காரம். நான் இந்த அலங்காரத்துடன் சிவாஜியின் தாயாராகப் புறப்படவில்லை. ஷஹாஜி பான்ஸ்லேயின் மனைவியாகப் புறப்பட்டேன்.''

என்று கூறிய ராஜமாதா, நடந்த விவகாரங்களை ஒளிவு மறைவின்றிக் கூறத் தொடங்கினாள்.

இதில் ஓரளவான செய்தி பூஜ்யா அறிந்ததே. அதாவது ஷாஜஹான் படையெடுப்பு பற்றியது. ஆனால் தந்தையே மகனைச் சிறைப்பிடிக்க வந்த செய்திதான் மருளத் தக்கதாக இருந்தது.

''பூஜ்யா இது குறித்து உன்னிடம் தனித்து ஆலோசனை நடத்தத்தான் நான் இந்த அலங்காரக் கேவலத்தைச் சுமந்துகொண்டு இங்கு வந்திருக்கிறேன்.''

எங்கேயோ தன்னைத் தூக்கி நிறுத்துவதாக பூஜ்யா நினைத்துக் கொள்ளவில்லை. இது ஒரு சோதனைக் கட்டமாகவும் இருக்கலாம் அல்லவா?

எவ்வளவு பெரிய சுமைக்கு ஆலோசனை...

திரும்பிப் பார்க்கிறாள்...

ஓலை விரிந்து கிடக்கிறது...

''அது என்ன ஓலைச் சுவடி பூஜ்யா?''

''அர்த்தசாஸ்திரம். அதாவது சாணக்கியர் எழுதிய கௌடலீயம்.''

''ஓகோ...''

ராஜமாதா எழுந்து சென்று ஓலைச் சுவடியைப் பார்வையிடுகிறாள்.

''என்ன பாஷையம்மா?''

''சமஸ்கிருதம்!''

''உனக்கு சமஸ்கிருதமும் தெரியுமா?''

''நான் படித்ததே சமஸ்கிருதம்தான்! தமிழ், தாய் மொழி.''

''பிராமணப் பெண்தானே?''

''ஆமா.''

''தமிழ், தாய்மொழி என்கிறாய்?''

''பின்?''

''சமஸ்கிருதம்தானே தாய்மொழி?''

''தவறு. சமஸ்கிருதம் பிராமணர்களின் குலமொழி; மந்திரமொழி; பொதுவான அறிவு மொழி; ஆரியர்களுக்கு உரிய மொழி. அந்தந்தத் தேசத்திலுள்ள பிராமணர்களுக்குரிய ஜீவ மொழி; ஜீவன மொழி. ஆனால், எந்தெந்த தேசத்தில் பிராமணர்கள் இருக்கிறார்களோ அந்தத் தேசத்து மொழி அவர்களது தாய்மொழி. எனது தாய்மொழி தமிழ். தமிழ்ப் பிராமணர்தான் இந்தியாவின் பிரதான பிராமணர். பரிசுத்தமான பிராமணர். அறநெறிகளை - சைவ வைணவத்தைக் கடைப்பிடிக்கிற பிராமணர்கள்! சமஸ்கிருதம் பரிசுத்தம் பெற்றதே காவிரிக் கரையில்தான். நாங்கள் காய்கறிப் பிராணிகள்! இங்குள்ள பிராமணர்கள் மீன் சாப்பிடுகிறார்கள்...''

பூஜ்யா சிரிக்கிறாள்...

ஓ... இவள் மொழிப்புலமை வியக்கத்தக்கது...

''கௌடலீயம் போல தமிழில் ஏதும் நூலில்லையா?''

''ஏனில்லை? சாணக்கியனையும் மீறியவன் திருவள்ளுவன்.''

''ஏன் அந்த நூலை நீ வைத்துக் கொண்டில்லை?''

''வள்ளுவம்... மற, மன்னித்து விடு என்கிற நீதி நூல்; அரசியல் நூல்; வாழ்வியல் நூல். ஆனால், சாணக்கியம் அப்படியில்லை. மன்னிக்க முயலு. மன்னிக்கத் தகாதவர்களை மண்டையை உடைத்து விடு என்பது. ஒரு தேகத்தின் ஒரு பக்கம் அழுகிப்போனால் மருந்து போட்டுக் குணப்படுத்து என்பான் வள்ளுவன். சாணக்கியனோ அந்த அழுகிய பகுதியையே வெட்டி எறிந்து விடு என்பான். இந்த மனிதர்களையே [1]குதிரைகள் என்று சொன்னவன் சாணக்கியன். ஒரே பார்வையில் செலுத்த மறந்தால் தறிக்கெட்டு விடும் என்று சொன்னவன் சாணக்கியன். எனவே அவனை எனது ஞான குருவாக்கிக் கொண்டேன்.''

வெலவெலத்துப் போகிறாள் ஜீஜாபாய்.

தனது மகனுக்கேற்ற ஞானகுரு இவள்தான் என்று அக்கணமே அழுத்தமான முடிவுக்கு வருகிறாள்...

இவளுக்குத் தெரியாத பாஷைதான் என்ன?

''பூஜ்யா? இஸ்லாமியர்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''எதிர்காலத்தில் நம்முடன் கைகோத்து நிற்கப் போகிற சகோதரர்கள் என்று நினைக்கிறேன்.''

அதிர்ச்சி...

''தவறியும் இது சிவாஜி காதுகளில் விழுந்துவிடப் போகிறது.''

''நான் யாருக்காகவும் எனது கருத்துக்களை மறைத்துக் கொண்டு வேஷம் போடுபவளில்லை. அவசியமுமில்லை. இன்றைய நிலையில் ஒரு பீஜப்பூரை வைத்தோ ஔரங்கசீப்பை வைத்தோ எடை போடலாகாது. ஒரு சிவாஜிக்கு இருக்கிற இந்து சாம்ராஜ்யக் கனவுபோல, ஒரு ஔரங்கசீப்புக்கும் இஸ்லாமிய சாம்ராஜ்யக் கனவு இருக்கக்கூடாது என்பது என்ன நியாயம்? அப்படிப் பார்த்தால் ஒரு சிவாஜிக்கு மகாராஷ்டிர சாம்ராஜ்யக் கனவு இருப்பதுபோல் ஒரு ஆந்திரனுக்கோ, தமிழனுக்கோ மொழி சாம்ராஜ்யக் கனவு

1. அதிகரணம் - 2, அத்தியாயம் - 30.

ஏற்படுமல்லவா? [1]எல்லாமே எங்கள் தேசம்; எல்லாருமே எங்கள் உறவினர்கள் என்று ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் ஒரு தமிழ்ப் புலவன் பாடிவிட்டுப் போயிருக்கிறான். இப்படி வேறு எவனும் பாடியதில்லை. அதனால்தான் பூஜ்யா மராட்டியத் தலைவனைக் காதலிக்கிறாள். இந்து தேசம் சகோதர தேசமாக வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறாள். ஆயினும், எனது காதலரின் மதப்பற்று எனக்குப் பிடித்திருக்கிறது. ஒரு நாட்டின் மதம் அழிந்து பட்டால் எல்லாமே அழிந்து பட்டது போலத்தான்! இந்துமதம் ஒரு காலத்தில் அழிந்துவிடும் என்பது எனது தீர்க்கதரிசனமான கணிப்பு. அதன் போர்க் கொடியை உயர்த்துகிற மாவீரர் எனது காதலர். எனவே அவரை ஆதரித்து நிற்கிறேன். எனக்கு மொழியில் நம்பிக்கை கிடையாது.''

இவள் ஓர் அபூர்வ சிருஷ்டியாகத் தெரிகிறாளே...

''அப்படி என்றால் இந்து சாம்ராஜ்யக் கனவு வீண் என்கிறாயா?''

''ஒருவிதத்தில் இந்த சாம்ராஜ்யமும் வேண்டாம்; இஸ்லாமிய சாம்ராஜ்யமும் வேண்டாம். இரண்டையுமே வெறுக்கிறேன். இந்த நாட்டில் இஸ்லாமியர்களை விரட்டி விட முடியாது. எனது காதலர் விரட்ட நினைப்பவரானால் எதற்காக அவரது பாசறையில் இஸ்லாமியர்கள் அதிகாரிகளாகவும், போர் வீரர்களாகவும் இருக்க வேண்டும்? பொதுவான ஒரு [2]சுயராஜ்யக் கனவு தேவை! இந்துக்களும் இஸ்லாமியர்களும் அந்தக் கனவை நனவாக்க வேண்டும் என்பது எனது ஆசை!''

இவளை சிவாஜிக்கு மனைவியாக்குவதைவிட மந்திரி யாக்கினால் என்ன?

''நீ சிவாஜிக்கு முதன் மந்திரியாக இருக்க வேண்டியவள் பூஜ்யா!''

''இப்போது மட்டும் என்னவாக இருக்கிறேனாம்?''

---

1. யாதும் ஊரே; யாவரும் கேளிர். - கணியன் பூங்குன்றனார்.
2. பின்னாளில் சிவாஜி இந்தியாவுக்கு 'சுயராஜ்யா' என்றே பெயர் வைக்கிறார். 'Shivaji the great' Dr. Balakrishna.

அயர்ந்து போகிறாள் ஜீஜாபாய். இப்பேர்ப்பட்டவள் மந்திராலோசனைக் கூட்டத்துக்கு ஏன் வரவில்லை? பூஜ்யாவே பேசுகிறாள்:

''சம்பளத்துக்குப் பணிபுரியும் அமைச்சன் நேரத்தைக் கவனிக்கிறான். மேலான லஞ்சத்தைக் கவனிக்கிறான்; சமயத்தில் நாட்டைக் கபளீகரம் செய்கிறான். நான் நேரத்துக்கும், நேர்மைக்கும் பணிபுரிபவள். சம்பளத்தைக் கவனிப்பதில்லை. நீருக்குள்ளிருக்கும் மீனுக்குத் தானுண்ட நீர் அளவு தெரிவதில்லை என்கிறான் சாணக்கியன். உங்கள் அரசாங்கத்தில் பலர் அளவின்றி விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அளவுக்கு மீறிப் பலரைச் சந்தேகப்படு கிறார்கள். சிவாஜி என்கிற சர்வ வல்லமை பொருந்திய மாவீரரைக் கொண்டு செலுத்த அறிவு ஜீவிகளில்லை. அதனால்தான் நீங்கள் வரச்சொன்ன மந்திராலோசனைக் கூட்டத்துக்கு நான் வர மறுத்தது. நீங்களும் ஏதோ அலட்சியப்படுத்தியதாக நினைத்திருப்பீர்கள். எனது ஆலோசனை என்றும் உண்டு. மந்திராலோசனை நூறு சொன்னாலும், எனது காதலர் நான் சொல்லுகிற ஆலோசனைப்படியே நடப்பார் என்பது நானறிந்ததே! மேலும், என்னைக் கொன்றுவிட நினைத்த மந்திராலோசனைக்கு நான் வந்திருந்தால் பலர் கொல்லப்பட்டிருப் பார்கள். இது தேவைதானா ராஜமாதா?''

இத்தனையும் ஒருமருங்கே ஒளிந்து கவனித்துக் கொண்டிருந்த மாவீரத் திலகம் சிவாஜியின் வீரக் கண்கள் ஆனந்தத்தால் கசிந்து கொண்டிருந்தன. அதே நேரத்தில் விஷம் வைக்கத் துணிந்தவர் யார் என்பதில் கறுவிக் கொண்டும் இருந்தன.

-----

# 11

விரைவில் வந்து விடுவதாகக் கூறி அயல்தேசம் செல்கிற கணவன் மார்கள் உரிய காலத்தில் திரும்ப வில்லை என்றால், சூத்திரன் மனைவி ஓராண்டு வரையும், வணிகன் மனைவி இரண்டாண்டு வரையும், அரசன் மனைவி மூன்றாண்டு வரையும், பார்ப்பனன் மனைவி நான்காண்டு வரையும், கால விதிமுறைப்படி மன்னித்து எதிர்பார்க்க வேண்டும். அந்த வரையறுக்கப்பட்ட காலத்திலும் கணவன்மார்கள் வரவில்லை யானால், மனைவியானவள் கணவனளித்த சீதனப் பொருள்களை கணவனது குடும்பத்தாரிடம் ஒப்படைத்துவிட்டுப் பிறந்தகம் செல்லலாம். அல்லது ஒத்த குலத்தவனை மறுவிவாகம் செய்து கொள்ளலாம்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 3, அத்தியாயம் - 61).

**சி**றிது நேரம் அங்கே முழுமையான அமைதி. அந்த அமைதியில் ஒரு பரிபூரணத்துவம் நிறைகிறது.

பூஜ்யா எழுந்து கொள்கிறாள்.

எதற்காக இவள் எழுந்து கொள்கிறாள்?

''ஏன் பூஜ்யா! எதற்காக திடுமென்று எழுந்து கொண்டாய்?''

தோகை இமைகள் படபடக்க நீல விழிகள் நிதானமாக நோக்க, பாகுச் சொற்களைப் பதுக்கி வைத்திருக்கும் பவழப் பேழை திறக்கிறது;

''முதன்முதலில் வந்திருக்கிறீர்கள்; சமைத்துப் போட வேண்டாமா?''

ஜீஜாபாய் ராஜாரிகமாகச் சிரிக்கிறாள். ஆ! அந்த முகத்தில் ஒரு நிஜமான தாயின் பிரகாசம் தெரிகிறது.

''பூஜ்யா! முதன்முதலில் நீ என்னுடம் சாப்பிடுவது அரண்மனை உப்பாக இருக்க வேண்டும் என்பது என அவா. நான் புறப்படுகிற போதே மூவருக்கு உணவு கொண்டு வருமாறு ஆணை பிறப்பித்து விட்டுத்தான் வந்தேன்!''

மூன்று பெயருக்கா?

''அது யார் அந்த மூன்றாமவர் ராஜமாதா?''

''சிவாஜி.''

''அவர்...''

''அவன் வேறெங்குமில்லை. இந்தக் குடிலுக்குள் எங்காகிலும் அவனது காதுகள் புதைந்திருக்கும்.''

விழித்தறியாத விழிகள் விழிக்கின்றன.

தாயின் அனுமானத்தைக் கண்டு உள்ளுக்குள் நகைத்துக் கொள்கிறார் சிவாஜி.

''அவர் இங்கேதான் இருப்பார் என்கிறீர்களா?''

''பூஜ்யா! நீ அவனை அறிந்தது அவ்வளவுதான். இல்லையென்றால் எங்கோ பிறந்த தனிமனிதன் இத்தனை அதிகாரிகளைக் கொண்டு நிர்வகித்து நாற்பது கோட்டைகளின் தலைவனாக இருக்க முடியுமா?''

‘‘எதற்காகத் தலைவனாகவே இருக்க வேண்டும்? மகாராஜ பிரகடனம் செய்ய வேண்டியதுதானே?’’

‘‘என்னையே கேட்கிறாயா பூஜ்யா! நான் தினமும் வலியுறுத்துவதே இதுதான்!’’

‘‘ஏன் தயக்கம்?’’

‘‘அதற்கும் நீதான் பதில் சொல்ல வேண்டும்.’’

‘‘சுமக்க முடியாத சுமையை என் தலையில் ஏற்ற வேண்டாம், ராஜமாதா.’’

‘‘பீஜப்பூரை அடக்கிய பிறகு மகுடாபிஷேகம் வைத்துக் கொள்ளலாம் என்கிறான்.’’

‘‘நல்ல முடிவு.’’

‘‘அது உனது முடிவாக இருக்குமோ என்கிற சந்தேகம்.’’

‘‘ஒருவிதத்தில்...’’

பூஜ்யாதேவியின் அலங்காரத் தலை அமைதியாகக் குனிகிறது...

‘‘பூஜ்யா! இப்போது இதற்கு என்ன முடிவு கூறப்போகிறாய்?’’

‘‘எதற்கு? உங்கள் கணவர் வருகை குறித்துத்தானே?’’

ராஜமாதா தலையசைக்கிறாள்.

‘‘பேசாமல் அவருடன் ஒரு கைதியாகவே தங்கள் குமாரரைத் தாராளமாக அனுப்பிவிடலாம்.’’

‘‘பூஜ்யா!’’

அரண்டு அலமருகிறாள் ஜீஜாபாய்.

‘‘என்னை அபிப்பிராயம் கேட்டால் நான் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்.’’

‘‘கேட்கிறேன்! ஆனால் இந்தப் பயங்கர அபிப்பிராயத்துக்குக் காரணம்?’’

‘‘இது பயங்கர அபிப்பிராயமல்ல; பயனுள்ள அபிப்பிராயம்.’’

‘‘காரணம்?’’

‘‘காரணம் கூறி அரசியல் நடத்தினால் உருப்படாது. சில உண்மைகள் அல்லது ரகசியங்கள், அவை உதித்த இடத்திலேயே இருக்க வேண்டும். வெளியேறி விடுமானால், செயல்கள் தற்கொலை செய்து கொள்ளும்.’’

‘‘எனது புருஷனே மகனை...’’

‘‘நியாயப்படி அவர் உங்கள் புருஷர் அல்ல. பாசமில்லாத காரணத்தை வைத்துச் சொல்லவில்லை! மனைவியை வருடக் கணக்கில் பிரிந்து இருந்தாலே விவாகரத்தாகி விடுகிறது என்கிறது சாணக்கியம். இதற்கு வழக்கு மன்றமே தேவையில்லை. பிராமணர் களுக்கு மட்டும் நான்காண்டு தயவளிக்கிறான்.’’

‘‘காரணம்?’’

‘‘இதைத்தான் கேட்கக்கூடாது. ஆனாலும் சொல்லுகிறேன். சாணக்கியன் ஒரு பிராமணன். இது விஷயத்தில் அவன் பல இடங்களில் தவறுகிறான். அவன் நியாய தருமங்கள் வேறு! பகவத் கீதையின் எழுநூறு ஸ்லோகங்களில் நானூறு உலகமகா ஸ்லோகங்கள். ஐந்நூறு பிரமணீயம்; அதனால் அதனைப் போற்றாமலிருக்க முடியாது. ஏன்? இவையனைத்தும் இடைச்செருகலாகவும் இருக்கலாம். தாங்கள் திருக்குமாரரை எடுத்துக் கொள்ளுங்களேன்! பிரமணீயம், சமஸ்கிருதம் என் இரு கண்கள் என்கிறார். அந்தக் கோட்பாடு ஒரு பிராமண குலத்தில் பிறந்த எனக்கே பிடிக்காத அசிங்கமாக இருக்கிறது. இந்தக் குறைபாடு திருவள்ளுவனிடம் பார்க்க முடியாது. ஆனாலும் கீதை சொன்னதை, சாணக்கியன் சொன்னதைப்போல, இந்த உலகத்தில் யாரும் சொல்லவில்லை என்று வாதாடவும் என்னால் முடியும். அதனால்தான் ராஜமாதா, எனது காதலர் சுயராஜ்யாவை சிருஷ்டித்த உடன், கௌடலீயத்திலிருந்து எதைப் பிரகடனப்படுத்து கிறேனோ இல்லையோ? மூன்றாவது அதிகரணத்தின் அறுபத்தோராம்

அத்தியாயத்தை நிச்சயம் பிரகடனப்படுத்துவேன். பெண்களில் கற்புள்ளவர்களை நீக்கி ஏனைய வேசிகள், வேசியாக நினைப்பவர்கள், அண்டை வீடு சென்று அரட்டையடிப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் தண்டம் விதித்து இருக்கிறான் சாணக்கியன். அப்படியே புருஷர்களுக்கும் தண்டம் விதிக்கிறான்.''

கொஞ்சம் அதிகமாகவே பேசி விட்டாள் பூஜ்யா. ஆயினும் அவளது அறிவார்ந்த பேச்சு ஜீரணிக்கத் தகுந்ததாக இருந்தது. சில கணங்கள் அமைதிக்குப் பிறகு...

''அது சரி! இப்போது நீ சிவாஜிக்கு விதித்து இருக்கிற தண்டம் பயமானதாக இருக்கிறதே பூஜ்யா?''

''விருப்பம் இருப்பின் பின்பற்றுங்கள். இல்லையேல் உங்கள் விருப்பப்படிச் செய்யலாம்!''

இவ்வாறு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பூஜ்யா கூறியதும், அரண்மனையிலிருந்து உணவு வந்துவிட்ட செய்தியை அறிவித்தாள் அரண்மனையிலிருந்து வந்த தோழிப் பெண்.

'உணவருந்திக் கொண்டே பேசலாம் ராஜமாதா!''

விநயமாகச் சொல்கிறாள் பூஜ்யாதேவி.

''அவன் - சிவாஜியைக் காணோமே!''

''நீங்கள் நினைத்தது போல அவருடைய காதுகள் இங்கே புதைந்திருக்கலாம். நீங்கள் நினைப்பதுபோல் அவர் சாப்பிட வரமாட்டார்.''

ஆச்சரியத்தோடு நோக்குகிறார் ராஜமாதா.

''எதற்கும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போமே!''

''அவசியமே இல்லை.''

''ஒருகால் வந்துவிட்டால்?''

‘‘நான் எனது சம்பளம் பெறாத, பெயரளவு மந்திரி பதவியிலிருந்து விலகிக் கொள்வேன். ஏன்? எனக்கு நீங்கள் தருகிற மதிப்பு எந்தளவுக்கும் லாயக்கற்றது என்பதைப் பரிபூரணமாக ஒப்புக்கொண்டு விடுவேன்!’’

‘‘பூஜ்யா!’’

‘‘எனது கணிப்பு வீண் போனதில்லை. ஆயினும் யானைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல் எப்போதாவது வீண் போவதுமுண்டு. இது விஷயத்தில் நிச்சயம் வீண் போகாது.’’

ராஜமாதா எழுந்து கொண்டாள்.

உண்டு முடிக்கலாம் என்கிற உத்தரவு போலிருந்தது அந்த வேகம்...

பணிப் பெண்கள் கடமைகளில் மூழ்கினர்.

மணக்க மணக்க வந்திருந்த அறுசுவை விருந்தை உண்டனர்.

அதுவரை ராஜமாதா ஜீஜாபாய் எதுகுறித்தும் பேசிக் கொள்ளவில்லை.

ஏதேனும் பேசுவார்கள் என்றே எதிர்பார்த்தாள் பூஜ்யாதேவி.

சிந்தனை வேகமாக வேலை செய்துக்கொண்டிருக்கிறது.

‘‘ராஜமாதா! சாப்பிடுகிறபோது மௌனமாகச் சாப்பிடலாம். ஆனால் சிந்தனைக்கு வேலை கொடுத்துக் கொண்டே சாப்பிடக்கூடாது. அது அஜீரணப்படுத்தும் அல்லது நோயுண்டாக்கும். இளமையாக இருந்தால் விரைந்து முதுமையைக் கொடுத்துவிடும்.’’

‘‘உனக்கு மருத்துவம் கூடத் தெரியுமா பூஜ்யா?’’

பூஜ்யாவின் புன்முறுவல்.

‘‘எனக்குத் தெரியாதது எதுவுமே இல்லை.’’

நிரம்பவும் செருக்கான பதில்.

''அப்படியா? நான் ஒன்று கேட்பேன், கோபித்துக் கொள்ளக் கூடாது. நியாயங்களில் சூட்சுமமான நியாயம் எது?''

''தாலிபுலாக நியாயம்.''

''தாலிபுலாக நியாயம்? அப்படியென்றால்...?''

''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது.''

ராஜமாதாவுக்குப் புரையேறியது.

விழித்த விழிப்பில் நாசியில் ஒரு சோறு அடைத்துக் கொண்டது.

உண்டு முடித்தனர்.

கையலம்பிக் கொண்டதும் பழையபடி வந்தமர்ந்தனர்.

சற்றே ஓய்வு கண்டு எழுந்து கொண்டாள் ராஜமாதா.

புறப்பட ஆயத்தமாகிவிட்டாள்.

''நீ எப்போது அரண்மனைக்கு வருவாய் பூஜ்யா?''

''வருகிற நேரத்தில் வந்தே தீருவேன்!''

''நல்லது; நீ இனி எனது பாதுகாவலில் இருக்க வேண்டியவள். ஆகவே உனக்கும் சில பணிப்பெண்களை நியமிக்கிறேன். உனக்கென்றே ஓர் அதிகாரியை நியமிப்பேன். உனக்கு ஏதேனும் ஒன்று என்றால் அவர்கள்தாம் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்.''

தன்னுள் நயமாகச் சிரித்துக் கொள்கிறாள் பூஜ்யாதேவி.

''தேவைதானா ராஜமாதா?''

''எனக்குத் தேவையென்று படுகிறது. ஒரு நாட்டில் எதை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவுஜீவிகளைப் பெறமுடியாது. ஒரு நாடு அறிவிஜீவிகளைக் காக்க மறந்தால் அல்லது மறுத்தால் அந்த நாடு, நாளடைவில் மடையர்களை யாகம் வளர்க்கச் செய்து பேய்ப் பிரசன்னங்களைத் தரிசிக்க வேண்டியதாய் விடும்.

உதாரணத்துக்கு எத்தனையோ சொல்லலாம். உனது சாணக்கியனையே சொல்லலாம். நாட்டை உண்டு பண்ணியவனும் அவனே; நாட்டை அழித்தவனும் அவனே!''

ஓ... இப்போதுதான் ஜீஜாபாய் ஒரு ராஜமாதாவின் கம்பீரமுடன் பேசுகிறாள்...

சாணக்கியனை ஓரளவு அறிந்தே பேசுகிறாள் ராஜமாதா...

தாதாஜி கண்டதேவரிடம் கேட்டுக்கொண்ட பாடங்களில் கௌடலீயமும் ஒன்றாயிற்றே!

ராஜமாதா விடைபெறுகிறாள்...

பூஜ்யாதேவி கரம் கூப்புகிறாள்...

''பூஜ்யா! சிவாஜி கைதியாக வேண்டியதுதானா? மறுபரிசீலனை கிடையாதா?''

''நான் கவனித்துக் கொள்கிறேன். பிறகு உங்கள் விருப்பம்.''

''ராஜமாதா பல்லக்கில் ஏறுகிறாள்...

பூஜ்யாதேவியைக் கவனிக்கிறாள்...

ஆனந்த நீர்த் திவலைகளுடன் பூஜ்யா கரம் கூப்பி விடை தருகிறாள்...

பல்லக்கு புறப்பட்டது.

பாலாஜியும் தனது அண்ணியார் பூஜ்யாதேவியிடம் விடைபெற்றுக் கொண்டு பின்தொடர்ந்தான்.

ஜீஜாபாயின் சிந்தனை அதிகமாகவே வேலை செய்யத் தொடங்குகிறது.

ராஜ வீதியில் பல்லக்கு சென்று கொண்டிருக்கிறது...

பக்கத்தே புரவியில் வந்து கொண்டிருக்கிற பாலாஜியை அழைக்கிறாள் ராஜமாதா ஜீஜாபாய்.

அருகில் வந்து குதிரையை மெல்லச் செலுத்துகிறான் பாலாஜி.

அவனிடம் பூஜ்யாதேவி, நடந்ததை ஓரளவு கூறி, பிறகு சிவாஜியைக் கைதாகச் சொன்ன செய்தியையும் கூறுகிறாள்.

பாலாஜியால் இதனை ஏற்க முடியவில்லை. அவனது உடல் பதறுகிறது.

''இது ஏற்க முடியாதது ராஜமாதா!''

- பாலாஜி மறுப்பு தெரிவிக்கிறான்.

''என்னாலும் ஏற்க முடியவில்லை. ஆனாலும் பூஜ்யா எது குறித்து இப்படிச் சொல்லுகிறாள் என்பதுதான் புரியவில்லை.''

''எது குறித்துச் சொன்னாலும் நான் மறுத்துப் போராடுவேன். இது அவசியமற்ற அநியாயம்.''

''அப்படியென்றால்... சிவாஜியின் தந்தை நிலைமை?''

''வெறுங்கையோடு போகச் சொல்லுங்கள் தாயே! தந்தையார் பீஜப்பூருக்குக் கடமைப்பட்டவராக இருக்கலாம். நாம் எதற்குமே கடமைப்பட்டவர்களல்ல. இதனால் வருகிற பாவங்கள் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கு, எந்தவித தாய்தந்தைப்பாசமும் கட்டுப்படுத்தக் கூடாது.''

ஆ! இவன் ஒருபடி மேலே சென்று தாய்ப்பாசமும் தேவையற்றது என்கிறான். நிஜமான ராஜவிசுவாசி...

''அப்போது உனது முடிவு இதுதான் என்கிறாயா?''

''எது வந்தாலும் எனது நண்பனை இழக்க நான் சம்மதியேன்.''

பல்லக்கு பிரசண்ட கோட்டை மலையடிவாரத்தை அடைகிறது...

ராஜமாதா அங்கிருந்து தொலைதூரத்தை நோக்குகிறாள்...

காலையில் காணப்பட்ட கூடாரங்கள் இப்போது இல்லை...

இதற்குள் என்ன நடந்திருக்க முடியும்?

பல்லக்கு மலைமீது செல்கிறது.

ஒரு கட்டம் வந்ததும் அதற்குமேல் நடந்துதான் செல்ல வேண்டும்.

வெயில் அளவாக இருந்தது.

நடந்து செல்கிறார்கள்.

பூவண்ணக் குடை பிடிக்க, ராஜமாதா அரண்மனைக்கு நடந்து செல்கிறாள்.

அரண்மனையை அடைகிறபோது...

பிரதானி மொரோபந்த் ஏதோ கவலை நிறைந்த செய்தியைத் தாங்கிக்கொண்டு நிற்பவர்போலத் தோற்றமளித்தார்.

அருகே வந்த ராஜமாதா ஜீஜாபாயை வணங்கிய மொரோபந்த் கூறிய செய்தி:

''மாதா! நமது வீரத் தலைவர் வலியச் சென்று தந்தையிடம் சரணடைந்துவிட்டார். அப்போது அவர்கள் கட்டிப்பிடித்துக் கொண்டு கண்ணீருடன் உரையாற்றியது ஒரு பாசத்தின் காவியம். தலைவரைக் கைது செய்து கொண்டு, பான்ஸ்லே புறப்பட்டு விட்டார்!''

பயங்கர இடிபோன்ற செய்தி...

''சிங்கம் வலிந்து கைதாகிச் சிறை நோக்கிச் செல்கிறதா?''

- பாலாஜியின் குமுறல்!

''பூஜ்யாதேவியின் அபிப்பிராயமே தனது அரசியல் சாசனம் என்று எண்ணிவிட்டான் சிவாஜி.''

- ராஜமாதாவின் பெருமூச்சு.

-----

# 12

எழுத்தாளன் அமைச்சர்க்குரிய குணங்களையும் பலவகைப்பட்ட உலகியல் அறிவையும் சொற்களை விரைவிலிணைக்கும் ஆற்றலையும் அழகாக எழுதுந்திறனையும் எளிதில் வாசித்தறியும் வன்மையையும் உடையவனாதல் வேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 3)

**வி**ஜயபுரி என்கிற பழம்பெரும் புகழ்பெற்ற பீஜப்பூர் ராஜ்யமே வியந்து மூக்கின்மேல் விரல் வைத்து மூச்சுவிட அஞ்சி, பின்னர் பெருமூச்சாய் அது பறிய...

ஓ... சிவாஜியைச் சிறைப்பிடித்துக்கொண்டு வந்து விட்டார்களா?

நம்பமுடியவில்லையே...!

வியப்பு...

ஒரு தொல்லை நீங்கியது! -

பெருமூச்சு...

பீஜப்பூர் அரண்மனையை முதன்முறையாகப் பார்வையிடு கிறார் மகாராஷ்டிர திலகம் வீர சிவாஜி.

ஆ! அரண்மனையா அது? ஒரு குட்டிச் சொர்க்கத்தையே நிர்மாணித்தது போல...

இந்த முகலாயர்களே அனுபவிக்கப் பிறந்தவர்கள்.

வெறும் மலைப் பெருச்சாளி மாதிரி மலைக்கோட்டைகளைப் பிடித்து வாழ்ந்த வாழ்வுக்கு பீஜப்பூர் ஒரு வித்தியாசத்தைப் பறை சாற்றுகிறது...

பீஜப்பூர் இப்படி இருக்குமானால் ஷாஜஹான் அரண்மனை...

சிவாஜியால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஆக்ராவுக்குச் சென்று திரும்பினால் என்ன? இதுமாதிரி ஒரு வாய்ப்பு கிடைக்கிறபோது பார்க்காமலா போகப் போகிறோம்...

இப்போது கிடைத்திருப்பது வாய்ப்பா?

பூஜ்யாதேவி அறிவாள்...

சுல்தானியா பேகம் பெரியதாக மகிழ்ந்து போகிறாள். சிங்கத்தைச் சிறைப்பிடித்தாய்விட்டது.

பால்ய அரசன் ஆதில்ஷாவும் ஒருகணம் ‘இது நடந்திருக்குமா?’ என்று ஆச்சரியத்திலாழ்கிறான். நடந்திருக்கிறது. சிவாஜியை ஒரு கௌரவமான சிறையில் அடைத்திருக்கிறார்கள்...

அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சிறைச்சாலை ஒரு சிங்காரப் பூஞ்சோலை; அல்லது சிந்தனாவனம்...

சிவாஜிக்கு அது இரண்டுமாக இருந்தது.

மாவீரப் புதல்வனைக் கௌரவச் சிறையில் - அது கௌரவமானால் என்ன அகௌரவமானால் என்ன - சிறையில் அடைத்து விட்டோமே என்று புழுங்கினார் ராஜா ஷஹாஜி பான்ஸ்லே. அந்தத் தந்தைமை யுள்ளம் அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்பது புரியாது தவித்தது.

தர்பாரைக் கூட்டி சிவாஜியை விசாரிக்க வேண்டும் என்று தளபதி அப்சல்கான் சொன்னதை பீஜப்பூர் சுல்தானா பேகம் ஏற்கத் தயாராக இல்லை. சிவாஜி என்ன அப்பேர்ப்பட்ட மாபெரும் தவற்றைச் செய்துவிட்டார்? தந்தைப் பாசத்துக்கு அடிமையாகி - கைதாகி வந்திருக்கிறார் என்பதுகூட இந்த அப்சல்கானுக்குப் புரியவில்லையே!

மகாராஷ்டிரப் புரட்சித் தலைவர் சிவாஜியின் புகழ், மலைக்கு மலை வெற்றித் தீபங்களாய்ப் பிரகாசிப்பது அப்சல்கானுக்கு ஆதிநாளிலிருந்தே எரிச்சல், பொறாமையாய்ப் புகைந்தது. தந்தையை விட்டுச் சிறைப்பிடித்து வரச் சொன்ன அபிப்பிராயத்தை அழுத்தந் திருத்தமாக வழங்கியவனே இந்த அப்சல்கான்தான்.

குறிப்பிட்ட நேரம் நெருங்கியதும் முகமது மகால் என வழங்கும் அரண்மனைக் கூடத்தில் சிவாஜியை அழைத்து வருகிறார்கள்.

சிவாஜிக்கு அளிக்கப்பட்டது கௌரவச் சிறையானாலும் அது சகல வசதிகளையும் கொண்ட ஒரு குட்டி மாளிகை. அந்த மாளிகையில் வீரத் திலகமான சிவாஜிக்கான எந்தக் குறையும் வைக்காது பணிபுரிய ஆட்களை நியமித்து இருந்தார்கள். பீஜப்பூருக்குப் பலவித வெற்றிகளைக் குவித்த மாபெரும் சேனாதிபதி யாயிற்றே ராஜா ஷஹாஜி பான்ஸ்லே! அவரது வீர மைந்தர் - வேங்கையின் மைந்தர் - வீரசிவாஜி! அவருக்கு எந்தவித அகௌரவமும் இழுக்கும் வந்துவிடக்கூடாது என்பதில் மிக்கவும் கவனமாக இருந்தாள் பீஜப்பூர் ராணி சுல்தானா பேகம். எனவே வழக்கம்போல வாசனை நீரில் குளித்து முடித்து தமது இயல்பான அலங்காரத்துடன் முகமது மகாலில் பிரவேசிக்கிறார் சிவாஜி.

அவரது பிரகாசமான தோற்றத்தை முதன்முறையாகக் காண்பவர்கள் கண்களில் பிரகாசம். சில கண்களில் அக்கினிப் பிரகாசம்; சில கண்களில் சூரியப் பிரகாசம்.

சுல்தானா பேகம் பல கணங்கள் மருண்டு கவனிக்கிறாள்.

ஓ... இவன்தான் சிவாஜியோ?

அப்படியே ஷஹாஜியை உரித்து வைத்தாற்போல...

கண்களில் சூரியப் பிரகாசம்...

அப்சல்கானின் அடிவயிற்றில் தீப்பற்றி எரிகிறது...

அக்கினி ஜுவாலைகள்...

அந்த முகமது மகாலின் அற்புத அலங்காரம் நிறைந்த அழகைக் கண்டு வியக்கிறார் சிவாஜி! ஆ! இந்த இஸ்லாமியர்கள் உண்மையில் அனுபவிக்கப் பிறந்தவர்கள்தாம்...

யாருமே பேச்சைத் தொடங்காது ஏன் பதுமைகளாய்த் தம்மைக் கவனிக்கிறார்கள் என்று நினைக்கிறார் சிவாஜி.

தமது வீரமைந்தனைப் பலரும் மயக்கம் நிறைந்த ஆச்சரியக் கண் கொண்டு பார்க்கின்றனர் என்பதை அறிகிறபோது ராஜா ஷஹாஜி பான்ஸ்லேக்குப் பூரிப்பு, பெருமை தாங்காத மெய்யுணர்வுகள்!...

சிவாஜியே பேச்சைத் தொடங்குகிறார்: ''என்னைச் சிறைப் பிடித்த காரணம், பீஜப்பூர் சுல்தானா பேகம்?''

ஆ! எத்தனை கம்பீரமான குரல் அது! மருண்டு போன சுல்தானா பேகம் அந்த மருட்சியிலிருந்து விடுபட்டு, ''சிவாஜி! சிறைப் பிடித்த காரணத்தை உன் தந்தை உனக்கு விளக்கவில்லையா? ஆச்சரியம்தான்!'' என்றாள்.

''ராணி பேகம்! மரியாதை கொடுங்கள்; நான் மரியாதை கொடுத்துப் பேசுவேன்! நான் உங்கள் குற்றவாளியல்ல; ஒரு தந்தையின் கௌரவத்தைக் காக்க வந்த தனயன்! தென்னகத்தின் எதிர்கால சத்ரபதி!''

மலைத்துப் போகிறாள் மகாராணி பேகம்!

ஓ...இது நிஜமாகவே ஒரு புரட்சிச் சிங்கம்!

யுத்தகளத்து அரிமா!

சுதந்திர தீபம்!

சுயமரியாதைச் சூரியன்!

கவனமாகவே பேச வேண்டும்!

''ஓ...நல்லது சிவாஜியாரே! உங்கள் தந்தை கூறிய விளக்கத்துக்கு நீங்கள் அளிக்கும் பதில்?''

''அதுதான் சிறைப்பட்டு வந்திருக்கிறேனே! இல்லை என்றால் என்பது பதிலை வாள்முனை கூறியிருக்கும்!''

சிலிர்த்த சிங்கம், சீற்றத்துடன் கர்ஜிக்கிறது.

அந்த முகமது மகாலில் - தர்பாரில் ஒரு சின்ன அதிர்ச்சி...

தொங்கிக் கொண்டிருந்த லஸ்தர் விளக்குகள்கூட ஒரு கணம் அசைந்து கலகலக் குரல் கொடுக்கின்றன...

பகல் நேரத்துப் பூலோகச் சக்கரவர்த்தியான மேலோக மாமன்னன் கோலாகலக் சூரியன், பலகணிகள் வழியாக ரத்தக் கிரணங்களைப் பாய்ச்சிச் சூடேற்றுகிறான்...

அப்சல்கானின் ரத்தம் கொதிப்புக் காண்கிறது!

''சிவாஜி! இது பரம்பரை ராஜவம்சம்! இங்கே கர்ஜிக்கக்கூடாது. அடக்கம் தேவை!''

அப்சல்கானின் கடூரமான குரலைக் கேட்டு நோக்கிய புரட்சித் தலைவர் சிவாஜி, ''யார் இந்தக் கோமாளி?'' என்று அலட்சியமாகக் கேட்க...

அதிர்ந்து ஆவேசம் கண்ட அப்சல்கான், ''என்ன சொன்னாய்? ஒரு கொள்ளைக்காரத் திருடன், என்னைப் பார்த்துக் கோமாளி என்பதா?'' என்று கூறிக்கொண்டே வாளையுருவ...

''அப்சல்கான்!'' - என்று அந்த அரண்மனையே அதிருமளவுக்குக் குரல் கொடுத்துக்கொண்டே எழுந்து வாளை யுருவினார் ராஜா ஷஹாஜி பான்ஸ்லே. ''அவன் என் மகன்! நீ எனக்குக் கீழே பணியாற்றுகிறவன்! அவன் நாற்பது கோட்டைகளுக்கு நாயகன்! நீ கொடுக்கிற சம்பளத்துக்கு ஊழியம் பார்க்கும்...? அவன் மக்கள் தலைவன்! நீ மண்ணில் புதைபடப் போகிறவன்! ஆட்சி மொழிக்குரியவன் என்பதால் அகங்கரித்துக் கொக்கரிக்காதே! அவன் கோமாளி என்றானென்றால் அரசியார் பேசிக்கொண்டிருக்க நீ அவசியமில்லாது தலையிட்டது தவறு!''

அப்சல்கானின் மீசை துடி துடிக்கிறது.

ஷஹாஜியின் வாள்முனைக்குமுன் அப்சல்கான் ஒரு வீரப் பொம்மை. ஆமாம், அவன் வெறும் பொம்மையல்ல!

ஒரு நிஜமான மாவீரனானாலும் ஷஹாஜியின் சர்வ வல்லமை பொருந்திய வாள் பலத்தை இந்திய சாம்ராஜ்யமே அறியுமே...

''ராஜா ஷஹாஜி! அப்சல்கான் சார்பில் நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் மகன் நமக்கு உதவியாக இருந்து ஷாஜஹான் படை முகாமைத் துகளாக்கினால் உங்கள் பதவியை அவருக்குத் தந்து உங்களுக்கு ஓய்வு தரலாம் என்று இருக்கிறேன். என்ன சொல்லுகிறார் என்று கேளுங்கள்!'' என்றாள் பீஜப்பூர் சுல்தானா பேகம்.

ராஜா ஷஹாஜி பான்ஸ்லே வாய் திறக்குமுன் சிவாஜியே பதில் சொன்னார்:

''ராணி பேகம் சாஹிபா! தந்தை மகன் என்கிற உறவு என்னைக் கைது செய்தபோது - தவறு, நானாகக் கைதாகி வந்தபோது அந்த உறவு! இப்போது உங்கள் முன் நிற்பவன் நாற்பது கோட்டை நாயகன்! ஒரு பீஜப்பூருக்குச் சமானமான பேய்க் காற்று! ஆனால் நல்லவர்களுக்கு இவன் தென்றல் காற்று! உங்களுக்கு உதவ முடியாது. நாட்டின் நாயகன் ஒரு சேனை நாயகனாவதா? அந்த அவமானம் எனது தந்தையார் சரித்திரத்தோடு முடியட்டும்! நான் இருந்தால் ஔரங்கசீப்புக்கு எங்கே உதவி செய்து விடுவேனோ என்கிற பயத்தால்தானே என்னைக் கைது செய்து அழைத்து வருமாறு எனது தந்தையாருக்குக் கட்டளை பணித்தீர்கள்? இந்த யுத்தம் முடியுமட்டும் என்னைக் கௌரவச் சிறையில்... சே! சிறையில் கௌரவச் சிறை வேறா? அந்தச் சிறையில் அடைத்து வைக்கலாம். ஆனால் ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கேதும் தீங்கு நடைபெறுமானால்...''

ஒருகணம் அமைதி...

''பீஜப்பூர் பற்றி எரியும்!''

அப்சல்கான் பற்களை நறநறவென்று கடித்துக் கொள்கிறான்.

''மகனே! ரத்தத்தின் ரத்தம் என்றும் பாராது உன்னைக் கைது செய்து கொண்டுவந்த நானே உனக்குக் காவலாக நிற்பேன். உனக்கு வருகிற உணவை நானே சுவை பார்த்து அனுப்புவேன்.''

ஆச்சரியமுடன் நோக்கிய சுல்தானா பேகம், ''அப்படி ஏதும் நடைபெறும் என்று நீங்கள் கருதுகிறீர்களா ஷஹாஜி?'' என்றாள்.

''நடைபெறாது. நடைபெற்றுவிட்டால்?'' என்று முழங்குகிறார் ஷஹாஜி.

''உங்கள் மகன்தான் கேவலப்படுத்தி விட்டார் என்றால் நீங்களுமா?''

''அப்சல்கானின் தலையீடு இவ்வாறு ஆலோசிக்கச் செய்கிறது.''

''அப்படியானால் கடல்போல் திரண்டு வருகிற ஷாஜஹான் படைகளை எதிர்த்துப் போராட நமது படைகளுக்குத் தலைமை தாங்குபவர் யார்?''

''ஏன்! இந்த யுத்தத்துக்கு அப்சல்கான் தலைமை தாங்குகிறார்!''

''ஷஹாஜி...!''

''மன்னிக்கவும் பேகம் சாஹிபா! தந்தையே மகனைச் சிறைபிடித்த கேவலத்தைவிட நீங்கள் அளிக்கப்போகிற தண்டனை கேவலமானது. ஒருமுறை - மன்னர் காலத்தில் எனக்கு எழுப்பிய சமாதியைவிடவா இந்த அவமானம் பெரிதாகப் போகிறது?''

அந்த மகாலே பல கணங்கள் வரை அமைதியில் ஆழ்ந்து தவிக்கிறது!

ராணியாரிடமிருந்து உத்தரவு வராதா என்று எரிச்சல் கொண்ட நெஞ்சமுடன் எதிர்பார்க்கிறான் அப்சல்கான்!

அவனது நாடி சற்று அதிகமாகவே துடிக்கிறது...

''அப்சல்கான்! நீயே யுத்தத்துக்குத் தலைமை தாங்குகிறாய்!'' இவ்வாறு சுல்தானா பேகம் கூறமாட்டாளா என்று எதிர்பார்க்கிறான்.

முகலாய ராணியிடமிருந்து ஒரு பெருமூச்சு பறிகிறது.

''முடிவு இதுதானா ஷஹாஜி?''

''ஒன்று சிவாஜியை விடுதலை செய்யுங்கள், என்னை யுத்தத்துக்கு அனுப்புங்கள்.''

''எனது உத்தரவுக்கு நீங்கள் பணிய வேண்டியவர்.''

''இது பற்றியதில் மறுப்பேன்! என் மகனை இழப்பதைவிட என்னை நானே இழக்கத் தயாராகிவிட்டேன்!''

''ஷஹாஜி!''

- சினந்து கூச்சலிடுகிறாள் சுல்தானா பேகம்!

''ஷஹாஜியையும் அந்தக் கௌரவச் சிறையிலேயே அடைத்து வையுங்கள். போர் முடிந்ததும் பார்த்துக் கொள்வோம். அப்சல்கான்! இந்த யுத்தத்துக்கு நீயே தலைமை தாங்குகிறாய். ஆனால் ஒன்று! மகாசேனாதிபதி பதவியும் பொறுப்பும் நமது ராஜா ஷஹாஜி பான்ஸ்லேயிடமே இருக்கட்டும்!'' என்றாள் சுல்தானா பேகம்.

உத்தரவு, அப்சல்கானை உசுப்பி எழுப்பினாலும் பதவியும் பொறுப்பும் அவனைப் பலவீனமாக்கிப் பரிதாபமாகப் பார்த்தன.

-----

# 13

[1]அமைச்சரவையில் அமைச்சர்கள் பன்னிருவர் இருக்க வேண்டும் என்று மாணவரும், பதினறுவர் இருக்க வேண்டும் என்று பார்கற்பத்தியரும், இருபதின்மர் இருக்க வேண்டும் என்று ஔசனரும் கூறுவர். ஆனால், திறமைக்குத் தக்கவாறு இருந்தாலே போதுமானது என்று கௌடலீயனாகிய யான் கூறுகிறேன்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 15).

**மா**னுட காவியத்தின் நிரந்தர ஞானப் பிரகாசமாய்க் கீழ்த்திசையில் கீதையின் மூலாசிரியனான பகற்பகவான் உதயம் கண்டு கொண்டிருக்கிறான்...

புள்ளினங்கள் யோக நியமனங்களைப் போலச் சுலோகம் பாடிச் சிறகடித்துப் பறக்கின்றன...

அந்த இளங்காலைப் போதில் தனது குதிரைக்கு முழுவேக பலத்தைத் தூண்டிப் பறந்து வருகிறான் பாலாஜி - சிவாஜியின் அந்தரங்கச் செயலாளன்; தளபதி; பூஜ்யாதேவியின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்!

கீற்றுக் குடிலையடைந்ததும் வந்த வேகத்தை நிறுத்த சேணங்களைப் பலங்கொண்ட மட்டும் இழுத்து நிறுத்துகிறான்...

---

1. இந்திரன் அமைச்சரவையில் ஆயிரவரும், தசரதனுக்கு அறுபதினாயிரவரும், பிரச்சோதனனுக்கு பதினாயிரவரும் இருந்தனர் என்பது புராணம். 'இந்திரன் உடலில் ஆயிரம் துளைகள்' என்கிற சாபம் வீணானது. அவனது அவையில் ஆயிரம் அமைச்சர்கள்.

குதிரையின் பெருத்த கனைப்போசை...

அதன் வாயில் வெள்ளை வெளேரென்று விலாழியின் கொப்புளிப்பு...

என்னமோ ஏதோவென்று வெளியே வந்து எட்டிப் பார்க்கிறாள் அறிவின் ஞானப்பிரகாசி பூஜ்யாதேவி. அதுவரை அவள் அந்தக் குடிலில் பலத்த சிந்தனை யுத்தத்துடன் கிழக்கும் மேற்குமாக உலவிக் கொண்டிருந்தாள்...

‘ஔரங்கசீப்பின் படையெடுப்பை அசைத்துப் பார்ப்பது எவ்வாறு?...’

புரவியிலிருந்து வேகமாகக் குதித்து இறங்கிய பாலாஜி, ‘‘அண்ணியாருக்கு எனது வணக்கங்கள்!’’ என்று கூறுகிறான்.

‘நான் இன்னும் மரபுப்படி அண்ணியாகவில்லை; எதற்கு இவ்வாறு அண்ணி அண்ணியென்று வாய்க்கு வாய் அறுக்கிறாய்?’ என்று கேட்கத்தான் பூஜ்யா வாய் திறந்தாள். ஆனால் பாலாஜி வந்த வேகம், கையிலிருக்கும் ஓலைச்சுருள் அவளை அவ்வாறு கேட்காமல் தடுத்தன.

‘‘உள்ளே வா பாலாஜி!’’

காவியம் உள்ளே செல்ல வீரியம் தொடர்ந்து செல்கிறது...

மிக்கவும் பவ்வியமாக ஓலையை நீட்டுகிறான்: ‘‘ஔரங்கசீப் பிடமிருந்து வந்த ஓலை! அன்னையார் படித்து விட்டு அண்ணியாருக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஆலோசனை பிறக்குமானால் உடன் ஆணையும் பிறந்துவிடும்!’’

ஓ... பெரிய சுமைகள் தலைக்கு மேலே உயருகின்றன...

உள்ளே அகிற்புகை மணத்துக் கொண்டிருக்கிறது...

சற்றுமுன்தான் பூசனைகள் முடிவு பெற்றன...

ஓலையைப் படித்துப் பார்க்கிறாள்...

விழிகள் மேலும் மலர்ந்து மௌனமாகின்றன...

ஓலையில் இருந்த செய்தி...

முந்தைய ஒப்பந்தப்படி இதுவரை முகலாய சாம்ராட் ஷாஜஹான் ஒதுக்கியிருக்கும் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஷாஜஹான் மாமன்னருடைய தலைவர்களுள் ஒருவராக சிவாஜி விளங்க வேண்டும். ஒரு சலுகை. ஏனைய தலைவர்களுக்குச் சுதந்திரம் கிடையாது. சுதந்திர கர்ஜனையிடும் சிவாஜிக்கு அது வழங்கப் படுகிறது. ஒப்புக்கொள்ள மறுத்தால் சிவாஜியின் நாற்பது கோட்டை களையும் பீஜப்பூர் துணை கொண்டு அழித்துத் துகளாக்கப்படும்...

ஆ! எத்தனை கடுமையான ஓலை...

மீண்டும் கிழக்கும் மேற்குமாக உலவுகிறாள்...

சிந்தனையில் ஒரு குருக்ஷேத்திரம்...

என்ன நினைத்தாளோ...

''பாலாஜி! எனதருமை மைத்துனா! விரைவில் செல்லுகிறாய்; வீரர்கள் நூற்றுவரை அனுப்புகிறாய்; அவர்களுடன் எனக்கு ஒரு சாரட்டு! ஆ(ங்)...! நீயும் வருகிறாய்!''

உத்தரவைக் கேட்டு ஒன்றும் புரியாது விழிக்கிறான் பாலாஜி.

''புரியவில்லையல்லவா? நாம் ஔரங்கசீப்பைப் பேட்டி காணச் செல்லுகிறோம்!''

ஷாஜஹான் மகன் ஔரங்கசீப்பையா?

அந்தக் கொடிய நெஞ்சுடையவனைப் பேட்டி காண்பதாவது...

அதுவும் இந்த அழித்தெழுதா ஓவியம்...

சிவாஜி மாகாவியம்...

''அண்ணி! நன்கு யோசித்துத்தான்...''

''என்னை சந்தேகிப்பவர்களை நான் மன்னிப்பேன்! என் மீது நம்பிக்கையில்லாதவர்களை...''

அவள் முடிக்கவில்லை.

''அண்ணி!'' என்று இடைமறித்துத் தலைபணிந்து நிற்கிறான்...

அவள் செவ்விதழ் நெளியச் சிரிக்கிறாள்...

''இனிமேல் இப்படி 'அண்ணி' என்றழைக்காதே!''

''பின் எப்படி அழைப்பேன்?''

மௌனஸ்தம்பமாகிறாள், சிவாஜியின் சுயராஜ்யாலயத்தின் துவஜஸ் தம்பம்!...

''அண்ணீ! நீங்கள் எனது தலைவனைக் 'கணவனாக அடையப் போகிறோம்' என்கிற நிஜமான பிரார்த்தனையுடன் இருப்பது சத்தியமானால், நான் அண்ணி என்றழைப்பது பரிசுத்தமானதாகும். விரைவில் நீங்களிட்ட உத்தரவைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறேன்!''

அவன் எவ்விதமான வேகச் சுழிப்புடன் வந்தானோ, அதே வேகச் சுழிப்புடன் திரும்புகிறான்...

'ஓ...பாலாஜி நீ மிகவும் உயர்ந்து நிற்கிறாய்! நீயே எனது சத்தியமான மைத்துனன்!'

பூஜ்யாதேவியின் நெஞ்சு பூரித்துப் புளகிக்கிறது...

புனிதமாக வாழ்த்தவும் செய்கிறது...

இரு நாழிகைப் போதுக்குள் பூஜ்யாதேவியின் கட்டளையை நிறைவேற்றியவன்போல வீரர்களுடனும் வெண்ணிறச் சாரட்டுடனும் வருகை தந்தான் பாலாஜி.

பூஜ்யா அப்படியொன்றும் பிரமாதமான ஒப்பனை என்று சொல்ல முடியாது; ஆயினும், ஓர் எதிர்கால சத்ரபதியின் காவிய மனைவி என்று ஒப்புக்கொள்ளக்கூடிய ஒப்பனையுடன் தயாராக இருந்தாள். அவளது அலங்காரம் பின்கணனின் காவியத்தை ரசிப்பது போன்றிருந்தது.

பாலாஜி வெளியே மிக்கவும் பணிவன்புடன் நிற்கிறான்.

வெளியே வந்த பூஜ்யாதேவி 'அருமை மைத்துனா' என்றழைப்பது போல முறுவலிக்கிறாள்...

''எனது வேண்டுகோளை ராஜமாதா உடனடியாக ஏற்றுக் கொண்டார்களா மைத்துனரே?''

பாலாஜி புன்னகையில் தெய்வீகம் மணக்கிறது. ‘‘நான் போராட வேண்டியதாய்விட்டது அண்ணி!’’

‘‘ஏன்?’’

‘‘ராஜமாதா உங்கள் கருத்தை இன்னமும் ஏற்கவில்லை. உங்களுக்கு ஏதேனும் நிகழ்ந்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். அதுவும் தலைவர் இல்லாத வேளையில் ஏதேனும் நிகழ்ந்தால் அது தன்னைச் சார்ந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள்.’’

‘‘ஓ…’’

‘‘அநேகமாகப் படைகள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. உங்கள் மீது ஓர் ஈ அமர்ந்ததாகச் செய்தி சென்றாலும் பிரசண்டக் கோட்டையின் முதல் முரசம் ஒலிக்கத் தொடங்கிவிடும்.’’

ஓ… மாமியாருக்கு அவ்வளவு நெருக்கமான மருமகளாய் விட்டோமா என்று எண்ணுகிறபோது பூஜ்யாவின் நெஞ்சுள் நிலா உதயமாகிக் கொள்கிறது!

அவ்வாறும் நடக்குமா?

ஒரு கணம் சிந்தித்துப் பார்த்துக் கொள்கிறாள்…

நடப்பது நடக்கட்டும்…

தனது காவற்பணியாளர் தலைவரான நரசிம்ம ராவைக் கவனிக்கிறாள்.

அவர் கவசம் தாங்கிய கோலமுடன் தயாராக இருக்கிறார்…

வெள்ளிய சாரட்டில் ஏறியமர்கிறாள் பூஜ்யாதேவி!

அது ராஜமாதாவின் சாரட்டு. அதை யாருமே பயன்படுத்துவது கிடையாது. மருமகள்களான சூரியபாயும் சாயாபாயும்கூட ஏறியமர்ந்து ஆசை தீர்த்ததில்லை. முதன் முறையாக அது பூஜ்யாதேவிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

சாரட்டு புறப்பட…

வீரர்கள் பின்தொடர…

கண்கொள்ளாக் காட்சி...

எவரும் எந்தக் கோஷங்களையும் எழுப்பவில்லை. அப்படியான கோஷங்களை பூஜ்யா வெறுப்பவள் என்பது பாலாஜிக்குத் தெரியும்.

அமைதியாக வடக்குத் திசை நோக்கிப் பயணம் சென்றது.

**வ**ட கிழக்காக அமைந்திருந்த சிம்ஹாபுரப் பள்ளத்தாக்கில் தண்டு இறக்கி இருந்தார் ஔரங்கசீப். ஔரங்கசீப்!

அந்த மலையடிவாரம் முழுவதுமே ஒரே கூடாரங்கள் - கண்ணுக்கெட்டியத் தூரத்துக்கு அப்பாலும் கூடாரங்கள்...

'இவர்கள் தோற்றால் பின்னர் எவர்கள்தாம் ஜெயிப்பர்?' என்பது போல எங்கு நோக்கினும் சேனைத் தலைகள். ஏதோ மலைகளிலிருந்து உருண்டு வந்து தேங்கிக் கிடக்கும் குண்டு குண்டு கற்களைப்போல அந்தத் தலைகள் தெரிகின்றன.

ஒருபுறம் புரவிகள் அணியணியாக...

யானைகள், ஒட்டகங்கள், பொதிகளைச் சுமந்துவந்த கழுதைகள், எருமைகள், வண்டிச்சாத்துகள், அவற்றினுள்ளே வண்டி வண்டியாக ஆயுதங்கள்...

அனைத்தையும் தொலைவிலிருந்து கண்ணுற்ற பாலாஜி அதிர்ந்து போகிறான்...

''என்ன மைத்துனா, அதிர்ந்து போய்விட்டாயா?''

சாரட்டைத் தொடர்ந்து வந்த பாலாஜி ''அச்சமாகத்தான் இருக்கிறது'' என்றான்.

''சுமாராக எத்தனை ஆயிரம் வீரர்கள் தேருவார்கள் என்று எதிர்பார்க்கிறாய்? சும்மா ஒரு குத்து மதிப்பாகச் சொல்!''

''பத்தாயிரம் பேர் இருப்பார்கள்.''

''அவ்வளவுதானே! என்னுடன் வருபவர்கள் நூறாயிரம் பேர்கள்!''

''மகாராஷ்டிர வீரர்களை நீங்கள் நன்றாக மதிக்கிறீர்கள்!''

‘‘ஓ... ஒருவன் ஆயிரம் பேருக்குச் சமன் என்று நான் சொன்னதாக நீ நினைத்து விட்டாய். நான் இவர்களை நம்பவில்லை.’’

பாலாஜி, ஒரு கணம் குதிரைச் சேணங்களை இழுத்துக் கூர்ந்து கவனிக்கிறான்...

‘‘என்னை நானே நம்புகிறேன். எனது அறிவுபலத்தை நம்புகிறேன். ஓர் அறிவு ஜீவி சாதிப்பதை ஓராயிரம் அரசியல்வாதிகள் சாதிக்க முடியாது. ஔரங்கசீப்பை எப்படி ஆட்டி வைக்கிறேன் என்று பார்!’’

பள்ளத்தாக்கை நெருங்கியதும் அனைவரும் புரவிகளிலிருந்து இறங்குகிறார்கள்.

பூஜ்யா மட்டும் சாரட்டை விட்டு இறங்கவில்லை.

‘‘பாலாஜி! நீ சென்று நான் ஔரங்கசீப்பைப் பார்க்க வேண்டும் என்று இந்த ராஜமுத்திரையைக் காட்டு! ஓலைக்குப் பதில்... பூஜ்யாவின் நாக்கு என்று சொல்! பூஜ்யா யார் என்று கேட்டால், சிவாஜி மகாராஜனின் அந்தரங்கச் செயலாளர் - கௌரவப் பிரதானி என்று சொல்!’’

ராஜசௌந்தர்யம் ராஜமுத்திரைக் கணையாழியைக் கழற்றிக் கொடுக்கிறது...

பணிவுடன் பெற்றுக்கொண்ட பாலாஜி, வண்ணமாக அமைந்திருந்த ராஜகூடாரம் நோக்கிப் புரவியில் செல்லுகிறான்.

**ரா**ஜகோளமான சூரியக் கிரகம் உச்சியில் நின்று உஷ்ணப் பிரகடனம் செய்து கொண்டிருக்கிறது...

வரச்சொல்லி உத்தரவு...

பூஜ்யாதேவி, பாலாஜி, நரசிம்ம ராவ்...

மூவரும் அந்த ராஜ கூடாரத்துள் நுழைக்கின்றனர்...

வெள்ளை வெளேரேன்று பெரிது பெரிதான திண்டு திமாசுகள்...

எவருமின்றித் தனித்தே அமர்ந்து காணப்பட்டார் ஔரங்கசீப். நவ்ரங்குகளுக்கு மேலான தஸ்ரங்கே போன்ற ஔரங்கசீப்.

உக்காவைப் புகைத்துக் கொண்டிருக்கிறார்.

பக்கத் துணையின்றி எவ்வளவு தைரியமாக இவர் பேட்டி தருகிறார்...

வீரமிக்க துணிச்சல் இவரது சாரமிக்க தோழன்போலும்...

தீட்சண்யமான சின்னஞ்சிறு கண்கள்; நடுவே மெல்லியதான தீச்சுவாலை...

நீண்ட நாசி - அறிவின் கூர்மை...

விசாலமான நெற்றியில் தொழுது தொழுது காய்ப் பேறிப்போன கறுத்த வடு... அதில் திருக்குரானே அடங்கிக் கிடப்பது போன்ற பிரகாசம்...

இஸ்லாமியத்தை பிசிரின்றிப் பின்பற்றும் அளவான தாடி; மீசையில்லை.

ஒல்லியான சரீரம்; உயர்ந்த மிடுக்கு; ஒப்பனையில் ஒரு பளிச், பளிச், பளிச்...

எதிரில் வந்து நின்ற பூஜ்யாதேவியைக் கண்ட ஔரங்கசீப் ஒருகணம் உக்காவின் மூலம் வாயுள் சென்ற புகை தடைப்பட்டு, மறுகணம் குபுகுபுவென்று மூக்கின் வழியாக வெளிவருகிறது...

யாழின் மந்தரஸ்தாயி பேசுகிறது:

''அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக் காத்துஹு!''

பூஜ்யா இவ்வாறு கூறிச் சலாம் செய்ததும்...

ஔரங்கசீப்பின் கையிலிருந்த உக்காக்குழை, மடியில் விழுந்தது.

''வ அலைக்கு முஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரக் காத்துஹு'' என்று அதிர்ச்சியுடன் வரவேற்றார் ஔரங்கசீப்.

கண்கள் வியப்பால் நிலைக்குத்தி நிற்கின்றன.

-----

# 14

தூது விடுத்தல் சூழ்ந்து துணியப் பட்ட பொருளைப்பற்றி நிகழ்வ தாகும். தூதுவர், மூவகையினர். தான் வகுத்துக் கூறுவான்; கூறியது கூறுவான்; ஓலை கொடுத்து நிற்பான். தான் வகுத்துக் கூறுவான் என்போன் அமைச்சனுக்குரிய குணங்களைப் பெற்றவன்; கூறியது கூறுவான் அமைச்சனுடைய அறிவில் கால் பகுதி குணங் குறைந்தவன். பாதி குணங் குறைந்தவன் ஓலை கொடுத்து நிற்பவன்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 16).

இஸ்லாமிய மறையின் இணையற்ற பாதுகாவலரான ஔரங்கசீப் மிக்கவும் மரியாதை கொடுத்து அமரச் சொல்கிறார்.

இருவரும் துல்லியமாக உருதுவில் பேச முனைகிறார்கள்.

முதலில் யாழே மீட்டியது. மீண்டும் இஸ்லாமிய சாஸ்திரத்தில் சுருதி கூட்டுகிறது;

‘‘அஊது பில்லாஹி மினஷ்ஷைத் தானிர் ரஜீம், பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!’’

ஒரு நல்ல காரியத்தை ஆரம்பிக்குமுன் சொல்லப்படும் மறை வாக்கியங்களைக் கேட்டுக் காது குளிர்கிறார் ஔரங்கசீப்.

‘‘மிக்கவும் மகிழ்ச்சியடைகிறேன், பூஜ்யா! உன்னைப் பற்றியும் உனது அறிவைப் பற்றியும் ஒற்றர்கள் மூலம் அடிக்கடி...’’

- இடைமறிக்கிறாள் பூஜ்யா.

‘‘ஹுஸுர்! மன்னிக்கவும். மரியாதை என்பது நாம் எப்படிக் கொடுக்கிறோமோ, அப்படியே திருப்பித் தரப்படுவது... மாறுபட்டு மேன்மை தருவதும் உண்டு. இங்கே மேன்மை பேசுகிறது.’’

‘‘அச்சா!’’

கூரிய கண்கள் சீரிய கண்களைக் கவனிக்கின்றன.

சீரிய கண்கள் செம்மையாய்ச் சிரிக்கின்றன.

‘‘இன்ஷா அல்லாஹ்! நீங்கள் வந்த காரியம்?’’

நேரிடையான பேச்சுக்கள் தொடங்குகின்றன.

‘‘உங்கள் ஷா-இன்-ஷாவின் உத்தரவை வாசித்தோம். ஷா-இன்-ஷா ஷாஜஹான் மாகராஜரின் உத்தரவுக்கு என்றோ பணிந்து ஏற்றிருப்பார் எங்கள் மதிப்புமிகு தலைவர் வீர சிவாஜி! பீஜப்பூர் சுல்தான்தான் அவ்வாறு ஏற்கக் கூடாது என்று அறிவித்துப் பயமுறுத்தி வந்தார்.’’

‘‘காரணம்?’’

‘‘எங்கள் மாணிக்கமிகு புரட்சித்தலைவருடைய தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லே, பீஜப்பூரின் மகாசேனாதிபதி. அவரது உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம் என்பதே அந்த மிரட்டல்!’’

‘‘அப்படியா! முன்பு மிரட்டிய மிரட்டலுக்குத்தான் எனது தந்தையார் ஷாஜஹான் சக்கரவர்த்திகள், எனது சகோதரன் மூரத்தை அனுப்பி மீட்டதுமல்லாது நன்றாகவே மிரட்டியும் வைத்திருக் கிறாரே!’’

‘‘அது அன்றோடு போயிற்று! ஆக்ராவை அழிக்க வேண்டும் என்பது பீஜப்பூர் சுல்தானியாவின் பேராசை. இந்த நேரத்தில் யுத்தம் வேண்டி நீங்கள் படைதிரட்டி வரவே, சிவாஜி எங்கே உங்களுக்கு உதவியாய் வந்து விடுவாரோ என்றஞ்சி ஷஹாஜி பான்ஸ்லேவை விட்டு எங்கள் தலைவர் சிவாஜியைக் கைதுசெய்து வரும்படி அனுப்பினார்கள்.’’

‘‘தந்தையை விட்டு மகனையா?’’

''ஆமாம்; அவ்வாறு சிவாஜி வர மறுத்தால், ஷஹாஜி பான்ஸ்லேக்குச் சிரச்சேத தண்டனை.''

''ஷஹாஜி, சிவாஜியுடன் சேர்ந்து கொண்டிருக்கலாமே!''

''அதுதான் இந்து தர்மம்! மகாபாரதத்தில் கர்ணனைப் போன்ற செஞ்சோற்றுக்கடன் நினைக்கும் கர்மவீரர் ஷஹாஜி! நன்றி மறப்பது துரோகத்தில் பெரிய துரோகம் அல்லவா? எனவே தமது சிரத்தை இழக்கத் தந்தையார் திரும்புவதைக் கண்ட அருமை மைந்தர் - எங்கள் தலைவர் தாமே - கைதியாகி உடன் புறப்பட்டு விட்டார், இப்போது அவர் பீஜப்பூர் சிறையில் இருக்கிறார்.''

துடித்துப்போன ஔரங்கசீப், ''லா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்'' என்று, ஒரு துக்ககரமான செய்தி கேட்டால் இஸ்லாம் மறை சொல்லச் சொன்ன வாக்கியங்களைச் சொல்லிக் கொள்கிறார் இஸ்லாமிய மறைவழி இளவரசர் ஔரங்கசீப்!

''ஏன் சிறையில் இருக்க வேண்டும், பூஜ்யாதேவி?''

''அவர் சம்மதத்துக்கு இவர் உடன்படவில்லை. ஷா-இன்-ஷா ஷாஜஹான் மகாராஜரை எதிர்க்க அவர் விரும்பவில்லை. வீரத்தைச் சிறையில் பூட்டிவிட்டனர்!''

சிறிது நேரம் வரை, தமது சின்ன தாடியை உருவிக் கொண்டு சிந்திக்கிறார் ஔரங்கசீப்.

தங்கள் ஞானபானுவான பூஜ்யாதேவி எவ்வளவு திறமையாகப் பேசி, ஔரங்கசீப்பை வழிக்குக் கொண்டுவர இஸ்லாமிய முறையிலேயே அணுகி, ஊடே இந்து மதச் சிறப்பையும் குட்டி மின்னலாய்க் கோடிட்டுக் காட்டி...

ஆ! நடப்பதைக் கவனிப்போம்...

''போகும்போது அவர் சொல்லிவிட்டுச் சென்ற செய்தி இதுதான்; 'ஔரங்கசீப் அவர்கள் வந்தால் என்னை மீட்கும்படி நீயே தூது சென்று சொல்ல வேண்டும். பீஜப்பூரைத் தரைமட்டமாக்க நமது மகாராஷ்டிரப் படைகளைப் போதுமான அளவுக்கு ஔரங்கசீப் அவர்கள் விரும்பினால் அனுப்பி வை. ஒரு சிவாஜி இல்லையே

என்கிற குறைதானேயொழிய, மகாராஷ்டிரமே ஔரங்கசீப் அவர்கள் பக்கம்'' என்று பெருமையோடு சொல்லச் சொன்னார். பீஜப்பூரை அழித்து, வீரமாத்திலகம் சிவாஜி விடுதலையடைந்ததும் அவரது தோள்கள் ஆக்ராவுக்குத்தான் என்று சொல்லச் சொன்னார்.''

ஓ... பூஜ்யாவின் ராஜதந்திரமே ராஜதந்திரம் என்று மலைத்துப் போனார்கள் பாலாஜியும் நரசிம்ம ராவும்!

பூஜ்யாதேவிக்கு வெகுநேரமாகத் தும்மல், வெளியேயும் வராமல் அடங்கவும் அடங்காமல் நடுவே நின்று தொல்லை கொடுத்தது. அது சமயம் பார்த்து இப்போது வந்து தொலைய வேண்டுமா?

ஆ...சிக்... தும்மிவிட்டாள்...

இஸ்லாமிய சாஸ்திரப்படி தும்மலைத் தும்மினால் மரபு வாக்கியத்தை ஜபித்துக் கொள்ள வேண்டும்.

பூஜ்யா ஜபித்துக் கொண்டாள்:

''அல்ஹம்துலில்லாஹி!''

தும்மலைக் கேட்டவர்கள் -

''யர்ஹமுக கல்லாஹ்!''

- ஔரங்கசீப்.

''உருதுதான் நன்றாகப் பேசுகிறீர்கள் என்றால், மரபையும் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறீர்களே!''

''நான் ஓர் இஸ்லாமியச்சியாகப் பிறக்கவில்லையேயொழிய, ஏனைய விஷயங்கள் அனைத்தையுமே வாசித்து இருக்கிறேன். திருக் குர்ஆன் முழுமையும் மனப்பாடம்!''

ஔரங்கசீப் அவளைச் சேர்த்துக் கட்டி அப்படியே ஆசைதீர அணைத்து முத்தமிட்டு, இன்னும்...

எங்கே தட்டவேண்டுமோ அங்கே தட்டவேண்டிய ராஜதந்திரக் கலையின் நிபுணனாயிற்றே கௌடலீயன். அவனது நூல் மாணவி பூஜ்யாதேவி மிக்கவும் சமத்காரமாக செயலை ஆற்றி முடிக்க எந்தெந்த

உபகரணங்களை உபயோகிக்க வேண்டுமோ அந்த உபாயத்தைக் கடைபிடிக்கிறாள்...

''சாப்பிட்டுப் போகலாமே பூஜ்யாதேவி!''

''எனது தலைவரை மீட்டுத்தாருங்கள். நானே சமைத்து உங்களை விருந்துக்கு அழைப்பேன்!''

''நிச்சயமாக!''

''அல்லாஹ்வின் மீது ஆணை! சமைத்துப் போடுவது தருமமான காரியம்.''

பக்கத்திலிருந்த மணியை அடிக்கிறார் ஔரங்கசீப்...

ஒரு சேவகன்...

''பால் கொண்டு வா!''

பாலுண்ட இடத்தில் பகை நினைக்கக்கூடாது என்பதற்காகவா? சீ! நமது சாஸ்திரம் இவருக்கு எங்கே புரியப்போகிறது...

''ஹுஸூர்! உங்கள் முடிவு?''

''இன்றிரவே படைகள் புறப்படுகின்றன. பீஜப்பூரை வீழ்த்தி சிவாஜியை மீட்டு உங்கள் கையில் ஒப்படைப்பேன்.''

''எங்கள் படை உதவி தேவையா ஹுஸூர்?''

''தேவையானால் தூதுவனை அனுப்புவேன்!''

மூன்று பொற்குவளைகளில் பால் வருகிறது.

மூவருக்கும் அளிக்கப்படுகிறது.

''நீங்கள், ஹுஸூர்?''

''சாப்பிடுகிற வேளை!''

பூஜ்யா பாலை அருந்துகிறாள்...

ஆ! அப்போது அவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள்...

பாலை அருந்தியதும்...

''அல்லாஹூம்ம பாரிக்லனா பீ (FF) ஹி வஸித்னா மின்ஹூ!''

ஔரங்கசீப் சிரிக்கிறார்...

அவளும் சிரிக்கிறாள்...

அவர் சிரிப்பில் விஷமம் இருந்தது.

அவள் சிரிப்பில் விஷயம் இருந்தது.

''பூஜ்யா!'' என்றழைத்த ஔரங்கசீப், தொலைவில் நின்று கொண்டிருந்த பாலாஜியையும் நரசிம்ம ராவையும் நோக்குகிறார்.

எதையோ கூற வாயெடுக்கிறபோது, ஒரு வீரப் பணியாளன் வந்து வணங்கி நின்றான்.

''ஹூஸூர்! நமது ராமதளவாய் உங்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமாம்.''

''வரச் சொல்!''

ராமதளவாய் என்ற பெயரைக் கேட்டதும் வியப்பு கலந்த மலைப்பில் ஆழ்ந்தாள் பூஜ்யாதேவி.

இதே நிலை பாலாஜிக்கும் நரசிம்ம ராவுக்கும்...

''ஹூஸூர்! ராமதளவாய் என்பவர் கவந்தம்வாடித் தலைவர் தானே?''

''ஆமாம்... உங்களுக்குத் தெரியுமா?''

இதற்குள் ராமதளவாய் உள்ளே பிரவேசிக்க...

பூஜ்யாதேவி எழுந்து நின்று வணக்கத்துக்குரிய அந்தப் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள்...

ஔரங்கசீப்பை ஆச்சரியம் விழுங்கி விடுகிறது...

இந்த இடத்தில் இவள் எங்கே வந்தாள்...

ஔரங்கசீப் கண்களில் பட்ட அழகு தப்புவதாவது...

மகளே! என்ன காரியம் செய்துவிட்டாய்...

வளர்ப்புத் தந்தையின் மனம் பதறுகிறது...

''தளவாய்! பூஜ்யாதேவியை உனக்குத் தெரியுமா?''

உண்மையைச் சொன்னாலாவது கொஞ்சம் விதிவிலக்கு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் ''பிரபோ! இவள் என் வளர்ப்பு மகள்!''

''உங்கள் வளர்ப்பு மகளா? அச்சா! பஹூத் அச்சா!''

புளகிச் சிரித்துக் கொள்கிறார் ஔரங்கசீப்.

''என்ன விஷயம் தளவாய்?''

''சிவாஜி...''

''பீஜப்பூர் சிறையில்! அவ்வளவுதானே? செய்தி முழுவதும் தெரியும். மாலையே பீஜப்பூர் நோக்கிப் படை கிளம்புகிறது. இதுவரை நீ உபசேனாதிபதி; இன்று முதல் ஒரு அறிவான மகளை வளர்த்ததற்காகப் பதவி ஏற்றம்!''

''நாங்களும் விடைபெறுகிறோம் ஹூஸூர்!''

''மீண்டும் சந்திப்போம்! யாஹ் அல்லாஹ்!''

பூஜ்யா சொன்னாள்:

''அல்ஹம்துலில்லாஹி!''

ஒரு நல்ல காரியம் பூர்த்தியானது என்கிற மகிழ்ச்சியை அவள் தெரிவித்துக் கொள்கிறாள்.

ஔரங்கசீப்பின் கண்கள் அலை மோதுகின்றன.

ஆ! இப்படி ஓர் அழகி, ஒரு சகலகலா அறிவு ஜீவியா?

-----

# 15

மனைவி மக்களுக்கு வேண்டுவன செய்யாமல் துறவு கொள்பவனுக்கும், மகளிரைத் துறவு கொள்ளுமாறு தூண்டுகிறவனுக்கும் [1]பிரதம சாகஸம் என்னும் தண்டம் விதித்தல் வேண்டும். மகளிரோடு புணர்தற்குரிய ஆற்றலில்லாதவன், அறமுணர்ந்தோர் (நீதிசபை) உடன்பாடு பெற்றுத் துறவு கொள்ள வேண்டும். இல்லையேல் சிறைத் தண்டனை.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 2, அத்தியாயம் - 22)

**ஒ**ரு காலத்தில் விஜயபுரியாகத் திகழ்ந்து -

பின்னால் விஜப்பூராக மருவி-

இப்போது பீஜப்பூராக விளங்கும் முகலாய சாம்ராஜ்யம் மூச்சுத்திணறி முனகத் தொடங்குகிறது...

ஓ... ஷாஜஹானின் மூன்றாம் குமாரன் ஔரங்கசீப் சமுத்திரம் போல் சேனை திரட்டிக் கொண்டு சமர்புரிய வருகிறார்...

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்பது போல ஔரங்கசீப் சிம்ம கர்ஜனை புரிந்து வரும் சீற்றம்...

பீஜப்பூர் சுல்தானா பேகத்தின் தொடைச்சதை மட்டுமல்ல; ஏனைய சதைகளும் நடுங்குகின்றன...

---

1. 250 பணம் தண்டம் (அபராதம்) இன்றைய மதிப்புக்கு ரூ. 2,50,000.

பீதி கவிந்து பேதி காண்கிறது பீஜப்பூர்...

எடுக்க வேண்டிய முயற்சிகள் என்னவென்பது புரியாது அலைமோதுகிறது அரண்மனை...

மாவீர சேனாதிபதி ராஜா ஷஹாஜி பான்ஸ்லேயுடன் சொல்யுத்தம் நிகழ்த்துகிறாள் - சொர்ணத்தைக் குவிக்கிறேன் என்று நாவில் தேனைத் தடவுகிறாள் - எதிர்காலம் சொப்பனமோ? இல்லை, கப்பணமோ? என்று நிலை குலைந்து, தலைகுனிந்து நிற்கிறாள் சுல்தானா பேகம்...

ஷஹாஜியிடமிருந்து வந்த ஒரே பதில்: ''எனது வீரமகன் சிவாஜி குறித்துக் காணப்போகிற தீர்வு என்ன? ஒன்று அவனை விடுதலை செய்யுங்கள்; நான் வாளை எடுக்கிறேன்!''

''இருவருக்குமே சிரச்சேதம் நடக்குமானால்?''

''பீஜப்பூரில் ஒரு தலை மிஞ்சாது. வெறும் முண்டங்கள் துடிக்கும். ஔரங்கசீப் தனது ஆக்ராவையே இழப்பான்; சிவாஜியை இழக்கமாட்டான்!''

ஆ! ராஜதந்திர இடைச் செருகல் நிறைந்த நெருப்பனைய பதில் இது...

கூந்தலைப் பிய்ந்துக் கொள்கிறாள்...

ஔரங்கசீப்பின் கர்ஜனை கேட்கிறது...

சுல்தானா? நீ சுகந்தானா என்பதுபோல -

அதோ யுத்த நகாராவின் சத்தம் கேட்கிறது.

பாழும் சத்தம்...

பயங்கரச் சத்தம்...

'மன்னர்களை உற்பத்தி செய்கிறவர்' என்று மாசரிதை பேசும் ராஜா ஷஹாஜிக்கா இந்த அவலநிலை? ஏற்கெனவே பீஜப்பூரால் ஏற்பட்ட அவலநிலையை விடவா?

இந்நேரம் பீஜப்பூர் மன்னர் மட்டும் இருந்தால்...

இருந்தாலும் இதே நன்றி கொன்ற பேச்சுக்களே எழுந்திருக்கும்...

யுத்தம், யுத்தம், யுத்தமென்று முகலாய சாம்ராஜ்யத்துக்கு வெற்றி மேல் வெற்றி குவித்து வந்த ஒரு மகாசேனாதிபதியின் பேச்சுக்கு இடமில்லை...

அவரது வீரமைந்தனின் மூச்சுக்கு உத்தரவாதமில்லை...

இந்த லட்சணத்தில் செஞ்சோற்றுக்கடன் நினைவு...

ஓ... அது இந்த மண்ணில் பூத்த மல்லிகை மணப்பது போல...

இந்த மண்ணில் செய்த மாதவம் சித்தர்களைப் பிறப்பிப்பது போல...

சுல்தானா பேகம் சுழிமுனை தெறிக்கச் சிந்திக்கிறாள்...

**தி**ல்லியின் மாபெரு மன்னர் ஷாஜஹான் பெற்றெடுத்த குமாரர் ஔரங்கசீப் எழுப்பும் கர்ஜனை, கூற்றுவனின் குரல் போல் கேட்கிறது...

குலைகளை நடுநடுங்கச் செய்கிறது...

போர் முரசம் வெறிகொண்டு முழங்குகிறது. ‘பீஜப்பூரே! எங்கே உனது புஜபலபராக்கிரமம்!’ என்பது போல...

வேறு வழி?...

பீஜப்பூர் ஆக்ராவைச் சந்திக்கிறது...

ஆவது ஆகட்டும் என்று பீஜப்பூர் சுல்தானா பேகம் ஆணை பிறப்பித்துவிட்டாள்...

ஓ... ஷஹாஜி மட்டும் வாளெடுத்தால்...

ஒருகால் போர்முகம் திசை திருப்பம் கண்டாலும் வியப்பதற் கில்லை. அந்நாளைய போர்முகக் கர்ஜனையாயிற்றே ராஜா ஷஹாஜி பான்ஸ்லே!

ஒரு வார யுத்தம் ஒருவாறு முடிந்து பெருவாரியான பீஜப்பூர் சேனைகளை ஏப்பம் விட்டுக் கொக்கரிக்கிறார் ஔரங்கசீப்!

அன்றிரவு ஔரங்கசீப் தமது வண்ணக்கூடாரத்துள் அமர்ந்து கொண்டிருக்கிறார். அப்போது துணைத் தளபதி ஃபுலாத்கான் உள்ளே நுழைந்து மண்டியிட்டு சலாம் செய்ய...

சிவந்த கண்களில் நெருப்பைத் தேக்கி என்ன என்பது போலத் தலையை அசைக்க...

''ஹூஸூர்! பீஜப்பூர் அரண்மனையிலிருந்து தூதுவர்கள்...''

அவன் சொல்லி முடிக்கவில்லை.

கெக்கலி கொட்டிச் சிரிக்கிறார்.

''வரச் சொல்!''

மூன்று தூதுவர்கள் உள்ளே நுழைந்து வணக்கம் தெரிவிக்கிறார்கள். வழக்கமாக ஔரங்கசீப்பை யார் வணங்கினாலும் மண்டியிட வேண்டும். பீஜப்பூர் அரண்மனைக்குச் சொந்தமான அந்தத் தூதுவர்கள் அவ்வாறு செய்யாததை ஔரங்கசீப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை.

''என்ன விஷயம்?''

அவர்களை உட்காரக்கூடச் சொல்லவில்லை. இவர்களை ஏன் நாம் மதிக்க வேண்டும்?

வெளியில் ஆயுதங்கள் ஏந்திய பலத்த காவல். தங்கள் இளவரசருக்கு ஏதேனும் நிகழ்ந்து விடுமானால்....

ஒரு தூதுவன் சொன்னான்:

''பிரபோ! எங்கள் ராணி, சமாதானத்தை விரும்புகிறார்கள். அதற்காக எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கப்பமாகத் தரத் தயாராக இருக்கிறார்கள்.''

''ஓ... அப்படியா!''

சிந்தனை பலமாக, வேலை செய்கிறது...

கப்பம்! அது குறித்துப் பின்னால் யோசிப்போம்...

பூனா நகரில் சந்தித்த அழகு தேவதை பூஜ்யா நினைவுக்கு வந்து நர்த்தனமிடுகிறாள்...

''சிவாஜியை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். அது போதும் நாளைக் காலை கிழக்கு வானில் ரத்த ஞாயிறு உதயம் காண்கிறபோது, மராட்டிய ரத்த ஞாயிறு எனது கூடாரத்தில் உதயம் காண வேண்டும்! தவறினால் பீஜப்பூர் அந்தி சாய்கிறபோது அஸ்தமனமாய்விடும். புரிகிறதா?''

தூதுவர்கள் பணிந்து விடை பெறுகிறார்கள்.

வைகறையின் ஞானக்கண்; பொன்னாய் மலருகிறது...

கூடாரத்துள்...

புரட்சியின் ஞானக்கண் பூவாய்ச் சிரிக்கிறது...

''அஸ்ஸலாமு அலைக்கும் யுவராஜ்!''

- சிரித்த பூவில் இஸ்லாமிய மகரந்தங்கள்...

''வ அலைக்கு முஸ்லாம், சிவாஜி!'' என்று கூறிக் கூர்ந்து கவனித்த குரான்யோகி ஔரங்கசீப். ஆச்சரியமுடன் கண்களை அகல விரித்துக் கவனிக்கிறார்...

''ஸுப்ஹானல்லாஹி!'' ஆச்சரியத்தைக் கண்டால் கூறும் அனுபவ வேதம்...

''இன்ஷா அல்லாஹ்!'' - இனிமேல் ஒரு காரியத்தைச் செய்தால் நல்லபடியாகச் செய்வேன்!

''உட்காருங்கள் சிவாஜி!''

எதிர்பார்த்தது நடக்கிறது.

தூதுவர்கள் நிற்கிறார்கள்.

''நீங்கள் போகலாம்.''

''தூதுவர்கள் பணிந்து விடை பெறுகிறார்கள்.

முதன் முறையாக மாவீர சிவாஜியைக் கண்டு, கண்கள் ஜீரணிக்க முடியாமல் வருணிக்கின்றன...

முதன் முறையாக ஔரங்கசீப்பை கண்ட சிவாஜியின் கண்கள், வருணித்ததை ஜீரணித்துக் கொள்கின்றன...

''எனக்கு உதவி செய்ய இருந்தீர்களாம். அந்தச் செய்தி தெரிந்து பீஜப்பூர் சுல்தானியா பேகம், தந்தையை விட்டு மகனைக் கைது செய்து வரும்படியாக அனுப்பிய கொடுமையை உங்கள் காதலி பூஜ்யாதேவி சொன்னாள்.''

பூஜ்யா...

இவன் கண்களில் பட்டுவிட்டாளா? அடி, பாவி பெண்ணே...

''என்ன சிவாஜி! ஆச்சரியப்படுகிறீர்கள்? நான் உங்கள் நட்புறவைத் தேடித்தான் புறப்பட்டேனேயொழிய. பீஜப்பூரை அடக்கவல்ல. ஆயினும், பீஜப்பூர் கப்பம் தேவை; கோல்கொண்டா ஒப்பம் தேவை! ஒன்று: நீங்கள் எனது தந்தையாருக்குக் கொடுத்த வாக்கை இன்னமும் காப்பாற்றவில்லை. உங்கள் தந்தையாரின் உயிரை நான்காண்டுகளுக்கு முன் இதே பீஜப்பூர் குடிக்க இருந்தது. ஏன்? உங்களைப் பிணையாகக் கேட்டதால், உங்கள் தந்தை மறுத்ததன் வினை! அப்பேர்ப்பட்ட தந்தை இப்போது எப்படி உங்களைக் கைது செய்துவர ஒப்பினார் என்பதுதான் புரியாத புதிர்! இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது. ஏனென்றால் எனக்கு ஒரு ரகசிய ஓலை வந்தது. 'உடனடியாகப் படை திரட்டி வரவும். சிவாஜி உயிருக்கு ஆபத்து' என்று. யார் எழுதினார்கள் என்பதுதான் புரியவில்லை.''

ஔரங்கசீப் சற்றே மூச்சுப்பறிய நிறுத்துகிறார். எதிரே இருந்த உக்கா அவரது நெஞ்சக் குழியில் இறங்கி, மூக்கின் வழியாகப் புன்னகையைத் துப்புகிறது.

சிவாஜியின் நினைவில் பூஜ்யாவின் சக்தி தாண்டவம்...

''எனக்கும் ஆச்சரியமாகவே இருக்கிறது யுவராஜ்!''

''இரண்டாவது: பீஜப்பூர் சுல்தான், எனது அண்ணன் மூரத் படையுடன் வந்து உங்கள் தந்தையை மீட்கிறபோது, கப்பம் அனுப்புவதாகக் கூறி, இதுவரை அனுப்பாது ஏமாற்றி விட்டார்கள். கேட்டால் சுல்தான் இறந்து விட்ட பிறகு வாக்குறுதியும் பிணமாகி விட்டதாகப் பதில் வந்ததாகக் கேள்வி. எனக்கு சிவாஜியும் நண்பராக வேண்டும். பீஜப்பூரும் அடிமையாக வேண்டும். இரண்டும் நடக்கப் போகிறது.''

''அல்லாஹூ அக்பர்!''

பழுத்த இந்து மத வெறியரும், ஆரியானுஷ்டான உபாசியுமான சிவாஜியின் வாயிலா இந்தச் சொற்கள்...?

மனம்:

'நன்றாகவே நடிக்கிறாய் சிவாஜி! நடிகனாக நீ பிறந்திருந்தால் நடிகர் திலகம் என்ற விருதுவைப் பெற்றிருப்பாய்!' என்று இடித்துரைக்கிறது.

''சிவாஜி! நமது விவகாரங்களை நாம் பூனாவுக்குச் சென்று பேசிக் கொள்ளலாம். இப்போதைக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? இந்த யோசனைக்கான பதிலை உங்கள் மூலமாகவே நான் எதிர்பார்க்கிறேன்!''

ஆ! பெரிய சுமையைத் தனது தலையில் ஏற்றுகிறான் ஔரங்கசீப்.

மகா ராஜதந்திரியான முகலாய இளவரசன் ஔரங்கசீப், ஏதோ ஒரு பிடிப்பை நோக்கிப் பின்னுகிற வலையாகப் படுகிறது...

கூடாரத்துக்கு வெளியே திலார்கான், சர்வ வல்லமை பொருந்திய ராஜா ஜெய்சிங்கின் மகன் ராம்சிங், முர்ஷித்குலிகான் ஆகியோர் மிக்கவும் கவனமுடன் இருக்கிறார்கள். [1]மலைபிடுங்கி ராட்சஸனாயிற்றே சிவாஜி!

1. **'Mountain rat'** என்று வரலாறு கூறுகிறது. வரலாறு இப்படியும் கூறுகிறது: வேறு இடத்தில் ஹர்ஷவர்த்தனன் என்றும் அக்பர் என்றும் புகழ்ந்து இருக்கிறது.

தக்கணத்து ஜங்கிஸ்கான் என்றும், கெனிபால் என்றும் வரலாறு பயமுறுத்தும் சிம்ம சொப்பனமாயிற்றே சிவாஜி!

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதே எனக்குத் தெரியாதே யுவராஜ்!''

''இப்போது மூக்குப்பிடிக்கச் சாப்பிடப் போகிறோம்!''

''எனக்கும் அகோரப் பசி! பீஜப்பூர் அரண்மனையில் விருந்தினரையே சரியாகக் கவனிக்க மாட்டார்களாம்; நான் கைதிதானே! நல்ல சாப்பாடு சாப்பிட்டுப் பல நாட்களாகின்றன. மேலும் நான் ஒரு சைவப்பிண்டம்!''

எங்கே மாமிசம் சாப்பிட ஔரங்கசீப் வற்புறுத்தி விடுவானோ என்றஞ்சி, முன் கவனமாகத் தம்மை சைவம் என்று கூறிக் கொள்கிறார்...

அடிக்கடித் தமது நினைவில் சாணக்கியனை வணங்கிக் கொள்கிறார்...

கௌடலீயமே கை கொடு...

பூஜ்யாவையும் அறிவால் பூஜிக்கிறார்...

பூஜ்யா, நினைவில் எப்போதும் அமர்ந்து சாணக்கியோபதேசம் செய்...

''ஓ... நீங்கள் சைவமா? பூஜ்யாவும் சைவம் என்றாளே...''

அடிப்பாவி பெண்ணே! பூஜ்யா... நீயும் அடிக்கடி இவன் கவனத்தில் வருகிறாயே... என்ன உற்பாதத்துக்கோ?...

''ஒரு நல்ல இந்து என்பவன் அசல் சைவனாக இருக்க வேண்டும்!''

''ஓகோ! அசைவவாதிகள்?''

''சிலபடிகள் கீழே... அவ்வளவுதான்!''

''உனது தந்தை?''

''அசைவம்.''

''அவர் பல படிகள் கீழே! ஏனென்றால் சரியான இந்துவல்ல! இஸ்லாமியர் கீழ் வேலை செய்வதால் இதனைச் சொல்லவில்லை. மாமிசப்பிண்டம்! மனைவி மக்களுக்கு வேண்டுவன செய்யாது ஓடிவிட்டவர். மனிதர்க்கு ஒப்பிட்டுப் பேச முடியாது. எனவேதான்! மேலும், உயிர்காத்த மகனைக் கைது செய்தவர்! இப்போது உங்கள் உயிருக்காகப் போராடியிருக்கலாம்! அது வேறு விஷயம்! அநாவசியமான பாசமாகவும் இருக்கலாம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் சிவாஜி!''

''ஆனால் வீரத்தில் அவர் கர்மயோகி, உங்களைப் போல!''

ஓ... சமத்கார சிவாஜி...

''அதில் சந்தேகமே இல்லை. போகட்டும். பீஜப்பூருக்கு என்ன ஆணை அனுப்புவது?''

ஔரங்கசீப் பேச்சைத் திருப்புகிறார்...

''கப்பத்துக்குப் பதிலாகத்தான் என்னைக் கேட்டீர்களாமே!''

''உங்களை அவர்கள் கைது செய்ததே அநாவசியமானது. அது எனது ஆணையில் விடுதலையாயிற்று. கப்பம்தான் எனது வாழ்நாளில் நோக்கம்! எதிர்காலச் சொர்க்கம்!''

சொற்கள் அழுத்தமாக விழுகின்றன.

''ஆகவே சிவாஜி! இப்போதும் நான் கப்பம் கேட்டுத் தூது அனுப்பப் போவதில்லை. பல படிகள் கீழே போய்விட்ட ஷஹாஜி பான்ஸ்லேயின் தலையை அனுப்பிவைக்கும்படி ஆணை அனுப்பப் போகிறேன்!''

சிலைத்தார்; மலைத்தார்; சிவாஜி!

-----

# 16

இரவும் பகலும் ஆகிய நாள்[1] முந்நூற்றைம்பத்து நான்கு கொண்டது ஒரு தொழிலாண்டாகும். அது ஆவணித் திங்கள் தொடங்கி ஆடியில் முடிவதாகும். நிறையினும் குறையினும் அவ்வாறே கொள்ள வேண்டும்.

**- சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 28).

''**யு**வராஜ்! என்னைப் பாதிக்க எழுந்த உத்தரவா? அல்லது என்னைச் சோதிக்க எழுந்த உத்தரவா?''

- சிவாஜியின் தந்தைப் பாசம் நெஞ்சில் உருண்டு நெளிவது தெரிகிறது...

உக்காவை ஓர் இழுப்பு இழுத்து நெஞ்சுக்குழிக்குள் புகையைத் திணித்து மெல்ல வெளியிடுகிறார் ஔரங்கசீப். அது ஆழ்ந்த ஆலோசனையின் அகப்படர்வாகத் தெரிகிறது.

ஔரங்கசீப். நெஞ்சில் கூழாங்கலைப் போட்டுக் குலுக்கிச் சிரிக்கிறார்.

ம் ஹொம் ஹொம் ஹொம்ம்...

''பயந்துவிட்டீர்களா சிவாஜி?''

---

1. 360 நாளானாலும் சாத்திர முறைப்படி கார் முதலிய பருவம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாள் குறைக்க ஆறு நாட்கள் கழிவு ஏற்படும். அப்போது 354 நாட்கள் ஓராண்டு என்று கொள்ளப்படும். அக்காலத்தில் ஆவணி முதல் மாதம். கார் காலத்தில் ஆண்டு தொடங்கும் மரபு தமிழரிடமும் இருந்தது.

''சிவாஜி பயப்படவில்லை; பாசம் கொஞ்சம் பயந்தது.''

ஆ! என்ன வீரமான... அழுத்தமான பதில்...

''ஓ! எனக்குத் தெரியும்; சிவாஜி பயப்பட மாட்டார்! யுத்த கள ராட்ஸசனாயிற்றே!''

'யுத்த களச் சைத்தானாயிற்றே!' என்றுதான் கூறியிருப்பார் ஔரங்கசீப். ஆனால் அவ்வாறு அவமானப்படுத்த இது நேரமில்லை. எப்படியும் சிவாஜியை ஆக்ராவுக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்பது அவரது திடமான - மூர்க்கமான முடிவாயிற்றே!

''இந்தத் 'தலையை அனுப்பி வை' என்கிற ஆணையை அனுப்பிய தீருவேன்! ஷஹாஜியின் தலை வந்து விடுமா? இருக்கிற தலைகளுக்கு என்ன நேரும் என்பது அவர்களுக்குத் தெரியும். மாறாக வேறு ஏதேனும் கேளுங்கள் என்று பதில் வரும். மீண்டும் தூது அனுப்புவேன். ஷஹாஜி எத்தனை யானை பலம் கொண்டவர் என்று. அவ்வாறு குறிப்பிட்டனுப்பும் யானைகள் எண்ணிக்கைக்குரிய யானைகளைத் தயார் செய்து, அவற்றின் முதுகு அழுந்த பொன்னும் மணிகளும் தேவை என்பேன்!''

இமையாது நோக்குகிறார் சிவாஜி. பிசிறு தட்டுகிற பிரச்னை மாதிரி ஒரு பிரக்ஞை...

''உங்கள் தந்தையை நான் எவ்வாறு கௌரவப்படுத்தி யிருக்கிறேன் பார்த்தீர்களா?'' - ஔரங்கசீப்பின் கண்கள் கூர்மையில் நெளிகின்றன.

''நன்றி யுவராஜ்!''

''சிவாஜி! நீங்கள் கிரீடதாரியானால், என்ன புரட்சியைப் புதுமையாகச் செய்ய உத்தேசம்?''

''நிறைய இருக்கின்றன!''

''ஒன்றைச் சொல்லுங்கள்.''

‘‘இப்போது சித்திரையில் மாதம் தொடங்குகிறது. நான் பண்டைய காலம் போல் ஆவணியில் தொடங்கிப் பின்பற்றுவேன். கார் காலத்தில் மாதம் தொடங்குவதில் பல விஞ்ஞான சௌகரியங்களிருக்கின்றன...’’

ஔரங்கசீப் கலகலவென்று நகைக்கிறார். அந்தச் சிரிப்பில் ஏளனம் நர்த்தனமிடுகிறது.

‘‘ஏன் சிரிக்கிறீர்கள்?’’

‘‘இப்படியா ஒரு பைத்தியம், ஆட்சியில் பிரகடனமாக வேண்டும்?’’

நறுக்கென்று குத்தூசி...

நன்றாகவே தைக்கிறது...

ரத்த ஞாயிற்றுக் கோளத்தில் ஓங்கி வாளைச் செருகினாலும் அதன் முனை மழுங்கி மின்னல் பளீரிட...

இரண்டு அர்த்தங்கள் இம்சையாகி ரத்தத் துளிகள்...

சொட்டு... சொட்டு...

சிவாஜி கொஞ்சமும் அஞ்சாமல் சொன்னார்:

‘‘யுவராஜ்! எங்கள் ஆண்டு தொடக்கத்தில் பிறை தெரியக் கூடாது! அதனால்தான்!’’

பழுக்கக் காய்ச்சிய ஈட்டியே பாய்ந்துவிட்டது.

ஔரங்கசீப் கொதித்துப் போனார்...

என்ன திமிர் இந்த சிவாஜிக்கு...

‘‘கோபப்படுகிறீர்களா யுவராஜ்? பைத்தியம் என்று என்னை இரண்டு அர்த்தத்தில் முட்டாளாக்கியபோது, நான் கொதித்து இருக்க வேண்டுமல்லவா? சிவாஜி தனக்கு மரியாதை கொடுப்பவர்களுக்கு மண்டியிடவும் தயங்கான்; மண்டை வலி தருகிறவர்கள் மண்டையையே உடைத்து விடுவான். நீங்கள் மண்டை வலி

தரவில்லை. மண்டையில் ஒன்றுமே இல்லை என்று கூறியிருக் கிறீர்களே.... புரிகிறதா?''

தனது 'தமாஷ்' வார்த்தை எவ்வளவுக்குத் தைத்துவிட்டது என்பதையுணருகிறார் ஔரங்கசீப். சீ! அப்படி விமர்சித்து இருக்கக்கூடாதுதான்...

''வருத்தப்பட வேண்டாம். நான் தமாஷாகச் சொன்னேன். நீங்கள் பெரிதாக எடுத்துக் கொண்டீர்கள்.''

மெல்லச் சிரித்துக் கொள்கிறார் சிவாஜி. ''நானும் தமாஷாகத்தான் சொன்னேன்!''

ஔரங்கசீப் நெஞ்சு, உள்ளுக்குள் கறுவிக் கொள்கிறது. சிவாஜி! உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்! எங்கே போய்விடப் போகிறாய்? உனது எழுச்சி எங்கள் பிறைக்கு ஆபத்தாக இருக்குமானால்...

உனது ஆரியப் பிரச்னைகளை எரித்துச் சாம்பலாக்கி உனது நெற்றியிலேயே இட்டு சந்நியாசியாக்கி விரட்டுவேன்!

- மனத்தின் குமுறல் மழை வருவதற்குமுன் மெல்லிதாக முழங்கும் வானத்து மப்பு மந்தார இடியோசையாய் கேட்கிறது...

- மழை வருவதற்குமுன் மணக்கும் மண் வாடையாய் நெடிக்கிறது...

சிவாஜி...

ஒருவாறு தம்மைச் சமனப்படுத்திக் கொள்கிறார் ஷாஜஹான் மைந்தர் - இஸ்லாமியச் சிங்கம் - ஔரங்கசீப்.

''என்ன யோசனை சிவாஜி?''

- யோசிப்பது ஔரங்கசீப். ஆனால் கேட்கிற கேள்வி இவ்வாறு...

சிவாஜியின் இதழ்களில் பிறை நகை...

''ஒன்றுமில்லை யுவராஜ்! எனது சமகாலத்தில் இவ்விதமான ஒரு இஸ்லாமியச் சிங்கத்தைச் சந்தித்ததில் அடங்கிய பூரிப்பை

உள்ளுக்குள் ரசித்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்! இந்த நூற்றாண்டுச் சரித்திரத்தில் இருவர் மட்டும் கொடிகட்டிப் பறக்கும் வீரக் கதாநாயகர்கள்! ஒன்று நான்; அடுத்து நீங்கள்...''

அடுத்து நீங்கள்...

இரண்டாவது ஸ்தானம்...

ஔரங்கசீப் இதழ்களில் பௌர்ணமிச் சிரிப்பு பல அர்த்தங்களைப் போதிக்கிறது...

''நல்லது நண்பரே!'' - ஔரங்கசீப் எழுந்து கொள்கிறார்...

நண்பரே...

ஓ... ஔரங்கசீப் தோளோடு தோள் இணைக்கிறார்.

அது ஒரு பாவனை என்பதும் சிவாஜிக்குப் புரிகிறது...

''நண்பரே! ஷஹாஜியின் தலைவேண்டி நீங்களே தூது செல்கிறீர்கள்!''

ஆ! பயரங்கரச் சுமை...

''யுவராஜ்?''

''ஆச்சரியப்படுகிறீர்களா? ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. எனது கூடாரத்துள் தனி மனிதராக இருந்தும், இவ்வளவு தைரியமாய் பேசவல்ல வீர சிவாஜிக்கு, இது ஓர் ஆச்சரியமா? நண்பரே! உங்களை அவமானப்படுத்திய சுல்தானாவை, என்னைப் பாதுகாப்பாக வைத்து நீங்கள் அவமானப்படுத்த வேண்டாமா? ஒரு சர்வ வல்லமை பொருந்திய நண்பரைச் சிறையில் வைத்து அவமானப்படுத்தியது ஒருபுறமிருந்தாலும், எனது சமகாலத்து ஒரு வீர கர்ஜனையை அவமானப்படுத்தலாமா? தூது சென்று சாதிக்க வேண்டியதைச் சாமர்த்தியமாகச் சாதித்துத் திரும்புங்கள்?''

மிக்கவும் சமத்காரமாக நாவில் சொற்களை விளையாட விடுகிறார் ஔரங்கசீப்.

''இது தேவைதானா யுவராஜ்?''

‘‘நிச்சயம் தேவை. ஏனென்றால் நான் எனது தூது வர்களையனுப்ப. இதுவே சாக்காக வைத்து ஷஹாஜியின் தலையை நிஜமாகவே அனுப்பி வைத்துவிட்டால்?’’

‘‘யுவராஜ்!’’

‘‘ஆவேசப்பட வேண்டாம்! நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. அதனால்தான் உங்களை அனுப்புகிறேன்!’’

‘‘இந்தத் தலை கேட்கும் படலமே எதற்காக?’’

‘‘பலப்பல தலைகளை உருட்ட! எனது இந்தத் திக்விஜயத்தின் சர்வ பூதாகாரமான வீரக் கதாநாயகனே நீங்கள்தான்! உங்களுக்கு ராஜதந்திரம் போதித்த சாணக்கியர் இங்கே எவ்வாறு செயல்படப் போகிறார் என்பதை ஒரு முன்னோட்டமாகப் பார்க்கவே இந்த வெள்ளோட்டம்! இன்னொரு தேவையும் இருக்கிறது!’’

வியந்து நோக்குகிறார் வீர சிவாஜி.

‘‘என்னவென்று யோசிக்கிறீர்கள்?’’

‘‘.....’’

‘‘பூஜ்யாதேவி!’’

கண்கள் அலமருகின்றன...

‘‘தேவை எனக்கல்ல. உங்களுக்கு! நண்பரே! நான் வடபுலம் திரும்ப ஓராண்டும் ஆகலாம்; ஒன்பது ஆண்டுகளும் ஆகலாம். அதுவரை நீங்கள் என்னுடன்தான் இருக்கிறீர்கள். அந்தச் சௌந்தர்ய தேவதையைப் பிரிந்து உங்களால் இருக்க முடியாது என்பதை நான் முற்றிலுமாக அறிந்தவன்; உணர்ந்தவன்! எனவேதான் இந்த ஏற்பாடு...’’

எதற்காகத்தான் நீ இவன் கண்களில் பட்டாயோ பூஜ்யா...

பூஜ்யா... பூஜ்யா...

சிவாஜியின் உள்மனம் அலறுகிறது...

ஏதோ ஓர் உற்பாதத்தை நோக்கித்தானோ இவனுடைய கண்களில் குளிர்ச்சிக் காவியமாய்ப் பட்டிருக்கிறாய்.

பூஜ்யா...

எனது சாம்ராஜ்யக் கனவுக்கு எந்தவித ஊறும் ஏற்பட்டுவிடக் கூடாதே, பவானி... தெய்வத்தாயே...

பூஜ்யா...

''சிவாஜி!''

ஔரங்கசீப்பின் அழைப்பால், பூஜ்யாவின் சிந்தனை பாதியில் தடைப்பட்டு - பூஜ்யா...

''நீங்கள் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். நாளை நமது தூதுவர்களுடன் தலைமை தாங்கித் தூது செல்கிறீர்கள்!''

தயக்கம்...

''தயக்கத்துக்கான காரணம் புரிகிறது, சிவாஜி! நான் உங்களை எனது சேவக அதிகாரத் தோரணையில் அனுப்பவில்லை. நீங்களும் சேவகம் பார்க்கிற பதவியை ஏற்கவில்லை. அது முகலாய ஷா-இன்-ஷா ஷாஜஹான் சக்கரவர்த்திகள் வழங்கவேண்டிய ஒன்று. நான் அனுப்புவது எனது சமகாலத்து வீர நண்பரை.''

ஆ! ஔரங்கசீப், பேச்சில் நாவன்மை மிக்க சொல்லதிகாரியாயிற்றே! எப்படி வளைத்து எதை எவ்வாறு நாசுக்காகப் பொருள் புரிந்தும் புரியாமலும் சொல்ல வேண்டும் என்கிற திறன் அவருக்கே உரியது.

சிவாஜி விடை பெறுகிறார்.

எவ்வாறு விடை பெறுவது?

சலாமிட்டா?

சே!

பின்?

தமது இந்து முறைப்படி ஒரு அந்நியரிடம் விடை பெறுகிறபோது, கைகூப்பி விடைபெறுவது பொதுத் தன்மை. அத்தன்மையிலேயே கரம் கூப்பி விடைபெறுகிறார்...

ஔரங்கசீப் முறுவலித்த முகத்தினராய் விடைதருகிறார்.

சிவாஜிக்கென தனி சமையல் செய்து கௌரவிக்க ஔரங்கசீப் தவறவில்லை. ஔரங்கசீப்பின் நெஞ்சு எவ்வளவுக்குக் கொடியதோ, அவ்வளவுக்கு அவரது இதயம் ஈரம் சுரக்கும் இமயம்! அந்த இதயத்தின் ஒவ்வொரு துளை பாகத்திலும் திருக்குரான் ரத்தத்துடன் கலந்து நுழைந்து, கனிகிற போது கனிய வைக்கத் தவறியதில்லை! அவரது அந்தக் கொடூரமும் அவரைப் பொறுத்தவரையில் சரியே! குற்றம் காண்பதும் ஒரு குற்றமே!

ஓர் இந்துவான சிவாஜிக்கு எவ்வளவுக்கு இந்து சாம்ராஜ்யக் கனவு இருக்கிறதோ, அவ்வளவுக்கு ஔரங்கசீப்புக்கும் இஸ்லாமிய சாம்ராஜ்யக்கனவு இருக்கக்கூடாது என்பதில் என்ன நியாயம் என்பதை ஒரு முறை பூஜ்யாவே ஆவேசித்து இருக்கிறாள்...

பதினேழாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற இரு சரித்திரக் கதாநாயகர்களில் ஔரங்கசீப்பும் ஒருவராயிற்றே!

**த**மக்கென அளிக்கப்பட்ட தனித் துகின்மனையில் மல்லாந்து படுத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் ஏதேதோ அலசுகிறார் சிவாஜி.

இப்படியான இக்கட்டில் அகப்படச்செய்து வழிவகுத்தவள் பூஜ்யா. இது எந்த நன்மைக்கோ? அல்லது எந்தத் தீமைக்கோ?

பூஜ்யாவை இங்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப் போவதாக ஔரங்கசீப் சொன்னது...

தேவைதானா?

தேவை மாதிரியல்லவோ தெரிகிறது...

இங்கிருந்து விடுபட்டுச் செல்ல எந்தவிதத் தீர்வும் தெரியவில்லையே...

நாளை தந்தையின் தலை வேண்டி, தரும நியாயத்துக்குப் புறம்பான தூது...

இதன் மூலம் பீஜப்பூர் சுல்தானாவைப் பழிவாங்க ராஜதந்திரம் கைகொடுக்க வேண்டுமாமே...

ஓ... பூஜ்யா... எனக்கு இங்கே யார் கைகொடுப்பது?

அந்த நள்ளிரவு நேரத்தில்...

வானில் நிலவு, பாலனைய ஒளி வாணிபம் நடத்திக் கொண்டிருக்கின்றன...

நட்சத்திரங்கள் பெண்களுக்கு மினுக்குபதேசம் செய்து கொண்டிருக்கிறது...

'சோ' வென்ற காற்று...

ஆயினும் அதில் ஓர் இதம்...

ஒரே அமைதி...

யுத்தகள உயிரினங்கள் உறக்கத்தில் சில மனைவிமார்களையும், சில மாற்றான் தோட்டத்து மல்லிகைப் பூக்களையும், ரசித்துக் கொண்டும் புசித்துக் கொண்டும் இருக்கின்றன...

சடாரென ஒரு நிழல் கூடாரத்தின் துவாரத்து வழியாகப் புகுந்து சரேலென மறைய -

''யாரது?'' என்று ஆவேசமுடன் துள்ளியெழுந்த சிவாஜி-

வீரவாளை உருவிக்கொண்டு துகின்மனையின் திரைச் சீலையை நீக்கிப் பாய்ந்தார்.

உருவம் மறைந்து விட்டது.

-----

# 17

கடலிலும் நிலத்திலும் விளையும் பொருள்களில் கிடைக்கும் வருவாயில் சரிபாதியை நாட்டு மக்களுக்கு (பஞ்சம் வருகிறபோது) என ஒதுக்கி வைக்க வேண்டும். எஞ்சிய பாதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பழைய பொருள்களைப் பயன்படுத்திக் கொள்கிறபோது, அதற்கு ஈடாகப் புதிய பொருள்களை இருப்பில் வைத்துக் கொள்வது அரசாங்கக் கடமை.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 36).

**க**ற்புள்ள அழகுமகள் அளவாக முறுவலிப்பது போல பொழுது இதமாக விடிந்து கொண்டிருக்கிறது.

இனம், ஜாதி, மதம், மொழிப்பிரச்னை, வேதவிவாதம் போன்ற எந்தச் சலனங்களுமற்று எங்களுக்களித்த பரந்த சாம்ராஜ்யம் அளவிடற்கரிய வானம் என்பது போலப் பறந்து செல்கின்றன சிறகு ஜீவிகள்...

காலைக்கடன்களை முடிப்பதற்குள் பத்து நாழிகைப் போது பறந்துவிட்டது.

இரவு தெரிந்த நிழலுக்குரிய உருவம் எது?

எப்படியோ இருளில் மறைந்து ஒளிந்து ஓடிவிட்டது...

சிவாஜிக்கென சேவை செய்ய அமர்த்தப்பட்டவர்கள் இந்து வீரர்கள்...

அவர்களைக் கேட்கலாமா?

வேண்டாம், அவர்கள் இந்துவேயானாலும் இஸ்லாமிய உப்பைத் தின்று வாழ்வு நடத்துபவர்கள்...

தனக்குச் சாதகமாக எதையும் செய்யமாட்டார்கள்...

உதாரணத்துக்கு தந்தை ஷஹாஜி போதுமே...

இன்னும் சற்று நேரத்தில் அவரது தலையைக் கேட்கப் போகிறோம்...

ஓ... எத்தனை அறத்துன்பமான செய்கை இது? நாணம் கவிகிறது...

இதனை எவ்வாறு சாதிப்பது?...

''பிரபோ நமஸ்தே! சர்வ வல்லமை பொருந்திய முகலாய இளவரசர் தங்களை உடனே அழைத்து வரச் சொல்லி இருக்கிறார்.''

வந்தவன் இந்து வீரன். வணங்கி விடைபெறுகிறான்...

வெண்ணிறத்தில் பிடிப்பான ஸுர்வாலும், நீண்ட அங்கியும், அவருக்கே உரித்தான முந்திரிக் கொட்டைத் தலைப்பாகையும்...

இத்தகையும் அணிந்து கொண்ட சிவாஜிக்கு மிகப் பெருங்குறை...

நெற்றியில் விபூதியும் சந்தனப் பொட்டும் அதன்மீது செம்மை போதிக்கும் குங்குமமும் இல்லை. அவற்றுக்கு அவர் எங்கே போவார்?

மனத்தளவில் ஈஸ்வரனை வணங்கிக் கொள்கிறார். ஈஸ்வரார்ப் பணம்! பிறகு...

''அன்னை பவானி... நீதான் அருகில் இருக்க வேண்டும்!''

பிரார்த்தனைத் தூது...

நடந்து சென்றே ஔரங்கசீப்பின் கூடாரத்துள் நுழைகிறார்...

வணக்கங்களின் பரிமாற்றம்...

''உட்காருங்கள் சிவாஜி!''

உட்காருகிறபோதுதான் அந்தக் காட்சியைக் காணுகிறார் சிவாஜி...

கூடாரக் கம்பத்தில் ஒருவனைக் கட்டிப்போட்டு வைத்திருக்கிறார்கள்...

அவன் ஓர் இஸ்லாமியன்...

''சிவாஜி! இவன் ஓர் இன வெறியன்; மதவெறியன்! ஆகவே இவனிடம் மானுட ஞானமில்லை. எனது யுத்தகள வீரர்களில் ஒருவன். இஸ்லாத்தையே அழிக்கப் புறப்பட்ட ராட்ஸனாக உங்களைக் கற்பனை செய்து கொண்டு இரவு உங்களைக் கொல்ல முனைந்திருக்கிறான். பின்னர் தனது உயிரையும் மாய்த்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறான். மதம் வேறு; மானுடம் வேறு என்பதனை யறியா ஞானசூன்யம்! ஒரு மாவீர திலகத்தை நான் இழந்திருப்பேன்! இவனுக்குச் சிரச்சேத தண்டனையை உங்கள் வாயால் அளிக்கவே கட்டிப் போட்டிருக்கிறேன். இவன் மட்டும் பிடிபடவில்லையானால்... ஓ...''

சிவாஜிக்காகப் பெரிதும் கவலைப்படுகிற மாதிரி...

சிவாஜியால் எதையும் அனுமானிக்க முடியவில்லை...

இவன்மட்டும் பிடிபடவில்லையானால் என்கிற சொற்களுக்கு உடனடியாக...

'ஒன்றுமே செய்துவிட முடியாது' - என்கிற பதிலைத் தூக்கிப் போடலாம்...

அது ஓர் அழகா?

மெல்ல எழுந்த சிவாஜி, அந்த வீரனை அணுகி ஆழ்ந்து பரிசீலிக்கிறார்...

அந்த வீரன் திருதிருவென்று விழிப்பான் என்றே சிவாஜி எதிர்பார்த்தார்...

எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் - அந்த வீரன் - கொடூரமாகக் கவனிக்கிறான்...

'எங்கள் தலைவனை மீறி நீ ஒன்றுமே செய்துவிட முடியாது' - என்பது போல இருக்கிறது அவனது நெருப்புப் பார்வை...

மீண்டும் வந்து அமருகிறார்...

அவரது போக்கு ஔரங்கசீப்புக்குப் புரிபடவில்லை...

தண்டனை வழங்க வேண்டும்...

''யுவராஜ்! பாவம் இவன்! இவனைப் பற்றி இவனுக்கே தெரியாது. எனவே இவன் என்ன செய்கிறான் என்பது இவனுக்கே புரியவில்லை. மன்னித்துவிடுங்கள்!''

அரண்டு போகிறார் ஔரங்கசீப்.

''மன்னிப்பதா?''

''நாம் மானுட ஞானமுள்ளவர்கள்!''

ரத்தினச் சுருக்கமான பதில்.

'சபாஷ் சிவாஜி!' என்று ஔரங்கசீப்பின் நெஞ்சு பாராட்டிக் கொள்கிறது.

''அச்சா! உங்களுக்காக இவனை மன்னிக்கிறேன்!'' என்று கூறிய ஔரங்கசீப், ''அஹமத்!'' என்று ஓங்கிக் குரல் விடுக்கிறார்.

மெய்க்காப்பாளர்களில் ஒருவனான அஹமத் பூதாகாரமாகப் பணிந்து நிற்கிறான்.

சமிக்ஞை; அவ்வளவே...

கட்டு அவிழ்க்கப்படுகிறது. விடுபட்ட வீரன் மண்டியிட்டு வணங்குகிறான்...

அவன் யாருக்கு வணங்குகிறான்...?

அவனை அழைத்துக் கொண்டு வெளியேறுகிறான் அஹமத்.

''நண்பரே! தூதுவர்கள் தயார். நீங்கள் புறப்பட்டு பீஜப்பூர் மகாலை ஒரு கலக்குக் கலக்கிவிட்டு வாருங்கள். மாலைக்குள் நீங்கள் இங்கு வந்து சேரவில்லையானால், பீஜப்பூர் மண்மேடாகிவிடும்! சென்று வாருங்கள்!''

மேலும் இது குறித்து எந்தவிதப் பேச்சுக்கும் இடமில்லை என்பதனை முற்றுமாக உணர்ந்துகொண்ட சிவாஜி புறப்பட ஆயத்தமானார்.

பீதிக்கொண்ட பீஜப்பூர் அரண்மனை, மேலும் பீதிக் கொண்டது. ஔரங்கசீப்பின் துணைகொண்டு தூது வருகிறாராமே...

பேகம் சுல்தானா தாகம்கொண்ட நெஞ்சில் தண்ணீராய்க் கொட்டுகிறாள்; அது தணிய வேண்டுமே!

பீஜப்பூர் இளவரசன் அலி ஆதில்ஷா அரண்டு மருண்டு போனான்...

முஜூம்தாரிலிருந்து பௌஜ்தார் வரை முணுமுணுத்து மூச்சுக்கு ஒரு பேச்சாய் சந்தேகிக்கிறார்கள்...

ஷஹாஜி பான்ஸ்லேவோ, 'ஏன் வருகிறான் இவன்?' என்று மனத்தை அரற்றிக் கொள்கிறார்...

செய்தி ஓர் அரக்கன் விஜயம்போல வருகிறது...

வரச்சொல்லி உத்தரவிட வேண்டும், மறுக்க முடியாது.

அவசர அவசரமாக தர்பார் கூடுகிறது.

உத்தரவு பிறக்கிறது...

மகாராஷ்டிர ராஜ கர்ஜனை உள்ளே நுழைகிறது...

முன்பு நுழைந்த நுழைவுக்கும் இப்போது நுழைகிற நுழைவுக்கும்...

ஆ! எத்தனை வித்தியாசம்...

பூரித்துப் போகிறது தந்தையுள்ளம்...

''வாருங்கள் சிவாஜி!''

சுல்தானா சுகமான குரலில் வரவேற்பு தருகிறாள். ஆயினும் அதில் பிசிறு தட்டும் நடுக்கம் அனைவருக்குமே புரிகிறது.

ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கிற அளவுக்கு அமைதியோ அமைதி!

ஓ... சிவாஜி இப்போது கௌரவிக்கப்படுகிறான்...

நிமிர்ந்த தலைகள் நிமிட்டிக் கொள்கின்றன...

வணக்கம் வைக்க வேண்டுமே...

வாரே, வா... சிவாஜி!

''சுல்தானா? சுகந்தானா?''

- குரலில் எள்ளல்; கண்களில் மின்னல்; தேகத்தில் இறுமாப்பு...

சுல்தானா பேகம் அந்த நேரத்திலும் கம்பீரமாகச் சிரிக்கிறாள்...

''சிவாஜி! எனக்குச் சேவகம் செய்ய மறுத்தீர்கள்: இப்போது ஆக்ரா உங்களை அடிமைப்படுத்தி விட்டதோ?''

''அடிமை... தூ!''

- விழிகளில் அக்கினி ஜுவாலை!

''எனது தந்தையின் செவிகளில் இந்த வார்த்தையை உபதேசியுங்கள்! ஔரங்கசீப்பின் நண்பனாக வந்திருக்கிறேன்! உங்கள் அங்கங்களைக் கீறி, குலைகளைப் பிடுங்கி மாலையாக்கிக் கொள்ள வந்திருக்கிறேன்!''

''சிவாஜீ...!''

- அப்சல்கானின் பெருத்த உறுமல்!

மிக்கவும் அலட்சியமாகத் திரும்பிப் பார்த்த சிவாஜி, அலட்சியமாகச் சிரித்து ‘‘யார் இந்தக் கோமாளி?’’ என்று முன்பு கேட்ட அதே கேள்வியைக் கேட்டபோது...

மீண்டும்...

‘‘சிவாஜீ!’’

- தந்தையின் கர்ஜனை...

சிவாஜியைக் கைதியாக்கிக்கொண்டு வருகிறபோது அப்சல்கானை நோக்கிக் கர்ஜித்த கர்ஜிப்புக்கும் இந்தக் கர்ஜிப்புக்கும் வித்தியாசமிருக்கிறது...

முன்னம் மகன் பாசம்...

இப்போது ஒரு மாவீரப்பாசம்...

என்ன இருந்தாலும் அப்சல்கானும் ஓர் இணையற்ற வீரனல்லவா?

‘‘சிவாஜி! அப்சல்கானுக்கு மரியாதை தராவிட்டாலும் அவனது வீரத்துக்கு மரியாதை தரவேண்டும்!’’

‘‘எனது வீரத்துக்கு மிஞ்சி எந்த வீரனுமில்லை என்று வீறுகொண்டவன் நான்! இறுமாப்பு படைத்தவன் நான்!’’

‘‘சிவாஜீ!’’

- ஓர் அலறலுடன் அப்சல்கான் வாளையுருவ...

தூதுவர்களில் ஒருவனாக வந்த ஃபுலாத்கான், ‘‘பேகம் சாகிபா, எங்கள் இளவரசர் ஆணை! அவரது நண்பரும் மராட்டிய மாவீரருமான சிவாஜியின் உடலில் ஒரு துளி ரத்தம் சிந்துமேயானால், பீஜப்பூரில் ரத்த ஆறு பிரவேசிக்கும்!’’ என்றான். அப்சல்கானின் உருவிய வாள் உறையில் உறங்க நுழைகிறது.

‘‘சிவாஜி! வந்த காரியத்தைப் பேசலாம்’’ என்கிறாள், சுல்தானா பேகம். அவளது குரலில் நடுக்கம் பகிரங்கமாகத் தெரிகிறது.

ஒருவாறு தம்மைச் சமனப்படுத்தப் பெருமூச்செறிகிறார் சிவாஜி.

''பேகம் சாஹிபா! நான் வந்த காரியத்தை மாற்றிச் சொல்ல வேண்டுமென்றால் அப்சல்கானின் தலை வேண்டும் என்று கூறுவேன்! ஆனால்...''

சிவாஜி முடிக்கவில்லை. இடைமறித்த ஷஹாஜி பான்ஸ்லே, ''சிவாஜி!'' என்று மீண்டும் இரைகிறார்...

''உண்மையைச் சொல்லப் போனால், உங்கள் தலை வேண்டும்!''

தர்பாரே ஸ்தம்பித்துக் கவனிக்கிறது...

''என்னடா மைந்தா? என்ன பேசுகிறாய்?'' - ஷஹாஜியின் நாவு தழதழக்கிறது.

''புரியவில்லை? உங்கள் தலை வேண்டும். இது கிடைக்குமே யானால் ஆக்ரா படை திரும்பும்.''

''கிடைக்கவில்லையென்றால்?''

''பீஜப்பூரின் தலைகள், பாதைகளில் பனங்காய்களாக மிதக்கும்...''

''சிவா...''

''...என்பது ஔரங்கசீப்பின் உத்தரவு!''

''காரணம்?''

''இந்தத் தேசத்து ஒரு மாவீரனை - எரிமலையை - புரட்சித் தலைவனை - கைது செய்து பீஜப்பூர், சரித்திரக் கேடு செய்து விட்டதாம்! எனவே, மகனென்றும் பாராது கைது செய்த தந்தையின் தலையை கேட்டுச் சரித்திரக்கேட்டைத் துடைக்க விரும்புகிறார் ஷாஜஹான் மைந்தன் ஔரங்கசீப்!''

- காரணம் கூறி முடிக்கிறான் ஃபுலாத்கான்.

சிறிது நேரம் அமைதி...

கண்களில் சாரை சாரையாக நீர்மல்க ஆசனத்தை விட்டு எழுந்து வருகிறார் ஷஹாஜி பான்ஸ்லே!

அருமை மகன் அருகில் வந்த ஷஹாஜி, ''மைந்தா! எனது வாளால் எனது தலையை நானே கொய்து கொள்ள முடியாது. ஆகவே ஒரு சுதந்திரக் கர்ஜனை புரியும் உனது வாளால் எனது இந்த அடிமைச் சிரத்தைக் கொய்து எடுத்துச் செல்! சரித்திரக்கேடு செய்த இந்த ஷஹாஜிக்கு ஒரு சரித்திரப் பிராயச்சித்தம் கிட்டட்டும்!'' என்று கூறுகிற போது தர்பாரின் நெஞ்சுகள் உருகின என்பது ஒருபுறமிருக்கட்டும். சிவாஜியின் நெஞ்சு கலங்கி உள்ளுக்குள் நீர்மல்கிக் கொள்கிறது...

அவர் வெகுவாகச் சமாளித்து தம்மைத் தேற்றிக் கொள்கிறார்...

அதுவரை மௌனமாக இருந்த சுல்தானா பேகம் எழுந்து கொண்டாள்...

தர்பாரே எழுந்து கொள்கிறது...

சிம்மாசனத்தை விட்டிறங்கி வந்த சுல்தானா பேகம், சிவாஜியை கலங்கிய நெஞ்சோடு கவனிக்கிறாள்...

''உங்களைக் கைது செய்ததற்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன் சிவாஜி!''

''காலங் கடந்த ஞானோதயம்...''

''ஔரங்கசீப் கேட்டது போலத்தான் உங்களை விடுதலை செய்து விட்டேனே!''

''கேட்டதனால்தானே விடுதலை செய்தீர்கள்? நீங்களாக விடுதலை செய்யவில்லையே!''

''அதற்காகத்தான் மன்னிப்புக் கோருகிறேனே! உங்களை விடுதலை செய்துவிட்ட பிறகு இந்தத் தூது ஏன்?''

''எனக்காக, எனது கௌரவப் பிரச்னைக்காக! நீங்கள் விடுதலை செய்தது சிவாஜியை! சிவாஜியின் வீரத்தையல்ல! ஔரங்கசீப்

வீரத்தோடு சிவாஜி வீரமும் இணையுமானால் பீஜப்பூர் மண்மேடாகிவிடும்!''

அப்சல்கானின் தேகம் துடிக்கிறது. ஆயினும் சுல்தானா பேகத்துக்கு மீறி அவனால் எதையும் செய்ய முடியவில்லை. தர்பாரிலேயே சிவாஜியைப் பிணமாக்கிவிட்டால் என்ன என்றும் கருவிக் கொள்கிறான். அவனது துடிப்பு அவ்வாறு செய்து முடித்து விடுமோ என்றும் அவனுள்ளே அவன் அஞ்சிக் கொள்கிறான்...

''நானே ஔரங்கசீப்பை வந்து சந்திக்கிறேன்! எனது மாவீரத் தளபதியாரை நானிழக்கச் சம்மதிக்கவில்லை.''

''ஔரங்கசீப் உங்களைச் சந்திக்க விரும்பவில்லை. அவர் கேட்டது உங்கள் தலையை அல்ல; அப்சல்கானின் தலையை அல்ல; எனது தந்தையின் தலையை! அதை நீங்களோ, அப்சல்கானோ, வேறு யாரோ முனைந்து, கொய்து, ஒரு பேழையில் வைத்து மிக்கவும் அரச மரியாதையுடன் தந்தால், நானும் நகருவேன்; படைகளும் நகரும்!''

இரண்டாம் தளபதி அப்சல்கானின் உடல் இப்போது அதிகமாகவே துடிப்பு கண்டுவிட்டது.

-----

# 18

மாடுகளுக்கு ஏன் மணி கட்டுகிறோம்? பாம்பு மற்றும் கொடிய விலங்குகளை அந்த ஓசை அச்சுறுத்துகிறது. மாடுகளை ஓட்டும் இடையன் அதன் ஓசையை அனுமானித்துப் பின் தொடர்வான். பயந்த சுபாவமுடைய மாடுகளும் அந்த மணியோசை முழக்கத்தால் மருட்சி நீங்கி நடக்கும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 2, அத்தியாயம் - 50).

**அ**ன்புக்கினிய மகன் உண்மையாகவே தனது தலையைக் கேட்கிறான் என்கிற பயந்த நிலைக்கு ஆளாகிவிடுகிறார் பீஜப்பூரின் சர்வ வல்லமை பொருந்திய மகா சேனாதிபதி ஷஹாஜி பான்ஸ்லே.

அவரது இதயம் அதிகமாகவே துடிப்பு காண்கிறது...

தானாகவே கைதியாகித் தன்னுடன் புறப்பட்ட மகனா இவன்? தந்தையின் செஞ்சோற்றுக் கடனுக்காகத் தனது மானத்தையே பலியிடத் தயாரான தங்கமனைய தனயனா இவன்? ஒன்றுமே புரியவில்லை. இதில் ஏதோ உள்ளாழ்ந்த ராஜதந்திர இழைகள் இருக்கின்றன...

அப்சல்கானின் துடிப்பைப் பார்த்தால், 'உத்தரவு' என்ற வார்த்தை சுல்தானா பேகம் பிரயோகித்த அடுத்த கணமே வாளையுருவி ஷஹாஜியின் தலையைக் கொய்துவிடுவான் போலிருந்தது. புறப்பகைவன் சிவாஜியை அடுத்து எதுவரினும்

வரட்டும் என்கிற வெறியுடன் தீர்த்து விட்டு, சுல்தானா பேகத்திடம் மன்னிப்புக்கு மன்றாட எந்நேரம் பிடிக்கும்?

ஆனால் எல்லையில் முகாமிட்டிருக்கும் ஔரங்கசீப், அவனுடைய படைகள்...

அப்சல்கானின் அஸ்தியை உலுக்குகின்றன...

இந்த ஒற்றுமையற்ற தேசத்தில் - லஞ்சத்துக்குப் பல்லிளிக்கும் தேசத்தில் - பதவிகளுக்கு வாலையாட்டிக் குழையும் தேசத்தில், ஷஹாஜியை விலைக்கு வாங்கி அல்லது விலங்கிட்டு எல்லாரையுமே இஸ்லாமியர்களாக்கிவிட முடியும். இந்துஸ்தான் கனவு இஸ்லாமியஸ்தான் கனவாக மருவ எத்தனை நேரம் பிடிக்கும்? ஆனால் இந்தச் சிவாஜி என்கிற மாயச் சைத்தான் உயிரோடு இருக்கிறவரை அது குறித்து எண்ணிப்பார்க்கக்கூட முடியாதே! எண்ணிப்பார்த்த பிறகுதானே அது கனவில் மலர்ந்து மணக்கும்?

ஓ...சிவாஜி இந்த தேசத்தின் காவலன்; இந்து தர்மத்தின் இரும்பு முள்வேலி...

இவ்விதமாக நினைத்துப் பார்த்துக்கொண்ட அப்சல்கான், தனது கூரிய பற்களால் நறநறக்கிறான்...

ஔரங்கசீப்பின் நட்புமட்டும் பூரணமாகக் கிடைக்குமானால்...

இந்து தேசம், இஸ்லாமிய தேசம்தான்...

ஔரங்கசீப் சம்மதித்தாலும் அவரது தந்தை ஷா-இன்-ஷா ஷாஜஹான் சக்கரவர்த்திகள் சம்மதிக்க மாட்டாரே!

அவர் தனது பாட்டனார் அக்பர் வழிவந்த அறங்காவலர்; மதச்சமத்துவ மாமேரு...

ஆ! அந்த அக்பர் ஏன்தான் பிறந்தாரோ? அவரால் வந்த வினை...

அது தொடர்கிறது...

அப்சல்கான் தனது வெளிநிலையிலிருந்து இவ்வாறு சிந்திக்கிறான்...

அவன்தான் இவ்வாறெல்லாம் சிந்திக்கிறானேயொழிய, மற்றபடி பீஜப்பூர் தர்பார் சிந்தனையற்ற பயங்கர அமைதியுடன் மௌனமாகக் காணப்படுகிறது.

சுல்தானா பேகம் அருகே இருந்த படேமுஜூம்தார், ராஜா ஷஹாஜி பான்ஸ்லேவைக் கலங்கிய கண்களுடன் கவனிக்கிறாள்...

பீஜப்பூர் காக்கப்பட வேண்டுமானால் அவரது தலை, அவசியமாகிறது...

ஓராயிரம் லட்சம் தலைகள் உருளுவதைவிடத் தமது தலையுருண்டால் போதும் என்கிற நியாயமான தியாக உணர்வுடன் தயாராகிவிட்டார், ஷஹாஜியும்...

‘‘சிவாஜி! எனது மதிப்புக்குரிய வீரரே! தயவுசெய்து இந்த உத்தரவுக்கு மறுபரிசீலனை தேடுங்கள். இவர் உங்கள் தந்தை! எனது வலக்கரம்! மேலும்...’’

சுல்தானா பேகம் முடிக்கவில்லை.

சிவாஜி சொன்னார்:

‘‘அப்சல்கானின் தலையைக் கேட்கலாம். அதைவிட விசேஷம் எனது தந்தையின் தலையில் மூளையிருக்கிறது. அதனால்தான் அது அவசியப்படுகிறது.’’

அப்சல்கான் மயிர்க்காலுக்கு மயிர்க்கால் எரிச்சல் மூளுகிறது...

பற்களின் நறநறப்பு...

‘ஹரே... சைத்தான் சிவாஜி!’ - மனம் உறுமுகிறது...

என்ன செய்ய முடியும்?

சுல்தானா பேகம் தனது கண்களை அப்சல்கான் பக்கம் திருப்பி அமைதி சாதிக்குமாறு சமிக்ஞை செய்கிறாள்...

சிவாஜிக்கு இவையாவும் புரியாமலில்லை.

அவர் அமைதியாக முறுவலிக்கிறார்...

சுல்தானா பேகம் மேலும் பரிதாபமாகக் கண்களால் யாசிக்கிறாள்.

''சிவாஜி! நீங்கள் நினைத்தால் இதற்கு மறுபரிசீலனை காணமுடியும்! ஏனென்றால் ஆக்ராவின் யுவராஜன் உங்கள் முடிவை ஏற்பார். தயவு செய்து மறுபரிசீலனை செய்யுங்கள்.''

ஆ! சிறையில் தள்ளிய சுல்தானாவா?

சிவாஜியின் கௌரவம் விநாடிக்கு விநாடி உயர்கிறது...

ஓரளவு போதுமென்றுணர்ந்த சிவாஜி, ''நல்லது, மறுபரிசீலனைக்கு வருவோம்; எனது தந்தையின் எடை நிறைந்த பலத்தைக் கேட்கவில்லை; எவரும் வியக்கும் வீரத்தைக் கேட்கிறேன்! அந்த வீரம் எத்தனை யானை பலமிருக்கும்? சும்மா ஓர் ஊகமாகச் சொன்னாலே போதும்...'' என்று கூறித் தந்தையை நோக்குகிறார் சிவாஜி.

அப்சல்கான் புரியாது தாடியை உருவிக் கொள்கிறான்...

சுல்தானா பேகம், தலைதப்பியதே போதும் என்று, ''அதற்கு எடையே இல்லை. உத்தேசமாக நீங்கள் கேட்டதற்குச் சொன்னால் பத்து யானை பலம் கொண்டவர்!'' என்றாள் ஏதோ மிகப்பெரிய பெருமை பேசுபவள் போல!

சிவாஜி கெக்கலிக் கொட்டிச் சிரிக்கிறார்.

ஓ... எனது தந்தைக்குப் பெருமை தேடித் தந்துவிட்டேன்.

''அப்படியானால் சுல்தான பேகம்! அந்தப் பத்து யானைகளைக் கொண்டுவந்து அவற்றின் முதுகு வீங்க பொன்னும் மணியும் காணிக்கையாக ஔரங்கசீப்பின் பாசறைக்கு அனுப்பிவைக்க வேண்டும். அத்துடன் பீஜப்பூர் கப்பம் செலுத்தத் தவறாது என்கிற ஓர் அடிமை சாசனம் ஒப்பந்தமாக வேண்டும். அவ்வாறு நிகழுமேயானால் இந்தப் போர் தவிர்க்கப்படும்!''

பல விழிகள் பிதுங்கி போயின.

அரண்மனைப் பொக்கிஷமே காலியான மாதிரிதான்...

சுல்தானா பேகம் சொல்வதென்னவென்று புரியாது விழிக்கிறாள்...

யாரை அபிப்பிராயம் கேட்பாள்?

அப்சல்கானைக் கேட்டால் முடியாது; போர் என்பான்...

ஏன்? தலை தப்பிய ஷஹாஜியையே கேட்டால்?

''ராஜா, ஷஹாஜி! எப்படியோ உமது மைந்தர், தந்தைக்கு ஒரு கௌரவம் தேட அற்புதமாக ஓர் அடிமை நாடகம் எழுதுகிறார்! நீங்கள்தானே இந்த நாடகத்தின் கதாநாயகர்! நீங்களே பதில் சொல்லுங்கள்!''

சுல்தானா பேகம் இவ்வாறு கூறுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆட வந்த நாடகத்தின் திரைத் திருப்பம் இவ்வாறு அமைந்து விடும் என்று சிவாஜியே எதிர்பார்க்கவில்லை.

ராஜா ஷஹாஜி பான்ஸ்லே இதற்காக அதிக நேரம் சிந்திக்க வில்லை.

''மகனே, சிவாஜி! இது குறித்துச் சிந்திக்க வேண்டும். நாளைய காலையில் நீ கேட்ட ஒப்பந்தம் உன் நண்பர் ஔரங்கசீப்பின் பாசறை நோக்கி வரும், என் பொருட்டு நீ சென்று சேதி சொல்லலாம் அல்லவா?''

இப்போது ஓர் உத்தமமான செஞ்சோற்றுக்கடன் பேசியது...

தமக்குக் கௌரவமளித்த மகனிடமே அந்தச் செஞ்சோற்றுக் கடன் சதிராடியது...

சிவாஜி, தந்தையின் சொற்களைத் தலைமீது தாங்கி விடை பெறுகிறார்...

ஓரளவு சுல்தானா பேகத்துக்கு நிறைவு...

பிறகு சிந்தித்துக் கொள்ளலாம்...

சிவாஜி சென்ற பிறகு சுல்தானா பேகம் கேட்கிறார்:

''ஷஹாஜி! இப்போது சொல்லுங்கள். இந்த ஒப்பந்தம் நிகழ்ந்தே தீரவேண்டுமா?''

அப்சல்கான் சொன்னான்:

''பீஜப்பூரையே விற்றுவிட்டது மாதிரிதான்...''

''இதைவிட பீஜப்பூர் அழிந்து படலாம்!'' என்று கம்பீரமாக முழங்குகிறார் ஷஹாஜி பான்ஸ்லே. ''பேகம் சாஹிபா! விடிந்ததும் யுத்த நகாரா முழங்கலாம்!''

''ஷஹாஜி!''

''வேறு வழியில்லை. விற்பதைவிட அழிவது மேலல்லவா?''

''அப்சல்கான் சொன்னதற்காக இவ்வாறு கூறுகிறீர்களா ஷஹாஜி!''

''இல்லவே இல்லை; சிவாஜியிடம் பேசுகிறபோதே இந்த முடிவுக்கு வந்தவிட்டவன் நான்! பொழுது விடிந்ததும் போர் முரசம்! மகனை வெல்ல நானிருக்கிறேன்! ஔரங்கசீப்பை வெல்ல அப்சல்கானிருக்கிறார்.''

ஷஹாஜியின் கண்கள் கனன்று காணப்படுகின்றன...

''ஒரு திருத்தம்!'' என்கிறான் அப்சல்கான்...

''என்ன?''

''சிவாஜியைக் கவனிக்க நானிருக்கிறேன்; ஔரங்கசீப்பை நமது படேமுஜூம்தார் கவனித்துக் கொள்ளட்டும்.''

''ஏனிந்தத் திருத்தம்?''

''மகன் பாசம் தந்தைக்கும், மதப் பாசம் எனக்கும் வந்துவிடக் கூடாது அல்லவா? அதனால்தான்!''

''சபாஷ், அப்சல்கான்!'' என்கிறார் ஷஹாஜி. அவர் மனத்தூய்மை யுடன்தான் இதனை ஆதரிக்கிறார்...

ஆனால் அப்சல்கான்...

தூய்மையின் வாசலைக்கூட மிதிக்காது துடிக்கிறான்.

சிவாஜியின் தலையைக் கொய்து, பேழையிலிட்டு, ஷாஜஹானுக்கே காணிக்கையாக அனுப்ப வேண்டும் என்று எண்ணி இறுமாந்து கொள்கிறான்...

**அ**ன்றைய இரவு அலங்கோலத்தின் மடியில் துடியாய்த் துடித்துக் கரைந்து கொண்டிருக்கிறது...

பொழுது விடிகிறபோது சிவாஜியின் விழிகளும் மலருகின்றன...

அவர் காலைக்கடனை முடிக்காமல் மல்லாந்து படுத்தவண்ணம் சிந்திக்கிறார்...

அவரது சிந்தனையில் எப்போதும் காலை மலர்ந்ததும் பூஜ்யாவின் கமலமுகம் மலர்ந்து லட்சுமிகரமாய் மணக்கும்.

ஆனால் அன்றைக்கு ஏனோ காலை புலர்ந்ததும் தந்தை ஷஹாஜியின் முகம் சிந்தனையில் போராடியது...

நேற்று எதற்காகப் பதிலை யோசித்துச் சொல்லுகிறேன் என்று சொல்ல வேண்டும்? அவரது கௌரவத்தை உயர்த்தத்தானே, ஔரங்கசீப் தன்னைத் தூது அனுப்பியது! இதனைப் புரிந்து கொள்ளாது...

சே! தந்தை தனது கௌரவத்தைவிட 'நன்றி' என்கிற மகாவாக்கியத்துக்கு அதிகமாகவே கௌரவமளிக்கிறார். செஞ்சோற்றுக் கடனின் இரண்டாம் கதாநாயகன்!

காலைக்கடனை முடிக்க எழுகிற போது...

டம், டம், டம், டம்...

போர் நகாரா பேயாய் அழைக்கிறது...

ஓ... யுத்த முழக்கம்...

எதிர்பார்த்ததே! தந்தை தமது பீஜப்பூர் கௌரவத்தைக் காக்க முனைந்துவிட்டார்...

விரைந்து தமது காலைக்கடன்களை முடிக்கிறார் சிவாஜி. எந்தக் கணத்திலும் ஔரங்கசீப் அழைப்பு வரும்.

அவர் எதிர்பார்த்தது அக்கணமே நடந்தது.

சிறிது நேரத்தில் தயாராகிப் புறப்படுகிறபோது...

சற்றே நின்று மீண்டும் அன்னை பவானித் தெய்வத்தை வணங்கிக் கொள்கிறார்.

''தாயே! இந்தத் தனையனுக்குத் துணையிருப்பவள் நீ! அண்ட சராசரம் கொண்ட அகிலாண்டேஸ்வரி நீ! உன்னிலும் வேறு துணை எதற்கு?''

மனத்தின் பரிசுத்தமான பிரார்த்தனை.

வலது கை வாளைத் தொடுகிறது...

அதன் பெயரும் பவானிதானே...?

வண்ணமயமான ராஜகூடாரத்துள் நுழைகிறார் சிவாஜி...

தனக்குமுன்பே தயாராகி இருக்கும் ஔரங்கசீப்பைக் கண்டு வியக்கிறார்...

''நமஸ்தே யுவராஜ்!''

''சலாம்... சிவாஜி! உட்காருங்கள்!''

சிவாஜி வழக்கமாக மண்டியிட்டு அமருவது போன்று உட்காருகிறார்...

''நகாரா சத்தம் கேட்டதா சிவாஜி?''

''கேட்டது யுவராஜ்!''

''உங்கள் தந்தை என்ன முடிவு செய்திருக்கிறார் பார்த்தீர்களா?''

''எதிர்பார்த்த முடிவுதான்; அதனால்தான் உங்கள் சமுத்திரம் போன்ற படைகளுக்குச் சண்டமாருத சேனாதிபதிகளிலிருந்தும், நான் தலைமை தாங்கி யுத்தம் புரியத் தீர்மானித்து விட்டேன்.''

''சாாபாாஷ்...! ! ! ''

மகிழ்ச்சிப் பெருக்குடன் சிரிக்கிறார் ஔரங்கசீப். அவர் எதிர்பார்த்துப் போட்ட திட்டம் அதுதானே? இல்லையென்றால் தலையைக் கேட்பாரா?

மனம் பாராட்டிக் கொண்டது. ஆனால் நெஞ்சு?

அது, 'இவனிருப்பதே நமக்குத் திருகுவலி!' என்று முனகிக் கொண்டது.

-----

# 19

அரசன், தனது தேவியை (அக் கால வடநாட்டு மரபுக்கு இது ஒவ்வும்) அவளது இருப்பிடத்தில் சந்திக்கக் கூடாது. தனது இருப்பிடத்துக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அழைத்து வருபவள் பண்பட்ட முதியவளாக இருக்க வேண்டும். அரசன் தனது தேவியை அவளிருப்பிடத்தில் போய் சந்தித்த தன் காரணமாகத்தான் பத்திர சேனன், தனது தம்பியால் கொல்லப்பட்டான். (அண்ணன் மனைவியுடன் தொடர்பு கொண்டவன்.)

கரூச நாட்டரசனை மகன் கொன் றான் (தாயின் படுக்கையறையி லிருந்து). பொரியோடு நஞ்சு கலந்து காசிராசனை, மனைவி கொன்றாள். இங்ஙனமே வைரந்தியனை விஷச் சிலம்பினாலும், சௌவீதேசத் தானான பரந்தாபனை மேகலை மணியாலும், சாலூரனைக் கண்ணாடி யாலும், விடூதரனைச் சடைப் பின்னலில் மறைத்து வைத்த ஆயுதத்தாலும் மனைவிமார்கள் கொன்றிருக்கிறார்கள்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 20).

புயலனைய போர் மூண்டது...

கடல் போன்ற ஷாஜஹான் படைக்குப் புயலைப் போன்ற ஔரங்கசீப் தலைமை வகித்து வந்ததுபோக...

இப்போது சூறாவளியை யொத்த சூரபதுமனான சிவாஜியே தலைமை வகித்துச் செருக்களம் நோக்கி நுழைந்துவிட்டான் என்கிற செய்தி -

பீஜப்பூரையே பீதிப்பூராக்கியது.

சுற்றுவட்ட மீதிப்பூர் என்ன செய்யும்?

பீஜப்பூருக்கு வடக்கே இருந்த அந்த வறண்ட பூமியில் ரத்த வெள்ளம் காட்டாறாக ஓடுகிறது...

பீஜப்பூர் படைகளை இரு பிரிவாகப் பிரித்து ஒரு பகுதிக்கு அரிமாவெனத் தலைமை தாங்கிப் போர் முழக்கமிடுகிறார் ராஜா ஷஹாஜி பான்ஸ்லே!

மறுபகுதிக்கு வேங்கையொத்த அப்சல்கான்!

பீஜப்பூர்ப்படை எண்ணிக்கை, ஔரங்கசீப் படைகளுக்குச் சளைத்து நிற்கவில்லை. இருதரப்பு வீரர்களுக்கும் பெருத்த ஆச்சரியம் என்னவென்றால், ஓர் இஸ்லாமிய ராஜ்யம் இன்னோர் இஸ்லாமிய ராஜ்யத்துடன் மோதுகிறது...

இது புதிதல்ல; ஏற்கெனவே இது போன்ற நிகழ்ச்சிகளைச் சரித்திரம் கண்டிருக்கிறது.

பெற்ற தந்தையை மகன் எதிர்க்கிற அல்லது பெற்ற மகனைத் தந்தை எதிர்க்கிற அதிசயமான காட்சி...

பழைமையில் ஒரு புதிய சரித்திரம்...

‘ஓ’ என்கிற ஓலக்கூச்சல் மறுபுறம்...

வாட்கள் மோதுகிற ஓசை வானை எட்டி, அது எங்கிருக்கிற கூகைகளையும் கழுகுகளையும் ‘வாவா’ என்று அழைத்துவிட்டது...

மனிதர்களுள் சமுதாயப் பிணந்தின்னி ஜன்மங்களில்லையா? அது மாதிரி பிணந்தின்னி ஜீவன்கள் இவை...

வானையே மேகக் கூட்டம் மாதிரி முற்றுகையிட்டு வட்டமிடுகின்றன...

போர் எப்போது ஓயுமோ; நார் எப்போது உரிப்போமோ என்கிற அவசர எதிர்பார்ப்பு அந்தப் பிணந்தின்னிகளுக்கு...

இந்த யுகத்தில் போரும் ஓயப்போவதில்லை; பிணந்தின்னி களும் அழியப் போவதில்லை என்பது போல, புதியதாக மேல் திசையிலிருந்து இறக்குமதியான துப்பாக்கிச் சத்தங்கள்; பீரங்கி முழக்கங்கள்...

வானத்து ரத்த ஞாயிறு மேல்திசையில் ரத்த வண்ணம் பூசுகிறான்...

ஞாலத்து ரத்த ஞாயிறு சிவாஜி, மண்ணில் ரத்த வண்ணம் பூசியது போதும் என்கிற மாதிரி, அன்றைய ஓய்வு போர் பெறுகிறது...

சேதாரம் இருதரப்பிலும் சொல்லி முடியாது...

இந்தப் போர் தேவைதானா?

இவ்வாறு சிந்திக்க வடதிசையில் எந்த ஔவையாரும் பிறக்கவில்லை; எந்தப் பிசிராந்தையாரும், கோவூர்க்கிழாரும் தோற்றமளிக்கவில்லையே?

அப்பனைக் கொன்று அரியணையேறுகிற மண்ணில் சமாதானப் புறாக்கள் பறப்பதாவது? தூது சென்று உரைப்பதாவது?

இரவுக் கன்னி போர்க்களத்துப் பிணநாற்றம் சகியாது மூச்சைப் பிடித்துக் கொண்டு பவனி வந்து கொண்டிருக்கிறாள்...

பிணந்தின்னிப் பறவைகளின் அட்டகாசமான குரல்கள் இரவின் அமைதியையே பாழ்படுத்துகின்றன...

ஊடே நரிகளின் ஊளைகள் வேறு...

தொலைதூரத்துக்குத் தொலைதூரமாக அமைக்கப்பட்டிருந்த இரண்டு பாசறைகளிலும் தீப்பந்தங்கள் புகையைக் கக்கிக் கொண்டிருக்கின்றன...

அந்தந்தப் பாசறைகளைக் காக்கும் காவல் வீரர்கள் ஆயுத பாணிகளாய் உலவி வருகிறார்கள்.

மலையடிவாரத்திலிருந்த ஔரங்கசீப் பாசறை அமைதியில் உறங்கிக் கொண்டிருக்கிறது.

சற்று முன்தான் ஔரங்கசீப்பும் சிவாஜியும் உண்டு முடித்தனர். நாளைய போர் முறைகளைப் பற்றித் திட்டமிட்டுவிட்டுத் தமது கூடாரத்துக்குத் திரும்பி இருந்தார் சிவாஜி.

தமது படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டு கால்மீது கால் போட்டவாறு பூஜ்யா குறித்துச் சிந்திக்கிறார். இந்நேரம் அவளும் தன்னைக் குறித்தே சித்தித்துக் கொண்டிருப்பாள்...

ஔரங்கசீப் அவளை அழைத்துவர ஏற்பாடு செய்யச் சொல்லித் துடிப்பதுதான் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ தனக்குச் செய்கிற நன்மை என்று கூறுவது ஒரு நீலிக்கண்ணீர் மாதிரி என்பதும் புரியாமலில்லை. ஏன்தான் இவன் கண்களில் பூஜ்யா பட்டாளோ?

இரவு கரைந்து கொண்டிருக்கிறது.

யாரோ வருகிற மாதிரி ஒரு சலசலப்பு...

அந்த நடுராத்திரியில் காவல் பலத்தை மீறி அப்படி ஒரு ரகசிய சலசலப்பு கேட்க வேண்டிய அவசியமில்லை.

தமது கூடாரத்து வாயிலிலும் காவல் பலமாக இருக்கிறது...

ஒருக்கால் நேற்றைய முன்தின இரவில் தன்னை ஒருவன் இனவெறியால் கொல்லவந்தானே...

அவன்...

சிவாஜி, அவ்வாறு ஒருவன் வந்தால் அவனை வீழ்த்த எத்தனை நேரம் பிடிக்கும்?

கொசு...

தூக்கத்தில்கூட ஒருவன் சிவாஜிமீது பாய்வது என்பது விதி முடிந்த விஷயம்...

எப்போதும் தமது மடியில் தயாராக இருக்கும் [1]புலிநகம்...

பூஜ்யா கொடுத்த புதிய ஆயுதம்... தொட்டுப் பார்த்துக் கொள்கிறார்...

மெல்லிய ஓசை அவரது கூடாரத்தை நெருங்குகிறது...

கும்மிருட்டில் மெல்லக் கூடாரத்துத் துவாரத்து வழியாக எட்டிப் பார்க்கிறார்...

ஒன்றும் புலனாகவில்லை.

பயங்கரமான யுத்தகளத்து ரணப்பட்ட வீரர்களின் அவலக் குரல்களும், அவர்களைப் பிணந்தின்னிகள் உயிரோடு குதறுகிறபோது மேலும் இடும் கூச்சல்களும், இடையிடையே நரியின் ஊளைகளும்...

அந்தச் சத்தங்கள் இந்த ஆளரவச் சத்தத்தை விழுங்கிக் கொண்டிருக்கின்றன...

எனவே காவலர்கள் காதுகளைச் சுத்தமாக அந்த யுத்தகளச் சத்தங்கள் ஆக்கிரமித்துக் கொண்டதால், இந்தச் சின்னஞ்சிறு சலசலப்பு கேட்க முடியவில்லை.

சிவாஜி எவ்வாறு மலைப்பெருச்சாளி என்று பெயர் வாங்கினாரோ, அப்படியே அவரது காதுகளும்...

சத்தம் இப்போது கேட்கவில்லை.

உற்றுக் கவனிக்கிறார்...

கேட்கவில்லை.

திடுமென்று ஒரு சலசலப்பு...

---

1. புலியின் பாதங்களைப் போன்ற உறை. அதில் கூரிய இருப்பாலான நகங்கள்.
   - Shivaji the great.

கூடாரத் துவாரத்திலிருந்து ஒரு சுருள் பொத்தென்று விழுகிறது.

சிவாஜி வாளையுருவ...

சத்தத்தைக் காணோம்...

வாளை உறையிலிட்டுக் குனிந்து அந்தச் சுருளை எடுக்கிறார்; பிரிக்கிறார்...

தந்தையுடன் வாழ்ந்து வரும் சிற்றன்னை துர்காபாய் எழுதிய முடங்கல்...

அன்பு மகன் சிவாஜி அறிவது - உனது சிறிய அன்னை மனப்பூர்வமாக வாழ்த்தி எழுதும் லிகிதம்...

*பொழுது விடிகிற சமயத்தில் நீ என்னை இந்தப் பீஜப்பூரின் ஒதுக்குப் புறமாக இருக்கும் விஜய சாமுண்டீஸ்வரி ஆலயத்தில் எப்படியும் சந்திக்க வேண்டும். உத்தரவை மீறமாட்டாய் என்று நினைக்கிறேன். தம்பி வெங்கோஜி உன்னைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறான். அவசியம் வரவும். எதிர்பார்க்கிறேன்.*

***-துர்காபாய்.***

இந்த முத்திரை பதித்த முடங்கலை இத்தனை காவலையும் மீறிக்கொண்டு வந்து போட்டவன் உண்மையாகவே ஒரு பரிசுத்தமான வீரனாக இருக்க வேண்டும். பற்றுள்ள இந்துவாக இருக்க வேண்டும். உயிரினும் மேலான விசுவாசியாக இருக்க வேண்டும். உயிரைவிடக் கடமை பெரிது என்று நினைப்பவனாக இருக்க வேண்டும்.

எவ்வளவு துணிச்சல்...

'ஆ'....

- பெருத்த அவலச் சத்தம்...

ஓ அந்த விசுவாசியின் குரலாகத்தான் இருக்க வேண்டும். எவனோ பார்த்துவிட்டுத் தீர்த்துக் கட்டியிருக்கிறான்...

'அவனது ஆத்மா சாந்தியடையுமாக'...

மனம் தூயதாகப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

வீரனுக்குப் பிறப்பும் இறப்பும் ஒன்றுதானே...?

கண்களில் அரும்பிய நீர்த்துளியைத் துடைத்துக் கொண்டு படுக்கைக்குச் செல்கிறார். கூடாரத்துள் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தத்தில் அந்த முடங்கலை எரித்துச் சாம்பலாக்குகிறார்.

**பொ**ழுது புலருகிறது...

வெள்ளென எழுந்து கொண்டார் சிவாஜி.

அவரது நினைவு முழுவதும் கோயிலைச் சுற்றி வட்ட மிடுகிறது...

ஆ! சிற்றன்னையைப் பார்த்து நீண்ட நாட்கள்...

பீஜப்பூர் வந்தபோது பார்க்கவேண்டும் என்ற ஆசை இருந்தது. அந்த ஆசை சிறைப்பட்டு இப்போது இறந்துபட்டது. ஆயினும் ஔரங்கசீப்பின் அன்பில் பிடிபட்டு இருக்கிறோம்...

எங்ஙனம் சிற்றன்னையைப் பார்க்க முடியும்?

தம்பி வெங்கோஜி...

இந்த உடன்பிறப்புகள்....

ஒருவரா இருவரா?

அப்பாவுக்கு இருக்கிற எத்தனையோ மனைவிகளுக்கு எத்தனையோ பிள்ளைகள் பெண்டுகள்...

இந்த மனைவிமார்களன்றி வைப்பாட்டிகளுக்குப் பிறந்த மக்காஜி ஆனந்த், சாந்தாஜிராஜே, பீமாஜிராஜே, பிரதாப்ஜிராஜே...

இவர்களில் இருவர் தந்தைக்குத் துணையாகப் பணிபுரி கிறார்கள்...

இருவர் தனது படைமுகாமைக் கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள்...

வெங்கோஜி வாலிபத்து வாசலை எட்டத் துடித்துக் கொண்டிருப்பவன்...

எப்படி இருப்பான்...?

எல்லாருமே தந்தைக்குப் பிள்ளை தப்பாது பிறந்தவர்கள்...

தான் மட்டும் தனித்து ஒரு வித்தியாசத்தைக் காட்டத்தானே இந்தத் தாடியும் முறுக்கிவிட்ட மீசையும்...

ஆரம்பத்தில் சுயராஜ்ய கனவு முடிந்ததும் தாடியை எடுத்துவிட வேண்டும் என்றுதான் எண்ணினார். இப்போது அதுவே ஒரு முத்திரையை பதித்துவிட்ட பாதிப்பாகிவிட்டதால் இனி எப்போதும் தாடி, மீசை...

சிவாஜி என்றால் இதுதான் என்கிற ஒரு நிரந்தர முத்திரைக்கு அவர் தயாராகிவிட்டார்.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு புறப்பட்டார். அப்படிப் புறப்படுமுன் கூடாரத்துள்ளிருந்த பெரிதான கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துக் கொள்கிறார்...

ஆ! எவ்வளவு அழகான - அளவான தாடி...

எத்தனை ரோஷமான வீரக்கதை பேசும் முறுக்கிவிட்ட மீசை...

மூக்கின் இருபுறமும் கேள்விக்குறிகள் படுத்துக் கொண்டே ஜெயிப்பேன் என்கின்றன.

ஒரு கேள்விக்குறி ஆக்ரா...

அடுத்த கேள்விக்குறி பீஜப்பூர்...

அவரது வாழ்வில் வேறு கேள்விக்குறிக்கு இடமே இல்லை...

நேரே ஔரங்கசீப் தங்கியிருந்த வண்ணக் கூடாரத்துக்குச் சென்று நுழைகிறார்.

ஔரங்கசீப் அப்போதுதான் 'பஜ்ரு' தொழுகையை முடித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார். குரானின் வேதநாயகனா

யிற்றே! பஜ்ருதொழுகை (கிழக்குத் திசையில் மெய்வெள்ளை உதயமானது முதல், சூரியன் தோன்றுவதற்குச் சற்றுமுன் வரை தொழுவது) செய்து, சுன்னத்து இரண்டு ரக்அத்து பர்லு இரண்டு ரக் அத்து ஆக நான்கு ரக் அத்துக்களைத் தொழுது முடித்த பிரகாசம் அவரது முகத்தில் ஒளிர்ந்தது.

‘‘நமஸ்தே யுவராஜ்!’’

‘‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்! அஸ்ஸலாமு அலைக்கும் சிவாஜி! உட்காருங்கள்!’’

‘‘யுவராஜ்! உங்கள் மதப்படி அல்லாஹ்வை வணங்கி விட்டீர்கள். நான் இங்கு வந்து ஒருநாள்கூட நெற்றியில் எங்கள் மதச்சின்னம் அணியவில்லை. அது கிடைக்கவில்லை. அவ்வளவு தான். ஆகவே காலையில் கோயிலுக்குப் போய் ஆண்டவனைப் பிரார்த்தித்துவிட்டு வந்துவிடுகிறேன்.’’

‘‘தனியாகவா?’’

‘‘தக்க வீரர்களுடன்தான்!’’

‘‘போய் வரலாம்! ஜாக்கிரதை சிவாஜி!’’

ஔரங்கசீப்பின் உத்தரவு பிறந்ததும் சிவாஜி வேகமாகப் புறப்படுகிறார்.

அந்த வேகம், முகலாய இளவரசர் ஔரங்கசீப்புக்குச் சந்தேகத்தை விளைவிப்பதாக இருந்தது.

தொடர்ந்து ஓர் ஒற்றனை அனுப்பி வைக்க அவரது மனம் எண்ணிப் பார்த்தது.

-----

# 20

அரசன் பகைப் படைகளாலும், காட்டுத் தலைவராலும், பிணி வறுமைகளாலும் துன்புறும் தன்னாட்டை, அத்துன்பத்தை ஒழித்துப் பாதுகாத்தல் வேண்டும். பொருள் செலவை யுண்டாக்கும் விளையாட்டுக்களைத் தடைப் படுத்தல் வேண்டும்.

**- சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 2, அத்தியாயம் - 21).

**வி**ஜய சாமுண்டீஸ்வரி ஆலயம் ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்தது. நாயக்க மன்னர் காலத்தில் அக்கோயிலின் பிரசித்தம் தெலுங்கர்கள் அறிந்தது. அப்போது நாயக்க மன்னர்கள் தென்னகத்தே கொடிகட்டி வாழ்ந்த நேரம். வாழ்க்கைதானா சக்கரம்? சரித்திரமும் சக்கரம்தானே?

புதர்கள் மண்டிகிடந்த ஓர் ஒதுக்குப் புறமாக அமைந்திருக்கும் கோயில், மக்கள் அதிகமாகக் காணப்படவில்லை. ஒருக்கால் மாலை வேளையில் அதிகமாக இருப்பார்களோ என்ற நினைவுடன் குதிரையை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு, பாதரட்சைகளை கழற்றி வைத்துவிட்டுக் கோயிலுள் பிரவேசிக்கிறார் மாவீரதிலகம் சிவாஜி.

அந்த வேளையில் கோயில் மூலத்தானம் பூட்டிக் கிடந்தது. மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லாததன் காரணம் அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. சிற்றன்னை துர்காபாய் இதனையறிந்தே இந்நேரம் பார்த்துக் கோயிலுக்கு வரச் சொல்லியிருக்கிறார்.

ஒரு தூண்பக்கமாக இருந்த கல்லிடுக்கில் விபூதியும் குங்குமமும் கொட்டிக் கிடந்தன. சாமிபிரசாதம் வாங்குகிறபோது அதனைப் பயபக்தியுடன் வீட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது புரியாதவர்கள், அந்தப் பிரசாதங்களில் நெற்றிக்குப்போக மிகுதியை இப்படியான இடுக்குகளில் தட்டி விட்டுச்சென்று விடுவது வழக்கம். அது இம்மாதிரியான சமயங்களில் பலருக்குப் பயன்படுவதுண்டு.

மாவீர சிவாஜியும் இத்தனை நாட்களாகக் காணாத அந்தப் பாக்கியத்தைப் பெரும்பாக்கியமாகக் கருதி, விபூதியையும் குங்குமத்தையும் எடுத்து இட்டுக்கொண்டு மகிழ்கிறார். இந்து மதத்தின் ஆணிவேராயிற்றே அவர்!

நேரே அம்பிகையின் சந்நிதானத்துக்குப் போகுமுன்பு பரம ஈஸ்வர பக்தரான சிவாஜி, சிவலிங்கம் இருக்குமிடத்தைத் தேடுகிறார். பக்கத்திலேயே ஈஸ்வர சந்நிதானம் தெரியவே அங்கே நின்று மௌனமாய்ப் பிரார்த்தனை செய்து வணங்குகிறார். பின்னர் விஜய சாமுண்டீஸ்வரியை வணங்கி வெளியே வருகிறபோது...

ஒருபுறமாகச் சிற்றன்னை துர்காபாயும், தம்பி வெங்கோஜியும் காணப்பட்டனர்.

சிற்றன்னையைக் கண்ட சிவாஜி, நேரே சென்று காலைத் தொட்டு மனமார வணங்குகிறார். பெரியவர்களை மதித்து நடக்கக் கருவிலேயே பயிற்சியளிக்கப் பெற்றவராயிற்றே! அன்னை ஜீஜாபாயின் வளர்ப்பு அத்தகையது.

தம்பி வெங்கோஜியை அணைத்து அன்புடன் முத்தம் வழங்குகிறார். கழுத்திலிருந்த முத்து மாலையை எடுத்து தமது அன்புப் பரிசாகத் தம்பியின் கழுத்தில் அணிவிக்கிறார்.

நேரமாகிவிடவே, சிற்றன்னையைப் பார்த்து, நீண்ட நேரம் தங்குவதற்கில்லையம்மா என்பது போலக் கனிவுடன் கவனிக்கிறார்.

''அம்மா நலமா சிவாஜி?'' கேட்க வேண்டிய முதல் கேள்வி.

''அன்னை பவானியருளால் அம்மா சௌக்கியமாக இருக்கிறார்கள் சித்தி!'' என்றார் சிவாஜி.

அப்போது -

ஒரு மூலையின் இருண்ட பகுதியின் தூணின் மறைவிடமாக இருந்து கவனிக்கின்றன இருகண்கள். அந்தக் கண்களை ஏவியவர் முகலாய யுவராஜர் ஔரங்கசீப்.

அந்தக் கண்கள் மட்டுமா?

வேறொரு இடத்தின் மறைவான பகுதியிலிருந்து இரண்டு கண்கள் கூர்ந்து கவனிக்கின்றன. அந்தக் கண்களுக்குரியவன், பீஜப்பூர் ஒற்றன் - அப்சல்கானின் ரகசியக் கையாள்.

இதே நேரத்தில் அப்சல்கானின் மற்றொரு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் ஒற்றன் முகலாய யுவராஜன் ஔரங்கசீப்பைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிற விஷயம் மாவீர சிவாஜிக்குத் தெரியவேண்டுமே!

தனது அருமந்த மூத்த புதல்வன். மாவீர திலகமாய்த் திகழும் சிவாஜியை எத்தனை நேரம்தான் இப்படிக் கவனிப்பாள் துர்காபாய்? அப்படியே தந்தையை உரித்துக் கொண்டு பிறந்திருக்கிறான்! வீரத்தில் பழுதில்லா அசல் வார்ப்படம்!

''சித்தி! நேரமாகிறது. யுத்த களத்துக்கும் செல்ல வேண்டும். வந்த காரியத்தைப் பேசுவோம்.''

''முதலாவது, உன்னால் உனது தந்தைக்கு எவ்வித ஆபத்தும் நிகழக்கூடாது என்பது. இரண்டாவது உன்னை கொலை செய்துவிட அப்சல்கான் இந்த நிமிஷத்திலும் தயாராகக் காத்திருக்கிறான். மூன்றாவது, அப்சல்கான் ஔரங்கசீப்பைச் சந்திக்க முயற்சி செய்து வருகிறான். முகலாய சாம்ராஜ்யத்துக்கு இருக்கிற இரண்டு எதிரிகளில் முதன்மையானவன் நீ! இரண்டாமவர் உன் தந்தை. உன் தந்தை பற்றி யாருக்கும் கவலையில்லை. உன்னைப் பற்றித்தான் ஏனைய முகலாய அரசர்களுக்குச் சிம்ம சொப்பனம். இது குறித்துப் பேசியே உன்னை இங்கே சமாதி எழுப்ப அப்சல்கான் முயன்று வருகிறான். உனது

தலைக்குப் பேரம் நடக்கிறது. நீ நினைப்பது போல ஔரங்கசீப் உன்னுடன் நட்பு கொண்டாடுவதாக நினைக்காதே! பீஜப்பூர் வீழ்ந்த அடுத்த கணமே உனது சமாதியைப் பீஜப்பூரில் கட்டி, அதன் பிறகு நீ பிடித்து வைத்திருக்கிற நாற்பது கோட்டைகளையும் கபளீகரம் செய்ய ஔரங்கசீப் உத்தேசித்து இருக்கிறான். நான்காவது, உன் அருமைக் காதலி ஜூனார் பகுதியையும் அகமத் நகரையும் கொள்ளையடிக்க உத்தரவு பிறப்பித்து அது நடந்து முடிந்திருக்கிறது. அந்தச் செய்தி இந்நேரம் ஔரங்கசீப்புக்கு எட்டியிருக்கும். அவரது பகுதியை நீ இங்கிருக்க அங்கே கொள்ளை என்றால், உன் மீது உடனடியாகச் சந்தேகம் ஏற்படும். ஐந்தாவது, உனக்குப் பேராபத்து என்று செய்தியனுப்பி இருக்கிறார் ஔரங்கசீப். பூஜ்யாவை உடன் புறப்பட்டு வரும்படி உத்தரவிட்டிருக்கிறார். பூஜ்யா இங்கே வந்த மறுகணம் உன் உயிருக்கு ஆபத்து; பூஜ்யாவின் கற்புக்கு அதைவிட ஆபத்து. அவளது வருகையை நீ உடனடியாக சென்று தடுத்து நிறுத்த வேண்டும். இது நான் சொல்கிற செய்தியல்ல; உனது தந்தையார் சொல்லியனுப்பிய செய்தி.''

அரண்டு மருண்டு போனார், பயந்தறியா பாசறை வேங்கை வீர சிவாஜி.

இவ்வளவு ஏற்பாடுகளா?

துர்காபாய் கடைசியாகச் சொன்னாள் :

''மகனே! நீ இன்னமும் தாமதியாமல் உடனே பூனா நோக்கிப் புறப்படு! எப்படித் தப்பிச் செல்வாயோ? எப்படியும் அடுத்த படையெடுப்பு பூனா மீது; அல்லது உனது உயிரிழப்பு. நேரமாகிறது. நீ மகா விவேகி. எப்படி முடிவு செய்ய வேண்டுமோ அது உன் விருப்பம். உன் தந்தையின் விருப்பம் நீ தப்பிச் செல்வதுதான்.''

துர்காபாய் புறப்பட்டு விட்டாள்.

வெகுநேரம் ஆலோசனையில் மூழ்கிய சிவாஜி, நேரே புரவி மீது ஆரோகணித்துப் படை முகாமை அடைந்தார்.

அவர் சந்தேகப்பட்டது போலவே அன்றைக்கு யுத்தம் நிறுத்தப்பட்டிருந்தது.

ஏன்?

காரணமில்லை.

ஒய்வு வேண்டி இருதரப்பும் செய்து கொண்ட முடிவாம்.

அது எப்படிச் சாத்தியமாகும். இருதரப்பும் ஓய்வு வேண்டி முடிவு செய்து கொண்டால் யுத்தம் வேண்டாம் என்றும் முடிவு செய்து கொண்டிருக்கலாம் அல்லவா?

ஓ...அப்சல்கான் ஏதோ சூழ்ச்சி செய்கிறான். அவனது சந்திப்புக்காக இன்றைய யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கிறதா?

சிவாஜி தமது கூடாரத்துள் பெருத்த சிந்தனையுடன் யுத்தம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

இருட்டி விட்டது.

இன்னமும் சிவாஜி ஒரு நிலைக்கு வர முடியாமல் சிந்தனையில் ஆழ்ந்து கிடக்கிறார். வெளியில் வழக்கத்துக்கு மீறிய காவல். ஏதோ ஔரங்கசீப்பின் கூடாரத்தில் ரகசியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதனால்தான் தன்னை இன்று முழுவதுமே சந்திக்கவில்லை. சந்திக்கும்படி ஆளையும் அனுப்பவில்லை. நாளை என்ன என்பது குறித்து ஆலோசிக்கவில்லையே!

ஆ! இந்நேரம் பூஜ்யா புறப்பட்டிருந்தால் என்ன செய்வது? ஜுனார் அகமத்நகர் கொள்ளை நிகழ்ந்தபிறகு பூஜ்யா எப்படி இங்கு புறப்பட்டு வருவாள்? இவளை யார் உடனடியாகக் கொள்ளையிடச் சொன்னது?

பெரிய ராஜதந்திரியான பூஜ்யா எதையும் காரண காரியத்துடன் தான் செய்வாள். இல்லையென்றால் தந்தையுடன் கைதியாக உடன் செல்லுமாறு உத்தரவு பணித்திருப்பாளா?

இந்தப் பாவி ஔரங்கசீப் செய்தியனுப்பியிருக்கிறானோ! அது கண்டு பூஜ்யா பதறியடித்துக் கொண்டும் ஓடிவரலாம் அல்லவா.

இந்த நேரத்தில்தான் ராமதளவாய் அவசர அவசரமாகக் கூடாரத்துள் நுழைந்தார்.

ராமதளவாயைக் கண்டதும் சிவாஜி அதிர்ந்து போனார். பூஜ்யாவின் வளர்ப்புத் தந்தையாயிற்றே அவர்! அன்னை செய்த கொடுமையால் அவர் எதிரிகளின்பால் சரணடைந்துவிட்டார்.

''என்ன தளவாய்?''

''பிரபோ! ஜூனார் அகமத்நகர் கொள்ளை போயிற்று என்று செய்தி வந்திருக்கிறது. அப்சல்கான் வேறு தூதுவந்து சென்றிருக்கிறான். இன்னும் சில நாழிகைக்குள் உங்களைக் கைது செய்ய வீரர்கள் வரலாம். உடனே தப்பிச் செல்வது நல்லது. தயவு செய்து தாமதியாமல் தப்பிச் செல்லுங்கள்!''

மேலும் அதிர்ந்து போனர் வீரசிவாஜி.

''எப்படித் தப்புவது? வெளியே காவல்பலம்!''

''அதற்காகத்தான் நான் தியாகம் பண்ண வந்திருக்கிறேனே! என்னிடம் முகலாய இலச்சனை இருக்கிறது. ஔரங்கசீப் அழைத்துவரச் சொன்னதாக அழைத்துச் செல்கிறேன். ஒரு கட்டம் வந்ததும் உங்களுக்குச் சமிக்ஞை செய்வேன். அந்தக் காட்டுவழியே நீங்கள் தப்பிச் சென்றுவிடுங்கள்.''

யோசித்ததில் அது சரியாகவே பட்டது.

காலையில் சித்தியின் கட்டளை.

இதோ கட்டளை, எதிர்பாராத விதமாக உண்மை ஊழியனான ராமதளவாயிடமிருந்து புறப்படுகிறது!

சிவாஜி புறப்பட்டுவிட்டார்.

ராமதளவாயைப் பின்பற்றிச் செல்கையில் பல கண்கள் கவனிக்கின்றன. யுவராஜன் உத்தரவு என்றால் யார் மறுக்க முடியும்?

முகலாய லாஞ்சனைக்கு அவர்கள் கொடுத்த மரியாதை.

ஒரு கட்டம் வந்ததும் காட்டின் ஒரு பகுதியில் வழி தெரிந்தது.

ராமதளவாயின் சமிக்ஞை பிறந்தது. அடுத்தகணம்-

சிவாஜியின் புரவி நாலுகால் பாய்ச்சலில் அம்பெனப் பாய்ந்து விரைந்தது. ராமதளவாயும் ஒருபகுதி இருட்டில் சென்று மறைந்து கொண்டார்.

அடுத்து -

முகலாயப் படைகள் விழித்துக் கொண்டன.

ஓ... ஏதோ நிகழ்ந்துவிட்டது.

என்ன ஏது என்றும் கூட யோசியாமல், வரிசையாக ஏறத்தாழ இருநூறு குதிரைகள் சிவாஜியைப் பின்பற்றி ஓடத் தொடங்கின.

ராமதளவாய்க்கு வியர்த்துக் கொட்டிவிட்டது.

ஆ! சிவாஜி அகப்படாமல் தப்பவேண்டுமே!

இதற்குள் செய்தி ஔரங்கசீப்புக்கு எட்டிவிட்டது.

அப்போதுதான் ஜுன்னார் அகமத்நகர் கொள்ளைச் செய்தி அவருக்குக் கிடைத்திருந்தது. வெறிகொண்ட வேங்கை போலக் கத்துகிறார்...

‘‘சிவாஜியைப் பிடித்து இழுத்து வாருங்கள்!’’

ராமதளவாயின் அதிர்ச்சி அளவு கடந்து அதிகரித்துக் கொண்டிருந்தது.

-----

# 21

அரசன் தன் உடன் கற்றவர்களுடைய மனத்தூய்மையும் திறமையையும் கண்கூடாகக் கண்டிருத்தலின் (உடன் பழகிய படித்தவர்களின்) தன் நம்பிக்கைக்குத் தகுதியுடையவராகிய அன்னாரை அமைச்சராக அமைத்தல் வேண்டும் என்பது பாரத்துவாசர் (ஒரு மகா அறிவு சான்ற பெரியார்) கொள்கை.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 8).

**க**ன்னங்கரேலென்று கவிந்திருக்கும் அந்த இருட்டைக் கிழித்துக் கொண்டு ராமபாணமாய்ப் பாய்ந்துவரும் குதிரையைத் துரத்திக் கொண்டு ஏறத்தாழ இருநூறு குதிரைகளுக்கு மேல்...

அந்த ஒரு குதிரையைத் துரத்திக்கொண்டு இருநூறு குதிரைகளா?

அதுவும் குதிரைதான்...

அதன்மீது ஆரோகணித்து வருபவர் மாவீர திலகம் சிவாஜியாயிற்றே...

எமகண்டர்களைப் போலத் துரத்திவரும் இந்த முகலாய வீரர்களை எதிர்த்துப் போராடிச் சீவித்தள்ள எத்தனை நேரம் பிடிக்கும்? ஆயினும் அவர்களுக்குப் பின்னால் ஒரு மாபெரும் சைன்னியமே இருக்கிறதே! மேலும் தவறி அகப்பட்டுக் கொண்டால் தமது தலைதப்புவது குதிரைகொம்பு என்பதை சிவாஜி நன்றாக உணர்ந்திருந்தார். எனவேதான் இந்த ஓட்டம்...

மேலும் தமது ஆருயிர் காதலி - அழித்தெழுதாச் சித்திரம் - அழகின் பொக்கிஷம் பூஜ்யாதேவி, எங்கே பூனா நகரத்தைவிட்டு புறப்பட்டுவிடப் போகிறாளோ என்கிற பதைப்பு நிறைந்த பிராணத்துடிப்பு வேறு!

ஓ... இவள் இந்த முகலாய இளவரசன் ஔரங்கசீப்பின் கூரிய கண்களில்வேறு பட்டுவிட்டாளே!

பீஜப்பூர் படைமுகாமில் இருக்கிறபோது இந்த ஔரங்கசீப் எத்தனை முறை அவளைப் பற்றிய பேச்சை ஆரம்பித்து இருக்கிறான்.

மேலும் தனக்குச் சாதகமாக ஏதோ செய்வதாகச் சொல்லி அவளைப் புறப்பட்டு வரும்படி ஆளைவேறு அனுப்பி இருப்பதாகச் சொன்ன அந்த வார்த்தைகள்...

பூனாவைக் காத்து நிற்கும் ராஜதந்திரப் பொருள் நூலாயிற்றே பூஜ்யா...

அந்த இனிய பூஜ்யா, இளமை பூஜ்யா, இன்ப பூஜ்யாவை இழப்பதாவது...

மேலும் புரவியை வேகமாக அதன் வயிற்றில் தமது குதிக்கால்களால் பலங்கொண்டமட்டும் குத்தித் துரிதப்படுத்துகிறார் சிவாஜி.

உனக்கு நாங்கள் சளைத்தவர்களா என்பது மாதிரி பின்னே மேலும் குளம்படிச் சத்தம் துரித கதியில் கேட்கிறது.

வேகமாக விரைந்து கொண்டிருந்த சிவாஜி, அதனிலும் வேகமாகச் சிந்திக்கிறார். இவர்களை - பின்னே துரத்திக் கொண்டு வரும் இவர்களை எவ்வாறு போக்குக்காட்டி மறைந்து தப்பிப்பது...?

வாளெடுத்தாலொழிய வழியில்லை என்பது மாதிரித் தெரிகிறதே...

ஒரு கணம் ஏதோ நடந்து, தவறி அகப்பட்டுக் கொண்டால் தனது சுயராஜ்யக் கனவு பொடிந்து சிதிலமாகிவிடுமே!

எதிரே மிகப் பெரிய பயங்கரமான ஒரு மலை தெரிகிறது. அதனுள் நுழைந்து ஒரு பாறைக்குள் ஒளிந்து தப்ப முயற்சிக்கலாமா?

ஒருகால் குதிரையின் கனைப்பால்...

அது அஃறிணை ஜீவன்தானே? மேலும் பழக்கப்பட்ட தனது வெண் புரவியல்ல இது! பகைவர் முகாமிலிருந்து கொண்டு வரப்பட்ட குதிரை. கனைக்காமல் இருக்கும் என்று எவ்வாறு எண்ண முடியும்?

இருநூறு குதிரைகளும் அவர்களது முகாமில் பழகிய குதிரைகள். அவற்றைக் கண்டு இதுவும் ஒரு துரோகக் குரலை பழகிய தோஷத்தில் எழுப்பி விடுமேயானால்...

ஓ... மலைப்பகுதியில் சுற்றிலும் அவர்கள் சூழ்ந்து கொண்டால் சரியான முடக்கில் அகப்பட்டுக் கொள்ள நேரிட்டுவிடும். வேண்டாம் இந்த யோசனை...

குதிரை வேகமாக விரைந்து கொண்டு வருகிற அந்த வேளையில்...

அதோ, எதிரே ஒரு குறுக்குவழி மார்க்கமாகப் படுவேகச் சுழிப்புடன் ஓடிவரும் குதிரை...

பின்தொடர்ந்து ஏதேனும் குதிரைகள்...

ஒன்றுமில்லை. ஒற்றைக் குதிரையாக அதன் மீது ஒருவன்...

தன்னை எதிர்நோக்கி வருகிறானே...

வாளை உருவிக் கொள்கிறார்.

ஒரே வீச்சு...

தலை பனங்காயாய் உருண்டோட வேண்டியதுதான்.

எதிரே வந்த அந்த வீரன் இப்படி சிவாஜியிடம் ஏதேனும் இசகுபிசகாய் நடைபெற்று விடும் என்பதனை முன்கூட்டியே அறிந்தவன் போல, ஒரு வெண்ணிறத் துண்டை எடுத்து அந்த இருட்டில் அசைத்துக் கொண்டே எதிர்நோக்கி விரைந்து வருகிறான்...

வருகிறவன் அமைதி கோரி வெண்துண்டை அசைக்கிறான். ஆயினும் நம்ப முடியாது. துரோகிகள் சத்தியத்தைப் பரிசோதிப் பவர்கள். அமைதி என்று கூறி ஆவேசப்பட்டுவிட்டேனேயானால்.

குதிரையின் சேணத்தை இழுத்துத் திரும்பிப் பார்க்கிறார். அந்த இருநூறு குதிரைகள் வெகுதொலைவில் விரைந்து வந்து கொண்டிருக்கின்றன.

வெண்துண்டை அசைத்துக் கொண்டு அருகே வருபவனைக் கூர்ந்து கவனிக்கிறார் வீரசிவாஜி.

அவர் வேறு யாருமல்ல; ராமதளவாய் - அருமைக் காதலி பூஜ்யாவின் வளர்ப்புத் தந்தை. பீஜப்பூரில் தனித்து வந்து செய்தி அறிவித்தவர்; இந்து விசுவாசி! ஓ... ராமதளவாய்...

சிவாஜியின் குதிரை பெருமூச்சு பறிய நிற்கிறது. அதன் வாயில் விலாழி தள்ளுகிறது.

''ராமதளவாய்!''

சிவாஜி பாசத்தின் முனையில் அழைப்புக் கொடுத்து நிறுத்தி உற்றுக் கவனிக்கிறார்.

''மகராஜ்! இப்போது எதுவும் பேசுவதற்கில்லை. நீங்கள் இதே இடத்தில் இப்படியே மறைவாகக் குதிரையுடன் ஓசைப்படாமல் நின்று கொள்ளுங்கள். நானே இவர்களைப் போக்குக் காட்டி என் பின்னால் அழைத்துச் சென்று விடுகிறேன். உங்களைக் காப்பாற்றவே பின் தொடர்ந்து வந்தேன்.''

''ராமதளவாய்! உங்கள் உயிருக்கு...''

''அது குறித்துக் கவலை வேண்டாம். நான் ஒரு புரட்சித் தலைவனைக் காப்பாற்றினேன் என்கிற நிறைவுடன் உயிர் விடுவேன். ஒருகால் நான் அகப்பட்டுக் கொள்ள நேரிடுமானால்!''

''நிச்சயமாக உங்களால் தப்ப முடியாது.''

''அதுகுறித்து எனக்குக் கவலையில்லை. மகராஜ்! உங்களை விட இந்த உயிர் பெரிதல்ல. ஒரு மகாராஷ்டிர உதயத்துக்காக நான் பலியாவது சரித்திரப் புகழ்! உங்கள் இந்து சாம்ராஜ்யக் கனவு நிறைவேறுவதற்காக நான் பலியானால் கவலையில்லை. என் மகள் பூஜ்யாவுக்கு எனது ஆசிர்வாதத்தைச் சொல்லுங்கள். என்னை அறிந்து கொள்ளாது பூனாவிலிருந்து துரத்திய தங்கள் அன்னையார்க்கு என் வணக்கங்களைச் சொல்லுங்கள். அதோ வீரர்கள் அருகே வந்து விட்டார்கள். வணக்கம் மகராஜ்.''

ஒரு நெட்ட நெடிய பெருமூச்சுடன் குதிரையைக் கிளப்பிக் கொண்டு வேறுமார்க்கமாக விரைகிறார் ராமதளவாய்.

ஓ... ராமதளவாய்...

பின்தொடர்ந்து வந்த முகலாய வீரர்கள், அதுவரை முன்னே சென்ற குதிரையின் குளம்படி ஓசை கேட்காது அலைபாய்ந்திருந்த நிலையிலிருந்து விடுபட்டு, ''அதோ சிவாஜி'' என்ற பெருத்த கூக்குரலுடன் ராமதளவாய் சென்ற பாதை நோக்கி விரைகிறார்கள்.

தமது குதிரையின் சேணத்தைக் கெட்டியாகப் பிடித்திருந்த சிவாஜி கண்களில் அரும்பிய நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு வெகுநேரம் அமைதியாக ஒரு மறைவிடத்தில் நின்றிருந்தார்.

எதிரிகளின் குதிரைகள் கண்ணுக்கு எட்டாத தூரம் வரை சென்ற பிறகு, மெல்லத் தமது குதிரையின் சேணத்தைத் தளர்த்தி, பூனா நகரை நோக்கிச் செலுத்தினார்.

**கி**ழக்கும் மேற்கும் என்றுமே ஒரு வழக்கும் வாதமும் உடையன என்பது போல சூரியன் சுப்ரபாதம் பாடிக்கொண்டு உதயமாகிறான்...

பறவைகள் அந்தச் சுப்ரபாதம் தேவகாந்தாரி ராகத்தில் ஒலிக்கிறதா? அல்லது ஆரபியில் மூழ்கியிருக்கிறதா என்பது குறித்துக் கவலை கொள்ளாது பூபாளம் பாடிப் புறப்பட்டுச் செல்லுகின்றன. சில புள்ளினங்கள் வேண்டுமென்றே காகலி நிஷாதத்தைச் சேர்த்து, பூபாளத்தைப் பௌளிராகமாக்கிப் பாடுவதில் ஒரு குதூகலத்தைக் காண்கின்றன!

பூனா நகரையடைந்ததும் நேரே பிரசண்ட கோட்டைக்குச் செல்லாமல் தமது அருமைக் காதலி பூஜ்யாவின் கீற்றுக் குடிலை நாடி விரைகிறார் சிவாஜி.

அவர் மிகவும் சோர்ந்து காணப்பட்டார்.

வெறும் பயணமா அது? வெறி கொண்ட நெடும் பயணமாயிற்றே!

வெளியில் குதிரைவரும் குளம்புச் சத்தத்தைக் காதுகள் அறிவிக்கின்றன.

பூஜ்யா ஆழ்ந்த பூஜையில் தன்னை நிவேதித்துக் கொண்டிருக்கிறாள். வந்தவர் யாராயிருப்பினும் அவள் தனது தவத்திலிருந்து விடுபடுவதில்லை.

தங்கள் தலைவர் வந்துவிட்டார் என்பதையறிந்த காவல் வீரர்கள் பெரிதாக மகிழ்ந்து போகிறார்கள்.

பூஜ்யாவின் குடிலுக்குரிய காவல் வீரர்களின் தலைவர் நரசிம்ம ராவ் ஓடோடி வந்து பணிந்து நிற்கிறார்.

''மகராஜ்! அம்மா பூஜையில் இருக்கிறார்கள்.''

''நான் கரடி மாதிரி வந்துவிட்டேனா?''

சிவாஜி அந்த அலுப்பிலும் சிரிக்கிறார்.

நரசிம்ம ராவ் சிரிக்க முடியுமா?

அவர் தலைபணிந்தே நிற்கிறார்.

''நரசிம்மராவ்! நீங்கள் உடனடியாக அரண்மனைக்கு ஆளையனுப்பி நான் வந்துவிட்ட செய்தியை அறிவிக்க ஏற்பாடு செய்யுங்கள்.''

''உத்தரவு மகாராஜ்!''

சிவாஜி நேரே அந்த அமைதி சூழ்ந்த பர்ணகசாலையே போன்ற குடிலுள் பிரவேசிக்கிறார். அப்படிப் பிரவேசிக்கிறபோது தமது பாத ரட்சைகளைக் கழற்றி வெளியே வைக்க அவர் தவறவில்லை.

பூஜ்யா அவரது காதலி மட்டுமல்லாது ராஜகுரு. அந்தரங்கப் பிரதானி! அரசியல் புத்தகமாயிற்றே!

நேரே திண்டு திமாசுமாக இருந்த தரைவிரிப்பு இருக்கையில் அமருகிறார். நல்ல அகிற்புகை மணம் மனத்துக்கு இதமாக இருக்கிறது.

பூஜ்யா கண்களை மூடி ஒரு தவயோகி போலக் காணப்படுகிறாள்.

அவர் ஒரு சந்நியாசிப்பித்தர்; பிராமணப்பிரியர். ராமதாஸ் சுவாமிகளிடம் அபார பக்தியுடையவர். அந்த ராமதாஸ் சுவாமிகள் பெண்ணுருக் கொண்டு இங்கே தவம் செய்கிறது என்று எண்ணிப் பார்க்கிறார். அந்த அளவுக்கு பூஜ்யாதேவியின்பால் பரிசுத்தமான காதல் கொண்டவர் சிவாஜி.

பேரழகியான பூஜ்யா, இயன்றளவும் சிவாஜியின் மகுடாபிஷேகக் கனவு கண்டு கொண்டிருக்கிறாளேயொழிய, ஒரு கணமாவது மஞ்சக் கனவு காண வேண்டுமே! இது சிவாஜி அறியாததா?

எனவேதான் அவள்பால் அவருக்குப் பக்தியும் மரியாதையு மிருந்தன.

சிவபெருமான் தாண்டவமாடும் சிலைக்கு முன்னே அவள் இன்னமும் தவம் செய்யும் நிலையிலிருந்து விடுபடவில்லை. எதிரே அவளது அறிவுசால் அர்த்த சாஸ்திரம் - சாணக்கியர் எழுதிய கௌடலீயம் பிரிந்து காணப்படுகிறது. அதுதானே பூஜ்யாவின் இதயம்!

மணமிக்கப் பொன்மலராய்க் கண் திறக்கிறாள் பூஜ்யா.

கர்ப்பூர நிவேத்தியம் நடக்கிறது.

பூஜை முடிந்ததும்...

''பெருமானே! சிவாஜி மகாராஜன் என் அருமை காதற் கணவருக்கு எந்தவிதச் சிறு தீங்கும் ஏற்படக் கூடாது!'' என்று அவளது செம்பவழத் திருவாய் முனகியபோது...

மெல்லச் சிரிக்கிறார் சிவாஜி.

ஏதோ அதிசய அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்த பூஜ்யா...

வைத்த கண் வாங்காது வியப்பும் மகிழ்ச்சியுமாக நோக்குகிறாள்.

''எப்போது வந்தீர்கள் பிரபோ?''

இப்போதுதான் என்பதுபோல அவர் கண்களால் சமிக்ஞை செய்கிறார்.

சிவபெருமானைக் கைகூப்பி வணங்கி மெய்யுருக நோக்கி, மேனி சிலிர்த்து வாழ்த்தி அங்கிருந்து நகர்ந்து, அருமைக் காதலரிடம் வருகிறாள் பூஜ்யாதேவி.

''ஏன் இப்படிச் சோர்ந்து ஏதோ தப்பி வந்த கைதி மாதிரி இருக்கிறீர்கள்?''

சிவாஜி தம்முன் சிரித்துக் கொள்கிறார். ''நான் இப்போது தப்பி வந்த கைதி மாதிரிதான் பூஜ்யா!''

வியந்து போகிறாள் பூஜ்யா.

''என்னவாயிற்று?''

''நீதானே ஔரங்கசீப்பைப் படை திரட்டி வருமாறு ரகசியமாக ஓலையனுப்பி இருந்தாய்!''

மருண்டு நோக்குவாள் பூஜ்யா என்று எதிர்பார்த்த சிவாஜிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ராஜதந்திரப் பிரகாசமாய்ச் சிரிக்கிறாள் பூஜ்யா.

''நான் உங்களுக்கு நன்மை செய்யவே எதையும் செய்வேன்; எனது ராஜதந்திரமும் பயன்படும் என்பதை...''

‘‘நானறிவேன் பூஜ்யா! நீ தந்தை ஷஹாஜி பான்ஸ்லேவைப் பின்பற்றிச் செல்ல உத்தரவிட்டபோதே ஏதோ ஒரு பின்பலத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் இப்படியான ஒரு பயங்கரச் சதுரங்கம் ஆடுகிறாய் என்பதை நான் பரிபூரணமாக அறிவேன். நானும் பீஜப்பூர் சென்ற பிறகு, நீ எது குறித்து இப்படி ஒரு ராஜதந்திரச் சதுரங்கம் ஆடினாய் என்பது தெரியவந்தபோது, அதிலிருந்து மீள சில பல வழிகளைப் பின்பற்றி முகலாய இளவரசன் ஔரங்கசீப் அன்பினைப் பெற்றேன். ஆனால் ஜுன்னார், அகமத் நகரை நீ இவ்வளவு விரைந்து கொள்ளையடிக்க உத்தரவு பணித்திருக்கக் கூடாது. அதுதான் என் தலைக்குக் கத்தியாகிவிட்டது.’’

‘‘அப்படி உங்கள் தலைக்கு ஆபத்தை யுண்டுபண்ணினால் தானே நீங்கள் தலை தப்பினால் போதும் என்று ஓடி வருவீர்கள்? அதனால்தான். ஆமாம், ஜுன்னார் அகமத் நகர் பகுதி கொள்ளைக்கு நான்தான் காரணம் என்று உங்களுக்கு யார் சொன்னார்கள்?’’

‘‘உன்னைத் தவிர வேறு யாரும் இந்தத் தீவிரத்தில் இறங்க முடியாது. அந்தக் கொள்ளையால் என் தலை தப்பும் என்கிற பயங்கர முடிவுக்கு எனது அன்னையார் ஜீஜாபாய் வரமாட்டார்கள். என் நண்பன் பாலாஜி நினைத்துக்கூடப் பார்க்கமாட்டான். அது சரி; என் தலை தப்பும் என்று அவ்வளவு உறுதியாக எப்படி எதிர்பார்த்தாய்? நான் தப்பித்து ஓடி வர முயற்சிப்பதற்கு மாறாக அகப்பட்டுக் கொண்டிருந்தால்?’’

‘‘என் காதலர் வீர சாகசங்களைப் பற்றி முழுவதுமாக அறிவேன். மேலும் நான் பீஜப்பூர் நோக்கி வரவேண்டும் என்று முகலாய இளவரசர் ஔரங்கசீப் எண்ணியதே எனது ராஜதந்திரம்தான்.’’

‘‘ஏன் வரவில்லை?’’

‘‘என்னை முட்டாளாக்கிப் பார்க்கிறீர்களே!’’

‘‘சீ! ஒருபோதும் நினைக்க மாட்டேன். எங்கே வந்துவிடப் போகிறாயோ, ஔரங்கசீப் சதியில் அகப்பட்டுக் கொள்ளப்

போகிறாயோ என்கிற பயமே நான் ஓடிவந்ததன் மூலகாரணம். அகப்பட்டுக் கொள்வோம் என்பதுகூட அடுத்தபடியானதுதான்.''

''இந்த அவசரத்தைத் தூண்டத்தான் நான் பீஜப்பூர் வருகிறேன் என்கிற பொய்யான செய்தியை ஔரங்கசீப்புக்கு அனுப்பினேன். மேலும் பீஜப்பூரின் இரண்டாம் தானைத் தலைவன் அப்சல்கான்வேறு உங்கள்மீது பெருவஞ்சம் கொண்டிருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டேன். அத்துடன் அப்சல்கான், ஆக்ரா இளவரசர் ஔரங்கசீப்பைச் சந்திக்கத் தருணத்தை எதிர்பார்க்கிறான் என்கிற செய்தியும் தெரிய வந்தது. என்னதான் ஷாஜஹான் சக்கரவர்த்தியும் பீஜப்பூர் சுல்தானும் பகைவர்களானாலும் இனத்தால் மதத்தால் ஒன்றுபட்டவர்கள். அவர்கள் பிரிந்து இருக்கிறவரையில் சிவாஜி மகாராஜாவின் கொடி பறக்க வழிதேடலாம். ஒன்றுபட்டுவிட்டால் நமது கனவுகளுக்கு ஆபத்து! எனவேதான் உங்களைத் தப்பி ஓடி வருமாறு எனது வளர்ப்புத் தந்தை ராமதளவாய்க்கு திருமுகம் அனுப்பினேன்.''

ராமதளவாய்...

ஓ... அவர் இந்நேரம் எக்கதியானாரோ?

இச்செய்தியை இப்போதைக்கு இவளிடம் சொல்வது மனவருத்தத்தை யுண்டுபண்ணும். பிறகு - விவரம் அறிந்த பிறகு சொல்லலாம். அல்லது சொல்லாமலும் விட்டுவிடலாம்...

சிவாஜி இச்செய்தி குறித்து வாய் திறக்கவில்லை.

பிரசண்ட கோட்டை மாளிகையே ஒரு புதிய பிரகாசமாய் ஒளிர்ந்தது. அதன் தலைவன் மகாராஷ்டிர ஜீவோதயம் பிரசன்னமாகி விட்டதில் ஏற்பட்ட ஒரு ஜீவகளை!

அந்த மலையும், அதன் பாறைகளும், அவற்றுக்கு மேலிருந்த கோட்டையும் அதனுள் வசிக்கும் ஜீவன்களும் இத்தனை நாட்களாகத் தங்கள் தலைவனை எதிர்பார்த்து...

ஓ... பவானித் தாயே!

அன்னை பவானிக்கு அர்ச்சனைகளும் ஆராதனைகளும் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வீரமா சிவாஜி வணங்கி வரம் பெற்ற சின்னஞ்சிறு ஆலயமாயிற்றே! ஆனால் பென்னம் பெரிய சக்தி அதனுள் குடி கொண்டிருப்பதை சிவாஜி அறிவார். தமது வாளைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறார். அதன் பெயரே பவானி.

ஆலய பூஜையை முடித்துக் கொண்டு அரண்மனை மாளிகையுள் பிரவேசிக்கிறார். அன்னை ஜீஜாபாயும் மனைவிகள் சூர்யாபாயும் சாயாபாயும் உடன் வருகிறார்கள். எப்படியோ, சிவாஜி வந்துவிட்டார். அவருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை.

மாளிகையுள் பிரவேசித்ததும்...

அங்கே அரசியல் அதிபதிகள் எழுந்து நின்று வரவேற்கிறார்கள்.

பேஷ்வா (பிரதானி) மோரோபந்த், ஆமாத்தியர் (முஜூம்தார்) நரோ நீலகண்ட், நியாயா தீஷா (நீதிபதி) நிராஜிபந்த், பாபாஜி பாஜி, பாலாஜி, பாஜிபந்த் மற்றும் பல அரசாங்க அதிகாரிகள் சிவாஜியைக் கண்டதில் பெருத்த மகிழ்ச்சியுடன் முகமலர்கிறார்கள். அவர்களுள் பாஜிபந்த் மட்டும் இந்த மலைபிடுங்கி ராட்சஸன் எங்கு சென்றாலும் தப்பி வந்துவிடுகிறானே என்று மனத்துள் முனகிக் கொண்டான். ஆதிமுதற்கொண்டே சிவாஜிக்கு அத்யந்த நட்பு பூண்ட துரோகி.

பீஜப்பூரின் பெருந்தானைத் தலைவரும், சிவாஜியின் தந்தையாருமான ஷஹாஜி பான்ஸ்லே, பீஜப்பூர் ஆணைப்படி தம்மைக் கைது செய்து அழைத்துச் சென்றது முதல் முகலாய யுவராஜன் ஔரங்கசீப் தம்மை விடுவித்து, அதே பீஜப்பூர் அரண்மனைக்குத் தூது அனுப்பியதுவரை சிவாஜி விசாரித்துக்கொண்டு வந்தார். பிறகு ஔரங்கசீப்போடு இணைந்து பீஜப்பூர் சமஸ்தானம்மீது போர் தொடுத்து பீஜப்பூரை முக்காலும் அடிபணியச் செய்ததையும் எடுத்துரைத்தார். முடிவில் தமது உயிர்க்கு எந்த நேரமும் ஆபத்து நிகழலாம் என்று படைமுகாமில் சிற்றன்னை துர்காபாயும் ராமதளவாயும் எச்சரித்ததையும் எடுத்துச் சொன்னார்.

ராமதளவாய்ப் பேச்சை ஆரம்பித்ததும் அன்னை ஜீஜாபாயின் முகமும், துரோகி பாஜிபந்தின் கண்களும் எவ்வாறு மெய்ப்பாடுகளை எடுத்துரைக்கின்றன என்பது குறித்தும் சிவாஜி மென்மையாகப் பரிசீலிக்கிறார்.

''ராமதளவாய் அங்கேதானிருக்கிறானா.''

அன்னையின் குரல், ஆனால் அதில் ஆத்திரமில்லை. அன்பு நிறைந்த எதிர்பார்ப்பு இருந்தது. அது சிவாஜிக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

ராமதளவாய் தமக்கு உதவியதையும் இந்நேரம் அவர் மாண்டும் இருக்கலாம் என்கிற நிகழ்ச்சியையும், செய்தியையும் அறிவித்தபோது பெரிதாக வேதனைப்பட்டுப் போனவள் ஜீஜாபாய்.

''இது பூஜ்யாவுக்குத் தெரியுமா, மகனே!''

''தெரியாது! சொல்லவில்லை; சொல்லக்கூடாது என்று நினைக்கிறேன்!''

''சிவா! சொல்ல வேண்டாம். தயவு செய்து சொல்ல வேண்டாம்.''

அன்னை ஜீஜாபாய் துடிதுடித்துப் போனாள்.

ஆரம்பத்தில் பகையுணர்வுடன் இருந்த பூஜ்யா, இப்போது அவளது அறிவுத் திறத்தால் எவ்விதமாக அன்னையின் நெஞ்சில் இடம்பிடித்து விட்டாள் என்கிற நிலையை சிவாஜி நன்றாகவே அறிந்திருக்கிறாரே!

''சொல்லமாட்டேன் தாயே! ராமதளவாய் எச்சரித்ததால் மட்டும் நான் தப்பி வந்துவிடவில்லை. எதிர்பாராத இந்த ஜுன்னார் நகர்க் கொள்ளை என் மீது சந்தேகத்தை விளைவித்ததாலும், பூனாவில் ஔரங்கசீப் தங்கியிருந்தபோது அவனது கழுகுக் கண்ணில் பூஜ்யா பட்டுவிட்டதால், அடிக்கடி பூஜ்யாவைப் பற்றி இவன் வருணித்ததோடு நில்லாது, அவளை பீஜப்பூருக்கே கொண்டு வர ஏற்பாடு செய்ததாலும்தான் நான் உடனடியாகப் புறப்பட முடியாமல் தப்பியோடி வந்தது.''

''பூஜ்யாவைப் பீஜப்பூருக்குக் கொண்டுவர ஏற்பாடா?''

''எனக்கு உறுதுணையாக இருக்க நன்மை செய்வதாக ஔரங்கசீப் செய்த ஏற்பாடு என்று சொல்வதைவிட, பூஜ்யாவே அந்த ஏற்பாடு செய்யும் அளவுக்கு ஒரு ராஜதந்திரத்தை நிகழ்த்தியிருக் கிறாள். இல்லையென்றால், எங்கே பூஜ்யா பீஜப்பூருக்கு வந்துவிடுவாளோ என்கிற அதிர்ச்சி எனக்கு ஏற்படுமா? தப்பியோடி வருகிற அவசரந்தான் நிகழ்ந்திருக்குமா?''

''நீ சொல்வதைப் பார்த்தால், ஜுனார் கொள்ளையைக்கூட பூஜ்யாதான் நடத்த ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.''

''சந்தேகமே இல்லை. இப்போது அந்தக் கொள்ளையிட்ட பணம் முழுவதும் குதிரைகளுக்கான கொள்முதல் நடக்கிறது. நாளையே ஆக்ரா இளவரசன் ஔரங்கசீப் பீஜப்பூரை அடிபணியச் செய்து நேரே மீண்டும் பூனாநகர் நோக்கி வரலாம் அல்லவா? எதிர்ப்பதற்கு நம்மிடையே போதிய குதிரைப் படைகள் இல்லை. பொக்கிஷத்தில் பணமும் இல்லை. இதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் அவள் அவ்வாறு செய்தாள்.''

அன்னை ஜீஜாபாய் அதிர்ச்சி நிறைந்த மகிழ்ச்சிக்கு ஆளானாள். ஆனால் அதிகாரிகள்?

வெட்கித் தலைகுனிபவர்கள் போல முகமாறுதல் கண்டனர். இதனைக் கவனித்த சிவாஜிக்கு அறத்துன்பமாய்ப் போய்விட்டது. இத்தனை பெரிய அதிகாரிகள் மத்தியில் தமது காதலியைப் புகழ்ந்திருக்கக் கூடாது. அவளது சர்வ வல்லமை பொருந்திய அறிவினையும் ஆற்றலையும் அதிகாரத்தையும் எடுத்துரைத்திருக்கக் கூடாது. பிறகு அதிகாரிகளுக்கு என்ன சக்தி இருக்கிறது?

மகா மேதையான ராஜமாதா ஜீஜாபாய், அனைவரையும் கவனிக்கிறாள். ஏதோ ஒரு யோசனை தோன்ற, ''சிவா! பூஜ்யாவின் அறிவு நுட்பத்தையும் சாணக்கிய சிந்தனையையும் கண்டுதான், நான் அவளுக்குச் சிலபல அதிகாரங்களை வழங்கி இருக்கிறேன். உன்னைக்

கேட்காமல் அவள் இவ்வாறு செய்ததற்காக நீ அவளைச் சாடாதே! நமது அதிகாரிகள் வீரமிக்கவர்கள். ஆனால் விவேகம் வீரத்தைக் காட்டிலும் பெரியது. அது பூஜ்யாவிடம் நிரம்பவே இருக்கக் கண்டுதானே நீ அவளிடம் மயங்கினாய். அந்தரங்கப் பிரதானியாக நியமித்துக் கொண்டாய்! ஆலோசனை வழங்கும் ராஜகுரு போலவும் எண்ணி நடத்துகிறாய்! ஆனால் அதிகாரம் வழங்கவில்லை. அதனை நான் வழங்கினேன்!''

ஆ! ராஜமாதா, ராஜமாதாவாகவே பொய்யை மெய்ப்படுத்து கிறார். உண்மையில் இந்த அதிகாரங்களை வழங்கியவரே வீரசிவாஜி. இதனை சந்தர்ப்பமறிந்து ஒரு திருப்பம் காணத் தம்மீது பழியை ஏற்றுக் கொண்ட அன்னையை மனத்துள் பாராட்டி வணங்கிக் கொண்டார் மகாராஷ்டிரப் புரட்சித் தலைவர் சிவாஜி.

பகல் உணவு அனைவருக்குமே அரண்மனையில்தான். நாற்பது கோட்டை நாயகரான வீரசிவாஜி, எந்தவித இடைஞ்சலுமின்றித் திரும்பியதைக் குதூகலமாகக் கொண்டாட ராஜமாதா ஜீஜாபாய் செய்த ஏற்பாடு.

அமர்க்களமான விருந்து.

அந்த விருந்துபச்சாரத்தில் பூஜ்யா கலந்து கொள்வதற் கில்லையே என்கிற கவலை சிவாஜிக்கு ஏற்படவில்லை. அவள் அழைத்தாலும் வரமாட்டாள். அவளுக்கென ஒரு தனியான லட்சியக்கோடுகளைப் பரிசுத்தமாக வரைந்து கொண்டு அவற்றின்படி செயல்படுகிறவள். என்றைக்கு சிவாஜி மகாராஜனுக்கு மகுடாபிஷேகம் நடக்கிறதோ, அன்றைக்குத்தான் அவளது கோலாகலங்கள் அரண்மனை மாளிகையில் என்று வரையறுத்துக் கொண்டு நிற்பவள். ஆகவே சிவாஜிக்கு இது குறித்து கவலை ஏற்படவில்லை. ஆனால் அன்னை ஜீஜாபாய் வெகுவாகக் கவலைப்பட்டாள். அந்த அறிவு ஜீவி - அர்த்தசாஸ்திர ஞானபானு வராதது ஒரு குறையாகவே இருந்தது. அப்படியும் கூட பூஜ்யாதேவி பெரிதும் மதிக்கும் பாலாஜியை அழைத்து அனுப்பி வைத்தாள். பூஜ்யா திட்டவட்டமாக மறுத்துவிட்டாள்.

தேங்கிக் கிடந்த அரசியல் காரியங்களைச் சரிவர பார்வையிட மூன்று தினங்கள் முழுதுமாகத் தேவைப்பட்டன சிவாஜிக்கு. அவ்வப்போது பூஜ்யாவின் குடிலுக்குச் சென்று அந்த நிலவு முகத்தைக் கண்டு நட்சத்திராஞ்சலிப் புன்னகை செய்ய அவர் தவறவில்லை.

எந்த நேரத்திலும் ஆக்ரா இளவரசன் ஔரங்கசீப் தமது படைகளுடன் பூனா நகரம் நோக்கிப் பயணமாகலாம் என்பது அவருடைய எதிர்பார்ப்பு.

இது பற்றியதில் கூட பூஜ்யா பெரிதாகச் சிந்தனை வயப்பட்டாள். ஒருகால் ஆக்ரா படைகளுடன் பீஜப்பூர் படையும் சேர்ந்து பூனாவுக்கு வருமானால்...

ஓ... எவ்வாறு சமாளிப்பது?

அப்சல்கான் எப்படியும் ஔரங்கசீப்பை தன் வயப்படுத்துவான். அப்சல்கானுடைய எண்ணமே பீஜப்பூரின் மகாசேனாதிபதி தனது மேலதிகாரி சிவாஜியின் தந்தை ஷஹாஜி பான்ஸ்லேவை முதலில் கொல்ல வேண்டும். அது அவ்வளவு எளிதில் நடைபெற சாத்தியமில்லை. பீஜப்பூர் சுல்தானியா பேகம், அவர்பால் மிக்கவும் பற்றும் நம்பிக்கையும் உடையவள். அதுபோலவே ஷஹாஜி பான்ஸ்லேயும் பீஜப்பூர்பால் செஞ்சோற்றுக் கடன் மிக்கவர். பீஜப்பூருக்காக மகனையே எதிர்க்க வல்லவர். அவரைப் பின்னால் கவனித்துக் கொள்ளலாம். முதலில் முகலாயர்களுக்குச் சிம்ம சொப்பனமாய் விளங்கும் இந்துமத வெறியன் சிவாஜியை எப்படியும் பலிகொண்டு விட வேண்டும் என்பதில் அப்சல்கான் தீவிர சிந்தையுடன் செயல்பட்டு வருபவன். எனவே அவன் ஆக்ராவுக்கு ரகசியத் துணைவனாக நின்று சிவாஜியைப் பழிவாங்குவதில் முழுமூச்சுடன் இருக்கலாம் அல்லவா?

ஒருவாரம் சென்று வந்த செய்தி...

ஆ! பூனா நகருக்கே புஷ்பாஞ்சலி செய்து மகிழ்விக்கிற மாதிரி இருந்தது அந்தச் செய்தி...

வடக்கே ஆக்ரா சக்கரவர்த்தி ஷாஜஹான் திடீரென்று நோய்வாய்ப்பட்டு விட்டதாகவும், அவரது படுத்த படுக்கையை ஒரு காரணமாகக் கொண்டு அரசுரிமை போராட்டம் புதல்வர்களுக்குள் ஏற்பட்டு இருப்பதாகவும் செய்தி கேட்டு, மூன்றாம் புதல்வரான ஔரங்கசீப் உடனடியாகப் படைகளை அழைத்துக் கொண்டு ஆக்ரா புறப்பட்டு விட்டதாகவும் வந்த செய்திதான் அது.

தித்திக்கும் இந்தச் செய்தி கேட்டு முதலாவதாகப் பெருமகிழ்ச்சி கண்டவள் பூஜ்யாதேவி.

எவ்வழியிலோ பீஜப்பூருக்கும் ஒரு பயங்கரமான திருகு வலி தீர்ந்தது போலிருக்கும். இல்லையென்றால் பீஜப்பூரை ஔரங்கசீப் விட்டு வைப்பானா? ஒருகால் அப்சல்கான் ஏதாவது ரகசிய உடன்படிக்கைக் கூடச் செய்து கொண்டிருக்கலாம். அவன் என்ன ஷஹாஜி பான்ஸ்லே மாதிரி. பீஜப்பூர் சுல்தானா பேகத்திடமும் அவளது பக்குவமறியா அரசுரிமை வாலிபன் ஆதில்ஷாவிடமும் நன்றிக்கடன் பட்டா கிடக்கிறான்? தேவைப்பட்டால் பீஜப்பூரையும் அவன் கபளீகரம் செய்யத் தயங்கமாட்டானே!

சிவாஜி தமது வெண்குதிரையைப் பூஜ்யாவின் குடிலின் வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைகிறார். காவல் வீரர்கள் குதிரையைக் கொண்டுபோய் லாயத்தில் கட்டினர்.

தனது வீரார்ந்த காதலனை விழிநகை புரிந்து குழிக்கன்னம் இனிக்க வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று அமரச் செய்கிறாள் பூஜ்யா.

காலைப்போதின் கதிர்க்கிரணங்கள் சாளரங்களின் வழியாகப் புகுந்து பொன்னாய் மிளிர்கின்றன. சுற்றிலும் அமைந்த தோட்டத்தில் பல்வேறு பட்சிகள், நாங்கள் பூஜ்யாவின் இனிய தோழர்கள், தோழியர்கள் என்பனபோல பல்வேறு ‘கிரீச்’ பாஷையில் பேசிக்கொண்டு இருக்கின்றன.

அவள் குளித்துமுடித்து, பூஜை புனஸ்காரங்களை முடித்து, காலைச் சிற்றுண்டியுண்டு சற்றே ஓய்வு கண்டிருந்த நேரம் அது.

தன்னை அவள் அலங்கரித்துக் கொள்வதற்குள் அருமைக் காதலர் வீரமாப் புருஷோத்தமர் சிவாஜி வருகை தந்துவிட்டாரே!

அவருக்கு அப்படியான அலங்கார அழகில் அதிகம் போதை கிடையாது. இயல்பான அழகில் கவிதை நயம் காண்பவர். தமது அவைப்புலவர் பூஷணர் எழுதும் கவிதைகளைக் காட்டிலும் பேரழகுமிக்கவள் பூஜ்யா என்பது அவரது அபிப்பிராயம்.

தமிழில் ஏதோ ஒரு காவியத்தை அடிக்கடிச் சொல்வாளே...

ஓ... சிலப்பதிகாரத்தின் கானல்வரி வருணனை...

அது மாதிரி இருக்கிற அழகு பூஜ்யாவின் அழகு.

இவளைப் பெற்றெடுத்த தமிழகத்துக் காவிரிக்கரையை வாழ்த்திக் கொள்வார். தமிழ்மொழியைப் பாராட்டிக் கொள்வார். இதனாலேயே தமிழகம் மீது அவருக்கு ஒரு தனியான மோகம் இருந்தது.

தமிழ் மண்ணில் ஒரு பிராமணப் பெண்ணாய்ப் பிறந்து தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்றாகப் பயின்று, பிறகு வடபுலத்துப் பாஷைகளிலும் அதீத அறிவு படைத்த பூஜ்யா ஒரு தெய்வப்பிறவி! சிவாஜி சகாப்தத்தின் இனிய பிராப்தம்! இல்லையென்றால் ஒரு காட்டில் ஏற்பட்ட சந்திப்பு வீட்டில் இனிக்கும் வந்திப்பாக முடிந்திருக்குமா? தன்னை மாதிரியே ஒரு போலியுரு கொண்ட சிவாஜியைச் சந்தர்ப்பத்துக்காக வைத்திருக்க, அவனை இனம் கண்டு வீழ்த்தியிருப்பாளா? அசல் சிவாஜியே போதும் என்று பிரகடனப்படுத்தி இருப்பாளா?

வழக்கமாக உட்காரும் திண்டு திமாசுகளில் வீரசிவாஜி மண்டியிட்டு அமருகிறார். அவரது அலங்காரம் கண்களைப் பறிக்கிறது. கறுத்து மினுமினுக்கும் மீசை, குறுந்தாடி, பொன்னிறமேனி, தீட்சண்யமான கண்கள், நீண்ட நாசி, சிவந்த உதடுகள், அளவான யுத்த களை வெற்றித்தேகம்...

ஆ!

பூஜ்யா பூரித்துப்போகிறாள்.

''பூஜ்யா! அடுத்து என்ன செய்யலாம் என்றுதான் சிந்திக்கிறேன். முடிவு காணமுடியவில்லை.''

''நானும் உங்கள் மகுடாபிஷேகம் எப்போது என்று கணத்துக் கணம் எதிர்பார்க்கிறேன்.''

சிவாஜி பொருள்புரிந்து புன்முறுவல் பூக்கிறார்.

''நீங்கள் தவறாக எண்ணிக்கொண்டீர்கள். நான் மஞ்சத்தை எண்ணி மகுடத்தைப் பேசவில்லை. உங்கள் கனவு நனவாவதுதான் எனது லட்சியம். அதுவே நான் காணும் மஞ்சம்.''

''நானறிவேன் பூஜ்யா!''

''பீஜப்பூர் விஷயம் ரெண்டுங்கெட்டானாக முடிந்துவிட்டதே என்றுதானே யோசிக்கிறீர்கள்?''

சிவாஜி தலைப்பாகையை எடுத்து பக்கத்தில் வைத்துக் கொண்டே தலையசைக்கிறார்.

''அதுவும் நன்மைக்கே, பீஜப்பூர் மட்டும் ஔரங்கசீப் படையெடுப்பில் தோல்வி கண்டிருந்தால், இப்போது அது நமக்குத் தரும் ஆபத்தைவிட அதிகமாகத் தரும். அப்போது உங்கள் தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லே பதவி இழந்து இருப்பார்!''

''அது நமக்குத் துணை புரியும் அல்லவா?''

''அவர் பதவியில் இருப்பதுதான் நமக்கு நல்ல துணை. அது உங்களுக்குச் சாதகமானது. ஏன்? ஒரு பாசத்தின் பாதுகாப்பு அணை என்றும் சொல்வேன். முதலில் நாம் பீஜப்பூரை அடைய எண்ணுவதைவிட, பீஜப்பூரில் இருக்கும் நமது விரோதி அப்சல்கான் தொலைய வேண்டும். பிறகு இந்தத் தென்னகத்துப் பிரதிநிதியாக ஒரு போலிப்பதவி வகிக்கும் ஷிஸ்டாகான் தொலைய வேண்டும். கோல் கொண்டா, மீர்ஜும்லா இப்போது ஆக்ரா வசம்! அது குறித்து நமக்குக் கவலையில்லை. இப்போதைய ஆக்ரா நகரின் சக்கரவர்த்தி ஷாஜஹான் நிலை என்ன? அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வருபவர்

யார் என்கிற நிலைமைகள் புரிபட்ட பிறகே, எதிர்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செயல்பட வேண்டும் என்பது குறித்து ஆழ்ந்து யோசிக்கலாம். இப்போதைக்குக் கொஞ்ச காலத்துக்கு நல்ல ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். படைகளைப் பலமாக்க முனையுங்கள். அப்சல்கானை எப்படிச் சந்திப்பது என்பதை என்னிடம் விட்டு விடுங்கள். அதற்கான வழியை அவ்வளவு லேசாகக் கண்டுபிடித்துவிட முடியாது. அப்சல்கான் தொலைந்தால் பீஜப்பூரைப் பற்றிக் கவலைப்படத் தேவையே இல்லை.''

அருமைக்காதலி பூஜ்யா சொல்வது பல விதங்களில் சரியாகவே பட்டது.

''பூஜ்யா! நாம் தனிமையில் மலைப்பகுதி பக்கமாக நடந்து சென்று ரொம்ப நாட்களாகின்றன. இன்று மாலை சிறிது நேரம் உலவிவிட்டு வந்தால் என்ன?''

பல கணங்கள் யோசிக்கின்றாள் பூஜ்யா.

ஒரு சமயம் அவ்வாறு நடந்து சென்று வருகிறபோது, காற்று செய்த சேட்டையால் மேலாடை விலக, சிவாஜிக்கு இன்பம் மண்டையில் சுரீர் என்று தைக்க, அவர் அந்தத் தனிமையில் அனுபவிக்க வேண்டிய வேண்டல்...

இப்போதும் அது பரிதாபமாகவே இருந்தது. பூஜ்யா மறுத்தே விட்டாள்.

''வேண்டாம் பிரபோ! சுயராஜ்யக் கனவு நிறைவுபெறட்டும். எங்குவேண்டுமானாலும் தனிமையில் அனுபவிக்கலாம்.''

சூடு குறைந்து போனார் சிவாஜி. சிவாஜியின் இந்த ஆசையை முதலீட்டாக வைத்தல்லவோ, பூஜ்யா உரமேற்றி, சுயராஜ்யக் கனவை நனவாக்க முயல்கிறாள்.

சிவாஜியால் இதனை எவ்வாறு அறிய முடியும்?

-----

# 22

வண்டியுருள்கள் இரண்டில் ஒன்றின்றி மற்றொன்று சுழலாது. அதுபோல் அரசியல், துணை வலியின்றி நடைபெறாது. ஆதலால் அரசன் (அரசன் என்பது இப் போதைய குடியாட்சியின் பிரதான மந்திரிமார்களுக்கும் பொருந்தும்) துணைவர்களை (மதிநுட்பமுடை யாரை) அமைத்துக் கொண்டு அன்னார் கருத்துக்களையும் கேட்டு ஒழுகல் வேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 7).

**பீ**தி கண்ட பீஜப்பூர் பேரளவு அமைதி கண்டது. ஆயினும் என்றாவது ஒருநாள் இந்தத் தொல்லை மீண்டும் முளைக்காது என்பது என்ன நிச்சயம்?

பெரிய முஜூம்தார் ஷஹாஜி பான்ஸ்லேவுக்கு நல்ல நிறைவு. தாம் போட்ட திட்டம் ஒன்றிருக்க, தெய்வமாகப் பார்த்து வேறு திட்டம் தயாரித்து அருமை மகன் வீர சிவாஜியைக் காத்தது; தமது நேசத்துக்குரிய பீஜப்பூரையும் காத்துவிட்டது.

ஒரு முகலாயராட்சியிலிருந்தாலும் அவர்களது உப்பைத் தின்று வளர்ந்ததால், தாம் ஒரு பரிசுத்த இந்துவானாலும் துரோகம் நினையாது விசுவாசமாக நடந்து கொண்ட பேருருவம் ஷஹாஜி பான்ஸ்லே! அந்நாளில் அவரைப் போன்ற நன்றியுள்ள இந்துமத வீரர்கள் இஸ்லாமியரிடம் விசுவாசமுடன் நடந்து வந்தனர். அதுபோலவே,

இஸ்லாமிய வீரர்களும் தாங்கள் இஸ்லாமியர்களானாலும் இந்து சாம்ராஜ்யாதிபதிகளிடம் பணிபுரிகிறபோது, பெருத்த விசுவாசமுடன் நடந்துகொண்ட உண்மை நிகழ்ச்சிகளும் சரித்திரத்தில் காண்கிறோம். சிவாஜியிடமே அப்படியான இஸ்லாமிய விசுவாசிகள் இருக்கத்தான் செய்தார்கள்.

பீஜப்பூர் சுல்தானா பேகம், ஆக்ராவின் குழப்பம் என்ன என்பதனைத் தெளிவாக அறிந்த பின்னர் மேற்கொண்டு எந்த முடிவுக்கும் வரக் காத்திருந்தாள். தனது துரதிர்ஷ்டம் இப்படி ஒரு பக்குவத்துக்கு வராத இளைஞனான அருமை குமாரன் அடில் ஆதில்ஷாவை வைத்துவிட்டு கணவர் முகமது ஆதில்ஷா மரணமடைந்து விட்டால் எவ்வழியிலும் மகன் ஆதில்ஷா ஒரு நிலையான ஸ்தானத்துக்கு வருகிற வரையில் இந்த ஆட்சியைக் கட்டிக்காக்க வேண்டுமென்பதில் கனவனமாக இருந்தாள். என்னதான் அப்சல்கான் தனது இனத்தைச் சார்ந்தவனாக இருந்து தனக்கு சாதகமாக இருந்தாலும் ஷஹாஜி பான்ஸ்லே வழி வருவது என்பது இயலாத காரியம்! கணவர் முகமது ஆதில்ஷா காலமுதல் எவ்வளவு நன்றியுணர்வோடு பணியாற்றி இருக்கிறார்! எத்தனை வெற்றிகளை குவித்திருக்கிறார். ஏதோ மகன்மீது கொண்ட பாசத்தின் காரணமாக தர்பாரில் கொஞ்சம் இசகுபிசகாக நடந்து கொண்டார். அவரது நிலையில் நாம் இருந்தாலும் அதைத்தான் செய்திருப்போம். புத்திரபாசம் யாருக்கும் சொந்தம்தானே!

இந்த சிவாஜி மட்டும் தந்தையாரைப்போல பீஜப்பூருக்கு ஊழியம் செய்ய வந்தால், ஆக்ராவாவது? கோல்கொண்டாவாவது? இந்த இந்தியாவையே வளைத்துவிட முடியுமே!

நல்ல வேளையாக நாம் எண்ணியதுபோல ஆக்ரா சக்கரவர்த்தி களுக்கும் சிவாஜி துணை போகவில்லை. மாறாக பெருத்த எதிரியாகி விட்டான்! ஒருவிதத்தில் அதுவும் ஒருவித சாதகமே!

பீஜப்பூர் சுல்தானியா பேகம் இவ்வாறெல்லாம் எண்ணி ஓரளவு தன்னுள் சமாதானத்திற்கு வந்துகொண்டிருந்தாள். ஆயினும் பீஜப்பூரைக் காக்க வேண்டுமானால் பக்கத்தில் இருக்கும் எதிரி

சிவாஜி! அந்நிய மதப் பகைவன் சிவாஜி. அவனைத் தொலைத்துக் கட்டுவதில்தான் தீவிரமாக முனையவேண்டும். அவனைத் தொலைத்துவிட்டால் மகாராஷ்டிரர் அனைவருமே வேறு வழியின்றி வக்கின்றி பீஜப்பூர் சமஸ்தானத்தில் சேர்ந்து கொள்வர். ஆக்ரா பயம் என்பது அணில் பயம் மாதிரி.

எவ்வாறு இந்தக் கோட்டை பிடிக்கும் ராட்சஸனான சிவாஜியைத் தொலைத்துக் கட்டுவது?

சிவாஜியைத் தொலைத்துக் கட்டத் திட்டமிடவேண்டுமானால், இங்கே ஷஹாஜி பான்ஸ்லே இருப்பது எந்தவிதத்திலும் பொருத்தமாகாது.

எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம். ஆக்ராவுக்கு ஓடிய ஔரங்கசீப்பின் நிலை என்ன என்பதைத் தெளிவாகக் கண்ட பிறகு கலந்தாலோசிப்போம் என்று அமைதியாக இருந்தாள்.

இஸ்லாமிய கணக்கில் இடிபட்டும் இந்துக்கள் கணக்கில் துடிபட்டும் காலம் உருண்டு கொண்டிருந்தது.

பீஜப்பூர் சுல்தானியா பேகம் எதிர்பார்த்த அந்த ஆக்ரா செய்தி காதுகளில் அடிபட்டது; இதயத்தில் அடிபட்டது; பின்னர் மகிழ்ச்சியில் அடிபட்டது.

ஓ... பீஜப்பூர் இன்றைக்குப் பிழைத்துக் கொண்டாலும் நாளை அது ஔரங்கசீப்பின் பிடியில் மிதிபட்டு, கதிகெட்டு, அவதிக்கு ஆளாகுமே!

ஆக்ரா சக்கரவர்த்தி ஷாஜஹானையே ஔரங்கசீப் சிறையிலடைத்து விட்டானாமே! சகோதரர் நால்வருக்குள் சங்கடமிக்க சஞ்சலங்கள் தோன்றி, சச்சரவுகளாய்த் தலைதூக்கிப் பின்னர் ஔரங்கசீப்பின் வீரப் பிடிகளுக்கு அந்தச் சகோதரர்கள் சரணடைந்து விட்டார்களாமே!

ஷாஜஹான் தமது மூத்த புதல்வருக்கு முடிவழங்க இருக்க, ஏனைய சகோதரர்களைப் பயமுறுத்தியும் பக்குவமாகப் பேசியும்

தனது கைக்குள் போட்டுக் கொண்டு அந்த முடிசூட்டு விழாவையே தடுத்து நிறுத்தி விட்டானாமே; முகலாய வீர யுவராஜன் ஔரங்கசீப்! மூத்த சகோதரன் தாரா தப்பித்தால் போதும் என்று ஓடி ஒளிந்து கொண்டானாமே! பாவம் ஷாஜஹான் சக்கரவர்த்திகள்! எப்படி ஆண்ட பேரரசன்! அன்பு மனையாளுக்கு அழகிய மாளிகை கட்டிய காவியப் புருஷராயிற்றே! அந்தத் தாஜ்மகாலைப் (1632-ல் தொடங்கி, 1643-ல் முடிவு பெற்றது தாஜ்மகால்) போல அழகிய சமாதியை எந்தப் புருஷன் கட்டமுடியும்? அப்பேர்ப்பட்ட மகாபுருஷனையா இந்த ஔரங்கசீப் சிறையிலடைத்து விட்டார்?

ஓ... ஔரங்கசீப் மிகவும் பயங்கரமான பேர்வழி! அருமை தந்தையையே சிறையிலடைக்க துணிந்த பிறகு, வேறு எதற்குத் துணிய மாட்டான்?

ஔரங்கசீப் பிடியிலிருந்து இனி பீஜப்பூரை எப்படிக் காப்பது என்பது குறித்து ஆராயவேண்டியதுதான்.

அருமை மகன் அடில் ஆதில்ஷா அன்னையை நாடி வந்தான்.

''அம்மா! ஆக்ராவில் இருந்து வந்த செய்தியைக் கேள்விப் பட்டிருப்பீர்களே!'' என்றான் அடில் ஆதில்ஷா.

மகனைக் கூர்ந்து கவனிக்கிறாள்.

படைக்கள வீரத்தை முறையாக ஷஹாஜி பான்ஸ்லேயிடம் இவன் பயின்றாலும் இன்னும் துணிவான பக்குவமடையாமல் இருக்கிறானே என்று வருந்தினாள்.

''கேள்விப்பட்டேன் அடில்!''

''ஒரு தொல்லை தீர்ந்தது!''

''இல்லை மகனே! இப்போதுதான் தொல்லை அதிகமாக ஆரம்பமாகி இருக்கிறது. ஔரங்கசீப்பை நினைத்தால் நெஞ்சு வலிக்கிறது. தந்தையென்றும் பாராது சிறையில் தள்ளியவன் மகனாக இருக்க முடியாது. மகாராட்சஸனாக இருக்க முடியும்!''

''இது ஒன்றும் வடக்குச் சரித்திரத்தில் புதியதல்லவே, அம்மா!''

''புதியதல்லவானாலும் இது பெரிய அக்கிரமம். எப்பேர்ப்பட்ட தந்தை! மனைவிக்குக் கோயில் எழுப்பிய மகானாயிற்றே ஷாஜஹான் சக்கரவர்த்தி! அக்பர் மகா சக்கரவர்த்திகளைவிட பலபடிகள் மேலே போய்விட்ட சரித்திரப் புருஷனாயிற்றே!''

சிறிதுநேரம் வரை மௌனமாக, நின்று, பின்னர் அருகாமையில் உள்ள ஆசனத்தில் அமர்ந்தான் அடில் ஆதில்ஷா.

''ஏம்மா, தாராவை எதற்காக ஔரங்கசீப் வெறுக்க வேண்டும்?''

''மூத்த மகன் தாரா ஆட்சியில் அமர்ந்துவிட்டால் ஔரங்கசீப் மூன்றாம் மகன்தானே! எப்போது அரியணையில் அமருவது? மேலும் தாரா ஒரு தீர்க்கமான இஸ்லாமியப் பற்றுடையவனல்ல. இந்துக்கள்பால் அபிமானம் கொண்டவன். இந்துக்களின் வேத உபநிஷங்களைப் படித்த இந்து மதப் பற்றுடையவன், அவனை ஆட்சியில் அமர்த்தினால் இஸ்லாம் மதம் தழைப்பதாவது? ஔரங்கசீப் செய்தது நல்லதேயானாலும் நமக்கு அவன் திருகுவலியாக இருப்பான். நல்லது; நீ போய் அப்சல்கானை நான் இரவு தனியாகச் சந்திக்க வேண்டும் என்று ரகசியமாக அறிவி. வேறு யாரை அனுப்பிவைத்தாலும் இச்செய்தி ஷஹாஜி பான்ஸ்லேவுக்குத் தெரிந்து விடும். அதனால்தான் உன்னை அனுப்புகிறேன். இந்த ஆலோசனையில் நீயும் கலந்து கொள்ளவேண்டும். கவனம் மகனே!''

அடில் ஆதில்ஷா எழுந்து கொண்டான். அம்மா ஏதோ பயங்கரமான அரசியல் திட்டம் வகுக்கிறார்கள் என்பது மட்டும் நிச்சயமாகப் புரிந்தது. அவன் விடைபெற்றுச் சென்றான்.

பீஜப்பூர் சுல்தானா பேகத்தின் சிந்தனை சுழன்றது.

முதல் பகைவன் சிவாஜி.

அவனை எப்படித் தொலைப்பது?

**பீ**ஜப்பூர் அரண்மனை ஒருவாறு இரவு மயக்கம் கண்டது.

பேரளவான விளக்குகள் அணைக்கப்பட்டன. மகா முஜூம்தார் ஷஹாஜி பான்ஸ்லே தமது மாளிகைக்குச் சென்றுவிட்டார் என்கிற செய்தியைப் பூரணமாக அறிந்த பிறகு சுல்தானா பேகம் மேன்மாடம் நோக்கிச் சென்றாள். வெளியே காவல் பலமாக இருந்தது. இவ்வளவு பெயரும் சுல்தானாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்.

சற்றைக்கெல்லாம் அருமைக் குமாரன் அடில் ஆதில்ஷாவுடன் இரண்டாம் முஜூம்தார் அப்சல்கான் வருகை தந்தான்.

''அஸ்ஸலாமு அலைக்கும் சுல்தானா பேகம்!'' என்று வணங்கினான் அப்சல்கான். சுல்தானா பேகமும், ''முஸ்ஸலாம் அப்சல்கான்! உட்காருங்கள். ராத் தொழுகை முடிந்து விட்டதா?'' என்று மிகவும் கனிவுடன் கேட்டாள்.

''முடிந்துவிட்டது பேகம் சாஹிபா!''

சில கணங்கள் அமைதி.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த இளவரசன் அடில் ஆதில்ஷா நடக்கப் போவதை உன்னிப்பாகக் கேட்கக் காதுகளையும், கவனிக்கக் கண்களையும் கூர்தீட்டிக் கெண்டிருந்தான்.

எதிரே உட்கார்ந்திருந்த அப்சல்கானுக்கு மட்டும் தனக்கு ஏதோ மிகப் பெரிய யோகம் ஒன்று காத்திருக்கிறது என்பதுபோல முக மலர்ச்சியுடன் காணப்பட்டான். அவனது குறுந்தாடியும் தலைக்கேசமும் சுருள் சுருளாகவும் அழகாகவும் காணப்பட்டன.

சுல்தானா பேகத்தை நன்கு கவனித்துப் பரிசீலிக்கிறான்...

பீஜப்பூர் சுல்தானா பேகத்துக்கு அப்படி ஒன்றும் வயது அதிகமாகவில்லை. பதினாறே வயது பாலகுமாரனுக்குத்தானே அவள்தாய்! ஏதோ போதாக்காலம். கணவர் சில ஆண்டுகளுக்குமுன் அகால மரணமடைந்து விட்டார். மற்றபடி கணவரால் சேகரிக்கப்பட்ட பல வைப்புச் சுல்தானாக்கள், ஜனானாவில் (அந்தப்புரத்தில்) ஏராளமாக இருந்தனர். அவர்களில் சிலர் அப்சல்கான் கையில், சிலர் பலர் கையில், அவர்கள்தாம் என்ன செய்ய முடியும்? ஜனானாவை விட்டு அவர்கள் விரட்டவும் முடியவில்லை. தண்டத் தீனிகள்.

அரண்மனையின் அந்த விசால அறையில் பெரிய லஸ்தர் விளக்குகள் பளீரென்று வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன.

அலங்காரமிக்க சுல்தானா மீது தடவி இருந்த வாசனை திரவம் நாசிகளுக்கு இதம் தந்தது.

''அப்சல்கான்! ஒரு முக்கிய விஷயமாக உங்களுடன் பேசவே தனித்துவரச் சொன்னேன். பேச்சு சிவாஜியைப் பற்றியதாகவு மிருப்பதால், ஷஹாஜி இந்த ஆலோசனைக்குத் தேவையில்லை என்று நிராகரித்தேன். மற்றபடி வேறு எந்த ஆலோசனைக் குழுவினர் களையும் வரவழைக்காததற்கும் காரணம் உண்டு. நமது இந்தத் தனித்த ஆலோசனை ஷஹாஜியின் காதுகளுக்கு எட்டிவிடக் கூடாதல்லவா? அதனால்தான் சர்வ ஜாக்கிரதையாக இதனை ஆலோசிக்க முனைந்தேன். ஆக்ராவில் ஏற்பட்ட அரசுரிமைக் குழப்பத்தால் பீஜப்பூருக்கு நல்லது ஏற்படும் என்று நம்புகிறீர்களா?''

''நிச்சயம் ஏற்படாது.'' பளிச்சென்று பதில் சொன்னான் அப்சல்கான். சற்று முன்கோபக்காரனானாலும் அப்சல்கான் பெருவீரன். ஷஹாஜிக்கு இணையாகவும் சொல்லலாம். ஆனால் அவசரக்காரன். ஆழ்ந்து எதையும் யோசித்துச் செயல்படத் தெரியாதவன். அரசியல் தெரிந்த அளவுக்கு அதன் விவேகம் புரியாதவன்.

''என்ன அப்சல்கான்! கொஞ்சமும் யோசியாமல் பளிச்சென்று இப்படிப் பதில் சொல்லிவிட்டீர்கள்.''

''இதில் யோசிக்க என்ன இருக்கிறது? ஒருகால் தாராவாவது, மூரத்தாவது அரியணை ஏறியிருந்தால் கொஞ்சம் யோசித்துப் பார்த்து இருக்கலாம். அனைவரையும் விரட்டியடித்துவிட்டு அநியாயமாக அரியணை ஏறியிருப்பது ஔரங்கசீப். தந்தையை சிறையிலடைப்பது ஒரு சாதாரண விஷயம். அரசியலில் இது சகஜம். ஆனால் ஷாஜஹானை இவ்வாறு செய்திருக்கக்கூடாது. அந்த மகா கலைஞன் சிறையில் வாடக்கூடாது.''

''இல்லையென்றால் இந்துக்கள் விஷயத்தில் பெரிய திருப்பம் ஏற்பட்டுவிடுமே! ஒரு அக்பர் செய்த தவறுகள் போதாவா? ஷாஜஹான் வேறு இந்துக்கள் விஷயத்தில் அன்பு செலுத்திவிட்டால் இஸ்லாமிய கனவுகள் என்னாவது? மேலும் ஷாஜஹான் விருப்பப்படி தாராவை அரசு கட்டிலில் அமர்த்தினால் இந்து வேதாகம சாஸ்திர வெறியனான சிவாஜிக்கு குளிர்விட்டுப் போயிருக்கும். தாரா ஒரு இந்துமத வேதப்பிரியன். சிவாஜியை அன்புடன் நோக்குவான். இப்படி ஏற்பட்டதுதான் நல்லது.''

''நீங்கள் குறிப்பிடும் கண்ணோட்டம் சரியே ஆனாலும், நமது பீஜப்பூருக்கு எந்தவித நன்மையும் ஏற்பட்டு விடாது. அதனால்தான் அப்படிப் பதில் சொன்னான்.''

''ஔரங்கசீப்புடன் நீங்கள் தனித்துச் சந்தித்துப் பேசியபோது ஏதோ ஒரு சாதகமான ஏற்பாடு நடந்ததாகச் சொன்னீர்கள்!''

''சிவாஜி விஷயத்தில் சாதகம். பீஜப்பூர் விஷயத்தில் எப்போதும் பாதகம்தான். ஔரங்கசீப் பீஜப்பூரை அடிமை நாடாக வைத்துக்கொள்ளத்தான் விரும்புகிறார். ஒரு பொது எதிரியான சிவாஜியை எப்படி வீழ்த்துவது என்பது குறித்துத்தான் எல்லா சாதகங்களும்! அவன் தப்பி ஓடிவிட்டானே! அவன் மட்டும் இருந்திருந்தால் இந்நேரம் பிணமாக்கி இருப்பேன். படவா ராமதளவாய் சூழ்ச்சி செய்துவிட்டான். அந்தக் கழுதை மட்டும் என் கையில் கிடைத்தால் உயிரோடு தோலுரித்து இருப்பேன்.''

''நல்லது; இப்போது நாம் சிவாஜி என்கிற ஒரு பொது எதிரியை வீழ்த்தாவிட்டாலும், ஔரங்கசீப் வீழ்த்தத்தானே போகிறார்! நாம் ஏன் அதில் மூழ்க வேண்டும்?''

சுல்தானா பேகம் பேச்சைத் தலைகீழாக்கிப் பார்த்துப் பரிசீலிக்கிறாள்.

''நாம்தான் வீழ்த்த வேண்டும் சுல்தானா பேகம்! என்ன இருந்தாலும் ஔரங்கசீப்புக்கு இன்னமும் சிவாஜிமீது நம்பிக்கை போகவில்லை. எப்படியாவது சிவாஜியை மயக்கி தனது வலையில்

போட்டுக் கொள்ள எண்ணுகிறார். அதற்காகத்தான் நட்பை எதிர்பார்த்து நட்புரிமை நாடகம் நடத்துகிறார். சிவாஜி என்கிற மாவீரன் கிடைத்துவிட்டால், தெற்கே கன்னியாகுமரி வரையில் சாம்ராஜ்ய விரிவு காணலாம் என்பது ஔரங்கசீப்பின் எதிர்பார்ப்பு. எனவே நமக்கிருக்கும் ஒரே எதிரி இப்போதைக்கு சிவாஜி. அவனைத் தொலைத்துவிட்டால், நம்மிடமிருந்தும், ஷாஜஹானிடமிருந்தும், இன்னும் தனித்தும் கைப்பற்றிய அவனது நாற்பது கோட்டைகளும் நமது கைவசமாகி விடும். மேலும் அனைத்து மகாராஷ்டிர வீரர்களும் நம்வசம் சேர்ந்து விடுவார்கள். ஆக்ராவின் பயம் நமக்குத் தேவையே இல்லை. கொஞ்சம் அதிகமாகச் சொன்னால், சிவாஜியைத் தொலைத்துவிட்டால், நாம் ஆக்ராவைக் கூடக் கைப்பற்றி விடலாம்.

அப்சல்கானின் இந்த அழுத்தம் திருத்தமான ஆவேசப் பேச்சு சுல்தானா பேகத்துக்கு, ரொம்பவும் ஆறுதலாக இருந்தது. இப்படியும் ஒரு கனவு நிறைவேறுமா?

வெகுநேரம் மௌனமாகவே இருந்தாள் சுல்தானா பேகம். பிறகு தனது மைந்தனை நோக்கி, இவன் சிறியவனானாலும் அரசியல் அவனுக்கு எப்படித் தெரிகிறது என்கிற நோக்கில் கேட்டாள். ''உனக்கு எப்படித் தோன்றுகிறது அடில்!''

அடில் ஆதில்ஷா சொன்னான்: ''அப்சல்கான் சொல்வதுதான் எனக்குச் சரியென்று தோன்றுகிறது. முதலில் சிவாஜி ஒழிய வேண்டும்.''

''சரி எப்படி அழிப்பது?''

அடில் ஆதில்ஷாவே பதில் சொன்னான்: ''ஷஹாஜி இங்கே இருக்கிற வரைக்கும் சிவாஜியை நம்மால் அழிக்க முடியாது!''

''சபாஷ்!'' என்று கூறிய அப்சல்கான், அடிலின் பதிலைக் கேட்டு அதிர்ந்து போனான்; ஆச்சரியத்தில் மூழ்கினான். ஆ! நாம் சொல்ல இருந்த பதிலை இவன் எவ்வளவு குறிப்பறிந்து சொல்லிவிட்டான். இதையே நாம் சொல்லியிருந்தால் சுல்தானா பேகம் கொஞ்சம் யோசித்து இருப்பாள். ஏதோ பொறாமையால் சொல்வதாகவும்

நினைப்பாள். இப்போது அடில் ஆதில்ஷாவைப் பின்பற்றி நாமும் பேசலாம் என்கிற தைரியம் வந்துவிட்டது.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் அப்சல்கான்?''

சுல்தானா பேகம் கேட்டதற்கு உடனடியாக அப்சல்கான் பதில் சொல்லிவிடவில்லை. சற்றே யோசித்துச் சொன்னான்.

''யுவராஜா சொன்னதை நானும் ஆமோதிக்கிறேன்?'' என்றளவில் பதில் சொன்னான் அப்சல்கான்.

''நானும் இதை ஏற்கிறேன். ஷஹாஜியை என்ன செய்ய வேண்டும்? இதற்காக ஷாஜியை நான் எந்தவிதத்திலும் இழக்க முடியாது? அவரையும் இழக்கக் கூடாது; வழியும் பிறக்க வேண்டும்.''

அப்சல்கானின் அடிவயிறு பற்றி எரிந்தது. 'ஷஹாஜி... இரு, இரு; உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்!' என்று நெஞ்சு முனகிக் கொண்டது.

அப்சல்கான் பதில் சொன்னான்:

''பேகம் சாஹிபா! நான் படே முஜூம்தாருக்கு விரோதியா என்ன? ஷஹாஜி ராஜாவின் உதவி எப்போதும் பீஜப்பூருக்கு இருந்து கொண்டே இருக்கவேண்டும். மகன் தலையைக் கேட்டபோது நாளையனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு படை திரட்டுவாரா? சிவாஜியை ஒழித்துக் கட்டுகிறவரை ஷஹாஜி ராஜா எங்காவது வெகு தொலைவில் இருப்பது நல்லது.''

''தொலைவில்! நல்ல கருத்து. கர்நாடகத்திலும் நமது பகுதிகள் இழப்புக்குள்ளாகி இருக்கின்றன. அங்கே பிரதிநிதியாக அனுப்பி வைத்தால் என்ன?''

''நல்ல கருத்து, நானே சொல்லியிருப்பேன். பேகம் சாஹிபா தவறாக எண்ணிவிடக் கூடாதே என்பதற்காகத்தான் சும்மா இருந்தேன்.''

''நல்லது; ஷஹாஜியை கர்நாடகத்துக்கு அனுப்பிவைத்த பிறகு?''

‘‘அப்சல்கான் படையுடன் சிவாஜியை வீழ்த்த புறப்படுகிறான்!’’

‘‘படை மூலமாகவா?’’

‘‘படை என்பது ஒரு கண்துடைப்பு. அங்கே போய் ஒரு சமாதான உடன்படிக்கைக்கென்று அழைத்துத் தீர்த்து கட்டி விடுவேன்!’’

சற்றே தயங்கிக் கவனிக்கிறாள் சுல்தானா பேகம்.

‘‘அப்சல்கானால் எதுவும் முடியும்!’’

கொஞ்சம் திமிராகவே பதில் சொன்னான். அதில் ஒரு தனியான அர்த்தமும் புதைந்திருந்தது. அவன் சுல்தானா பேகத்தை விழுங்குவது மாதிரி கவனிக்கிறான். சுல்தானாவுக்கு இது புரியவில்லையா என்ன?

அவள் கண்டு கொள்ளவில்லை.

‘‘முதலில் சிவாஜியை வீழ்த்திவிட்டு வாருங்கள். பிறகு எல்லாவற்றையும் கவனிப்போம்!’’ என்றாள் சுல்தானா பேகம். ‘‘நாளையே ஷஹாஜி பான்ஸ்லே கர்நாடகம் நோக்கிப் புறப்படுகிறார், இதில் மாற்றமில்லை அப்சல்கான்! திட்டத்தை ஒழுங்காகப் போடுங்கள்!’’

‘‘அப்சல்கான் எதையும் திட்டமிடாது வட்டமிடமாட்டான்.’’

சுல்தானா பேகம் தன்னுள் சுகமாகச் சிரித்துக் கொள்கிறாள்.

-----

# 23

முதலமைச்சனுக்குரிய குணங்கள்: கலையில் வல்லவனாக இருக்கவேண்டும். ராஜதந்திர அறிவு, மதிநுட்பம், மறதியின்மை, சோர்வின்மை, சொல்வன்மை, காலம் இடம் அறியும் பேரறிவு, எதிர் செயல்மாற்றம் (பிரதிபத்தி என்று முதல் நூல் கூறும் செய்யத்தக்கதை செய்யத் துணியும் ஆற்றல்), ஆண்மை, பெருமை (பிரபுசக்தி), துன்பம் பொறுத்தல், தூய்மை, அன்புடைமை, ஒழுக்கம், உடல் வலிமை, பிணியின்மை, அஞ்சாமை, செருக்கின்மை, அசைவின்மை (உறுதியிலிருந்து பிறழாமை), காண் டற்கினிமை (பார்வைக்கு அழகான வனாக), பகைசெய்யாமை முதலிய அம்சங்கள் பொருந்தியவனாக இருக்க வேண்டும்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**

(அதிகரணம் - 1, அத்தியாயம் - 9).

**நா**ட்களை மாதங்களும் மாதங்களை ஆண்டுகளும் போரின்றி விழுங்குகின்றன. இந்நிலையில் வீர சிவாஜியின் மனைவியருள் ஒருவரான சாயாபாய் வேறு இறந்துபட்டாள். அந்தக் கவலைக்கூட பெருங்கவலையாகத் தெரியவில்லை.

ஓ... அப்சல்கான்...

ஆக்ரா...

நிரம்பவும் ஆலோசனையின் கீழ் மண்டையை பிய்த்துக் கொண்டு உலவுகிறார் மகாராஷ்டிர மாவீரத்திலகம் சிவாஜி. எதிரே ஒரு திண்டில் சாய்ந்து காணப்படுகிறாள் சிவாஜியின் இதயத்துக்குரிய அழகு சொர்க்கம் பூஜ்யாதேவி.

''பூஜ்யா! ஆக்ராவின் நிலைமை என்னாகும் என்று கணிக்கிறாய்? உனது உள்மனத்து ஜோதிடம் என்ன சொல்கிறது? எதையும் தீர்க்கமாகச் சொல்லக்கூடியவள், இது குறித்து மௌனம் சாதிக்கிறாயே?''

சிவாஜி சற்றே நின்று படபடவென்று கேட்கிறார்.

மேலும் மௌனம் சாதிக்கிறாள் பூஜ்யா. அவளது சிந்தனை குழம்பிக் கொண்டிருக்கிறது என்கிற உண்மையை அவள்தானே அறிவாள்!

ஆக்ராவில் ஷாஜஹான் சக்கரவர்த்தி சிறைபட்டுவிட்டார் என்கிற செய்தி இந்தியாவையே ஒரு கலக்குக் கலக்கி விட்டதென்றால் நிரம்பவும் அறிவு ஜீவியான பூஜ்யாவை மட்டும் அது கலக்கி ஆலோசிக்கச் செய்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை என்பது இந்த வீரகர்ஜனை சிவாஜிக்குப் புரியாமல் போனதென்ன?

ஓ... பூஜ்யா வாய் திறக்கிறாள்.

''பிரபோ!''

ஏதோ அபரிமிதமான எண்ணம் வெளிப்படுகிறது.

அவசர அவசரமாக உலவுவதை விட்டு பூஜ்யாவின் பக்கத்தில் வந்து உட்காருகிறார் சிவாஜி.

''என்ன பூஜ்யா! சொல்லு!''

''எதற்கு அவசரப்படுகிறீர்கள்?''

‘‘இதை வைத்துத்தான் நமது அடுத்த திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். எனக்கு விரைவில் முடிசூட்டுவிழா நடந்து, நீ படுக்கையை அலங்கரிக்க வேண்டாமா?’’

சிவாஜி மாபெரும் வீர கர்ஜனை. பூஜ்யாவின் மயக்கத்தில் அவருக்கு நிரம்பவும் பலவீனம் இருந்தது. அவள் சரியென்றால் அக்கணமே மயங்கி விழுந்துவிடுவார். இந்த அவரது மயக்கத்தைத் தூண்டித்தானே வீரத்தைப் பெருக்கி விளையாடி வருகிறாள் பூஜ்யா. அந்த வீரம்தானே - பூஜ்யாவின் மீது இருக்கும் காதல் மயக்கத்தால் உந்திய வீரம்தானே - இதுகாறும் அவர் சாதித்த வெற்றிகள்!

இயற்கையாகவே மாவீரப் பெருமகன் சிவாஜி. அந்த வீர சிங்கத்தை மேலும் பிடரியைச் சிலிர்க்க வைப்பது பூஜ்யாவின் அழகு மயக்கம்; அச்சு வார்ப்பு மாதிரியான அங்க மயக்கம்; அவற்றால் ஏற்பட்ட தணியாத போதை! இந்தப் போதை ஒரு தூண்டுதலான காரணமேயொழிய இயல்பான பெருவீரத்தை பூஜ்யா அறியமாட்டாளா என்ன?

ஆனால் சிவாஜியைக் கேட்டால், பூஜ்யாவின் அறிவுதான் மிகப் பெரிய பக்கபலம் என்பார். உண்மையும் அதுதானே என்பது அன்னை ஜீஜாபாய் வரை ஒப்புக்கொண்ட விஷயம்.

சிவாஜி பேசிய அந்தக் கடைசி வார்த்தைகளைக் கேட்க ஒரு தவயோகியின் கண்களைப்போல மூடியும் மூடாமலுமாக ரசிக்கிறாள்.

‘‘விரைவில் அந்த நாள் வந்தே தீரும் பிரபோ! ஆக்ராவின் குழப்பம் நம்மைப் பொறுத்த மட்டில் சாதகமே! ஔரங்கசீப் தனது அரசுரிமைகளைச் சரிசெய்து கொள்வதற்குள் நாம் நமது ஆட்சியை பலப்படுத்திக் கொள்ளலாம் அல்லவா? நீங்கள் தப்பி ஓடிவந்த பிறகு உங்களைப் பின்தொடர்ந்து எப்போது ஔரங்கசீப்பால் வரமுடியாமல் போயிற்றோ அப்போதே அதிர்ஷ்டம் நம் பக்கம் என்பது தெளிவான விஷயம். அதிலும் மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டு ஔரங்கசீப் ஆக்ரா நோக்கி ஓடோடிப் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட தென்றால் நாம் அதிர்ஷ்டசாலிகள்தாமே?’’

''அது சரி! ஆக்ராவுக்கு ஔரங்கசீப்தான் அரசனாவானா?''

''நிச்சயமாக! தாரா எப்போது ஓடி மறைந்தாரோ அப்போதே வடபுலம் ஔரங்கசீப் வசமாய்விட்டது. ஷாஜஹான் அரியணையில் இருந்தால் எங்கே தாராவுக்கு முடிசூட்டி விடுவாரோ என்று பதறித்தானே, தந்தை என்றும் பாராது சிறையில் அடைத்தது. அடுத்து உடன்பட்ட சகோதரர்களை அணைத்து, உடன்படாத சகோதரர்களை மிதித்து அரியணையில் அமர்ந்து முடிசூட்டிக் கொண்ட பிறகுதான் ஔரங்கசீப்புக்கே உங்கள் நினைவு வரும். அப்போது அது குறித்து ஆலோசித்துக் கொள்ளலாம். ஆனால் இப்போது நம்மை குறித்துச் சதா ஆலோசனை செய்து கொண்டிருக்கும் பீஜப்பூரைப்பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். உங்கள் தந்தையாரை காரணமில்லாமல் கர்நாடகப் பகுதிக்குப் பிரதிநிதியாக அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்றால் இதில் ஏதோ மாபெரும் சூழ்ச்சி இருக்கிறது. முதலில் அப்சல்கான் உங்களை விழுங்க கனவுகண்டு கொண்டிருப்பான். தர்பாரில் நீங்கள் அவனைக் கோமாளி என்று கூறியதும் அவமதித்ததும் அவன் நெஞ்சைவிட்டு அகன்றிருக்காது. எந்த நேரத்திலும் அவன் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பான்.''

பூஜ்யா சொன்னதில் பல விஷயங்கள் புதைந்து கிடந்தன. சிவாஜிக்கும் இது புரியாமல் இல்லை.

இந்தச் சமயத்தில் வெளியே குதிரை வந்து நின்ற சத்தம் கேட்கிறது. பாலாஜிதான் உள்ளே நுழைந்து வாசற்படியளவில் நின்று, ''மகராஜ்! அன்னையார் உங்களை உடனடியாக அழைத்து வருமாறு சொன்னார்கள்'' என்றான்.

சிவாஜி தமது அருமைக் காதலியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு பாலாஜியுடன் புறப்பட்டுச் சென்றார்.

பூஜ்யா அன்புடன் விடை தந்து அறிவுப்பூர்வமாக புன்னகை புரிகிறாள்.

**கா**லம் தனது சக்கரங்களை ஒரு சுதந்திர புருஷனுக்காக, இந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க முனைந்த மாவீரனுக்காக மட்டுமா

சுழற்றுகிறது? அது ஆக்ரா அரசுக்காகவும் பீஜப்பூர் சமஸ்தானத்துக் காகவும் சுழற்றிக் கொண்டுதானிருக்கிறது.

பீஜப்பூர் சுல்தானியா பேகம், நீண்ட நாட்களாகவே மெக்காவுக்குச் சென்று திரும்பவேண்டும் என்கிற ஆசையில் மூழ்கிக் கிடந்தாள். பக்கத்திலேயே ஒரு பொது எதிரியாக சிவாஜியை வைத்துக்கொண்டு எவ்வாறு புறப்பட முடியும்?

துணிந்து போர் பிரகடனப்படுத்துகிறாள்.

யுத்தத்துக்குத் தலைமை தாங்குகிற பொறுப்பினை அப்சல்கானிடம் ஒப்படைக்கிறாள். ஏறத்தாழ பத்தாயிரம் வீரர்கள் அணிவகுக்க அப்சல்கான் வெறிகொண்ட வேங்கையென புறப்பட்டு வருகிறான் என்கிற செய்தி பூனாவின் இனிய காதுகளுக்குக் கடூரமாக ஒலிக்கிறது.

இராஜ கோட்டையிலிருந்த சிவாஜிக்கு இச்செய்தி எட்டியதும், ஓங்காரமிட்டும் கெக்கலிக் கொட்டியும் சிரிக்கிறார். 'வாடா அப்சல்கான்! வா! உனது விதி முடிகிறது...!'

அன்னை ஜீஜாபாய் பெரிதாகப் பயந்து போகிறாள்.

'ஓ...வெறிகொண்ட ராட்சஸனாயிற்றே அப்சல்கான்!'

தம்மை நாடிவரும் அன்னையை அன்புடன் வரவேற்கிறார் சிவாஜி. உள்ளூர ராஜமாதா அச்சம் கொண்டிருந்தாலும் மகனை, ஊக்குவிக்க அவள் தவறவில்லை. ஒரு மகோன்னத வீரமகனைப் பெற்று எவ்வாறு வளர்த்து ஆளாக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாய்த் திகழ்பவளாயிற்றே ஜீஜாபாய்! மணந்த கணவன் ஷஹாஜி பான்ஸ்லே மகாவீரர்! பெற்ற மகனோ அதிமகா வீரனாயிற்றே!

''சிவாஜி! அப்சல்கான் திடுமென்று படைதிரட்டி வருகிறான்.''

ஜீஜாபாய் முடிக்கவில்லை.

''தெரியும். இது குறித்து ஆலோசிக்க மந்திராலோசனைகூட வேண்டுமா தாயே?''

''தேவையே இல்லை. உனது எண்ணங்களைச் சொன்னால் போதும்!''

''முதலில் நீங்கள் சொல்லுங்களம்மா! எனது எண்ணம் பிறகுதானே?''

''பூஜ்யா என்ன சொன்னாள்? அவள்தானே உனது ராஜதந்திர சூத்திரம்!''

''நான் இன்னும் அவளைப் பார்க்கவில்லை.''

''பார்த்து ராஜதந்திரமான எண்ணங்களை ஆலோசி. ஆனால் பின்வாங்காதே! படையெடுப்பு நடந்தே தீரவேண்டும்! வருகிற வழியில் நமது இந்து கோயில்களையெல்லாம் தரைமட்ட மாக்கிக்கொண்டு வருகிறானாம் அந்தப் பாவி! இவனைத் தலைமட்டமாக்கித் தரையில் சாய்த்தால்தான் நீ என் மகனாவாய்!''

ஓ... உள்ளூற கண்ட அச்சம் முழுவதும் அந்த அன்னையின் நெஞ்சத்திலிருந்து பறந்து, இப்போது அது விசுவரூபம் கண்டு மகனை வெளியேற்றுகிறது. சிவாஜியின் சாம்ராஜ்யக் கனவு விரைவில் நனவாக அந்த ஊக்கம் பயனுள்ளதாக இருந்தது.

''நல்லது மகனே! நானும் பூஜ்யாவை வந்து சந்திக்கட்டுமா?''

''தேவையில்லை அம்மா! அரசியல் அதிகாரிகளை நீங்கள் கலந்து ஆலோசியுங்கள். நாம் அவர்கள் விஷயத்திலும் அசட்டையாக இருந்து விடக்கூடாது. நான் சென்று பூஜ்யாவைப் பார்த்துவிட்டு மந்திராலோசனையில் கலந்து கொள்கிறேன். அப்சல்கான் எந்த நிலையில் வருகிறான் என்பதையறிய தேர்ந்த ஒற்றர்களை உடனடியாக அனுப்பி வையுங்கள். விளக்கு வைப்பதற்குள் திரும்பி விடுகிறேன்.''

ராஜமாதா ஜீஜாபாய் மகனை அன்புடன் வழி கூட்டியனுப்பி வைக்கிறான். ''பவானி தாயே! எனது மகனது வீரத்துக்கு இதுவரை வந்தது சோதனையல்ல; இப்போது வருவதுதான் சோதனை! நீதான் அவனருகே இருந்து துணை புரிந்து ஜயப்பதாகை நிறுவ வேண்டும்!''

என்று அந்தத் தாயுள்ளம் பிரார்த்தித்ததுடன் நேரே ஆலயம் நோக்கி நடக்கவும் செய்தது.

**பு**னிதங்கள் நடம்புரிந்து புலமைப் புன்னகை பூத்துக் குலுங்கும் பூஜ்யாவின் குடிலுக்குள் நுழைகிறார் சிவாஜி.

செய்தி கேள்விப்பட்ட நேரம் முதல் ஒன்றுமே புரியாது அலை மோதிய பூஜ்யா, இம்மாதிரியான நேரங்களில் மனத்தை ஒரு நிலை படுத்த வீணையை எடுத்து வாசிப்பது வழக்கம்.

தமிழகத்தில் பிறந்த அந்தத் தங்கச் சிலைக்கு, கர்நாடக சங்கீதம் கைவந்த கலை.

ஹம்ஸத்வனி ராகம் வீணையில் குழைகிறது.

மிக்கவும் உருக்கமான ராகம்; பிரார்த்தனைக்கு ஏற்ற ராகம்.

அதன் பிரதி மத்திய மத்துடன் இழைந்து அந்தராகாந்தாரத்தில் மோதி காகலி நிஷாதத்தைத் தொட்டுச் சுருதியிழைகிற போது...

ஆ! அந்த ஷாடவராகம் அவளிடம் சடாட்சரமாகக் கொஞ்சியது!

''பூஜ்யா!''

சிவாஜியின் குரல்.

தன்னை மறந்து வாசிக்கிறாள்.

''பூஜ்யா?''

வேற்று நேரமாக இருந்தால் பக்கத்தில் அமர்ந்து சிவாஜியும் ரசிப்பதுண்டு. இப்போது ரசனைக்கே அப்பாற்பட்ட நேரம்!

''பூஜ்யா!''

குரல் சுருதி, வீணை சுருதியிலும் மீறிக் கேட்கிறது.

அப்போது பூஜ்யா சதுஸ்ருதி - நன்கு சுருதிகளுடன் கூடிய - ரிஷபத்துடன் கம்பீரமாகிக் கொண்டிருக்கிறாள்...

தனது காதலனின் குரலைக்கேட்ட அடுத்த கணம்...

பிரதிமத்தியம் நின்று, பிரமிக்க நோக்குகிறது...

''உட்காருங்கள் பிரபோ!''

அருகே சென்று கால்மடக்கி அமருகிறார் சிவாஜி. அவரது முகத்தில் பலவிதமான கேள்விக்குறிகள்.

எதிரே சிவபெருமான் சிலையுருவில் தாண்டவமாடுகிறார்...

விரிந்து கிடக்கும் சாணக்கியரின் அர்த்தசாஸ்திர நூல்.

''பிரபோ! நான் ஏதோ பீதிகொண்டு இருப்பதாகப் பார்க்கிறீர்களே! மனவமைதிக்காக வீணையை எடுத்தேன். அப்சல்கான் வருகிறான் என்ற வருத்தமில்லை. அந்த யானையை எனது வீரமாச்சிங்கம் அடித்து வீழ்த்திவிடும். அதில் கொஞ்சமும் அச்சமில்லை. ஆனால் வருகிற வழியில் துளசிபுரத்தில் ஈஸ்வரி கோயிலையும் பண்டரிபுரத்தில் நாராயணன் கோயிலையும் இடித்துத் தரைமட்டமாக்கிச் செல்வங்களைக் கொள்ளையடித்து வருகிறானாமே அப்சல்கான்! இம்மாதிரி எதற்காகக் கோயில்களை நாசமாக்க வேண்டும் என்றுதான் மனவருத்தப்படுகிறேன். அவன் கோபம் சிவாஜி எனும் வீரனிடமிருக்க வேண்டுமேயொழிய, சிவனே என்றிருக்கும் ஆலயங்களின்மீது காட்டுவானேன்?''

சிவாஜியின் மீசையின் இருபுறமும் துடிப்பு; கண்களில் ரத்தநிறம்.

''பூஜ்யா! உனது அபிப்ராயம் கேட்டுவரச் சொன்னார்கள் அம்மா!''

''இதில் அபிப்ராயம் கேட்க என்ன இருக்கிறது. எதிர்த்துப் போரிட்டு வெற்றியடைய வேண்டியதுதான். பின் வாங்குவதாவது? அவன் பத்தாயிரம் வீரர்களுடன் புறப்படலாம். நம்மிடம் அத்தகு வீரர்கள் இல்லையா, என்ன? நாளையே யுத்த பேரிகை முழங்கட்டும்!''

சிவாஜி பெரிதாக மகிழ்ந்துபோனார். பூஜ்யாவின் சொல் மந்திரம் போன்றது. அது பலித்தே தீரும்.

‘‘பூஜ்யா! ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். ஒரு மாவீரனுக்கு ஏற்ற காதலி நீ என்பதை அனைவரும் அறிவர். அப்சல்கானை வீழ்த்த வீரத்தைக் காட்டிலும் விவேகமாக எதையாவது சாதிக்க முடியுமா என்றுதான் யோசிக்கிறேன்!’’

‘‘நீங்கள் ஒரு யோசனையும் செய்யவேண்டாம். உங்களுடன் பூஜ்யாவும் பயணமாகிறாள்.’’

தூக்கிவாரிப்போட்டுவிட்டது சிவாஜிக்கு. பூஜ்யாவும் வருகிறாளா?

‘‘நான் ஏன் வரவேண்டும் என்று யோசிக்கிறீர்களா பிரபு? காரணமாகத்தான் வருகிறேன்.’’

‘‘காரணம்.’’

‘‘கூட வருகிறபோது விளக்குவேன்.’’

சிவாஜி பெருமகிழ்வு கொள்கிறார்.

அப்சல்கான் வீழ்ந்தான் என்று அக்கணமே முடிவு செய்து கொண்டார் சிவாஜி.

-----

# 24

பொறியடக்க முடையோன், பிறன்மனை நயத்தல், பிறர்பொருள் கவர்தல், பிறர்க்குத் துன்பம் விளை வித்தல், தகாத தூக்கம், மனக் கலக்கம், பொய்மை, ஆடம்பரம், தீய வழியில் பொருள்படைத்தல் (லஞ்சம் வாங்குதல்) கேடுபயக்கும் செயல் என்னும் இவற்றை ஒழித்தல் வேண்டும்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 7).

**பி**ரதாபக் கோட்டை மலையடிவாரத்தில் பீஜப்பூர் தளபதி அப்சல்கான் தண்டு இறக்கி இருந்தான். வருகிற வழியில் எல்லாம் அவன் செய்த அக்கிரமங்களைச் செவிசாய்த்து சிவாஜியின் சேனாசமுத்திரம் பொங்கி அலைமோதிக் கொண்டிருந்தது. எத்தனை கோயில்களைச் சிதிலமாக்கினான். எத்தனை உயிர்களைப் பங்கப் படுத்தினான். மாவீரனான ஔரங்கசீப்பும் படை திரட்டிவந்தான். இந்த விதமான ஈனத்தனத்தை இந்நாள்வரை அவர் எண்ணிப் பார்த்திருக்க வேண்டுமே!

சிங்கணபுரத்திலுள்ள மகாதேவனது ஆலயத்தை நாசமாக்கிய செய்தி அப்போதுதான் பிரதாபக் கோட்டையின் செவிகளுக்கு எட்டிக் கொண்டிருக்கிறது. வழியில் சில அழகிய பெண்கள்...

சீ! அப்சல்கான் ஒரு மானுடனேயல்ல! இனவெறி பிடித்த ஒரு பயங்கரச் சைத்தான்!

சிவாஜி பிரதாபக் கோட்டையின் உச்சியிலிருந்து பார்வையிடு கிறார். பக்கத்தில் அழகு தேவதை - அன்பான காதலி - பூஜ்யாதேவியும் நின்று கவனிக்கிறாள்.

''பூஜ்யா! நாம் இப்படியே இருந்து எத்தனை நாட்களுக்குத்தான் இந்த முற்றுகை நீடிக்கிறது என்று கவனிக்கலாமே! உணவு பற்றாக்குறை வந்துவிட்டால் தன்னால் இந்தச் சைத்தான் பீஜப்பூர் நோக்கி ஓடிவிடாதா?''

''நிச்சயம் ஓடிவிடாது.''

தாடியை நீவிக்கொண்டே திரும்பிப் பார்க்கிறார் சிவாஜி. வெயில் 'சுள்' என்று உறைக்கிறது.

''என்ன பூஜ்யா அப்படிச் சொல்லுகிறாய்! ராஜதந்திர முறையில் இது ஒருவிதமான முற்றுகை நீடிப்பு! அப்சல்கானும் இந்த மலைப் பகுதியில் போராடி எப்படி வெற்றி காண்பது என்று ஆலோசித்துக் கொண்டிருப்பான்.''

கௌடலீயமாகச் சிரிக்கிறாள் பூஜ்யாதேவி.

''பிரபோ! முற்றுகை நீடிப்பு என்பது ஒரு விதமான போர் தந்திரம்தான், மறுக்கவில்லை. ஆனால் இந்தச் சூழ்நிலைக்கு பொருந்தி வராது. அவனுக்கு மட்டும்தான் உணவுத் தட்டுப்பாடு வருமா? நமக்கும் வரும். வெளியிலிருந்து நமக்கு வரவேண்டிய உணவு வகைகளுக்கு வழி என்ன? அவற்றைக் கொள்ளையடிக்க அப்சல்கானுக்கு எத்தனை நேரம் பிடிக்கும்? மேலும் நகருக்குள் கொள்ளையடிக்கப் புகுந்தால் நம்மால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? அதனை இப்போதே செய்தால் என்ன?''

''..........''

''யோசிக்கவே வேண்டாம். நாளை யுத்த பேரிகை கொட்டியே தீரவேண்டும். இந்துக்களுக்கு அவனிழைத்த தீமைகளுக்குப் பரிகாரம் தேடியே தீர வேண்டும். போரில் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். ஆனால் அப்சல்கான் தலையைக் கொய்து அநீதிகளின் காலடியில்

படைக்க வேண்டும். நாளை எவ்வாறு போர் நடத்தவேண்டும் என்பது குறித்துத் திட்டமிட எனது ஒற்றர்களில் ஒருவனான விசுவாசராவை ஃபக்கீர் வேஷமிட்டு அனுப்பி இருக்கிறேன்.''

''ஃபக்கீர் வேஷமிட்டா? அதுவும் நம்மவனையா?''

''ஆமாம். நம்மவன்தான். விசுவாசமாகத் துப்பறிந்து வருவான். அப்சல்கான் படைகளின் நிலையறிந்து வருவான்.''

''வருவான் என்பது என்ன நிச்சயம்? அவனது உயிர் திரும்ப வேண்டுமே!''

''அவன் சிவாஜி மகாராட்டின் ஒற்றனல்ல; பூஜ்யாவின் ஒற்றன்.''

கேலியாக பூஜ்யா இவ்விதம் கூறினாலும் சிவாஜி அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக் கொள்ளவும் மாட்டார். விநயமாகச் சிரித்தார்.

அன்றிரவு நன்கு ஆலோசித்து படைமுழக்கத் திட்டமிட்டனர். பத்தாயிரம் படைவீரர்களுக்கு இணையாக பத்தாயிரமோ, பதினையாயிரமோ வேண்டாம் என்று மறுத்து விட்டாள் பூஜ்யா. ஐயாயிரம் வீரர்களே போதும் என்று திட்டம் கொடுத்தாள். ஆரம்பத்தில் காலாட்படை நடந்து கொள்ள வேண்டிய விதங்களை எடுத்துரைத்தாள். ஐயாயிரம் படை வீரர்களில் மூவாயிரவர் குதிரைப் படைகளாக இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னாள். அப்சல்கான் படையில் குதிரைப்படைகளுக்கு முக்கியத்துவம் இருந்தது. மலைப்பகுதி யுத்தமாதலால் குதிரைப் படைகளுக்கு முக்கியத்துவமளித்துப் புத்திசாலித்தனமாக நடத்தி வந்திருக்கிறான் அப்சல்கான். அவன் முரடனேயொழிய, மூர்க்கனேயொழிய, இனவெறியனேயொழிய வீரத்தில் அப்பழுக்கு இல்லாதவன். ஏமாந்தால் விழுங்கி விடும் ஒரு மோசமான ராஜதந்திரி.

இரவு வெகுநேரம் விழித்துக் கொண்டிருந்த இருவரும் தனித் தனியே படுக்கைக்குச் சென்றார்கள். சிவாஜிக்கு எரிச்சலோ எரிச்சலாக இருந்தது. இங்கே அம்மா இல்லை; மனைவி மக்கள் இல்லை.

அவர்கள் வெகுதொலைவில் இராஜ கோட்டையில் இருக்கிறார்கள். ஏன்? பூஜ்யாவின் பர்ணக சாலையுமல்ல இது! அழகிய பிரதாபக் கோட்டை மாளிகை! ஏன், ஒன்றாகப் படுத்தால் என்ன?

சிவாஜி வாய்விட்டு கேட்கவும் செய்தார். ''பூஜ்யா! இது என்ன உனது பர்ணக சாலைக் குடிலா? அழகிய மாளிகை, ஒன்றாகப் படுத்தால்தான் என்ன?''

பூஜ்யா பொய்யான வெறுப்புடன் கூர்ந்து கவனிக்கிறாள்.

''நான் ஒன்றாக என்றது ஒரே அறையில்! படுக்கைகள் தனித் தனியாகத்தான். நாம் களங்கமற்றுத்தான் உறங்குவோம். மனத்துக்கு ஓர் இதமாக இருக்குமே என்றுதான்'' சிவாஜி மழுப்புகிறார்.

''என் மனத்துக்கு அது இதமாகத் தெரியவில்லையே!''

'என்ன மனமோ; புரியாத மனம்' என்று உள்ளுக்குள் முணு முணுத்துக் கொண்டார் சிவாஜி. வெளிப்படையாகத் தலைகுனிந்து கொண்டார்.

பூஜ்யாவுக்கு என்னவோ போலாய்விட்டது.

''பிரபோ! நமது உடலுறவு உங்கள் மகுடாபிஷேகத்தன்று. வேண்டுமானால் அப்சல்கானை வென்று திரும்புங்கள். நீங்கள் ஆசை வைத்தது போல தனித் தனிப் படுக்கையில் ஒரே அறையில் உறங்குவோம். போதுமா?''

மீண்டும் நரம்புகள் பழைய நிலைக்கு வந்தன. அவர் 'நிஜந்தானே?' என்பது போலப் பார்க்கிறார். அந்தப் பார்வையைப் புரிந்து கொண்ட பூஜ்யா, மெல்ல அவர் தாடையை அன்புடன் முதல் தடவையாகத் தட்டுகிறாள்!

ஆ! என்ன கிளுகிளுப்பு! உடம்பே புல்லரிப்பு கண்டது.

**ம**றுநாள் இளஞ்சூரியன் கிழக்கு வானை முத்தமிடுகிறபோது...

அப்சல்கான் பதறியடித்துக் கொண்டு படுக்கையிலிருந்து எழுந்தான்.

ஆ... ரத்த ஞாயிறு என்று மகாராஷ்டிர மக்களால் வருணிக்கப் பட்ட இந்துமத ராட்சஸன் முரசம் கொட்டிவிட்டான்...

படைத்தளபதிகளின் இயக்கம் சுறுசுறுவென்று காணப்பட்டது.

இஸ்லாமிய வீரர்களும், அவர்கள்பால் ஐக்கியமான இந்து வீரர்களும் பரபரவென்று ஆயத்தமாகிறார்கள்...

திடகாத்திரமான தமது வெண்ணிறப் புரவி மீது அமர்ந்து படைகளைக் கிளம்ப ஆணை பிறப்பிக்கிறார் மாவீர திலகம் மகாராஷ்டிர புரட்சித் தலைவர் வீரசிவாஜி.

அவர் அன்றைக்கு முழுவதுமே வெண்ணாடை. தலைப்பாகை இயல்பான வெண்ணிறம். பொன் சரிகை காலைக்கதிரவன் கிரணங்கள் பட்டு பளபளக்கின்றன.

சிவாஜி போர்க்களம் நோக்கித்தான் புறப்படுகிறாரா? இல்லை காதல் களம் நோக்கிப் புறப்படுகிறாரோ? என்று ஐயப்படுகிற மாதிரி ஒரு மாப்பிள்ளைக்கோலம்...

யுத்தகளம் அவருக்கு ஒரு காதல் பூஞ்சோலை மாதிரிதானே...?

அந்தப் புன்னகையே அதனை மெய்ப்பிக்கிறது...

பூஜ்யா புன்னகை புரிந்து வழிகாட்டி வைக்கிறாள்...

படைகள் பெருத்த கோஷத்துடன் நடக்கின்றன.

குதிரைப்படைகள், ஒருவித புதுத்தெம்புடன் அணிவகுத்துச் செல்கின்றன. ஒரே சீரான குளம்பு ஓசைகள்...

**பி**றைக்கொடி பறக்கிறது...

‘வா மகனே சிவாஜி, வா!’ என்று அழைப்பதுபோல படபடத்துப் பறக்கிறது...

படைகள் மோதுகின்றன...

‘‘வெட்டி வீழ்த்துங்கள்’’ என்று பேய் மாதிரி அலறிக் குரல் கொடுக்கிறான் முகலாயப் பெருவீரன் அப்சல்கான்!

ஆனால் சிவாஜி மட்டும் யுத்த களத்தில் இறங்கவில்லை. அவர் தொலைவாகப் புரவி சகிதமாய் நின்று பார்வையிடுகிறார். ‘ஓ, அப்சல்கான், நான் யுத்தகளத்துக்கு ஒரு மாப்பிள்ளை மாதிரிதான் விஜயம் செய்திருக்கிறேன். என்னைப் பார்த்தால் புரியவில்லை?’ என்பது போல முறுவலிக்கிறார்.

மகாராஷ்டிர சேனைகள் அரக்கத்தனமாக வாளேந்தியும் ஈட்டியேந்தியும் பாய்ந்து போரிடுகின்றன. சிவாஜிப் படையைச் சார்ந்த இஸ்லாமிய வீரர்கள் கொஞ்சம்கூட எந்தவிதப் பற்றும் வெறியுமின்றித் தங்கள் தலைவன் சிவாஜிக்கு ஆற்றுகிற தொண்டு போலவே போரிடுகிறார்கள். இது போலவே அப்சல்கான் பக்கமிருந்த இந்து வீரர்களும் தூய நெஞ்சுடன் போரிடுகிறார்கள். அங்கே மானுடம் தலைதூக்கி நிற்கிறதே யொழிய மதங்கள் ‘தலைதூக்கி நிற்கவில்லை’. பொதுவாக இந்த மனிதர்களுக்குப் போர் தேவையா என்கிற எண்ணம் எந்த மானுடனுக்கும் தோன்றவில்லை. அக்கால வழக்கில் போர் தேவையான ஒன்றாகிவிட்ட நாகரிகம். எப்போதைக்கும் அது தேவையானதுதான், அது தேவையற்றது என்று அறிவுப்பூர்வமாக விவாதித்து நிறுத்தி மானுடர்களை ஒன்றுபடச் செய்து ஆத்மீக சித்தாந்தத்துக்குக் கொண்டு போக, எத்தனையோ மகான்கள் அரும்பி தியாகம் செய்தால்கூட அது நிற்குமா?

நிச்சயம் நிற்கப் போவதில்லை என்கிற மாதிரி அப்சல்கான் படையும் சிவாஜி படையும் மோதுகின்றன.

துப்பாக்கிகளும் பீரங்கிகளும் வெடிச் சிரிப்பு சிரித்து குண்டு மொழி பேசிக் கொண்டிருக்கின்றன.

ஏதேனும் குண்டு தங்கள் தலைவர் சிவாஜி மீது பாய்ந்து விடுமா என்பதில் பாலாஜி மிகவும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறான். பூஜ்யா அவனிடம் பல விஷயங்களை எச்சரித்து அனுப்பி இருக்கிறாள்.

கதிரவன் மலைவாயில் விழுந்து கொண்டிருக்கிறான்.

அன்றைய போர் அத்துடன் நிறைவு பெறுகிறது.

அன்றைய போர் முழக்கத்தைப் பற்றி துருவித் துருவிக் கேட்கிறாள் பூஜ்யா. இரு தரப்பிலும் யாருக்கு அதிகப்படியான சேதம் என்பதை அந்த ஒரு நாளில் கணக்கிட்டுக் கூறுவது இயலாத

காரியமேயானாலும் அதில் ஏதோ ஒரு பிடிப்பை எதிர்பார்த்து பாலாஜியை குடையோ குடை என்று குடைந்துவிட்டாள் சிறந்த ராஜதந்திரியும் அறிவு ஜீவியுமான பூஜ்யாதேவி.

ஒவ்வொரு நாளும் யுத்தகளத்தில் பல உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. இதனைக் குறிப்பெடுப்பதற்கென்றே விசுவேசுவரராவை ஏற்பாடு செய்திருந்தாள் பூஜ்யா. பாவம் பாலாஜி! அவன்தான் என்ன செய்வான்? சிறந்த மாவீரனான பாலாஜி யுத்தம் புரியவே நேரம் சரியாக இருக்கிறது! யுத்தகளத்தையா கணக்கெடுப்பான்? ஆனால் ஒரு விஷயத்தை மிக்கவும் கவனமாகப் பாதுகாத்தான். அது தனது தலைவன் சிவாஜியின் பெறற்கரிய உயிர்!

ஒருமாத யுத்தத்தில் இருதரப்புக்கும் சமமாகவே உயிரிழப்புகள் காணப்பட்டன. அதுவரையும் சிவாஜி களத்தில் இறங்கவில்லை.

பூஜ்யா தனது கணக்கில் தவறிவிடுவதாக நினைக்கிறாள். எதிரிகளிடம் பத்தாயிரம், அவளோ ஐயாயிரம் போதும் என்று கணக்கிட்டு இருக்கிறாள். மேலும் படைகள் தயாராக இருந்தாலும் இழப்புக்கு அவள் இடந்தரச் சம்மதிக்கவில்லை.

சிந்தித்துப் பார்த்தாள்.

சிவாஜியை போர்க்களத்தில் இறக்கவேண்டியதுதான். ஒரு சிவாஜி யுத்தகளத்தில் இறங்கினால்...

ஒவ்வொரு வீரனும் சிவாஜியாக மாறுகிறபோது...

ஒவ்வொருவரும் பலருக்குச் சமமாகிறார்கள். ஆ! இதனை முன்கூட்டியே செய்யத் துணியாததை எண்ணி இப்போது வருந்தினாள்.

அடுத்த நாள் போர்க்களத்தில் மாவீர சிவாஜி, பவானியெனும் வாளேந்தி யுத்தகளத்தில் குதித்துவிட்டார். அதுவரை சிவாஜி யுத்தகளத்தில் குதிக்காதது அப்சல்கானுக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்று திடுமென்று குதித்துவிடவே அதிர்ச்சி நிறைந்த ஆச்சரியம்.

மாலை முடிவதற்குள் போர்க்களம் அதாகதமானது.

அன்றைய போர் முடிந்ததும் பூஜ்யாவின் ஆலோசனைக்கு கீழ் கணக்கு வருகிறது. இன்றைய போரில் அதிகப்படியான சேதம் அப்சல்கான் படைக்குத்தான் என்று தெரியவந்தபோது வெற்றி உறுதி என்று தீர்மானிக்கிறாள் பூஜ்யா.

மறுநாள் போரில் மேலும் ஈராயிரம் குதிரை வீரர்களை இணைத்து அனுப்புகிறாள். இவர்கள் இப்போது பல்லாயிரவர்க்குச் சமம். அந்தக் குதிரைகளுக்கு நடுநாயகமாக சிவாஜியின் வெண்குதிரை!

எண்ணிப் பத்தே நாட்களில் அப்சல்கான் படை அதிகப்படியான பலவீனத்தைக் கண்டது.

**த**னது கூடாரத்தில் ஒரு வெறிகொண்ட வேங்கை போல உலவுகிறான் அப்சல்கான்.

படைத்தளகர்த்தர்கள் பதவிசாக நின்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை என்ன கலந்து ஆலோசிப்பது என்கிற மாதிரி இருக்கிறது அப்சல்கானின் அலட்சியம் நிறைந்த அந்த வேக நடை.

அடுத்து என்ன செய்வது? அடுத்து என்ன செய்வது? என்பது குறித்து மண்டையைப் பிய்த்துக் கொள்கிறான் அப்சல்கான். இத்தனைக்கும் காரணம் சிவாஜிக்குப் பின்புலமாக நின்று ராஜதந்திர உபதேசம் செய்யும் ஒரு பெண் என்பதையும் பூரணமாக உணர்ந்திருந்தான் அப்சல்கான்.

பீஜப்பூரில் ஔரங்கசீப்பைச் சந்தித்துப் பேசியபோது இந்தப் பெண் - பூஜ்யா - சிவாஜியின் காதலி குறித்து நிறையவே கேள்விப் பட்டிருந்தான். ஔரங்கசீப்பையே மயக்கிய பேரழகு என்பதை ஔரங்கசீப் வருணித்த வர்ணிப்பிலிருந்து புரியவந்தது. அப்சல்கான் இப்போது பூஜ்யா குறித்துச் சிந்திக்கிறான். எப்படியாவது அவளை அபகரித்துக் கொண்டு வந்துவிட்டால் அவளை வைத்து சிவாஜியை மடக்கிவிடலாம். அடிமை சாசனம் எழுதி வாங்கிக் கொள்ளலாம். எந்த

விதத்திலும் பூஜ்யாவை சிவாஜி இழக்கச் சம்மதிக்கவேமாட்டான். அதைவிட தனது நாற்பது கோட்டைகளை இழப்பான்; சுயராஜ்யக் கனவை இழப்பான்; ஏன்? தனது உயிரையே இழப்பான்; சத்தியமாக பூஜ்யாவை இழக்கச் சம்மதிக்க மாட்டான்.

பூஜ்யாவைப் பெற அவன் எப்படியும் தூது வருவான். ஒப்பந்தங்களை பேசி முடிப்பது சுலபமான காரியம். ஒன்று அடிமை சாசனம். சந்தர்ப்பம் சரியாகக் கிடைத்தால் சிவாஜியை வெட்டி வீழ்த்திவிட்டு பூஜ்யாவைச் சிறையெடுத்துக் கொண்டு பீஜப்பூர் நோக்கிப் புறப்பட்டுவிட வேண்டியதுதான். பின்னர் இந்த மகாராஷ்டிரர்களுக்கு எதை விரித்து எப்படி அவர்களை இழுப்பது என்பது அப்சல்கானுக்குத் தெரியும்.

அதற்கு வழி என்ன?

''நஸரத்! நீங்கள் எல்லாரும் செல்லலாம். எனது அந்தரங்கச் செயலாளன் ஷேர்ஆப்கானை நான் உடனடியாக வரச் சொன்னதாகச் சொல்!''

கடுமையான உத்தரவைக் கேட்டு தளகர்த்தகர்கள் விடை பெற்றனர். சற்றைக்கெல்லாம் ஷேர்ஆப்கான் உள்ளே நுழைந்து மண்டியிட்டு சலாம் வைக்கிறான்.

''ஷேர்ஆப்கான்! நாளைக்கு உனது உயிர் பிரியப்போகிறது.''

''அல்ஹம்து லில்லாஹ்!'' என்கிறான் ஷேர்ஆப்கான்!

ஆ! எத்தனை நன்றியுள்ள விசுவாசி இவன்! நாம் சொல்வது துக்ககரமான செய்தி. இச்செய்தி கேட்டதும் இஸ்லாமிய வேத மரபுப்படி 'லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்' என்று சொல்வதற்குப் பதிலாக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைக் கேட்டால் சொல்ல வேண்டியதையல்லவோ இவன் சொல்லுகிறான்! தன் உயிரை நமக்காக பணயம் வைப்பதில் இவன் மகிழ்ச்சி கொள்கிறான் போலும்! நன்றியுள்ள விசுவாசி!

''ஷேர்ஆப்கான்! நாளை நீ பிரதாப கோட்டையிலிருக்கும் சிவாஜியின் காதலியான பூஜ்யாவை கடத்தி வரவேண்டும். மலைக்குச் சென்று கடத்தி வருவது என்பது துர்லபமான விஷயம். யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறபோது எப்படிப் போவாயோ! பூஜ்யாவைச் சந்தித்து போர்க்களத்தில் சிவாஜி மாண்டு விட்டார் என்கிற செய்தியைச் சொல்ல வேண்டும், பொய்யான செய்திதான். அதைக் கேட்டு அவள் மலையை விட்டு இறங்கி வருவாள். அவளை எப்படிக் கடத்தி வருவது என்பது எனக்குத் தெரியும். சிவாஜி உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொல். தனியான இடத்தில் கொலையுண் டிருப்பதாகச் சொல். துணைக்குப் பாலாஜி நின்றிருப்பதாகச் சொல்! நீ யார் என்று கேட்டால் இந்த லாஞ்சினையைக் காட்டு. இது எப்படி கிடைத்தது என்றால் பாலாஜி கொடுத்ததாகச் சொல்!''

சிவலாஞ்சனையைப் பெற்றுக் கொண்ட ஷேர்ஆப்கான், அதனை உற்றுக் கவனிக்கிறான்.

''இது எனக்கு எப்படிக் கிடைத்ததென்று பார்க்கிறாயா? எனக்கு நீ மட்டும்தான் அந்தரங்கச் செயலாளன் என்பதில்லை. இன்னும் பலர் இருக்கிறார்கள். அவர்களில் நீ தியாகி என்று நிரூபிக்க வேண்டும். உயிர் பிரியப் போகிறதென்றும், தியாகி என்றும் ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? நீ மலையைக் கடப்பதற்கு லாஞ்சனை துணை புரியலாம். நீ நடிப்பதில் கொஞ்சம் தவறினாலும் உனது உயிர் உன்னிடம் இருக்காது. அத்தனை ராஜதந்திரி பூஜ்யா! கவனம்.''

மீண்டும் மண்டியிட்டு சலாம் செய்து புறப்படுகிறான் ஷேர் ஆப்கான்.

ஆ! பூஜ்யா மட்டும் கிடைத்துவிட்டால்...

சிவாஜி வீழ்ந்தான்!

பூஜ்யா என்கிற அழகை அங்கம் அங்கமாக ரசிக்கலாம்; புசிக்கலாம்; அவளுடன் வசிக்கலாம்!

வசிப்பாளா? ஒப்புக்கொள்வாளா? வழியா இல்லை!

ஒப்புக் கொண்டால் உருப்படியான வாழ்க்கை.

மறுத்து அடம் பிடித்தால் விலங்கிட்டு, அவள் தற்கொலை செய்து கொள்ள முடியாத அளவுக்குச் செய்துவிட்டு அனுபவிக்க வேண்டியதுதான்.

இந்த அப்சல்கான் ராஜதந்திரியா? அவள் ராஜதந்திரியா என்பதைப் பார்த்துவிட வேண்டியதுதான்.

-----

# 25

ஒழுக்கமில்லாத அரசு விரைவில் கேடு அடையும்.

போசகுலத்துத் தாண்டாக்கியன் (சுக்கிரன் புதல்வியைக் கற்பழித் தவன்), விதேக நாட்டுக் காராளன் (பிராமணப் பெண்களை லஞ்சமாகக் கேட்டுக் கற்பழித்தவன்), சனமே சயன், தாலசங்கன், அயிலன், அசபிந்து, இராவணன் இவர்கள் பெண்ணாசையோடு ஆட்சியில் செய்த அக்கிரமங்களால் அழிந்து பட்டனர். (ஆட்சியில் அமருகிறவர் கள் பெண்களைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்பது கருத்து).

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 6).

**யு**த்த களத்தில் அப்சல்கானுக்கு இருப்பு கொள்ளவில்லை. அன்றைய யுத்தத்தில் அவன் அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அவனது நினைவு முழுவதும் பிரதாபக் கோட்டையில் இருந்தது. ஷேர்ஆப்கான் மீது இருந்தது. பூஜ்யா தேவியின் மீது இருந்தது. எப்படியாவது அவளை அவன் மலையை விட்டு இறங்கச் செய்துவிட்டால் ஏறத்தாழ ஐநூறு வீரர்கள் மறைவாகக் காத்திருக்கிறார்கள். எப்படியும் அவனைக் கடத்தி வந்து விடுவார்கள்.

அப்சல்கான் சோர்வைக் கவனித்த சிவாஜியின் படைவீரர்கள், ‘ஓ... அப்சல்கான் தலையைத் தொங்கப்போட்டு விட்டான்; இன்னும் முழு மூச்சுடன் போராடினால் இரண்டு மூன்று நாட்களில் யுத்தம் ஓய்ந்துவிடும். பீஜப்பூர் படை இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து போகும்...! என்றெண்ணி மகிழ்ந்தனர்.

பாலாஜியும் சேனாதிபதி கிருஷ்ணாஜி பாஸ்கரும் போர் வீரர்களை ஊக்குவிக்க மேலும் முன்னேறுகிறார்கள்.

அப்சல்கான் இது குறித்துக் கவனிக்க வேண்டுமே...

ஷேர்ஆப்கான் என்னவானான்?

அவன் இப்போது பிரதாப கோட்டை மலையில் ஏறிக் கொண்டிருந்தான். ஆயினும் அவனது சிந்தனை சற்று உள்ளார்ந்து சிந்தித்தது. அப்சல்கான் எதிலும் முன்யோசனையின்றி உத்தரவு கொடுத்து விடுவான். சிவாஜி சேனையில் அத்தனை முக்கியஸ்தர் களை விட்டு, அவரது மரணச் செய்தியை ஒரு முன்பின் தெரியாதவனிடமா சொல்லியனுப்புவார்கள்? பூஜ்யா என்கிற அந்த மகாமேதாவியான மாதுதான் நம்ப வேண்டாமா?

இதற்கு என்ன வழிகாண்பது?

எப்படி நம்பும்படியாக ஜோடிப்பது?

ஆ! இப்படிச் செய்தால் என்ன?

மலைப்பகுதியான அந்த இடத்தில் சூரியன் தனது சூட்டுக் கோலை நன்றாகவே தீட்டிக் கொண்டிருந்தான்.

ஷேர்ஆப்கானுக்கு வெளியில் உஷ்ணம் ஒரு பிரதானமா? தனது தலைவனிட்ட ஆணையை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து எழுந்த சிந்தனையில் முகிழ்த்த அந்தத் தீர்மானம் படுபயங்கரமான உஷ்ணமாயிற்றே!

ஓர் மறைவிடத்துக்குச் சென்று மறைந்து கொண்டு, தான் சிந்தித்தது சரிதானா என்று பரிசீலித்துப்பார்க்கிறான். அதன்படி நடந்தால் காரிய சித்தியாகுமா? அல்லது காரியம் கெட்டு விடுமா?

கெட்டுவிட்டாலும் கிடைக்கப்போவது கொலை தண்டனையானாலும் அவன் செய்து கொள்ளவிருந்த கொலைச் சிந்தனைக்காக அவன் அஞ்சவில்லை. இதன் மூலம் தலைவனது எண்ணம் நிறைவேறினால் மிகுந்த மகிழ்ச்சியாயிற்றே என்று அவனது விசுவாசம் நிறைந்த நெஞ்சு எண்ணிப் பார்த்துக் கொள்கிறது.

மனத்தில் தீர்க்கமான முடிவு அரும்புகிறது. போகிற உயிர் எப்போது போனால் என்ன?

இடுப்பிலிருந்த குத்துவாளை உருவி ஒருகணம் நோக்குகிறான்.

அல்லாஹ் என்ற அந்தப் புனிதம் நிறைந்த ஆண்டவனை இறைஞ்சுகிறான். ‘‘எனது இந்தத் தியாகம் தலைவனுக்கு நல்லதை நல்கட்டும்!’’

தன்னை மறந்து குத்துவாளை வயிற்றில் செருகிக் கொள்கிறான். அப்படிச் செருகிக் கொள்கிறபோது உயிர் ஓர் அரைநாள் போதுவரையாவது நிலைத்து நிற்கிற அளவுக்குச் செருகிக் கொள்கிறான். செருகிய குத்துவாளை எடுக்கவில்லை. எடுத்தால் உடனடியாக உயிர் பிரிந்தாலும் வியப்பதற்கில்லையல்லவா!

ரத்தம் குபுகுபு என்று கொட்டி மெல்ல அடங்குகிறது. குத்துவாளை முழுவதுமாக எடுத்து விட்டால் இருக்கிற ரத்தம் வெளியாகிவிட்ட பிறகு அல்லவா நிற்கும்? அத்துடன் உயிரும் நின்று விடுமே!

இப்போது ஷேர்ஆப்கான் கொஞ்சமும் பயமின்றி வெளிப்பட்டான். கொலையுண்டு வருகிறவன் என்கிற பரிதாபமோ அனுதாபமோ பார்ப்பவர்களுக்கு இருக்குமல்லவா? போதாக் குறைக்குக் கையில் சிவலாஞ்சனை இருக்கிறது. எப்படியும் செல்கிற காரியம் முழுமை பெறும் என்கிற நம்பிக்கை அவனுள்ளிருந்தது.

அவன் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. மலைக் கோட்டையின் ஆங்காங்கே காவல் புரிந்த வீரர்கள் ஓடோடி வந்து கவனிக்கிறார்கள். அவர்கள் கண்களில் வியப்புக் குறிகள்; அத்துடன் கேள்விக் குறிகள்.

தங்கள் மகாராஷ்டிர மொழியில் ஏதேதோ கேட்டு அவனிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறார்கள். ஒருவனுக்கும் அவன் பதில் சொல்லவேண்டுமே! ஆயினும் மலைமீது நடந்து கொண்டே இருக்கிறான்.

இதற்குள் கோட்டைத் தலைவன் அரக்க பரக்க ஓடி வருகிறான். யாரிவன்? காவலை மீறி வந்து கொண்டிருக்கிறான்.

''நீ யார்? உன்னை யார் கத்தியால் குத்தியது?''

மிகுந்த அதட்டலுடன் கேட்கிறான் கோட்டை பாதுகாப்புத் தலைவன்.

வயிற்றைப் பிடித்துக்கொண்டே அண்ணாந்து கவனித்த ஷேர் ஆப்கான், ''உங்களிடம் எது குறித்தும் பேசுவதற்கில்லை. பூஜ்யா தேவியம்மாளிடம் விரைவாக என்னைக் கொண்டு போய் சேருங்கள்'' என்று தெளிவான உருது மொழியில் பதில் சொன்னவன், அடுத்து சிவலாஞ்சனையை எடுத்துக் காட்டுகிறான். அந்த லாஞ்சனையைப் பார்த்த பிறகு எவரும் வாய் திறக்க முடியுமா!

ஷேர்ஆப்கானை கொண்டு செல்கிற முயற்சிகள் சுறுசுறுவென்று நடைபெறுகின்றன.

சிறிது நேரத்துக்கெல்லாம், ஷேர்ஆப்கானை பணியாளர்கள் தூக்கிச்சென்று பூஜ்யாதேவியின் மாளிகையில் சேர்ப்பிக்கிறார்கள்.

கேள்விப்பட்ட பூஜ்யாதேவி ஓடோடி வருகிறாள். கவனிக்கிறாள். ''இவன் செய்தி சொல்வது இருக்கட்டும். மனிதாபிமானப்படி வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள்.''

''தேவி! நான் பிழைப்பது பிறகு இருக்கட்டும். செய்தி முக்கியம். தனித்துப் பேச வேண்டும்'' என்றான் ஷேர்ஆப்கான் உருது மொழியில்.

பூஜ்யாதேவியும் ''என்ன விஷயம்? தனித்துப் பேச வேண்டிய அளவுக்கு அது முக்கியமானதா?'' என்று உருதுவில் கேட்கிறாள்.

''அதி முக்கியமானது.''

அறைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கிறாள். ''உடன் கோட்டைத் தலைவனிருக்கலாம் அல்லவா?''

''ஒருவரும் இருக்கக்கூடாது.''

கோட்டைத் தலைவனும், மற்றவர்களும் ஐயக்கண்களுடன் கவனிக்கிறார்கள்.

கோட்டைத் தலைவரும் ஏனையவர்களும் முதலில் பயந்தாலும், பிறகு ஏதும் பேசிக்கொள்ளவில்லை. ஆயினும் உள்ளுக்குள் மருட்சி இருந்தது. பதில் சொல்லக் கூடியவர்களாயிற்றே! எனவே மிக்க கவனமாக இருந்தனர்.

கதவை மட்டும் பூஜ்யா தாழிடவில்லை. வந்தவன் செத்த பாம்பு மாதிரிதானே!

தனியறையில் குத்துப்பட்ட இடத்தில் கையை வைத்துக் கொண்டே சுவரில் சாய்ந்திருந்த ஷேர்ஆப்கான், பேச்சை எவ்வளவு சாதுரியமாகப் பேசி முடிக்க வேண்டுமோ அவ்வளவு சாதுரியத்துக்குத் தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தான்.

உள்ளே நுழைந்த பூஜ்யாதேவி அவனை ஒருவாறு மேலோட்டமாகக் கண்ணோட்டமிடுகிறாள். இவன் யார்? இவன் சொல்லப் போகிற செய்தி என்ன? கொலையுண்டு கிடக்கிறான்! யார் கொலை செய்தார்கள்?

''உன் பெயர்?''

''அப்துல் ரஹ்மான்.''

''நீ சிவாஜியின் படையைச் சார்ந்தவனா? பீஜப்பூர் படையைச் சார்ந்தவனா?''

''உங்கள் உப்பைத் தின்று கொண்டிருப்பவன். தலைவரின் ரகசிய ஒற்றர்களில் நானும் ஒருவன். என் மாதிரி பலபேர் போர்முனையில் பல பக்கம் நின்று பார்வையிட்டு வருகிறோம். தலைவருக்கு ஏதும் ஏற்பட்டு விடக்கூடாது என்று!''

‘‘ஓகோ! இப்போது உனக்கு ஏற்பட்டதென்ன?’’

‘‘கொலை.’’

‘‘அது தெரிகிறது. எப்படி?’’

‘‘அதுதானே நான் சொல்ல வந்த செய்தி!’’

‘‘சொல்! உயிர்போய்விடும் போலிருக்கிறது.’’

‘‘நிச்சயம் போகாது.’’

‘‘போகாதா? போகாதவாறு உன்னைக் குத்தியிருக்கிறார்கள்?’’

கேள்வி ஒருகணம் ஷேர்ஆப்கானை உலுக்குகிறது. நாம் சொல்லில் போலித்தன்மையைக் கலப்பது தெரிகிறதோ?

‘‘தேவி! செய்தியைக் கூறி முடித்த பிறகுதான் உயிர் பிரியும் என்பதற்காக அவ்வாறு சொன்னேன். ஏனென்றால் அந்த உப்பு - இதுவரை தின்ற உப்பு என் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கும்!’’

‘‘நீ இன்னும் வந்த விஷயம் பேசாமல் ஏதோ உப்பு சப்பு இல்லாத விஷயம் குறித்துத்தான் பேசுகிறாய். அதனால்தான் நான் சொன்னேன்; உயிர் போய்விடப் போகிறது என்று, உப்புக்கே சப்பென்றாய் விடக்கூடாதல்லவா? இப்போதாவது சொல்!’’

‘‘எப்படிச் சொல்வதென்றுதான் புரியவில்லை. மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். தலைவர் சிவாஜி மகாராஜாவும் என் நிலையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்?’’

‘‘என்னது?’’

‘‘கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொடியவன் அப்சல்கான் போர் நடந்து கொண்டிருந்தபோதே தனித்து பேட்டி காண விழைந்தான். ஒரு சமாதானப் பேச்சை பூர்வாங்கமாகப் பேசி முடித்துக் கொண்டு உடனடியாகப் போரை நிறுத்தி, இரவு ஒப்பந்த உடன்படிக்கையும் செய்து கொள்ளலாம் என்று ரகசிய தூது அனுப்பினான். நம் மகாராஜா முதலில் தயங்கினாலும் பிறகு சம்மதித்து பேட்டிக்காகச் சென்றார். அப்சல்கான் மூர்க்கத்தனமாக

அணைப்பதுபோல அணைத்து, தனது குத்துவாளை எடுத்துச் செருகி விட்டான். நான் உடனே மறைவிலிருந்து பாய்ந்தேன். என்னையும் தீர்த்துவிட்டான்.''

முதலில் கலங்கிப் போனாலும் பிறகு ஆழ்ந்து கவனிக்கிறாள்.

''அப்சல்கானிடம் எப்போதும் இரண்டு குத்துவாள் களிருக்குமா?''

''மூன்றுகூட இருக்கும்!'' உடனடியாக அவன் பதில் சொன்னாலும் பொய்யை மெய்போலச் சொல்ல மறந்தது குறித்து மனப்பல்லை கடித்துக் கொண்டான். மூன்று குத்துவாட்களா? ஏனிருக்கக்கூடாது?

''இப்போது சிவாஜி எங்கே இருக்கிறார்?''

''மலையடிவாரத்திலிருக்கும் கற்பாறைக் குகையில்.''

''அங்குதான் பேச்சு நடந்ததா?''

''ஆம்?''

அப்சல்கான் மலையடிவாரத்துக்கு வந்து பேசினானா?

''உடனடியாகப் பெரிய உத்தியோகஸ்தர்களிருக்க உன்னிடம் - அதுவும் கொலையுண்ட உன்னிடம் செய்தி சொல்லி யனுப்புவானேன்?''

''போர் நடந்து கொண்டிருக்கிற வேளையில், மகராஜ் கொலையுண்டார் என்கிற செய்தி பரவுமேயானால், நமது வீரர்கள் பலவீனமடைந்து சிதறியோடத் தொடங்குவார்கள். அப்சல்கான் இதனை வைத்து முன்னேறிவிடக்கூடாது என்பதற்காக என்னையனுப்பினார்.''

''இப்போது மட்டும் அப்சல்கான் செய்தியைப் பரப்பிவிடாமல் இருப்பாரா?''

''நம்பமாட்டார்கள். செய்தி சரியான இடத்திலிருந்து வர வேண்டுமல்லவா?''

''இப்போது உன்னையனுப்பியதன் காரணம்?''

''உயிர் எந்த நேரத்திலும் பிரியலாம். அதற்குள் உங்களை ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்று துடிக்கிறார். இச் செய்தியை ரகசியமாக உள்ளடக்கித் தொடர்ந்து போர் நடக்கட்டும் என்று கூறத்தான் தேவி!''

''ஓகோ!''

மீண்டும் சிந்தனையில் மின்னல்கள்! ஷேர்ஆப்கானைக் கூர்ந்து பரிசீலிக்கிறாள்.

''நீ மலையடிவாரம் இறங்குகிறவரை உயிருடன் இருப்பாய் அல்லவா?''

''நிச்சயமாக!''

''உப்பு உன்னைக் காக்கும். இல்லையா?''

''ஆமாம்; தேவி!''

''அது உன்கைக் காக்கட்டும். தட்டுத் தடுமாறி எப்படியாவது மலையடிவாரத்தையடைந்து, கற்பாறைக் குகையுள் நுழைந்து, சிவாஜி மகாராஜனைப் பார்த்து செத்து மடியச் சொல்! போர் நிற்காது நடக்கும். கற்பாறைக் குகைக்குள் அவர் இறந்ததும் ஒரு மூலையில் அவரது பிணத்தைத் தூக்கிப்போட்டு மறைத்து விடு! நீயும் பிணக்காவலாக அங்கேயே சாய்ந்துவிடு. போ! சீக்கிரம் போ!''

''தேவி!''

''எனது சிவாஜியைக் கொலை செய்ய இன்னொருவன் பிறக்க வேண்டும். மேலும் அப்சல்கான் கூப்பிட்டதும் சென்றுவிட அப்சல்கானைப் போன்ற முன்யோசனையற்றவர் அல்ல எங்கள் சிவாஜி. வீரனே! இந்தப் பொய்யை பூஜ்யாவிடம் போய் சொல் என்று உன்னை அனுப்பினானே அப்சல்கான், அவன் தலையில் இருப்பது களிமண் என்று நான் சொன்னதாகச் சொல்.''

''தேவி.''

‘‘தூ! உன்னை இந்த அளவு மன்னிப்பது உனது எஜமான விசுவாசத்துக்காக! இப்படிச் சொன்னால் பொய் மெய்யாகும் என்று யோசித்து உன்னை நீயே கொலை செய்து தியாகம் செய்து கொண்டாயே, அதற்காகப் பாராட்டி மன்னிக்கிறேன். என்னிடம் மட்டும் இந்தச் செய்தியைச் சொல் என்று அப்சல்கான் அனுப்பினான் என்றால் அது என்னைப் பறிப்பதற்காக! இல்லை? பூஜ்யா என்பவள் மண்ணில் பூத்த மலர் அல்ல, திருட்டுத்தனமாகப் பறித்துவிட! அவள் விண்ணில் பூத்த மலர்! நட்சத்திரம்! அவ்வளவு எளிதில் பறித்துவிட முடியாது என்று அப்சல்கானிடம் சொல்! யாரங்கே!’’

குரல் ஓங்கி ஒலிக்கிறது!

கோட்டைத் தலைவரும், ஏனைய வீரர்களும் ஓடோடி வருகிறார்கள்.

‘‘இந்த இஸ்லாமிய விசுவாசியை எந்தவிதப் பங்கமுமின்றி பத்திரமாக விட்டுவிட்டுத் திரும்புங்கள். இவனது உயிர் அப்சல்கானைச் சந்திக்கிறவரை நிலைத்து இருக்க வேண்டும். அப்சல்கான் உப்பு வேலை செய்யும்! ஆனால் இவனது விசுவாசம் நிறைந்த ரத்தத்துக்காக இவனை இறக்கிவிட்டதும், ஒரு சலாம் வையுங்கள். இவனுக்கல்ல, விசுவாசத்துக்கு!’’

ஓ... இவள்தான் பூஜ்யாவா?

ஷேர்ஆப்கான் நடுநடுங்கிக் கவனிக்கிறான்.

அவனைப் பத்திரமாக அழைத்துச் செல்வதில் ஈடுபடுகிறார்கள் மகாராஷ்டிர வீரர்கள்.

**அ**ன்று மாலை போர் ஓய்ந்தது. மாளிகைக்குத் திரும்பியதும் கேள்விபட்ட இச்செய்தி, அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது யுத்தகள ரத்த ஞாயிறு வீர சிவாஜிக்கு!

அதே நேரத்தில் இதனை நம்பாது, வந்த பாணத்தை ஏந்திய வனிடமே அனுப்பிய பூஜ்யாவைக் கண்டு மருண்டு போனார். இவள் நிலையில் தனது மனைவியர்களிருந்தால் பயந்து பதறி பின் தொடர்ந்து இருக்கமாட்டார்களா?

எத்தனை சமத்காரமான செயல் இது?

''பூஜ்யா! உன்னை ஏன் இப்படிக் கடத்த அப்சல்கான் திட்டமிட்டிருக்க வேண்டும்?''

ஒரு சிங்கத்தின் நடைமாதிரி உலவுகிறார் சிவாஜி.

பகல் முழுவதும் யுத்த களத்தில் இருந்த அயற்சி அவரிடம் தெரியவில்லை.

''என்னை வைத்துப் பகடையாடி உங்களைப் பிடிக்க அல்லது பிடியில் அடக்க! புரியவில்லையா? போகட்டும், போர்க்கள நிலைமை எவ்வாறு இருக்கிறது?''

''நம் படை வீரர்கள் வெற்றி பெற்று விடுவார்களானாலும் ஒரு பயங்கரச் செய்தி கிடைத்திருக்கிறது. மேலும் பீஜப்பூரிலிருந்து பத்தாயிரம் குதிரை வீரர்கள் புறப்பட்டு வருகிறார்களாம். ஆக்ராவில் ஔரங்கசீப் முடிசூட்டிக் கொண்டானாம்.''

''ஔரங்கசீப் ஆட்சியில் அமர்ந்து முடிசூட்டியாய்விட்டதா?''

''ஆய்விட்டது. 'பாதுஷா' என்கிற விருதுவுடன் அரியணையில் அமர்ந்திருக்கிறான். அடுத்த கட்டமாக அப்சல்கானை ஊக்குவிக்கிற முகாந்திரமாக படைகளை அனுப்பி இருக்கிறானாம். அப்சல்கானுக்குச் செய்தி கிடைத்ததும் முற்றுகையை நீடிக்க வைப்பான். என்ன செய்வதென்றுதான் புரியவில்லை.''

''அப்படியா?'' கலங்காத பூஜ்யா பலகணங்கள் கலங்கி போனாள்.

வெற்றி பெறுகிற அந்த நேரம் பார்த்து இப்படி ஒரு செய்தியா?

அந்த மாளிகையே மனக்கலக்கத்தில் ஆழ்ந்துவிட்டது போன்ற ஒரு பிரமை.

மேலே லஸ்தர் விளக்குகள் பூமலர்ந்த கொடிகள் மாதிரி வெளிச்சத்தைப் பிரசவித்துக் கொண்டிருந்தன.

அந்த அறையில் பூஜ்யாவையும் சிவாஜியையும் தவிர வேறுயாருமில்லை.

வெளியே காவல் பலமாக இருந்தது.

இப்போது இந்த இக்கட்டான நிலைமை பூஜ்யாவிடமிருந்து வருகிற ஆலோசனைதான் என்ன என்று எதிர்பார்த்தவாறு உலவுகிறார் மாவீர சிவாஜி! சுயராஜ்யக் கனவை நனவரங்கேற்ற தாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள்தாம் எத்தனை? ஏற்பட்ட இடர்பாடுகள்தாம் எத்தனை?

ஓ... எவ்வளவு பெரிய தியாகங்களையும் இழப்புகளையும் சந்திக்க நேர்ந்துவிட்டது!

''பிரபோ!''

-பூஜ்யாவின் குரல். ஆனால், சற்று சுருதி இறக்கமாகக் கேட்கிறது.

உலவுவதை நிறுத்திக் கூர்ந்து கவனிக்கிறார் சிவாஜி.

''என்ன பூஜ்யா!''

''பகல் வந்த அப்சல்கான் விசுவாசி தெரிந்தோ தெரியாமலோ ஒரு கருத்தைச் சொல்லிவிட்டுப் போனான். பொய்யானதாக இருந்தாலும் அது இப்போது ஒரு மெய்யைத்தேடி, மெய்போல ஏன் உதவக்கூடாது?''

''என்ன கருத்து பூஜ்யா?''

''அப்சல்கான் தங்களைப் பேட்டிக்கழைத்ததாகவும், அழைப்பது போல அழைத்து அணைத்துக் கட்டுகிற மாதிரி பாசாங்கு செய்து தங்களைக் கொலை செய்துவிட்டதாகவும் சொன்னான். அந்த அழைப்பு நிஜமாகவே வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?''

''என்னைக் கொலைசெய்து விடுவது அவ்வளவு நன்றாக இருக்கும் என்கிறாயா?''

''சிவ, சிவா!''

‘‘என்னையே துதிக்கிறாய்?’’

‘‘உங்களைத் துதிப்பவள் கொலை செய்வாளா?’’

‘‘எனது துரதிர்ஷ்டத்தைக் கொலை செய்ய எண்ணுகிறேன். நீ தான் அதிர்ஷ்டத்தை வாழ வைக்க வந்தவளாயிற்றே!’’

‘‘உங்களுக்குத் துரதிர்ஷ்டம் என்று ஒன்றிருந்தால்தானே? நீங்கள் என்றுமே அதிர்ஷ்டசாலி! நீங்கள் முதன் முதலில் காதலித்தது அதிர்ஷ்டத்தை, மணந்தது அதிர்ஷ்டத்தை! நான் அடுத்த படியாகத்தான்!’’

கலகலவென்று சிரிக்கிறார் கர்மவீரர் சிவாஜி.

‘‘பூஜ்யா! என் அதிர்ஷ்ட தேவதையே! அப்சல்கானைப் பற்றி ஏதோ சொல்ல வந்தாய்; பிறகு அதிர்ஷ்டத்துக்குத் தாவிவிட்டாய்!’’

‘‘அதிர்ஷ்டத்துக்குத் தாவத்தான் அப்சல்கான் பேச்சைத் தொடங்கினேன். இப்போது நாம் பீஜப்பூர் படையோ, ஔரங்கசீப் படையோ வருவதற்குமுன் ராஜதந்திரமாக ஒரு விஷயத்தைக் கையாள வேண்டும்.’’

சிவாஜி காதுகளைக் கூர் தீட்டிக் கொள்கிறார்.

‘‘பிரபோ! அப்சல்கானை சமாதானம் வேண்டி நாம் தூது அனுப்பினால் என்ன?’’

‘‘என்ன?’’

சிவாஜியின் கண்கள் சிவந்து உருளுகின்றன.

‘‘கோபப்படாமல் கேளுங்கள். இப்போது நமது படைமுழக்கம் வலுத்து இருக்கிறது. அப்சல்கான் அரண்டு போய் இருப்பான். இந்த நிலையில் தூது வருவது அவனுக்கே ஆச்சரியமாக இருக்கும். ஒப்புக் கொள்வான். பீஜப்பூர் செய்தியோ, ஔரங்கசீப்பின் செய்தியோ எட்டியிருப்பின், இத்தூதுக்கு அவன் மசிவது கடினம். அநேகமாகச் செய்தி எட்டியிருக்காது என்றே நம்புகிறேன்.’’

சிறிது நேரம் ஆலோசனைப் பூர்வமாக உலவுகிறான் சிவாஜி மகாராட்!

''சரி ஒப்புக்கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அடுத்து?''

''நீங்கள் புறப்பட்டுச் செல்கிறீர்கள். கொஞ்ச கால மௌனத்தை மனத்தில் வைத்து ஒரு சமாதான உடன்படிக்கை எழுதிக் கொண்டு திரும்புங்கள். அதாவது ஔரங்கசீப் தென்னாட்டுக்குப் படை திரட்டி வந்தால், ஒன்று சேர்ந்து எதிர்க்கும் நட்பு நாடுகள் என்று! பிறகு ஔரங்கசீப்பை நாம் எப்படிச் சந்திக்கிறோமோ அப்படிச் சந்தித்துக் கொள்கிறோம்!''

''உடன்படிக்கை வேறுவிதமாக ஆனால்?''

''வேறுவிதமாக என்றால்?''

''ஏதோ, ஒரு விதமாகக் கேட்டான் என்று வைத்துக் கொள், என்ன செய்வது?''

''யோசிக்க அவகாசம் கேட்டு வாருங்கள். சிந்தித்துச் செயல்படுவோம்.''

''அந்த அவகாச நேரத்தில் பீஜப்பூர் செய்தியோ ஔரங்கசீப் செய்தியோ எட்டிவிடுமானால்?''

ஒருகணம் - ஒருகணம் என்ன பலகணங்கள் யோசனை!

பூஜ்யா பளிச்சென்று பதில் சொல்கிறாள். ''அவகாசம் தர வேண்டிய அவசியமே இல்லை. நான் உங்களுடன் ஆண்வேடம் தாங்கி வருகிறேன்.''

''பூஜ்யா! அவசர முடிவு.''

''பயப்படாதீர்கள். நான் பூஜ்யா என்று தெரிந்தாலும் பயமில்லை. சமாதான உடன்படிக்கைதானே? ரசாபாசம் ஏற்படாது.''

''ஒருகால் ஏற்பட்டுவிட்டது?''

‘‘அப்சல்கான் தொலைந்தான்’’. பேழையிலிருந்த [1]புலிநகத்தை எடுத்துக் காட்டுகிறாள். இதன் கண்டுபிடிப்புக்கான முதல் பலி அப்சல்கான்தான் என்றால் யாரால் தடுக்க முடியும்? உங்கள் தற்பாதுகாப்பாக இதனை எடுத்துச் செல்கிறீர்கள். இடுப்பில் மறைவான இடத்தில் ஒரே ஒரு குத்துவாள். மற்றபடி வெளிப்படையாகத் தெரிகிற பவானித்தாய் அளித்த போர்வாள். வாளுக்கு வேலையில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். வாட்கள் மோதுகிற மாதிரி சம்பவம் நிகழ்ந்துவிட்டால் அது எண்ணியது ஒன்று நடப்பது மற்றொன்றாகிவிடும். வீண் களேபரம். வீரர்கள் மோதிக் கொள்கிற நிலைக்கு வந்துவிடும். ஒழுங்கான யுத்தம் போக, வரம்புக்கு மீறிய யுத்தமாக முடிந்துவிடும். நான் உடன் வருகிறேன் என்று சொல்வதே அதற்காகத்தான்!’’

சிவாஜியின் சிந்தனை வேகமாகச் செயல்படுகிறது. தருமவானுக்கு தருமவான்; அதர்மவானுக்கு அதர்மவானாயிற்றே சிவாஜி!

‘‘பூஜ்யா! உனக்கேதும் நடந்துவிடக் கூடாது.’’

‘‘உங்கள் சுதந்திரத் தாகத்துக்கு என் ரத்தம் தேவையென்றால் குடித்துவிட்டுப் போகட்டும். பூஜ்யா, பூஜ்யா, பூஜ்யா! போய் நன்றாகப் படுத்துத் தூங்கி ஓய்வெடுங்கள். பொழுது விடிந்ததும் தூது!’’

பூஜ்யா மேலும் பேச்சை வளர்க்க இடம் வைக்காமல் படுக்கையில் போய்ச் சாய்ந்து கொண்டாள். அத்துடன் இராது, விளக்குகளை அணைக்கவும் ஆணை பிறப்பித்தாள்.

இராவிளக்கு மட்டும் அணையாது ‘உன் அழகை ரசிக்க எனக்குப் பாக்கியம் இருக்கிறதே’ என்று கூறுவது போல மின்னிச் சிரித்தது.

-----

1. ஆங்கிலத்தில் புலிநகத்தைச் சில வரலாற்று நூல்கள் TIGERS CLAWS என்றும் SIVAJI THE GREAT எழுதிய டாக்டர் பாலகிருஷ்ணா நூலில் WAGHNUKH என்றும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன.

# 26

பிரம்மச்சாரிக்குரியன -

வேத மோதல், அங்கிவினை (அக்கினி காரியம்), நீராடல் (மூன்று வேளை குளித்தல்), ஐயமேற்றல், விரதம், (திருமணத்துக்கு முன் செய்ய வேண்டிய சடங்குகள், ஒழுக்கம்). உயிருள்ளவரை ஆசிரியன் பக்கம் இருத்தல், இவையாம்.

**- சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 3).

இளங்காலைப் போது பூஜ்யாவின் புன்னகையாய் விடிகிறது.

இரவு முழுவதும் சிவாஜிக்குத் தூக்கம் ஏது? பூஜ்யா சொன்ன அபிப்பிராயம் எந்த அளவுக்கு வெற்றி தரப்போகிறது என்பதில்தான் சுற்றிச்சுற்றி வட்டமிடுகிறது.

விடிகிற நேரத்தில் கொஞ்சம் கண்ணயர்ந்திருப்பார். பூஜ்யாவைப் பொறுத்த மட்டில் பூரணமாகவே உறங்கிக் கண் விழித்தாள்.

காலைக் கடன்கள் முடிந்ததும் தூது புறப்பாட்டுக்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெறலாயின.

அன்றைக்கு யுத்தமில்லை என்பதை எப்படி அறிவிப்பது?

ஏற்கெனவே தங்கள் கொடி வருங்காலத்தில் வெண்ணிறக் கொடியாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் வகுத்திருந்தார்கள். அந்தத் தீர்மானத்தை அப்போதே அரங்கேற்றம் செய்ய நினைத்து வெண்ணிறக் கொடியை மிக உயர்ந்த கம்பத்தில் பறக்க விட்டார்கள்.

போரில் தங்களுக்குச் சாதகமான நிலைகள் இருந்தும் ஏனிந்த வெண்ணிறக் கொடி? சமாதானக் கொடி?

மகாராஷ்டிர வீரர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனிந்த கோழைத்தனம் என்றுகூடத் தங்களுக்குள் விமரிசித்துக் கொண்டார்கள்.

ஆனால் விவரம் தெரிந்தவர்கள், மகா ராஜதந்திரியான பூஜ்யா தேவியின் ஏற்பாட்டில் ஏதோ காரணமில்லாமல் இருக்க முடியாது என்று பேசிக்கொண்டார்கள்; ஏனையவர்களுக்கு விளக்கவும் செய்தார்கள்.

பிரதாப கோட்டையில் இருந்த அப்போதைய உயர்தர அதிகாரிகளைக் கலந்து பூஜ்யாவின் எண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டு விளக்குகிறார் சிவாஜி. செவி சாய்த்ததில் அது நலம் பயக்கவல்ல அபிப்பிராயமாகவே தெரிந்தது.

தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்ல பாலாஜியே முன் வந்தான்.

திடுமென்று பறந்த வெண்கொடியைக் கண்டு பீஜப்பூர் படைகளுக்கு ஏகமகிழ்ச்சி. எங்கே தோல்வி காண்போமோ என்றஞ்சிய படைகளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது இயல்பே! விரைவில் பீஜப்பூர் நாடிச் செல்வதில் அவர்களுக்கு விருப்பமிருந்தது.

செய்தி கேட்டு தளகர்த்தன் அப்சல்கான் ஒன்றும் புரியாது நோக்கினான். எப்படிப் பார்த்தாலும் சேதம் பீஜப்பூர் படைகளுக்குத் தான். இந்தக் கணக்குத் தெரியாமல் சிவாஜி படைகள் சோர்ந்து விட்டனவா? எப்படியும் தோற்றுப்போவோம் என்கிற முடிவுக்கு சிவாஜியும் அவனது மதியூகி பூஜ்யாவும் வந்திருக்கிறார்கள் என்றால் அங்கேயும் ஓட்டை கண்டிருக்கிறது என்று எண்ணிச் சற்று தைரியம் கொண்டான். சற்றைக்கெல்லாம் சிவாஜியிடமிருந்து தூது வருகிறார்கள் என்கிற செய்தி வேறு தேனாய் இனிக்கிறது. தைரியம் இப்போது மேலும் வலுக்கொள்கிறது.

வெண்ணிறக் கொடி ஏற்றி பாலாஜி தலைமையில் வரும் தூதுக்குழுவை மிகவும் அக்கறையுடன் எதிர்நோக்கினான் அப்சல்கான்.

தனது வண்ணக்கூடாரத்தில் கம்பீரமாக அமர்ந்து உக்கா ரசனையில் மூழ்கியிருந்தான் அப்சல்கான். எதிரே இருவீரர்கள் வாள் தாங்கி இருந்தார்கள். வெளியே பலத்த காவல்.

புரவிகள் சகிதமாக வந்திறங்கிய தூதுக்குழுவுக்கு வரவேற்புடன் கூடிய உத்தரவு கிடைக்கிறது. இத்தனை மரியாதையாக வரவேற்பு கிடைக்கும் என்று பாலாஜி கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை.

உள்ளே நுழைந்த மகாராஷ்டிர உபதளபதி பாலாஜி, அவனது இந்துமத மரபுப்படி வணங்கினான்.

''ஏன்? எங்கள் மரபுப்படி மண்டியிட்டு சலாம் செய்யக் கூடாதோ?''

உருதுவில் மிகவும் அகங்காரமாகக் கேட்ட அப்சல்கானை உற்றுகவனிக்கிறான் பாலாஜி. ரத்தம் கொதிக்கிறது. ஆனால் பூஜ்யாவின் ஆணை - எந்தக்காரணம் முன்னிட்டும் யாரும் உணர்ச்சி வசப்படக்கூடாது!

பாலாஜி சொன்னான்: ''நான் ஒரு இந்துவுக்குப் பிறந்து விட்டேன்! என்ன செய்ய?'' - உருதுவில் பதில் சொன்னான்.

''சபாஷ்? உட்காரலாம்! உன் பெயர்?''

''பாலாஜி!''

''அச்சா! சிவாஜி தோஸ்த்?''

''தோஸ்த் நஹி; தொண்டன்!''

''சிவாஜி ஏதாவது திருமுகம் அனுப்பி இருக்கிறாரா?''

''அவருக்கு உருதுவில் எழுதத் தெரியாது. என் முகத்திலேயே எழுதி அனுப்பியிருக்கிறார்.''

‘‘ஓகோ! பூஜ்யாவுக்குத் தெரியுமே!’’

பாலாஜிக்கு மீண்டும் இரத்தக் கொதிப்பு. இவன் வேண்டுமென்றே பூஜ்யாவை இழுத்துப் பேசுகிறான்...

ஆயினும் பதில் சொல்கிறான்.

‘‘அந்தக் கையெழுத்து ஒரு மந்திரம்! அது ஔரங்கசீப்புக்கே கிடைக்கவில்லை. நீங்கள் எதிர்பார்ப்பது அநியாயம். நான் நியாயமே பேச வந்தேன். நியாயம் தேவையில்லை என்றால், நான் உத்தரவு பெறுகிறேன்!’’

‘‘சீ, சீ! பாலாஜி! உட்காருங்கள்!’’

‘‘உட்கார்ந்து பேச எங்கள் தலைவர் வருவார். நான் நின்று கொண்டே செய்தி அறிவித்துவிட்டுச் செல்கிறேன்.’’

‘‘சிவாஜி வருகிறார்?’’

‘‘இன்னும் சிறிது நேரத்தில் - நீங்கள் ஒப்புக் கொண்டால்.’’

‘‘எதை ஒப்புக் கொள்ள வேண்டும்?’’

‘‘ஔரங்கசீப் பெரும் படையுடன் சக்கரவர்த்தி ஸ்தானம் பெற்றதும் தக்கணத்தையே அடிமைகொள்ளப் புறப்பட்டு வருகிறாராம், நாம் போர் புரிந்து மாள்வதைவிட ஔரங்கசீப்பை எதிர்க்க படைகளை மிச்சப்படுத்தவே இன்றைய யுத்த நிறுத்தம்; இந்தத் தூது!’’

அதிர்ந்து போனான் அப்சல்கான். அப்படியும் இருக்குமா?

‘‘இது நிஜந்தானா?’’

‘‘அசல் நிஜம்!’’

‘‘போலியான நிஜங்களும் உண்டா?’’

‘‘ஏனில்லை? போகட்டும்; பீஜப்பூர் தளபதி! இது குறித்துப் பேச எங்கள் தலைவர் வரலாமா?’’

சிறிது நேர யோசனை...

தாடி நீவல்...

சின்ன சிரிப்பு; அதில் அடங்கிய பொருள்? அர்த்தம்?

புரியவில்லை.

''வரச் சொல்!''

''ஒரு திருத்தம்.''

''என்ன?''

''அரசியலில் முக்கிய விஷயம் குறித்து பேசவிருப்பதால் தனித்துப் பேச வேண்டும் என்பது எங்கள் தலைவரின் வேண்டுகோள். உங்கள் சார்பாக இருவர் இருக்கலாம். போர் வீரர்களாகவும் இருக்கலாம். புத்திசாலிகளாகவுமிருக்கலாம். எங்கள் தலைவருடன் நான் வருவேன்; ஒரு போர் வீரன் வருவான்!''

''ஏன்; உங்கள் சார்பில் புத்திசாலி வரவில்லையா?''

''அவசியமில்லை. எங்கள் தலைவர் பேரறிஞர்.''

''அப்படியா! பூஜ்யா வருவாள் என்று எதிர்பார்த்தேன்.''

''தளபதி! கொஞ்சம் மரியாதையாகப் பேசிப் பழக இப்போதே தயாராகுங்கள். பூஜ்யா நாங்கள் வணங்கும் இளையராஜமாதா. மறுமுறை அவள் இவள் என்று பேசுவது...''

''மன்னிக்க வேண்டும் பாலாஜி! வாய்தவறி வந்துவிட்டது. நீங்கள் போகலாம். நான் சிவாஜி வருகையை எதிர்பாக்கிறேன்.''

பாலாஜி மீண்டும் வணக்கம் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டான். அப்சல்கானின் பற்கள் நறநறத்த சத்தம், பாலாஜியைப் பின்தொடர நியாயமில்லை.

மீண்டும் உக்காவைச் சுவைக்கிறான் அப்சல்கான்.

தாடியை நீவல்...

ஒவ்வொரு ரோமமும் ஒவ்வொரு விதமாகச் சிந்திக்கின்றன...

சிவாஜி உண்மையிலேயே ஒன்றுபட்டு தக்கணத்தைக் காக்கத் தான் வருகிறானா? தனக்குத் தெரியாத செய்தி இவனுக்கு மட்டும் எவ்கையில் தெரிந்தது?...

ஆமாம்; நாம் படைக்களத்தில் இருக்கிறோம்; அவன் சுய களத்தில் இருக்கிறான். ஒருகால் செய்தி பீஜப்பூருக்குத் தெரிந்திருக்கும். தனக்குப் பின்னால் தெரியவரும். ஆயினும், இந்த உடன்படிக்கை தேவையா?

தனது அரசியல் ஆலோசகர்களை அழைத்து பேசுகிறான்.

சிவாஜியின் இந்தத் திடீர் மாற்றம் நன்மைக்கா? தீமைக்கா?

ஆலோசகர்கள் ஆளுக்கு ஒருவிதமாகப் பேசினாலும், சிவாஜியின் இந்த முடிவு ஏற்கக்கூடியதே என்பது மாதிரி இருந்தது.

பீஜப்பூரும் மகாராஷ்டிரர்களும் மோதி வீரர்களை விரயமாக்கு வதைவிட, ஔரங்கசீப் என்னும் சிங்கமனைய சக்கரவர்த்தியாக ஆக்ராவில் அமர்ந்துவிட்ட வல்லரசுக்காக விரையம் செய்வது நல்லதென்றே அவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

ஔரங்கசீப்புக்கு தக்கணம் ஒரு பாடம் கற்பித்துவிட்ட பிறகு, சிவாஜியை அடக்கிவிடலாம் என்று யாகூப்கான் என்கிற உபதளபதி கருத்தை அறிவித்தான்.

என்ன இருந்தாலும் ஔரங்கசீப்பும் பீஜப்பூரும் ஒரே இனம். ஒரே மதம். சிவாஜியைத் தீர்த்துக் கட்டுவது நலம் என்றாலும் இப்போது முகலாயப் படைகள் விரையம் கண்டு இருக்கின்றன. பீஜப்பூரிலிருந்து படை தருவித்து வெல்வதற்குள் சிவாஜி படைகள் மோதி பயங்கரத் தோல்வியை அடையச் செய்துவிடும். அப்படி அவமானப்படுவதைவிட, சிவாஜியே சமாதானத்துக்கு வருவதை ஒரு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது கௌரவமாகத் தெரிந்தது.

யார் என்ன அபிப்பிராயப் பட்டாலும், பீஜப்பூரின் இப்போதைய மகா தளகர்த்தனான அப்சல்கான், தனது அபிப்பிராயத்துக்கு மரியாதை கொடுத்துக் கொண்டிருந்தான்.

ஔரங்கசீப்பை மீண்டும் தனிப் பேட்டி கண்டு திசை திருப்ப எவ்வளவு நேரம் பிடிக்கும்? எப்படிப் பார்த்தாலும் நாம் திருக்குரான் மக்கள். எதிர்த்துப் போராடி ஒற்றுமை இழப்பதா? திருக்குரான் மீது அபார பக்தி நிறைந்த ஔரங்கசீப், எடுத்தோதும் விதத்தில் எடுத்து இயம்பினால் கேட்காமலா போய்விடுவார்?

இப்போது இஸ்லாத்துக்கு இருக்கிற ஒரே பொது எதிரி சிவாஜி. இவனைக் கொன்றுவிட்டு வருவதாக வல்லவோ பீஜப்பூரிலிருந்து படையெடுத்து வருகிறபோது எடுத்துக்கொண்ட வஞ்சினம்! அதனைத் தளர்த்துவதா!

சிவாஜி தனது கையால் வீழ்ந்துபட்டால் ஔரங்கசீப்பே பரிசுகளை வாரி வழங்குவாரே...

சிவாஜி வரட்டும். வந்ததும் நடப்புகளைக் கவனித்து முடிவு எடுக்கலாம்.

அப்சல்கான் அமைதியாகக் காத்திருந்தான்.

-----

# 27

வரவாக வந்த பொருளைக் கணக்கில் குறிக்காமல் விடுதலும், குறித்த செலவு (கணக்கில் குறித்த செலவு) பொருளைக் கொடாது இருத்தலும், அடையப்பட்ட இருப்புப் பொருளை அடைய வில்லை என்று மறுத்தலும், கவர்தல் ஆகும். அதற்குப் பன்னிரண்டு மடங்கு தண்டம் ஆகும்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 29).

**பீ**ஜப்பூர் தளகர்த்தன் அப்சல்கானை நோக்கி சிவாஜி புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்.

வழக்கமாக அவர் வெண்ணிறப் புரவியில் ஏறி வருபவர், வழக்கத்துக்கு மாறாக எட்டுப் புரவிகள் பூட்டிய சாரட்டு வண்டியில் வந்து கொண்டிருப்பது ஓர் ஆச்சரியமாக இருந்தது.

போர்வீரன் உருவில் பூஜ்யா வருகிறாளே...

அவளுக்கு குதிரை சவாரி தெரியாது. எனவேதான் இந்த ஏற்பாடு.

அப்சல்கான் படை முகாமில் சாரட்டு நுழைகிறது.

பூஜ்யா போர்வீரன் உருவில் அமைதியாக நோட்டம் விடுகிறாள்.

என்ன நடக்கப் போகிறது என்பதை அவளால் முன்கூட்டியே ஊகிக்க முடியவில்லை.

சாரட்டு, வீரர்கள் காட்டிய வழிப்படி சென்று அப்சல்கான் துகின்மனையை அடைந்தது.

நியாயப்படி ஒரு நாட்டுத் தலைவன் வந்தால், அந்த நாட்டுத் தலைவன் எதிர்கொண்டு அழைக்க வேண்டும். இதுதான் அரசியலின் பண்பட்ட விதி. அப்சல்கான் தலைவன்கூட அல்ல; பீஜப்பூரின் இரண்டாம் மகா தளகர்த்தன். இவனுக்கு மேலே இருக்கும் முதலாம் மகா தளகர்த்தனே, சிவாஜியின் தந்தை ஷஹாஜி பான்ஸ்லே! இப்படி இருக்க, சிவாஜி என்கிற மகாராஷ்டிரத் தலைவன் வருகிறபோது கேவலம் இந்த அப்சல்கான் வாசற்படிக்கு வந்து நின்று வரவேற்கவில்லையே! என்ன திமிர் இவனுக்கு?

பூஜ்யாவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

சிவாஜி அவளைக் கூர்ந்து கவனிக்கிறார். எல்லாம் பணிந்து போனால் பாதத்துக்குக் கீழ் என்று சொல்லாமல் சொல்லின அவரது கண்கள்.

பூஜ்யா ஒன்றையும் கண்டுகொள்ளாமல் உள்ளே செல்லுமாறு சமிக்ஞை செய்தாள்.

சிவாஜியும் மௌனமாக உள்ளே நுழைந்தார். நடுவில் பூஜ்யா போர் வீரன் கோலத்தில், பின்னால் பாலாஜி, மற்றபடி அந்த அப்சல்கான் படை முற்றுகையைச் சுற்றிலும் மகாராஷ்டிரம் குதிரைப் படை வீரர்கள் மாற்று ரூபங்களில் மறைந்து கிடக்கும் செய்தி யாருக்குத் தெரியும்?

உள்ளே நுழைந்த சிவாஜியைக் கண்ட பிறகுதான் அப்சல்கான் உக்காவை நீக்கி, ‘‘சலாம் சிவாஜி! வரவேண்டும்! இந்தக் கோமாளியை நோக்கி வருவீர்கள் என்று நான் எதிர்பாக்கவில்லை’’ என்றான்.

வந்ததுமே குத்தூசி. பிறகு கட்டாரி, வாள் என்று மாறுமோ?

சிவாஜி பொருட்படுத்திக் கொள்ளவில்லை. பூஜ்யாவின் கட்டளையை மனத்தில் வைத்துக் கொண்டு பணிந்தே நடக்க முடிவு செய்தார்.

''மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம், அப்சல்கான்! பீஜப்பூர் அரண்மனையில் நீங்களும் மீறி நடந்து கொண்டீர்கள்; நானும் அவ்வாறு நடந்து கொண்டேன். இப்போது நாம் சமாதானத்தை விரும்பும் நண்பர்கள். தக்கணத்தைக் காக்கும் ரட்சகர்கள்!''

சிவாஜி நன்றாகவே நடிக்கிறார்.

ஓர் உயர்தரமான அரசியல்வாதி இயல்பாகவே நடிகனாக இருந்தால் மட்டுமே அவனால் அரசாங்கத்தைச் சமயோசிதத்துக்கு ஏற்ப நடத்தி வெற்றி காண முடியும். இந்த விஷயத்தில் மகாராஷ்டிர புரட்சித் தலைவர் சிவாஜி ஓர் இயல்பான நடிகர் திலகமே!

சிவாஜியின் இந்த வார்த்தைகளைக் கேட்ட அப்சல்கான் தன்னுள் பொருமலுடன் கூடிய புன்முறுவல் பூத்துக் கொள்கிறான்.

''உட்காருங்கள் சிவாஜி.''

சிவாஜி அமைதியுடன் அமருகிறார். பக்கத்தில் போர் வீரன் கோலத்தில் மாவீரன் காதலி பூஜ்யா. தொலைவில் பாலாஜி.

அப்சல்கான் பக்கத்திலும் இருவர் இருக்கிறார்கள். மற்றபடி வெளியே காவல் வீரர்கள்.

சிவாஜி அக்கூடாரத்தைப் பார்வையிடுகிறார். இஸ்லாமியர்கள் வாழ்வை அனுபவிக்கப் பிறந்தவர்கள் மாதிரிக் காணப்படுகிறது அந்த வண்ணக்கூடாரம்.[1]

சிவாஜியே தூது வந்ததன் நோக்கத்துக்கான பேச்சை மிகவும் ஆழ்ந்தும் ஆலோசனையுடன் தொடங்குகிறார்.

''அப்சல்கான்! நடந்ததை மறந்து நாம் நடக்கப்போவதைப் பற்றிச் சிந்திப்போம். இந்தப் போர் அவசியமில்லை. நம்மை நோக்கி ஒரு பெரும் போர் பூதாகரமாகத் தென்படுகிறது. அதனை முறியடிக்க

1. இந்தத் தூது பற்றி வரலாறு பலவிதமாகக் குழப்புகிறது. அப்சல்கான் முதலில் ஒரு வேதியனைத் தூது அனுப்பியதாகவும், அதே வேதியனை சிவாஜி, மதப் போதனையால் மாற்றி தம்வயப்படுத்தி தூதுபோனார் என்றும் கூறுகிறது. அப்சல்கானுக்குப் பயந்து சிவாஜியே தூது அனுப்பினார் என்றும் கூறுகிறது.

வழிவகுக்க இந்தச் சந்திப்பு உதவுமானால் மேற்கொண்டு பேசுவோம். தேவையில்லை! இந்தப் போரில் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்பது உங்கள் கருத்தானால் நான் இப்போதே விடைபெற்றுக் கொள்கிறேன்.''

அப்சல்கான் ஒருகணம் தாடியை நீவி விட்டு, ''அச்சா! உங்கள் சமாதானத் தூதுவையே பேசலாம்.'' என்றான். அவனுக்கும் உள்ளூர உதைப்பு இருந்தது. சிவாஜியைப் போர்க்கொடி தூக்க வைத்து அதனால் ஏற்படும் லாப நஷ்டங்களைவிட, ஓர் ஒப்பந்த முடிவுக்கு வந்து இவனைச் சாய்த்துவிட்டால்...?

''அப்சல்கான்! ஔரங்கசீப் என்னதான் உங்கள் மதத்தவனாக இருந்தாலும் ஆட்சி என்று வருகிறபோது அதனுள் அடங்கிய வெறி, மதவெறியைக் காட்டிலும் மீறியதாய்விடும். எங்களிடையேயும் ஒரே மதத்தான் ஆட்சி என்று வருகையில் போரிட்டு நாசம் விளைவித்து நாட்டைப் பிடிக்க முனையவில்லையா? அம்மாதிரிதான்! நாம் நமக்குள் ஆயிரம் விரோதங்கள் மனத்தில் தாங்கிக் கொண்டவர்களே யானாலும் அண்மை நாட்டவர்கள். இன்று அடித்துக் கொள்ளலாம்; நாளை கூடிக்கொள்ளலாம். ஔரங்கசீப் பிடியில் அகப்பட்டுக் கொள்வோமேயானால் அவனது படைகள் நமது நாட்டைப் பாதுகாக்க நேரிடும். நாம் அரச பொம்மைகளாய் விடுவோம். நம் இருவர் பலங்களும் ஒன்றிணையுமானால், ஆக்ரா, தக்கணக் கனவு காண்பது இயலாத ஒன்று; என்ன சொல்கிறீர்கள்.''

''இந்த உங்கள் பேச்சை ஏற்குமுன், பீஜப்பூர் சம்பந்தப்பட்ட கோட்டைகள் உங்கள் வசமிருக்கின்றன. அவற்றை விட்டுக்கொடுக்க முடியுமா?''

சிவாஜி ஒருகணம் யோசிக்கிறார். பூஜ்யாவிடமிருந்து எந்த சமிக்ஞையும் இல்லை.

''ஒப்புக் கொள்ளலாம். ஒரு திருத்தம். எல்லாக் கோட்டைகளையும் விட்டுக் கொடுப்பதை விட, சில கோட்டைகளை விட்டுக் கொடுக்கிறேன். எனது பலம் என்னாவது?''

மீண்டும் அப்சல்கான் யோசிக்கிறான். அவனது பார்வை நின்று கொண்டிருக்கும் போர் வீரனை நோக்குகிறது. அப்போது அவசரமாக ஒரு பீஜப்பூர் வீரன் அப்சல்கானைப் பார்க்க வேண்டும் என்று வெளியிலிருந்து செய்தி வருகிறது.

''அனுப்பி வையுங்கள்.''

உள்ளே வந்த இஸ்லாமிய வீரன் மண்டியிட்டு வணங்கி, ஒரு துண்டு முடங்கலைத் தந்துவிட்டுச் செல்கிறான். அதனைக் காண காண ஆச்சரியம் உச்சியைத் தாக்குகிறது.

என்ன முடங்கலாக இருக்கும், அது?

சிவாஜிக்குப் புரியவில்லை. பூஜ்யா குயுக்தியாக ஆராய்கிறாள்.. பாலாஜி தன்னைத் தயார் செய்து கொண்டு நிற்கிறான்.

முடங்கலைக் கிழித்து எறிந்த அப்சல்கான் - நடிப்புத் திறனற்ற அப்சல்கான் உடனடியாக சிவாஜியின் பக்கத்தில் நின்று போர்வீரனை உற்றுக் கவனிப்பானேன்?

ஓ...வந்த முடங்கல் பூஜ்யாவைப் பற்றியது. பூஜ்யாதான் போர் வீரன் கோலத்தில் நிற்பது என்று யாரோ ஒரு மகாராஷ்டிரக் கருங்காலி காட்டிக் கொடுத்துவிட்டு இருக்கிறான்.

பூஜ்யாவுக்கும் பூரணமாகப் புரிந்துவிட்டது. ஆயினும் அவள் தனது சர்வ வல்லமை பொருந்திய அறிவைக் கூர் தீட்டுகிறாள்.

அவள் பாலாஜியை நோக்கிக் கவனிக்கிறாள். ஏற்கெனவே எச்சரித்து இருந்த வார்த்தைகளை அவளது கண்கள் சொல்கின்றன.

''மகாராட்! நேரமாகிறது. உச்சிகாலப் பூஜைக்கு பூஜ்யாதேவியம்மாள் காத்துக் கொண்டிருப்பார்கள்!'' என்றான் பாலாஜி.

''தூதுவைவிட பூஜை முக்கியமா?'' என்கிறான் அப்சல்கான்.

''மாலை வேளையில் நாங்கள் தூதுவந்தால் நீங்கள் தொழுகையை மறந்து பேசுவீர்களா?'' என்றான் பாலாஜி.

பாலாஜியை எரித்து விடுபவன் மாதிரி நோக்குகிறான் அப்சல்கான்.

''யார் அந்த பூஜ்யா?'

சிவாஜியே மறுமொழி கூறினார்.

''அவசியமில்லாத கேள்வி.''

இத்துடன் நிறுத்திக்கொண்டாரேயொழிய, 'நேற்று ஒரு இஸ்லாமிய வீரனை அனுப்பிக் கடத்தி வரச் சொன்னீர்களே, அவள்தான் அந்த பூஜ்யா?' என்று பதில் சொல்லவில்லை. அப்படி ஒரு காட்சி நடந்தது தமக்குத் தெரியாது என்கிற மாதிரி அவர் ராஜதந்திரமாக நடந்து கொண்டார்.

''அச்சா, சிவாஜி! நீங்கள் பிடித்து வைத்திருக்கிற கோட்டைகளில் பாதியை எங்களுக்குத் தருகிறீர்கள். அத்துடன் மற்றுமொன்றையும் கேட்பேன், தருவீர்களா?''

''என்ன அப்சல்கான்!''

பூஜ்யாவைக் கேட்டுவிடுவானோ என்கிற பதைப்பு.

பூஜ்யாவுக்கும் இந்தப் பதைப்பு...

''சரிபாதி கோட்டைகளை விட்டுக் கொடுப்பதற்குச் சமானமாக இதோ உங்கள் பக்கத்தில் நிற்கும் போர் வீரனை எனக்குக் கொடுத்து விடுங்கள். என்னடா, இவன் கேவலம் ஒரு போர் வீரனைக் கேட்கிறானே என்று பார்க்கிறீர்களா? நல்ல அமைதியான முகம். மேலும் ஊமை என்று நினைக்கிறேன். உங்கள் பக்கத்தில் பாதுகாவலனாக இருப்பதைப் பார்த்தால் சண்டமாருதனாக இருக்க வேண்டும். அவனை எனக்குக் கொடுப்பதானால் நான் உங்கள் கோரிக்கையை ஏற்பேன்!''

சிவாஜி சினந்து போனார்...

பாலாஜி பதைத்துப் போனான்...

பூஜ்யா புழுங்கிப் போனாள்...

‘‘ஏனிந்த விழிப்பு?’’

அப்சல்கான் குத்தலாகக் கேட்கிறான்.

‘‘அவன் எனது அடிமை, என்னைத் தவிர வேறு எவரிடத்திலும் சேவகம் பார்க்க மாட்டான். பழுத்த இந்துமத வெறியன். உங்களுக்குப் பொருந்தாது அப்சல்கான்!’’

‘‘நான் பொருந்தும்படி செய்து கொள்வேன். அவன் எனக்குப் பொருத்தமானவனாக இல்லாமல் போனாலும் நான் அவனுக்குப் பொருத்தமானவன்!’’

சிவாஜிக்குச் சூடேறுகிறது.

நெஞ்சில் முள்குத்தும் சொற்கள்.

‘‘ஒருவனையல்ல; ஆயிரம் பேரைக் கேளுங்கள் அப்சல்கான்! மனப்பூர்வமாகத் தருகிறேன். இவன் எனது அடிமை, தரமாட்டேன்.’’

‘‘ஓ... அப்படியா! இப்படிச் சிந்தித்தால் என்ன?’’

‘‘எப்படி.’’

‘‘நான் வேண்டுமானால் ஓராயிரம் அழகிய பெண் அடிமைகளைத் தருகிறேன்; அவர்களுக்கு ஈடாக இந்த ஆண் அடிமையைக் கொடுத்தால் என்ன?’’

‘‘நீங்கள் கொடுக்கும் அடிமைகள் வளையல்களைப் போட லாயக்கானவர்கள். வாளேந்தமாட்டார்களே!’’

‘‘வாளில் இவன் வீரனா?’’

‘‘சந்தேகமில்லை.’’

‘‘சோதித்துப் பார்க்கலாமா?’’

‘‘அவசியமில்லை. வந்ததன் நோக்கம் இதுவானால் நான் விடை பெறுகிறேன். ஒப்பந்தம் சரிபட்டுவரவில்லை. போர்க்கொடி உயர்த்தி இரண்டில் ஒன்று பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்!’’

தீவிரமாக இவ்வாறு கூறிய சிவாஜி, ஒரு சிங்கத்தின் சிலிர்ப்பே போன்று எழுந்து கொள்கிறார்.

அப்சல்கானும் ஒரு வஞ்சகச் சிரிப்புடன் எழுந்து கொள்கிறான்.

''சிவாஜி! போர் வீரன் மீதும் நீங்கள் காட்டும் நன்றி விசுவாசத்தைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தமாஷாக இப்படிக் கேட்டுப் பார்த்தேன். அச்சா! உங்கள் ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப் பட்டது. கோட்டைக்குச் சென்று உச்சிகாலப் பூஜையை முடித்துக் கொள்ளுங்கள். மாலை நானே உங்கள் கோட்டைக்கு வருகிறேன். நீங்கள் ஒருமுறை என்னைத் தேடி வந்தீர்கள். அதனைக் கௌரவிக்க நான் ஒருமுறை வருவதுதான் நல்லது. ஒப்பந்தங்களை எழுதி வையுங்கள். மாலை நான் கோட்டைக்கு வந்ததும் கையொப்பமிட்டுக் கொள்ளலாம். இரவு கோட்டையில் எனக்கு விருந்து வைக்கிறீர்கள். என்ன? சம்மதந்தானே?''

பேச்சின் அஸ்திவாரத்தில் பயங்கரம் இருப்பது தெரிகிறது. ஆயினும் நமது கோட்டைக்குள்தானே என்று எண்ணி மாவீர சிவாஜி சம்மதித்தார்.

அப்சல்கானும், ''ரொம்பவும் மகிழ்ச்சி, சிவாஜி! ரொம்பவும் மகிழ்ச்சி!'' என்று கூறியவாறு சிவாஜியின் அருகே வந்து, ''நமது மகிழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்வோம்!'' என்று சொல்லி ஆலிங்கனம் செய்தான்.

சிவாஜியும், அந்த ஆலிங்கனத்தை ஏற்க இருகரங்களையும் விரிக்காமல் இடது கரத்தை தூக்கி வலது கரத்தை மட்டும் இறக்கிக் கொண்டு சற்று ஜாக்கிரதையாக அணைக்க முயன்றார்.

பாலாஜிக்கு உடல் அதிர்ச்சியால் நடுக்கம் காண்கிறது. அப்சல்கான் சிரிப்பொலியும், பேச்சுத் தோரணையும், அவன் எழுந்து கொண்ட விதமும், அடியெடுத்து வைத்த பாங்கும், கைகளைத் தூக்கிய முறையும்...

ஏதோ நடக்கப் போகிறது என்கிற எச்சரிக்கை, அதிர்ச்சி...

பூஜ்யாவின் கண்கள் அப்சல்கானின் இருகரங்களையும் பின்பற்றுகின்றன...

உண்மையிலே ஆலிங்கனம் செய்து கொள்ளத்தான் இந்தப் பரபரப்பா?

ஆலிங்கனம் செய்த அப்சல்கான், மறுகணம் இடுப்பிலிருந்த குத்துவாளை எடுப்பதை மிக நுட்பமாக உணர்ந்து கொண்ட பூஜ்யா, அடுத்தகணம் -

''பிரபோ''...

இவ்வளவுதான் அலறினாள், அந்தக் கூடாரமே அதிர்ந்தது...

ஓ... இது பெண் குரல் - முடங்கல் தெரிவித்த பூஜ்யா என்பதை ஒருகணம் யோசித்த அப்சல்கான் தன்னை மறந்த அந்த ஒரு கணத்தில்...

சிவாஜி அதற்குள் புலிநகத்தை மாட்டிக் கொண்ட இடது கரம் அப்சல்கான் வயிற்றில் பாய...

''ஐயோ!'' என்று அப்சல்கான் அலற...

வயிற்றிலிருந்த குடல் சரிந்துவிழ...

அடுத்தகணம்...

சிவாஜியின் வலது கரம் தனது குத்துவாளை உருவி, குடல்சரிந்து தள்ளாடிய அப்சல்கான் மார்பில் ஆழப்பதிந்து விடுகிறது.

[1]அப்சல்கான் என்கிற ராட்சஸ வீரன் அடிபெயர்ந்த மரம் போல தரையில் சாய்கிறான்...

அப்சல்கான் மெய்க்காப்பாளர்கள் வீரமுடன் பாய...

பாலாஜியின் வாள்முனை அவர்களைப் பதம் பார்த்து விடுகிறது.

---

1. அப்சல்கான் கொலைபற்றி ஏராளமான தகவல்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகக் கூறுகின்றன. அவற்றை மிகுந்த பொது நோக்குச் சிந்தையுடன் ஆராய்ந்து எனது கற்பனையைச் செலுத்தியிருக்கிறேன்.

பீஜப்பூர் வீரர்கள் திரண்டுவருவதற்குள் வெளியில் ஒரு பயங்கர வெடிச்சத்தம். தங்கள் வீரர்களுக்கு எச்சரிக்கும் வெடிச்சத்தம்.

தயாராக இருந்த மகாராஷ்டிர வீரர்கள் குதிரைகளை விரட்டிக் கொண்டு பாய்கிறார்கள்.

எங்கும் கொலைகளும், குத்துக்களும், கூக்குரல்களும்...

சிவாஜி, தனது அருமைக் காதலி பூஜ்யாவை பக்குவமாக வெளியில் அழைத்து வந்து சுற்றுமுற்றும் கவனிக்கிறார். சாரட்டு எங்கோ இருக்கிறது. பக்கத்தில் தயாராக இருந்த ஒரு திடகாத்திரமான குதிரையில் அமர்த்திக் கொண்டு வாயுவேகம் மனோவேகமாகச் செலுத்தி அவ்விடத்தை விட்டகன்றார்.

அன்று : 11, நவம்பர், 1659.

-----

# 28

பொருள் நெறியை இயற்றல் வேண்டும். அறிஞனாகிய இறை பொருள் தொகுப்போன், வருவாயின் பெருக்கத்தையும், செலவின் சுருக்கத்தையும் காட்டுதலோடு மாறுபாட்டையும் அறிந்து விலக்கல் வேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 27).

**பீ**ஜப்பூர் படைகள் கல கலத்துப்போயின. அப்சல்கான் கொலையுண்ட செய்தி, சரித்திரத்தின் பிரமிக்கத்தக்க பயங்கரச் செய்தியாயிற்றே!

அந்தக் கொலைக்குப் பிறகு மகாராஷ்டிர வீரர்கள் தங்கள் உயிரை எளிதாக மதித்துப் பீஜப்பூர் படைகளை விரட்டியடிக்க எடுத்துக் கொண்ட வேகம் நிறைந்த வீராவேச முயற்சி...

ஒருவார காலத்துக்குள் பிரதாப கோட்டையில் ஒரு பீஜப்பூர் வீரனைக்கூடத் தங்கவிடாமல் துரத்தியடித்துவிட்டார்கள்.

ஆ! அப்சல்கான் கொலைச் செய்தி இந்தியாவையே பெருங்கலக்குக் கலக்கிவிட்டது.

அப்போதுதான் ஔரங்கசீப் பாதுஷா விருதுடன் ஆக்ரா ஆட்சியைக் கைப்பற்றி இருந்தார். அந்த ஔரங்கசீப்பையும் இந்தக் கொலைச் செய்தி குலைநடுங்கச் செய்துவிட்டது! ஓ... சிவாஜியை விட்டுக் கொண்டே போனால், நாளை ஆக்ராவே அழிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிற பயம் கலந்த ஐயம் ஏற்பட்டு விட்டது.

ஆனால் பீஜப்பூர்?

மிகப் பெரிய பீதியில் ஆழ்ந்துவிட்டது. எப்பேர்ப்பட்ட மாவீரன் அப்சல்கான்! அவனையே வீழ்த்திவிட்ட சிவாஜி இந்தப் பீஜப்பூரை அதாகதம் பண்ண எவ்வளவு நேரம் பிடிக்கும்?

பீஜப்பூர் சுல்தானா பேகம் தனது மெக்கா பயணம் இந்த ராட்சஸ சிவாஜியால் தடைபட்டு நிற்குமோ என்று பெரிதாகப் பயந்து போனாள்.

எவ்வழியிலும் சிவாஜியை விட்டு வைக்கக் கூடாது.

உடனடி முயற்சிகள் என்ன?

ஓர் இரகசிய செய்தி வருகிறது. எந்த ஒற்றன் எங்கிருந்து அனுப்பினானோ? பீஜப்பூர் அமைதி கொள்ள வேண்டுமானால் ஷஹாஜி பான்ஸ்லேவை விட்டுச் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். யார் எழுதினார்கள்? யாரோ? ரகசிய செய்திதானே! நல்ல ஆலோசனைதான்.

ஷஹாஜி பான்ஸ்லே நினைவுக்கு வருகிறார்.

ஆ... இந்த நினைவைப் பூஜ்யா தூண்டியிருப்பாளோ? ராஜதந்திர சர்வ வல்லமை பொருந்திய அவளும் ஏன் செய்யக் கூடாது? எப்படியோ! பீஜப்பூர் பிழைக்க வேண்டும்.

எத்தனை முறைதான் அவர் மகனை எதிர்க்க முன்வருவார்? இம்முறை அவரைக் கருநாடகத்திலிருந்து வரவழைத்து, மகனை எதிர்த்துச் சிறைப்படுத்திவா என்று உத்தரவிட்டால், செஞ்சோற்றுக் கடனுக்காக அவர் பீஜப்பூரைப் பகைத்துக் கொள்ளாவிட்டாலும் பதவியை ராஜினாமா செய்து விடலாம் அல்லவா? எதிர்க்கச் செய்வதைவிட ஏமாற்றச் செய்வதுதான் நல்லது. வந்த செய்தியும் ஒரு சாதகத்தையே சொல்கிறது.

ஆக்ராவுக்குத் தூது அனுப்பி ஔரங்கசீப்பை வேண்டிக் கொள்ளலாம் என்றாலோ, படையுதவி வரும். சிவாஜியை வென்று விடுவது ஒருபுறமானாலும் பீஜப்பூருக்கு மீண்டும் தலைவலிதானே?

எதற்காக இந்தச் செய்தியைப் பின்பற்றுவது?

இந்தப்பாடு அந்தப்பாடு ஏன்?

அப்சல்கானைப் பழிவாங்கிய சிவாஜியைப் பழிவாங்க வேண்டும். அப்சல்கான் சிந்திய ரத்தத்தை இந்தச் சிவாஜி சிந்தியாக வேண்டும். ஏதோ புலிநகம் வைத்திருக்கிறானாம் புலிநகம்! என்ன ஆயுதம் அந்தப் புதிய ஆயுதம்? ஏ, சிவாஜி! உனது குடலைப் பிடுங்க...

குடலைப் பிடுங்க...

இந்தச் செய்தியை யார் அனுப்பினார்களோ? இந்த மொட்டைச் செய்தியைப் பிறகு பின்பற்றிப் பார்க்கலாம். முதலில் எதிர்க்கிறவரை எதிர்த்துச் செயல்படப் பார்ப்போமே!

நினைவில் வருகிறான் ருஸ்தூம்கான்...

ஆ! அந்தப் பயங்கரனை அனுப்பி ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கையில்...

பீஜப்பூர் யுவராஜன் முகமது என்கிற மாவீரனுடன் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் சுல்தானா பேகத்தின் கண்கள் கலங்கி விட்டன. அவன் வேறுயாருமில்லை; கொலையுண்ட அப்சல்கானின் அருமந்த புதல்வன். மாவீர இளைஞன்!

அவன் முறைப்படி சுல்தானியாவை வணங்குகிறான். அவன் மிகப் பெரிய காரியத்தைச் சாதிக்க... ''இன்ஷா அல்லாஹ்'' சொல்லுகிறான், அவனது முகம் செக்கச்செவேலென்று சிவந்து காணப்படுகிறது.

அவன் ஏன் வந்திருக்கிறான்? எதற்காக 'இன்ஷா அல்லாஹ்' சொன்னான் என்பது சுல்தானா பேகத்துக்கு நன்றாகவே புரிகிறது.

''முகமத்! ஏதோ ஒரு காரியத்தைத் தொடங்கப் போகிறாய் என்பது தெரிகிறது.'' - சுல்தானா பேகம் ஆச்சரியமுடன் வினவுகிறாள்.

''ஆம், பேகம் சாஹிபா! என் தந்தையைக் கதற கதற கொலை செய்த அந்த சிவாஜியைத் துடிக்க துடிக்க பழிவாங்கப்போகிறேன். எனக்குப் படையுதவி தேவை. அத்துடன் யுவராஜாவை என்னுடன் போருக்குத் தலைமைதாங்க ஆணையிட வேண்டும்!''

''யுவராஜனையா?''

''ஏன்? அவர் எப்போதுதான் யுத்தகளத்தைத் தெரிந்து கொள்வது? மேலும் யுவராஜனே யுத்தத்தில் இறங்கினால், அதுவும் முதன் முதலாக இறங்கினால் வீரர்கள் புதிய உற்சாகம் கொண்டு போர் புரிவார்கள். வெற்றி நமக்கு நிச்சயம்! வெற்றியோ தோல்வியோ. சிவாஜியைக் கொலை செய்துவிட்டால் அதுவே பெரிய வெற்றி. அதனை வெறிகொண்டு செய்து முடிப்பேன்.''

யோசிக்கிறாள் சுல்தானா பேகம், முகமதுவின் ஆலோசனை சரிதான்; குமாரனைப் போருக்கு அனுப்புவதாவது?

''அம்மா! தயங்க வேண்டாம். நானும் யுத்தகளத்தில் இறங்க வேண்டும் என்கிற துடிப்பில் இருக்கிறேன், மறுக்காமல் ஒப்புக் கொள்ளுங்கள்!''

அலி ஆடில்ஷா சற்று குரலை உயர்த்தியே வேண்டினான்.

சுல்தானா பேகம் ஒருவாறு தெளிந்து ருஸ்தும்கானுடன் அனுப்ப ஒப்புதல் தெரிவித்தாள்.

யுவராஜனுக்கு மகிழ்ச்சி.

தோள்கள் விம்மின.

அடுத்து -

போர்முரசம் பேயாய் ஒலிக்கிறது. மீண்டும் போர்ப் பயணமா?

பீஜப்பூர் மக்களிடையே பீதி அலைமோதுகிறது.

**ப**னகலக் கோட்டையை முதலாவதாக முற்றுகையிட்ட பீஜப்பூர் படைகள் வெறிகொண்ட நிலையில் தங்கள் பிறைக் கொடியைப் பார்க்கின்றன.

ஒரு கோட்டையை முகமதுவும், அலி ஆடில்ஷாவும், மறுகோட்டையை ருஸ்தூம்கானும் மாறி மாறி முற்றுகையிட்டு வீரசிவாஜியை மூச்சுத்திணறடிக்கிறார்கள்.

பீஜப்பூரின் இப்படியான எழுச்சியைக் கண்டு சிவாஜியின் நாற்பது கோட்டைகளும் ஒருகணம் நடுங்கி மறுகணம் அடங்குகின்றன. படைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் பீஜப்பூரே துப்புரவாகிவிட்டிருக்குமோ என்று எண்ணும்படியாக இருக்கிறது.

ஓ... பீஜப்பூர் வீரர்களற்றுக் காலியாகக் கிடக்கும். சுல்தானா பேகம் அப்படியான வெறி கொண்டு படைகளை ஏவி இருக்கிறாள்...

ஆக்ராவில் சக்கரவர்த்தி ஔரங்கசீப் இச் செய்தியை கேள்விப் படுகிறார்...

இப்போது பீஜப்பூரை மிகவும் எளிதாகப் பிடித்து விடலாம் என்றாலும் இது கோழைத்தனம். நாம்வேறு குறுக்கிட்டால் பீஜப்பூரின் எண்ணம் சிதைந்து, நாடும் சிதைந்து நம் வசம் ஆவது உறுதி என்றாலும், சிவாஜியின் கையோங்கிவிடும். அவன் படைபலத்தை வலுப்படுத்திக் கொள்வான். இந்த இருதரத்துப் போர்ப்படைகளின் முடிவைத்தான் பார்க்கலாமே என்று வாளாயிருந்துவிட்டார் ஆக்ராவின் சக்கரவர்த்தி ஔரங்கசீப்.

இருபடைகளின் மோதல்களால் இருவருமே பலவீனப்படப் போகிறார்கள். யாராவது ஒருவர் வெற்றி பெற்றே தீர வேண்டும். வெற்றி பெற்றவர் மீது தமது வீராவேசத்தைக் காட்டி ஜயப்பதாகை நிறுவலாம் என்பது சக்கரவர்த்தி ஔரங்கசீப்பின் ராஜதந்திரம்.

ரெய்லி மலைக் குன்றிலிருந்த ராஜ கோட்டை - பிரசண்ட கோட்டை ஒரே மந்திராலோசனையில் மூழ்கிக் கிடக்கிறது.

அப்சல்கானின் கொலைக்குப் பிறகு இவ்வாறு பீஜப்பூரே திரண்டுவரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஒருபுறம் ருஸ்தூம் கானின் படைகள்; இன்னொருபுறம் பீஜப்பூர் யுவராஜனும் அப்சல் கானின் மகன் முகமதுவும் அணிவகுத்த படைகள்.

தனது கீற்றுக் குடிலில் அமர்ந்து வீணை வாசித்துக் கொண்டே மண்டையைப் பிய்த்துக் கொள்கிறாள் பூஜ்யாதேவி. அவளது சிந்தனை போராடுகிற போதெல்லாம் அவள் வீணையின் நாதத்தில் ராகத்தைப் பிறப்பித்து அதனிடம் மன்றாடுவாள். பிறகு அர்த்த சாஸ்திர நூலைப் புரட்டுவாள். அப்போது வீணையுடன் போராடிய ராகம் அடாணா! கோபத்தைக் கொப்பளிக்கும் கம்பீரமான ராகம்! ம ப ரீ, ஸ்தா...[1]

தைவதத்தில் தொனிக்கும் அந்த ராகம் தாட்சண்யமின்றி பீஜப்பூரை எதிர்த்துக் கொண்டிருந்தது.

தனது ராஜதந்திரம் எங்கே? எங்கே? என்று அது கேட்கிறது! நல்ல ஒரு முடிவைத் 'தா' - என்று கேட்கிறது! ரீ, ஸ் - 'தா...'

அரண்மனை மாளிகையில் வீரசிவாஜியின் மனைவிமார்கள் கதி கலங்கி இருக்கிறார்கள். அண்மையில் மணந்த புத்லீபாய் பெரிதாகப் பயந்து காணப்பட்டாள். அவள் மோதி குடும்பத்தைச் சார்ந்த அழகி. பாவம்! குழந்தை இல்லையே என்கிற கவலை வேறு!

அன்னையார் ஜீஜாபாய், இதற்கு என்ன முடிவு என்பதை மந்திராலோசனை கூட்டிக் கேட்டு ஒரு முடிவுக்கு வந்த பிறகு, நேரே பூஜ்யாதேவி குடிலை நோக்கிப் புறப்படுகிறாள்.

ஏதோ சிவாஜியின் கடைசி அத்தியாயம் முடிந்துவிட்டதாகவே அனைவரும் நினைத்துப் பார்க்கிறார்கள்.

ராஜமாதா ஜீஜாபாய் வருகிறார் என்று கேள்விப்பட்ட வீரர்கள் பூஜ்யாவுக்கு அறிவிக்க ஓடுகிறார்கள்.

பூஜ்யாதான் அடாணா ராகத்துடன் அடம்பிடித்துக் கொண்டிருக்கிறாளே...

அந்தத் தைவதத்தைக் கலைக்க சிவாஜிக்கே தைரியம் கிடையாது என்றால் இவர்கள் யார்?

---

1. அடாணா ராகத்தின் மூர்ச்சனை சுரங்கள்.

குடிலுள் நுழைந்த ராஜமாதா ஜீஜாபாய், ஓர் ஆவேச வீச்சுடன் பூஜ்யா வீணை வாசிப்பதைக் கவனிக்கிறாள். என்னமோ ஒரு பாணியில் அமைந்த ராகம் கூட கோபமாகத் தெரிகிறதே...

ராகங்களுக்கும் பாத்திரம் அமைத்து, அவற்றுக்கும் குணாதிசயங்களைப் போதித்தது தமிழ் நாடாயிற்றே!

இந்த நேரம் பார்த்து பீஜப்பூர் சமஸ்தானத்துக்கு அடங்கிய சித்திஜோகர் என்பான் பதினாயிரம் படை வீரர்களுடன் சிவாஜிக்குச் சொந்தமான கோட்டைகளை முற்றுகையிட முனைந்துவிட்டான் என்கிற செய்தி வேறு...

எதிர்த்து வந்த பீஜப்பூர் மாவீரன் ருஸ்தூம்கானை அடக்கி விட்டார் சிவாஜி என்கிற செய்திவேறு காற்றில் இனிக்கத் தவழுகிறது. அந்தச் சூதாட்டமே போன்ற குயுக்தியான சூழ்ச்சியை வரைபடமாகப் போட்டுக் காண்பித்தவளே பூஜ்யா!

பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீனனான ருஸ்தூம்கானை எவ்வாறு அடக்குவது என்று மூளையைப் பிய்த்துக் கொண்டிருந்த வேளையில் இந்தச் சூழ்ச்சியைக் கையாண்டார். அதில்தான் ருஸ்தூம்கான் வீழ்ந்துபட்டு ஓடத் தொடங்கினான்.

-----

# 29

நால்வகை வருணாச்சிரமங்களுடைய இவ்வுலகத்து மக்கள், அரசனது தண்ட நீதியால் காக்கப் படுவாராயின் தத்தம் கடமைகளை மேற்கொண்டு தமக்குரிய இல்லங்களிலிருந்து இனிது (அரசாங்கம் பாதுகாப்பில்லையேல் எவரும் பயமின்றி வாழ முடியாது) வாழ்வர்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 2).

**வ**ருகிறவர்களெல்லாம் பூஜ்யாவை அனுப்பு... பூஜ்யாவைக் காணிக்கையாகக் கொடு... பூஜ்யா தேவை...

பூஜ்யா, பூஜ்யா, பூஜ்யா, பூஜ்யா...

ஔரங்கசீப் கண்களில் பட்டுவிட்டாலும் பட்டுவிட்டாள்...

பரபரவென்று செய்தி எதிரிகள்பால் பரவியது ஒருபுறமானாலும், ஏற்கெனவே ஒற்றர்கள்பால் கேள்விப்பட்ட செய்திதானே?

' பூஜ்யா பேரறிவும் பேரழகும் கொண்ட காவியக் கன்னி!

பூஜ்யாவை ருஸ்தும்கான் பார்த்ததில்லையே...

எனவே ஒரு அழகிய வேசி இதற்காக உடன்பட்டாள். மகாராஷ்டிர மண்ணில் சுதந்திரோதயம் காண அந்நாளில் வேசிகள் கூட தியாகிகளாய் இருந்தனர்.

சிவாஜி, தமது சமாதானத் தூதுவைப் பூஜ்யா மூலம் அனுப்புகிறார். இனிக்கக் காத்துக் கொண்டிருந்த ருஸ்தும்கான், பூஜ்யா போர்வையில் வந்த வேசியை வரவேற்று மகிழ்ந்தான். அதன் மூலம் அன்றைய யுத்தம் ஓய்ந்துகிடக்கிற நேரத்தில், மகாராஷ்டிர வீரர்கள்

தருமத்தை மீறிப் புகுந்து, இஸ்லாமிய வீரர்களை வெட்டி வீழ்த்தினர்.

நல்ல போதையில் - வேசியளித்த போதையில் கிடந்த ருஸ்தூம்கானுக்கு விவரம் தெரியவே வெளியே ஓடிவந்து கவனிக்க...

சிவாஜி அதாகதம் புரிவது தெரிகிறது.

சிவாஜி இவ்வாறு சில சமயங்களில் யுத்த தருமத்தை மீறியதுண்டு; பாசாங்குகள் செய்ததுண்டு; இதுவும் ஒருவிதமான ராஜ தந்திரம் என்பது பூஜ்யாவின் போதனை. இப்போதும் அப்படியே மீறினார்.

வந்தவள் வேசி; பூஜ்யாவல்ல என்பது தெரிந்ததும் சினம் கொள்கிறான் ருஸ்தூம்கான். ஆனால் அவன் அந்த வேசியை ஒன்றும் செய்யவில்லை. அவள் - அந்த வேசி உயிர்போயிற்றென்றே எண்ணினாள். ஆனால் ருஸ்தூம்கான்...

''இங்கேயே இரு! உன்னை ஒன்றும் செய்துவிட மாட்டேன். தப்பினால்தான் தலைபோகும்!'' என்று கூறி வாளையுருவிக் கொண்டு குதிரையின் மீது பாய்ந்தான்.

பெண் வெறியால் ஏற்பட்ட பலவீனமே அந்த வேசியைத் தப்பச் செய்ததேயொழிய, அதற்குப் பெயர் மன்னிப்பாகாது. அவள் உயிர் அவளிடம்தான்!

இருதினங்களில் ருஸ்தூம்கான் வீழ்ச்சியடைந்து பின்வாங்கி ஓடிவிட்டான். அவனைப் பின்தொடர்ந்து குதிரைப் படைகளுடன் சிவாஜி விரட்டிக் கொண்டிருந்த அதே வேளையில்தான்...

குடிலில் பூஜ்யா அடாணா ராகம் வாசித்துக் கொண்டிருந்தாள். ராஜதந்திரத்துக்குத் தோஷமில்லையானாலும், தனது பெயரில் ஒரு வேசியை அனுப்புமாறு கொடுத்த அபிப்பிராயம் கசந்து, அவள் மீதே அவளுக்குக் கோபம் கண்டு அடாணாவாக்கியது!

கண் திறந்து பார்த்தபோது...

எதிரே ராஜமாதா.

தன்னை மறந்து எழுந்த பூஜ்யா, தனது ராஜமாதாவின் பாதம் தொட்டு மரியாதை செலுத்துகிறாள்.

''ஏன் பூஜ்யா, முகம் சிவந்து காணப்படுகிறாய்?''

''என் காதலர் ரத்தத்துடன் விளையாடிக் கொண்டிருக்கிறாரே!''

அயர்ந்து போனாள் ராஜமாதா ஜீஜாபாய். அந்த ரத்தம் இவள் முகத்திலா?

''பூஜ்யா! நான் வணங்கும் தெய்வம் பவானித் தாயைப் பார்த்ததில்லை. உன்னைப் பார்க்கிறேன்.''

''பெரிய வார்த்தைகள் ராஜமாதா!''

''நல்லது பூஜ்யா! இந்தக் கடும்போர் என்னவாகும்?''

''இந்நேரம் ருஸ்தூம்கான் பின்வாங்கி இருப்பான்!''

அது எப்படி நிச்சயமாகச் சொல்கிறாய்?''

''நிச்சயமாகச் சொல்வேன். இன்னும் ஒரு வாரத்தில் இந்த யுத்தம் நின்று பீஜப்பூர் சமாதானத் தூது அனுப்பும்!''

''சமாதானத் தூதுவா?''

''சமாதானத் தூது; சமாதான உடன்படிக்கை. சமாதானத் தூதுவாக வந்து ஒப்பந்தம் செய்து கொண்டு செல்லப் போகிறவர் யார் தெரியுமா ராஜமாதா?''

''யார் பூஜ்யா?''

''எனது காதலரின் அருமைத் தந்தை மாவீரப் பெருமகனார் ஷஹாஜி பான்ஸ்லே!''

''பூஜ்யா!''

''நான் சொல்வது அவ்வளவும் உண்மை. இந்தச் சூழ்ச்சிக்கான ஏற்பாடு செய்தவளே நான்தான். நிச்சயம் அது பலிதமாகியே தீரும்.''

''பூஜ்யா!''

''பீஜப்பூர் படை கிளம்பியதும் நான் சுல்தானியா பேகத்துக்கும், கர்நாடகத்துக்கும் தகவல் அனுப்பினேன். அதிலே பொய்யும் உண்டு;

மெய்யும் உண்டு. ஒரு மகனை வதைக்கிற தந்தையாக இருப்பதைவிட ஒரு மகா சமுத்திரத்தில் விழுந்து சாகலாம் என்றும் தகவல் அனுப்பினேன். அதன் பேரில் ரோஷம் கண்ட ஷஹாஜி ராஜா கர்நாடகத்திலிருந்து புறப்பட்டுவிட்டார். நேற்று பீஜப்பூரை அடைந்து விட்டதாகவும் செய்தி. இதோ நாமும் வெற்றி முரசம் கொட்டப் போகிறோம். நாம் ஒன்றும் பலவீனர்களாகிச் சமாதானத்தை எதிர் பார்க்கவில்லை. அவர்களைப் பலவீனர்களாக்கிச் சமாதான உடன்படிக்கைக்கு வரச் செய்கிறோம்.''

''இந்த எண்ணம் உனக்கு உதயம் கண்டது எந்த அடிப்படை?''

''ரொம்பவும் எளிது. அப்சல்கான் கொலையில் ஏற்பட்ட துடிதுடிப்பால் வந்த பேயாட்டங்கள்! பீஜப்பூர் சுல்தானா பேகத்துக்கு மெக்காவுக்குப் போக வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசை. ஒரு பீஜப்பூர் சமஸ்தானத்தைவிட, மெக்காவின் தரிசனம் மேன்மையான தாக பேகம் கருதுகிறார். ஒரு சத்தியமான இஸ்லாமிய ஆத்மாவுக்கு ஏற்படுகிற புனிதமான ஆசை இது! இந்த நிலையில் பீஜப்பூர் வீழ்ச்சி கண்டால் ஆசை நிராசையாகிவிடும். சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு, பீஜப்பூரை ஷஹாஜி பான்ஸ்லே வசம் ஒப்படைத்துச் சென்றுவிட்டால், ஆபத்து ஏது? தந்தையை மகன் எதிர்க்க முடியாது. தந்தையாரை எதிர்த்தாலும் மகனால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இது சுல்தானா பேகத்துக்கு லாபம்தானே! இப்போது அப்சல்கானும் இல்லை. ருஸ்தூம்கானும், முகமதும், மகன் யுவராஜனும், சித்திஜோக்கரும் பதீகானும் சிவாஜி என்கிற சிங்கத்துக்கு முன் சாதாரணம் என்பது நிரூபணமாய்விட்டது! நமக்கும் தொல்லை தீர்ந்தது.''

மேலும் மேலும் அதிர்ந்து நோக்குகிறாள் ராஜமாதா ஜீஜாபாய்! இவள் பூஜ்யாவா? இல்லை பூரணாவா? ராஜமாதா விடைபெறுகிறாள்.

அப்சல்கான் மகன் முகமது, வெறியடங்காது கடைசி மூச்சுவரை போராடினான்.

வீரமா சிவாஜி, விசால கட்டத்தைக் கடக்கிறபோது அவரை வெட்டி வீழ்த்தவே முகமது வழிமறித்துப் போராடினான். அப்போது பாஜிதேசபந்தன் என்கிற தளபதி ஆற்றிய வீரம்...

அம்மம்மா...

சரித்திரப் புகழ்!

ஒரு காலத்தில் இவன் சந்திரராவ் என்கிற குறுநில மன்னனுடன் சேர்ந்து சிவாஜியை எதிர்த்தவன். இப்போது சிவாஜியின் வீரத்தைக் கண்டு வியந்து நண்பனாகிவிட்டவன். இது ஒரு வீர ரசனைக்குரிய படலம்!

இப்போது அவன்தான், முகமது படைகளை எதிர்த்துப் போராடி சிவாஜியை விசாலகட்டத்துள் நுழைய வழிவகுத்துக் கொடுத்ததோ டல்லாது, வீர சொர்க்கமும் அடைந்தான்.

ஓ... பாஜி தேசபந்த்...

உனது பரிசுத்தமான ஆத்மா சாந்தியடையுமாக!

**சி**வாஜியின் வெற்றி முரசம் கேட்கிறது.

பயந்துபோன பீஜப்பூர் சுல்தானா பேகம், தனது மகா சேனாதிபதி ஷஹாஜி பான்ஸ்லேவைக் கெஞ்சமாட்டாக் குறையாகத் தூது அனுப்புகிறாள்...

எங்கே சிவாஜியின் படைகள் பீஜப்பூர் நோக்கித் திரண்டு வந்துவிடுமோ என்கிற பயம்...

உடன்படிக்கை மட்டும் நிறைவு பெறுமானால்...

அல்லாஹ்...

ஆண்டவனே...

எனது மெக்கா பயணம் அடுத்து ஆரம்பமாகிவிடும்...

அவள் வேண்டுதல் வீண் போகவில்லை.

தந்தை ஷஹாஜி பான்ஸ்லே, பிரசண்ட கோட்டை நோக்கிப் பல்லக்கில் வருகிறார்.

கேள்விப்பட்ட மாவீர சிவாஜி ஓடோடி வந்தார்.

தந்தையின் பாதரட்சையைத் தமது சிரமேல் ஏந்தி பின்னே நடந்துவரத் தொடங்கினார்.

ஆ! அது காட்சியா?

கண் கொள்ளாப் புனிதக் காட்சி... இவரல்லவோ தந்தை! இவரல்லவோ மகன்!

ராஜகோட்டை மாளிகையில் இறங்கியதும்...

முறைப்படி ஒப்பந்த உடன்படிக்கை நடக்கிறது.

அதே நேரத்தில்...

கீற்றுக் குடிலில் பூஜ்யாதேவி வீணையில் மத்யமாவதி என்கிற மங்கல ராகத்தை வாசித்துக் கொண்டே கலகலவென்று சிரிக்கிறாள்...

மேலும் மேலும் மேலும் சிரிக்கிறாள்...

அது வெற்றிப் பெருமிதச் சிரிப்பு!

வீணை நரம்பில் விரல்கள் மத்தியமத்தைத் தொட்டு அசைக்கிறபோதெல்லாம் அவள் சிரிக்கிறாள்...

அந்த மாவீரன் காதலியின் வெற்றிச் சிரிப்பைக் கேட்டு அர்த்த சாஸ்திர நூல் சிரிக்கிறது...

அந்தக் குடில் சிரிக்கிறது...

மகாராஷ்டிரத்தின் எதிர்காலமே மகிழ்ச்சி வெள்ளத்தில் கரை புரண்டு சிரிக்கிறது!

-----

# 30

தாமரைப்பூவின் அகவிதழ் போன்ற நிறமும் மென்மைத் தன்மையும் (நெருப்பிலிடாமலேயே வளைந்து கொடுக்கும் தன்மை), வழுவழுப்பும் ஓசையின்மையும் (உயர்ந்த மாற்றுடைய பொன் குறைந்த ஓசை கொடுக்கும்) ஒளியும் உடைய பொன், மிகச் சிறந்ததாகும். செம்மையும் பொன்மையும் கலந்த நிறமுடைய பொன் சிறந்தவற்றுள் நடுத்தரமாகும். செந்நிறமுடைய பொன் சிறந்தவற்றுள் கடைத்தர மாகும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 2, அத்தியாயம் - 34).

**சா**ணக்கியனின் மறு பிறப்பே போன்று அல்லது சேலை கட்டிய சாணக்கியனே போன்று ராஜதந்திர தம்பூர் சுருதியில் இப்போதெல்லாம் அதிகமாகவே இழைந்து இருக்கிறாள் பூஜ்யாதேவி. அவளது அறிவுப் பிரகாசத்தின் முன்னே மாகராஷ்டிரத்தின் எழுஞாயிறு - புரட்சித் தலைவன் - வீரமா திலகம் சிவாஜி மேலும் ஒளி கண்டு பூனா நகரத்திலிருந்தவாறு நாற்பது கோட்டைகளுக்கும் பூரிப்புப் பிரகடனங்களை வழங்கிக் கொண்டிருக்கிறான்.

ஆ! பக்கத்திலேயே ஓர் அரிப்புச் சொறியாய் இருந்த பீஜப்பூரை அடக்கி, அதனுடன் சமாதான உடன்படிக்கை செய்தாய்விட்டது. எப்பேர்ப்பட்ட மாவீரன் பீஜப்பூர் சேனாதிபதி அப்சல்கான்! அவனைப் புலிநகம் கொண்டு வீழ்த்த எத்துணைக்குத் துணைபுரிந்தாள் பூஜ்யா!

அப்சல்கான் கூடாரம்வரை எவ்வளவு துணிச்சலாகத் தன்னுடன் வந்தாள். அவள் மட்டும் எச்சரிக்கவில்லையானால்...

ஓ... சிவாஜி இந்நேரம் அப்சல்கான் குத்துவாளுக்கு இரையாகி விண்ணுலகம் போகிறாரோ இல்லையோ, மண்ணுக்குள் மறைந்து பட்டிருப்பார். அவரது சுயராஜ்யக் கனவுகளின் எழுச்சியால் பிடிபட்ட கோட்டைகள் இந்நேரம் பீஜப்பூர் மடியில் குட்டிப் பூனைகளாய் உறங்கிக் கொண்டிருக்கும்.

பூஜ்யாதேவியின் பெருமைகள் - ராஜதந்திரச் சிந்தனைகள் - அறிவு ஜீவக் கதிர்கள் மகாராஷ்டிரத்தின் திசைக்குத் திசை பரவித் திவ்யகீதம் பாடச் செய்து கொண்டிருந்தன.

அரசியல் அதிகாரிகள் பலருக்கு இதுபற்றி எவ்வளவோ எரிச்சல்!

மூச்!

வாய் திறக்க வேண்டுமே!

அன்னை ஜீஜாபாயே அரும் பெரும் துணையாக இருந்தாள்.

ஓ! மாவீர திலகத்தின் காதலி, பூஜ்யா!

அரண்மனை மாளிகையில் அனைவரும் மாவீர திலகம் சிவாஜிக்காக எதிர்பார்க்கிறார்கள்.

குறிப்பாக, சிவாஜியின் மனைவிமார்களான, சூரியாபாய், புத்லாபாய், சுகுணாபாய், லட்சுமிபாய், குணவந்தாபாய் ஆகியோர் ஏன் இப்படி எதிர்பார்க்க வேண்டும்?

பூஜ்யா வருகிறாளாம்!

இந்தப் பூஜ்யாவை நேர்முகமாகத் தரிசிக்க விரும்பி அது நிறைவேறாமல் விண்ணுலகமடைந்த சாயாபாயை அவர்கள் நினைத்துப் பார்த்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பூஜ்யா - இதுவரை காதலியின் இருப்பிடத்திலிருந்தும் கரங்கோத்துக் கூடப் பாராத பூஜ்யா, எப்படித்தான் இருப்பாள்?

பேரழகி என்கிறார்கள், பேரறிவாளி என்கிறார்களே?

ராஜகோட்டை அரண்மனை மாளிகையில் பேரரவம். ஆ! பூஜ்யா வந்துவிட்டாள்.

சிவாஜியின் மனைவிமார்களின் எதிர்பார்ப்பு, பல அரசியல் தலைவர்களின் ஆதங்கம்.

பாலாஜி போன்ற சில அரசியல் தலைவர்களே அவளைப் பார்த்திருக்கிறார்கள். அதிலும் பாலாஜி அன்புடன் அங்கீகரிக்கப்பட்ட மைத்துனன்.

அன்னை ஜீஜாபாய் தலைகுனிந்து மாளிகைக்குள் பிரவேசிக்கிறாள்.

பூஜ்யா மறுத்துவிட்டாள்.

இவ்வாறு மறுத்தது இது மூன்றாவது முறை.

மாவீர திலகமான சிவாஜி என்றைக்கு சுயராஜ்யக் கனவு நிறைவேறிச் சத்ரபதியாக அரியணையில் அமருகிறாரோ, அன்றைக்குத்தான் ராஜகோட்டை அரண்மனைக்குள் அவள் பிரவேசிப்பாளாம்.

ஆனானப்பட்ட ஷஹாஜி பான்ஸ்லே - சிவாஜியின் தந்தையார் - பீஜப்பூரின் தனிப்பெருந் தானைத் தலைவர் - பதினேழாம் நூற்றாண்டின் செஞ்சோற்றுக் கடன்மிக்க கர்ணன் - ராஜகோட்டைக்கு எழுந்தருளிய போது, பீஜப்பூர் சமாதான உடன்படிக்கையை முடிக்க வந்திருந்தபோது, பூஜ்யாவைப் பார்க்க ஆளையனுப்பி வைத்தார்.

தமது அருமந்த புதல்வனுக்குப் பக்கத் துணையாக நின்று ஓர் அரசியல் புத்தகமாக விளங்கும் பெண் சாணக்கியளாயிற்றே பூஜ்யா!

பூஜ்யர் என்பது சாணக்கியனின் மறு பெயராயிற்றே!

அப்போதும் பூஜ்யா மறுத்துவிட்டாள். அவளது இலட்சியம் நிறைவேறாதவரை அவள் ஓலை வேய்ந்த அந்தக் கீற்றுக் குடிலை

விட்டு அரண்மனைக்கு வரமாட்டாளாம். முடிவில் ராஜா ஷஹாஜி பான்ஸ்லேதானே அந்தக் குடிலுக்கு போய்க் காண நேர்ந்தது.

வைர நெஞ்சு படைத்தவள் - தமிழின் வார்ப்பட அழகி - காவிரிக்கரையில் உதயமான அக்காலத்துக் கவிதை மகள் - வேத சாஸ்திர வித்துக்குப் பிறந்த பிராமணோத்தமியாயிற்றே பூஜ்யா!

குதிரையின் குளம்படிச் சத்தம் வேகமாகக் கேட்கிறது!

ஓ! தனது அருமைக் காதலர் வருகிறார். சிவாஜி மகாராட் வருகிறார்...

குளம்படியின் கதிபேதம் அவளுக்குத் தெரியும். அது சிவாஜியின் குதிரை கால்கள் எழுப்பும் லயப்பிரமாணச் சத்தம். செவிகளுக்கு அத்துபடி.

குளம்படி யோசை நிற்கிறது.

சற்றைக்கெல்லாம் சிவாஜி வேகமாக அந்தப் பர்ணசாலையே போன்ற குடிலுக்குள் நுழைகிறார்.

வந்ததும் வராததுமாக ‘அன்னை மூன்றாம் முறையாக அழைத்தும் ஏன் மறுத்துவிட்டாய்? எனது மனைவிமார்களும், மக்களும், அரசியல் பேரதிகாரிகளும் உன்னை உளமாரப் பார்க்கத்தானே அழைத்தார்கள்? என்னதான் லட்சியம் இருந்தாலும் அது ஒருநாள் நிறைவேறத்தானே போகிறது? அரண்மனைக்குள் பிரவேசித்தால் என்ன?’ என்று கடுமையாகக் கேட்கப் போகிறார் என்கிற எதிர்பார்த்தாள் பூஜ்யா.

ஆனால் சிவாஜி உள்ளே நுழைந்ததும் ஒருகணம் மலைத்து நின்று கவனிக்கிறார். பேரலங்காரத்துடன் காட்சியளிக்கிறாள் பூஜ்யா.

பூஜ்யம் என்றாலே மிகப் பெரிய எண்ணிலடங்காத் தத்துவம். இப்போது அவள் எண்ணத்திலடங்காப் பூரணமாகக் காட்சி தருகிறாள்.

ஆ! அன்றைக்குக் காட்டில் நீர்க்குடம் சுமந்து வந்தபோது சந்தித்த பூஜ்யாவா இவள்? தன்னை இடறச் செய்த கல்லைத் தூள் தூளாக்கி வெறியடங்கிய பூஜ்யாவா இவள்?

நடுவில் ஆண்டுகள் பல, காலதரிசனத்தின் காலடியில் அங்கப் பிரதட்சிணம் கண்டாலும், இவளது அங்கம் அன்றைக்கு இருந்தது மாதிரிதானே இன்றைக்கும்...

ஓ...?

காவியத்தின் இளமையைக் காலத்தால் அழிக்க முடியாது என்பது நிதரிசனம்! இங்கே மனத்தால் கூடக் கெடாத கற்பு மகளிரின் அழகுப் பிரகாசத்தையும் அந்தக் காலத்தால் அழிக்க முடியாது. நிஜமான கற்பரசியின் நெற்றியில் வலம்புரி முத்து இருக்குமாம்... அதன் பிரகாசமோ...? அன்றலர்ந்த தாமரையில் அமர்ந்து முறுவலிக்கும் திருமகளோ இவள்?

''வாருங்கள்! ஏன் அப்படிப் பிரமித்து நின்றுவிட்டீர்கள்?''

பூஜ்யாவின் விரல்களில்தாம் வீணை தவம் செய்து சிவாஜி பார்த்திருக்கிறார். அவளது குரலில் எது தவம் செய்கிறதோ? யாழையும் குழலையும் மீறிய ஏதோ ஓர் இனிய வாத்தியம் அவளது தொண்டைக்குள்ளே புகுந்து கொண்டிருக்க வேண்டும்.

உள்ளே நுழைந்த சிவாஜி, எதிரே இருந்த தரைவிரிப்புப் பஞ்சுமெத்தையில் அமர்ந்து திண்டுகளைப் பக்கலில் இழுத்துப் போட்டுச் சாய்ந்து கொள்கிறார். நாற்காலிகளைக் கூட இவள் தனது குடிலுக்குள் அனுமதிக்க மறுக்கிறாளே?

எதிரே இருக்கும் சிவபெருமான் சிலைக்குத் தருகிற மரியாதையா?

அதோ விரிந்து கிடக்கும் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரமான கௌடலீய ஓலைச்சுவடிகளுக்குத் தருகிற மரியாதையா?

ஓரமாக நாத நித்திரை செய்யும் அவளது வீணைக்குத் தருகிற மதிப்பா?

எதற்காகத் தரை விரிப்பில் அமர வேண்டும்?

கேட்டுப் பார்க்கிறார் சிவாஜி.

பொன் வெட்கும் புன்னகை; பூரிப்பின் மின் வெட்கும் கமலப்பார்வை; பூஜா தவமியற்றும் மந்திரப் பிரகாசம்.

''பிரபோ! மேலே பாருங்கள்!''

அவர் பார்க்கவில்லை. மேலே தேர்ந்த ஒரு சைத்திரிகனால் வரையப்பட்ட அவரது வண்ண ஓவியப் படம்.

''என்ன பிரபோ?''

''அங்கே நான் இருக்கிறேன். அது எனக்குத் தெரியாதா?''

''அந்தப் புரட்சித் தலைவன் - சுயராஜ்யக் கனவை நனவாக்கும் வீரமாச் செம்மலின் முன்பு யாரும் நாற்காலியிட்டு அமரக்கூடாது என்பது எனது நோக்கம்!''

''பூஜ்யா...''

அதிர்ந்து போகிறார் சிவாஜி.

''பிரதாப கோட்டைக்கு நீ என்னுடன் வருகை தந்தபோது நாற்காலியில் அமர்ந்தாயே!''

''அது வேறு, எனது குடிலுக்குள்தான் இந்தச் சட்ட திட்டங்கள். அது சரி; வேகமாக வந்ததைப் பார்த்தால் ஏதோ, நான் அரண்மனைக்கு வர மறுத்தது கண்டு சாடுவீர்கள் என்றுதானே எதிர்பார்த்தேன்?''

சிவாஜி கர்ஜனை போலச் சிரிக்கிறார். ''நீ வரமாட்டாய் என்பது எனக்கு நன்றாகவே தெரியும், பூஜ்யா! நான் அம்மாளிடம் சொன்னேன். அம்மாவுக்கும் அது தெரியும். நீ ஓர் இலட்சிய வெறி கொண்டவள் என்பது மற்றவர்களுக்குப் புரிய வேண்டுமே! முக்கியமாக எனது மனைவியர் உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். பேரதிகாரிகள் உள்ளத்தில் வெறுப்பிருந்தாலும் உதட்டில் உன்னைப் பார்க்க வேண்டும் என்கிற தவிப்பு. சிவாஜியை

ஆட்கொண்ட அழகு தேவி, அறிவு ஜீவி யார்? எப்படி இருப்பாள் என்கிற எதிர்பார்ப்பு. வேறொன்றுமில்-''

வார்த்தைகள் முடியவில்லை.

வெளியே ஒரு சைன்யமே திரண்டு வருவது போன்ற சத்தம்...

சிவாஜியின் அகன்ற கண்கள் இமைக்க மறந்து கவனிக்கின்றன.

பூஜ்யாவின் புஷ்ப நேத்திரங்கள் புரிந்து கொள்ள முடியாமல் படபடக்கின்றன. வருகிறவர்கள் யார்?

எழுந்த ஓசையடங்கிச் சில கணங்கள் அமைதி; பாலாஜி உள்ளே நுழைகிறான்.

அவன் ஒருவனால்தானே அந்தப் புனிதக் குடிலுள் நுழைய முடியும்?

தனது மகராஜ தலைவருக்கு வணங்கி, பின்னர் மகாயாக அண்ணியார் - சிவாஜி மகாராட்டின் காதலிக்கு அஞ்சலி செய்கிறான்.

''பிரபோ! வெளியில் ராணிமார்கள், அரசியல் பேரதிகாரிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணியாரை அவர்கள் பார்க்க வேண்டுமாம்.''

விஷயம் புரிகிறது.

ஓகோ! அரண்மனை மாளிகைக்குப் பூஜ்யாவால்தான் வர இயலாது; அது ஒரு லட்சியக் கனவு. அவர்கள் இங்கு வரலாமே என்கிற நோக்கோடு வந்திருக்கிறார்கள்.

ஆ! பூஜ்யாவுக்கு இவ்வளவு பெரிய பெருமையா?

சிவாஜியின் மனம் பூரிப்புக் கண்டாலும் பூஜ்யாவின் மனம் வேதனை கொள்கிறது. எதற்காக இவர்கள் இங்கு வர வேண்டும்?

''யார் இவர்களை இங்கு வரச் சொன்னது பாலாஜி?''

பூஜ்யாதான் கேட்கிறாள்.

''ராஜமாதா அவர்கள்தாம் அனுப்பி வைத்தார்கள். இப்போது ராஜமாதா அவர்கள், இந்த மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தின் பேரதிகாரிகளுக்குப் பேரதிகாரியாகத் தங்களை நியமித்து இருக்கிறார்கள். முன்பு, ஔரங்கசீப்பின் வருகையை உங்கள் சாதுரியத்தால் திசை திருப்பினீர்களாம்! பிறகு பீஜப்பூர் சென்ற எங்கள் தலைவரை உங்கள் சாதுரியத்தால் மீட்டுத் தந்திருக்கிறீர்களாம்! இப்போது பீஜப்பூரே சமாதான உடன்படிக்கை கண்டு நமக்குத் தொல்லை தராமல் இருப்பதற்கே நீங்கள்தான் காரணம் என்பதால், அதிகார ஆளுநராக நேமிக்கப்பட்டிருக்கிறீர்கள். எனவே அனைவரும் தங்களுக்கு மரியாதை தரவும், அந்த ராஜமரியாதையைத் தாங்கள் ஏற்க வேண்டும் என்றும் இருக்கிறார்கள். இது அன்னை ராஜமாதாவின் உத்தரவு!''

விருட்டென்று எழுந்து கொண்டார் சிவாஜி.

தம்மைக் காட்டிலும் தமது அன்னை ராஜமாதா ஜீஜாபாய், இந்தப் பூஜ்யாவின் மீது என்று சொல்வதைவிட, பூஜ்யாவின் அறிவு மீது எவ்வளவு மரியாதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

''பூஜ்யா, முதல் முழுமரியாதை எனது மரியாதையாக இருக்கட்டும்!'' என்று கூறிய வீர சிவாஜி, தமது உடைவாளை உருவி நெற்றிக்கு நேர் நிறுத்த முனைவதற்குள், மிகவும் பதற்றம் கண்ட பூஜ்யா, ''பிரபோ!'' என்ற மெல்லிதான அலறலுடன் ஓடிச் சென்று இரு கரங்களால் அவரது கரங்களைப் பற்றிக் கொள்ள...

ஆ! இத்தனை ஆண்டுகளாகக் காணாத இன்ப சுகம்...

வலிந்து வலிந்து பூஜ்யாவை அழைத்து அணைத்துச் சுகம் காணத் துடித்தபோதெல்லாம், 'எனது காதலர் என்று அரியணையில் அமர்ந்து மகுட விழாக்கண்டு இந்தத் தேசத்துக்குச் சுயராஜ்யா என்று பெயர் சூட்டுகிறாரோ அன்றுதான் அனைத்துச் சுகமும் தரமுடியும் என்று விலகிச் சென்ற பூஜ்யா, இன்று எதிர்பாராத விதமாக - மரியாதையின் காரணமாக ஏற்பட்ட துடிப்பால் வந்து கரங்களைப் பற்றிக் கொண்டதே பெருஞ் சுகமாகக் காணப்பட்டது சிவாஜிக்கு.

பிரதாப கோட்டையில் 'அப்சல்கானை வென்று விடுங்கள்; நீங்கள் கேட்டதுபோல - அல்லது கெஞ்சித் துடிப்பது போல ஒரே ஒரு முத்தம் தருகிறேன்' என்று வாக்குறுதியளித்தாள் பூஜ்யா... அந்த முத்த சுகம் எதிர்பார்ப்பு அவரது மாபெரும் வீரத்தை மேலும் சிலிர்க்கச் செய்தது. தன் இளமையெனும் ஆசையை ஒரு தூண்டில் புழுவாக வைத்துத் தானே இதுகாறும் சிவாஜியைச் சிலிர்த்தெழும் சிங்கமாக்கி வந்திருக்கிறாள்! சிவாஜியினுள் அவள் இருக்கிறவரை, ஔரங்கசீப்பையே எதிர்த்துவிட முடியும் என்கிற மிகப் பெரும் நம்பிக்கையுடன்தானே இதுவரையிலும் அலங்காரத் தேராகவும், அருமருந்து காதலியாகவும், அறிவுப் பொக்கிஷமாகவும் இருந்து வருகிறாள்! அப்சல்கான் புலிநகத்தால் கொலையுண்டு மாண்டதாலும், அதன் எதிரொலி பெருங்குழப்பம் விளைவித்துவிட்டதாலும் பூஜ்யாவின் வாக்குறுதி முத்தத்தைச் சிவாஜியால் பெற முடியவில்லை. பெற முடியவில்லை என்பதைக் காட்டிலும் பெற மனம் விரும்ப வில்லை. ராஜ்யக் குழப்பத்துக்கு மத்தியில் முத்தக் குதூகலமா?

எல்லாமாக அடங்கி இப்போது பேரமைதி...

இன்றைக்குப் பார்த்து அந்த வாக்குறுதியை யாசிக்க இருந்தார் சிவாஜி. ஆனால் நடந்தது?

கரம்பற்றி ஸ்பரிசம் சூடேற்றுகிறது.

வெகுநேர விழிக் குழப்பம்; பார்வையின் மொழிக் குழப்பம்; நெற்றியின் சுழிக் குழப்பம்.

''பூஜ்யா!''

எதிரே பாலாஜி இருக்கிறான் என்பது போல.

இருந்தால் என்ன? ஆருயிர் நண்பன்; உடன்பிறவாத தம்பி.

''எனக்கு நீங்கள் மரியாதை செய்வது, என்னை அவமதிப்பது போல!'' என்றாள் பூஜ்யா. அவளது கரங்கள் விலகின.

''இல்லை பூஜ்யா! என் தாயின் ஆணையைப் பெருமைப்படுத்த நினைத்தேன். இதுவரை நீ எனது இதயத்தின் அந்தரங்கப்

பிரதானியாக இருந்தாய். என் தாய், நான் செய்ய முடியாத - செய்யக் கூடாத பகிரங்கப் பதவியை உனக்கு அளித்துவிட்டார்கள். நீ நன்றாகவே அவர்கள் இதயத்தில் இடம் பிடித்துவிட்டாய். இப்போது அதிகாரிகளும் எனது மனைவிமார்களும்... (யோசனை) [1]மனைவிமார்களும்... அவர்கள் ஏன் வரவேண்டும்?''

சிவாஜியின் இந்தக் கேள்விக்குப் பாலாஜியே விடை பகர்ந்தான்:

''பிரபோ! உங்கள் மகுடாபிஷேகம் வரை எனது அண்ணியார் அரண்மனைக்கு வரப்போவதில்லை. பெரிய ராணியார் சாயாபாய் அவர்கள் அண்ணியாரைப் பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு முடிவில் பார்க்காமலேயே இறந்துவிட்டார்கள். எனது மகாராட்டின் மகுட விழாவுக்குள் எவரேனும் பெரிய ராணியார் மாதிரி அண்ணியாரைப் பாராமலே இறந்துவிட நேரிடுமோ என்று அஞ்சி அவர்களும் வந்திருக்கிறார்கள்.''

பூஜ்யா புன்முறுவல் பூக்கிறாள். சிவாஜியின் தர்மபத்தினிகள் தன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்பதால் அல்ல; தர்மபத்தினிகளை ராணி என்றும் தன்னை மட்டும் அண்ணியார் என்று கூறும் பாலாஜியின் இதயத் தூய்மையான உறவுமுறைக்காக! அதற்கான அடிப்படைக் காரணங்களே வேறு. அவர்கள் அரண்மனையில் இருக்கிறார்கள் என்பதால் அல்ல. சிவாஜியை அரசனாகப் பார்க்கிறபோது அவரது தர்மபத்தினிகள் அரசிகளாகவே தென்படுகிறார்கள். சிவாஜியை அண்ணன் என்று பார்க்கச் செய்தவள் பூஜ்யா. எனவே அவள் அண்ணியாகக் காட்சி தருகிறாள்.

---

1. சிவாஜியின் மனைவிகள் விஷயத்தில் வரலாறு தாறுமாறாகக் கூறுகின்றன. மகுட விழாவின் போது எட்டு மனைவிமார்கள் இருந்தார்கள் என்றும், ஏழு மனைவிமார்கள் இருந்தார்கள் என்றும், மூன்றே மனைவிமார்கள் இருந்தார்களென்றும் வரலாறு குழப்புகிறது. மேலும் ஒரு குழப்பத்தைக் கீழே காண்க.

   Da Guardas assertion that Shivaji had eight hundred wives of whom dozene burnt themselves on the funeral pyre, is absolutely unfounded.

   - Shivaji the great
   Dr. Balakrishna.

பூஜ்யா, வெளியே போகலாமா என்பது மாதிரி தனது அருமைக் காதலனை நோக்கினாள்.

சிவாஜி பதில் சொல்லவில்லை.

அவர் முன்னே செல்ல, பின்னே பூஜ்யா நடக்கிறாள். அந்தச் சின்னஞ் சிறு குடிலுக்குள் எத்தனை பேர்கள்தாம் பிரவேசிக்க முடியும்?

தங்கள் மகாராட்டைக் கண்டதும் அதிகாரிகள் மௌனமாகத் தலை பணிந்து வணங்குகிறார்கள். அரண்மனையில் கோஷமெழுப்பி வணங்குவார்கள்.

அம்மாதிரியான ஊளைக் கோஷங்கள் பூஜ்யாவுக்குத் துப்புரவாகப் பிடிக்காது என்பது பலருக்கும் தெரியும். அன்னை ஜீஜாபாயின் எச்சரிக்கையும் அதுதான்.

பூஜ்யாவின் பூரணச் சந்திரன் போன்ற பிரகாச அழகைக் கண்டு, சிவாஜியின் தர்மபத்தினிகள் நியாயமான பொறாமை கொள்கின்றனர்! பெண்களாயிற்றே!

மகாராஷ்டிர ரத்தமே அழகுச் செக்கில் ஆட்டி எடுக்கப்பட்டது என்று கவிஞர் பூஷண் வருணிப்பார். இந்த ரத்தம், தமிழ் ரத்தம். எந்தப் பூஷணாலும் வருணிக்க முடியாத ரத்தம்.

நாகரிக மண்ணின் ஊற்றைப் பருகிய சைவமிக்கப் பிராமண ரத்தமாயிற்றே!

க்ஷத்திரியக் குலமாதுகள் சைத்ரிகக் கண்கொண்டு நோக்குகிறார்கள்.

அதிகாரிகள் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைக்கிறார் மகாராஷ்டிர வீர திலகம் சிவாஜி.

பின்னர் தமது மனைவிமார்கள், பிள்ளைகள், பெண்கள்!

எல்லா மனைவிமார்களும் கரம் கூப்பி வணங்கி வருகிறபோது, சுகுணாபாய் மட்டும் ஏதோ தன்னை மறந்த உத்வேகத்தில் பளிச்சென்று காலைத் தொட்டுக் கும்பிட்டது பலருக்கு வியப்பு.

பூஜ்யாவும் தனது ராஜதந்திரக் கண்கொண்டு நோக்கினாள்.

இருவரும் வயதில் ஒத்தவர்களேயானாலும் ஏன் இந்தப் பணிவு?

சுகுணாபாய் சொன்னாள்:

''பூஜ்யா! நான் என் சித்தப்பா மூலம் ஆண்டாள் திருப்பாவை பற்றி அறிந்திருக்கிறேன். அவர் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் அரசாங்க உத்தியோகம் பார்க்கிறார். நாயக்க மன்னர்களிடம் அவருக்கு நிறையப் பற்றுண்டு. அவர் ஆண்டால் சரித்திரமும் திருப்பாவையும் மகாராஷ்டிரத்தில் சொல்லக் கேட்டுப் பிரமித்துப் போனேன். கிருஷ்ண பரமாத்மாவை நெஞ்சில் எண்ணிக் களங்கமில்லாமல் வாழ்ந்து கனாக் கண்டு பள்ளி எழுச்சி பாடினாளாம். நீயோ, எங்கள் கணவரை நெஞ்சில் பரிசுத்தமாக வைத்துப் புரட்சி எழுச்சிப் பாடுகிறாய்! அந்த ஆண்டாளாக உன்னை எண்ணியே உனது காலைத் தொட்டேன். மற்றபடி உனக்குத் தந்த அதிகாரப் பதவிக்காக அல்ல!''

எல்லாம் மகிழ்ச்சிதான். அதிகாரப் பதவிக்கு அல்ல என்றால்?

பன்மொழிப் புலமை பெற்றவளான பூஜ்யா தெளிவான மகாராஷ்டிரத்தில் கேட்கிறாள்: ''அதிகாரப் பதவிக்காக அல்ல என்றால்?''

''உங்கள் அதிகாரம், இருக்கிற அதிகாரிகளுக்கு உயர்ந்த தாகலாம். ஆனால், எங்கள் கணவருக்கு நீங்கள் அதிகாரி இல்லைதானே?''

வியந்து போனாள் பூஜ்யா. அப்படியே அணைத்துக் கொண்டாள். ஆ! சுகுணாபாய் மிக்க புத்திசாலி. தனது அன்பைக் காட்ட கன்னத்தில் முத்தமிட்டாள். அது ஏனையவர்களுக்கு மேலும் பொறாமையாக இருந்தது.

''பூஜ்யா! எனக்கு உன் குடிலைப் பார்க்க வேண்டும் என்று ஆசை! எங்கள் கணவர் நிறையச் சொல்லியிருக்கிறார். ஆனால் மாமியின் உத்தரவு, யாரும் உள்ளே போகக்கூடாது என்று. அது ஒரு பரிசுத்தமான கோயிலாம். நீங்கள் நிஜமாகவே தன்னைத்தானே கட்டுமானம் செய்து கொண்ட ஆண்டாள்தான்.''

ஒரு தவயோகியே போல் தன்னுள் மென்மையாகச் சிரித்துக் கொள்கிறாள் பூஜ்யா.

அப்போது, பூஜ்யாவின் ரகசிய ஒற்றன் வேகமாகப் புரவியைச் செலுத்திக் கொண்டு வந்தவன், அங்கே ஒரு கும்பலே நிற்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

குதிரையை விட்டிறங்கிய ஒற்றன், முன்னம் சிவாஜிக்குத் தலைபணிகின்றான்.

''யார் நீ?''

சிவாஜிக்கே தெரியாத ஒரு மகாராஷ்டிரப் பணியாளனா?

ஆம்; பூஜ்யாவுக்கென்று ஒரு ரகசியக் குழாமே இருக்கிறது என்பதை சிவாஜி தெரிந்தும் மறந்து கேட்கிறார்.

''அவன் எனது பணியாளன்? ஆனால் உங்கள் சம்பளம் பெறுபவன்.''

புரிகிறது சிவாஜிக்கு.

பூஜ்யா கேட்டாள்:

''என்ன ராம்! இத்தனை பேர் இருக்கிறார்களே என்று பார்க்கிறாயா? இனிமேல் நான் பகிரங்கமாக இயங்கி, சுயராஜ்யத்தை நிர்மாணிப்பேன். எந்த நிலையில் இருக்கிறான் ஷிஷ்டாகான்?''

ஷிஷ்டாகானா?

இது என்ன புது உபத்திரவம்?

எல்லா நெஞ்சிலும் இந்தக் கேள்வி.

''ஔரங்கசீப்பும் ஷிஷ்டாகானும் ஒன்று சேர்ந்து மகாராஷ்டிரத்தின் மீது பெரும் படை திரட்டுகிறார்கள். படைக்கு ஷிஷ்டாகான் தலைமை தாங்கிப் புறப்பட்டுவிட்டான்.''

வந்தவன் பதில் சொன்னான்:

பல கண்கள் அரண்டு மருண்டு துடிக்கின்றன. பூஜ்யா சினம் கொண்ட பெண் சிங்கம் போல் சீற்றத்துடன் சிரிக்கிறாள்.

இப்போது அவள் பேரதிகாரி.

ஆணையிடுகிறாள்!

''யுத்தத்துக்குத் தயாராகுங்கள். ஆனால் யுத்தம் நடக்காமலேயே ஷிஷ்டாகானை விரட்ட வேண்டும் அல்லது அப்சல்கான் முடிவை அவனும் அடைய வேண்டும்!''

என்ன ஆணை இது?

ஆணவம் மிக்க ஆணை!

இவ்வாறு சிவாஜி நினைக்கவில்லை! சூழ்ந்திருந்தவர்கள் நினைத்தார்கள்.

------

# 31

பூசல், வன்செய்கை, வாணிகக் குழு ஆகிய இவற்றைத் தவிர (இந்நிகழ்ச்சிகளில் மாற்று வழக்குத் தொடுக்கலாம் என்பது) வேறு வழக்குத் தொடுக்கப்பட்டவன் மாற்று வழக்குத் தொடுக்கக் கூடாது (மாற்று வழக்கென்பது வழக்காளி யின் பேரில் எதிர் வழக்காளி தொடரும் வழக்கு). தொடுக்கப் பட்டவனிடத்திலும் வேறு வழக்குத் தொடுத்தல் கூடாது. (ஒருவனால் வழக்குத் தொடுக்கப்பட்டவன் பேரில் வேறொருவன் வழக்கு தொடுத்தல் கூடாது என்பது கருத்து).

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**

(அதிகரணம் - 3, அத்தியாயம் - 58).

**ஷி**ஷ்டாகான் அந்நாளைய தனிப்பெரும் முகலாயப் பேரரசின் பிரதிநிதி மட்டும் அல்லாது, ஔரங்கசீப்பின் தாயுடன் பிறந்தவர். சிவாஜி மகாராட்டின் தந்தை ஷஹாஜி பான்ஸ்லே எப்படிப் பீஜப்பூருக்கு ஓர் இரும்புத் தூணோ, அப்படித் தில்லியரசுக்கு ஷிஷ்டாகான் ஓர் இரும்புத் தூண். ஷஹாஜி பான்ஸ்லேவுக்கு இணையான ஒரு மாவீரன் ஷிஷ்டாகான். ஆயிரம் அப்சல்கான்களை ஒரே வாயில் விழுங்கி ஏப்பம்விட வல்ல ராஜதந்திரம் நிறைந்த ராட்சஸ வீரன். அப்பேர்ப்பட்டவன் சிவாஜியைப் பஸ்பமாக்கித் தாம்பூலத்தில் வைத்துச் சுவைக்கப் பூனா நோக்கி வருகிறான். படையோ படை, பெரும்படை! சிவாஜி தமது சாம்ராஜ்ய

வீரர்களனைவரையும் திரட்டினால்கூட, ஷிஷ்டாகான் படைமுன்னே சாதாரணம்.

ஓர் அசாதாரணப் படை, புயலனைய தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

அன்னை பவானீ!

அன்னை பராசக்தியான பவானித் தாயை வணங்கி, வாளை எடுத்து இடுப்பில் அணிகிறார். கண்களில் நியாயமான சத்திய கங்கை.

''தாயே? எனது மக்களை, எனது நாட்டை, எனது [1]சுதந்திர தாகத்தை [2]சுயராஜ்ய கனவைக் காப்பாற்று.''

''உனது சுதந்தர தாகம் நிச்சயம் தணிந்தே தீரும்.''

பெற்றெடுத்த அன்னை - ராஜமாதா ஜீஜாபாயை வணங்கி விடை பெறுகிறார்.

''மகனே! சிவா! பவானித் தாய் உன்னைக் கைவிடமாட்டாள்!''

சிவந்த உதடுகள், கறுமையான மீசை தாடிக் கேசங்களிடையே பிறையாய் முறுவலிக்கின்றன. மனைவி மக்களை நோக்குகிறார்.

''சிவா! பூஜ்யாவும் உன்னுடன் வருகிறாளா?''

அப்சல்கானை வீழ்த்தியபோது பூஜ்யா உடனிருந்து உதவிய ராஜதந்திரியாயிற்றே! சேலை கட்டிய சாணக்கியளாயிற்றே!

''அநேகமாக வருவாள் என்று நம்புகிறேன் தாயே! இன்னும் அவள் வாயைத் திறந்து சொல்லவில்லை.''

''வந்தால் நன்றாக இருக்கும்! இப்போது அவள் பேரதிகாரி யானாலும் நம்மால் ஆணையிட முடியாத அந்தஸ்துக்குரியவள். ஆணையிட்டால் உடன் வரலாம், அவளது அறிவுக்கு ஆணையிட நாம் யார்? எனவே அந்த அறிவு உன்னைத் தொடர்ந்தால் நலம் பயக்கும்.''

---

1. அன்றைய சுதந்தர தாகம், இஸ்லாமியரிடமிருந்து இந்துக்கள் விடுபட வேண்டும் என்பது.
2. சுயராஜ்யா என்ற சொல் முதல் முதலில் காணப்படுவது சிவாஜியின் வரலாற்றில், 'Shivaji the great'.

''எனக்கு ஆணையிட அதிகாரம் உண்டு தாயே! அவளது பதவிக்கு மகாராட் சிவாஜி ஆணையிடுவான்! ஆனால் அவளது அறிவுக்குக் காதலன் சிவாஜி ஆணையிடலாம் அல்லவா?''

ராஜமாதா சிரித்துக் கொள்கிறாள். இத்தனை மனைவி மக்கள் இருந்தும் ஒரு காதலி!

காதல் எப்போதும் அரும்பும்; யாருக்கும் அரும்பும். அது ஒரு நிவேதத்துக்குரிய இறை உணர்வாயிற்றே!

சிவாஜி தமது தோழனும் துணைத் தளபதியும் அந்தரங்கச் செயலாளனுமான பாலாஜியுடன் புறப்படுகிறார்.

இரு புரவிகள் அவர்களைச் சுமந்து கொண்டு பூஜ்யா குடில் நோக்கி விரைகின்றன. படைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பினை மௌலிபந்தனிடம் ஒப்படைத்தார். வேலைகள் சுறுசுறுவென்று நடைபெறுகின்றன.

**கா**லைக்கடன்களை முடித்துக் கொண்டு பூஜையில் அமர்ந்து ஒரு தவயோகியே போலக் கண்மூடித் தியானம் செய்து முடித்து, வழக்கமாகத் தன் அறிவுக்கு ஒளித்துடிப்புக்களை நல்கும் வீணையை எடுத்து மடியில் வைத்துக் கொள்கிறாள் பூஜ்யா.

ஆ! அவள் எதிர்பார்த்த ஆசீர்வாதச் செய்தி வந்துவிட்டது என்று கூறியவண்ணம் வந்து வணங்கி நிற்கிறார் நரசிம்மராவ் - பூஜ்யாவின் அந்தரங்கக் காவல் பணித்தலைவர்.

ஆசிச் செய்தியைச் சிவபெருமான் பாதங்களில் வைத்துப் பணிந்து, பிரித்துப் பார்க்கிறாள். மகான் ராமதாஸ் சுவாமிகளிட மிருந்து வந்த ஆசிச் செய்திதான் அது!

நரசிம்ம ராவ் பணிந்து விடைபெறுகிறார்.

வீணை மீண்டும் பூஜ்யாவின் மெத்தென்ற மடியில் சுந்தசுரமாய் அமருகிறது.

ஓ... ராமதாஸ் சுவாமிகளே!

அம்சாநந்தி ராகம் அவளது விரல்களில் அழகு சுரங்களை ஒலிப்பூக்களாய் உதிர்க்கிறது.

கமதநிஸ். கமதநிஸ். கமதநிஸ்[1]...

பிரதிமத்தியமச் சேர்க்கையுடன் கூடிய மூர்ச்சனை.

ஒரு கட்டத்தில், அவளது சாணக்கியச் சிந்தனை, சுழி முனையில் நின்று யோசிக்கிற வேளையில்...

தஸ்நிஸா.... தஸ்நிஸா... தஸ்நிஸா.

அங்கேயே நின்று சுரங்கள் சஞ்சரிக்கின்றன. ஓர் உச்சக்கட்டத்தை அது நிராகரிக்கிறதா? இல்லை, நிர்ணயிக்கிறதா?

ஓ, புரிபட்டுவிடுகிறது.

வாசலில் சிவாஜியும் பாலாஜியும் வந்து இறங்குகிறார்கள்.

புரவிகள் கனைக்கின்றன.

'பூஜ்யா, உனது தலைவன் வந்துவிட்டான்' என்று கூறுகின்றனவோ?

பூஜ்யாவின் இசைத்தவம் இன்னும் கலையவில்லை. அது 'தஸ்நிஸா'வில் சஞ்சரிக்கிறது.

பாலாஜி வெளியிலேயே நின்று கொள்கிறான்.

உள்ளே நுழைந்த சிவாஜி சத்தமின்றிச் சிறிது நேரம் மெய்மறந்து நிற்கிறார். உச்சநிலை, கான மழை.

கண்களை மூடி ஒரு தவநிலையில் வீணையை ஒரே பிரயோகத்தில் வாசிக்கிற நிலை.

ஆ! ஏதோ ஓர் அபாரமான சிந்தனை வயப்பட்டுத்தான் 'சட்டெ'ன்று ஓசை நிற்கிறது.

பூஜ்யாவின் புஷ்பக் கண்கள் மலர்கின்றன.

---

1. ஸ் - என்பது மேல் ஸ்தாயில் பாடக்கூடிய சட்சமம். அதாவது 'ஸ'! என்றால் கீழ் ஸ்தாயி. 'ஸ்' என்றால் மேல் ஸ்தாயி.

ஆ! தெய்வீக மணம்.

''எப்போது வந்தீர்கள் பிரபோ?''

எழுந்து கொள்கிறாள் பூஜ்யா.

அவர் சிரிக்கிறார். அது 'இப்போதுதான் வந்தேன்' என்று கூறுகிறது.

''சுவாமி! மகான் ராமதாஸ் சுவாமிகளிடமிருந்து ஆசீர்வாதச் செய்தியும் பிரசாதமும் வந்திருக்கின்றன!''

சிவாஜியின் மெய்யே புல்லரிக்கிறது; கண்மூடி ''சுவாமீ!'' என்கிறார். அந்த மகானிடம் சிவாஜிக்கு அபார பக்தியுண்டு. தமது ஆத்மிக ஞான சூரியனின் அனுமதியும் ஆசியும் அவருக்கு எப்போதும் தேவைப்பட்டன.

''காலைச் சிற்றுண்டியாயிற்றா பிரபோ?''

ஆயிற்று என்பது போலத் தலையசைக்கிறார் சிவாஜி. அதுவும் போர்முகம் நோக்கிப் புறப்படுகிறபோது அம்மா தம்முடன் உண்ணாமல் அனுப்பி வைப்பார்களா? ஆயினும் பூஜ்யா கடமைக்காக மட்டும் இல்லாமல் உரிமைக்காகவும் கேட்டாள்.

''நீ சாப்பிடு பூஜ்யா! பேசிக் கொண்டே சாப்பிடலாம்.''

''பரவாயில்லை. போர்முகம் நோக்கிப் புறப்பட்டுவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்.''

''ஆம் பூஜ்யா! உனது கருத்தும் தேவைப்படுகிறது. அடுத்து யுத்த நகாரா முழங்கவேண்டியதுதான்.''

''ஷிஷ்டாகான் அநேகமாக நெருங்கி வந்துவிட்டான் என்று நினைக்கிறேன்.''

பேச்சில் இருபொருள் தென்படுகின்றன. ராஜதந்திரம் தெறிக்கிறது.

''நெருங்கி வந்துவிட்டான்.''

வீரமா சிவாஜியும் அதனை ஆமோதிப்பவரே போன்று பதில் சொல்கிறார்.

''எங்கே எனதருமை மைத்துனர்?''

''வெளியில் நிற்கிறான், பூஜ்யா! எனது காதலிக்கு நான் உத்தரவிடுகிறேன். எனது அரசியல் பேரதிகாரியானாலும் அந்த அதிகாரிக்கு உத்தரவிடும் சர்வ வல்லமை எனக்கிருந்தும் மீண்டும் சொல்கிறேன் - நான் எனது காதலிக்கு உத்தரவிடுகிறேன். பூஜ்யா என்னுடன் புறப்படுகிறாள். அப்சல்கானை எதிர்க்கச் செல்கிறபோது எவ்வாறு என்னுடன் புறப்பட்டாயோ அவ்வாறே இப்போதும் புறப்படுகிறாய்.

''நான் வரமுடியாது!''

''பூஜ்யா!''

அதிர்ந்து போகிற அளவுக்குச் சத்தமிட்டுவிட்டார் சிவாஜி.

பாலாஜி கூட என்னவோ ஏதோவென்று ஒருகணம் பயந்து எட்டிப் பார்க்கிறான்.

ஏதோ சிறு வாதம் போலும்.

''ஏன், இதற்குள் உணர்ச்சி வயப்பட வேண்டும்? நீங்களே யுத்தத்துக்குப் போவதில்லை என்கிற போது நான் மட்டும் எவ்வாறு வரமுடியும்?''

''யுத்தத்துக்கு நான் போகப் போவதில்லையா?''

''ஏன் விழிக்க வேண்டும்? இந்த ஷிஷ்டாகான் விஷயமாக என்னை நம்பிப் பொறுப்பை ஒப்படையுங்கள். இது அப்சல்கான் மாதிரியான விஷயமல்ல. ஷிஷ்டாகான் திரட்டி வரும் படைகள் எண்ணிலடங்காதவை என்பது ஒருபுறமிருந்தாலும் பின்னணியாக ஔரங்கசீப் இருக்கிறான். மேலும் ஷிஷ்டாகான் வங்கத்தின் தனிப் பெரும் மகுட வர்த்தனன். பீஜப்பூர் உடன்படிக்கை என்ன இருந்தாலும் அவர்கள் நமக்குச் சகாயம் செய்யமாட்டார்கள். சகாயம் செய்யா விட்டால் போகிறது. அபாயம் விளைவிக்காமல் இருக்க வேண்டும்.

என்ன இருந்தாலும் ஒரே மதத்தினர். சிவாஜி என்கிற கர்ஜிக்கும் சிங்கம் ரத்த ஞாயிறு வீழ்த்தப்பட்டால் தாழ்விலை என்கிற நெஞ்சத்தோடு இருப்பவர்கள். ஆகவே ஷிஷ்டாகானை ராஜதந்திர முறையிலேயே வீழ்த்த வேண்டும். அவனும் ஒரு நிஜமான ராஜதந்திரி. அப்சல்கனைப் போல முன் கோபி அல்ல. எனவே எவர் எவரை ஏவி எப்படி யுத்தம் செய்து முடிவில் வீழ்த்த வேண்டும் என்பதைச் சந்தர்ப்பத்தை வைத்துச் சிந்திக்க வேண்டும். கொஞ்சம் தர்மத்தை மீறியும் செயல்படவேண்டுமானால் அவ்விதமாகச் செயல்பட்டே தீரவேண்டும். வழக்குகளில் எவ்வாறு சில சமயங்களில் தர்மத்தை மீறலாம் என்று சாணக்கியர் கூறுகிறாரோ, அவ்வாறே வாழ்க்கையிலும் தேவையானால் மீறியே தீரவேண்டும். ஓர் அதர்மவானின் வாழ்க்கைக்காகவோ, உயிருக்காகவோ மீறவேண்டும் என்றால் அது கொடிய குற்றமாகும். ஒரு தர்மவானின் வாழ்க்கைக் காகவும் அவனது உயிருக்காகவும் மீறலாம். எனது காதலர் தேச தர்மகாவலர். அவர் மீறுவதால் எந்தப் பாவமும் காற் பெருவிரலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உச்சிக்கு ஏறிவிடாது. பேசாமல் நீங்கள் என்னுடனேயே இங்கேயே இருக்கலாம். அப்படி நீங்கள் புறப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்றால் பூஜ்யா உங்களைப் பின் தொடர்வாள்.''

பேச்சின் எல்லா நியாயங்களையும் கேட்டுக் கொண்டே வந்த வீரமா சிவாஜிக்குக் கடைசியாகச் சொன்ன வரிகள் பரம நிறைவைத் தருவனவாக இருந்தன. அவர் அதற்கு மேல் ஒன்றையும் பேசிக் கொள்ளவில்லை. பூஜ்யாவின் சிந்தனைக்கே விட்டுவிட்டார்.

கி.பி. 1663.

ஷிஷ்டாகான் தக்கணத்தையே சூறையாடிவிடுவது என்கிற மாபெரும் மூர்க்காவேசத்தோடு நெருங்கிக் கொண்டிருக்கிறான்.

வீரமா திலகமான சிவாஜியின் கோட்டைகளில் ஒன்று சகனம். அதனை முற்றுகையிடுகிறான் ஷிஷ்டாகான். அக்கோட்டைத் தலைவன் பிராக்ஞன் என்பவருக்குப் பூஜ்யா ஓலை போக்குகிறாள்.

'அனைவரும் செத்து மடிந்தாலும் மடியுங்கள்; ஒரு போர் வீரன் உயிர் இருக்கிறவரைக்கும் ஷிஷ்டாகானுக்குப் பணியக் கூடாது.'

அவ்வண்ணமே போரிட்டும் பிராக்ஞனால் முழுதுமாக எதிர்த்தும் போராட முடியாமல் தப்பியோடிவிடுகிறான்.

புயலுக்கு முன்னே அகல் விளக்குப் போன்றவன் பிராக்ஞன். என்ன செய்ய முடியும்?

இது தெரியாதா பூஜ்யாவுக்கு?

இவ்வாறு ஷிஷ்டாகான் முன்னேறுகிறபோது மௌரிபந்த் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைக்க உத்தரவிட்டாள் பூஜ்யா. படைகளை நான்காகப் பிரிந்து, நான்கு திசை மார்க்கமாக எட்டிப் பார்த்துத் திசைக்குத் திசை ஷிஷ்டாகானின் படைகளுக்குப் போக்குக் காட்டி, ஆட்டங்காட்டி, சிறார்களின் கண்ணாமூச்சி விளையாட்டு மாதிரி அலையவிட்டு...

ஓ! இந்த மகாராஷ்டிர வீரர்கள் வேண்டுமென்றே இவ்வாறு மலையரண் பகுதியில் அலைகழித்துப் பழி வாங்குகிறார்கள். இந்த நிலை நீடித்தால் நமது படைகளின் எண்ணிக்கையே குறைந்துவிடும் என்று சிந்தாகுலப்படுகிறபோது, தில்லி அரசு மேலும் ஒரு படையை அணி வகுத்து அனுப்பிவைக்கிறது.

ஜோதிபுரி வேந்தனாகிய சோவத்தன் தலைமையில் வந்த படைகள்தாம் அவை.

ஷிஷ்டாகானுக்கு மேலும் தென்பு கூடிவிட்டது. அந்தத் தென்பின் உத்வேகத்தில் சிவாஜியின் புகழ்மிக்கக் கல்யாணிக் கோட்டை வீழ்ச்சி கண்டது.

மௌரிபந்த் மிக வீரமாகவே போராடினார். மேலும் மௌனம் சாதிப்பது சரியன்று என்று எண்ணிய பூஜ்யா, நேதாஜி தலைமையின் கீழ்ப் பத்தாயிரம் படை வீரர்களை அனுப்பி வைக்குமாறு ஆணை பிறப்பிக்கிறாள்.

கல்யாணி மீண்டது.

ஷிஷ்டாகானைச் சிதறி அடிக்கிறார்கள் மகாராஷ்டிர படை வீரர்கள். ஷிஷ்டாகானா அஞ்சுகிறவன்? அவனது படைகள் மட்டும் சோடையானவையா என்ன? மௌரிபந்தையும் நேதாஜியையும் ஒரு சில சமயங்களில் தண்ணீர் காட்டி விரட்டுகிறார்கள்.

ஷிஷ்டாகானுக்கு உதவிய ரவிபாகினி என்கிற வீராங்கனையின் வீரமிக்க எழுச்சி சிவாஜியைப் பிரமிக்கச் செய்கிறது.

அந்த ரவிபாகினியைத் தோற்கடிக்கச் செய்து, அவளைச் சிறைப்பிடித்து அனுப்பி வைக்கிறான் நேதாஜி. ஆயினும் விடுதலை செய்யும்படி பெண்ணுள்ளமான பூஜ்யாவின் மனம் விரும்பியது. இவ்வாறு பல கோணங்களில் முற்றுகை நீடித்தும் முன்னேறியும் ஷிஷ்டாகானுடைய படைகள் பூனாவை அடைகின்றன.

அருகே நெருங்கியாய்விட்டது, இனி ஐந்தடி போனால் என்ன? பத்தடி போனால் என்ன?

துணிந்து விட்டாள் பூஜ்யா! ‘சாணக்கிய பெருமானே, நீ உபதேசித்த அதர்மத்துக்குள் பிரவேசிக்கிறேன்! தர்மத்தைக் காக்க அதர்மத்தை ஆயுதமாகக் கொள்வதில் தவறில்லை.’

முற்றுகை எத்தனை நாட்களுக்குத்தான் நீடிப்பது?

[1]‘‘மலையில் வாழும் குரங்கே! (சிவாஜியே) இறங்கி வாயேண்டா! அதர்மமாகப் போர் புரிகிறாயே!’’ என்று ஷிஷ்டாகான் திருமுகம் போக்கினான்.

சிவாஜி அளித்த பதில்:

‘‘குரங்கைப் பற்றி உனக்கென்ன தெரியும் மூடனே? அது அன்னை ஜானகியை - தருமத்தைக் காத்து இலங்கையை அதாகதம் செய்து வெற்றி கண்டது. நானும் உன்னை அதாகதம் செய்து வெற்றி காண்பேன்!’’

இன்னும் மகாராஷ்டிர திலகம் சிவாஜி போராடை தரித்துக் களத்தில் இறங்கவே இல்லை.

1. இந்த வாசகங்கள் சரித்திரத்திற்குரியவை.

பூஜ்யா தருணம் பார்த்துக் கொண்டிருந்தாள். எதிரிகள் தலைநகருக்குள் பிரவேசித்தாய்விட்டது. இனி நடக்கப் போவது அழிவு, அந்த அழிவுக்கு முன் ஷிஷ்டாகானை, அதர்மமானாலும் பரவாயில்லை என்கிற முடிவோடு அழிப்பது எவ்வாறு?

யோசிக்கிறாள் பூஜ்யா!

சிந்தனைத் தேரேறி ராஜதந்திரப் புரவிகளைப் பூட்டி பூனாவை அக்கினி வலம் வருகிறாள்.

'கறைபடிந்த அழுக்குகளாய் அந்நியர்கள் இங்குப் புகுவதென்ன நீதி?' என்று, நீதியைச் சாடி அதர்மத்துக்கும் ஒரு தருமத்தை உபதேசிக்கும் புதிய பூஜ்ய கீதையை உபதேசிக்கும் மார்க்கம் தேடுகிறாள்.

**சி**வாஜியால் புகழ் பெற்ற பூனா நகரத்தில் இருப்பது ராஜ்மகால். சிவாஜி சின்ன வயதில் அந்த மாளிகையில் தவழ்ந்து நடந்து விளையாடிய நாட்கள் ஒவ்வொரு சுவரிலும் முத்திரைகளாய் பதிந்திருந்தன. அப்பேர்ப்பட்ட [1]ராஜ்மகாலில்தான் இப்போது மாவீரன் ஷிஷ்டாகான் தனது பதினாயிரம் இஸ்லாமிய வீரர்களுடன் தண்டு இறங்கி இருக்கிறான்.

இஸ்லாமிய இணையற்ற வீரன் அந்த ராஜ்மகாலில் தங்கியதும் பலவிதமான உத்தரவுகளைப் பிரகடனம் செய்கிறான். தனது உத்தரவின்றி எதுவுமே நிகழக் கூடாது என்பது உத்தரவுகளின் தலைமை உத்தரவு. எல்லைப்புறங்களில் பலத்த காவல்.

ஆ! புரட்சித் தலைவர் சிவாஜி உதயம் கண்ட பூனா, இப்போது ஷிஷ்டாகானின் பத்து விரல்களுக்கிடையே அரும்பிய கட்டளைகளுக்குள் விழி பிதுங்கி நடுங்கிக் கொண்டிருக்கிறது.

---

1. இது குறித்து நிறையச் சர்ச்சைகள் இருக்கின்றன. ஷிஷ்டாகான் தங்கியது ராஜ்மகால் அல்ல; கூடாரம் என்று ஒரு சாரார் எழுதியிருக்கிறார்கள். ராஜ்மகால்தான் என்று வேறு சாரார், பின்னால் நடக்கப்போகும் சம்பவம் குறித்து ஆராய்கிறபோது, அப்பேர்ப் பட்ட ஒரு நிகழ்ச்சி நிச்சயமாக ஒரு சாதாரணக் கூடாரத்தில் நிகழ்ந்திருக்க முடியாது என்கிற முடிவில் எனது கண்ணோட்டம் ராஜ்மகாலில் நிகழ்த்துகிறது.

சிம்மக்கோட்டையில் தங்கி ஷிஷ்டாகானின் போக்குகளைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார் சுதந்திர மாப்புருஷர் சிவாஜி. அவருடன் அவரது அறிவு நூல் - அழகு காவியம் பூஜ்யா, வலதுகரமாக நின்று நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வருகிறாள்.

இரவுக் கன்னி நட்சத்திர விளக்குகளை ஏற்றிக் கொண்டிருக்கிறாள்.

சற்றைக்கெல்லாம் அவளது தலைவி நிலாக்கன்னி, இதோ உதயமாக இருக்கிறேன் என்பதுபோல ஒளிக்கீற்றுக் கட்டியம் கூறுகிறாள்.

தனித்த மாளிகை, பெரிய பெரிய கண்ணாடி லஸ்தர் விளக்குகள். வெளியே காவல், கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கிறது.

அந்தத் தனித்த அறையில் எதிரும் புதிருமாக அமர்ந்து, இந்த ஷிஷ்டாகானை எப்படிப் பழிவாங்குவது? மகாராஷ்டிரத்தை எவ்வண்ணம் காப்பது என்பது குறித்தே ஆலோசனை நடக்கிறது.

காலையில்தான் சில முக்கிய அதிகாரிகளைக் கலந்து ஒரு சில முடிவுகள் ஆராயப்பட்டன. எந்த முடிவும் பூஜ்யாவின் விசாலமான அறிவுக்குச் சரியானதாகப் புலப்படவில்லை.

ஆயினும் அவற்றை மதித்துத் தலை அசைத்து வைத்தாள்.

இவை யாவையும் சரியான முடிவாக அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எதிரி இதய பாகமான பூனாவிலேயே வந்து அமர்ந்தாகிவிட்டது. இனி நியாயங்களையும் தருமங்களையும் போர் நெறிமுறைகளையும் ஆராய்ந்தும் அலசியும் பயன் இல்லை.

ஷிஷ்டாகானின் கடுமையான உத்தரவால் மக்கள் மட்டுமா அலை மோதுகிறார்கள்? இங்கே அரசியலே அலை மோதிக் கொண்டிருக்கிறதே!

திடுமென்று என்ன நினைத்தாளோ பூஜ்யா? பளிச்சென்று எழுந்து கொண்டவள், ''பிரபோ! காலையில் நாம் பூனா செல்கிறோம்.

அங்கே ஒரு போலி நாடகத்தை வலிந்து நிகழ்த்துகிறோம். அதன் மூலம் ஷிஷ்டாகானைக் கொலை செய்யப் போகிறோம். அப்சல்கான் வலிந்து வந்து தன் முடிவைத் தேடிக் கொண்டான். வலிந்து சென்று ஷிஷ்டாகானுக்கு முடிவை அளிக்கிறோம். இதில் ஆபத்தும் இருக்கிறது; ஆதாயமும் இருக்கிறது'' என்று கூறியவள், தனது அருமைக் காதலர் சிவாஜியைக் கூர்ந்து நோக்குகிறாள். அந்தப் பார்வையில் சீற்றம் நிறைந்த ராஜநாகத்தின் கடுமை இருந்ததைக் கவனித்த சிவாஜி, ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாமல் ஒருகணம் திகைத்துப் போனார்.

-----

# 32

சாங்கியம், யோகம், உலகாயதம் ஆகிய இம்மூன்றும் ஆன்வீட்சிகீ எனப்படும். திரையீயில் தருமம் அதருமம், வார்த்தையில் அர்த்தமும் அநர்த்தமும், தண்ட நீதியில் நயமும் அபநயமும் விளக்கப்படும். திரையீ முதலிய வற்றின் வன்மை மென்மைகளை ஏதுக்களால் துணியும் ஆன்வீட்சிகீ, உலகத்து மக்களுக்கு இன்ப துன்பங்களில் புத்தியைக் கலங்காமல் நிலைப்படுத்தியும் அறிவு, சொல், செயல்களில் திறன் அளித்தும் உபகரிப்பதாம்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 2).

**மா**வீர திலகம் சிவாஜியும், அவரது காதலி மகோன்னத அறிவு ஜீவியான பூஜ்யாதேவியும் மற்றும் சில அதிகாரிகளும், போர் வீரர்களும் பூனா நகருக்குள் ரகசிய வருகை தந்திருந்தனர். இது குறித்து ஓர் ஈ எறும்புக்கும் தெரியக் கூடாது என்கிற கவனம் ஊசி முனையில் நர்த்தனமாடிக் கொண்டிருந்தது. இப்படியான ரகசிய வருகை குறித்துப் பூஜ்யாவின் ஆணையின்படி உபதளபதி பாலாஜி மிக்கவும் கச்சிதமாகச் செய்து முடித்திருந்தான்.

அந்நகரின் பெருவணிகரும், செல்வச் சீமானுமான கங்காதர ராவ் இதற்கு இணங்கியது, அவருடைய சுதேசிப்பற்றைத் துல்லியமாகப் பறைசாற்றியது.

அன்றிரவு அவரது பரந்து விரிந்த பெரிய மாளிகையில் ஓர் இரகசியக் கூட்டம். கூட்டத்தில் அதிகமானவர்கள் கலந்து கொள்ளாமல், சிவாஜி, பூஜ்யா, பாலாஜி, பூஜ்யாவின் அந்தரங்கப் பணித் தலைவர் நரசிம்ம ராவ் ஆகியவர்கள் மட்டுமே கூடி இருந்தனர். கங்காதர ராவ் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்கிறார். தாம் செய்யும் செயல் தம்மையும் தம் குடும்பத்தினரையும் செல்வத்தையும் அழிக்கவல்ல கொடூரச் செயல் என்பது அவர் அறியாததல்ல. மாவீரன் ஷிஷ்டாகானுக்குத் தெரிந்துவிட்டால் பொழுது விடிவதற்குள் அனைத்துமே பூஜ்யமாகிவிடும். ஆயினும் ஒரு தேசப்பற்று. அந்நாளில் தேசப்பற்று என்பது ரத்தத்தில் ஊறிப்போன தலையாய சொத்து, அப்போதும் கலப்பு ரத்தமுள்ள தேசத்துரோகிகள் இல்லாமல் இல்லை. ஆனால் சதவீதத்தில் மிகவும் குறைந்திருந்தனர்.

ஒற்றை விளக்கு மட்டும் ரகசியமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

ஷிஷ்டாகானின் படைப்பலத்தைப் பற்றியும், அவனது பயங்கரமான ஆணைகளைப் பற்றியும் அவர்கள் ஆராய்ந்து பரிசீலிக்கிறார்கள்.

ஷிஷ்டாகான் மீது யுத்த முழக்கம் செய்து மகாராஷ்டிரத்தைக் காக்க முடியும் என்கிற நம்பிக்கை துப்புரவாக நசிந்துவிட்டது. ஷிஷ்டாகானை மேலும் நீடிக்கவிட்டால் சிவாஜியின் சுயராஜ்யக் கனவு சிதைந்து அடிச்சுவடு அற்றுப் போய்விடும் என்கிற முடிவு தீர்க்கமாகத் தெரிகிறது. பூஜ்யா யோசிக்கிறாள்.

ஓ! இந்நேரம் ஒரு வீணை.

அதில் இருந்து சுரங்களை வேள்வி நடத்தினால் புதிய புதிய யோசனைகள் மிதக்குமே!

ஏற்கெனவே பூஜ்யாவும் சிவாஜியும் கலந்து ஆலோசித்த முடிவே சரியானதாகப் படுகிறது. அதைவிட ஒரு புதிய உபாயம் அப்போதைக்கு அரும்பவில்லை.

''கங்காதர ராவ்! மகளுக்கு மாப்பிள்ளை பார்த்துத் திருமணத்துக்குத் தயாராக இருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா!''

''ஆமாம் மகாராஜ்! ஷிஷ்டாகான் வருகையால் அது தடைப்பட்டிருக்கிறது'' என்றார் கங்காதர ராவ்.

''திருமணத்தை உடனே நடத்தத் தீர்மானியுங்கள். சிவாஜியின் ஆசீர்வாதத்துடன் அந்தத் திருமணம் நடக்க வேண்டும் என்றிருக்கிறது. ஒரு திருத்தமான திருமணமாக அது இருக்கட்டும். தேசப்பற்றுக்காகச் செய்கிற திருத்தம் நிறைந்த திருமணமாக இருக்கட்டும். முதலில் மாங்கல்யதாரணம் நிறைவேறிவிட வேண்டும். பிறகுதான் ஊர்வலம். எனது புரட்சியான முடிவுக்குப் பிறகு நிலைமை எவ்வாறாக இருக்கும் என்ற முடிவு சொல்ல முடியாது. இந்தத் திருமண ஊர்வலத்தில்தான் என் சாகசங்களே ஆரம்பமாகின்றன!''

கங்காதர ராவ் கொஞ்சமும் தயங்காமல் ஒப்புக் கொள்கிறார். அவரது தேசப்பற்றுக்காக பூஜ்யா, மனத்துக்குள் தலை வணங்கிக் கொள்கிறாள். அடுத்து, தனது காதலர் சிவாஜியை நோக்குகிறாள்.

'ஏனைய திட்டங்களை விறுவிறுவென்று எடுத்துச் சொல்ல வேண்டியதுதானே?' என்று அவசரப்படுத்துவது மாதிரி தெரிகின்றன. அந்த ராஜதந்திரம் நிறைந்த விசாலமான திராட்சைக் கண்கள்.

சிவாஜி தமது அடுத்த திட்டங்களைத் தொடங்குகிறார்.

''கங்காதர ராவ்! நான் எனது தாயிடமிருந்து விடைபெறுகிற போதே வாய்க்கரிசியை மனத்தளவில் பெற்று வந்து விட்டவன். ஷிஷ்டாகான், அல்லது சிவாஜி மரணமடைவது உறுதி.''

''மகாராஜ்?''

பதறிப் போனார் கங்காதர ராவ்.

''வேறு வழியில்லை. ஷிஷ்டாகானிடம் மகாராஷ்டிரம் அகப்பட்டுக் கொண்டு சீரழிவதை சிவாஜி ஒரு நாளும் உயிர் கொண்டு சகிக்க மாட்டான். அவனது கனவு சுயராஜ்யம். அது அழிந்துபட்டுப் போகிறபோது சிவாஜி மட்டும் எதற்கு?''

''திட்டங்களைச் சொல்லுங்கள் மகாராட்.''

''உங்கள் மகள் திருமண ஊர்வலத்தின்போது, புனாவுக்குக் கிழக்கேயுள்ள காட்டு வழியில் எனது வீரர்கள், ஒரு குறிப்பிட்ட சமிக்ஞை ஒலி எழுந்ததும் தீவர்த்திகளைக் கொளுத்திக் கொள்வார்கள். ஒரு மாட்டு மந்தையையே சேமித்து அதன் கொம்புகளிலும் தீவர்த்திகளைச் சுற்றி வைத்திருப்பர். எனது சாகசங்கள் முடிவுற்றதும் அவரவர்களுக்குக் கொடுத்த ஆணைகள் சுறுசுறுவென்று நடைபெற்று என்னைத் தப்பிக்கச் செய்யும். இல்லையேல் ஷிஷ்டாகான் தங்கியிருக்கும் மாளிகையே எரிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதில் ஷிஷ்டாகான் சடலம் எரியலாம். அல்லது எனது உடல் சாம்பலாகலாம். இதனால் உங்களுக்கு எந்த விதமான பாதகங்களும் ஏற்படாது. பயம் வேண்டாம்.''

''நீங்கள் வளர்ந்த மாளிகையை நீங்களே எரிக்கப் போகிறீர்களா?''

''ஏன் கூடாது? அந்த மாளிகையில்தானே ஷிஷ்டாகான் தங்கிக் களியாட்டம் நடத்துகிறான்! அது அழியட்டுமே! இதில் ஒரு சாதகம் என்னவென்றால் நான் அறிந்த மாளிகை அது அதன் மூலை முடுக்குகள் எனக்கு அத்துபடி. எனவே எனக்கு எந்த விதமான வழித் தடுமாற்றமும் ஏற்படாது.''

''ஷிஷ்டாகானைக் கொலை செய்வதென்றே முடிவு செய்து விட்டீர்களா மகாராட்?''

''வேறு வழியே இல்லை'' என்று வாய் திறந்தாள் அதுவரை மௌனமாக இருந்த பூஜ்யாதேவி.

பூஜ்யாதேவியைப் பற்றிக் கங்காதர ராவ் காலையில் அதிகப்படியாகவே அறிந்திருந்தார். எனவே அவள் வாய் மூலம், அவளது அறிவு அதை எவ்வாறு ஏற்றுக் கொண்டது என்பதறியக் கேட்டார்: ''இது நமது தர்ம நியாயங்களுக்குப் பாவமாகவும் முரண்பாடாகவும் தெரியவில்லையா பூஜ்யா?''

பூஜ்யா பொறிந்து தள்ளினாள்:

''அதர்மங்கள் அதிகமாகிற போது நான் அவதரிக்கிறேன் என்கிறார், பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா! பாரத யுத்தத்தில் உடன் பிறந்தாரையும், ஆசான்களையும் அர்ச்சுனன் கொல்ல மறுத்த போது உபதேசித்தது தானே பகவத் கீதை? 'ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஸ்சை நம் மந்யதே ஹதம்! உபெ[4]ள தௌ ந விஜா நீதோ நாயம் ஹந்தித ஹந்யதே||'' என்கிறான் பகவான். சாங்கியத்தை இயற்றிய கபிலரும், யோகத்தை விளக்கிய மகேச்சுரரும், உலகாயத்தை எடுத்துச் சொன்ன பிருகஸ்பதியும் நியாய தருமங்களைப் பற்றிச் சொன்னதைப் பார்க்கிறபோது நாம் செய்வது ஓர் அழிவுக்கு ஏற்படுத்தும் அழிவு! எனவே நாம் செய்யப் போவது நியாயமானதுதான்; தருமமானது தான்!''

வியந்து வாய் பிளந்து நோக்குகிறார் கங்காதர ராவ். ஓரளவு சமஸ்கிருதப் புலமையும் சாஸ்திர ஞானமும் உடையவர் கங்காதர ராவ். எனவே அதற்கு மேல் அவர் ஒன்றையும் பேசிக் கொள்ளவில்லை.

கி.பி. 1663, ஏப்ரல், 5-ஆம் நாள்.

அந்திப்போது அவலமாய்ச் சாய்ந்து கொண்டிருக்கிறது.

இருட்டுத் தொடங்கியதும் ஓர் எமதாண்டவமே நிகழ விருக்கிறது என்பது போல நட்சத்திரங்கள் உதயமாகிக் கொண்டிருக்கின்றன.

அந்த மாளிகையே மண விழாக்கோலம் பூண்டு திகழ்கிறது.

''ஓ, பூஜ்யா; நீயும் நானும் மணவிழா செய்து கொள்ளப் போகிறோமோ இல்லையோ, ஒரு மண விழாவில் எனது மரண விழா ஆரம்பமாகிறது'' என்பது போல அடிக்கடி பூஜ்யாவை நோக்கிக் கொள்கிறார் புரட்சித் தலைவர் சிவாஜி.

ஆ! எத்தனை நாள் கனவு அது? என்று, பூஜ்யாவின் காதல் ஒரு நடுக்காட்டில் அரும்பியதோ, அன்று முதல் அவளை அடைந்தே தீர வேண்டுமென்கிற விழைவு.

இந்நாள் வரை அவளால் எப்படித் தாங்கிக்கொண்டு தன்னுடன் பவித்திரமாக வாழமுடிகிறது?

தமிழகத்தின் ரத்தத்துக்கே கற்பு விஷயத்தில் ஒரு பவித்திரம் ஊறிப் போன ஒன்று போலும்! அவள் பிறந்த அந்தக் காவிரி நதி தீரத்தைத் தரிசிக்க வேண்டுமே!

பூஜ்யா பூஜையில் இருக்கிறாள். தனது காதலரை வழி கூட்டி அனுப்பு முன்னர் அவள் அந்தப் பிறவா யாக்கைப் பெரியோனான சிவபெருமானைக் கண்ணீர் மல்க இறைஞ்சுகிறாள்.

'எனது காதலர் ஒரு தர்மத்தை நிலைநாட்ட தர்மத்தை மீறுகிறார். காத்து ரட்சிப்பது உனது கடன். இந்த ராஜ்யத்தின் கொடியில் நீ இருக்கிறாய்; அவரது பெயரில் நீ இருக்கிறாய்! எனது நெஞ்சில் நீ இருக்கிறாய்.'

பூஜையை முடித்துப் பிரசாதத்துடன் வருகிறாள் பூஜ்யா.

சித்த சுத்தியுடன் வேண்டிக் கொண்டு சிவாஜியின் விசாலமான நெற்றியில் இடுகிறாள்.

மாறுவேடம் தாங்கி இருந்த சிவாஜிக்கு, அந்த நெற்றி ஸ்பரிசம் உடலை மின்னலாய்த் தாக்குகிறது.

கங்காதர ராவ் வருகிறார். சில நாழிகைகள் வரை ஏதேதோ உரையாடுகிறார்கள்.

'இந்த மகாராஷ்டிரம் சிவாஜியை இழந்துவிடக் கூடாது' என்று அவர் கோயில்களுக்குச் சென்று அர்ச்சனை செய்து பிரசாதங்களைக் கொண்டு வந்திருந்தார். அனைவரும் உண்டு முடித்தனர்.

வெளியில் மேள தாளச் சத்தங்கள், ஊர்வலம் புறப்படுவதற்கான ஆயத்தங்கள்.

இருட்டி எப்படியோ பத்து நாழிகைகள் பறந்துவிட்டன.

கங்காதர ராவ் விடைபெறுகிறார்.

வெளியே [1]நானூறு வீரர்கள் மாறுவேடங்களில் காணப்படுகிறார்கள்.

பாலாஜியும் நரசிம்ம ராவும் அவர்கள் மத்தியில் மாறுவேடங்களில் காணப்படுகிறார்கள்.

சிவாஜி புறப்பட எழுந்து கொள்கிறாள்.

பூஜ்யாவின் அஞ்சாத நெஞ்சமும் ஒருகணம் அலைபாய்ந்து தவிக்கிறது.

''ஏ! பவானி!'' அன்னை பராசக்தியை - தாம் வழிபடும் அம்பாளைக் கண்மூடித் தியானிக்கிறார் சிவாஜி. மகாராஷ்டிரத்தின் மக்கள் திலகத்தின் கதை முடிந்து விடுமானால்...?

ஓ, நினைக்கவே நெஞ்சு வெடிக்கிறது.

''பூஜ்யா! விடை கொடு.''

குரல் ஏன் தழுதழுக்கிறது.

பூஜ்யா மருளுகிறாள்.

ஒரு சிங்கத்தின் குரலில் தடுமாற்றமா?

வீரக் கண்கள் தீட்சண்யமாக நோக்குகின்றன.

காதல் கண்கள் கனிவாய்க் கவனிக்கின்றன!

தனது அறிவாலும் அழகாலும் மயங்கி, அந்த அழகு போதையை அவ்வப்போது ஊட்டித்தானே சிவாஜியை வீறுகொள்ளச் செய்து வெற்றி கண்டிருக்கிறாள் பூஜ்யா.

ஒரு கணம் யோசிக்கிறாள். ஒரே ஒருகணம் யோசிக்கிறாள்.

என்ன முடிவு கண்டாளோ?

விரைந்து அருகே சென்று அழுத்தமாகக் கட்டியணைத்து அமுத மனைய உதடுகளை உதடுகளுடன் புதைத்து-

---

1. இந்த எண்ணிக்கையில் சரித்திரம் பல விதமாகப் பேசுகிறது.

பல கணங்கள்...

விடுபடவே இல்லை.

சிவாஜியும் மெய்மறந்து மேனி சூடேறப் பிரமித்துப் பின் மயக்க நிலையில் மூழ்கிப் போனார்.

''அப்சல்கானை வீழ்த்தி விட்டு வாருங்கள்; இதழமுதம் தருகிறேன்'' என்று ஒரு சமயம் சொன்னாள். அப்சல்கான் வீழ்ந்து பட்டும் அந்த இதழமுதைப் பருகுகிற சந்தர்ப்பமே கிடைக்காமல் போய் விட்டது. இப்போது அந்தக் கரும்பனைய சந்தர்ப்பம் சாறாகி, சர்க்கரையாகி இனித்துக் கொண்டிருக்கிறது.

ஊர்வலம் புறப்பட்டு விட்டது என்கிற அறிகுறிகள் தெரிகின்றன.

இதழ்கள் விடுபடுகின்றன.

இரண்டு நாவுகள் தத்தம் உதடுகளை நீவி அமைதி பெறுகின்றன.

சிவாஜியின் கண்களில் மேலும் பிரகாசம். அது முறுக்கேறிய வீரத்தை முரசு கொண்டு பறைசாற்றுகிறது.

''போய் வாருங்கள் பிரபோ! ஜயம் நமக்குத்தான்!''

பூஜ்யா மகிழ்ச்சி பொங்க வாழ்த்தி வழி காட்டுகிறாள்!

அந்த மாளிகையை விட்டுப் புறப்பட்ட ஊர்வலம், ஷிஷ்டாகான் தங்கியிருந்த ராஜ்மகாலை நெருங்கிக் கொண்டிருந்தது.

மகாராஷ்டிரர் திருமண ஊர்வலங்களில் ஆண்கள் வாள் சகிதமாகச் செல்வது மரபு. அதனை யாரும் தடுத்து நிறுத்தவோ புறக்கணிக்கவோ முடியாது. அவ்வாறு சென்ற உறவினர்களுடன் சிவாஜியும், பாலாஜியும், நரசிம்ம ராவும் வீரர்களும் சாதாரண உடையில் வாள் தாங்கிச் சென்று கொண்டிருந்தனர்.

ராஜ்மகாலை நெருங்கியதும் சிவாஜி சம்பந்தப்பட்டவர்கள் சொல்லி வைத்தாற்போல ஊர்வலத்திலிருந்து மெல்ல மெல்ல விலகி ராஜ்மகால் மதில் சுவர் ஓரத்து இருளில் மறைந்து ஐக்கியமாகினர். பிறகு அந்தத் திருமண ஊர்வலச் சந்தடியிலே மதிலைத் தாண்டி மாளிகையையும் நெருங்கிவிட்டனர்.

மாளிகையைச் சுற்றி இருட்டில் காவல் வீரர்கள் வாளேந்தி பதுங்கி இருந்தனர். முகப்பில் முகலாயக் காவல் பலமாக இருந்தது. ஆயினும் அவர்களுக்கு எந்தவிதத் தொந்தரவையும் அப்போதைக்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே மறு உத்தரவு வருகிற வரைக்கும் அவர்கள் மாளிகை ஓரங்களிலும் மதில் ஓரங்களிலும் பதுங்கியே இருந்தனர்.

சிவாஜியும் பாலாஜியும் நரசிம்மராவும் மட்டுமே மாளிகையின் பின்புறமாக நுழைந்து ஷிஷ்டாகான் படுக்கை அறையை நோக்கி மெல்ல மெல்ல ஊர்ந்து செல்கின்றனர்.

வீர சிவாஜியின் இடுப்பில் குத்துவாள், வலது கையில் ‘பவானி’ என்ற திருப்பெயரைக் கொண்ட வீரவாள். இடது விரல்களில் புலிநக ஆயுதம்!

அந்த மாளிகையின் வழிகள்தாம் அவருக்கு அத்துபடியாயிற்றே! ஒவ்வோர் இடத்தைப் பார்க்கிற போதெல்லாம் சிறுவயதில் தாம் ஓடி விளையாடி வளர்ந்த ஞாபகங்கள்.

மாளிகையில் அப்படி என்ன நேர்ந்து விடப் போகிறது என்கிற முகலாயக் காவலர்களின் உறக்கம்.

மடைப் பள்ளிச்சுவரில் ஏற்பட்ட ஒரு பெரிய துவாரத்தை அப்போதைக்கு ஷிஷ்டாகான் ஆட்கள் களிமண்ணைக் கொண்டு அடைத்திருந்தது தெரிய வந்தது. அதனை மெல்ல தகர்த்து உள்ளே நுழைகிறார்கள்.

மடைப் பள்ளிக்கு அடுத்த அறையினுள் ஷிஷ்டாகானின் மனைவியும், குழந்தையும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன காரணம் பற்றியோ குழந்தை வீரிட்டது.

அதன் சத்தத்தால் ஏதேனும் எதிர்பாராத விதமாக நடந்து விடுமோ என்றஞ்சிய பாலாஜி[1] கையிலிருந்த வாளால் இரு துண்டாக அந்தக் குழந்தையை வெட்டிச் சத்தத்தை அடக்குகிறபோது, சில வீரர்கள் விழித்துக் கொண்டனர்.

இதற்குள் மாளிகையே களேபரம் அடைந்தது.

சிவாஜியும் பாலாஜியும் ஷிஷ்டாகானின் அறையுள் நுழைந்துவிட, சந்தடி கேட்டு ஷிஷ்டாகான் விழித்துக் கொள்கிறான்.

அடுத்து, சிவாஜி அவன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து புலிநகத்தைப் பயன்படுத்துகிற போது...

''சிவாஜி! எனது சகோதரா!''

-என்கிற ஒரு பெண்ணின் பெருத்த அவலச் சத்தம்.

மறுகணம் தயங்கித் திரும்பிப் பார்க்கிறார் சிவாஜி.

''சிவாஜி! நீ தரும நியாயங்களுக்குக் கட்டுப்படுபவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீயா இப்படிச் செய்கிறாய்? வேண்டாம். எனது புருஷனைக் கொல்ல வேண்டாம். குழந்தையைக் கொன்றது போதும்; இன்னொரு குழந்தையைத் தருகிற எனது கணவனைக் கொல்லாதே! உனது தெய்வத்தின் மீது ஆணை!''

ஷிஷ்டாகான் தரும பத்தினியின் இக்குரல் சிவாஜியைப் பலவீனப்படுத்திவிட்டது. அவர் தயங்கிய அந்த வேளையில்...

சிங்கத்தின் பிடி பலவீனப்படவே, எட்டி ஒரே உதை.

ஷிஷ்டாகான் சிலிர்த்து எழுந்து கொண்டான்.

உடனே நரசிம்மராவ் ஊதுகுழலை எடுத்து ஊதினார்.

1. சிவாஜி வெட்டியதாகச் சில வரலாறு மட்டுமே கூறுகின்றது. சிவாஜியின் இரக்க சுபாவங்களை வரலாற்றில் படிக்கிறபோது அவர் அவ்வாறு செய்திருப்பாரா என்கிற ஐயம் ஏற்படுகிறது. எனவே நான் இவ்வாறு கற்பனை செய்கிறேன்.

மாளிகையில் பதுங்கி இருந்த வீரர்கள் வாட்களைச் சுழற்றிக் கொண்டு திபுதிபு வென்று பாய்ந்து பலரைச் சூறையாடி உள்ளே புகுகிறார்கள்.

பிடியிலிருந்து விடுபட்ட ஷிஷ்டாகான், அடுத்து உடைவாளை உருவிக் கொண்டு ராட்சஸ வேகத்துடன் சிவாஜி மீது பாய்ந்தான்.

அடுத்தகணம் சிவாஜியின் வாள் எதிர்த்துத் தடுக்கிறது.

இதற்குள் சிவாஜியின் வீரர்கள் காவலர்களைச் சம்காரம் செய்து நுழைந்து விட்டதை அறிந்த ஷிஷ்டாகான், தப்பினால் போதும் என்கிற முடிவுடன் திரும்பியோட முனைந்து, சாளரத்து மேடையில் கையூன்றி எகிறிக் குதிக்க முனைகிறபோது...

கசக்...

சிவாஜியின் வாள் பாய்ந்தது.

[1]ஷிஷ்டாகானின் கை விரல்களில் நான்கு துண்டித்துக் கீழே விழுந்தன.

அடுத்த சில கணங்களில் முகலாயப் பாசறைக்குள் எட்டிய செய்தியின் காரணமாகப் புற்றீசல்கள் மாதிரி புறப்பட்டு வந்து விட்டன இஸ்லாமியப் படைகள்.

சிவாஜியும் மற்றவர்களும் தப்பினால் போதும் என்கிற துடிப்புடன் மாளிகையை விட்டகன்று புரவிகளில் ஆரோகணித்துப் புயலெனப் பறக்கிறார்கள்.

சொல்லி வைத்த மாதிரி ஊதுகுழல் சமிக்ஞை ஓசை.

மாட்டுக் கொம்புகளில் சுற்றிய பந்தங்கள் ஏற்றப்பட்டு வேறு திசைநோக்கி விரட்டுகிறார்கள்.

இஸ்லாமியப் படைகளோ, தொலைவில் தெரிந்த தீப்பந்த ஓட்டங்களைக் கவனித்து ‘அதோ, சிவாஜி ஓடுகிறான்! பிடியுங்கள்’ என்ற கூக்குரலுடன் மாடுகளைப் பின் தொடருகின்றன.

---

1. எத்தனை விரல்கள் துண்டிக்கப்பட்டன என்பதில் கூடச் சரித்திர விவாதங்கள் உண்டு.

சிவாஜி,

ஷிஷ்டாகானைத் தப்ப விட்ட இரக்க சுபாவத்தை எண்ணி நாணியவராய்க் கங்காதர ராவ் மாளிகையை அடைகிறார்.

அங்கே -

பூஜ்யாதேவியைக் காணவில்லை.

-----

# 33

மழித்தலும் நீட்டலும் உடைய துறவிகள், மாயாவிகள் (மாய வித்தைகள் புரிபவர்கள்) என்பாரோடும், வெளிப்புறத்துப் பணிப் பெண்களோடும் தேவிமார்கள் (தேவி என்பது அரசியை மட்டுமல்ல; மனைவியையும் குறிக்கும்) பழகாமலும் தடுத்தல் வேண்டும்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 20).

**ந**ரசிம்ம ராவா? கொக்கா?

அங்கே ஷிஷ்டாகான் தப்பியோடிய மறுகணம், நரசிம்ம ராவ் நேரே கங்காதர ராவ் மாளிகைக்கு விரைந்து வந்து பூஜ்யாவிடம் செய்தி தெரிவித்து விட்டார்.

இனியும் பூஜ்யா அங்கே தங்குவது பல வழிகளிலும் ஆபத்து. தனது வீரமாக் காதலர் எவ்வழியிலும் தப்பி வந்துவிடுவார் என்கிற பூரண நம்பிக்கையுடன், சாரட்டு வண்டியை எடுத்துக் கொண்டு நரசிம்ம ராவுடன் ராஜகோட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டாள். அவளுக்கென இருந்த வீரர்கள் காவல் புரிந்து பின் தொடர்ந்தனர்.

மாளிகையில் பூஜ்யாவைக் காணோம் என்கிற செய்தியால் சிவாஜி அதிர்ந்து போய் விடக்கூடாதே என்பதற்காகக் கங்காதர ராவிடம் சொல்லிவிட்டுச் சென்றிருந்தாள். செய்தியறிந்த மறுகணம் கங்காதர ராவை நன்றியறிதலுடன் பாராட்டி விட்டு அடுத்த கணமே ராஜகோட்டை நோக்கிப் பறந்தார் சிவாஜி. அவரது படை வீரர்களைத் திரட்டிக் கொண்டு பாலாஜி பின்னால் தொடர்ந்து கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தபோது, அனைவரும் ராஜகோட்டையில் இருந்தனர்.

சிவாய நம என்கிற மந்திரமாக வைகறைச் சூரியன் செம்மைக் கோலம் பூண்டு புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

பொழுது விடிகிறபோது சிவாஜியின் குதிரை பூஜ்யாவின் குடில் வாயிலில் வந்து நின்றது. சற்று நேரத்துக்கு முன்னர்தான் பூஜ்யாவும் வந்து சேர்ந்தாள். வெளியே சாரட்டைக் காணோம். குதிரைகள் ஓய்வெடுக்க லாயத்துக்கு அனுப்பிவிட்டாள் போலும்!

திண்டு திமாசுகள் மீது சற்றே பெருமூச்சுடன் சாய்ந்திருந்தாள், பூஜ்யா. தனது காதலர் எந்தவிதத் தீங்குமின்றி வந்து விடுவார் என்கிற பூரண நம்பிக்கை இருந்தும், மனத்துள் மட்டும் ஏதோ ஒரு கூழாங்கல் உருண்டு கொண்டிருந்தது. ஏதும் நிகழந்துவிடக் கூடாதே என்கிற அச்சந்தான். யாருக்குத்தான் இராது?

''பூஜ்யா!'' அவர் குரல்; அவர் குரலேதான்.

கண் விழித்துப் பார்க்கிறாள்.

''பிரபோ!''

எங்கிருந்துதான் அந்தக் குதூகலம் வெள்ளமாகப் புரண்டதோ?

அப்படியே துள்ளி எழுந்து...

துள்ளி எழுந்து...

ம்ம்...

நேற்றிரவு மாதிரி இறுகக் கட்டி...

ஹ்ம்...

அவள் அரையடி வித்தியாசத்தில் மலைத்து நிற்கிறாள்.

அவ்வாறெல்லாம் ஏதும் நடைபெறவில்லை. அவ்வாறு நடைபெறவில்லையே என்கிற ஆதங்கம் சிவாஜிக்கு.

நடைபெற்று இருக்கக் கூடாதா?

''எப்போது வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்?''

தலையசைத்து, கண்களை மூடித் திறக்கிறார் சிவாஜி. அது 'இப்போதுதான் வந்தேன். நன்றாகவே வந்து சேர்ந்து விட்டேன்' என்கிற மாதிரி இயம்புகிறது.

பிறகு இருவரும் அந்தத் தரை விரிப்புப் பஞ்சு மெத்தையில் அமர்ந்தனர். உருளையான நீண்ட தலையணை ஒன்றை எடுத்து மடியில் கிடத்திக் கொள்கிறார் சிவாஜி. இவ்வாறு பூஜ்யாவைக் கிடத்திக் கொள்ள முடியவில்லையே!

ஷிஷ்டாகானின் விரல்கள் மட்டுமே துண்டிதமான கதை சொற்களில் படருகிறது.

இந்தக் கதைக்குள் ஒரு கதையாக, ரகசியக் கதையாகப் படர்ந்து நிற்கும் கதை சிவாஜிக்கே தெரியாத கதையாயிற்றே...

அது -

ஷிஷ்டாகானுக்கு உதவியாக இருந்த ராஜபுத்திர வேந்தனான யசோவந்த சிம்மன் கதை. அவன் ஔரங்கசீப்புக்குக் கப்பம் கட்டும் குறுநில மன்னன். ஷிஷ்டாகானுக்கு உதவியாகப் படைகொண்டு வந்தவன். ஆயினும் ஒரு தீர்க்கமான சுதந்தர தாகம் கொண்டு சுயராஜ்யக் கனவு காணும் சிவாஜியை அநியாயமாக இழக்க மனமின்றி, மறைமுகமாகப் படைகளை ஏவி, ஷிஷ்டாகானைத் தோல்வியுறச் செய்த செய்தி பின்னாளில் சிவாஜிக்குத் தெரியவரப் போகிறது...

சொல்லாமல் செய்வார் பெரியோர் என்பதற்கிணங்க யசோவந்த சிம்மன் செய்த செயல், சரித்திரத்துக்கே தெரியாதே!

யசோவந்த சிம்மன் ஷிஷ்டாகானால் குற்றம் சாட்டப்பெற்று ஆக்ராவுக்கு அனுப்பப்படுகிறான்.

ஆனால் ஔரங்கசீப்?

ஷிஷ்டாகானுக்கு ஏற்பட்ட கதியால், ஆக்ராவே அவமானத்துக் குள்ளானது. உடனே ஷிஷ்டாகானைப் புறப்பட்டு வருமாறு ஆணை

பிறப்பித்ததோடு நிற்காமல், தன் மைந்தன் மௌஸம் என்பானைத் தக்கணத்தின் பிரதிநிதியாக நேமனம் செய்கிறான்.

முகலாயர்களால் ஏற்பட்ட அழிவுகளுக்கு ஈடுகட்ட என்ன செய்யலாம் என்பது பற்றிய ஆலோசனையில் மூழ்கினார் சிவாஜி. அதன் விளைவு?

இஸ்லாமியர்கள்பால் தொடர்பு கொண்ட நகரங்களைக் கொள்ளையடிக்க உத்தரவு பணிக்கிறார். கஜானா காலியாய் விட்டதே! அடுத்து வரப் போகும் ஔரங்கசீப் எனும் பேரலைக்கு எவ்வாறு ஈடு கட்டுவது?

அந்நாளில் சூரத் நகரம் என்பது ஒரு குட்டி அரேபியா போன்றது. செல்வ வளம் கண்ட செழிப்பு மிக்க நாடு. அந்நாட்டைச் சூறையாடி, அங்கிருக்கும் செல்வங்களைத் திரட்டி மேலும் பலம்கொண்டு நிமிர்ந்த வேளையில்...

கி.பி. 1664, ஜனவரி, 25-ஆம் நாள்...

அருமை தந்தையார் ஷஹாஜி பான்ஸ்லே பசவப்பட்டினம் என்ற இடத்தில் இறந்து பட்டார் என்கிற அவலச் செய்தி சிவாஜியின் நெஞ்சைப் பிளக்கச் செய்தது. அதைவிடக் கொடுமையானது அன்னை ஜீஜாபாய் உடன்கட்டை ஏறத் துடித்தது.

அந்த அன்னையை - ராஜமாதாவை எப்படியெல்லாம் பேசிப் பூஜ்யா சமாதானப்படுத்தி நிறுத்தினாள். மகனின் மகுடவிழாவைத் தந்தையால்தான் பார்த்து மகிழக் கொடுத்து வைக்கவில்லை. நீங்களாவது இருந்து பார்த்து மகிழ்ந்து ஆசீர்வதிக்கக் கூடாதா?

தாயின் இழப்பு மகனுக்குப் பலவீனம் கொடுத்துவிடும். பிறகு மகாராஷ்டிரம் இருண்டுவிடும்.

அன்னை ஜீஜாபாய் ஒப்புக் கொண்டது ஒரு பெரிய சாதனையே.

ஓராண்டு காலம் தந்தையின் துக்கத்துடன் உருண்டது. இதற்கிடையில் ஔரங்கசீப்பும், ‘சிவாஜியை எப்படி பழிவாங்குவது?’ என்பது குறித்து ஆலோசிக்கிறார்.

சிவாஜியை ஆக்ராவுக்கே அழைத்துப் பழிவாங்குவது என்கிற திட்டத்தை வகுத்ததோடல்லாது. தில்லிப் பேரரசையும் வலுப்படுத்துவதில் இந்த ஓராண்டு காலத்தைச் செலவழித்தார் ஔரங்கசீப். ஆயினும் இடையில் சில பூசல்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன. சிவாஜியும், சிறு சிறு யுத்தங்களில் கலந்து சிலரைப் பழி வாங்கினார். அவ்வாறு பழி தீர்க்கப்பட்டவர்களில் பாஜிகௌரிபந்த் என்பவர் குறிப்பிடத்தக்கவர். கப்பற்படைகளைப் பெருக்க முயன்ற முயற்சி, பீஜப்பூரை எச்சரித்த நிகழ்ச்சி, ஹூப்ளியைப் பயமுறுத்திய சம்பவம், மால்வாவில் சித்தத் துர்க்கத்தை எழுப்பிய செய்தி இவை யாவும் குறிப்பிடத்தக்க சிறு சிறு சம்பவங்களாகும்.

இந்தியாவின் காலத்தேர், ஒரு சக்கரத்தை இந்துக்களாகவும் மறு சக்கரத்தை இஸ்லாமியர்களாகவும் கொண்டு இமயத்துக்கும் குமரிக்குமாகப் பவனி வந்து கொண்டிருந்தது.

தேர்ச் சாரதிக்குத் தர்ம சங்கடம்.

அவன் எதனைப் பின்பற்றுவான்?

சிவாஜியின் சீற்றத்துக்குக் காரணம் இருந்தது?

தக்கணத்துப் பிரதிநிதியாக நேமிக்கப்பட்ட மௌஸம் - ஔரங்கசீப்பின் அருமந்த புதல்வன், புனிதமான திருக்குரானை மதியாது கண்டதே காட்சி, கொண்டதே கோலமாகத் திரியத் தொடங்கினான்.

வேதனைக்குரிய விஷயம். அவன் காமக் குளத்தில் புலன்களை நீந்தவிட்டான்.

வெறிகொண்ட நேரத்தில் எவளானால் என்ன? எவன் பத்தினியானால் என்ன என்கிற முடிவுடன் நாடகம் நடத்தினான்.

ஔரங்கசீப் இந்து மத விஷயத்திலும், இந்துக்களிடத்திலும் முரண்பட்டவராக இருந்தாலும், இஸ்லாம் மதத்தின் தனிப் பெருங் காவலராகத் திகழ்ந்தார். புனித குரானின் பொற்புடை திருமகனாய்த் திகழ்ந்தார் என்றால் யாருக்கும் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்க முடியா.

எவ்வழியிலும் சிவாஜியின் எழுச்சிக்குச் சிதை மூட்டுவதில் அவரது கவனம் அலைமோதியது.

பல வழிகளில் சிவாஜி இந்து மதக் காவலனாகத் தம்மைப் பிரகடனப் படுத்திக் கொண்ட சிவாஜி - தருமத்தை மீறி அதர்மங்களைப் புரிகிறபோது நாம் மட்டும் ஏன் மீறக் கூடாது?

அல்லாஹ்!

''என்னை மன்னித்து ஆட்கொள்!''

மறுநாள் ஒரு தீர்க்கமான முடிவுடன் செயல்படத் தொடங்கினார்.

சிவாஜியிடம் தமது தலைமைப் பிரதானியாரான ஜயசிம்மனைத் தூது அனுப்ப எண்ணினார். ஆயினும் உள்ளூற நம்பிக்கையில்லை. ஜயசிம்மனும் ஓர் அப்பழுக்கற்ற இந்து. எனவே அவரைக் கண்காணிக்க உடன் திலவர்கானையும் அனுப்ப முடிவு செய்தார். இது ஒரு நம்பிக்கையில்லாத முடிவு.

ஜயசிம்மன் அந்நாளையப் பெரும் புகழ் பெற்ற வீரர்; ராஜ விசுவாசி. அக்பர் பாதுஷாவுக்கு ஒரு ராஜா மான்சிங் போல, ஷாஜஹான் சக்கரவர்த்திகளுக்கு ஜயசிம்மன். தம் பன்னிரண்டாம் வயது முதல் முகலாய சேனையில் சேர்ந்து மத்திய ஆசியாவின் 'பாக்' நகரம் முதல், தக்காணத்துப் பீஜப்பூர்வரையிலும் யுத்தம் நடத்தி வெற்றி கண்டவர். மகா ராஜதந்திரி. அந்நாளைய வட புலத்து மொழிகளில் நன்கு பயிற்சி மிக்கவர்; பாரசீகம், மகாராஷ்டிரம், உருது, சமஸ்கிருதம்...

மத பேதமின்றிப் படை நடத்தும் அவரது சர்வ வல்லமைகளுக்காக ஷாஜஹான் சக்கரவர்த்திகள், பல விருதுகளையும், எத்தனையோ மான்யங்களையும் வழங்கி இருந்தார். எப்போதும் சிரித்த முகம், சிந்தனை வயப்பட்ட நோக்கு. இஸ்லாமியரிடம் பணிபுரிந்தாலும் இந்து மதத்தில் ஆழமான பற்றுடைய பக்தர். ஆனால் பிற மதங்களை வணங்கி வரவேற்பவர். அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்ற பழுத்த அநுபவசாலி! அரசியலின் ஞான குரு!

ஜயசிம்மனும் திலவர்கானும் பெரும் படைகளுடன் மகாராஷ்டிரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வேகமான அம்பொன்று பாய்ந்து வருவது போல அந்தச் செய்தி மிக விரைந்து பூஜ்யாவின் குடிலுக்கு எட்டுகிறது. பிறகே ராஜகோட்டையுள் நுழைகிறது.

மகாராஷ்டிரமே மருண்டு மலைக்கிறது.

ஓ! ஔரங்கசீப்பின் தொல்லை ஆரம்பமாகிவிட்டது.

பீஜப்பூருக்கு ஓர் வேகமான தூது செல்கிறது.

சும்மா சொல்லக் கூடாது, பீஜப்பூர் சுல்தானா பேகத்தை!

மகாராஷ்டிரம் வீழ்ந்து பட்டால் பீஜப்பூர் எம்மாத்திரம்?

போதிய படையுதவிகளையும் பொருளுதவிகளையும் அனுப்பி வைப்பதாக வாக்குக் கொடுத்ததுடன் செயலிலும் ஆணையிட்டாள் சுல்தானா பேகம்.

இது மிகவும் ரகசியமாக நடந்தது.

புரந்தரக் கோட்டையின் மலையடிவாரத்தில் முகலாயப் பேரரசின் படைகள் தண்டு இறங்கி இருந்தன.

அன்றிரவு மகாபிரதானி ஜயசிம்மனும் தளகர்த்தன் திலவர்கானும் அமர்ந்து ஆலோசித்தனர்.

‘‘திலவர்கான்! நாம் படைகள் மூலந்தான் காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்கிற ஆசை நமது சக்கரவர்த்திகளுக்கு இல்லை. அவரது

ஆணையும் அதுவல்ல. சிவாஜியை எப்படியாவது தில்லியரசுக்குப் பணியவைக்க வேண்டும். இதுவே சக்கரவர்த்திகள் என்னிடம் தெரிவித்த செய்தி. நீயோ படை கொண்டு மகாராஷ்டிரத்தை அழிக்க வேண்டும் என்று எழுச்சிக் கூச்சலிடுகிறாய். இது முரண்பாடானது'' என்றார் ஜயசிம்மன்.

வண்ணக்கூடாரத்தில் ஒற்றை விளக்குச் சிரிக்கிறது. அத்துடன் திலவர்கானும் எக்காளச் சிரிப்பை எழுப்பினான்.

''மகாப் பிரதானியாரே! எனக்குச் சக்கரவர்த்திகள் அவ்வாறு ஆணையிடவில்லை.''

''நான் ஆணையிடுகிறேன்.''

''இதனைத் தில்லியில் இட்டால் நான் ஏற்பேன். இங்கே யுத்தகளம். ஒரு படைத் தலைவனுக்கே அதிகாரம் அதிகம். மேலும் நீங்கள் இந்து! ஓர் இந்துக்கு உபாயம் தேட முனைகிறீர்கள். இந்துக்கள் அழிவதை உங்களால் பார்த்துச் சகித்துக் கொள்ள முடியாது. எனவே இவ்வாறு பேசுகிறீர்கள்!''

ஜயசிம்மனைக் கண்காணிக்கத்தான் திலவர்கானை, ஔரங்கசீப் அனுப்பினார். ஆனால் அதனையே பெரிதாக எண்ணி ஆட்டம் போடத் தொடங்கி விட்டான் திலவர்கான். பழுத்த அரசியல் ஞானி ஒருவரைச் சக்கரவர்த்திகள் சந்தேகித்தது, அவரது ஆணைக்கே மதிப்பின்றிப் போய்விட்டது. நம்பிக்கையின்மையால் ஏற்படும் நஷ்டங்கள் இங்கே கண்கூடாக விளைந்து கொண்டிருந்தன.

ஜயசிம்மனால் இதற்கு மேலும் பேச முடியவில்லை. இவனை உடன் அனுப்பியதே ஒரு துரதிர்ஷ்டம் என்ற அளவில், ''உன் நாடகத்தை அரங்கேற்றலாம் திலவர்கான்! ஆனால் ஒன்று; இது மலையரண்கள் சூழ்ந்த பகுதி. நமது வீரர்களுக்கு ஏற்படும் உயிர் நஷ்டங்களுக்கு நீயே பொறுப்பாளியாவாய்'' என்று கூறினார். திலவர்கானும் விடைபெற்றுக் கொண்டு தனது கூடாரம் நோக்கி நடந்தான்.

ஜயசிம்மன் கூறிய சொற்கள் வீண்போகவில்லை.

திலவர்கான் அந்த அழிவு அனுபவங்களைப் பெற முனைந்தான்.

எப்பேர்ப்பட்டவர்கள் ஷிஷ்டாகான், அப்சல்கான்! அவர்களே அழிந்து பட்டார்கள் அல்லவா?

'பழிவாங்கிய பாதகனாயிற்றே சிவாஜி?' என்கிற நினைவுகளைக் கண் முன்னால் இறுத்திக் கொண்டு சீறிப் பாயத் தலைப்பட்டான் திலவர்கான். அப்பேர்ப்பட்ட இனவெறி, மதவெறி அவனது இரு கண்களிலும் அக்கினியைப் பீய்ச்சின.

புரந்தரக் கோட்டை யுத்தம் மூண்டது.

அந்தக் கோட்டைத் தலைவன் முராரி காட்டிய வீர சாகசங்கள்...

ஆ! சரித்திரப் புகழ்பெற்ற வீர இலக்கணங்கள். முராரி வீர சொர்க்கம் அடைந்தாலும், 'அந்நியர்க்கு இடம் கொடேன்; எனது இந்து மதம் அழிய நான் காரணமாக மாட்டேன்' என்று கூறி, திலவர்கான் படைகளை அதாகதம் செய்துவிட்டான்.

வஜ்ர கோட்டை அனுபவமும் இத்தகையதே! இப்படிப் பல கோட்டைகளை வசம் செய்யப்போய், திலவர்கானை, சிவாஜியும், பாலாஜியும், நேதாஜியும் யுத்த வீரர்களைக் கொண்டு முறியடிக்கலாயினர்.

திலவர்கான் துவண்டு போனான்.

படைகளில் பாதிக்குமேல் படுநாசம். வெற்றி தோல்விகள் இரு பக்கமும் இருந்தன.

வேறு வழியின்றி மகா பிரதானியார் ஜயசிம்மன் சொன்ன கருத்துக்குக் செவி சாய்த்தான் திலவர்கான். மூக்கறுபட்டபின் நந்தவனப் பிரவேசமா?

சிவாஜிக்குத் தூது பறந்தது.

ஜயசிம்மன் என்கிற அரசியல் ஞானி அனுப்பிய தூதனை மதித்து வரவேற்றுச் செய்தியைத் தெரிந்து கொள்கிறார் வீர சிவாஜி.

அன்னை ஜீஜாபாய், இந்தத் தூதின் நோக்கம் புரியாமல் தடுமாறுகிறாள்.

சிவாஜியின் அரசியலிலும் சிற்சில உட்பூசல்கள் இருந்தன. பூஜ்யாவின் வருகைக்குப் பிறகு அரசியல் அதிகாரிகள் ஔரங்கசீப்பை எந்த நேரத்திலும் ஆதரித்து விடுவார்களோ என்கிற பயம்.

அத்தனை பெயர்களுக்கும் கையூட்டுத் (லஞ்சம்) தருவதாக, ஔரங்கசீப்பின் ஒற்றர்கள் குயுக்தி நிறைந்த மறைமுக ஈடுபாடுகளுடன் அயராது முயன்று வருகிற செய்தி பட்டும் படாததுமாகப் பூஜ்யாவின் செவிகளில் அடிபட்டது.

தூதின் செய்தியைக் கூர்ந்து பரிசீலிக்கிறாள், அறிவின் ஞானபானுவான பூஜ்யாதேவி.

அவளது மடியில் வீணை தவழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் நரம்புகளில் சிந்தனைச் சிதறல்கள்.

சிந்தனையோ சிந்தனை!

இது ஒரு பெரிய திருப்புமுனைக்கு வழி கோலுமா? ஔரங்கசீப் விரிப்பது வலை என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை. அந்த வலையில் சிவாஜி என்கிற சிங்கத்தை அகப்பட்டுக் கொள்ளச் செய்வதா? பூஜ்யா என்கிற இந்தச் சுண்டெலி வலையைக் கடித்துச் சிங்கத்தை விடுவிக்க எத்தனை நேரம் பிடிக்கும்.

ஒரு விதத்தில் இந்தத் தூதை மதித்து ஏற்று தில்லி நோக்கிச் செல்வதே சாலச் சிறந்ததாகப்படுகிறது.

சிவாஜியிடம் இருக்கும் அரசியல் அதிகாரிகளுள் பலர் தனது வருகையால் ஆத்திரம் கண்டிருக்கிறார்கள். ராஜமாதா தனக்களித்த பேரதிகாரிப் பதவி பலரையும் காயப்படுத்தியிருக்கிறது. இதன் காரணமாக இவர்கள் ஔரங்கசீப்பிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு மகாராஷ்டிரத்தைக் காட்டிக் கொடுப்பார்களேயானால், வீர சிவாஜியின் செம்மாப்பு நிறைந்த சுயராஜ்யக் கனவு என்னாவது?

ஏதோ தாமே வந்து சிற்சில இடங்களில் சூடுபட்டு இப்போது தூதுக் குழுவை அனுப்பி இருக்கிறார் ஜயசிம்மன். அவர் ஒரு

ராஜயோகி. எதையும் அதர்மமாக நோக்கமாட்டார் என்பதில் பூஜ்யாவுக்கு நம்பிக்கை இருந்தது.

கொஞ்சகாலம் ஔரங்கசீப் கேட்கிற மாதிரி நட்பு நிறைந்த அதிகாரப் பதவி வகித்து மகாராஷ்டிரத்தில் அமைதி தேடினால் என்ன? அதற்குள் லஞ்சமோகம் கொண்ட அரசியல் அதிகாரிகளையும் இனம் கண்டு களைத்து விடலாம். அமைதியாக இருந்து மகாராஷ்டிரத்தை எவ்வாறு நிறுவுவது என்பது குறித்து ஆலோசிக்கலாம். லஞ்சத்தின் மூலம் மகாராஷ்டிர அதிகாரிகளை விலை பேசுகிறாரே ஔரங்கசீப் அவ்வாறே நாமும்...

'சீ' இந்த இந்துக்கள் கெட்ட மதி கொண்டது போல இஸ்லாமியர் துரோகம் செய்யத் துணியார். இவர்கள் - இந்துக்கள் ஒற்றுமை நெஞ்சம் அற்றவர்கள். அடுத்தவனுக்குக் காட்டிக் கொடுக்கத் தயங்காதவர்கள். லஞ்சம் என்றால் வாய் பிளப்பவர்கள். அதிலும் இந்த அதிகாரிகள் எவளையாவது அல்லது அடுத்தவன் மனைவியை யாவது கூட்டிக் கொடுக்கச் சொல்லிக் கேட்கத் தயங்காத ஈன ஜென்மங்கள். இஸ்லாமியர்கள்கூடப் பெண் வெறியர்களேயானாலும் இவர்கள் மாதிரி மோசமானவர்கள் அல்ல. கூசாமல் அழகிய பெண்களை லஞ்சமாகக் கேட்கிற கீழ்த்தர எண்ணம் நிறைந்த அதிகாரிகள். இவர்களெல்லாம் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்கிறார்களே! இந்த நாடு இவர்களை நம்பி இருந்தால் எதிர் காலம் என்னாவது?

ஔரங்கசீப்பை வளர விட்டாளோ, ஒரு காலத்தில் இந்த இந்தியா முழுவதும் இஸ்லாமிய சாம்ராஜ்யமாகி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. 'இந்தியா இரண்டாம் அரேபியாவாகவா கிவிடும்; எவருக்கும் பஞ்சம் இராது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஜலக்கிரீடைதான்' என்று பிரசாரம் செய்வார்களேயானால் இந்த அதிகாரிகள் ஏன் காட்டிக் கொடுக்க மாட்டார்கள்? அதிகாரிகள் என்ன? மக்களே வயப்பட்டு விடுவார்களே! இந்த விஷம் பரவாமல் தடுக்க, ஔரங்கசீப்பின் கருத்தை ஏற்று, அவரது அரசவையை ஆதரித்து, அந்த அரியணையை சமயம் கிடைக்கும் போது எரித்துச் சாம்பலாக்க வேண்டியதுதான்!

தனது அபிப்பிராயத்தைப் பகிரங்கமாக எடுத்துரைத்தாள் பூஜ்யாதேவி. பூஜ்யாவே ஒப்புக்கொண்டு விட்டாள். அன்னை ஜீஜாபாயும் இதற்கு மறுப்புக் கூறவில்லை. ஜீஜாபாயைப் பொறுத்தவரை இப்போதெல்லாம் ஓர் உயிருள்ள ஜடம். எப்போது அவளது கணவர் ஷஹாஜி பான்ஸ்லே காலமானாரோ அப்போதே ஜீஜாபாய்க்கு அனைத்தும் போய்விட்டதாகத் தெரிய ஆரம்பித்தது. மேலும் உடல் நிலை அடிக்கடி பாதிப்பு கண்டு வந்தது.

பூஜ்யாவின் தீர்க்கமான யோசனையின்படி, இந்தத் தூதை மதித்துத் தில்லி செல்ல முடிவாயிற்று. இது சம்பந்தமாகப் பேச, பூஜ்யாவும் சிவாஜியும், தக்க துணைகளுடன் ஜயசிம்மனைக் காணப் புறப்பட்டார்கள்.

மிகப் பெரிய வண்ணத்துகின்மனையில் இருகரம் நீட்டி வரவேற்கிறார் அரசியல் சூரியன் ஜயசிம்மன். ‘ஆ! எங்கள் சிவாஜி!’

அவரது தூயதான இந்து மனம் பூரித்துக் கொள்கிறது. ‘‘ஓ, மகாராஷ்டிரிய வீர சூரியனே! க்ஷத்திரிய குல மக்கள் திலகமே! சுயராஜ்யப் புரட்சித் தலைவனே!’’ என்று கூறி மகிழ்ந்து கொள்கிறது.

உடன் வந்த பூஜ்யாவைக் கவனிக்கிறார். ஓ, இவள்தான் சேலை கட்டிய சாணக்கியனோ?

பூஜ்யா அவருடைய பாதம் தொட்டு வணங்குகிறாள்.

அப்போது திலவர்கானின் நெருப்புக் கண்கள் குனிந்து பாதம் தொட்ட பூஜ்யாவின் மார்பகங்களைக் கவனிக்கின்றன.

‘‘சுவைக்கக்கூடிய சொர்க்கக் கனிகள்’’ - திலவர்கானின் மனம் முனகிக் கொள்கிறது. ஏற்கெனவே முனகிக் கொண்ட ஔரங்கசீப் வேறு அவளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது திலவர்கானுக்குத் தெரிய வேண்டுமே!

-----

## 34

நாடு நகரத்து மக்களுக்குக் கேடு விளைவிக்கும் புறம்பானவர்களை (சூதாடுகிறவர்கள், லஞ்சம் வாங்கும் வஞ்சகர்கள், பெண் லோலர்கள், சண்டியர்கள், பொறுக்கிகள், விபச் சாரிகள்) நகரத்துள் இருக்கச் செய்ய லாகாது. நாட்டின் அல்லது நகரத்தின் கடைப்பகுதியில் இருக்கச் செய்யலாம். பிறரை (குடிமக்களை) யொப்ப அன்னாரையும் இறை பொருள் செலுத்ததற்கு உரியராக்கல் வேண்டும்.

**– சாணக்கியரின் ‘கௌடலீயம்’**
(அதிகரணம் - 2, அத்தியாயம் - 25).

**மா**வீர திலகம் சிவாஜி ஆக்ரா நகருக்குப் புறப்படுமுன் மீண்டும் தூதின்போது அறிவித்த செய்தியை, தமது அருமைக் காதலி பூஜ்யாவுடன் அலசிப் பார்க்கிறார்.

முகலாயரிடமிருந்து கைப்பற்றிய நாடு நகரங்களைக் கொஞ்சமும் பேரம் பேசாமல் திருப்பித் தந்துவிட வேண்டும். அந்த நகரங்களில் வரும் வரிப்பணத்தில் நான்கில் ஒரு பங்குதான் சிவாஜிக்கு. மீதி தில்லியரசுக்கு. இதர அயிட்ட வரிப்பணத்தில் பத்திலொரு பங்கே சிவாஜிக்கு. அகமது நகரில் சிவாஜி எழுப்பியுள்ள முப்பத்திரண்டு கோட்டைகளில் இருபது கோட்டைகள் முகலாயரைச் சேரவேண்டும். பீஜப்பூர் அரசிலிருந்த சிவாஜி கைப்பற்றிய நகரங்கள் அனைத்தையும் தில்லியரசின் ஜாகீராக இருந்து சிவாஜி அனுபவிக்கலாம். சிவாஜியின் மகன் சம்பாஜிக்கு (எட்டு வயது நிரம்பியவன்) ஐயாயிரம் வீரருக்குத் தலைவன் என்கிற விருதுவை

ஔரங்கசீப் பாதுஷா அளிப்பார். தில்லிப் படைகளில் சிவாஜியின் குதிரைப் படையொன்று சேவிக்க வேண்டும். சிவாஜி ஆக்ரா வந்து திரும்ப வழிச் செலவுக்கு ஒரு லட்ச ரூபாயைத் தில்லி அரசு வழங்குகிறது.

பாதுஷா ஔரங்கசீப்பின் இந்த நிபந்தனைகள் ஒரு சாதாரண அடிமை அரசனுக்கு உரிய நிபந்தனைகள் மாதிரி இருந்தாலும், அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்பது போல ஏற்று, ஆக்ரா சென்று நடப்பதைக் கவனித்துத் திரும்புவதன் மூலம், தமது அதிகாரிகள் கவனத்துக்கு ஒரு கசப்பான குழப்பத்தை அல்லது குமட்டலை உண்டு பண்ணலாம் அல்லவா என்பது சர்வ வல்லமை பொருந்திய பூஜ்யாவின் முடிவு. அதனை வீர சிவாஜியும் அன்புடன் ஏற்றார்.

**ஒ**ரு சுபமுகூர்த்த நாளில் மாவீர சிவாஜியும், பூஜ்யாதேவியும், சம்பாஜியும் மற்றும் நண்பன் ஷீராஜியும், பூஜ்யாவின் அந்தரங்கப் பணித் தலைவர் நரசிம்ம ராவும், ரகுநாத பந்தனும் ஏனைய அதிகாரிகளும் நான்காயிரம் வீரர்களும் புறப்படலாயினர்.

நீண்ட கூந்தலை வாரிமுடித்த எட்டு வயது நிரம்பிய சம்பாஜியை அனுப்ப அனைவரும் தயங்கினர். பாதுஷா விருது அளிக்கப் போவதாக அறிவித்த பிறகு...

இந்நேரம் காலம் சென்ற அவனது தாய் சாயாபாய் இருந்திருந்தால் அனுப்பி வைப்பாளா?

அன்னை ஜீஜாபாய்க்கு இது புரியவில்லை. என்ன செய்ய? சிவாஜியின் உத்தரவு.

உடன் பூஜ்யா செல்வதில் அனைவருக்குமே ஒரு நிறைவு. அனைவருக்குமே என்றால் அரசியல் அதிகாரிகளுக்கு அல்ல! அரண்மனை தேவிமார்களுக்கு; அன்னை ஜீஜாபாய்க்கு!

பயணத்தை உடனிருந்து வழிகாட்டியனுப்பி வைத்தார் அரசியல் ஞானி [1]ஜயசிம்மன். புறப்படுமுன் பெரிதாக ஆறுதல் கூறினார். மகாராஷ்டிரத்தைக் காப்பது எனது தலையான கடன்

1. ஜெய்சிங் என்பாரும் உண்டு. அக்பர் பாதுஷாவின் பேரமைச்சர் ராஜா மான சிம்மரை மான்சிங் என்று அழைக்கவில்லையா? அதுபோல.

என்றார். தலைவர்களையும் அடுத்துப் பயணப்பட வேண்டும் என்று பாதுஷா ஔரங்கசீப்புக்குத் தகவல் அனுப்பி இருந்தார்.

மிகவும் மன நிறைவுடன் புறப்படுகிறார்.

''சிவாஜி, நீ எனது மகனைப் போல! எனது மகன் ராமசிம்மன் ஒருகண் என்றால் நீ மற்றொரு கண்! ஏனென்றால் உனது சுயராஜ்யக் கனவை நான் மதிக்கிறேன். எனது சமகாலத்தில் இப்படி ஒரு புரட்சித் தலைவனைத் தரிசிக்கிறேனே! ஆக்ராவில் எனது மகன் உனக்கு எந்தவித அகௌரவமும் ஏற்படாது கவனித்துக் கொள்வான். இந்தப் பயணம் அமைதி விளைவிக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்!''

நகரமெங்கும் கோலாகலமாகத் தங்கள் வீரத் தலைவனை வாழ்த்தி வழிகாட்டுகிறது. பிறக்கப் போவது சமாதானம் ஆயிற்றே! அந்த அமைதியைத் தேடித்தானே மக்கள் அலைமோதி எதிர்பார்க்கிறார்கள்.

வழியில் ஆங்காங்கே இருந்த தமது கோட்டைகளில் தங்கி, இளைப்பாறி மீண்டும் பயணத்தைத் தொடங்குகிறார் சிவாஜி.

பூஜ்யா மட்டும் இப்பயணத்தில் ஏதோ ஓர் உற்பாதம் நேரவிருக்கிறது என்று தன்னுள் அடிக்கடி சொல்லிக் கொள்கிறாள். ஆயினும் அதனை வெளியில் எடுத்தியம்பவில்லை. தனது காதலனைப் பலவீனப்படுத்த அவள் விரும்பவில்லை. பலப்படுத்தித்தானே இதுவரை அவள் வெற்றி கண்டு வருகிறாள்.

ஏற்படப் போகிற உற்பாதம் தனக்குத்தான் என்பதையும் எண்ணிப் பார்க்கிறாள்.

இப்பயணத்துடன் அவள் புறப்பட்டிருக்கக் கூடாது. ஔரங்கசீப் பாதுஷாவின் நெருப்பனைய கண்களை அவள் சந்தித்திருக்கிறாளே! ஒருகால் சிவாஜிக்கு இக்கட்டான ஒரு நிலை ஏற்படுமானால்...

தன்னை பலிகொடுத்தேனும் ஒரு சுயராஜ்ய கனவுமிக்க புரட்சிச் சிம்மத்தை விடுவித்தே தீருவது என்கிற மிகப் பெரிய புரட்சி நினைவுடன் அவள் புறப்பட்டிருக்கிறபோது...

ஆ! எப்பேர்ப்பட்ட தியாக சிந்தையுடன் அவள் புறப்பட்டு இருக்கிறாள்.

ஒருகால் அவள் தனது கற்பு பறிபோகுமென்றால் அவளிடம் இருக்கும் மறைமுகமான புலிநகம் வேலை செய்யும் என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள்.

ஒரு காலைப்போது ‘செக்கர் நாதா’ என்கிற சேவலின் அழைப்புடன் விடிகிறபோது, சிவாஜி, தமது சேனைகளுடன் ஆக்ராவை அடைகிறார்.

ஓ. அதோ தெரிகிறதே...

அதுதான் தாஜ்மகாலோ!

அன்பான மனைவிக்குப் பாடிய கட்டிடக் காவியமோ!

இப்பேர்ப்பட்ட தந்தையாரையா ஔரங்கசீப்...?

தேவையில்லாத சிந்தனை; அது ஒரு குடும்பப் பிரச்னை; ஆட்சியின் எதிரொலி; இஸ்லாமிய தர்மம் காக்க எழுந்த புரட்சி.

சிவாஜி வருகிறார் என்கிற இனிப்பான செய்தி ஆக்ரா நகரில் பரவவே, அப்பேர்ப்பட்ட மாவீர திலகத்தைத் தரிசிக்க நகர மக்களே திரண்டு வருகிறார்கள். அந்நாளில் சிவாஜியின் சாகசங்கள் உலக பிரசித்தம்! நாட்டு விடுதலைக்காகப் போராடிய முதல் வட புலத்துப் புரட்சி வீரனாயிற்றே!

‘சிவாஜி’ என்றால் அழுத பிள்ளையும் வாய் மூடும். ‘அத்தகைய மாவீரர்; அத்தகு கொள்ளைக்காரனும் கூட’ என்பது அவர்களது அபிப்பிராயம்.

தம்மை, பாதுஷா ஔரங்கசீப்பே வந்து எதிர் கொண்டழைப்பார் என்று எதிர்பார்த்தார் சிவாஜி. புனாவிலும் சரி; பீஜப்பூரிலும் சரி அவர்கள் அத்தகு நட்புடன் பழகியவர்கள். ஆனால் நடந்தது?

ஜயசிம்மனின் புதல்வர் ராமசிம்மனையும் ஓர் இஸ்லாமிய அதிகாரியையும் அனுப்பி வரவேற்கச் செய்தது, நெஞ்சில்

கசப்பைத் தூவியதாகத் தெரிந்தது. ஆரம்பத்திலேயே சந்திப்பது அவமானமா?

பூஜ்யா பூரணமாகப் புரிந்து கொண்டாள், ஏதோ நடக்கப் போகிறது.

ஏற்பாடு செய்யப்பட்ட மாளிகையில் சிவாஜியும் பூஜ்யாவும் தங்கினர். இன்னொரு மாளிகையில் ஏனையவர்கள். மற்றபடி சேனைகளுக்கெனத் தனியிடம் அளிக்கப்பட்டது.

சௌகரியங்களைப் பொறுத்த மட்டில் பாதுஷா ஔரங்கசீப் எந்த விதக் குறைபாடும் வைக்கவில்லை. வைக்கக் கூடாது என்பது கடுமையான உத்தரவு.

அன்று முழுவதும் அந்த மாளிகையைச் சூழ்ந்தனர், மக்கள். சிவாஜியைப் பார்க்கத்தான். அனைவரையும் கண்டு மகிழ்ந்து புன்முறுவலை அன்பளிப்பாகத் தந்தார். இது ஏனைய இஸ்லாமிய வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பொறாமையாக இருந்தது. எப்பேர்ப்பட்ட மாவீரன் ஷிஷ்டாகான்! அவனையே சூழ்ச்சியின் மூலம் விரல்களைத் துண்டித்து அனுப்பிய ராஜதந்திர சாகசக்கார னாயிற்றே சிவாஜி!

**அ**ன்றைக்கு ஔரங்கசீப் தமது தர்பாரில் சிவாஜியை அழைத்துக் கௌரவிக்கப் போகிறார் என்கிற செய்தி எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

தர்பார் அலங்காரமாக விளங்குகிறது.

அனைவரும் சூழ்ந்து காணப்படுகிறார்கள்.

தங்கத்தாலும் பொன் மணியாலும் செய்யப்பட்ட சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்து காணப்படுகிறார் ஔரங்கசீப்.

சற்றைக்கெல்லாம் மாவீர சிவாஜி வருகை தருகிறார் என்கிற செய்தி வருகிறது.

ஆ! ஆயிரம் கண்களில் தெரிந்த எதிர்பார்ப்புகளில்தாம் எத்தனை எத்தனை மருட்சி?

அவையில் பேரமைச்சர்கள் ரோஹில்லாகான், ஜபார்கான், பொக்கிஷ அதிகாரி அசாத்கான், அவரது புதல்வன் ஜுல்பர்கான், ஔரங்கசீப்பின் புதல்வன் காம்பக்ஷ் ஆகியோர் இருக்கிறார்கள்.

'ஏன் பிறந்தான் இந்த சிவாஜி?' என்பது மாதிரியான பார்வையில் அவர்களது கண்கள் குமைகின்றன.

புலாத்கான் மட்டும் கறுவிக் கொள்கிறான். பீஜப்பூரில் ஏற்பட்ட எரிச்சலாயிற்றே அது!

சிவாஜியின் வீரசாகசத்தைப் பற்றி ஔரங்கசீப் நன்கு அறிந்திருந்தார்.

இருந்த இடத்திலிருந்து சிவாஜி துள்ளிப் பாய்ந்தால் இருபது கஜதூரம் பாய்வாரே!

ஔரங்கசீப் சிம்மாசனத்தைச் சுற்றிலும் தேர்ந்த வீரர்கள் ஆயுதபாணிகளாகக் காவல் இருக்கின்றனர். புலிநகப் பயம்...

மேலே அரசாணி மண்டபத் திரை மறைவில் சுல்தானியாக்கள்; ஔரங்கசீப்பின் அருமந்த புதல்வி - உருது மொழியில் மகாபண்டிதை - கவிதைமகள் சபூன்னிஸா - சிவாஜியைக் காணும் ஆவலில் இருந்தனர். சிவாஜியைக் காட்டிலும் அவரது அருமைக் காதலி - மகாராஷ்டிரத்தின் மூளை பூஜ்யா தேவியைக் காண அவள் விழைத்திருந்தாள்.

அந்தத் தர்பாரின் அமைதியிலிருந்து ஔரங்கசீப்பின் அரியணைக் கண்கள் புரிபடுகின்றன.

முன்னே, ராமசிம்மன் வர, பின்னே ரகுநாதபந்தன்வர, அவருக்குப் பின்னே மாவீர மகாராஷ்டிரதிலகம் வீர சிவாஜியும், பூஜ்யாதேவியும் இணைந்துவர, அவர்கள் இருவர்க்கும் நடுவில் எட்டு வயதே நிரம்பிய மகன் சம்பாஜி...

பின்னே நரசிம்ம ராவ் வந்தார்.

தர்பாரில் அமைதியோ அமைதி.

சிவாஜியைப் பார்த்த கண்களில் ஆச்சரியமோ ஆச்சரியம்.

இவர்தான் சிவாஜியோ?

ஆ! என்ன சிவப்பு? மூக்கின் அழகு! அதற்குக் கட்டியம் கூறும் மீசை, தாடி.

உடன் வரும் பூஜ்யா...

ஒரு வித்தியாசமான பேரழகியாகத் தெரிகிறாளே!

தமிழகத்துத் தங்கரதம் அது என்பது அங்கே பலருக்குப் புரியாத ஒன்று.

''நலமா பூஜ்யா!''

கம்பீரமான குரல், ஔரங்கசீப்பிடமிருந்து.

பூஜ்யாவுக்கு வரவேற்பு.

சிவாஜியின் கண்களைக் காட்டிலும் பூஜ்யாவின் கண்களில் சினம் சீற்றத்துடன் வெளிப்படுகிறது. அவள் சொன்ன பதில்:

''எங்கள் தலைவர் நலம்; எனவே நாங்களும் நலமே?''

''ஓகோ!''

பதில் அனைவருக்கும் புரிகிறது.

ஔரங்கசீப்புக்கு முகத்திலறைகிற மாதிரியான பதில்.

ஔரங்கசீப் சமிக்ஞை செய்ய...

உயரிய பீடமெனக் கருதப்பட்ட முதல் வரிசையில் பூஜ்யாவுக்கு இடம் ஒதுக்கி, இரண்டாந்தர வரிசையில் சிவாஜிக்கு அமைத்திருந்த இடத்தைக் காட்டி அதிகாரிகள் அழைக்க...

ஓ, உண்மையிலேயே உற்பாதம் ஆரம்பமாகிறது என்பதைப் புரிந்து கொள்கிறாள் பூஜ்யா.

இன்னமும் சிவாஜி வாய் திறக்கவில்லை.

பூஜ்யா பேசினாள்: ‘‘நான் உருதுவின்பால் கௌரவம் கொண்டு முன்பு எங்கள் தேசத்தில் உங்களைச் சந்திக்கிறபோது சலாம் செய்து சேவித்தேன். உங்கள் தர்பாரில் நாகரிகம் இல்லை. எனவே உருது மொழியால் உங்களைத் தாலாட்ட நாணங் கொள்கிறேன்!’’

‘‘நாணங்கொள்ளக் காரணம்?’’

‘‘எங்கள் வருகையை முறைப்படி வரவேற்கவில்லை; முதல் அவமானம்! தர்பாருக்கு வருகிறபோது ஒரு மாவீரனை வரவேற்கிற வரவேற்பு மாதிரி தெரியவில்லை. கேவலம், முகப்பு வாயில் சேவகன் கூடச் சலாம் செய்யவில்லை. நாங்கள் வணங்குவோம் என்று நீங்கள் எதிர்பார்ப்பது மாபெரும் தவறு. நாங்கள் என்ன அடிமைகளாகவா வந்திருக்கிறோம்? அதுதான் போகட்டும் என்றால், என்னை நலம் விசாரித்தது குறும்புத்தனமானது. எனது தலைவரை மேலும் அவமதித்தது இரண்டாந்தரப் பீடம்! எனக்கு மட்டும் ஏன் முதல் வரிசை ஆலம்பனா?’’

‘‘மூளைக்கு முதல் வரிசை!’’

ஔரங்கசீப் சற்று மீறிய செருக்குடன்தான் இவ்வாறு கூறுகிறார்.

அடுத்து -

பக்கத்தில் ஈட்டியுடன் நின்றிருந்த போர் வீரனைத் திரும்பிப் பார்த்த சிவாஜி, சரேலெனப் பாய்ந்து அந்த ஈட்டியைப் பிடுங்க...

ராமசிம்மன் இடைப் புகுந்து ‘‘மகாராட்’’ என்று கத்துகிறான்.

‘‘அமைதி, மகாராஷ்டிர திலகமே! அமைதி!’’

ஔரங்கசீப் பக்கம் திரும்பிய ராமசிம்மன், ‘‘ஆலம்கீர்! எனது தந்தை இல்லாத நேரத்தில் ஒரு மாவீர திலகத்தை - இந்து மதத் தலைவனை நீங்கள் அளவுக்கு மீறி அவமானம் செய்து விட்டீர்கள். இது எனது தந்தையை அவமானப்படுத்தியதற்கு ஒப்பாகும்’’ என்று கூறி, ‘‘மகாராட்! நீங்கள் மாளிகைக்குச் சென்று ஓய்வெடுக்கலாம். வந்த நேரம் சரியில்லை. நாளைய தர்பாரில் மீண்டும் சந்தித்து,

உடன்படிக்கை குறித்துப் பேசுவோம்'' என்று சாந்தப்படுத்தி அழைத்துச் சென்றான்.

உடன்புறப்பட்ட பூஜ்யாவை நோக்கிய ஔரங்கசீப், ''பூஜ்யா! சிவாஜி போகட்டும்; நீ இருந்து உடன்படிக்கை குறித்துப் பேசலாம் அல்லவா?'' என்றார்.

எரித்து விடுபவளைப் போலப் பார்த்த பூஜ்யா. ''நான் மூளையாக இருக்கலாம். ஆனால் அவர் மூலவர். நீங்கள் மறந்துவிடக் கூடாது, ஆலம்பனா! சகோதரர்களை வீழ்த்திவிடலாம். மகாராஷ்டிரர்களை வீழ்த்திவிட முடியாது. ஞாபகம் கொண்டு எங்களை நடத்த நினையுங்கள். உங்கள் தந்தை இட்ட சாபம் இன்னும் கல்லறையில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். ஆக்ராவின் அழிவுக்கு அஸ்திவாரம் போடாதீர்கள்'' என்று கூறி விறுவிறுவென்று நடக்கிறாள்.

ஔரங்கசீப் பற்கள் நறநறவென்று சத்தமெழுப்புகின்றன.

**அ**ந்த விருந்தினர் மாளிகை இப்போது பல நாட்களாகச் சிறைக் கூடமாய் விட்டது கண்டு சீற்றம் கொண்டார் சிவாஜி. பூஜ்யாவால் அவரைத் தேற்ற முடியாமல் போய்விட்டது.

''பிரபோ! கோபம் கொண்டு பயனில்லை. சாமோபாயம் தேடித் தப்பிக்க வழி வகுக்க வேண்டும். தயவு செய்து பொறுமையைச் சாதியுங்கள். நான் புறப்படுகிறபோதே இதனை எதிர்பார்த்தேன். எதிர்பார்த்தே புறப்பட்டேன். ராமசிம்மன் நமக்குத் துணை புரிவார். இரண்டாம் மகா சேனாதிபதியான ஜாபர்கான் ஏனோ காரணமின்றி நமக்குச் சகல சௌகரியங்களையும் கவனிக்கிறார். இத்தனைக்கும் ஜாபர்கானின் மனைவி, ஷிஷ்டாகானின் சகோதரி. அப்படியிருந்தும் துணை புரிகிறார் என்றால் உள் காரணம்...''

பேச்சு முடியவில்லை. நரசிம்ம ராவ் உள்ளே நுழைகிறார். ''பிரபோ! ஆலம்கீர் ஔரங்கசீப் அருமந்த புதல்வி சபூன்னிஸா வரலாமா என்று உத்தரவு கேட்டு வெளியில் நிற்கிறார்'' என்றார்.

பூஜ்யா ஒருகணம் அதிர்ந்து போனாள். அதுதான் காரணமோ!

''வரச் சொல்லுங்கள் ராவ்!''

சற்றைக்கெல்லாம் முக்காடிட்ட இளமங்கை உள்ளே நுழைகிறாள்.

''நமஸ்தே!''

''நமஸ்தே!''

முக்காடு விலகுகிறது.

முழுமதி தெரிகிறது.

ஆ! என்ன அழகு, கொள்ளையழகு! ஒரே மூச்சில் பாடிய கவிதையோ? அரங்கேறாக் காவியமோ? வானவீதியின் நிரந்தரப் பௌர்ணமியோ? பேரழகு நந்தவனத்து உதிராத பொன்மலரோ?

இத்தனையும் எண்ணிப் பார்த்தவள் பூஜ்யாதேவி. ''உட்காருங்கள். ஸுப்ஹானல்லாஹி!'' என்கிறாள் பூஜ்யா.

சபூன்னிஸா வியந்தவண்ணம் அமருகிறாள். பூஜ்யாவைப் பற்றி நிறையவே தனது தந்தை மூலம் கேள்விப்பட்டிருக்கிறாள். சற்று முன்கூடத் தந்தையிடம் பெரிதாக, வாதித்த பின்னரே தெரியாமல் கொள்ளாமல் புறப்பட்டு வந்திருக்கிறாள். தந்தையின் எண்ணம் எப்போது பூஜ்யாவைச் சுற்றி வட்டமிடுகிறதோ, அது ஆக்ராவின் அழிவுக்கு வழி வகுக்கிறது என்பது குறித்துப் புரிந்தே வந்திருக்கிறாள். பூஜ்யா தன்னைப்போல் ஒரு பெண் அதிலும் மாவீரன் காதலி, அவளைக் காப்பது தனது தலையாயக் கடன் என்கிற நினைவுடன் வந்திருக்கிறாள். சிவாஜியைப் பகைத்து மாளிகைச் சிறை வைத்ததே இந்தப் பூஜ்யாவின் பேரழகும் பேரறிவும்தாம். இவர்களைத் தப்பிக்க வழிகோல வேண்டும் என்று உறுதி பூண்டு கொண்டாள். அதற்கு அவளது கவிதை மனம் மட்டும் காரணம் அல்ல; அவளது கனிந்த மனமும் காரணமாகும்.

''அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!'' என்கிறாள் சபூன்னிஸா. அவள் ஒரு நல்ல

காரியத்தை ஆரம்பிக்க வந்திருக்கிறாள் என்பதை அந்த மரபு மறை மொழி பகர்கிறது.

''ரஹ்மானிர் ரஹீம்!'' என்று ஏற்கிறாள் பூஜ்யா.

சிவாஜிக்கு உருது லேசாகத் தெரியும். மரபு தெரியாது.

பூஜ்யா சகலகலாவல்லவியாயிற்றே!

சபூன்னிஸாவின் திராட்சைக் கண்கள் சிவாஜியை நோக்குகின்றன.

''நீங்கள் பேசவே இல்லையே!''

''யா அல்லாஹ்! நான் என்ன பேச? உன் தந்தைதான் இவளை என் மூளை என்று குறிப்பிட்டு விட்டாரே! எனக்கு மூளை இருந்தால் தானே பேச?''

''அதற்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்.''

''நீ உனது தந்தையின் மூளையா?''

''அப்படியிருந்தால் என் தாத்தா சிறையில் செத்திருக்க மாட்டார். அந்த மகா புருஷனது மறைவுக்குப் பிறகு நானும் மாண்டிருக்க வேண்டும். இந்தத் தாஜ்மகாலையும் எங்கே இடித்துத் தள்ளி விடுவார்களோ என்ற பயத்தின் காரணமாக நான் உயிருடன் இருக்கிறேன்.''

''லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்'' என்கிறாள் பூஜ்யா. ஒரு துக்கமான செய்தியைக் கேட்டால் இவ்வாறு சொல்வது இஸ்லாமிய மறை மரபு.

''உங்கள் வசதிக்கு ஏதேனும் தேவையானால் ஜாபர்கான் கவனித்துக் கொள்வார்.''

ஓ. புரிகிறது.

''சபூன்னிஸா! ஒரு வேண்டுகோள்! வந்து இத்தனை நாளாகியும் உன் தந்தை ஏன் பேட்டி தரவில்லை?''

‘‘புலிநகப் பயம். அப்சல்கான், ஷிஷ்டாகான் கண்ட அநுபவம்.’’

சிவாஜி சிலிர்த்துக் கொள்கிறார்.

‘‘எதற்காக உடன்படிக்கை என்கிற பெயரில் போலியாகத் தூது அனுப்ப வேண்டும்?’’

‘‘தூதா? போலி! சொன்னால் வருத்தப்படமாட்டீர்களே!’’

பூஜ்யா ஒரு தவயோகியைப் போலத் தலையசைக்கிறாள்.

‘‘பூஜ்யாவை அபகரிக்கத்தான்! சிவாஜி ராஜனை இங்கே வரவழைத்துவிட்டு அங்கே உங்களைச் சிறையெடுக்க திட்டமிட்டார். நீங்களே உடன் வந்துவிட்ட பிறகு, இந்த மாளிகை சிறையாகி விட்டது.’’

‘‘சபூன்னிஸா.’’

கதறுகிறார் சிவாஜி.

‘‘அமைதி மகாராட். நான் இருக்கிறேன். தாஜ்மகாலை மட்டுந்தான் என்னால் காக்கமுடியும் என்பதில்லை. என் போன்ற உத்தம சகோதரிகளின் கற்பையும் என்னால் காக்க முடியும். பயப்பட வேண்டாம். உங்களை வெளியேற்றுவது எனது கடன்.’’

சபூன்னிஸா இவ்வாறு கூறியதும் அவளது இருகரங்களையும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள் பூஜ்யாதேவி ‘‘அல்ஹம் துலில்லாஹ்.’’

ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டதும் சொல்ல வேண்டிய மறைமொழி! அல்லாஹு அக்பர்!

-----

# 35

ஒருவன் துணையின்றிச் சூழ்ச்சி முடிவை எய்த இயலாது. அரசியல் காரியங்கள் காண்டல், கருதல், உரை என்னும் அளவைகளால் துணிந்து செய்யத்தக்கன. அறியப்படாததை அறிதல், அறிந்ததை உறுதியாகத் துணிதல், பொருள் இரண்டு படுங் கால் உண்டாம் ஐயத்தை ஒழித்தல், காணப்பட்ட ஒரு கூறுகண்டு எஞ்சிய வற்றை அறிதல் என்னும் இவை எல்லாம் மந்திரிகளால் இயல்வன. ஆதலின் (ராஜதந்திரம் நிறைந்த அமைச்சர்) முதிர்ந்தோர்களுடன் கூடிச் சூழ்ச்சியை மேற்கொள்ளக் கடவன்.

**– சாணக்கியரின் 'கௌடலீயம்'**
(அதிகரணம் - 1, அத்தியாயம் - 15).

**எ**த்தனை நாட்களுக்குத்தான் இந்தச் சிறை மாதிரியான வாழ்க்கை?

ஏ, ஔரங்கசீப்! உன்னைப் பார்த்துக் கொள்கிறேன் எனக் கறுவிக் கொள்கிறார் மாவீர சிவாஜி.

பூஜ்யாதேவி கேட்டுக்கொண்டது போல ஒவ்வொரு குருவாரமும் விரதத்தை அனுஷ்டிக்க உத்தரவு கிடைத்தது. உத்தரவு கிடைக்க ஏற்பாடு செய்தவள் சபூன்னிஸா.

இந்தப் பூஜ்யாவை அனுபவிக்க முடியவில்லையே என்கிற பதைப்பு ஔரங்கசீப்புக்கு.

அன்றும் வியாழக்கிழமை.

எப்படியும் இன்றைக்குத் தப்பிவிடுவது என்கிற முடிவுக்கு வந்திருந்தார்கள்.

அந்த முடிவு யுவராணி சபூன்னிஸாவுக்கும் தெரிவிக்கப் பட்டது. இந்நாள் வரை உதவியவளாயிற்றே! நன்றி கொன்றதனமாகச் சென்று விடக்கூடாதல்லவா?

மாளிகை ஏக அமர்க்களமாக விளங்குகிறது. அதே நேரத்தில் நேற்றைய தினம் ஔரங்கசீப் வகுத்த திட்டம் சபூன்னிஸாவின் காதுகளில் அடிபடுகிறது. இன்னும் இரு தினத்தில் சிவாஜிக்குத் தண்டனை விதித்து அதற்கு ஈடாக பூஜ்யாவைப் பறிக்க வேண்டும் என்கிற திட்டம். இத்திட்டத்தால் நாடு கொந்தளிக்கத் தொடங்கினால் ஆக்ரா மிஞ்சுமா என்கிற ஐயம் அறிவார்ந்த சிந்தனா சக்தி படைத்த சபூன்னிஸாவுக்கு ஏற்படவே அவள் அலைமோதினாள். இதற்கிடையில் சிவாஜியின் தப்பிச் செல்லவிருந்த முயற்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு சபூன்னிஸா மனிதாபிமானத்துடன் உதவ முன் வந்தாள்.

சிவாஜியின் மாளிகையில் பலரும் வந்து சென்றாலும் காவல் விஷயத்தில் இரும்புக் கோட்டையாக விளங்கியது.

தூக்குக் காவடிகள் மாதிரியான பளுதூக்கிகள் மூலம் கனிவகைகள் வரலாயின. அன்று விரதம் முடிவு பெறுகிறது என்று கூறவே பூஜ்யாவின் பொருட்டு ஔரங்கசீப் பலவீனப்பட்டு வாளாயிருந்து விட்டார். [1]சிவாஜியின் விரதம் என்று சொன்னால் இவ்வளவு உத்தரவுகளை ஔரங்கசீப் வழங்க அவர் என்ன சிந்தனையற்றவரா?

1. வரலாற்றின்படி சிவாஜிதான் விரதம் மேற்கொண்டார். இதனை ஔரங்கசீப் எவ்வாறு ஏற்றார் என்பது சிந்தனைக்குரியது. எனவே நான் பூஜ்யாவை வைத்துக் கற்பனை செய்கிறேன்.

குருவார பூஜை ஏக அமர்க்களமாக நடந்து முடிகிறது. ஒரு ரகசிய ஏற்பாட்டின்படி, குறிப்பிட்ட இடத்தில் சபூன்னிஸாவும் பூஜ்யாவும் சந்திக்கிறார்கள். உடன் சிவாஜியும் இருக்கிறார். ''பூஜ்யா, நீங்கள் அதிர்ஷ்டசாலி, ஒரு சரித்திரப் புருஷனைக் காதலித்து - மணக்கப் போகிறீர்கள். என் வாழ்த்துக்கள்.'' சபூன்னிஸாவின் கண்களில் பிரிவாற்றாமை நிறைந்த நீர்ப்படர்வு. அவளது கண்கள் மெல்ல சிவாஜியை நோக்குகின்றன. அவளது கனிந்த இதயம், தாத்தா ஷாஜஹானைப் பின்பற்றியது; பாட்டி மும்தாஜைப் போன்ற அழகு வார்ப்படம்.

எப்படித் தப்பிப்பது என்பது குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படுகிறது.

கனிவகைகளைச் சுமந்து வந்த காவடிகளைப் பளுதூக்கிகள் - அதாவது நீண்ட கம்பின் இருமுனைகளிலும் கூடைகளைப் பொருத்தித் தோளில் சுமக்கும் காவடிகளைப் போன்ற பளுதூக்கிகள் மூலம் தப்பிக்க வேண்டும். ஒரு கூடையில் சிவாஜி; இன்னொரு கூடையில் பூஜ்யா. இது போலவே ஒரு கூடையில் பாலாஜி, ஒரு கூடையில் நரசிம்ம ராவ்.[1]

பூசனைகள் முடிவுற்றது.

பொது மக்களுக்குப் பலகாரங்களையும் கனிவகைகளையும் வழங்குகிறார்கள். காலியான காவடிகள் வெளியேறுகின்றன. அப்படி வெளியேறுகிறபோது, சிவாஜியையும், பூஜ்யாவையும், நரசிம்மராவையும், சம்பாஜியையும் வைத்து எடுத்து வந்த பளுதூக்கிகளுடன், யதார்த்தமாக ஏதோ தானும் அழைப்பின் பேரில் கலந்து கொண்டு வெளிவருவது போல சபூன்னிஸாவும் வரவே அவளைத் தொடர்ந்து வந்த தூக்குக் கூடைகளைக் காவலர்கள் சோதனை போடுவதை விட்டு நிமிர்ந்து சலாம் செய்வதில் ஈடுபட்டு விட்டனர்.

1. சிவாஜியின் படுக்கையில் ஹிராஜி படுத்துக்கொண்டு உடல் சரியில்லை என்று போர்த்துக் கொண்டதாகவும், பிறகு மருத்துவனைத் தேடுகிற சாக்கில் ஹிராஜி வெளிப்பட்டு விட்டதாகவும் வரலாறு. இந்தக் கட்டுக் கதைகளை என்னால் நம்பமுடியவில்லை. ஔரங்கசீப் என்கிற மகாராஜ தந்திரியும் போர் வீரருமான சக்கரவர்த்திகளின் ஆட்சி, கண்மூடித்தனமாகவா இருந்திருக்கும்? இந்தக் காவடி நிகழ்ச்சி ஏற்புடையதாய் இருந்தாலும் விரதம் அனுஷ்டித்த பிடிப்பாகத் தெரிகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சபூன்னிஸாவுக்கு ஒரு நீண்ட பெருமூச்சு.

ஆ! தப்பிவிட்டார்கள்.

**அ**ன்று மாலை இந்தச் செய்தி பரவுகிறது.

ஔரங்கசீப் கொண்ட கொதிப்புக்கு அளவே இல்லை. காவல் நின்ற பலரைச் சிறையிலிட்டுத் தண்டிக்க உத்தரவிடுகிறார். ''எப்படியும் சிவாஜியையும், பூஜ்யாவையும் சிறைப்படுத்துங்கள்.''

இஸ்லாமிய வீரர்கள் திசைக்குத் திசை பறக்கின்றனர்.

மகாராஷ்டிர வீரர்களை இரு தினங்களுக்கு முன்பே ஒருவர்பின் ஒருவராகத் தப்பிச் சென்றுவிட சிவாஜி ஆணை பிறப்பித்திருந்தார். ஹிராஜிக்கு மட்டும் குறிப்பிட்ட இடத்தில் பதுங்கி இருக்குமாறு பணித்திருந்தார்.

இரவின் உதயம் எதில் கொண்டு போய் விடப்போகிறதோ என்பது போல நட்சத்திரங்கள் மின்னுகின்றன.

வழியில் ஏற்பாடாகி இருந்த சின்னஞ்சிறு ரதத்தில் பூஜ்யாவை அமர்த்தி அதிவேகமாக செலுத்திக் கொண்டிருக்கிறார் வீர சிவாஜி. வேற்று வழியில் நரசிம்ம ராவ் சம்பாஜியுடன் பயணமாகிக் கொண்டிருந்தார். எப்படியோ அவர்கள் ராஜகோட்டையை அடைந்துவிட வேண்டும்.

ஒரு வாரமாக இடைவிடாத பயணம்; ஓய்வு கொண்டால் தேவலை என்கிற மாதிரி ஓர் அசாத்திய அலுப்பு.

ஒரு படு குக்கிராமம்.

அங்கே ஏதோ பெயருக்கு உண்டு முடித்தனர்.

தொலைவிலிருந்த ஒரு காட்டுப் பகுதியில் எவனோ எப்போதோ கட்டிய கோட்டையொன்று சிதிலமாகிக் கிடந்தது.

மாலைச் சூரியன் அக்கோட்டை மீது பொன்னொளி பரப்புகிறான்.

பகல் வெளிச்சத்தில் அது தனிமையில் சுகமாக இருந்தாலும் இரவில் எப்படியோ?

சிவாஜி அது குறித்துப் பீதி கொள்ளவில்லை. அவர்தான் மலைப் பெருச்சாளியாயிற்றே! வரலாறு அவரை மூர்க்கத்தனமான ஜங்கிஸ்கான் என்றும் வருணிக்கிறதே! பூஜ்யாவுக்கு மட்டும் பீதி. பக்கத்தில் மாவீர சிங்கம் இருக்க மருட்சி கொள்வது மடத்தனம் என்று தன்னைத் தேற்றிக் கொள்கிறாள்.

மகன் சம்பாஜி குறித்து பூஜ்யா பட்ட கவலையை சிவாஜி படவேண்டுமே!

ஓர் உண்மையான சுதந்திர வீரனுக்கு இம்மாதிரியான குடும்ப பாசங்கள் இருக்க நியாயமில்லை என்பது பூஜ்யா அறிந்ததே. ஆனால் காதல் இருக்க நியாயம் உண்டு. காமம் இருக்க அதைவிட பெரிய நியாயம் உண்டு என்பதையும் அந்த அறிவு ஜீவி அறிந்திருந்தாள்.

அந்தச் சிதிலமான கோட்டையின் கீழ்ப்பகுதியில் தங்க முடியாது. அவ்வளவுக்கு அது பாழடைந்திருந்தது. ரதத்தை மட்டும் உட்புறத்தில் மறைவான ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, குதிரைகளைக் கட்டினார்கள். துணைவீரர்கள் ஏறத்தாழ இருநூறு வீரர்கள் அந்தக் கோட்டையைச் சுற்றிலும் இமைகளில் கவனத்தை அமர்த்தி விழித்துக் காவல் புரியலாயினர்.

வானில் தேய்பிறைச் சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான்.

கோட்டையின் மேல் தளத்தில் ஓரிடம் ஓரளவு தங்குகிற மாதிரியும் தக்க பாதுகாப்பாகவும் இருந்தது. அங்கே சிவாஜியும் பூஜ்யாவும் தங்கிக் கொண்டனர். ஒரு நாள் முழுவதுமாக அங்கே ஓய்வுகொள்ள தீர்மானித்தனர்.

ஜமக்காளம் விரித்து அதில் இரு தலையணைகள் மட்டுமே போதுமானவையாக இருந்தன.

''இந்த உடன்படிக்கை நிறைவேறாதது ஒரு விதத்தில் அமைதியைக் கொடுக்கிறது பூஜ்யா!'' என்கிறார் சிவாஜி.

''இது நிறைவேறாது என்று எனக்கு முன்பே தெரியும்.''

‘‘எப்படித் தெரியும்?’’

‘‘அதுதான் நான் கூட வந்திருக்கிறேனே? நிறைவேறக் கூடாது என்பதற்காகத்தானே நான் ஆக்ரா வரை வந்து இந்த அவஸ்தைப்படுவது.’’

‘‘புறப்பட்டு இருக்க வேண்டாமே!’’

‘‘ஔரங்கசீப்பை புரிந்து கொள்வது எப்படி?’’

‘‘புரிந்து கொண்டு இப்போது என்ன செய்யப் போகிறாய்?’’

‘‘நகரம் சென்றதும் உடனடியாக மகுடவிழா. அடுத்து ஔரங்கசீப்பை யுத்தகளத்தில் சந்திக்க வேண்டியதுதான்.’’

‘‘பூஜ்யா!’’

‘‘தீர்மானிக்கப்பட்ட விஷயம்.’’

அதற்குமேல் வீரமா சிவாஜி ஒன்றையும் பேசிக் கொள்ளவில்லை. அசதி வேறு, படுத்துக் கொண்டார்.

ஒரே ஜமக்களாம், பக்கத்தில் இரண்டு தலையணைகள். வேறு என்ன செய்ய முடியும்? அவள் ஒன்றும் பேசிக் கொள்வதற்கில்லை. அவளும் படுத்துக் கொண்டாள்.

உடல் கண்ட அசதிக்கு இருவரும் படுத்த சற்றைக்கெல்லாம் உறங்கி இருக்க வேண்டும்? ஏன் இவர்கள் ஒருவர்க்கொருவர் தங்களுக்குள் கண்களை மூடிக் கொண்டு இந்த ஊமை நாடகம் ஆடவேண்டும்?

சிவாஜிக்கு என்னவோ உடல் பரபரத்தது. வெகு நாளைய ஓய்வு. பூஜ்யாமீது கொண்ட மோகம் நீண்ட நாட்களாகத் தணலாய்த் தகித்துக் கொண்டிருக்கிற எதிர்பார்ப்பு. இடையில் ஏற்பட்டது ஒரு முத்தம். பிறகு இடைவெளி. இப்போது காட்டின் தனிமை. ஏகாந்தம். பாழடைந்த கோட்டையானாலும் ஒரு மாளிகை மஞ்சம் தூண்டாத கிளர்ச்சியை அந்தச் சிதிலமான இடம் தூண்டுகிறது. இப்பேர்ப்பட்ட இடங்கள்தாம் இதுமாதிரியான காரியங்களுக்குப் பலத்த தூண்டுதலாக அமையும் என்பதை அநுபவித்தவர்களே அறிவர். எப்படியும் இன்று

பூஜ்யாவை அநுபவித்து விடலாம் என்கிற தகிப்பு கணத்துக்குக் கணம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

சிவாஜிதான் இம்மாதிரியான தகிப்பில் விழித்துக் கொண்டிருக்கிறார். பூஜ்யா ஏன் விழித்துக் கொண்டிருக்க வேண்டும்?

சிவாஜிக்கு இப்படியான தகிப்பு நிலை நிச்சயம் ஏற்படும். அயர்ந்து தூங்கிவிட்டால் ஏதேனும் நடந்துவிடுமானால்...

சிவாஜி உறங்கத் தொடங்கினால் பொடி சங்கீதமாய்க் குறட்டை விடுவார். அது அவள் அறிந்தது. குறட்டையைக் காணோமே!

ராஜதந்திர அறிவு ஜீவியாயிற்றே அவள்!

சிவாஜியும், பூஜ்யா ஏதேனும் தவறாக எண்ணிவிடக் கூடாது என்கிற அடக்கத்துடன் இருந்தார்.

ஹூம்! முடியவில்லை!

மெல்ல அவர் அவளை அணைக்க முயல, விருட்டென்று எழுந்து உட்கார்ந்து மேலாடையைச் சரி செய்து கொள்கிறாள் பூஜ்யா.

அவளது பார்வை சிவாஜியின் சிவந்த கண்களைச் சந்திக்கின்றன.

சுருதி இறங்கிய நிலவு வெளிச்சம்.

''பூஜ்யா!''

''வேண்டாம் பிரபோ!''

''இத்தனை நாட்கள் கட்டுப்படுத்திய என்னால் இன்றைக்குக் கட்டுமீறி விட்டது. காரணம் சூழ்நிலை.''

''நான் ஓரமாகச் சுவரில் சாய்ந்து உறங்குகிறேன். வேண்டாம்.''

''எனக்கு வேண்டும்.''

''பிரபோ!''

''எனக்கு வேண்டும்!''

‘‘பிரபோ!’’

‘‘எனக்கு வேண்டும்!’’

சில மூர்க்கமான குழந்தையின் பிடிவாதம் போலக் கர்ஜிக்கிறார்.

‘‘பிரபோ! மகுட விழா வரை பொறுத்திருங்கள். முறைப்படி கழுத்தில் மாங்கல்யம் ஏறட்டும். நான் எங்கே போகப்போகிறேன்?’’

‘‘நீ என்னுடனேயே என்றும் இருக்கப் போகிறவள் என்பதற்காகத்தான் இந்தப் பிடிவாதம். மாங்கல்யம் ஏறினால்தானா கட்டில் இனிக்கும்?’’

‘‘நான் புகுந்தது மகாராஷ்டிரம், பிறந்தது தமிழகம். எங்கள் மரபு வழக்கு அப்படி?’’

‘‘என்ன தமிழகமோ! உனக்கு எப்போது பார்த்தாலும் தமிழகம். உன்னால் எனக்குத் தமிழகம் மீது வெறுப்பே வருகிறது.’’

‘‘அப்போது என்னையும் நீங்கள் வெறுக்க வேண்டியதுதான்.’’

‘‘இந்த ஜன்மத்தில் அது முடியாது.’’

‘‘இந்த ஜன்மத்தில் நான் பிறந்த மண்ணை மறந்துவிட முடியாது.’’

‘‘நான் ஆரம்பித்த ஊடல் வேறு; இப்போது நடக்கின்ற ஊடல் வேறு.’’

‘‘பேசாமல் படுங்கள்.’’

‘‘முடியாது என்றுதான் சொல்லிவிட்டேனே!’’

‘‘அப்படியென்றால் நீங்கள் கட்டாயம் என்னை அநுபவித்துத்தான் தீர வேண்டுமா?’’

‘‘என்னால் பொறுமையாகத் தூங்க முடியாது.’’

‘‘அவ்வளவு பலவீனமா?’’

‘‘இத்தனை ஆண்டுகள் சகித்துக் கொண்டிருக்கவில்லையா?’’

''அப்போது அரண்மனையில் ஒருவர் மாற்றி ஒருவராக மனைவியர்கள் இருந்தார்கள்.

''பூஜ்யா!''

''பலவீனத்துக்கு விளக்கம் சொன்னேன்.''

சிவாஜி எழுந்து அவரது வீரக்கரங்களால் பூஜ்யாவை அணைக்கிறபோது, பூஜ்யாவின் பலவீன பாகங்கள் தளர்வு கொள்ளாமல் இல்லை. அவளுக்கும் அது இல்லையா என்ன? ஆயினும் ஒரு குறிக்கோளுடன் அவள் இருந்தாள்.

அணைத்த அணைப்பில் உதடுகளும் ஒரு முறை சுகம் தேடிக் கொண்டன.

''பிரபோ!''

''பேசாமல் இரு!''

''ஒரே ஒருமுறை பேசிவிடுகிறேன். அதற்குப் பிறகு உங்கள் இஷ்டம்.''

''என்ன?''

''நான் இப்போது களங்கமானால் நிச்சயம் கழுத்தில் தாலியை ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஒரு வைப்பாட்டிக்குச் சமானமாகத்தான் வாழவேண்டும். அதை நான் விரும்பவில்லை. மகுடாபிஷேகம் நடந்து முடிந்ததும் நான் உங்களுடன் இருந்தாலும் இருப்பேன். என் வழியில் எங்கேனும் சென்றாலும் சென்றுவிடுவேன்!''

''எங்கே செல்லப் போகிறாய்?''

''அது எனக்குத் தெரியாது.''

இதற்குள் சிவாஜியின் கரங்கள் எங்கெங்கோ சுகம் தேடத் தொடங்கிவிட்டன.

பூஜ்யாவின் பவித்திரமான சொற்கள் காதுகளில் விழுந்தால்தானே?

சிவாஜி தம்மை மறந்த மோக நிலையில் இருக்கிறாரே...

பூஜ்யா கொஞ்சமும் மறுக்கவில்லை. கசந்து கொள்ளவும் இல்லை. பூஜ்யா பூரணமாகிறாள்.

ஆயினும் கொள்கை முறிந்தது.

ஆனாலும் பூஜ்யா, அந்த முதல் சுகத்தை முத்தனைய ஏற்று, சத்தனைய அனுபவித்து, நித்திரையை நினைவு கூர்ந்தாள்.

**பொ**ழுது விடிந்து கொண்டிருந்தது.

வழியில் பலவிதமான அற்புத நிகழ்ச்சிகளைக் கண்டும், மகிழ்ந்தும் ராஜகோட்டையை அடைந்தனர்.

ராஜகோட்டை அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுண்டா?

சிவாஜி மகாராஜ் தப்பி வந்தது ஒரு மாபெரும் கண்டத்திலிருந்து தப்பியதற்கு ஒப்பானதல்லவா?

பூஜ்யாதேவி, முந்திய நிலையில் இல்லை. அவள் எதையோ இழந்து விட்டது மாதிரியான ஒரு மௌன நிலை.

கொள்கை முறிந்த சோக நிலை.

வாரத்தில் இரண்டு இரவுகளேனும் முழுமையாகச் சிவாஜிக்கு அர்ப்பணித்தாள்.

பூஜ்யாவின் போக்கில் மாறுதல் தெரிகிறது.

பூஜையில் இப்போது முழுமையில்லை. வீணையைத் தொடுவதே இல்லை. இருக்கிற பெண்டாட்டிகள் போதாவென்று இன்னும் சிலரை மணந்து கொள்ள ஆயத்தமானார் மாவீர சிவாஜி.

பூஜ்யாவும் கசந்து போக வேண்டியதுதானா?

நாட்கள் மாதங்களாய், ஆண்டுகளாய்...

இடையில் சிவாஜியின் எழுச்சி பல திசைகளில் திரும்பின.

பூஜ்யா விரும்பிய மகுடவிழாவைச் சிவாஜி உடனடியாகச் செயலாற்றாமல் காலதாமதம் செய்தார். அன்றொரு நாள் சிதிலமடைந்த கோட்டையில் பூஜ்யா சொன்ன சொற்கள் அவ்வாறு அவரை அலைக்கழித்தன. எங்கே பூஜ்யா சொன்னவண்ணம் தம்மை விட்டுப் பிரிந்து சென்று விடுவாளோ என்கிற ஆற்றாமை சிவாஜியை உடனடியாக மகுட விழாவை ஏற்க முடியாமல் தவிர்த்து வந்தது.

ஜெயசிம்மன், சிவாஜிக்கு நடந்த அவமானத்தைக் கேள்வியுற்று, ஔரங்கசீப்பிடம் மன வருத்தம் கண்டு, உடல் நோய் வயப்பட்டு விட்டார். இப்போது தக்காணத்துப் பிரதிநிதியாகக் கர்கஜஹான் நேமிக்கப்பட்டிருந்தான்.

சிவாஜியின் சுயராஜ்யக் கனவைத் தூண்டுவதில் மட்டும் பூஜ்யா முழுக்கவனம் செலுத்தத் தவறவில்லை. மகுட விழாவுக்கு முன் தீர்க்க வேண்டிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் தீவிரமாக வாளேந்தினார் வீர சிவாஜி. இதற்கிடையில் ஜயசிம்மன் மாண்டுவிட்ட செய்தி கேட்டுப் பெரிதும் துயர் கொண்டார். ஜயசிம்மனின் மரணம் ஆக்ராவை நிரம்பவும் பலவீனப்படுத்தி விட்டது.

பீஜப்பூர் இப்போது சுத்தமாகத் தமக்குப் பணிந்தாக வேண்டும் என்று சிவாஜி வீராவேசம் கொண்டு பாய்ந்தார். சிவாஜியின் எழுச்சி வருகை கேட்டு அதிர்ச்சியால் பீஜப்பூர் அரசன் மரணமடைந்தான். பீஜப்பூர் சிவாஜிக்கு ஏழு லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் கப்பம் கட்டுகிற மோசமான நிலைமையை எய்தியது. அடுத்து கோல் கொண்டா. அதுவும் ஐந்து லட்சத்துக்கு ஒப்புக் கொண்டது. இந்தச் செய்திகளைக் கேள்வியுற்ற ஔரங்கசீப் இந்துக்களின் கோயில்களையும் கல்விச் சாலைகளையும் இடித்துத் தள்ளுமாறு ஆவேச உத்தரவுகளைப் பிரகடனப்படுத்துகிறார்.

இந்த வெற்றி மகிழ்ச்சியின்போது சிவாஜிக்கு ஓர் ஆண் குழந்தை ஜனனமாகிறது. அவன்தான் ராஜாராம். இந்த மகிழ்ச்சியில் கோயில்கள் இடிபடுகிற துக்கச் செய்தியா?

இடையில் இரு மனைவியர்களை மணக்க, அவர்களில் ஒருத்தி நோய்வாய்ப்பட்டு மாண்டு போனாள்.

இத்தனையையும் பூஜ்யா கண்டும் காணாமலுமாக இருந்தாள். தமது இன்ப நுகர்ச்சிக்குப் பிறகு சிவாஜியின் மாற்றம் அவளுக்கு நன்றாகவே புரிந்தது. ஆயினும் அவள் கண்ட கனவு, ஓ... வயதும் ஏறிக்கொண்டே வருகிறது...

ஓ! ஆக்ராவிலிருந்து திரும்பி ஏறத்தாழப் பத்து ஆண்டுகள்....

மகுட விழா நடைபெற வேண்டும்...

அதுவரை அவள் தனது பங்கைச் சிரத்தையுடன் செய்து வந்தாள்.

போதும் அவள் வாழ்ந்தது என்கிற மாதிரி இன்பத்தை ஈடு கொடுத்தாள்.

ஒரு நாள்...

திடுமென்று மயங்கி விழுந்தவள், எழுந்திருக்க முடியாமல் போனாள்.

அதிகப்படியான மூளைச் செலவு அவளுக்கு நரம்புத் தளர்ச்சியைக் கொடுத்துவிட்டது. அதிகப்படியான மூளைச் செலவு மட்டுந்தானா? அவள் தனது கனவை மதித்தாள். ஆனால் சிவாஜியை மெல்ல மெல்ல வெறுக்க ஆரம்பிக்கிறாள். இவரா தமிழகச் சத்தியத்தைக் காக்கப் போகிறார்?

பூஜ்யாவுக்கு இப்படி ஏற்படவே சிவாஜி பெரிதாக அரண்டு போனார்! எப்படி எல்லாம் ராஜதந்திர உபதேசம் செய்தவள்!

மேலும் பெற்ற அன்னை [1]ஜீஜாபாய்வேறு படுத்த படுக்கையாக இருக்கிறாள். எப்படி எல்லாம் தன்னை வளர்த்து ஆளாக்கி இருக்கிறாள்!

---

1. 18, ஜூன், 1674-ல் ஜீஜாபாயும் உயிர் நீக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. வயது-80.

இந்நிலையில்...

மகுட விழாவை நடத்தியே தீர வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

வாலிபம் வரை வீரமூட்டியவள் ஒருபுறம் நோய்ப்படுக்கை.

வாலிபத்துக்குப் பிறகு விவேக மூட்டியவள் ஒருபுறம் நோய்ப்படுக்கை.

மகுட விழாவுக்கு நாள் குறிப்பிடப்பட்டது. 6, ஜூன், 1674.

மகுட விழாவை நடத்த மகா சாஸ்திரியான வேதியர் யார்?

பூஜ்யா சொன்னாள்:

''காசியில் கங்கபட்டர் எனும் வேதியர் ஒருவரே பொருத்தமானவர்.''

அழைத்துவர ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்றன.

ராஜகோட்டையே கோலாகலம் பூண்டு விட்டது.

ஜூன் திங்கள் ஆறாம் நாள்.

முறைப்படி வேதங்கள் முழங்குகின்றன.

பூஜ்யா வர மறுக்கிறாளாமே?

சிவாஜி விரைந்து சென்று எவ்வளவோ கெஞ்சுகிறார்.

''பிரபோ! வலது கால் விளங்கவில்லை. எவ்வாறு வருவது?

''நான் தோளில் தூக்கிச் செல்கிறேன், பூஜ்யா!''

பூஜ்யாவின் கண்களில் நீர்த்திவலைகள்.

''பிரபோ! எப்படி இருக்க வேண்டியவள் இப்படியாய் விட்டேன். காரணம் நீங்கள்! மறுக்க முடியாது. உங்கள் கொள்கையை நீங்கள் முறியடித்துவிட்டீர்கள். முறியடிப்பது உங்களுக்குச் சாதாரணம், இந்த அவலக் கோலத்துடன் நான் ராஜ மண்டபத்துக்கு

வரமாட்டேன். உங்கள் மகுட விழா பூர்த்தியான செய்தி கேட்டு எனது காதுகள் பாக்கியம் அடைந்தால் போதும்; அது போதும். எனது கனவு பலித்துவிட்டது!''

‘‘பூஜ்யா!''

‘‘சத்தியமாக வரமாட்டேன்; போய் வாருங்கள்.''

அதற்கு மேல் சிவாஜி நிற்கவில்லை. நேரமாகிறது.

குறித்த நேரத்தில் அமர்க்களமாக மகுட விழா நடைபெறுகிறது.

அன்னை ஜீஜாபாய், அந்த நோய்வாய்ப்பட்ட நிலையிலும் அமர்ந்து பூரிப்புடன் கவனிக்கிறாள். பூஜ்யா வராதது பெருங்குறை! ஏதோ சிவாஜி தாறுமாறாக நடந்திருக்கிறான்.

காசியிலிருந்து வரவழைக்கப்பட்ட மகா வேத சாஸ்திரி கங்கபட்டர் மந்திரம் ஓத...

மங்கல வாத்தியங்கள் இனிது முழங்க...

அந்த மண்டபமே ஆனந்தத்தில் மூழ்க...

அரச கவிஞன் பூஷணன் கவிபாட....

கங்கபட்டர் திருக்கரங்களால் வீர சிவாஜி மகுடம் தரித்துக் கொள்கிறார்.

க்ஷத்திரிய குல திலகன், ராஜா சிவாஜி சத்ரபதி என்கிற விருதுவுடன் முடிசூட்டிக் கொள்கிறபோது எவர் மனந்தான் மகிழவில்லை!

இந்தத் தேனனையச் செய்தி...

காதல் திவ்யப் பிரபந்தமாய், அறிவின் காப்பியமாய், ராஜதந்திரச் சிம்மமாய் விளங்கிய பூஜ்யாதேவியின் செவிகளில் நுழைகிறது.

ஆ! சுயராஜ்யம் உதயம் கண்டுவிட்டது!

பொற் கனவு பலித்துவிட்டது!

கண்களை இறுக மூடிக்கொள்கிறாள்! ‘‘சிவாஜி! என் பிரபோ!’’

கண்களின் ஓரத்தில் ஆனந்த நீர்த்திவலைகள்.

அந்த மூடிய கண்கள் மீண்டும் திறக்கவே இல்லை.

ஓ! பூஜ்யா!

**(நிறைவு)**

இலக்கிய உலகில் மலைகள் அளவிற்கு மாலைகள்
கண்டவர் இலக்கிய சாம்ராட் கோவி. மணிசேகரன்.

தவத்திரு.
பொன்னம்பல அடிகளார்



இலக்கிய சாம்ராட்
டாக்டர் **கோவி. மணிசேகரன்**



**பூம்புகார் பதிப்பகம்**
127 (ப. எண் : 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 25267543